வெளியீடு நெ. 3

ஜீவசம்போதனை

வெளியிடுவோர் :

ஸ்ரீஜைன சித்தாந்த நூல்நிலையம்,

சென்னை-1.

ஸ்ரீ ஜிநாய நம:

ஜீவசம்போதனை



ஸ்ரீஜைனசித்தாந்த நூல்நிலையத்தாரால்
வெளியிடப்பட்டது.

 1957 [விலை ரூ. 4.

பதிப்பகம் :
ரத்தினம் (கிளை) அச்சகம்
65, திருப்பள்ளி தெரு,
சென்னை-1.

Jeevasambodanai or Address to Jeevas.

The story begins in the traditional way of Kavyas. It begins with adoration to Jineswara Then comes the discription of Maghada and then the discription of the capital of this Empire-Rajagraha. Srenika or Bimbisara is the ruling sovereign of the state. One day when he was in the Assembly Hall the servant of the gate of the palace informed the king that the Forest Officer was waiting at the gate to meet the King. Srenika has permitted him to come in. He wanted to know the purpose why he desired to meet the King. The Forest Officer informed Srenika, the king, that Samavasarana-the audience hall of Lord Mahavira-alighted on the top of Vipulachala hill in the south-western corner adjoining the capital of Rajagraha. The King Srenika being a devotee of Jina wanted to meet Mahavira. Therefore he announced to the prominent citizens of the capital to go with him to worship Lord Mahavira. Accordingly the King Srenika followed by the citizens went to the hill of Vipulachaal to worship the feet of Lord Mahavira. There is an elaborate description of the structure of Samavasarana. The King Srenika worshipped Lord Mahavira and desired to learn certain important truth rela-

ting to life. This sort of discussion in Samavasarana takes place between the King and the chief of disciples Gauthama Ganadhara Here begins the discussion between the King and Gauthama. Gauthama, the Chief disciple of Lord Mahavira tells the king Srenika th t there are 12 important home-truths that the king has to concentrate upon. The concentration upon these 12 home truths will conduce to the spiritual development of the king The King expressed his desire to know them in detail. These home truths about which Gauthama, the chief disciple spoke are (1) Anithya-the ephemeral nature of things (2) Asarana-absence of protection to human beings (3) Ekathva or loneliness (4) Anyathva-the state of being alien (5) Samsara-the series of births and deaths (6) Loka the nature of the world and its divisions. (7) Asuchithva-the impure nature of man especially original development of human body. (8) Asrava-Flow of karmas into the soul of man (9) Samvara-cheking up the flow of Karmas (10) Nirjara-method of whithering out the Karmas already associated with the soul. *i. e.*. the past karmas. (11) Dharmaswakyana-Learning and practicing Dharma relating to the house-holder and the ascetic. (12) and last is Bhodi-durlaba-attaining the spiritual wisdom-the

goal of life. When Gauthama enumerated these 12 spiritual truths, Srenika the King wanted to know these in detail. Then begins the real call to virtuous Jeevas. Gauthama Ganadhara points out that the life is impermanent. Nothing is everlasting. Whatever is considered by man as of great value is really a worthless one. Wealth is likely to disappear. All properties may be lost at any moment. The dear ones in the household, wife and childern may pass away. Even your own body may disappear at any moment. All things are subjected to change in time. Then he says nothing is of real value. There is one ultimate truth that is the spiritual nature itself is the goal whose development and perfecting are to be the goal of every man. After emphasising the ephemeral nature of things except one's own soul he gives the illustration story, the history of King Sagara. The King Sagara had 64,000 sons. All of them Wanted to serve the king, because the King Sagara was powerful. He could not offer his sons any work of military nature. But they were eager to do something. The king ordered them to create a mote around the mount Kailas which was the site of Nirvana of the first Thirthankara Lord Rishabha. All the sons have to fill this mote with water. Eldest of these

brothers was Baghiratha. He had ordered his younger brothers to dig the earth to bring out the water of the Ganges to fill the mote round Kailas. They begin the work of digging to bring up the Ganges water.

In the meanwhile a very interesting thing happens in the palace of King Sagara. An old servant of king Sagara was benefitted by his master in the following way. When the servant was in his death-bed the King pronounced Panchanamaskara mantra which the man in death bed eagerly listened. As a result of this pious act he was born as a Deva in Devaloka. Then he remembered his master Sagara, how Sagara was fully immersed in wordly pleasures. Deva wanted to do some service to his former master, so that his attention may be turned away from worthless wordly pleasure which is not important and eveylasting value. Then Deva wanted to make the king realise the ephemeral nature that float around him. He goes to the palace taking the form of an old brahmin as if filled with extreme grief. King Sagara asked him the cause of his sorrow. Deva in the form of an old brahmin told the King that he lost his only son and there was no one to help him in his old age. He requested the King

somehow to bring back his son to life again. The King knew fully well that the old man's request was impossible of fulfillment. Instead of directly telling him the absurdity of his request, the King wanted to teach him a lesson. He told the old brahmin that the only chance was to perform a homa for which he asked the brahmin to bring some Dharba grass and Samith. The brahmin readily agreed when the King told him this condition, that he must get these things from a household which has not lost any member of its family at any time. The brahmin went from house to house, everywhere he was told that some member of the family died and he could not get Dharba grass and samith according to the condition imposed by the King Sagara. The brahmin returned to the Palace in despair and confessed the impossibility of obtaining the dharba grass and the samith according to the conditions imposed by the King Sagara. The king thought that the brahmin was not in an appropriate mental state to realise the truth that life must have an inevitable death that follows it. The brahmin who was consoled in a way realised the truth, that anyone born must necessarily die sometime and crying for the death of a dear one is but merely the result of ignorance. Then the

brahmin turned to the King and asked him whether this is true only to a common man like himself or to the Emperor also. The Emperor readily accepted that it was universal truth.

In the meanwhile the thousands of sons of Sagara began digging the earth to bring up the Ganges. The digging down went so deep that it disturbed nether world of the Nagaloka. The Naga King came up enranged and scolded the several thousand sons of Sagara for disturbing the peace of the Nagaloka. Sagara's sons received the Naga King without respect and told him that they had the right, to extend their Kingdom even to Nagaloka. Naga King was enraged at this reply and killed all the sons of King Sagara.

Knowing that the sons of Sagara are all dead the Deva in the form of brahmin returned to Sagara's palace and told him that all his sons except his eldest son Bhagiratha were no more. He made the King to realise the truth of impermanancy of beings in the world. The King in grief relinquished his Kingdom in favour of his first son Bhagiratha and adopted Deeksha and went for meditation. His wife and the several wives of his sons also followed him. The brahmin became Deva and went to

the place where the sons of Sagara lay dead. They were brought back to life by the magic of the Deva, who informed them what happened to their father, mother and wives. They also followed their father by taking to Deeksha. Thus ends the first chapter of Anithya.

The next chapter, deals with the Asarana-helplessness. Here the Jeeva is addressed to realise how helpless he is in the time of crisis. In the moment of difficulty the friends and relations will be of no use. Man cannot expect any help from anybody associated with him. Only refuge is Lord Jina, Lord Arhat Parameshti is the only help. Having faith in his mercy you have to surrender yourself in order to be saved. This idea that the only salvation for man is the complete self-surrender to Lord Arhats Parameshti, His merciful nature would certainly save the faithful devotee, from unavoidable difficulty. In this respect the conception of Asarana emphasised here is exactly similar to the conception of self-surrender to Lord Narayana recommended by the teachers of Vishnava cult—Ramanuja and his successor Desika both recommended to the devotees. This method of complete self surrender to the Lord technically called prapatti-

One who surrenders oneself at the feet of Lord will be sure of salva'ion. Jaina conception of Asarana described here is quite identical with the Vaishnava doctrine prapatti as a method of salvation. He also narrates the illustrative story of one Mundakousika. This story refers to the Mundakausika's son. This son was born in the family after a long period of prayer and devotion. The father was very happy in getting a beatiful son. The boy came up to the age of 16. The father was preparing to celebrate the marrige of the boy. The village in which he was living had a curse. A Rakshasa attacked the villagers, who made an agreement with the Rakshasa, that the villagers should give one member of a family to the Rakshasa, every year. According to this agreement one member of a family in the village was offered as viction to this Rakshasa. According to this arrangement this years turn came to Mudakousaika who had to send his boy as victim to the Rakshasa. He was not willing to send his only son. Finally he took the boy to the Devta by whose blessings the boy was born. At the grace of the Devta, Mundakousika had to perform a Santihoma, to avoid the catastrophe of losing his only son. During the performance of Santhihoma, he was advised to keep his son in a safe

place beyond the reach of the Rakshasa. Accordingly the boy was put in a cave the entrance of which was guarded by the goddess, who defended the cave when the Rakshasa attacked. In the struggle between the Rakshasa and the goddess the Rakshasa was defeated and killed. Santhihoma was also closing. Then the father Mundakousika and his friends wanted to get back the son from inside the cave. When they entered the cave, they found to their harror that the boy was being swallowed by a phython, which was without food for several days and hence it had taken hold of the boy and swallowed him. This story is narrated to illustrate the fact that no one can, by human will, or ceremonial functions, save an individual. There is the unavoidable destiny, which is mainly determined by one's own Karma.

Therefore the only method of salvation available to man is by placing himself entirely in the hands of the merciful Lord who out of his infinite goodness may lead him to liberation from the Karmic bondage Then he may enjoy the bliss of spiritual freedom.

The third chapter deals with Ekathva-the absolute loneliness of each individual. He has to find his way through life

depending entirely on his own self without expecting any kind of help from others. His wife and children, friends and relations may all enjoy his property with him. But at the moment of adversity they will all desert him and leave him alone. If you realise the ultimate loneliness of yourself you would certainly make sure of your path in life which you have to choose for yourself that is chosing the path of spiritual development. You have to adopt right faith, right knowledge and right conduct-Samyag darsana, Samyag Gnana and Samyag Charitra-as your aid in spiritual development. If your are equipped with these three jewels-Rathnathrya and if you have started your spiritual pilgrimage you will certainly be sure of your goal, to escape from the bendage of samsaric cycle of birth and death and ultimately attain the spiritual perfection and the consequent bliss You have to be dependent upon yourself without expecting any kind of aid from others.

Annyathvam—alien nature. The soul's attention is drawn to the fact that it is absolutely different from every thing else including the wives and children. In the process of transmigration, the soul must have

taken innumerable births and deaths. Taking into consideration a particular period of this samsaric existence it must have its separate father and mother and wife and children. Their number must be eqully numerous. When this fact is remembered the individual at the present moment must realise that these relatives, wives and children have to be considered to be merely a temporary relation to him at the present birth. The soul is to realise this fact that he has to come out from all these relations. Similarly on each birth he must have had a suitable body as determined by his Karmic condition. From this, it is clear that the soul is the spiritual identity, entirely distinct from its own body. Not only distinct or different but different nature altogether. The body is constituted by matter which is taken possession of individual soul with spiritual identity. When difference is so important the soul is completely alien from its own body itself. This feeling of one that the body the other members of the family is countless and the false relation entirely depends upon the gross ignorance of the ultimate difference between the soul and other things. Knowledge of this difference is essential for the spiritual development of the soul. When it has the

feeling of being great or short which are the sole characteristic of the body and hence the feeling of identity is merely a manifestation of utter ignorance. The one condition for the spiritual development of the soul and reaching its goal of spiritual perfection, is the realisation of its spiritual nature as entirely different from the other members of his own household even from its own body. This chapter emphases this underlying difference between the spiritual and the material. The jeeva or soul has to remember this while attempting to develope its own spiritual nature, undisturbed by alien affection.

The fifth chapter deals with Samsara-the process of transmigration of every individual Jeeva. Samsara refers to cycle of births and deaths of every individual souls. The Indian system of thought r e c o m m e n d s the fact that this process of transmigration of births and deaths is an intrinsic evil and suffering. The goal of life is therefore to escape from this samsaric cycle. Jaina faith is in support of that. Therefore under this chapter the auther emphasizes this fact Samsara, the cycle of births and deaths as intrinsic evil from which the soul must get liberated. It is

this liberation from Samsara-transcending the cycle of births and deaths is called Moksha or perfect spiritual freedom.

There are two classes of Jeeva-samsara Jeeva and Moksha jeeva. Samsara Jeeva is still entangled in this stream of transmigration of births and deaths. At each birth it lives an allotted period and passes through death to another form of life to another birth which undergoes sorrow and trouble. Every Indian Darsana emphasizes the ideal to escape from this samsaric sufferings and obtain spiritual liberation. In giving this outline in general, the author gives a detailed description of Samsara Jeevas. These Samsara Jeevas are classified according to the principle, of sense perception. Jeeva which has only one sense—Touch are called Ekendria Jeeva the one sensed organism. This Ekedria Jeeva may be Sthula or sukshma Under this class of Sthula Ekendria jeeva, come the trees, plants, and the botanical things Sukshma Jeeva refers to minute microscopical organisms, which are classified as air, water etc. Next class is the two sensed organism—the sense of touch and sense of taste.

Under this class come various creeping insects like earthworm etc. The next class

of Jeeva is the three sensed organism-three Indriya Jeevas. These jeevas have an additional sense of smell. Insects like ants and bees come under the three sensed organism. Next comes the four sensed organism. Amimals come under this class which have the sense of sight or vision. Next comes the class of five sensed organism-Panchendria Jeeva . This class of Jeevas have sense of hearing also. All the mammals come under this class. Human beings are brought under a separate class under five sensed organism, because he has been favoured with a mind besides the five senses of touch, taste, smell, sight and hearing This class is called as Sagni panchendriya Jeeva – Five sensed organism with consciousness This class the highest among the samsara jeevas. It is very rare to obtain. The spiritual path of life is available only to human beings. Unless the Jeeva is born as a human being it cannot have power of attaining the spiritual liberation. Hence it may be said to be the only entrance to reach the city of Moksha or infinite bliss.

The difference between the Samsara Jeeva and Moksha Jeeva is due to the presence of karmas in the one and the absence in the other

of samsaric cycle of births and deaths. Hence the root cause of Samsara is karma. When the root cause is destoryed the soul becomes liberated from karmic bondage. When it is liberated from the karmic bondage, the soul-shines in its intrinsic brilliance. It becomes moksha jeeva, the liberated soul, as a result of this spiritual perfection, enjoys infinite sight, infinite knowledge, infinite bliss, and infinite power-Anantha-Darsana, Anantha-Gnana, Anantha-Sukha, Anantha-Veerya.

Chapter 6 treats about Loka. Loka is mainly constituted by three divisions. The upper world, the middle world and the lower world.—Adholoka-Madhyama Loka and Urdhva Loka Adholoka or the lower world is what is called generally the 'hell' Beings in this lower world or hell are destined to experience fruit of their sin committed in the previous Janma in the middle world. The upper world is similarly called as Devaloka, where the residents enjoy happiness as a result of their good action in the middle world Madhyamaloka, what we ordinarly call the world. It is here the various samsaric Jeevas are born, live and die. The man also is an inhabitant of this middle world. This action

of this Samsaric Jeeva in this middle world that determines whether he has to be bron in hell or in Devaloka. This three main divisions is further sub divided into various parts. The lower world is divided into various divisions of hell and the upper world divided into various regions of Devaloka. We need not follow all these details. It is pointed out that life in these three regions is as a result of the activities in the middle world. Life in the lower world or the upper world is but the result of life in the middle world.

Chapter 7 Asuchitva. An impure nature-In this chapter, the soul's attention is drawn to the fact that it is associated with impurity from the moment of birth right up to his development, the old age and death. Taking the needs of human being it is pointed out from the beginning that is when the child is in the mother's womb. The life begins in the uteral surroundings. The mother's uterous is constituted in the body very close to the organs connected with urine and faeces. When the ovum develops into the full child, the child comes out of the mother's womb as an-independent organism in the world. Then the new born baby has its development as a child which

grows into another being throughout associated with all these impurties. Prespiration coming out of the body, faeces coming out of the rectum, all these are found within the body itself. The periodical develepment of the body and their corresponding action as per nature of the body may be really disgusting. To be proud of such body, to adorn with ornaments of gold and silver, to dress it with silk, all appear to be merely to disguise the intrinsic impurity of the body. Further to enjoy the sex life by marrying a woman as your wife is nothing more than enjoying anotheir group of impurities in the form of wife. Sexual enjoyment of sense pleasure is due to ignorance with intrinsic nature of your body. Spiritual development requires complete detachment from one's body which is really a growth of impurities. There ends this chapter.

8th chapter deals with Asrava or the inflow of karma towards the soul. It was pointed out about the cause of Samsara. Karma flowing into the soul's nature is determined by the souls impure emotions such as desire and hatred anger and pride and whenever such impure psychic experience caused in the soul, karmic materials flow in the soul and get deposi-

ted therein. This flow of karmic materials are called Arsava. The soul's attention is drawn to the fact that samsaric trouble begins as Arsava. the inflow of karmic materials. This inflow of karmic materials is due to impure emotions, such as Raga and Dwesha-Desire and hatred. Realising this fact is therefore the first step to escape from Karmic bondage.

The next chapter deals with Samvara-checking the flow of karmic materials. The way to check the flow of karmic materials is by rooting out the various psychic conditions which bring about the inflow. How to root out the psychic emotions ? It is only by practising the spiritual discipline. The chief method of checking the inflow of karmic matter is by practising the five vrathas-such as non-killing, not uttering falsehood, non-stealing, keeping brahmacharya and not to have desire for inordinate wealth. These five disciplines are otherwise called, Ahimsa, Sathya, Asthaya, Brahmacharya and Aparigraha. Ahimsa or non killing is not merely a negative act. It is the positive feeling of universal love towards all living beings. Whenever any living being is found suffering, the universal love will induce to try to remove the suffering animal or living

being by saving it from that situation. This must be practised by the co-operation of thought word and deed. The very thought of injuring a living being will be Himsa. Ahimsa therefore must be practised by the co-operation of all the three-Mana, Vachana and Kaya. Similarly there are 3 classes of protecting Ahimsa—Kritha—Karitha and Anumotha-causing injury directly, causing injury through the medium of somebody else and approving the act of injury done by somebody else. The first is kritha, and second is karitha and third is anumotha. These nine classes must be carefully practised to avoid Himsa. Second Vritha is Sathya-Speaking the truth, and avoiding falsehood. Truth speaking must be taken in relation to Ahimsa or universal love. If by speaking truth you lead to the distruction of some living being, then truth speaking itself becomes an evil. Third is asthya-non-stealing. Fourth is chastity or brahmacharya. These are the moral truths which are to be observed in order to purify souls. 5th is avoiding accumulation of wealth. Observing these ethical principles and practising the moral discipline will certainly block the inflow of karmic materials.

Tenth chapter is Nirjara-Whithering away of karmas. By blocking up the coming in of kar mas you are able to prevent the fresh deposit of Karmic materials. But the jeeva has already acquired large quantity of karmic matter in the previous birth. How to get rid of this? Nirjara is prescribed, as the method of making the previous acquired karmas to whitheraway. After checking of Raga and Dewesha-desire and hatred, man must adopt spiritual austerity through Tapas and Yoga. Tapas is of two kinds—external and internal. External tapas refers to discipline of the body and internal taps refers to the ideal of the mind. By rigorously practising these two kinds of disciplines you are able to control the activity of both body and mind. When these two are brought under complete control and discipline, you are able to conquer the weakness of flesh and direct the mind upon the pure nature of self. This concentrated Dhyana acts as fire to burn out all the karmic impurities, associated with your spiritual nature. Such burning of the impurities of karma through the purifying fire of Dhayana is, what is called Nirjara. Just as pure gold is obtained by burning the gold ore obtained from the mine, so also the spiritual fire of Dhyana is able to realise the pure soul

by burning out the associated karmas. When the karmas are so burned out, the soul appears in its divine purity. Sunlight may be hidden by clouds; When the clouds are whithered away by the winds, the sunlight will appear without interruption. Similarly this spiritual purity of the soul is ordinarily hidden by layers of karmas. When this obstruction of karma is removed by Dhayana which is developed by tapas and yoga, the soul appears in its pure spiritual nature. At this state it is called Suddajiva or pure soul. This state is otherwise called Paramatmaswarupa or Mokshaswarupa, which is the ultimate goal of life. The method of attaining this state of spiritual freedom, is called Nirjara.

11th chapter deals with Dharmaswakyana-Nature of Dharma, its knowledge and practice. Dharma is of two kinds. Sagaradharma and Anagara-Dharma. The ethical goal for the householder, and the ethical goal for the ascetic. The five vows mentioned already, Ahimsa, Sathya, Asthaya, Brahmacharya, and Aparigrapha form the basis of Dharmaswakyana. These five vrathas or vows when adopted by the householder are called Aunvrathas—the smaller vows; when adopted by an

ascetic it is called Mahavratha, the great vows. The householder owns varied avocations, and may not be able to observe these five principles strictly. For example, the householder engaged in agriculture have to injure Ekendra Jeeva, in the process of cultivation. Hence he can practise Ahimsa only by limited sources. Unlimited and absolute observation of Ahimsa is possible only in the case of ascetic who completely renounces all enjoyment of household life like ornaments and clothes, when he chooses the whole animal kingdom as his kith and kin in his ascetic life. It is possible for him to express this universal love towards the whole world of living beings. Then he is able to observe the principle of ahimsa without limitations.-Similarly all the other principles of Sathya, Asthaya, Brahmacharya and Aparigraha. All these are observed and practised by the ascetic without any limitation The ordinary householder is handicaped in this respect. He can observe the ethical principles only as far as possible, *i. e.*, with limitation. Dharma therefore for the householder is circumscribed by limitation. Whereas in the case of ascetic who adopts complete renuciation and does not even own his body as his own is able to observe these ethical principles with-

out any kind of limitation. The ascetic adopting these vrathas without any kind of limitation is able to practise tapas and yoga ; he may be able to go on this spiritual pilgrimage towards the goal of purification and liberation.

The 12th and last chapter speaks about Bhodi durlabha-Spiritual enlightenment resulting in wisdom. The term Bhodi refers spiritual enlightennent which is the result of disciplined life of Yoga practised by the ascetic. It is a very rare acquisition. It is not available even to an ascetic in an ordinary manner. But it can be easily obtained by peforming certain prescribed conduct. It pre-supposes clear knowledge of the pure soul, a clear recognition of the difference between the pure self in its Parmatmaswarupa and the ordinary soul caught in the samsaric cycle. The knowledge of the ultimate reality, the Thathvagnana other wise called Bhodi, the ultimate widsom, is acquired on spiritual enlightenment.

When the soul reaches this state of development in its spiritual career, It is said to have reached its goal. Samsaric Jeeva has now in fact become the siddha jeeva. Making use of all the Sadhanas or the instrument of development, Jeeva is able to achieve its

Siddhi. It realises its true nature of pure gnana. When it attains this paramathma. swarupa, it becomes Mokshajiva enjoying infinite knowledge and infinite bliss.

Thus the Jeev's attention is drawn to these 12 home—truths, otherwise called Dhwadasanupreksha. These are mentioned as different aids towards the spiritual perfection. This Tamil work called 'Jeeva Sambhodana' was composed by one Devendra Muni who reveals his name in the closing stanza of the book. The work is mainly in the form of Venba which is explained in prose by the author himself probably based upon the Sanskrit work Dhwadasanupreksha by Karthikeya. The author of the Tamil work Devendramuni is very well acquainted with tamil classical literature. Characteristic phrases taken from Thirukural and Jeevakachinthamani are freely used by the author. The readers of these Tamil works can easily identify such phrases. Since the author reveals only his name and nothing else it is not possible for us to determine his age. Hence we eannot say anything definite to what particular Sangha he belongs, who was his Guru and who initiated

him. It is a clear exposition of certain important principles contained in Jaina Philosphy.

I hope the publication of this work will be welcomed by the Tamil public as an important contribution to Tamil literature by a Jain Author who followed the path of Jaina rishis, who contributed valuable Tamil classics like Thirukural and Jeevaka-chintamani.

Madras }
1—8—57 } A. CHAKRAVARTHI.

பஸ்தி மடம் ஸ்வாமிகள்

முகவுரை

தேவேந்த்ர மாமுனிவர் ஜீவசம் போதனையைப்
பாவேந்தர் நற்றமிழால் பாடினார்—நாவேந்தர்
சொல்லால் பொருளால் தொகுத்துரைப்பார்
புல்லார்கள் நாற்கதியிற் புக்கு. [சிந்திப்பார்

இவ்வெண்பாவினால், இந்நூலாசிரியர் பெயரும், இந்நூற் பெயரும், சிறப்பும் விளங்குகின்றன. இவ்வாசிரியர் உறைவிடம், காலம் இன்ன கணத்தைச் சேர்ந்தவர் முதலியவை புலப்படவில்லை. இவருடைய நுண்ணிய புலமையும், பெருமையும் இந்நூலால் நன்கு விளங்குகின்றன. இந்நூல் உயிர்கட்கு நன்மையைப் பயப்பனவாகிய பன்னிரண்டு சிந்தனை (துவாதச அநுப்ரேக்ஷை)களைப்பற்றி விளக்குவதால் "ஜீவசம் போதனை" எனும் பெயர் பெற்று வழங்குகிறது. (அநுப்ரேக்ஷை—அடிக்கடி சிந்திக்க வேண்டியவை) இச்சிந்தனைகள் இக பரலோக வாழ்க்கை முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை. அவை அநித்தியம், அசரணம், ஏகத்வம், அன்னியத்வம், சம்சாரம், லோகம், அசுசித்வம், ஆஸ்ரவம், சம்வரை, நிர்ஜரை, தர்ம சுவாக்யானம், போதி துர்லபம் எனப்பன்னிரு வகைப்படும்.

1. அநித்தியாநுப் ரேக்ஷை (நிலையாமை) பல்வேறு பொருள்களின் நிலையாமையை அடிக்கடி சிந்தித்தல்; அவை : மனைவி, மக்கள், பெற்றோர், சுற்

றத்தார் முதலியோர் மரணமின்றி நிலைத்திருப்பவ ரல்லர்: மேகம் போல் தோன்றி உடனே மாய்வர். ஐம்பொறிகளால் நுகரப்படும் போகோப போக இன்பம் நிலைத்திருப்பன வல்ல. இளமை, யாக்கை, செல்வநிலையாமைகளைச் சிந்தித்தல். இவையனைத் தும் ஒருவரைவிட்டு ஒருவராக மாறிக்கொண்டே யிருக்கும் இயல்புடையன. இவற்றால் எனக்கோர் பயனுமிலை; ஆன்மாவாகிய யான் ஒருவனே நிலை யானவன் என அடிக்கடிச் சிந்தித்து மெய்யுணர்ந்து ஒழுகுதல்.

2. அசரணம் (புகலிட மின்மை) மரண வாயி லகப்பட்ட உயிரைக் காப்பாற்றுபவர் ஒருவருமில்லை மந்திர தந்திர மருந்துகளாலும் காப்பாற்ற இய லாது. இந்திரனாயினும் சரி இறப்பைத்தடுக்க இய லாது. சிங்கத்தின் வாயிலகப்பட்ட மானைக்காப்பார் எவருளர்? ஈட்டிய பொருளும் இறப்புக்கு உறு துணையாகி யொழியுமே யல்லாது—புகலாதவில்லை. உடலும் உணவூட்டம் பெறும் கூட்டாளியேயன்றி, ஊறுபாடுறும்போது உடன் வராது. மரணகாலத்து மனைவியர் முதலாயினாரும் சரணாகார். அறமே உயிர்க்குஉறு துணையாகிஉடனுதவும்அரணாவதன்றி பிறிதொன்றில்லை எனச்சிந்தித்து ஒழுகுதல்.

3. ஏகத்வம் (தனித்தன்மை) யான் செய்த வினைப்பயன் பிறப்பு, இறப்பு, நோய் முதலியவற்றா லுண்டாகுந்துன்பம் முதலியவற்றையான் ஒரு வனே அனுபவிக்க வேண்டுமேயன்றி பிறரில்லை.

பிறக்கும்போதும் யான் ஒண்டியாகவே துன்புற்றுப் பிறந்தேன். இறக்கும் போதும் யான் ஒருவனே தனியாகவே துன்புற்று இறக்கத்தான் வேண்டும் என்று அடிக்கடிச் சிந்தித்து ஒழுகுதல்.

4. அன்யத்துவம் (உறவற்ற தன்மை.) பாலும் நீரும், பொன்னும் மண்ணும்போல், உயிரும் உடலும் ஒன்று பட்டிருப்பினும் வெவ்வேருகும், உயிர் பிறந்த நாள் முதலாக இறக்கும் வரை ஒன்ருகக் கூடியிருந்த உடலையும் சொல்லாமலே விட்டுச் செல்கிறது. என்ருல் மனைவி, மக்கள், வீடு, நிலம் முதலியவை தனதாதலில்லை, எல்லாம் உறவற்ற தன்மையேயாகும் என அடிக்கடிச் சிந்தித்தொழுகுதல்.

5. சம்சாரம்: (மாற்று) ஒரே உயிர் மக்கள், தேவர், நரகர், விலங்குகளாகிய பௌதிக மாற்றங்களை அடைதலே மாற்று எனப்பட்டது. இம்மாற்றுயிர்கள்—ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர்கள். இவை ஒவ்வொன்றும் நிறை வுடைமை (பர்யாப்தகம்) குறைவுடைமை (அபர்யாப்தகம்) என இரண்டாற் பெருக்க பத்து வகையாகும். பருவுயிர் (பாதரம்) நுண்ணுயிர் (சூக்ஷமம்) மனவுயிர் (சக்ஞி) மனமில்லுயிர் (அசக்ஞி) எனப்பதி நான்கு வகைப்படும். இவற்றின் விரிவே எண்பத்திநான்கு லக்ஷமாகும். இவ்வெண்பத்துநாலு லக்ஷம் யோனி பேதங்களுள் மாறி மாறிப் பிறப் பிறப்படைதலே சம்சாரமாகும். சில உயிர்கள் கிழிருந்து படியாக மேலுக்கு ஏறி முக்தியடைகுவர்

எனக் கூறுவாருமுளர். ஜைனசித்தாந்தப்படி வினைக் கீடாக. "நாயும் தேவனுவான்." "தேவனும் நாயாகும்" "மக்களும் மாக்களாம், மாக்களும் மக்களாம்" அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன் முதலியன உறவின் முறைகளும் மாறுதலடையும், என அடிக்கடி சிந்தித்து ஒழுகுதலே மாற்றுச் சிந்தனையாம்.

6. உலகம்: இது மேல், நடு, கீழ் எனவும், தேவ உலகம், மனித உலகம், நரக உலகம் எனவும் மூன்று வகைப்படும். உயிர்கள் இம்மூவகை உலகிலும் மாறி மாறிப் பிறந்து முறையே இன்பமும், துன்பமும், இன்ப துன்பமும் அடையும் தன்மை எனச் சிந்தித்து அறநெறியொழுகுதல்.

7. அசுசித்வம்: (அழுக்குடைத்தன்மை) உடல் ஊன் உதிரங்களால் உண்டாயது. ஒன்பது கழிவு நீர் வாயில்களையுடையது. மேலே பூசப்படும் அத்தர் புனுகு முதலிய வாசனைப் பொருள்களையும், மலர் மாலைகளையும், மாசுபடுத்தும் தன்மையது. தேய்த்துக் குளிப்பினும் ஒழியாத அழுக்குச் சுரக்கும்பாண்டம். "என்பினை நரம் பிற் பின்னியுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப், புன்புறம் தோலைப் போர்த்து மயிர்ப்புறம் பொலிய வேய்ந்திட், டொன்பது வாயிலாக்கி ஊன்பயில் குரம்பை" என்றார் போன்ற அருவருப்புத்தன்மையுடையது என அடிக்கடிச் சிந்தித்து எழுதுதல்.

8. ஆஸ்ரவம் : (ஊற்று) உயிர்களிடத்து வினை ஊற்று உண்டாதல் தெளிவில்லாத தீக்காட்சி சிந்தனையாலும் கொலை, பொய், களவு, காமம், பொருட்பற்று என ஐவகைச் சிந்தனையாலும் ஆகும், வினை ஊற்றே பிறவித்துன்பத்திற்கு மூலகாரணம், என அடிக்கடி சிந்தித்து அறநெறி ஒழுகுதல்.

9. சம்வரை: (செறிப்பு) உயிர்களிடம் வினைகள் ஊற்றெடுக்கவொட்டாமல் குப்தி (அடக்கம்) சமிதி (உயிரோம்பல்) தர்மம். அநுபிரேஷை. (சிந்தித்தல்) பரீஷகஜயம் (துன்பம்சகித்தல்) சாரித்ரம். (ஒழுக்கம்) தவம். முதலியவற்றால் தடுப்பது, உயிர்கட்கு நலமெனச் சிந்தித்து ஒழுகுதல்.

10. நிர்ஜரை : (உதிர்ப்பு) உயிரினிடம் ஏற்கெனவே பந்தித்தவினைகளுள் சிலவற்றைக் கழித்தலாகும். அவ்வுதிர்ப்பு, முயற்சியில் வுதிர்ப்பு. (சவிபாகநிர்ஜரை) முயச்சிவுதிர்ப்பு (அவிபாக நிர்ஜரை) என இருவகையாகும். வினைகள் தம் பயனைக் கொடுத்துக் கழிதல் முயலாவுதிர்ப்பாகும். வினைகள் தம்பயனைத் தருமுன்னரே தவம் முதலியவற்றால் அரிதின் முயன்று நீக்குதல் முயற்சி உதிர்ப்பாகும். முயலா உதிர்ப்பால் உயிர்கட்குயாதொரு பயனுமில, முயலும் உதிர்ப்பால் நன்மையுண்டெனச் சிந்தித்து ஒழுகுதல்.

11. தர்மம் (அறம்) ஊழ்வினைவென்ற மகாபுருடனாகிய அருகபரமனுரைத்த திருவறமே (அஹிம்ஸாமார்க்கமே) உயிர்கட்கு நன்மை ஊட்டுவ

தாகும். இன்றேல் பல்லுயிரும்பிறவித்துன்பம் அடையும் என அடிக்கடிச் சிந்தித்து அறநெறி ஒழுகுதல்.

12. போதிதுர்லபம்: (அறிவுபெறற்கருமை) 84 லக்ஷ யோனி பேதங்களுள் மக்களாகப் பிறத்தலரிது, அப்படிப் பிறப்பினும் போதிதுர்லபமென்னும் கல்வி, அறிவு, ஒழுக்கம் என்னும் மும்மணி பெறுதலரிது என அடிக்கடி சிந்தித்து அறநெறி ஒழுகுதல்.

மேற்கூறிய பன்னிருசிந்தனையும் தனித்தனியாகச் சாதித்து, நற்கதியடைந்த புண்ணியாத்மாக்களின் வரலாறு இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இந்நூல் நாற்கதிச்சுழற்சி என்னும் பிறவிக் கடலைக் கடத்தற்கு மரக்கலம் போன்றது- அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களைப் போதிப்பது. நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கமாகிய மூன்றுமே ஒன்றுபட்டியங்கும் வாழ்க்கை நெறியை விளக்குவது.

இத்தகைய இந்நூலை அச்சிடுதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொண்டவர் ஸ்ரீமான் K. சூரியகோடி பிரம்மசாரி அவர்களாகும். இதற்குமுன் பெருமண்டூர். த. குப்புஸாமிநைனர் அவர்கள் இந்நூலின் முதற்பாகத்தை தருமசீலன் பிரஸில் வெளியிட்டனர். அந்நூலையும் இப்பதிப்பு நூலையும் திருத்தும்படி எமக்கு அனுப்பினர். நாம் நம்மால் இயன்றவரை தக்க முறையில் திருத்தி அனுப்பினேம். "யானைக்கும்

அடிசரக்கும்" " கச்கதஸ்கலனம் க்வாயி" என்ற பழமொழிப்படி நம்மால் திருத்தும்போது பல பிழைகள் ஏற்பட்டிருப்பினும் அவற்றைப் பொறுமையுடன் தெரிவிப்பீராயின் மறுபதிப்பில் திருத்தி யமைக்க ஏதுவாகும்.

பத்ரம் பூயாத் வர்த்ததாம் ஜிநசாஸனம்.

முகாம்.	ஸ்வஸ்தி ஸ்ரீ லக்ஷ்மி சேனபட்டாரக
சிம்மனகத்துகை	பட்டாச்சார்யவர்ய ஸ்வாமியார் அவர்கள்
	பஸ்திமடம்
1-7-57	நரசிம்ம ராஜபுரம். (மைசூர்ஸ்டேட்)

INTRODUCTION.

JAINISM is pre-eminently an ethical system. The way to salvation consists of Right Faith, Right knowledge and Right Conduct. The 'Moksha margha' is compared to a ladder of which the two poles are right Faith and Right Knowledge and the rungs of the ladder represent the various forms of Charitra. If any one of the parts of the ladder is missing, then the ladder itself cannot serve any purpose. Such is the case with Right Faith, Right Knowledge and Right Conduct.

The conception of salvation through grace is significantly absent in Jainism. The salvation lies in the hand of every individual. Man is the architect of his own life, here and hereafter. He has to work out his emancipation through 'Tapas' (Austerities). Man is responsible for every act he does and he has alone to reap its consequences. Hence Jainism puts great emphasis on personal conduct of the right kind.

The book before us is a nice treatise on Twelve meditations or 'Anupreksha' which help us to put a stop to the inflow of Karmic matter, i e. Samvara. The Anuprekshahs are of twelve kinds They are as follows as fouud in the order given in Tattuvarthadhigama Sutra. (chapter IX, sutra 7)

(1) Anitya : Sensual pleasure, wealth, youthfulness etc. are transient like bubbles of water. They disappear before our very eyes.

(2) Asarana : In the same way as a deer which has been caught by a lion has no protection from the inevitable death, so also the mundane living beings have no protection whatever when the time to depart arrives.

(3) Samsara : The soul takes birth and wanders in the four Gatis of celestial, human, sub-human and hellish beings according to its karmas. Worldly existence is full of miseries.

(4) Ekatva : I am alone, I was born alone and I have to die alone. There is none to share my pleasures or pains.

(5) Anyatva : To think of the separateness of body and family and to meditate on one's own Swarupa.

(6) Asuchitra : To think of the body as an embodiment of filth and detestable matter.

(7) Asrava : The coming in of karmic matter into the soul through wrong belief, vowlessness, carelessness, passions and activity (Yoga) is Asravanupreksha.

(8) Samvara : The stopping of the inflow of karmic matter into the soul is called Samvara.

(9) Nirjara : The removal of the karmic matter from the soul is called Nirjara.

(10) Loka : To think of the construction of the world and the contents, living and non-living constituting the world is called Lokanupreksha.

(11) Bodhi durlabha : Right Faith, Right Knowledge and Right Conduct are called Bodhi. To attain these is durlabha i.e. very difficult.

(12) Dharma : The characteristic of a thing is said to be its own Dharma. The characteristic of Atma is pure and spotless nature and Right Faith Right Knowledge and Right Conduct and the ten kinds of Dharma with Ahimsa is said to be the nature of Atma.

To think of these twelve meditations often and often is said to be Anupreksha.

These Anupreshas are beautifully described in 'Jeeva Sambodhana' with suitable illustrations. In Sanskrit, Prakrit, Kannada and Tamil, there are books written on 'Jeeva Sambodhana' The Tamil work which is now edited and published is particularly interesting because, it is written in a style named Champu, mixture of prose and poetry. According to Jaina tradition the teaching of Mahavira emanated in response to the prayer of Srenika Bimbisara, the great Maghadan king who was a great disciple of Mahavira and who is known in the Jaina literature as uttama

srota, the best hearer of the doctrine. It is said that but for king Srenika many of the interesting teachings of Bhagawan Mahavira would not have been expounded.

The Tamil Jains are greatly indebted to Sri Brahmachari Suryakoti for the troubles he has taken in bringing out this book in a complete form. A careful study of the work will help us to a very great extent to practise reflections on the twelve meditations, (Anuprekshah). I have every belief that the book will have a wide circulation and will be well appreciated by the readers.

Madras–30, 25-6-'57 }   C. S. MALLINATH.

ஸ்ரீ

சென்னைச் சருவகலாசாலை, கன்னடமொழியில் ஆராய்ச்சியாளராயிருந்த பண்டிதர்,

ஸ்ரீமத் H. சேஷையங்கார் அவர்கள்

எழுதிய முன்னுரை

தமிழ் மொழியில் உள்ள 'ஜீவஸம்போதனை' என்னும் நூல் முறையே ஒரு செய்யுளும் ஒரு வசனமுமாய் அமைந்துளது. வசனம் பெரும்பாலும் செய்யுட் கருத்தை உதாரணங்களைக் கொண்டு விவரிப்பதாயினும் சில சில இடங்களில் செய்யுட் பொருளோடு தொடர்ந்தும் இருக்கிறது. கன்னட ஜீவசம்போதனையிலும் இவ்வாறே அமைந்துளது. கன்னட மொழியில் இயற்றியவர் பந்துவர்மன். இவ்விரண்டு நூல்களிலும் பலவிடங்களில் சொல்லும் வாக்கியங்களும் ஒரே மாதிரி இருப்பதனால் இவ்விரண்டு நூல்களையும் தமிழிலும் கன்னடத்திலும் புலமை வாய்ந்த ஒருவரே செய்திருக்க வேண்டும்; அல்லது ஒருவருடைய நூலைப் பார்த்து மற்றொருவர் இயற்றியிருக்க வேண்டும் என்று கொள்ளலாம்.

ஆயினும், தமிழ் நூலில் கன்னட நூலிலிருக்கும் சில விஷயங்கள் காணப்படவில்லை. அவ்வாறே தமிழ் நூலிலிருக்கும் சில விஷயங்கள் கன்னடநூலில் காணப்படவில்லை. தமிழ் நூலில் முதலில் இருக்கும் ஸமவ ஸரண வர்ணனையும், ஸமவ சரண மண்ட

லத்தில் கௌதம கணதரர் சிரேணிக மகாராஜனுக்கு இந்த ஜீவசம்போதனையைச் சொல்லியதாய் இருக்கும் பீடிகையும் கன்னட நூலில் இல்லை. ஆயினும் இவ்விரண்டு நூற்களுக்கும் ஒற்றுமை உள. அவற்றைக் கீழ்க்காணும் உதாரணங்களால் அறியலாம்.

தமிழ் :

'வாழுநாள் மாயும் உடல்கெடும் மற்றெழிந்த
சூழ்கிளையும் சொற்பொருளும் சோர்வாகும்—கேழ்மை
உடங்காற் றுபாயமே உற்றுங் கபாயம்
அடங்காத்துன் பாக்குமால் ஆங்கு.'

(அநித்யம். செய். 46.)

கன்னடம் :

'ஆயுமாயு மொடல் கிடல்குறி நண்டரப்பரெ ஜுவ்டரிம்
ஸிரிய பொர்துகெ குர்து மக்களெ டக்கரோதனுகூலதிம்
காயலிர்தரெ காயலிர்தவராகியும் மதிகெட்டு பாழ்
வியுபாய மபாய மெந்தொடெ கேளிமேழிதிரிர் கரம்.'

(அத்ருவம். 5.)

தமிழ் வசனம் :

'புழுத்த கரும்பு தின்பார்க்கு இன்பமாகாது. அதுவே வித்துக் கழகிதாய் (ஒன்று ஸஹஸ்ரமாகுற் போல) மனித சரீரமும் ஈண்டு இன்பமாக மாட்டாது; மறுமை சாதிப்பார்க்கு அழகிதென்று அதனை யறிந்து பாவிப்பது காண் பவ்ய ஜீவனே!

(அசுசித்வம் பக். 103.)

கன்னடம் :

'புழித கர்வினமொதல் தினல் ஒள்ளிதல்து; பித்திங் கொள்ளித்து. மனுஷ்யர மெய் சுகதனுபவனெகொள்ளிதல்து; ஸுகதி வடெயல்கொள்ளித்து. எம்ப பகெயொள் நெகழ்வுது.'

(அசுசித்வம். 2. வச.)

இனி, தமிழில் வழங்குகின்ற,

‘ வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வாறுகத்தின்
தொளைவழி நேர்கழி கோத்தென ’

என்னும் விஷயம் கன்னட நூலில் ‘போதி துர்லபம்’ அனுப்ரேக்ஷையில் காணப்படுகின்றது; இது தமிழ் ஜீவஸம்போதனையில் காணப்படவில்லை. இதனால் கன்னடப்புலவர்க்குத் தமிழ் நூலில் நன்றாகப் பயிற்சியுளது எனலாம்.

இந்நூல்களைப் பதிப்பித்தலில் ஒன்று ஒன்றற்கு உதவியாகும் என்பதில் சிறிது ஐயமில்லை.

தமிழிலுள்ள ஜீவஸம்போதனை முழுவதும் இது வரை அச்சில் வரவில்லை. இப்பொழுது ஸ்ரீ ஸூர்ய கோடி பிரம்மசாரியவர்கள் மிக முயன்று அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். இவர்கட்குத் தமிழுலகம் நன்றி செலுத்துவதோடு இந்நூலை ஆதரித்து ஊக்கம் அளிப்பதாகுக.

சென்னை }
1-8-57 }

H. சேஷயங்காரர்.

பதிப்புரை.

'ஜீவசம்போதனை' என்னும் இந்நூலுள் முதல் ஆறு அதிகாரமட்டும் காலஞ்சென்ற பெருமண்டூர் த. குப்புஸாமி நைனார் அவர்களால் தருமசீலன் அச்சுக்கூடத்தில் வெளியிடப்பட்டது. அதை நான் அடிக்கடி படித்து வருகையில், மேற்கொண்டு 6 அதிகாரங்களையும் வெளியிடவேண்டும் என்னும் ஓர் ஆவல் தோன்றியது. அதனால் பொருளாதாரத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தேன். சில பெரியோர்களை அணுகி ஆலோசித்தேன். அவர்கள் இதற்கு உடன் பட்டு சந்தா சேர்க்கலாம் என யோசனை கூறினர். சந்தாத்தொகை 0—4—0 அணா புத்தகத்திற்கு முன்பணம் 1-0-0 ரூபயாக சுமார் 500 சந்தா சேர்க்கப்பட்டது. இப்பொருளுதவியைக் கொண்டே இந்நூலை அச்சிடத் தொடங்கினேன். அச்சுவேலை நடந்து வருகையில் பொருளாதாரக் குறைவால் தடை ஏற்பட்டது. அச்சமயத்தில் ஆரணி வசுபாலநைனார் சன்ஸ் ஜவுளிக்கடை ஸ்ரீ. தேவேந்திரஜைன், சென்னையிலுள்ள வேதாரண்யம் ஸ்ரீ சாமிநாத ஜைன், சென்னை ஸ்ரீ கெஜபதிஜைன் ஆகிய இவர்கள் மனமுவந்து பொருளுதவி புரிந்தனர். அதனால் இந்நூல் விரைவில் வெளிவரலாயிற்று. அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கம் உரித்தாகுக. மைசூர் ஸ்டேட் நரஸிம்மராஜபுரம் பஸ்தி

மடாதிபதி ஸ்வஸ்தி ஸ்ரீ மதபிநவ லக்ஷ்மிசேன பட்டாரக ஸ்வாமிகள் என் வேண்டு கோட்கிணங்கி இந்நூலில் சில அதிகாரங்களைப் பிழையறத் திருத்தியும் ப்ரூப் சரிபார்த்தும் உதவி புரிந்தார்கள். அன்னாருக்கு என் மனமார்ந்த நமோஸ்து நமோஸ்து நமோஸ்து.

இந்நூல் வெண்பாக்களின் பிழைகளைத்திருத்துமாறு உயர்திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்களை வேண்டினேன். அவர்களும் அதற்கு உடன்பட்டு பல ஏட்டுச்சுவடிகளைக்கொண்டு ஒப்பு நோக்கித் திருத்தியும் ப்ரூப்களைச் சரிபார்த்தும் உதவினார்கள். அவ்பெரியாருக்கு என் மனமார்ந்த வணக்கத்தைத்தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலுக்கு அரும்பதவுரை எழுதி நல்கியும் ப்ரூப் முதலியவைகளை உடனிருந்து பார்த்து உதவியும் அச்சாகும் வரை எனக்கு உறு துணையாயிருந்தவருமான ஸ்ரீமான் வீடூர் பூர்ண சந்திர சாஸ்திரியார் அவர்கட்கு என் நன்றி உரித்தாகுக. அங்ஙனமே உதவி புரிந்த கரந்தை கோ. அ. வர்த்தமான நைனார் அவர்கட்கும் என் நன்றி. இந்நூலைப்பல ஏட்டுப் பிரதிகளோடு ஒப்பிட்டுத் திருத்தியும் வெளிவரும் விஷயத்தில் எனக்கு மிகுந்த உத்ஸாகம் ஊட்டியவருமான ஸ்ரீமான் சி. மல்லிநாத் ஜைன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

இந்நூல் முன் வெளியிட்ட ஆறு அதிகாரங்கள் அடங்கிய அச்சு புத்தகத்தையும், ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு திருத்தி எழுதிவைத்திருந்த ஏனைய ஆறு அதிகார கை எழுத்துப் பிரதியையும் உதவியதோடு, கதைச் சுருக்கத்தையும் பிழையறத்திருத்தி உதவிய தச்சாம்பாடி. ஸ்ரீ. S. ஐயண்ண நைனர். ஸ்ரீ. J. சின்னசாமி நைனர் அவர்கட்கும் என் நன்றிகலந்த வணக்கம்.

ஜைன சித்தாந்த நூல் நிலையத்திற்காக நெல்லியாங்குளம் உயர்திரு. மஹான் ஜெயபால நைனர் அவர்கள் ரூபாய் 101 நன்கொடையாக அளித்துள்ளார்கள் அவர்களுக்கு இந்நூல் நிலயத்தாரின் நன்றி உரித்தாகுக.

இந்நூலை அச்சிடுங்கால் எத்தனை ப்ரூப் வேண்டுமென்றாலும் மனச்சோர்வில்லாமல் திருத்தி வெகு அழகாக அரும்பாடுபட்டு அச்சிட்டு உதவிய ரத்னம் பிரஸ் (பிராஞ்ச்) மானேஜர் உயர்திரு. கண்ணப்ப முதலியார் அவர்கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலில் அச்சிடுங்கால் உண்டாகிய பிழைகள் ஏதேனும் தோன்றினால் வாசகர்கள் எனக்குத் தெரிவிப்பாராயின் அன்புடன் ஏற்றுக்கொண்டு அடுத்த பதிப்பில் திருத்தி வெளியிடுகிறேன்.

சென்னை.
5—7—57 } பிரம்மாசாரி. K. சூரியகோடி.

ஜீவஸம்போதனையின் பாராட்டுரை.

ஜீவசம்போதனை என்னும் இவ்வரிய நூல் ஜைன சமயத்தின் சிறந்த கொள்கைகள் சிலவற்றைத் தெளிவாக விளக்கிக் கூறுகிறது. இவ்வரிய நூலை இயற்றியருளிய பெரியார் தேவேந்திர முனிவர் என்பவர். இந்நூல், வசனமும் செய்யுளுமாக அமைக்கப்பட்ட உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகத் திகழ்கிறது. இதன் வசன நடை மணிப்பிரவாள நடையாகவும், செய்யுள் நடை சிறந்த தமிழ்ப் பாக்களாகவும் நிகழ்கின்றன. நிலையாமை, சரணின்மை, ஏகநிலை, அன்னியத்துவம், பிறவித்துன்பம், உலகம், சரீரத்தின் அசுத்தம், ஆசிரவம், சம்வரை, நிர்ஜ்ஜரை, அறந்தலைப்படுதல், நல்லறிவுப்பேறு என்னும் பன்னிரண்டு சிறந்த பொருள்கள் இந்நூலிலே விளக்கமாகக் கூறப்படுகின்றன. ஜைனசமய உண்மைகளைக் கூறுகிற நூல்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்நூலின் ஒரு பகுதி, ஆறு அத்தியாயங்கள் மட்டும், பல ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிடப்பட்டது. பிறகு, சில ஆண்டுகளுக்கு முன்னர், சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைப் பேராசிரியராக இருந்த ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளையவர்கள் இந்நூல் முழுவதையும் வெளியிட முற்பட்டு, பல ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடாக அச்சிடத்

தொடங்கினார்கள். அவர்கள் காட்ட நான் கண்டு மகிழ்ந்தேன். விரைவில் இந்நூல் முழுவதும் சிறந்தபதிப்பாக வெளிவரப்போவதை எண்ணி மகிழ்ந்தேன். ஆனால், வெண்ணெய் திரளும் சமயத்தில் தாழி உடைந்ததுபோல, அப்பதிப்பு எக்காரணத்தினாலோ அச்சிடப்படாமலே மறைந்துவிட்டது.

அதன் பிறகு, அண்மையில், ஜீவசம்போதனை கன்னட மொழியில் வெளிவந்தது. கன்னட ஜீவசம்போதனைக்கு முதல் நூலாக இருந்தது தமிழ் ஜீவசம்போதனை என்று தெரிகிறது.

தமிழ் ஜீவசம்போதனை இப்போது முதன் முதலாக நூல் முழுவதும் அச்சிடப்படுவது கண்டு பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இந்நூலை அச்சிட்டு வெளியிடுகிறவர் உயர் திரு. பிரம்மசாரி, K. சூரியகோடி அவர்களாவர். இப்பெரியாருக்கு ஜைன உலகமும் தமிழுலகமும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டன. இப்பெரியாருக்கு எனது நன்றி உரியதாகும்.

மயிலாப்பூர் } மயிலை. சீனி வெங்கடசாமி,
சென்னை } 1—7—57.

கதைச் சுருக்கம்

1 அநித்தியம்

சகரன் கதை. 44—61.

இந்நிலவுலகில் இப்பரத கண்டத்தில் அயோத்தி என்னும் நகரம் பல வளங்களால் சிறப்புற்று விளங்கியது. அந்நகர்க்கு இறைவன் சகரன் என்பான். இவன் நவநிதிகள், பதினன்கு ரத்தினங்கள், முதலிய பல வைபவங்களைப் பெற்றவன். அரசர்க்கரசன்-சக்கரவர்த்தி. இவனுக்குப் புதல்வர் பலர்.

இவர்கள் சகல கலாவல்லவர்களாகித் தன் பிதாவைத் தங்களுக்குப் பணி என்னவென்று வினவினர். அரசன் பரதசக்கரவர்த்தியால், கைலாசகிரியில் பஞ்சவர்ண ரத்னங்களால் இருபத்து நான்கு தீர்த்தங்கரர் பிரதிமைகள் செய்விக்கப்பட்டன; அவன் குமரான் அர்க்க கீர்த்தியால் அம்மலையை எட்டு பட்டையாக செய்யப்பட்டது, நீங்கள் அம்மலையைச் சுற்றி அகழ்தோண்டி கங்கை நீரைக் கொண்டு வந்து நிரப்புங்கள் என்றனன். பிள்ளைகளும் அவ்வாறே சென்று அகழ்தோண்டி பகீரதனைக் கங்கையின் நீரைக் கொண்டு வருமாறு ஏவினர்.

ஈதிங்கனமிருக்க அரசனுடைய சமையற்காரன் பலபத்திரன் என்பான், தன் ஆயுள் முடிவில் அரசனல் பஞ்சமந்த்ரோபதேசம் பெற்று சரீரம் விட்டு சுப்ரபன் என்னும் தேவனுனன். அவன் இவ்வரசனுக்குப் பிரதியுபகாரம் செய்யும் நிமித்தம் அரச

னுக்கு அனித்யத்தைப் போதித்தனன். அரசன் கேட்கவில்லை. அதனால் இதுவே தருணமென்றறிந்து மாயையால் மக்களை மூர்ச்சை யடையச் செய்து பிராமண வுருக் கொண்டு அரசனிடம் வந்தனன். அரசே 'என் ஒரே மகனையும் காலன் கொண்டனன் ; அவனை மீட்டுத்தரல் வேண்டு' மென வருந்தினன்.

அதனைக்கேட்ட அரசன் அம்மறையவனுக்கு காலன் கொண்டவுயிர் திரும்பிவாரா என்று பலதரம் உரைத்தும் பலவறங்களைச் சொல்லியும் கேட்கவில்லை. பிறகு அப்பா உன் பிள்ளை பிழைக்க வேண்டுமெனின் நீ சென்று யாரும் எக்காலத்தும் இறவாதார் மனையடைந்து புல்லும் நெருப்பும் கொண்டு வருவாயாகில் அதைக்கொண்டு ஓமம் செய்து எழுப்பலாகும் என்றனன்.

பிராமணன் போய் திரும்பி வந்து, அரசே ! எங்கும் கிடைக்கவில்லை என்றனன். அரசன், உன் மகன் பிழையான் உலகத்தில் பிறந்தவர் சாதலே இயற்கை. துன்பம் வருங்கால் நகுக. அறத்தை மேற் கொள்க. அதுவே நற்பண்பு என்றனன். வேதியனும் அரசே இது எனக்கா எல்லோருக்குமா என்று கேட்டான். அரசன், எல்லோருக்கும் என்றனன். அப்படியானால் உன் மக்கள் அனைவரும் மடிந்தனர் என்றான். அச்சமயம் பகீரதனும் வந்து அவ்வண்ணமே கூறினன். யாவரும் துன்ப முற்றனர். வேதியன் தன் உருக் கொண்டான். தன் தேவத் தன்மையை பலரறியக் காட்டி மறைந்தான்.

அரசன், இதையுணர்ந்து பகீரதனுக்கு அரசு நாட்டி தான் துறவற மேற்கொண்டு அனித்யம் பாவித்து நற்கதி யடைந்தான். தேவனும் மாயையால் மயக்குண்ட மக்களனைவரையும் எழுப்பினன் அரசன் துறவு பூண்டதையும் பகீரதன் பட்டம் கொண்டதையும் கூறினன். மக்களும் துறவு பூண்டு நற்கதி யடைந்தனர். (1)

"உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்ற பொய்யா மொழியின் உண்மை உணர்க.

2. அசரணம்.

முண்டகௌசிகன் கதை 68—74.

வசுதாரை என்ற நகரத்தில் முண்ட கௌசிகன் என்ற பிராமணன் இருந்தான். மனைவி மனோரமை. இவர்கட்கு எல்லாச் செல்வங்களும் பொருந்தி யிருந்தும் புத்திரப்பேறு இல்லாமல் வருந்தினர். தன் குலதெய்வமாகிய பிடாரியை வேண்டி ஓர் புத்திரனைப் பெற்று வளர்த்தனர். யௌவன காலத்து மணமுடிக்க மகட் பேசி முகூர்த்தம் பார்த்திருந்தனர்.

நிற்க, அந்நகரத்தில் ஏற்கனவே வாதத்தால் தோல்வியுற்ற சன்யாசியை அந்நகரத்தார் பழித்தனர், அதனல் பகைகொண்ட அவன் மறித்து ராக்ஷஸனுகப் பிறந்தான். அனைவரையும் கொல்ல வந்தான். அதைக் கண்ட நகரத்தார் பயந்து அசுரனுக்கு அடிமையாயினர். வருடந்தோறும் வீட்டிற்கு

ஒருவரை உணவாகக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டனர். அவ்வாண்டு முண்டகௌசிகன் முறை. ஆதலால் அவன் மிக வருத்தமுற்று 'பிள்ளையைக் காப்பாற்றுவாயாக என்று பிடாரியிடம் அடைக்கலம் அடைந்தான். பிடாரி அப்பிள்ளையை ஒரு மலைக்குகையுள் மறைத்து அரக்கன் புகாதபடி பெரியதோர் பாறையால் வழியடைத்து அரக்கனிடம் போரிடச் சென்றது. பிராமணன் தன் சுற்றத்துடன் பிள்ளை பிழைத்துய்ய வேண்டி அம்மலையைச் சுற்றிலும் வேள்வி செய்துக் கொண்டிருந்தான். பிடாரியும் அரக்கனை வென்றது. மீண்டு வந்து முண்ட கௌசிகனை நோக்கி உன்பகைவன் ஒழிந்தான். உன்மகனை அழைத்துச்செல் என்றது.

மறையவன் மனமகிழ்வுடன் மலைக்குகையுள் பார்த்தான். மகன் மலைப்பாம்பினால் விழுங்கப்பட்டு கிடந்ததைக் கண்டு மனக்கவலை கொண்டான். மந்திரம், மருந்து, மாதெய்வ முதலியன உயிர்கட்கு பாதுகாப்பாதல் இல்லை. அறமே துணையாவது.

"அறத்தினூஉங் காக்கமு மில்லை; அதனை,
மறத்தலி னூஉங்கில்லை யாம் கேடு"

என்பது பொய்க்குமோவென மெய்யுணர்ந்து, துறந்து நற்கதி யடைந்தான். (2)

3. ஏகத்வம்.

வராங்கன் கதை 87—107.

உத்தமபுரத்து வேந்தன் தருமசேனன். பட்டத்து ராணி குணவதி புத்திரன் வராங்கன். இளைய ராணி

யின் மகன் சுஷேணன். நற்குண நற்செயலுடைய வராங்கனைப் பலரும் புகழ்ந்தனர். அதைக்கண்ட சுஷேணனும் தாயும் பொருமை கொண்டனர். முதல் மந்திரியுடன் சதியாலோசனை செய்தனர், பழகிய நல்ல ஜாதிக்குதிரை ஒன்றும், முரட்டுக் குதிரை ஒன்றும் கொண்டு அரசவை அடைந்தனர். சுஷேணன் நல்ல ஜாதிக்குதிரையேறி, சவாரிசெய்து காட்டினன். அதைக்கண்ட அவையோர் புகழ்ந் தனர். இச்சதியை யறியாத வராங்கன் முரட்டுக் குதிரை மீதேறி சவாரி செய்ய முயன்ருன். கடி வாளத்தை இழுக்க இழுக்க அது அடங்காமற் காற்ருய்ப் பறந்து காட்டில் புகுந்தோடிற்று. அணிந்த ஆடை அணிகள் எல்லாம் ஆங்குள்ள முட் கொம்புகளில் சிக்கி அற்று ஒழிந்தன. முடிவில் குதிரை ஓர் பாழுங் கிணற்றில் வீழ்ந்திறந்தது. வராங்கன் ஊழ்வலியை உணர்ந்து கரை ஏறினன். அங்கே ஓர் புலி தூரத்த மரமேறியிருந்தான். புலியும் அங்கேயே யிருந்தது. வராங்கன் தொலைவிலுள்ள யானையைக் குரல் கொடுத்தழைத்தான். யானை வெகுண்டு வந்து புலியைக் கொன்று சென்றது. அவனும் கீழிறங்கி குளத்தில் தாமரைத் தண்டால் உறிஞ்சி நீர் பருகும் வேளையில் முதலை வாயில் பிடி பட்டு வருந்தினன். நேமி பகவானை நினைத்தான். சாசன தேவதையாகிய தருமதேவி கடிது வந்து அவனை விடுவித்தாள். அழகிய பெண்ணுருக்கொண்டு அவன் மனோ நிலையைச் சோதித்துப் புகழ்ந்து மீண்டனள்.

பின்பவன், காட்டின் வழியேசெல்கையில் வேட்டு வர்கைப்பற்றிக்கொண்டு தம் அரசனிடம் காட்டினர்.

அவனுடைய உடலழகைக் கண்ட அரசன் வியந்து சதுர்த்தசியன்று காளிக்கு நரபலியிட காத்துவைமின் என்றனன். அவர்கள் அவனே துர்நாற்றமுள்ள புழுக்கள் நிறைந்த தோற் கூண்டில் அடைத்துக் காத்தனர். அவன் அதில் துன்புறுகையில் அரசன் மகனே ஆலம் தீண்டிற்று. அதை நீக்கி அவனேடு நட்பு கொண்டு வழி கேட்டு 'லளிதபுரம்' அடைந்தான். அங்கே சாகர விருத்தி என்னும் சிரேஷ்டியை நட்புகொண்டு அவனுக்குப் பகைவர்களாகிய காள மகாகாளரென்னும் வேட்டரசர்களே வென்று சிரேஷ்டிபதம்பெற்றனன்.

பிறகு அந்நாட்டரசன், தேவசேனனே எதிர்த்த இரண துங்கனே வென்றான். தேவசேனனும் இவனே சிரேஷ்டி என்றே கருதினன். அவ்வமயம் உத்தம புரத்து தூதர் தேவசேனனே அணுகி அரசே! எம் நாட்டில் வராங்கனின்மை யறிந்த பகையரசர்கள் படை எடுத்து வந்துளார் அதற்கு நின் துணே வேண்டி வந்தோம் என்றனர். அதைக் கேட்ட வராங்கன் கண்ணீர் விட்டுக் கலங்கியதை யறிந்த தேவசேனன் உண்மை யறிந்து தன் பெண்களே மணம் செய்து கொடுத்தான்.

பிறகு வராங்கன் தன் நகரடைந்து பகைவனே வென்றான். தன்னே வஞ்சித்த தம்பிக்கும் அபய தானம் கொடுத்து அரசையும் அவனுக்கே கொடுத்தனன். தான் வெற்றி கொண்ட மாமனரசை ஆண்டான். முடிவில்,

"உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்றபடி தனக்குற்ற துன்பத்தைத் தானே அனுபவிப்ப தல்லது பிறரால் ஏற்றுக்கொள்ள முடியாதென்பதை யுணர்ந்து துறவு பூண்டு சர்வார்த்த சித்தி யடைந்தான். (3)

4. அன்னியத்வம்.

இராவணன் கதை 119-122.

இராவணன் இலங்கை வேந்தன், வித்தியாதரன், த்ரிகண்டாதிபதி. இவன் தன் தங்கை சூர்ப்பநகையின் வாயிலாக சீதா தேவியின் அழகைக் கேட்டனன், மாரீசனாகிய மாய மானைக் காட்டி இராமனை வஞ்சித்து சீதையைச் சிறைகொண்டான்.

இதை அநுமனால் அறிந்த ஸ்ரீராமன் சுக்ரீவனோடு நட்பாடி வித்தியாதர சேனைகளுடன் லங்காபுரமடைந்தான். ஆங்கு விபீஷணனை நட்புகொண்டு இராவணனோடு போர் புரிந்தார்கள். இராவணன் தோல்வியுற்று சக்கரத்தை விட அது லக்ஷ்மணன் வலப்பக்கம் அடைந்து நின்றது. இலக்ஷ்மணன் அதையே அவன் மீது ஏவ அது அவன் மார்பைப் பிளந்து கொன்றது. இராம லக்ஷ்மணர் வெற்றி பெற்றனர்.

“வெருவந்த செய்தொழுகும் வெங்கோலனாயின்,
ஒருவந்த மொல்லைக் கெடும்.”

என்பதை யுணராது அன்னியத்தைப் பின்னமென எண்ணாது இறந்து நரக மடைந்தான். இராமர் பரம சுக மடைந்தனர். (4)

5 சம்சாரம்

வஸந்த திலகை கதை 134-142.

உஞ்சை நகரில் வஸந்த திலகை என்னும் கணிகை இருந்தாள். அவள் கருவுற்ற காலையில் சொரி சிரங்கால் பீடிக்கப்பட்டதால் உடலழகு குன்றினள். எவரும் விரும்பாது இகழ்ந்தனர். காரணம் வயிற்றிலிருந்த பிள்ளை எனப் பொருமை கொண்டாள். பின்னர் ஆண் பெண் இரட்டைகளைப் பெற்ருள். அவற்றை கீழ்த்திசையில் ஒன்றும் மேல்திசையில் ஒன்றும் போடுமாறு தாதிக்குச் சொன்னள். அவளும் அவ்வாறே செய்தனள்.

அவற்றை பல்வேறு நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் கொண்டு சென்று ஆணுக்கு தனதேவன் என்றும் பெண்ணிற்கு கமலை என்றும் பெயரிட்டு வளர்த்தனர். இருவரும் குமாரகாலம் அடைந்தனர். இருவரும் ஊழ்வலியால் உண்மை உணராது மணம் புரிந்து வாழ்கின்றனர். தனதேவன் வியாபார நிமித்தம் வெளிநாடு சென்று திரும்புகிருன். தற்செயலாய் உஞ்சை நகரில் தங்குகிருன். வேசையாசையால் தாயென்றறியாது வஸந்த திலகையைச் சேருகின்ருன். அவளுக்கு ஓர் ஆண் மகவு பிறக்கிறது இருவரும் இனிதாக வாழ்ந்து வருகின்றனர்.

நிற்க, வடமதுரையில் வீதிவழியே ஒரு முனிவர் சர்யா மார்க்கம் வந்தார். கமலை வீட்டில் தானம் ஏற்க மறுத்தனர் அதனல் கமலை தம் பிறவியின் உண்மைகளை அறிகிருள். தாபதவேடம் கொண்டு

உஞ்சை நகரடைந்தாள். வஸந்ததிலகையின் வீட்டில் குழந்தை அழுவதைக் கண்டாள். உண்மை உணர்ந் தாள். முறை பாடித் தாலாட்டினள்.

தன் தாய்க்கும் உண்மையை உரைக்க மூவரும் சென்று முனிவரைக் கண்டனர். முற்பிறவியில் முனிவர்களைப் பழித்த தீவினையின் விளைவால் விளைந்தது இப்பிறவிச் சுழற்சி என்பதை யுணர்ந்து துறவு பூண்டு நற்கதி யடைந்தனர். (5)

6. உலகம்.

சுகுமாரன் கதை 168-181.

உஞ்சைமா நகரத்து மாபேரரசன் இடபாங்கன். அவனிலும் செல்வம் மிக்கவன் சுதத்தன் என்னும் அரச வணிகன். அவன் மனைவி யசோபத்திரை. அவள் ஒரு நாள் பிகிதாசிரவ முனிவரைக் காண் கிருள். எனக்குப் புத்திரப்பேறு உளதாகுமோ வெனக் கேட்டாள். அதற்கவர், "உனக்கு ஓர் புத் திரன் பிறப்பான்" எனினும் நின் கணவனாகிய சுதத்தன் புதல்வன் முகத்தைக் கண்டதும், துற வறம் பூண்பர். அக்கோலம் கண்ட புத்திரனும் துற வறம் கொள்வான் என்றருளினர். நாளடைவில் அவளும் கருவுற்று ஓர் ஆண்மகவை ஈன்றனள். அக்காக்ஷியைக் கண்ட சுதத்தன் துறவு பூண்டான். புத்திரனும் வளர்ந்து சுகுமாரன் எனப் பெயர் பெற்ருன். யசோபத்திரையும் பிள்ளைக்குத் துறவற வுணர்ச்சித் தோன்ரு வண்ணம் சித்திரத்தும் முனி யுருவம் காணவொட்டாமல் வளர்த்தாள். தக்க பரு

வத்தில் தேவமகளிர்க்கு ஒப்பான கன்னியர் முப்பத்திருவரை மணம் செய்வித்து இன்பத்தில் ஆழ்த்தினுள்.

நிற்க, அந்நகரத்தில் ஒரு கம்பள வியாபாரி தீவாந்தரத்து நின்றும் வந்தான். அவன் கொண்டு வந்த ரத்தின கம்பளம் விலை மதிக்க வொண்ணுதது ஆதலால் அதை வாங்கத் தகுதியுடையவர் அரசரே என்று இடபாங்கனுக்குக் காட்டினுன். அரசனும் தன்னுல் வாங்க இயலாமையின் விடுத்தான். வணிகன், பலரையும் விசாரித்து முடிவில் சுகுமாரன் மனைக்குச்சென்று விலை கூறினுன். யசோபத்திரையும் லக்ஷம் பொன் கொடுத்து வாங்கி சுகுமாரனுக்குக் காட்டினுள்; அது சிறியது எனக்கு வேண்டாம் நின் மருமக்களுக்கே கொடு என்றனன். அவளும் அதை மருமக்கள் 32 பேருக்கும் மிதியடியாகச் செய்வித்து கொடுத்தாள்.

அதைக்கேட்ட அரசன் இத்தகைய தன வணிகர் இருப்பது நம் நாட்டிற்கே பெருமை. ஆகையால் நாம் அக்குமாரனைக் காண்போம் என சுகுமாரன் மனைக்குச் சென்றுன். யசோபத்திரை எதிர்கொண்டு அழைத்து ராஜ விருந்து செய்வித்தாள். அரசனும் உண்டு யசோபத்திரையை நோக்கி நம் சுகுமாரனுக்கு உடல் நலம் சற்றே குறைவு போலும் என, யசோபத்திரை அரசே அவனுக்குப் பிணியொன்றுமில்லை. முன்னுள் மாலை தண் பொய்கைத் தாமரைக் குவியாமுன் அதில் வைத்தூறிய அரிசியை மறுநாட்காலை கொடுவந்து சமைத்துண்பது வழக்கம்.

தாங்கள் விருந்திற்கு வர அவ்வரிசி போதாமையின் வேற்றரிசி கலப்புற்றது. அது மென்மையின்மையின் உமிழ்ந்துண்டனன். மணி விளக்கல்லது வேற்றொளிகள் கண்டறியானாதலால் கண் நீர் வடித்தான். ஆசிகூறிய வெண் சிறுகடுகு ஆசனத்தில் உறுத்திய தால் நிலையாய் உட்கார இயலவில்லை எனக்கூறினாள்.

அரசன் மகிழ்ந்து சுகுமாரன் எனும் பெயர் இவனுக்கே தகும் என வியந்து சென்றான்.

சுகுமாரன் ஆயுள் முடிவறிந்த அவன் மாமனாகிய முனிவர் அவன் மனைக்கு அருகிலுள்ள கோயிலில் தங்கினார். அதை அவன் அறிதற்குக் காரணமாகிய த்ரிலோக பிரக்ஞப்தி என்னும் நூலை நள்ளிரவில் ஓதினார். விழித்திருந்த சுகுமாரன் செவியாறக் கேட்டான். தன் முற்பவ உணர்வு தூண்டிற்று. முன்பு தேவருலகில் பத்மகுல்ம விமானத்தில் இன்புற்றிருந்ததை எண்ணினான். வாழ்க்கைப்பற்று அற்றான். எவருமறியா வண்ணம் தொங்க விடப்பட்ட பட்டாடை வழியே இழிந்தேகி முனிவரை வணங்கினான். அறங்கேட்டு ஆயுள் முடிவறிந்து துறவுபூண்டான். மயானங்குறுகி மாதவம்செய்தான்.

முற்பவ வைரத்தால் ஆண்டுள்ள நரிகள் அவரைக் கடித்துப் பலவாறு துன்புறுத்தின. அவரும் தியானத்தில் தளர்வின்றி நட்பு பகையற்ற சமநிலை நினைப்புடன் மரித்து சர்வார்த்த சித்தி யடைந்தார்.

இந்நிகழ்ச்சியைக் கண்ட தாயும், மனைவியரும் ஈமக்கடன் முடித்து, வாழ்க்கைப் பற்றற்று வைராக்யம் பூண்டு நோற்று நற்கதி யடைந்தனர். (6)

7. அசுசித்வம்

சுபௌமன் கதை 190-195.

சுபௌமன் என்னும் பேரரசன் மதுரையை ஆண்டுவந்தான். ஓர்நாள் நகர்ப்புறத்தே சென்றான். ஆங்கு பிகிதாஸ்வரர் என்னும் ஓர் முனிவர் இருந்தார். அவரைக் கேட்டுத் தன் ஆயுளளவை அறிந்து கொள்ளலாம் எனக்கருதி வணங்கி நின்றான். அதைத் தன் ஞானத்தாலறிந்த முனிவர், உன் ஆயுள் இன்னும் ஏழு நாட்களுள், இடியினால் இறந்து நின் சாக்கடையில் கருந்தலைப் பெரும்புழுவாய்த் தோன்றுவாய். இதற்கு அறிகுறி நீ அரண்மனைக்குச் செல்லுகையில் மாதொருத்தியால் எறியப்படும் மலம் நின்மேல் தெரிக்கும் என்றார்.

அரசன் அதைச் சோதிக்க எண்ணி வீதியில் மாதர் எவரும் வரக்கூடாதென கடுமையான உத்திர விட்டுச் சென்றான். மேல் மாடியிலிருந்த மாது மடியி லிருந்த புத்திரனை தொட்டிலில் கிடத்தினாள். முன் றானையை உதறிக் கொண்டோடி அரசனைக் கண் டாள். முன்றானையில் கிடந்த குழந்தையின் மலம் மன்னன் மேல் விழ நடுங்கி, முனிவர் வார்த்தை பொய்க்காதென வருந்தினன். மகனிடம் நடந்ததைக் கூறினான். அங்கனம் நான் புழுவாய்ப் பிறந்தால் அவ்வழி இழி பிறவியைக் கொன்றுவிடு என்று வேண்டினான்.

உடனே அமைச்சர்கள் அரசனை வசதியுள்ள ஓர் இரும்புப் பெட்டியுள்ளிட்டு சமுத்திரத்திலிட்

டனர். சங்கிலி மாட்டிப் பிடித்துக்கொண்டு இருந் தனர். அப்பேழை ஓர் திமிங்கலத்தின் மேல் தாக்க அது மேனேக்கி எழும்பிற்று. அச்சமயம் கடும்புய லடித்து இடி இடித்து பேழையின் மேல் வீழ்ந்தது அரசன் மாண்டு புழுவாய்ப் பிறந்தான்.

பிறகு இடபாங்கன், (அரசன் மகன்) சுண்டு வில்லும் அம்பும் கைக்கொண்டு புழுவைக் கொல்ல முயற்சித்தான். அது மரணத்திற்கு பயந்து மலத் தினுள் மறைந்தது.

அதைக் கண்ட இடபாங்கன் உயிர்கள் ஊழ் வசத்தால் எங்கெங்கே பிறப்பினும் அங்கங்கேயுள்ள இன்பத்தை விட, மனமின்றி ஆழ்ந்து கிடக்கும் போலும்,

"தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்"

என்பதை யுணர்ந்து பிறவியை வெறுத்துத் துறவு கொண்டு நற்கதி யடைந்தான். (7)

8. ஆஸ்ரவம்.

தீவீபாயண குமாரன் கதை (கோபம்) 202-204.

துவாரகையை யாண்ட கிருஷ்ணன் பலதேவன் முதலாயினோர் ஸ்ரீபகவான் நேமி தீர்த்தங்கரர் சமவ சரணத்திற் சென்று தேவர்களால் நிறுவப்பட்ட த்வாரகைக்கும் அழிவுண்டோ! வெனக் கேட்டனர்.

பகவான், பன்னிரண்டாண்டில் தீபாயன குமாரனுலும் மதுவினுலும் துவாரகை அழியும். கிருஷ்ணன் மகனை ஜரத்குமாரனுல் கிருஷ்ணனுக்கும் மரணமாகும் என்றருளினர்.

உடனே துவாரகையிலுள்ள மதுவையெல்லாம் கற்சுனையிலும் காட்டினுள்ளும் கொட்டி விட்டனர். தீபாயண குமாரனும் என்னுல் இந்நகரம் அழியுமென்று கேட்டும் வாளாயிருப்பது தக்கதன்றெனக் கருதி துறவு பூண்டு வெளியேறினுன். மல மாதம் அதிகம் உண்டென்பதை யறியாது பன்னிரண்டாண்டு கடந்து விட்டதெனக் கருதி துவாரகையின் புறத்தே வந்து பாறையின் மேல் காயோத்ஸர்க்கமாக நின்ருன்.

அதனை யறிந்த கிருஷ்ணன் முதலானோர் வந்து வணங்கி வழிபட்டுப் போயினர்.

பிற்க, கற்சுனையில் பெய்த பழங்கள்ளை யுண்ட புலையன் ஒருவன் மதர்த்து மயக்கமேறி அருகில் அர்ச்சித்த வஸ்துக்களின் மீதே மிதித்தேறி சீழ்க்கை அடித்து ஆரவாரம் செய்தான். அதனுல் கோபாக்னி உண்டாயிற்று. இடது தோளில் ஒரு முழ அளவினதாகிய அக்னித்திரள்போல் அசுப தைஜஸசரீரம் (தீமின்சாரவுடல்) கிளம்பி துவாரகையையும் தன்னையும் எரித்தது.

"ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும்" (8)

8. A. பாகுபலிஸ்வாமி கதை.

மாநம். 205-209.

ஆதிபகவன் தன் புதல்வர்களாகிய பரதன் பாகுபலி குமாரர்கட்கு அரசைப் பகிர்ந்தளித்துத் துறவுபூண்டு வினையின் நீங்கி விளங்கிய அறிவனுனன். ஏனை யோரும் துறவுபூண்டனர். பாகுபலி, பரதனை வெற்றி கண்டல்லது துறவேன் என்ருன். பரதன் சதுர் வித உபாயங்கள் செய்தும் பயனில்லை மறப்போர் தொடுக் கிருர்கள், மந்திரிகள் மறப்போரை நீக்கி அறப்போர் செய்ய விடுகின்றனர். இருவரிலும், திருஷ்டி யுத்தம், ஜலயுத்தம், முஷ்டியுத்தம் மூன்றினும் பாகுபலி குமா ரனே வெற்றி யடைந்தான். பரதன் வெகுண்டு தன் சக்கரத்தை நினைக்க, அது பாகுபலி குமாரனுக்கு வலப் பக்கம் வந்து வாளா நின்றது.

அதைக்கண்ட பாகுபலி குமாரன் வைராக்யம் கொண்டு சக்கரத்தையும் அரசையும் பரதனுக்கே விட்டுத் துறவு பூண்டான். நெடுநாள் கடுந்தவம் புரிந்தும் கேவலக் ஞானம் உதிக்கவில்லை. அதற் குரிய காரணத்தை பரதன் ஆதிபகவானைக் கேட் கின்ருன். பகவான், பரதனுடைய நிலத்திலே நின் றேன் என்னும் மானத்தால் பாகுபலிக்கு கேவலக் ஞானம் தோன்றவில்லை என்றருளினர். உடனே பரதன் பாகுபலியின் அடிவணங்கி, நீர் கொடுத்து நான் கொண்டது இவ்விடம். ஆதலால் என் பொருட்டு உண்டான மானத்தை விடுவீராக என் றனன்.

உடனே பாகுபலிஸ்வாமி மான கருமம் விட்டு கருமம் கெட்டு கைவல்ய பதவி அடைந்தார்.

"நிலையிற் றிரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது" (9)

8. B. புஷ்ப தந்தையார் கதை.

மாயம். 209–210.

போக புரத்தில் சாகரதந்தன் என்னும் வணிகன் இருந்தான். அவன் மனையில் நாடோறும் இறைவனின் அர்ச்சனைக்கென்று ஏமாற்றி புஷ்ப தந்தை என்ற ஆரியாங்கனை, அக்ஷதை கனி முதலியவைகளை வாங்கிச் சென்றாள். ஒருவரு மறியாமல் அதை இரவில் சமைத்து உண்டாள். சுகந்தங்களை மேலே பூசிக் கொண்டாள். பக்ஷோப வாசம்மாசோப வாசம் என மக்களை ஏமாற்றினள். தன்மேல் வாசனை வீசுவது தபத்தின் மகிமை என்றாள். அக்கூடா ஒழுக்கத்தால் தன் சரீரம்விட்டு மறு பிறவியில் உடல் நாற்றமுள்ளவளாய் பூதிகந்தி என்னும் அடிமைப் பெண்ணாகி அவலமுற்றாள்.

"பற்றற்றே மென்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்." (*10*)

8. C. பூமிபாலன் கதை.

கூடா ஒழுக்கம். 210-211.

தரணிதரன், பூமிபாலன் என இரு வித்தியாதரார் துறவு பூண்டனர். தரணிதரன் கடுந்தவம் புரிந்து நற்

கதி யடைந்தான். பூமிபாலன் மாய தவம் கொண்டு தன்னைப்போல் மலைமேல் ஓர் உருவம் நிறுவினான். அஷ்டோப வாசம் மசோப வாசம் செய்வதாக பாசாங்கு செய்தான். ஒருநாள் சென்ற ஊரில் மறு நாட் புகாது உணவு உண்டு மாயத்தால் நடத்தி முடிவில் இறந்து யானையாய்ப் பிறந்து துன்புற்றான்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்" (11)

8. D. படஹஸ்தன் கதை.

லோபம் 211-215.

தரணி ஜயம் என்னும் நகரத்தில் படஹஸ்தன் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவன் ஈயாத லோபி. வெறும் பிடி யுண்பவன். கையே போர்வையாகக் கொண்டவன். அவன் சிறிது சிறிதாக பொன் சேர்த்து பொன்னால் ஓர் எருது செய்வித்தான். கொம்புகளும் கண்களும் மாணிக்கத்தால் அழுத்தினான். நிலவறையுள் மறைத்தான். அதற்கு ஈடாக வேறோர் எருது தேட எண்ணினான்.

ஆற்று வெள்ளத்தில் விறகு மிதந்து வருவதைக் கண்டான். தன் தலையில் மண்ணை வைத்து அதன் மேல் விளக்கேற்றி வைத்து இரவில் விறகு தேட ஆற்றில் இறங்கினான்.

அப்போது அந்நகர அரசன் மாளிகை மேலிருந்து விளக்கொளியைக் கண்டான். அவன் யாரெனக் கேட்டு அறிந்தான். அவனை அழைத்து உனக்கு வேண்டுவது யாது எனக் கேட்டனன்.

அதற்கவன் அரசே! என் எருதுக்கு இணைதேட துக்கப்படுகிறேன் என்றனன். அரசனும் நம் எருதில் உனக்கு இஷ்டமான எருது ஒன்றைக் கைக்கொள் என்று காட்டினன். அவைகளைப் பார்த்து தன் எருதுக்கு இணை இதில் ஒன்றுமில்லை என்றனன். வேந்தனும் இவன் எருதைக் கொண்டு வாருங்கள் என்றனன். அரசனும் அதைக் கண்டு இது இவனுக்குத் தகாது என்று தான் கைக் கொண்டனன்.

அதனால் வியாபாரி மரித்து ஆர்த்த ரௌத்ர தியானத்துடன் தன் மனையிலே பாம்பாய்ப்பிறந்து மகனைக் கடித்தது அப்போது அப்பாம்பைக் கொன் றனர். அது கொடிய நரகத்துப் பிறந்து துன்புற்றது.

"இறலீனும் எண்ணாது வெஃகின் விறல் ஈனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு." (12)

8 E. குடியானவன் கதை.

லோபம். 214-215.

ஒரு குடியானவன் தன் நிலத்தைப் பண் படுத் துகையில் ஒரு புதையல் கிடைத்தது. அது ஒரு பாசி ஏறிய பொன் தகடு. அதன் உண்மையறியாது அதை ஒரு செட்டிக்குக் காட்டினான். செட்டி பொன் னென்றறிந்து இதற்கு என்ன வேண்டும் என்று கேட்டான். நாழி மிளகு வேண்டுமென்றான். செட்டி ஒரே முறையில் முடிவு கூறின் ஐயத்திற்கிடமென் றெண்ணி, ஆழாக்கு தருகிறேன் உரி தருகிறேன் என்றான், அவன் மற்றொரு செட்டியினிடம் காட்

டினுன். அவன் பொற்றகடென்றறிந்து உடனே நாழிமிளகுங் கொடுத்தனுப்பினுன்.

அதைப் பாசி யறக்கழுவலா மென்று கிணற் றருகே தேய்த்துக் கழுவும்போது. கைவழுவி விழுந்து பாதாளத்தைச் சேர்ந்தது. அவனும் மதி மயங்கி அது கழுவாக்காலோ! கழுவாக்காலோ!! எனப்பிதற்றி மரண மெய்தினுன். முன் விலைகூறி விட்ட செட்டியும் குடியானவனைத் தேடிக் காணுது, அம்மிளகு எத்தாலே! அம்மிளகு எத்தாலே!! என்று பிதற்றி மரண மடைந்தான். இருவரும் விலங்காய்ப் பிறந்து துன்புற்றனர்.

"அவா வில்லார்க் கில்லாகுந் துன்பம் அஃதுண்டேல்
தவா அது மென்மேல் வரும்." (13)

9. சம்வரை.

நகுலன் கதை. 224-229.

இன்பபுரம் என்னும் நகரில் நகுலன் என ஒருவன் இருந்தான். அவன் மனைவி கமலவல்லி. புதல்வர்கள் பலர். நகுலன் மூப்படைந்தான். மனைவியும் மக்களும் அவமதித்து இகழ்ந்தனர். அதனுல் வெறுப்புற்று விமல கீர்த்தி தரர் என்னும் முனிவரிடம் துறவு பூண் டான். முனிவர் உனக்கு நுண்ணறிவும் நூலாராய்ச் சியும் தேவை. ஆராய்ச்சி இன்றி கருமங்களைக் கெடுக்க இயலாது ஆதலால் நூலை ஓதும் என்றனர்.

நகுலன் இனி பாலர்களைப் போலப் படிப்பது கடினம் என்னும் மானத்தால் அவமதித்தான். காய

க்லேசத்தின் மிக்க தவமுண்டோ என்று ஏரிக் கரையில் ஓர்மரத்தின் கீழிருந்து போவார் வருவாரை எண்ணி, இன்று இத்தனை குடம் நீர் போயின வென்றும், இத்தனை கொக்கும் கூர்வாயனும் மீன் பிடித்ததிவ்வள வென்றும், எண்ணிக் கொண்டே எழுபதாண்டு தவம் செய்து கொண்டிருந்தான்.

முன்பவத் தோழனாகிய தேவன் ஒருவன் இதை யறிந்து சோதிக்க எண்ணினான். ஓர் பால தவசி உருக் கொண்டு வணங்கி வினை ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு என்பவை எத்தன்மையவை எனக் கேட்டான். மூத்தவடிகள் முனிந்து நீ உண்ட உணவு நான் உண்ட உப்பளவு இராது. நான் எழுபது வருடமாகத் தவம் செய்கின்றேன். நேற்றுப்பிறந்த நீயோ என்னைப் பரிகாசம் செய்கின்றாய் எனக் கோபித்தான்.

தேவன் அகன்று மீண்டும் இல்லறத்தானாய் வந்து ஏரியின் நீரைக் கையாலிறைத்தான். செயற்கை உருவெடுக்கும் ஆற்றலால் மற்றொரு இல்லறத்தானாகவும் வந்தான். இந்நீரை எதற்காக இரைக்கின்றாய் எனக்கேட்டான். கையிலிருந்த மோதிரம் இவ்வேரியில் விழுந்துவிட்டது. அதைக் கண்டெடுக்க இறைக்கின்றேன் என்றனன். அதற் கவன் கை கொட்டிச்சிரித்து மேல் வருவாயைத் தடுத்து ஏரியில் உள்ள நீரை மதகால் போகவிட்டு எஞ்சிய நீரை இறைத்தால் காணலாம் என்பதையும் இப்பெரு நீரைக் கையாலிறைக்க வொண்ணாது என்

பதையும் அறியாயோ! நீயும் அஞ்ஞான தபம்புரி கின்ற இம்மூத்த வடிகளுடன் ஒத்தாய் என்று மூத்தவடிகள் கேட்கும்படிச் சொன்னான்.

மீண்டும், நீர் காக்கையும் கொக்குமாய் உருக் கொண்டு மூத்தவடிகள் சமீபத்தே வந்தன; நீர்க் காக்கை கொக்கை நோக்கி, நீ இவ்வேரியின் நடுவும் கடையும் எவ்வளவு ஆழம் என்பதை அறிவாயோ? என்றுகேட்டது. கொக்கு கோபித்து எழுபதி னாயிரம் ஆண்டு இங்கே வசித்துவரும் என்னை நீயா பரிகாசம் செய்கிறாய். உன் பிறப்பும் உன் வம்சத்து ஏழுதலை முறை முடிய அறிந்த என்னை நீயா இவ் வாறு கேட்கின்றாய் என வெகுண்டு, இனி நீ யறிந்து சொல்ல முடியுமானால் சொல் என்றது.

நீர் காக்கை ஆதி, இடை, அந்தத் தளவும் மூழ்கிவந்து, இத்துணை அகலம் ஆழம் நீளம் எனச் சொல்லி, நீயும், முன்னர் நீரிறைத்த ஏழையும் மரத் தின் கீழிருக்கும் மூத்தவடிகளும் பல காலத்தோம் என்று மூர்க்கம் பேசுவதல்லது சற்றும் நல்லறிவு பெறவில்லை என்றது.

இதைக்கேட்ட மூத்தவடிகள் உண்மை உணர்ந்து உத்தம குருவிடம்சென்று ஓதி உணர்ந்து உக்ரதபம் செய்து ஊழ்வினையின் ஊற்றைச் செறித் துச் சமாதி மரணத்தோடு சுகதி எய்தினான்.

"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு." (14)

10. நிர்ஜ்ஜரை

சுவர்ணபத்திரன் கதை 237–248.

இப்பரத கண்டத்தில் மாதண்டபானு என்னும் நகர்க்கிறைவன் வித்தியாதர வரசன் சுவர்ணபத்திரன். இவன் பிறர் உபதேசமின்றியே சப்த பிரகிருதிகளை க்ஷயம் செய்து சில உபவாசாதிகளை கைக்கொண்டு அனுஷ்டித்தான். ஓர் நாள் அக்ரத்திமசைத்திலாயத்தில் வழக்கம் போல் வணங்கினான். அச்சமயம் இவன்றோழன் விமலவாகனன் வந்தான். சுவர்ண பத்ரனைப் புகழ்ந்தான். நந்தீஸ்வரத்வீபத்திற்கு வருமாறு வேண்டினான். இவனும் உடன்பட்டான் இருவரும் தம் விமானங்களேறிச் சென்றனர். மானுஷோத்தர பர்வதம் சென்றதும் சுவர்ணபத்திரன் விமானம் செல்லாது நின்றது.

அதைக்கண்ட விமலவாகனன் மனிதர்க்கு இரண்டரைத் தீவிற்கு மேல் தாண்டி செல்லும் இயல்பு இல்லை என்பதை மறந்தேன். நீ வீட்டிற்குச் செல்: யான் செல்கின்றேன் என்றனன். அதைக் கேட்ட சுவர்னபத்திரன் மானபங்கத்தால் வீடு திரும்பிவந்து ஓர் ஆற்றங்கரை அருகேவந்து அங்கே தனக்குத்தானே துறவுபூண்டு தபஞ்செய்கின்றான்.

அவனைப் பரீக்ஷிக்க விமலவாகனன், கண்டோர் விரும்பும் காதலியுருவாகவந்து அவன் காலில்வீழ்ந்து மோகக் குறியும் காட்டி நின்றனள். முனிவரனும் சலியாது யோகத்தில் நின்றனன். மற்றோர் உரு

அவள் புருஷனுய்வந்து இவளையடையவோ தனியாய் அழைத்து வந்தாய் என்று கோபித்து வாளை ஓங்கினுன். அவள் அதனைத்தடுத்து நான் முனியை வணங்கவந்தேன். அவர் மேல் பிழை இல்லை என் மேலும் பிழை இல்லை என்று கூறினுள். அங்ஙனமாயின் ஆணையிடுக என, அவளும் அம் முனியைத் தொட்டு ஆணை செய்தனள். அதற்கு அவன் இணங்காமல் தன்னுல் உண்டாக்கிய ஓர் தாபஸனைத் தொட்டு ஆணையிடச்செய்துப் பின்னரும் அம்முனியின் மனேதிடத்தைப் பரீக்ஷிக்கக் காற்றும் தீயும் கலந்து அவரைச்சுற்றி எறியச் செய்தும், அவர் தாயும் மகனும் மனைவியுமாகவந்து வீழ்ந்து அழச்செய்தும், பாம்பு கடித்துப்பிள்ளையை இறக்கச்செய்தும், அப்பாம்பே முனிவன் காலைச் சுற்றித் துன்புறுத்துவது முதலாகிய பலவித உபசர்க்கங்களைச் செய்தான். முனிவரனும் தளர்வின்றி யோகத்தில் நின்ருன்.

பிறகு முனியை நோக்கி தேவேந்திரன் உம் புகழைக்கண்டு வரம்தர உம்மை அழைத்துவர ஏவினன், நீ இந்த விமானத்தில் ஏறிக்கொள் என்றனன். அதற்கும் சலியாது யோகத்தில் நின்று சுக்லத்தியானத்தால் காதிகர்மங்களை நீக்கி கேவலக் ஞானம் அடைந்து முக்தியடைந்தான்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு." (15)

11. தர்மசுவாக்யானம்

சோமிலன் கதை. (தானம்.) 254—256

சிந்து நகரில் சோமிலன் என்னும் ஓர் வணிகன் இருந்தான் அவன் மனைவி குணவதி. உண்ண உண வற்ற ஏழைகள். இவர்கள் ஓர்நாள் நெல் உமியைக் குத்திதங்களுக்கு இரண்டும், முனிகளுக்கு ஒன்று மாக மூன்று உருண்டை தயாரித்தனர். விருந்தெதிர் நோக்கினர். கீர்த்திதரர் என்னும் முனிவர் சர்யாமார்க் கமாய் வந்தார். சோமிலன் மகிழ்ந்து நவபுண்ணிய கிரமப்படி வரவேற்று உபசரித்து அவர் கையில் ஒரு உருண்டை தானம் செய்தான். அது போதாமை யறிந்து ஏனைய இரண்டையும் கொடுத்தனன்.

அம்முனிவரும் பசியாற வுண்டபின், "அக்ஷ யந்தானமஸ்து" என்று ஆசீர்வாதம் செய்தார். தேவர்கள் பஞ்சாச்சரியம் பொழிந்தனர். சோமிலன் அரசனாலும் நகரமாந்தர்களாலும் கொண்டாடப் பெற்று புண்ணியத்தால் முடிவில் நற்கதியடைந் தான்.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" (16)

11-A வேளாளன் கதை

(பூஜை) 256—259.

தகரைமா நகரில் தனதத்தன் என்றோர் தன வணிகனிருந்தான். அவனுடைய எருமைகளை மேய்க்

கும் வேளாளன், ஓர் நாள் எருமைகளை ஓர் குளத்தில் நீராட்டச் சென்றபோது, அதில் ஆயிரத்தெட்டிதழ்கள் கொண்ட ஓர் தாமரைப்பூவைப்பறித்தான்: அவ்வமயம் ஓர் வியந்தர தெய்வம், இதை உத்தமருக்கு ஏற்றுக என்றது.

வேளாளனும் தன் மாதா பிதா தெய்வங்களாதற்குரிய உத்தமன் வணிகனே, அவனுக்கே ஏற்றுவனென்று அவன் மனையடைந்தான். அவ்வமயம் வணிகனும் அரசனைக் காணவேண்டி பாகுடமேந்திச் சென்றான். வேளாளன் இவரினும் அரசன் உத்தமன் போலுமெனக் கருதி உடன் சென்றான். அவ்வமயம், அரசனும் அந்நகர்ப் புறத்தே யுள்ளதோர் புவனதிலகம் என்னும் ஜிநாலயத்தில் கீர்த்திதரர் என்னும் முனிவர் எழுந்தருளினர் எனக்கேட்டு அஷ்டவிதார்ச்சனையோடு புறப்பட்டான். வணிகனும் அரசனுடன் சென்றான். வேளாளனும் அரசரினும் அம்முனிவர் உத்தமர் போலும் என்று உடன் சென்றான். அனைவரும் ஆங்குள்ள இறைவனை வணங்க, எல்லோரினும் மிக்க உத்தமர் உள்ளிருந்த தேவரே எனக்கருதி வேளாளன் அவர் திருவடியில் கமலமலரை வைத்து அர்ச்சித்தான். அப்புண்ணியத்தால் மறுபிறப்பில் கரைகண்ட மகாராஜன் என்னும் மண்டலேஸ்வரனாக ஆனான். முடிவில் துறந்து நற்கதி யடைந்தான்.

> “ கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின் ” (17)

11-B பிரபாவதி கதை

(சீலம்) 259—264.

சாகபுரத்தரசன் ஒத்தாயணன் அவன் தேவி பிரபாவதி பதிவிரதா குணசீலமுடையவள். ஓர் நாள் ஒத்தாயணன் பகைவர்மேல் படையெடுத்து வெளி நாடு சென்றான். அதை யறிந்த சண்டபிரத்யோதனன் என்பான் பிரபாவதியின் வடிவழகைக் கேட்டு அவளைத் தன் அரண்மனைக்குக் கொண்டுவரக் கருதி னான். சாகபுரத்தை படையுடன் சென்று முற்றுகை யிட்டான். தக்கவரை ஏவி பிரபாவதியைக் கொண்டு வர ஏவினான். பிரபாவதி அதற்குச் சற்றும் உடன் படாது பல நீதிகளை யெடுத்துரைத்தாள். அதற் கவர் நீ இணங்காவிடின் எம் அரசன் உம்மை வலிந்து கொண்டு போகாமல் விடான்; ஆதலின், ஆராய்ந்து கூறுவாயாக என்று சொல்லிப் போயினர்.

பிரபாவதி பதிவிரதா த்ர்மத்திற்கு பங்கம் நேரு மாயின் அதற்குச் சற்று மிணங்காது மரண மெய் தலே சிறந்தது என எண்ணினாள். இத்துன்பம் நீங்குமளவும், ஊண் உடல் மறந்து காயோத் ஸர்க்க மாக நின்றாள்.

அதை யுணர்ந்த ஓர் வியந்தர தேவன் சண்ட ப்ரத்யோதனனுக்குப் பலவித துன்பம் உண்டாக்கி நகரைவிட்டுத் துரத்திவிட்டான். மீண்டும், பிரபா வதியைப் புகழ்ந்து வணங்கி, பதிவிரதா தருமத்தைப் பலருமறியச் செய்து தனதிடம் சென்றான்.

இச்செய்தி யறிந்த ஒத்தாயணன் சண்டப்ரத்யோதனனை அடக்கினான். அவன் நெற்றியில் நாய்ப்பொறி பொறித்து சிறையிலிட்டான்.

ஓர் நாள் சண்ட ப்ரத்யோதனன் பாலசிநேகனை மதிவரன் என்னும் முனிவன், சிறையில் வந்து அவனுக்கு அறங்கூறினான். அதைக்கேட்ட சண்ட பிரத்யோதனன் தான் செய்ததவறை யுணர்ந்து தன்னைத்தானே நிந்தித்துக் கொண்டான். மாதத்தில் ஆறு உபவாசம் கொண்டான்.

இதை யறிந்த ஒத்தாயண, மகாராஜன். இவன் ஆருகதன் என்பதறிந்து பக்தி வணக்கத்துடன் அவனை யழைத்து நெற்றியிலுள்ள நாய்ப்பொறி மறைய பொற்பட்டம் கட்டி நால்வகைப் படைபலம் அளித்து அவன் அரசை அவனுக்கே முடி சூட்டினான். சீலவதியாகிய பிரபாவதியும் அரசனும் முடிவில் துறவு மேற்கொண்டு நற்கதி யடைந்தனர்.

"தற்காத்துத் தற்கொண்டாற்பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (18)

11-C நாகதத்தன் கதை

(உபவாஸம்) 264-268.

வீதசோகபுரத்தில் தனபதி என்னும் வியாபாரி இருந்தான். அவன் மனைவி குணவதி இவர்கட்கு புத்திரன் நாகதத்தன் இவன் மனைவி நாகவசு. ஓர்நாள் குப்தித்ரய சம்பன்னர் என்னும் முனிவர் ஜிநாலயத்தில் எழுந்தருளினர். அதைக்கேட்ட நாகதத்தன்

நகர ஜனங்களுடன் சென்று, இறைவனையும் முனிவனையும் முறைப்படி வணங்கினான். திருவறம் கேட்டு ஸ்ரீபஞ்சமி நோன்பு கைக்கொண்டனன் ஆடித்திங்கள் பஞ்சமியன்று உபவாசங்கொண்டான். பிறந்த நாள்தொட்டு போகம் நுகர்ந்து வந்தவன் ஆதலால் உபவாஸம் தாளாது உடலிளைத்தான். சுற்றத்தார் குறுகி, உனக்காக நாங்கள் பல நோன்புகள் கைக்கொள்ளுகிறோம், பல ஆலயம் கட்டுகிறோம், வேறு பல தருமங்களும் செய்கிறோம், நீ இந்த உபவாசத்தை விடுவாயாக என்றனர்.

நாகதத்தனும் பஞ்சபரமேஷ்டி சாக்ஷியாகக் கொண்ட விரதத்தைவிட இயலாதென உறுதி கொண்டிருந்தான். சுற்றத்தார் சூதுசெய்யக் கருதி ஓர் கண்ணாடியைத் தூய்மையாக்கி சுற்றிலும் மணிகள் புதைத்து கீழ்த்திசையில் வைத்து, சூரியன் உதயமாயிற்று பாரணை செய் என்றனர். நாகதத்தனும் பொழுதின் அளவை யறியேனோ! இது உங்கள் சூழ்ச்சியென மறுத்தான். அறிவுடையார் அருகிருந்து மரணத்தருவாயில் பஞ்சமந்திரம் போதிப்பீராக என்று பரமாத்ம சிந்தனையிலாழ்ந்தான்.

ஆயுள் முடிவில் சௌதர் கல்பத்து தேவனானான். மீண்டும் பூமியில் வந்து நாக குமாரனாய்த் தோன்றி அரசாண்டு முடிவில் துறவு பூண்டு வினைவென்று வீடு பேறடைந்தான்.

“மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு” (19)

12. போதி துர்லபம்

தன்யகுமாரன் கதை. 276—303.

அவந்தி நாட்டு உஞ்சேனை நகரத்து தனவணிகன் தனபாலன் அவன்தேவி பிரபாவதி. இவர்கட்கு புத்திரர்கள் எண்மர். கடைசி மகனான தன்ய குமாரன் சகல கலைகளையும் கற்றான். பெற்றோர்களுக்கு இவனிடத்தில் பிரியம் அதிக மிருந்ததனால் மற்ற மக்கள் இவன் மீது முனிவுகொண்டனர்.

ஓர் நாள் பெற்றோர் இத்தன்ய குமாரனை நோக்கி நூறுபொன் கொடுத்து வியாபாரம் செய்து வா வென்றனர். அவனும் சென்று நூறு பொன்னுக்கு ஒரு விறகு வண்டி வாங்கி அதை மாற்றி ஓர்கட்டில் காலும் வாங்கிக்கொண்டு வந்தான். பெற்றோர் அதைக்கண்டு ஆநந்தம்கொண்டு கழுவ ஓர் மறை கழன்றது, அதைத் திருகி எடுக்க அதனுள் ஓர் பொன் ஓலை இருந்தது, அதில் ஓர் கிரகத்தில் அநேக பொற்குவியல்கள் உள்ளன அதில் இருந்தவர் யாவரும் இறந்தனர். ஆதலின், இந்த ஓலையைப் பெற்றவனுக்கே அப்பொருள் உரியது என்று வரைந்திருந்தது.

அதைக்கண்ட தன்யகுமாரன் அம்மனையை அரசனின் அனுமதி பெற்று (விலைக்கு) வாங்கினான். அதிலுள்ள பொற்கடாரங்கள் யாவற்றையும் கொண்டு சந்தோஷித்திருந்தான். பெற்றோர்கள் இதைக்கண்டு பேர் உவகை கொண்டனர். இதைக்

கண்ட தமையன்மார் இவன்மீது பொறாமைகொண்டனர். அவனைக் கொல்ல நினைத்தனர். நீர் விளையாட்டிற்கு அழைத்துச்சென்று ஏரியில் தள்ளிவிட்டனர், அவனும் மூழ்கி மதகின் வழியாக வந்து கரை ஏறினான். வெருப்புற்று தேசாந்தரம் சென்றான். பெற்றோர்கள் காணாது வருந்தினர்.

தன்னிய குமாரன் செல்லும் வழியில் ஓர் வேளாளன் ஏர் ஓட்டிக்கொண்டிருந்தான். அவ்விருவரும் நட்புகொண்டு வேளாளன் இலைபறிக்கச் சென்றிருந்தபொழுது தன்ய குமாரன் அவ் ஏரைப் பிடித்து ஓட்ட, அதில் தோன்றிய புதையலைக் கண்டு அவ்வேளாளனுக்கே கொடுத்து உணவும் உண்டு சென்றான். பூதகிதரென்னும் முனிவரைக் கண்டான். அவரால் உபதேசம் பெற்று தன் தமையன்மார்கள் தன்மேல் வைரங்கொண்ட முற்பிறவிகளின் காரணத்தை அறிந்தான். பின்பு ராஜகிரகம் என்னும் நகரத்தையடைந்தான். அங்கு மாலைக்காரன் மனையடைந்து மாலை தொடுத்து மயக்கி மாமன் மகளையும் அரசர் குமாரி முதலிய பலரையும் மணக்க சம்மதித்தான். அச்சமயம் அரசன் மைத்துனன் இவன்மேல் பொறாமைகொண்டு அவ்வூருக்கு அருகிலுள்ள ராக்ஷஸ குகையை எவன் அடைகிறானே அவனுக்கே அரசன் மகள் உரியவள் என்று பறை சாற்றச் செய்தான்.

தன்ய குமாரனும் ஆங்கு சென்று ராக்ஷஸனால் கொடுக்கப்பட்ட பொருளை யடைந்தான். அரசனும்

மகிழ்ந்து தன் மகளேயும், ஏனைய மணமகளிரையும் அழைத்து மணம் செய்து வைத்தனன்.

ஆங்கு, பெற்றோர் இளேய மகனைக் காணது வருந்தினர். வருமையுற்ற அவர்கள் பிறகு தன் மைத்துனன் நகரத்தே சென்று தன்ய குமாரனைக் கண்டனர். அவனும் வணங்கினன். தன் தமையன் மாரையும் கட்டித்தழுவினன். உங்களால் அல்லவோ எனக்கு இந்த வைபவம் என்றனன். முடிவில் துறவு பூண்டு நற்கதி யடைந்தான். (20)

கதைச்சுருக்கம் முற்றும்.

திருவறம் மறவற்க.

‘ பரதேஸ்வர வைபவம் ’

இந்நூல் கன்னட பாஷையிலுள்ளது இதை இயற்றியவர் ரத்னாகரகவி என்ற துறவி இவரை அறியாதார் கன்னடதேசத்தில் ஒருவருமில்லை இந் நூலின் செய்யுளை (ஸ்லோகங்களை) கன்னட தேசத் திலுள்ள ஆண்களும் பெண்களும் வெகு அழகாக பாடியதை நான் நேரில் கேட்டு மகிழ்ந்தேன் இதை வடநாட்டார்கள் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும் என்பது என் உத்தேசம், இப்போது அங்கத்தின ராக சேர்ந்திருக்கும் 500 நபர்கள் போக இன்னும் 500 சேர்ந்தால் சுலபமாக பாகம் பாகமாக முடிக்க லாம் இதர்க்கு ஜைன பெரியோர்கள் எனக்கு உடந் தையாய் இருப்பதோடு மற்றவர்களையும் அங்கத்தின ராக சேரும்படி செய்து உற்சாகப்படுத்தினுல் என் னுலான வேலையை செய்ய கடமை பட்டிருக்கிறேன்.

பொருளடக்கம்



(LORD MAHA VEER)

24TH

THEERTHANGAR

ஓம்

ஸ்ரீ ஜிநாயநம:

ஜீவஸம்போதனை.

கடவுள் வாழ்த்து

அருக சரணம்.

நேரிசை வெண்பா

*மூவுலகும் வந்திறைஞ்ச மூவா முதலாகி
மூவுலகுந் தானே முழுதுணர்ந்தான்—மூவுலகின்
உட்பொருளா யோங்கி யுயர்பொருளாய் நிற்கின்ற
அப்பொருளா மெங்கட் கரண். ௧

எ-து. த்ரிபுவநாதிபதி வந்தித, ஸமவஸரண ஸ்தாநாதிஷ்டித, பஞ்சகல்யாணாஷ்டமஹாப்ராதிஹார்ய, சதுஸ்த்ரிம்ஶ ததிஶய, விபூதி விப்ராஜமான க்ரமகரண, வ்யவதாநாதீத, ஸூக்ஷ்மாந்தரித, தூரஸ்தாத்யநேக வஸ்து காலத்ரய த்ரிலோகவாத்தி குணபர்யாயாவலோக லக்ஷித, த்ரிகோடி பரிணாமாத்மக, வஸ்துஸாக்ஷாத்கரணஸமர்த, ஸகலவிமல கேவலஜ்ஞாந ஸ்வரூபமாகிய பரமேஶ்வரன், பரமேஷ்டி, அர்ஹன், பரப்ரம்மமே ஶரணமாக அடைந்தோம் என்றவாறு. அன்றியும்,

---

* மூவுலகம்-அதோ லோகம், மத்திமலோகம், ஊர்த்துவ லோகம்.

சித்த சரணம்

[1] இருநால் வினைகெடுத்தெட் [2] டெண்குணனு மெய்தி
உருவாற் சிறிதொழிந்த வுண்மை—அருவாகி
நித்தராய் மூவுலகு மேத்த நிறைந்தபுகழ்ச்
சித்தராம் நந்தமக்கோர் சேர்வு. 2

அன்றியும்,

ஆசாரிய சரணம்

நாலொன் பதுகுணமும் நல்லொழுக்க மைந்தினையும்
நூலொன் பொருள்வகையி னுண்மையான்—மேலின்பம்
ஆய்ந்த வகைநிகழு மாசா ரியனடியென்
வாய்ந்த மனம்வைத்தேன் மாண்பு. 3

அன்றியும்,

உபாத்தியாய சரணம்

ஆறிரண்டங்கமு மாய்ந்தீரேழ் பூவமுங்
கூறிரண்டெண் கேள்விகளிற் குன்றுமல்—தேறி
வரந்தருநல் லோத்துரைக்கும் வாய்மையார் பாதம்
நிரந்தரம்நான் வந்திப்பன் நின்று. 4

அன்றியும்,

சர்வ சாதுக்கள் சரணம்

அருங்கலங்கள் மும்மை அழிவகையோன் றின்றிப்
பெருங்குணங்கள் நல்லனவே பேணி—யொருங்கிசைந்த
சாதுக்கள் தங்கள் சரணார விந்தமே
மாதுக்கந் தீர்க்கும் மருந்து. 5

(இவற்றின்பொருள்) *அருகத்சித்தாச்சாரிய உபாத்தியாய சர்வசாதுக்களென்னும் பஞ்சபரமேஷ்டிகளின் ஸ்ரீபாதகமலங்களை மாங்கல்ய நிமித்தமாக நமஸ்காரஞ் செய்தோம் என்றவாறு. அன்றியும்,*

---

[1] இருநால் வினை - காதி அகாதி என்னும் எட்டு வகைக் கருமங்கள். [2] எண்குணம்-அனந்தஜ்ஞானதி குணங்கள் எட்டும்.

சரஸ்வதி துதி

மாறில் கலையுணரா மாண்பிலர்பால் மன்னுதான்
தேறும் பொருண்மேல் திகழ்கின்றான்—ஈறில்
முதல்வனாய் நின்றான் மொழியமுத மென்னும்
புதல்விதான் தேடும் பொருள். 6

(இ - ள்) காரியார்த்தங்களைத் தெரிந்துணராத கல்வியினர்பால் சேர்வின்றிச் சகலகலாரூபமாகிய அருகத் பரமேஸ்வரன்முகோத்கதமாகிய வாகீஸ்வரி என்னுடைய இருதயகமலத்தே யிருந்துஅருள் புரிந்து, யான் உன்னிய வெல்லாம் உதவுவிப்பாளாக எ - று. அன்றியும்,

கணதரதேவ முனிவர் துதி

கொல்லா வதமுதலாக் கூறிய மாகுணங்கள்
எல்லாம் நிறைந்த இயல்பினாற்—பொல்லாப்
பவக்கடலை நீந்திப் பரமநிலை யெய்துந்
தவக்குழுவின் பாதஞ் சரண். 7

(இ - ள்.) இருபத்தெட்டு மூலகுணமும், முப்பத்தாறு உத்தரகுணமும், பதினெண்ணாயிரஞ் சீலாச்சாரமும், நூறுகோடி மகாவிரதமும், எண்பத்து நான்கு நூறாயிரங் குணவிரதமும் உடையராய் சப்த ரித்தியிலும் சம்பன்னரா யிருந்த கணதர தேவராதியர்க்கும், திரயோதசக் கிரியையி னிறைந்த முனி சமூகத்திற்கும் நமஸ்காரஞ் செய்தோம் எ - று. அன்றியும்,

சாசனதேவதைகள் துதி

பவ்வியரைக் காத்தோம்பிப் பன்னிய என்கவிதைக்
கவ்வியமுந் தீர்க்கும் அருளுடையார்—செவ்விய
மாதனமாக் காத்தோம்பி வாம னறம்விளக்குஞ்
சாதனமா தெய்வங்கள் தாம். 8

(இ - ள்) சதுர்விம்சதி யக்ஷ யக்ஷியரும், சத்தர்மத்தை ரக்ஷித்து நிகழ்த்தும் சாசன தேவதைகளும் பவ்வியப் பிராணிகளை ரக்ஷிக்கும் இக்கதையை இனிது நடாத்துவர் எ - று. அன்றியும்,

அவை யடக்கம்

மட்டவிழும் பங்கயங்கள் பூத்த மடுவகத்தே
கொட்டிகளும் தோடவிழ்ந்தாற் போலவே-இட்டநிறை
மாண்கவிதை மாப்புலவோர் தொல்லவையுள் மாறுதே
யான்கவிதை செய்யு மிது. 9

அருளறத்தின் மிக்க அறிவுடையா ராய்ந்த
பொருளறத்தின் மிக்கார் புலவர் — தெருளறத்தின்
மன்னலா மென்பவர்தம் மாண்புரையால் யான்கவிதை
பன்னலா மென்பதுவென் பங்கு 10

(இ - ள்) சம்மியக் தரிசன ஜ்ஞான சாரித்திரங்கள் நிறைந்து தர்ம மார்க்கத்தில் நிகழ்வோரும், காவிய லக்ஷணமறியும் புலமை மிக்கோரும், நிச்சலமாயிருந்த தர்ம கிரந்தத்தைத் தர்மசிரவணஞ் செய்கை ; மற்றவரது அனுக்கிரகத்தினு லுற்றதனை உரைக்க லுற்றேன் எ - று.

சிரேணிக மகாராஜன் வரலாறு

நாட்டுவளம்

கருக்கொண்டு மின்னிக் கடன்முகந்து கொண்மூ
பொருப்பின் மிசைபொழியப் பொங்கி—அரிக்கொள்
கயமிறுத்துக் கோடிழுத்துக் கல்லுருட்டி மண்மேல்
இயமுனைக்கே வந்திழிந்த தீண்டு. 11

கலிப்பா

பரவையினற் புனன்முகந்து மிசையெழுந்து பயோதரங்கள்
இரவிமிகு விபுலகிரி மிசையின்மிகப் புயல்பொழியக்
காரகிலின் குறடுக்கிக் கருமாவி னெயிறுவாரி
வேரிமிகு மதுப்போது மேன்மேலுங் கொண்டெழுந்து
சந்தனத்தை முறித்தெறிந்து தமனியத்தின் தழைவாரிச்
சிந்தூர மிலவங்கந் திமிசுதெறுங் கற்பூரம்
கறையடியின் கோடியினொடு கனமயிற்பீ லியும்வாரித்
துறைதுறையன் புகத்தள்ளிச் சுரும்பரெழுந் திசையார்ப்ப
அங்குநின்று போந்திழிந் தரும்பாலை புறக்கிட்டுக்
கொங்குலவு மலர்முல்லைக் கோவலர்க ளிடங்குறுகிக்
கொன்றைமலர் பொன்காட்டக் கோபமது வாய்காட்ட
மன்றலருங் காந்தண்மலர் கைகாட்ட வளம்பெருகி
வயங்கியொளி வளர்கின்ற மருதத்தி னிடையேசென்
றியங்கியமா யமுனையது எழிலாக வேயெய்தி
மாதவியின் பொழினுழைந்து மலர்தொகுத்துச் சினைமுறித்துத்
தாதவிழுஞ் சண்பகத்தைத் தடிந்தீர்த்துத் தலைக்கொண்டு
உற்பலத்தைப் பறித்தெறிந்தங் கோடைகளிற் புகமண்டிக்
கற்பகத்தின் கான்சாடிக் கழுநீரின் மலர்கவர்ந்து
பூகத்தின் பொழினுழைந்து புன்னகைக் கோடிறுத்து
நாகத்தின் மலர்பறித்து நாளிகேரத்திடைப்புக்கு
வரம்பேறித் தாங்கொண்டு மதிப்பரிய வயன்மண்டிக்
கரும்போடு பெருஞ்செந்நெற் குவையுந்திக் கமலத்திற்

புள்ளெழுந்து புறம்பாயப் புனல்பாயக் கருமேதி
மள்ளர்க ளுடன்பாய வயலின்மிசைக் கயல்பாயத்
தேன்பாய நீலத்தின் மலர்பாயச் சிறைவண்டு
தான்பாயச் செங்கிடையிற் றண்காவி சிறக்கணிப்பச்
சங்கீன்ற வெண்முத்துஞ் சலஞ்சலமும் பசும்பொன்னும்
அங்கங்கே யுழவர்களுக் களித்தினிது திரைக்கரத்தால்
எங்கெங்குஞ் சென்றெய்தி இருமருங்கும் பொருதலைத்து
மங்கையர்கள் மனம்போன்று வருகலுழி நுரைசுமந்து
அறவோர்தம் பொருள்போன்றங் ககலிடத்திற் பொருள்பெருக்கி
நிறைவாகத் தெளிந்தெங்கு நிரம்பித்தன் வளம்பெருக்கி
அன்னமது சூழ்வளநாட் டளப்பரிய காட்சியது
தன்னுடைய பெயரேந்தித் தராதலத்திற் குபகரித்து
மன்னியதோல் குணத்தின்மிகு மகதவள மாநாடே.
அன்றியும், **12**

நேரிசை வெண்பா.

அங்கங்கே சோலைகளும் அங்கங்கே வாவிகளும்
அங்கங்கே செந்நெற் குவைபணியும்—அங்கங்கே
ஆலை வயன்மள்ள ரார்ப்பொலியும் புள்ளொலியும்
ஞாலநிகழ் நன்மகத நாடு. **13**

(இ-ள்.) இவ்வகைத்தாகிய வளநாட்டுள் இராச மகாபுரம் எவ்வகைத்தோ எனின்,

நகரச் சிறப்பு

வங்கக் கடலுடுத்த மண்மடந்தை வாண்முகத்தில்
திங்கள் நுதற்றிலதம் போன்றதே—துங்கமுடிச்
சேணிகமா ராசன் செழுமணிசேர் செங்கனகப்
பூணியலு மார்பன் புரம். **14**

குன்றனைய மாடமிடைக் கோபுரமுஞ் செய்குன்றும்
மன்றலருஞ் சோலைகளும் வாவிகளும்—என்றும்
விளைவருச் செய்கை விருப்பருக் காட்சி
அளவருந் தொன்னகர மாங்கு. 15

அன்றியும்,

பண்ணொலியும் யாழொலியும் பல்லியங்க ளார்ப்பொலியும்
எண்ணொலியும் வேதியர்தம் இன்னொலியும்—மண்ணுலகின்
அம்பரஞ்சேர் நீடுகொடி யாடு மணிநகரம்
உம்பருஞ்சேர் வானுலகே ஒப்பு. 16

(இ - ள்.) *இன்ன தொல்சிறப்புடைய இராஜமா நகரத்து இன்ன தொல்குணத் ததிபதி யாவனோ எனின்,*

சிரேணிகமகாராஜன் சிறப்பு

முன்னியல்பிற் செங்கோன் முறைமையால் வெண்குடைக்கீழ்
மன்னுயிரைக் காத்தளிக்கும் வண்மையால்—தொன்மைத்
திருந்தாரை வெல்களிற்றான் சேணிகமா ராசன்
பெருந்தேவி சேலினிதன் பேர். 17

(இ - ள்.) *ஆதிக்ஷத்திரியன் ஆஜ்ஞாமார்க்கந் தலைநின்று ஏகச்சத்திரச் சாயையினால் இனிது நடாத்த சர்வஜீவதயாபரனாய்ச் செல்லாநின்ற மகாராஜன் அரசியல் எவ்வகைத்தோ வெனின்,*

அரசியல்

அன்பினான் மன்னுயிர்க ளோம்பி அறநெறியால்
இன்பினால் வையம் இனிதேந்த—முன்புநிகழ்
நீதியால் வேந்தர் நிறைகொணர்ந்து நின்றிறைஞ்ச
ஆதியா னுண்டான் அரசு. 18

(இ - ள்.) தர்ம மார்க்கம் தலைசிறப்ப, திறை கொணர்ந்து தேர்வேந்தர் முறை முறை அடி வணங்கச் செல்லாநின்ற நாளகத்தொருநாள்,

கின்னரர்கள் பாட நடனமியல் கெண்டையங்கட்
கன்னியர்கள் வெண்கவரி காலசைப்பப்—பொன்னியலும்
சிங்கா தனத்தின்மிசை வீற்றிருந்தான் தேவியொடும்
கொங்கார் பொழின்மகதக் கோன். 19

(இ - ள்.) பூசுரர்கள் ஆசீர்வசனஞ்சொல்ல மகா துந்துபி நின்றியம்பக் கின்னரர்கள் கீதம்பாடக் கற்றைக்கவரி காலசைப்ப, மந்திரி புரோகித சேனாபதி மகுடவர்த்தனர் புடைசூழ, சுகசங்கதா விநோதத்தோடும் சிம்மாசன மஸ்தகஸ்திதனாய் வீற்றிருந்தான். அவ்விடத்து யாது நிகழ்ந்ததோ எனின்,

வனபாலன் வரவு

வென்றிநகர் மேல்பால் விளங்கு விபுலகிரி
துன்று நெடுந்தீர்த்தந் தோன்றுதலுஞ்—சென்றடைந்தான்
ஏவலனாய் நின்ற எழிலார் வனபாலன்
காவலன்றன் வாசற் கடை. 20

(இ - ள்.) தரணிபாலன்தன் கோயில்வாசல் குறுகித் துவாரபாலகரை நோக்கி ரிஷிநிவேதகன் யாது சொன்னானெனில்,

என்வரவை யென்கோக் கியம்புமென ஈண்டவரும்
மன்னவனை யேத்தி வரவிசைப்ப—அன்னவனை
மாவலனு மொல்லை வருகென்றான் வந்தவனும்
காவலனைத் தான்பணிந்தான் கண்டு. 21

(இ - ள்.) மகாராஜருக்கு என்வரவு அறிவிப்பீ ராமினென்ன, துவாரபாலகன் கதுமெனச்சென்று தங்கோனுக் கறிவிப்ப அவனும் சீக்கிரம் வருக வென்றலும் வனபாலகனும் வந்து மகாராஜனை நமஸ்கரித்து யாது சொன்னனெனில்,

வனபாலகன் தீர்த்தகரர்வர வுணர்த்தல்

எங்கோமான் கேட்டருளா யேரார் கிரியின்மிசை
நங்கோமான் தீர்த்தம் நயந்ததெனத்—தங்கோனை
ஏர்பெறத்தான் ஏழடிசென் றேத்தி யிறைஞ்சவறஞ்
சீர்பெறத்தான் செய்தான் சிறப்பு. 22

(இ - ள்.) வனபாலகன் சிரேணிக மகாராஜ னுக்குச் சொல்லுவான்: நம்நகரின் நைருத்திய திசையில் விபுலகிரி பர்வதத்தின்மிசை ஸ்ரீவீர வர்த்தமான சுவாமி தீர்த்தம் அவதாரமாயிற் றென் றலும் எதிரெழுந்து சப்தபதஞ் சென்று திசை நோக்கி நமஸ்கரித்து வனபாலகனுக்குச் சிறப்புச் செய்து, பின்னும் யாது செய்தானெனில்,

ஆனந்தபேரி அறைவித்தல்

ஆனந்த மெய்தி அரசனணிநகரத்
தானந்த பேரி அறைவித்தான்—ஆனந்தச்
சொல்லாரக் கேட்டுத் துகடீர்ந்த காட்சியார்
எல்லாரும் வந்தடைந்தா ரீண்டு. 23

(இ - ள்.) விபுலகிரி பர்வதத்தின் மிசை ஸ்ரீ வீர வர்த்தமான சுவாமி தீர்த்தம் அவதரித்தது; அரச

ணுேடுங் திருச்சிறப்பேந்திச் சாதுர் வர்ணத்தார் தம் தம் விபூதியோடும் அஷ்டவித அர்ச்சனை கொண்டு வருகவென்று ஆனந்தபேரி யறைவித்தான். அப் பொழுது,

அரசன் செம்பொனெயில் சேர்தல்

பார்மிடைந்த நாற்படையும் பல்லியங்க ளார்ப்பொலியும்
கார்மிடைந்த வான்கடல்தான் கைகவிப்பச்—சீர்மிடைந்த
பைம்பொன் முடிமன்னன் பாங்கார் சிறப்பேந்திச்
செம்பொ னெயிலடைந்தான் சென்று. 24

(இ-ள்.) சதுரங்க பலத்தோடும் சங்க படக துந்துபி பேரி தாளங்களாலும் ஒலிகடலோடு மறு தலித்தாற்போலப் பார்மகளும் முதுகு நெளிப்ப, பூமகளும் பொலிந்திலங்க நகரஜனம் புடைசூழத் திருச்சிறப்பேந்தி, திரிலோகபூஜார்ஹன் எழுந்தருளி யிருந்த சமவசரணம் சென்று குறுகினன் சிரேணிக மகாராஜன். அவ்விடத்து ஸமவஸரணம் எப் பெற்றியதெனின்,

சமவசரணம்

ஶ்லோகம்.

மகவா க்ஷிதெவிஃபதி வஂஅஸஹஸ்ரஉணூாநு
ஸொவாநவிஂஶதிஸஹஸ்ரவிநாஜஊநா ।
ஶெஜெ ஸஹா யநஉயக்ஷகுநாயதீயா
தஸ்ஸெநஉஸ்தூஹுவநப்ரஹவெ ஜிநாய ॥

(இ - ள்.) இந்த பூமிக்குமேல் ஐயாயிரம் தண்ட ப்ரமாணத்துக்கு மேல் துவாதச யோஜநாயாம விஸ்தாரங்களை யுடைத்தாய் இந்திரநீலமயமாகிய சூரிய மண்டலம் போல விருத்தமாகி ஆகாச தலத் திருக்கும்

ஶாதஸ்தம்ஹஸரோவரோம்ஃப
　　வரிவா ப்ராகாரவஞ்ஜீவத
ப்ராஸாதய்வுஜவாரிஜாதவளய
　　ஸ்தூலிவாதிஹிவெஷ்டிதே ।
கொரெஷெஹுஞாதுபஹிஸ்லாவோஹ
　　நர ஜ்யோதிஷ்கவந்யாஹிஷைதெ
யெஹத்ஹூவ்யஸஹாஷஹெவதி
　　யஃ ஸ்ரீஶாஹிஹாரொதூயூதெ ॥

அதன் நான்குதிசையிலும் பாதலேபௌஷதி சமானங்களான மணிமய சோபானங்கள் விம்சதி சகஸ்ரம் சென்று, அதன் அக்கிரபாகத்து, ப்ராசாத சைத்திய பூமியும், ஜலகாதிகாக்ஷமாதலமும், வல்லீ வனுவனியும், உபவனவேதியும், த்வஜமாலா குவலயமும், கல்பமஹீருஹ மஹீதலமும், பவன ஸந்தோக வசுந்தரையும், த்வாதசகண பரிஷ்க்ருத பவித்திரதர க்ஷேத்திரமும், பிரதம த்விதீய பீடதலங்களுமாம்.

அதில் ஹேமமயங்களும், மணிமய ஸோபானலங்கிருதங்களும், ஜ்யோதிர் அமரதௌவாரிக ரமணீயங்களுமான சதுர்கோபுர த்வாரங்களால் விளங்கி:

தத்பூமண்டலாகாரத்தினுல் பரிவேஷ்டித் திருந்த பஞ்சரத்தின சூர்ண கடிதஸுரஸுராஸ்னேப மானமும், ப்ராகாராப்யந்தரத்து மஹாவீதி மத்தியத்து, சதுர்கோபுரான்விதத்ரிஸாலபரிவேஷ்டித மத்தியகத த்ரிபீட ப்ரதிஷ்டாபித சதுஸ்ஸரோவர ரஞ்சித த்விசத்வாரி குண்டமண்டிதஸுரகுமாராபிஷிக்த ஜினபிம்ப சதுஷ்டயாதிஷ்டித மஸ்தக தேதீப்யமான மானஸ்தம்ப சதுஷ்டயாபிராமமும், மித்தியாதிருஷ்டிகளின் மானங்களை விஞ்சவொட்டாத மானஸ்தம்பமளவும், ஏகைகஜிநாலயாந்தரித வாபீ கூப ஸரோவர ஸமன்வித வநஷண்ட மத்தியகத பஞ்சபிராஸாத ரமணீய கவ்யூதி த்வய விஷ்கம்பமுமான பிராஸாத சைத்திய பூமியாம். அதன் மேல் ரஜதமயங்களும், மணிமய ஸோபானலங்கிருதங்களும், ஜோதிஷ்க தௌவாரிக ரக்ஷிதங்களுமான கோபுரத்வார சதுஷ்டயத்தின் விளங்குவ, ஹாடகமய வேதிகாப்யந்தரத்தில் நானுஸோபான ஸ்ரேணி ஜலஜ ஜலசர ஜலவிஹங்கமநிநத ஜலக்ரீடா நிரதஸுர கசர ஸந்தோஹ ஸம்ஸேவ்ய ஸ்வச்ச ஜல பரிபூர்ணமான அர்த்த யோஜந பிரமாண விஸ்தாரத்தின் காதிகாபூமியாம். அதனுக்கப்பால், ரூப்யமயங்களும் மணிமய ஸோபானலங்கிருதங்களும், ஜோதிஷ்க த்வாரபால பரிபாலிதங்களுமாயிருக்கின்ற சதுர்துவாரங்களினுல் விளங்குகின்ற காஞ்சனமய வேதிகையினுள் கந்தலுப்த மத்தமதுகர ஜங்கார கோலாகல புன்னுக நாகவகுள திலக மாதவீ சதபத்ரகாதி நாநாலதிகாபிராம லதாவன ஸந்தோஹ ஸம்ஸேவியமும், க்ரீடா நிரத ஸுர மிதுன

சதஸமன்விதமுமான ஒரு யோஜனை பிரமாண விஸ்தார வல்லீவனவனி விளங்கும். அதன்மேல் ரஜதமயங்களும், மணிமய ஸோபானலங்கிருதங்களும், யக்ஷகுமார ரக்ஷிதங்களுமான நான்கு கோபுர துவாரங்களின் விளங்குவ ஸுரக்த தபனீயச் சாயாப்ராகாரத்தினுள் திரிதசமிதுனபிரசங்க உதித மகாயோக விஹக குல நிஸ்வனத்தினல் விளங்கும் அசோகஸப்தச்சத சம்பக சூதவன சதுஷ்டயமாம். அதன் மத்தியத்து சதுர்கோபுரான்விதத்ரிஸால பரிவேஷ்டிதங்களும், த்ரிபீட பிரதிஷ்டாபிதங்களும், பிராதிஹார்ய ஸமேத பரியங்கான்வித ஜிநபிம்ப சதுஷ்டய விராஜிதங்களும் ஆகி விளங்கும் சைத்திய விருக்ஷங்களும், மந்தார பாரிஜாத தால ஹிந்தால தமால ஜம்பூ ஜம்பீராதி பஹுப்ரகார பூருஹ நதீபுளிநஸ்தான ரமணீயமான கிருதக கிரிகளினலும், லதாபவனங்களினலும், மந்தா நிலாந்தோளித த்வஜங்களினலும், மற்றும், மஹாவீதிநிலங்களில் சசதரதவளங்களும் அத்யுன்னதங்களுமாகி ஒவ்வொரு நிலையில் முப்பத்திரண்டு நாடகசாலையும் ஒவ்வொரு நாடகசாலையுள் முப்பத்திருவர் நர்தகியருமாகி, மூன்று நிலையினை யுடைய இரண்டிரண்டு நாடக சாலைகளும், நாட்டிய சாலையின் ஸமீபத்து அதிபஹுளதஹ்யமானகாளாகருதூப வியாப்த தூபகும்பங்களினலும் விளங்குவ, உபவநபூமி யோஜனை விஸ்தீர்ணமாகி நின்றது. அதன் மேல் ரஜதமயங்களும், மணிமய ஸோபானலங்கிருதங்களும், யக்ஷேந்திர ரக்ஷிதங்களுமான கோபுரத்வார சதுஷ்டய விராஜமான கார்தஸ்வர வேதிகாப்யந்தரத்து கஜஸிம்ம விருஷபகருடாம்

புஜமாலா ஹம்ஸசக்ர சிகிவஸ்த்ர ப்ருஹத் துவஜமும், தத்பரிவார துவஜமும், துவஜ பூமியில் விளங்கும். அதன் நான்கு திசையிலும் பஞ்சவிம்சதி தண்டாந்தரிதாஷ்டாஸீத்யங்குல பஹளஸ்வர்ண ஸ்தம்பாக்கிரத்தில் மந்தமாருதாந்தோளிதங்களாகி திருஷ்டிக்கும், மனஸுக்கும் சுக மெய்துவ, மஹாதுவஜங்கள் ஒவ்வொன்றும் நூற்றெட்டாகி நாலாயிரத்து முந்நூற்றிருபதாம். அது ஒவ்வொன்றுக்கு நூற்றெட்டு க்ஷுல்லக துவஜங்களாகி நாலு லக்ஷத்து அறுபத்தாறுயிரத்தைந்நூற்றறுபதாம். இந்த துவஜ பூமியின் விஸ்தாரம் யோஜனை. அதன்மேல், ரஜதமயங்களும், மணிமயஸோபாநங்களும், நாகேந்திர ரக்ஷிதங்களுமான சதுர்கோபுர துவாரங்களின் விளங்கும், அர்ஜுனமய ப்ராகாரத்தினுள் தேவோத்தாருக்களின் கல்பாவனிஜங்கள் போலும், கல்பாவனிஜம் விளங்கும். அவ்வாறு, சங்கல்பாதீத கலபநோபேத தஸுவிகல்ப கல்பபாதப ப்ரகீர்ணமும், நாநாலதாமத்தியகதச் சாமீகராங்கத்துள் ஸுமன ஸந்தோஹஸம்ஸேவியமும், ஸுரமிதுந சதக்ரீடா நீதமும் பூர்வோத்தர சைத்திய விருக்ஷவிதாந ஸித்தவிருக்ஷ ரமணீயமும், மஹாவீதியுபயபார்சுவகத பூர்வ ஸூசித பிரமாண நாட்ய சால தூப, கும்ப ஸம்ப்ருதமும், ஏகயோஜன விஷ்கம்பமுமான கல்பமஹீருஹ மஹீதலம், கல்பாதிபதிகளுக்கும் புகழ்தலரிதென நின்றது. அதன் மேல் ரூப்யமயங்களும், மணிமய ஸோபாநலங்கிருதங்களுமான நாக தௌவாரிக ரமணீயங்களும், கோபுர துவார சதுஷ்டய ப்ரயுக்த நிர்ணிக்த சுவர்ண வேதிகாப்யந்தரத்துள் ஸுர

மிருதங்க கீதந்ருத்ய வாத்ய நாநாவிநோத ஜிநா பிஷவண ஜிநபூஜா ஜிநகுணஸ்தோத்திர ஜிந புராணகதந களகளரவ ரம்மிய பஹுபேத ஹர் மியங்களினாலும் மற்றும் மகாவீதிகள் நடுவே மான ஸ்தம்போன்னதங்களும் ஜின பிரதிமா ப்ரகீர்ணங் களும் ரத்ன தோரண ஸ்தாந்தரிதங்களும் தேவ மானவ தானவாதிகளினால் அர்ச்சநீயங்களும் பூஜ நீயங்களுமான ஒன்பதொன்பது ஸ்தூபைகளினால் விளங்கும் குரோசத்துவய வியாஸமான பவன பூமி பவன லோகத்தையும், அதரீக்ருதம் பண்ணு கின்றது. மற்றும் அதன் மேல் இந்திரநீல மாணிக்கிய மயங்களும், மணிமய சோபானலங்கிரு தங்களும், கல்பவாஸத்ரிதச பரிபாலிதங்களுமான சதுர் கோபுரங்களினால் விளங்கும் ஸ்படிக மய மணி மய ஷோடச பித்திகளின் அந்தரிதங்களாகி இருந்த துவாதச கோஷ்டங்களிலும் துவாதச கணங் களிருக்கும் சர்வஜ்ஞ வீதராக பட்டாரகன் தக்ஷிண திசையில் கரகமலங்களை முகுளித்து,கணதரரும் பூர்வ தரரும் விக்கிரியாரித்திபிராப்தரும் அவதிஜ் ஞானி களும் மனப்பர்யயஜ்ஞானிகளும் மஹாவாதிகளும் சிக்ஷகரும் என்னும் சப்தவித ரித்தி பேதங்க ளிருக் கும். அதி னருகுநிலத்து கல்பவாசிக தேவியரிருப் பர். அதி னருகு ஆரியகா சமூகமும், ஸ்ராவகீ நிவ ஹமுமிருக்கும். அதினருகு மகாவீதியாம். அதினருகு ஜோதிஷ்க தேவியர். அதினருகு வானவியந்தர தேவியர். அதினருகு பவன வாசிக தேவிய ரிருப்பர். அதினருகு மகா வீதியாம். அதினருகு பவனவாசி தேவர். அதினருகு வியந்தர தேவர். அதினருகு

ஜோதிஷ்க தேவ ரிருப்பர். அதினருகு மகா வீதி யாம். அதினருகு கல்பவாசிக தேவர். அதினருகு சக்கரவர்த்தி மண்டலீக மகுடபத்தாதி பூசர கேசர ரிருப்பர். அதினருகு சிம்ம வியாக்கிர ஸர்ப்ப ஸரீஸ்ரப கரிதுரக கோ மகிஷ மேஷ மூஷிக பிடால விவித விஹங்கம ப்ரமுக திர்யக் யோனி ஜீவன்களும், பரஸ்பர விரோதங்களின்றி, உபசாந்தங்களாகி நிறைந்து ஓரிடத்திலிருக்கும். அதினருகு மகா வீதியாகும். இவ்வண்ணம் பிரதக்ஷிணமாகி பரிவேஷ்டித் திருந்து துவாதசகணங்களின் விளங்குவ, ஒருகாத அகலம் கண பூமியாகும்; அதன் மேல் இந்திர நீலமாணிக்கிய மயங்களும், மணிமய ஸோபானு லங்கிருதங்களும், வைமானிக தேவ துவாரபாலக விராஜிதங்களுமான சதுர் கோபுர சமன்வித ஸ்படிகமயவேதிகாந்தர்பாகத்தில் விளங்குவ, அனுபம வைடூரிய கனத் கனக லஸத் ஸர்வரத்தின மயமான அஷ்ட தனுத்ஸேதமான பீடத்ரயத்தின்நான்கு திசையிலும் தர்ம சக்ரந் தரித்திருப்ப யக்ஷேந்திரரில் நாநா விதார்ச்சனுேபகரணங்களினுலும், பகுவிதார்ச்சனு த்ரவ்யங்களினுலும் மனேஜ்ஞமாகி பஞ்சாசததிக, ஸப்தஸதசராஸன விஷ்கம்பமான பிரதம பீடமிருக்கும். அதன் மேல் பகுவிதத்வஜ ப்ரஜார்ச்சநாலங்கிருத மாகி பூர்வ பீட ப்ரமாண விஸ்தீர்ணமான த்விதீய பீடமிருக்கும். அதன் மேல் ஸஹஸ்ரச் சாப விஸ்தாரமாகி, சூர்ய பிம்பாகாரத்தினுல் விளங்கும் மூன்ரும் பீடத்தில் அறுநூறு தண்டமகலமும், நீளமும், தொளாயிரந் தண்டம் உத்ஸேதமுமான கந்தகுடி

பரமன் பரம சரீரங்களுட் கூடி ஸுகந்தமயமாகி விளங்குவது த்ரிபுவன சுவாமியினது நிவாசமாம். அதில் அஷ்டமகா ப்ராதிஹார்ய ஸமேதனுகி த்ரிபுவனைக வல்லபனிருப்பன். இப்படியே மற்றும் ப்ராகாரங்களின் வேதிகை உத்ஸேதம், பரமன் சரீரத்து நான்மடியாம். மற்றும் மானஸ்தம்பங்களும், பிராஸாதங்களும், சைத்தியாலயங்களும், சைத்திய விருக்ஷங்களும், ஸித்தவிருக்ஷங்களும், த்வஜதண்டங்களும், கோபுர த்வாரங்களும், க்ருதககிரிகளும், ஸ்தூபைகளும், லக்ஷ்மீவர மண்டபமும் இவை த்வாதசகுண தேகப்ரமாணங்களாகும். எல்லாக் கோபுரங்களில், பாஹ்யாப்யந்தர ஜகதிகளில் நவநிதியும், அஷ்டமங்கலமும், பிரத்யேகம் அஷ்டசதம் விளங்கும், மற்றும் மகா வீதிகளின் விஸ்தாரம் கவ்யூதி பிரமாணமாம். அந்த வீதிகளிலும் நிலங்களிலும் தூளி ப்ராகாரந் தொடங்கி ஸர்வாப்யந்தர வேதிகை அளவும் ஸ்படிகமய பித்திகள் நீண்டிருந்தன ; இவ்வண்ணம் பலவும் அதிசயங்களுடன் கூடின ஸமவஸரணத்து, நித்திரை, த்ருஷ்ணை, க்ஷுதை, உபத்திரவம், அபிபவம், அவத்தியம், ஆமயம், ஆர்த்தம், ரௌத்திரம், மிருதி, ஜநநங்களில்லை ; அதனுள், அபவ்வியரும் அமனஸ்கரும் புகார் ; மித்யாதிருஷ்டிகள் புக்க க்ஷணத்தில் ஸம்யக் திருஷ்டிகளாவர். மூகர், மிருது மதுர நினுதமாக மொழிவர். அந்தகர், நிர்ணிகதமாகிக் காண்பர். பதிரர், பரிஸ்புடமாகக் கேட்பர். மற்றும், புலியும்-மானும், எலியும்-பூனையும், கீரியும்-ஸர்ப்பமும், ஸிம்மமும்-மாதங்கமும், இவை முதலாகிய பிராணி

கள் தந்தாம் கன்றுகளைக் கண்டாற்போல ஸ்நேகித்து, ஓரிடத்திலிருக்கும். இவ்வண்ணமாகிய மாஹாத்மியத்தை யுடைய ஸமவஸரணம் உப போகாந்தராய நாசத்தினுலாகும். வீரியாந்தராய க்ஷயத்தினுல் அனந்த வீரியமும், அனந்த சுகமும், அனந்த அவககனமும், அனந்தாவாஸமும், அவ்வியா பாதத்வமும் இவையாகும். மற்றும் காதிசதுஷ்டய க்ஷயத்தினுல் தானிருந்த கவ்யூதி சத சதுஷ்டய பூபாக சுபீக்ஷதையும், நபோமார்க்கத்துச் செல் வதும், பிராணி வதை ரகிதமும், புக்தி விரகிதமும், எந்த திசையிலும் உபஸர்க்க மின்மையும், சதுரா னனத்வமும், கேவல ஞானதி அவாப்தியும், ஸ்வதேக ஜனிதச்சாயாபாவமும், அபக்ஷ்மவீக்ஷணு திவர் ஜிதமும், நககேசாதி உபசய அபசய வ்யபேதமும் என் னும் க்ஷாயிகாதிசய சம்பத்தும், மற்றும் ஸர்வஹித ஸர்வார்த்தமாகதீய பாஷையும், சகல ஜந மித்திரத் வமும், ஷட்ருது ஸம்பிரத வனஸ்பதிகள் அங்குரித பல்லவித கோரகித குஸுமித ஸ்தபகித பலிதங் களும், தர்ப்பண ஸத்ரச, ரத்னமய பூபாகமும், விஹரணத்து, முன்செல்வ சுகந்தி மந்தா நீலமும் ஸகல புவன ஜநானந்தமும், உபசமித தூளிகண்டக த்ருண கீடக சர்க்கரோபலங்களும் மருத்குமாரர் உபசமிப்ப, த்ருஷ்டிக்கும் மனஸுக்கும் சுகமாக ஸுகந்தத் திரவ்ய மிஸ்ரமாந ஒரு யோஜநாந்தர பூ பாகம் ஸ்தனிதகுமாரக்ருத பந்துர கந்தோதக விருஷ்டியும், அடியிட இடமின்றி நபஸ்தலந்தளிர்த் தது போல முன்னேழும் பின்னேழும் நிலத்தெழும் பத்மராக கேஸர கனகபத்திர சோபித ஸுக

ஸ்பர்சஸஹஸ்ரபத்ராம்புஜங்களும்,த்ரிபுவன ஸ்வாமி யின் விபவம் கண்டு ரோமாஞ்ச கஞ்சுகிதங்கள் போலும், பல பரித வினம்ரகந்தசாலி முதல் ஸமஸ்த ஸஸ்ய ஸம்பத்தியும் சரத்கால ஸலில நிர்மல வியக்தல திகந்தராளங்களும், பரஸ்பராஹ்வான தோர் தண்ட சோபமான ஜோதிர் வ்யந்தராதி நிலிம்ப திவ்விய ரவ பூரித திசா சக்கிரமும் ஸஹஸ்ர கிரண விலாஸஹாஸ ஸ்புரதர ஸஹஸ்ரமான முன் செல் லும் தர்ம சக்ரமும், பிருங்கார கலச தர்ப்பணுதி மங்கலோல்லஸித தேவாங்கனுசமூகமும் என, தேவ் நிர்மித சதுர்தசாதிசயங்களும், இவ்வண்ணம் ஸ்வ பாவிகக்ஷாயிக தைவீக விபாக சதுஸ்த்ரிம்சத் அதிசய ஸமேத பரமார்ஹந்தியமும், ரத்நத்ரயபாவனே யால் ஆகுமென்றறிவது. இவ்வண்ணம் பலவும் அதி சயங்களுடன் கூடி ஸமவஸரண மத்தியத்து அஷ்ட மஹா பிராதிஹார்ய ஸமேதனுகி கணதர சக்ர தர புரந்தர பவ்வியவர புண்டரீகற்கு மோக்ஷமார்க் கோபதேசம்பண்ணி த்ரைளோக்கிய ஸாம்ராஜ் யத்தில் கூடியிருந்த பரமார்ஹந்திய லக்ஷ்மீகாந்த னுகி மறுவறு சோதியையுடைய வானவர் பெருமா னிருந்த பொழுதின் எதிர்கொண்டு, ஸிரேணிக மகாராஜன் எவ்வகை ஆயினுனே எனின்,

பருதிகள் பல்லா யிரந்தொக்க பாங்கிற்
பெருகுமொளிப் பெம்மா னடியைப்—பரிவினுடன்
வண்டார் மலர்த்தார் மணிமுடியான் கண்ணுரக்
கண்டான்றன் கையாற் றொழுது. 25

(இ-ள்.) அனேக சதசகஸ்ர தினகரகிரணங்களை வகித்திருந்த தீப்தியினுடைய சுவாமி ஸ்ரீபாதங்களைக் கண்டு சந்தோஷ இருதயத்தனாய் எரிமணித் தடக்கைகூப்பி ஈரியாபதசுத்தி செய்து பின்னும் யாது செய்தான்,

விரைகமழ்நீர் சாந்தரிசி மேதகப்பூந் தாமம்
திருவமுது தீபமோடு தூபம்—தருகனியும்
மிக்க புகழிறைவன் விர னடிக்கேற்றித்
தக்க துதிநவின்றுன் தான். 26

வேறு

ஆதியா யுலகியல்பை யளித்தாய் நீயே
அருந்தவனு யறம்பகர்ந்த அறிவ னீயே
காதியா யிருவினையைக் கடிந்தாய் நீயே
கணமீரா றடியேத்துங் கடவு ணீயே
போதியாய்ப் பொருளளவு மானுய் நீயே
பொறிவாயி லைந்தவித்த புனித னீயே
சேதியா நிலவுகுணச் செல்வ னீயே
ஸ்ரீவர்த்தமானனெனுந் தீர்த்த னீயே. 27

அங்கமவை யாறிரண்டு முரைத்தாய் நீயே
அலர்மழைதுந் துபியுடைய வமல னீயே
கோங்குலவு மலர்ப்பிண்டிக் கோமா னீயே
குடையொருமூன் றுடையகுணதரனு நீயே
பொங்கியசாமரைபொழிமண்டலத்தாய் நீயே
புரந்தரனு லியற்றியபோன் னெயிலாய் நீயே
சிங்கவணை மேலமர்ந்த செல்வ னீயே
ஸ்ரீவர்த்தமானனெனுந் தீர்த்த னீயே. 28

நவபதமென் குணமுரைத்த நாத னீயே
நயமேழு மறுபொருளும் நவின்ருய் நீயே
உவமையி லைம்பதஞ் சரனுன் குரைத்தாய் நீயே
ஒருமூன்று பிறப்பினையு மொழிந்தாய் நீயே
பவமயமா மிருவினையும் பகர்ந்தாய் நீயே
பரமநிலை யொன்றெனவே பணித்தாய் நீயே
சிவமயமாய் நின்றதிகம் பரனு நீயே
ஸ்ரீவர்த்தமானனெனுந் தீர்த்த னீயே. 29

ஒருமொழியா லிரண்டறமு முரைத்தாய் நீயே
வுலகொருமூன் றடியேத்து முருவ னீயே
வருகதிநான் கைவதமும் வகுத்தாய் நீயே
வான்பொருளா றேழிருத்தி மதித்தாய் நீயே
பொருவினைய மெட்டொன்பான் பொருளு நீயே
புகழ் தருமத்தியானம் பத்துரைத்தாய் நீயே
திருமறு வாயிரத்தெட்டிலக்கணத்தாய் நீயே
ஸ்ரீவர்த்தமானனெனுந் தீர்த்த நீயே. 30

கருவான சிறைகளைய வல்லாய் நீயே
கலியாண மைந்துடைய கடவு ளீயே
மருவான பூம்பிண்டி மன்ன னீயே
மறையொருநான்குரைத்த திருவள்ள னீயே
பெருவான மினிதாளும் பெம்மா னீயே
பெண்ணுருவு மாணுருவு மானுய் நீயே
திருமாலு நான்முகனு மானுய் நீயே
ஸ்ரீவர்த்த மானனெனுந் தீர்த்த னீயே. 31

(இ-ள்.) *என்றிப் பிரகாரத்தினற் றுதிசெய்து பின்னும் யாது செய்தான் என்ருல்,*

சிரேணிகன், கணதரரை வணங்கி அவரிடம் உபதேசம் பெறல்.

மணிமுடியும் பொற்றேடும் வண்டினார்பூந் தாமம்
துணிவரிய நொன்விலத்துட் டோயந்—தனிவிலுடன்
மெய்வகையி னுலெட்டு நீக்கி விசோதியுடன்
ஐவகையி னுற்பணிந்தா னுங்கு. 32

வென்றவனை யேத்தி விதிமுறையால் வேல்வேந்தன்
போன்றிகழு மண்டபந்தைப் போய்ப்புக்கான்—அன்று
குணதரன்றன் வாய்மொழியைக் கொண்டருளிச் செய்யுங்
கனதரரைத் தான்பணிந்தான் கண்டு. 33

(இ-ள்.) அனேக பவ ககன விஷம விசன பிராபண ஏதுக்களாயிருந்த கர்மநிர்ஜரையாம் விஶோதி பரிணாமத்தினுல் அஷ்டவித அர்ச்சனை செய்து அனேக சதசஹஸ்ர ஸ்துதிகளால் த்வாத்ரிம்ஸத் தோஷங்களை நீக்கி துவாதஶ ஆவர்த்தன சதுரஸ்ர வந்தனையால் நமஸ்காரஞ்செய்து சேஷந் தரித்துச் சென்று கணதர கோஷ்டம் புகுந்து கணதர சுவாமிகளை குருபக்தி பூர்வகத்தினுல் நமஸ்காரஞ் செய்து பின்னை மனுஷ்ய கோஷ்டத்திருந்து சிந்தானுப்பிரேக்ஷையை வினவ கௌதம கணேஶ்வரன் யாதருளிச் செய்தானேவெனின்,

சிந்தானுப் பிரேக்ஷை.

நில்லாமை யாதுஞ் சரணின்மை யேகநிலை
? யொல்லாத் தடுமாற்றின் லோகம்—பொல்லா
வுடலூறு சம்வரையே நிச்சரைகோள் தர்மம்
தொடர்போதி ஆறிரண்டே நோக்கு. 34

(இ - ள்.) அனித்தியம், அசரணம், ஏகத்துவம், அன்யத்துவம், சம்சாரம், லோகம், அசுசித்துவம், ஆசிரவம், சம்வரை, நிர்ஜரை, தர்ம ஸ்வாக்கியானம், போதிதுர்லபம் எனப் பன்னிரண்டு காரணம் சிந்தானுப்பிரேக்ஷை யென்று சொல்லக் கேட்டு, கரகமல முகுளிதனய் சிரேணிகமகாராஜன் சொல்லுவான் :—அருளிச் செய்த பன்னிரண்டையும் வேறு வேறு விரித்துரைத் தருளவேண்டுமென சர்வஜ்ஞ பாஷிதமாகிய ஜீவசம்போதனையை எல்லாரும் அறிவதாக விளம்புகின்றேன் கேட்பாயாக வென்று கணதரசுவாமிகள் யாது சொன்னர் எனின்,

ஜீவஸம்போதனை

தருமமுரைத்தற் குரியவரும் உரியரல்லாதாரும்

பிள்ளைபேப் பித்தன் பிணியாளன் பொன்னேக்கி
வெள்ளை களிவிடமன் வேட்கையான்—? தெள்ளிப்
புரைக்கப் பொருளுணர்வா ரென்றிவரே நூலை
உரைத்தற் குரிமையி லாதார். 35

(இ - ள்.) பாலனும், பேய்க்கொண்டானும், பித்தனும், வியாதியாளனும், தனமோகியும், அடக்கமிலாதானும், களிப்பானும், கடுவிஷமனும், வேட்கையானும், தன்னுரை மேற்படுப்பானும், தோஷக்கிராகியும் என்றிச் சொல்லப்பட்டார் யாவரும் தர்ம்ம முரைத்தற் குரியரல்லர்; உபசமரும், க்ஷமாபரரும் ஸமத்வீபாவமுடையாரும் தர்ம்ம முரைத்தற் குரியவரென்றவாறு. அன்றியும்,

தர்மசிரவணங் கேட்டற்குரியர் ஜீவவகை

அட்டை கிளிவெருகு ஆடெருமை வல்லூறு
குட்டற் குடங் கல்லோடுமன்னு—மட்டக்கள்
நெய்வடிநாரப் போல்வாரை நீத்தன்ன மேபோலும்
மெய்யுணர்வார் கேட்டல் விதி. 36

(இ-ள்.) அட்டை, ஊனமுள்ள விடத்தைப் பற்றி னாற்போல தோஷக்கிராகியா யிருப்பாரும், கிளியும், சொல்லிற்றே சொல்லுமதல்லது தன்னுலொன்றுந் தேர்ந்துரைக்கமாட்டாது, அதுபோல பரிக்ஷை யில்லாதாரும், வெருகும், அடங்கி ஒடுங்கிப் பார்த் திருந்து வந்துற்ற ஜீவனைப் பிடித்துப் பக்ஷிக்கு மதுபோலப் பார்த்தார்க்குச் சாதுக்களைப் போன் றிருந்து இம்சாதிகளை நிகழ்த்துவாரும், ஆடு எல்லாக் குளகும் தின்னுமது போல எல்லாத் தெய்வமும், எல்லா தர்மமும் ஒக்கு மென்றிருந்து நன்று தீதென்று பரீக்ஷையறியாதாரும், எருமைகளும், தெளிந்த நீர்குடித்துச் சாணகமும் நீருமிட்டு அந் நீரைக் கலக்கிப் போகுமதுபோல தர்ம்ம சிரவணங் கேட்கப்புக்கு ஏதேனும் குற்றம் நாடிச் சொல்வா ரும், வல்லூறு, பிடித்தது விடாமற் பற்றினுற்போல சர்வஜீவதயாபரமே தர்ம்மமென்பதோர் பரிக்ஷை யின்றிப் பற்றித்து விடேனென்றிருக்கும் அக்ஞா னியும், பின்னபாசனத் தட்டின் ஜலம்போல, எத்தனைநாள் தர்ம்மத்தைக் கேட்டும் கொள்ள மாட்டாத சூனிய ஹ்ருதயரும், கல், எத்தனை நாள் நீரிற் கிடப்பினு மெத்தென்னுதவாறுபோல எத்தனை நாள் தர்ம்மம் கேட்பினும் உட்புகாத மனமுடை

யாரும், பூமியும், நீர்க்கண்டபோது நெகிழ்ந்து அல்லாதபொழுது நயங்கெட்டு வலிக்கு மதுவே போல தர்ம்மசிரவணங் கேட்டபொழுது நெகிழ்ந்து அல்லாதபொழுது வலித்திருக்கு மனமுடையாரும், நெய்வடிநார், சாரமான வஸ்துவைவிட்டு அஸ்ஸார த்தை சங்கிரகித்தாற் போல தர்ம்மம் விட்டு தோஷம் பிடித்திருக்கும் மனமுடையாரும் இச்சொல்லப்பட்ட சுபாவங்களை யுடையாரன்றி க்ஷீரோதகத்தில் நீர் ஒழியப் பால்நுகரும் ஹம்ஸம்போல தோஷத்தை விட்டு குணக்கிராகியா யிருப்பார் தர்ம்ம சிரவணங் கேட்டற்கு உரியர்; இந்தத் தர்மக்கிரந்தத்தின் அபிப்பிராயமாவது ஜீவனுக்கு உறுதியுரைப்பது. அந்த ஜீவத்திரவியம் ஞானதெரிசனக்கிரியா சைதன்னியரகிஹித தேஹ தேஹப்பிரமாண ஊர்த் துவ கதி சுபாவமாதியாக அநேககுண பரியாயங்களை உடையது ஜீவன். அந்த ஜீவன் முக்திஜீவனென் றும் சம்சார ஜீவனென்றும் இருவகையாகும்; அஃதெவ்வகையோ வெனின்,

முக்தி ஜீவன்கள்

ஞானுவரணுதி நாலிரண்டு வெவ்வினையும்
தானுவரணநிலை தானகன்ற—ஆனு
அனந்தாதி யெண்குணனே யானுடைமை யென்றே
புணர்ந்தகதி யாருருவாம் பொற்பு. 37

(இ-ள்.) ஞானுவரணீயம், தெரிசனுவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத் திரம், அந்தராயமென்னும் அஷ்டவித கர்மங்களை

நிர்மூலனம் செய்து க்ஷாயிக சம்மியத்துவமும், அனந்தக் ஞானமும், அனந்த தெரிசனமும், அனந்த வீரியமும், அதி சூக்ஷுமமும், அவகாஹனமும், அகுரு லகுத்வமும், அவ்வியா பாதத்துவமும் என்னும் அஷ்டமஹா குணங்களே, புஷ்பங்களுக்கு கந்தம் போலவும், ரத்தினங்களுக்கு ஜோதிபோலவும்; சந்தனத்துக்குத் கட்பம்போலவும், சந்திரனுக்கு காந்திபோலவும் தனக்கு சகஜமாய் உபமாதீத மாகிய குணங்களைத் தரித்து லோகாக்கிர மஸ்தக ஸ்திதராகி ஊழிபெயரினும் உலகம்மறியினுந் தாழ்வு கேடில்லாத தத்துவராகி சுத்தாத்தும சுபாவமெய்தி இருந்த ஜீவன்களெல்லாம் முக்தி ஜீவன்களா மென்றவாறு.

சம்சார ஜீவன்கள்

கதியாதி யீரேழு மார்க்கணையுங் காதிப்
பதியான மிச்சமே பான்மை—விதியான
வெவ்விணை வேதனையால் வெந்துயரி னுெந்துழக்கும்
அவ்வுயிர்கள் மாற்றுயிரா மாங்கு. 38

(இ-ள்.) ஹிம்ச அன்ருத ஸ்தேய அப்ரம்மபரிக் கிரக மென்னும் பஞ்சாஸ்ரவங்களாலும் மித்தியாத் துவ அஸம்யம கஷாய யோக ப்ரமாத மென்னும் கர்ம்ம பந்தன ஏதுக்களாலும், சம்ரம்ப சமாரம்ப ஆரம்ப யோக க்ருத காரித அனுமோத கஷாய விசேஷ மென்னும் இவற்றை மனேவாக்குக் காயங் களான் மாரவந்த நூற்றெட்டு அதிகரணங்களானும், ப்ரக்ருதிபந்தம் ப்ரதேசபந்தம் ஸ்திதிபந்தம் அனுபாக பந்தம் என்னும் சதுர்வித பந்தங்களானும், பந்திக் கப்பட்டு; முகபடாம் மறைத்தாற்போல மறைக்கும்

ஐவகை ஞானவரணீய கர்ம்மங்களானும், கபாட மடைத்தாற்போல காணவொட்டாதே மறைக்கும் ஒன்பது வகை தெரிசனவரணீய கர்ம்மங்களாலும், வாளின்வாய்த்தேன் நக்கினற்போலும் இருவகை வேதனீய கர்ம்மங்களாலும், மதுவுண்டாற்போல மெய் மயக்கும், இருபத்தெட்டு மோஹனீய கர்மங்களாலும் காலிற் றொழு விட்டாற்போல போகவொட்டாத (தடுக்கும்) நால்வகை ஆயுஷ்ய கர்ம்மங்களாலும், சித்திரகாரிபோல நானரூபமாக்கும் தொண்ணூற்று மூன்று வகை நாம கர்ம்மங்களாலும், கும்பகாரன் ஹீனதிகமான கலம் அணைந்தாற்போல ஏற்றிழிவான குலத்திற்பிறக்கும் இருவகையான கோத்திர கர்ம்மங்களாலும், தானதி ஐவகைப் புண்ணிய கர்ம்மங்களை விக்னம் செய்யும் ஐவகை அந்தராய கர்ம்மங்களாலும், கதி இந்திரிய காய யோக வேத கஷாய ஞான சம்மியம தெரிசன லேசியை பவ்வியத்துவ சம்மியத்துவ ஸம்ஞித்துவ ஆஹாரிகளென்னும் சதுர்த்தச மாற்கணைகளாலும் சாரீர மானச ஆகந்துக சுவாபாவிகமென்னும் சதுர்வித துக்கங்களாலும், நரக திரியக் நர சுரரென்னும் சதுர்க்கதி சமுசாரத்துட் பிறந்தும் இறந்தும், கறங்கும், பேய்த்தேரும் போலவும், கடுஞ்சுழற்றிய கொள்ளிவட்டமும், ஆடும் துகளும், ஓடும் உருளும் மத்துறு தயிரும், மறுபுனற் சுழியும், அத்தகும் உலை போற்கொதித் தெழும் அவிழும், நடுக்கடலுடை கலத்து அகத் துயிர்போலவும், கொந்தழலுறு கான் கொள்ளப்பட்ட அந்தகனுருயிர் அருந் துயர் போலவும், பொருமதக்களிறுகள் பொருந்திய கோட்டால்

உருவுடல் போழும் உறுதுயர் போலவும், இட்டமா யின எய்துதலின்றி அட்டமும் அருத்தமும் அகனிகழ் வாகி உண்டி, மைதுனம், உறுபயம், பரிக்ரஹம் மண் டிய சன்னை மெய்ஊர்தரமறுகி வெந்தும் நொந்தும் மந்தமாகியும் சந்தமாவதோர் சார்துணையின்றி இவ் வகை பிரமிக்கும் ஜீவன்களெல்லாம் சம்சாரஜீவன் களாகும்; அவற்றினுள்ளே அந்த பாஷாண சமூகத் துள்ளே சுவர்ன பாஷாண மிருந்தாற்போல அபவ் விய ஜீவராசியுள்ளே பவ்விய ஜீவராசியிருக்கும். அஃதெவ்வகையோ வெனின்,

பவ்விய ஜீவன்களுக்குத் தர்மம் உரைத்தல் அவசியம்

அவ்வுயிர்க ளாலிலத்திக் காட்சிய தெய்தாதே
கவ்வைசெய் காதிக் கடலதனுள் — வவ்வியே
மாதுயர்தா னெய்தலான் மன்னு மறமதனை
ஓதுதல்தான் வேண்டிற்று லுற்று. 39

(இ - ள்.) க்ஷாயோபசம லப்தி, விசோதி லப்தி, தேசனு லப்தி, பிராயோக்கியதா லப்தி யென்னும் நால்வகைப்பட்ட லப்தி யெய்தாமையின் மூடத்தே கிடந்து அழுந்துகின்ற பவ்வியஜீவன்களுக்கு தர்மம் உரைக்க வேண்டிற் றென்றவாறு.

நால்வகை ஆராதனை

அறிவின்றி யான்ற அறத்தின்மே லன்பு
செறிவின்றித் தீவினையே செப்புங்—குறிகொண்ட
பொல்லா வுயிர்க்கெல்லாம் போதியா நல்லறத்தைச்
சொல்லா லறிவிப்பன் தொக்கு. 40

(இ - ள்.) அனுதிமித்தியாதிருஷ்டியாய் தர்மம் அறியாதே அக்ஞானத்தினல் சமுசாரத்திலே யுழலா

நின்ற ஜீவன்களுக்கு தர்மம் போதிக்க வேண்டிற்று அது காரணத்தினல் ஜீவசம்போதனை கிரந்தாவதார சம்போதனைக் கிரியை யாவையோவெனில் கேளாய் ஜீவனே ! தெரிசன ஆராதனை, ஞான ஆராதனை, சாரித்திர ஆராதனை, தப ஆராதனை என்றிச் சொல்லப்பட்ட நால்வகை ஆராதனைகளுள் பஞ்ச விம்சதி மலரஹிதனுகி அஷ்டவித குணசம்யுக்த விசுத்தியை தன்கண்ணே நிற்க நிகழ்வது தெரிசன ஆராதனை ; அக்ஞான த்ரிக(ரண) ரஹிதனுகி ஸக்ஞான பஞ்சக சகிதனுவது ஞானுராதனை ; பஞ்சமஹாவிரத, பஞ்சசமிதி, திரிகுப்திகளில் சம்பூரணனுகி, பிரமாத பரிணுமங்கள் பதினைந்தினையும் விலக்கி நிகழ்வது சாரித்திராராதனை ; பூஜையும் மன்னனையும் கியாதியும் இந்த தபசினுலாமென்று நிதானஞ் செய்யாதே அனசனுதி யீராறிரண்டு தவங்களையும் தன்கண்ணே நிற்க நிகழ்வது தப ஆராதனை யென்றவாறு.

ஆராதனையால் சித்தியடைதல்

இயம்பியவா ராதனைக வீரிரண்டும் பேணி
நயம்பெருக வேபொழுக நாளும்—பயன்பெருக
ஈறிலா வின்பமே யெய்தி விழைவின்றி
மாறிலா மாகுணநீ மன்னு. 41

(இ - ள்.) என்றிச் சொல்லப்பட்ட ஆராதனைகள் ஒரு நான்கினையு மனவசன காயமும்மையினேடுங் கூடி நிர்மல சித்தனுய் நிகழ்ந்தார் கர்மநிர்மூலஞ் செய்து சுத்தாத்மனுகிச் சித்தியெய்தலா மென்றவாறு.

நித்தியாநித்தியம்

ஓர்ந்துயிரே கேளுன்கண் நிற்ப நிலையாத
ஆர்ந்தறிவு காண்பனவே யார்ந்தநிலை—சேர்ந்த
வினையினு லாமுடலு மேவுமனை மக்கள்
நினையுங்கால் நில்லாவாம் நேர்ந்து. 42

(இ - ள்.) கேளாய் ஜீவனே! நித்தியமும் அநித்தியமு மென்பன யாவையோ வெனில் அனந்தக் ஞானதி அஷ்டகுணங்கள் நின்கண்ணே பெறலாய் நின்றன, போய்நாடவேண்டாம் அவையே நித்தியமாகு மன்றியும், நீ கொண்டு நின்ற சரீராதி புத்திர மித்திர களத்திர தனதான்னிய முதலாய வஸ்துக்களெல்லாம் அனித்தியமாகும் அஃதெவ்வகையோ வெனின்,

அநித்திய விவரம்

புனல்வரவே பொங்கு திரைபனியே பேய்த்தேர்
மினல்வில்லே மேகமே மொக்குள்—நினையுங்கால்
ஆற்றங் கரைமரமே யாய்ந்தசரண் மின்னெளியுங்
காற்றின்முன் பேவிளக்குங் காண். 43

இதுவுமது

அகவல்

ஓடு நீரும் ஆடுந் துகளுங்
காற்றின்முன் விளக்குங் கடும்பேய்த் தேரும்
இந்திர தனுவுங் கொந்தழற் சிகையும்
இந்திர ஜாலமும் எறிகடற் றிரையும்
பரிதரு பவனமும் பன்னீர் மொக்குளும்
மருவிய வுருவமே போல்முகில் நிரையும்
ஆற்றங் கரைமரமு மாகிய மின்னெளித்

தோற்ற மெவ்வகை யவ்வகை நிலையா
விரைந்துகே டெய்தும் நிரந்தர மாகி
நிலையிலா மையே நிலைதனக் கான
மக்கள் துன்ப மனைவாழ் வதன்மேல்
மிக்க வசூரியும் சோனை மாரியும்
குலைப்பும் உலப்பிலா வலிப்பெனும் நோயும்
கொண்டதோர் நாட்டி லுண்டியில் லாதோர்
கருவறு கடுமைச் சிறுவிலைக் காலம்
(பெருவிலைக் காலம்) பெருவிலை யாகிய பெற்றிவேற் றரசுங்
காட்டுறழ் தீயும் கலந்துவந்தாற்போற்
கூற்றுவ னென்னுங் கொடுவினைக் காலன்
மாற்றமொன் றின்றி வலிந்துயி ருண்ணும். 44

அஃதெவ்வகைத்தோ வெனின்,

இதுவுமது.

அறிவறியக் கண்காண வையகத்தா ரெல்லாம்
முறைமுறையிட் டேதா முயங்கிப்—பொறிதிரியும்
தன்மையினுற் சார்ந்து தளர வுயிருண்ணும்
நன்மையிலாக் காலன் நவின்று. 45

(இ - ள்.) *பிதாவும்மக்களும், சுற்றத்தாரும், மனைவியும், வயித்தியரும், மந்திர வாதிகளும் கூடிய நீர்மை தந்திரங்களுஞ்செய்யவுங் கேளான்; காணுன் முறையோ முறையோ வென்று அழவழக் கொண்டு போங் கொலையின்மிக்க கூற்றுவனையும் நிலை யில்லாத வாழ்வையுங் கண்டும், காணுதான் போல மெய்ம்மறந்து இருப்பதற்கு யாதுகாரணம் ஜீவனே யென்றவாறு.*

இதுவுமது

வாழுநாள் மாயும் உடல்கெடும் மற்றெழுந்த
சூழ்கிளையுஞ் சொற்பொருளுஞ் சோர்வாகும்—கேழ்மை
? உடன்காற்றுப் பாபமே யுற்றுங் கபாயம்
அடங்காத்துன் பாக்குமா லாங்கு. 46

(இ-ள்.) நீயாசைப்பட்டு அன்புசெய்யப்பட்ட ஜீவாதிவஸ்துக்களெல்லா முனக்கு நிலையல்ல; நீயும் அவற்றின் மேலாசைவிட்டுச் சதிரெய்தாதே நிச்சிந்தனு யிருப்பதற்கு என்னுகாரண மென்றவாறு.

இதுவுமது

என்றைக்குஞ் சாவுகே டெய்தாமை யேநினைந்து
துன்று வினையாயுந் தூர்பொழுதில்—கன்றி
மிடறடைத்துக் காலன் விரைந்துனைக்கொல் போது
இடர்துடைத்துக் காப்பார்யா ரிங்கு. 47

(இ-ள்.) வியாதியாளன் வேண்டினவண்ணம் அபத்தியமெல்லாமுண்ணுமாகிலும் காலனடர்த்துப் பின் தொடராநிற்க ரத்தினத்திரயங்களை ஆராதித்துக்கொள்ளாதே பஞ்சேந்திரிய வசத்தனுய் நிகழ்ந்தானும், அவனுக்கு பிராண ஹானியும் இவனுக்கு கெதிகேடும் எவ்வகைத்தோ வெனின்,

இதுவுமது

அவரிவரேன் றோராதே யாங்கடைந்த பாவத்
துவரிவரக் காலன் தொடரும்—உவரோத
மக்கள் மனைவாட்கை மன்னிநில யாததனின்
மிக்கபுகழ் மேனுள் விரும்பு. 48

(இ - ள்.) இவ்வகையால் நிகழ்ந்தால் இவ்வகையா மென்று உனக்கு உறுதியாம் பிரகாரம் மேல்வர ஓராதே என்றைக்கும் சாசுவதமென்றெண்ணித் துன்புற்றுத் தேடிப் புதைத்து வைத்து, அவ் வஸ்துவை நீயுமுண்ணாய் ஈவதும் செய்யாய் பொருளி ஞல் வரும் துக்கங்கேளாய் என்றவாறு. அன்றியும்,

இதுவுமது

நினக்கென்று நில்லாது நின்பின்பு வாராத்
தனத்தைத் தனமாக எண்ணில்—நினக்கே
பிறப்பிடையிற் பின்தொடராப் பேதைப் பொருளை
உறப்புணர்வ தென்கொலோ உற்று. 49

(இ - ள்.) தான் வளைவான் பிறர்க்கு ஊன்றுங் கோலாகாத் தகைபோலவும் எவ்வகைத்தானுங் கேடு முதலாய் நின்ற பொருள் என்னை ரக்ஷிக்குமென்று உறப் பற்றி நம்பியிருத்தி அப்பொருள் ரக்ஷிக்கும் பிரகாரம் எவ்வகைத்தோ வென்னுதே, அன்புற்றுத் துன்புறுவது தக்கதோ வென்றவாறு.

இதுவுமது

பொருளாசை யாலிட்டல் துன்பமே போகந்
தெருளாசை யாவதுவுந் தீதே—மருளாகி
ஈட்டுதலுந் துன்பங் கெடிற்றுன்பம் துன்பமே
ஊட்டுந் திறனில்லை உற்று. 50

(இ - ள்.) ஆயுவில்லாத வனித்தவாழ்வை நம்பிப் பொருள்தேடித் தர்ம்மம் மறந்தால் உனக்குப் பின்னைய அசுபகர்ம்மம் உதயமானல் துர்க்கதியாகா தொழியுமோ என்றவாறு; அன்றியும்,

மோகம் விட்டவர் தன்மை

பழியும் பராபவமும் பல்வினைக ளூற்றும்
ஒழிவில் புகழ்நிகழ்வா ரோடு—மொழியுங்கால்
சிந்தைபெரி தாகித் திருமோகம் விட்டவர்கள்
இந்திரற்கு மேலாவார் ஈண்டு. 51

(இ-ள்.) பழியும், பராபவங்களும் பலவாகிய வினையூறுகளும், இந்திரிய மோகவழியான்வரும் மோகமும் கெட்டவர்கள், இந்திரற்கும் மேலாவர் என்றவாறு; அன்றியும்,

அநித்திய வாழ்வைவிட்டுத் தருமத்தை மருவ வேண்டுமெனல்

ஓர்ந்துயிரை வாழ்விக்கும் உண்டிநீ ரோரிடத்திற்
சேர்ந்துயிரைக் கொல்லுமே தேய்வின்றிச்—சேர்ந்து
வினைமனையில் வாழுயிரை மிக்குண்ணுங் கூற்றந்
தனைவிலக்குந் தன்மையாற் சார்ந்து. 52

(இ-ள்.) ரக்ஷிப்பாரே பக்ஷிப்பாராகிலும், காப்பாரே கள்ளராயினும், வேலியே பயிரைமேயுமாயினும், ஜீவித்தார்க்குக் காரணமாய் நின்ற அன்னபானாதி வஸ்துக்களே மரணமாக்கும் அது காரணத்தினால் மக்கள் மனைவாழ்வை வெருவவும், மிக்க தருமம் மருவவும் வேண்டும் என்றவாறு. அன்றியும்,

பிறப்பிறப்பாகிய கதியைச் சேரலாகா தெனல்

பொருள்திரள ஈட்டிப் புணர்ந்தறஞ்செய் வேனென்று
இருள்மனத்தி னின்னுயிரே கேள்நீ—பொருளினை
ஈட்டுந் தனைக்கும் இடையுண்டோ காலன்வந்
தோட்டந்து கொல்லானே உற்று. 53

(இ-ள்.) தீயகத்தெழுந்த பொழுது கையகப்பட்ட வஸ்துக்களைக் கொண்டோடிப்போகாதே எல்லா வஸ்துக்களையு மெடுத்துக்கொண்டு போவேனென்று மோகித்தாலும் கெற்பாதிமரணம் செய்யும் மனுஷ்ய வாழ்வில் பொருள் நிறையத்தேடி அறஞ் செய்வே னென்றிருந்தாலும், அவனுக்குப் பொருள்கேடும் இவனுக்கு துர்க்கதியும் ஆகாதொழியாதென்று, அறிவுடையார் ஏது மூதுரையுரைப்பவும் கேளாதே யிருப்பதோ, தேவநரக கதியிற்கட்டின ஆயுஷ்யம் நிறைந்தாலே மரணமாவது, மனுஷ்ய திரியக்கதியில் அபமிருத்யு உண்டாவதாதலால் கெற்பாதி மரணத் தையுடைய கதிக்கு ராகத்தோடே கூடவேண்டாம் என்றவாறு. அன்றியும்,

திருவே திறலிளெடு தேசுடையன் சேர்ந்த
உருவாய வொண்கலைக ளெல்லா—மருவார்
அறிவினுன் மிக்க அறிவாளர்க் கொல்லும்
கறுவினுற் காலன் கனன்று. 54

(இ-ள்.) மும்மதம்பொழிந்த மதஹஸ்தியின்மேற் பாகனின்று கன்றிக் கொன்று வரக்கண்டு தனக் கொரு மறைவும் கைக்கொள்ளான். அன்றியும்,

இதுவுமது

அகவற்பா

கூனி? தென்னுன் குறைவில் வடிவுடைத்
தேசுடை யிளமை செறிந்தன னென்னுன்
பித்தன் பேயன் பிறர்க்கிடர் செய்யும்
புத்தியி லாளன் போகிடு கென்னுன்

பலநோ யாளன் பாவி யென்னான்
அழுகிய தொழுநோய் ஆதுல னென்னான்
புழுநெளி புண்பயில் யாக்கைய னென்னான்
துன்னருங் குணமிலி தூர்த்த னென்னான்
பட்டங் கட்டினன் பலர்க்குப காரி
சிட்டன் சிதைவிலாத் தேசிக னென்னான்
உருவினொ டொண்கலை யுளபொருள் பலவும்
மருவிய பொருளறி மாவல னென்னான்
மெய்ம்மை யறத்தின் மேவின னென்னான்
இம்மையு மறுமையு மிகழா னென்னான்
குலந்திகழ் நலந்தவங் கொள்கையிற் குறையா
நலந்திகழ் நன்கறி நன்மக னென்னான்
நன்மை தீமை நடுவுநிலை யின்றிக்
கன்றிக் காலன் கொன்றுவரக் கண்டு
மெய்ம்மறை வான மேதகும் அறத்தைச்
செம்மல் அறிவொடு சேரா னாகிலும் 55

அவனுக்குச் சாவும் இவனுக்குத் துர்க்கதியும் ஐயுற வுண்டோ வென்றவாறு. அன்றியும்,

இதுவுமது

காம்பற்று வீழும் பழங்கடுங் காசினிமேல்
தாம்பற்றல் காலன் றனையனைத்தே—நாம் பெற்
றுடலிருந்த காலமற் றுள்ளா தறத்தை
விடலிடையுண் டாகுமோ வேறு. 56

(இ - ள்.) *விளைபுலம் புல்லானால் அதனை யறவுழுது வித்திவிளைபயன் கொள்ளானாயினும், கெற்பமுதலாக் மரணம் தொடர்ந்த வுடலென்னும் நிலத்து மித்தியாத்துவ மென்னும் புல்லூறிக் களைந்து சம்மியத்துவ மென்னும் பீஜம் வித்தி, தர்மமென்னும்*

பயிர்ச்செய்து, மோக்ஷமென்னும் விளைபயன் கொள்ளானயினும், அவனுக்கு வெள்ளாண்மை விருத்தியும், இவனுக்கு சம்மியக்தெரிசன ஞான சாரித்திரங்களின் பயனுமில்லை யென்றவாறு.

இதுவுமது

மரணநோய் மன்னுயிர்கட் காகா தொழியின்
மரணநோ யுன்றனக்கு மாகா — தரணம்
நறவொன்று தாமரைமேல் நாதனடி பேணி
நிறைநின்ற நல்லறமே நேர். 57

(இ - ள்) நாயகன் மறித்தபின்னை தீக்குழிச் சேர்ந்த வேளைக்கும், மனுஷ்ய பவத்துக்கு வந்த பவ்விய ஜீவனுக்கு வீழவல்லது பிறிதோர் மோகத்தின் நிகழ்வு இடையுண்டோ முன்னறியாயாகிலுமினி எனக்கு உறுதி ஓர்வேனென்று கருதுவாயென்றவாறு. அ-ம்,

இதுவுமது

இதுநன் றிதுதீ தெனவறியா தேங்கிக்
கதுவெந் துயர்க் கடலுட் பட்டாய் — கோதிவேகக்
கூற்ற அழல்துறுகா வண்ணங் குணநீரான்
மாற்றுநீ மாருதே வந்து. 58

(இ - ள்) கங்குல் விழுந்த கருங்குழியதனுள், தங்கு பெரும்பகல் வீழ்வனே வென்று, முன்னறியாது மூடத்திலழுந்தி, இன்னணம் இடும்பை யெய்தினேன் என்னை, நானினிமறவேன் இழிதொழில்களிலும் மேவேனென்பதோர் சிந்தையினை லுயிரான நின் பெருங்குணங்களை நித்தமும் நினையாய் ஜீவனே யென்றவாறு. அ-ம்,

இதுவுமது

பிறப்பிறப்புக் கானப் பெருந்துயரத் தீயில்
உறத்தொடர வோர்ந்தொதுங்கா தோரிற் —பிறப்பிற்
குருடன் குறும்பூழ் மிதித்தற்குற் போலும்
தெருட்டரு நன்மக்கட் சேர்வு. 59

(இ - ள்.) ஜாத்யந்தகன் வழிபோகாநிற்ப, குளப் படியிற்கிடந்த குறும்பூழ் இரத்தினம்மிதியடியி லகப் பட்டாற்போலவுஞ், சமுத்திரத்தினடுவே விலையறிய அரிய மாணிக்கம் அர்த்தராத்திரியில் விழுந்தது கண்டாற் போலவும், சாதி, நிலம், குலம், உருவமும் கூடிய மனுஷியபாவம் பெற்று அனர்த்தமே கழிப் பதோ ஜீவனே யென்றவாறு.

இதுவுமது

அரும்பெறல் யாக்கைபெற் றைம்பொறிச்சிற் றின்பப்
பெரும்பார மோகத்தைப் பேறது—ஒருங்கிசைந்து
இன்னனவே நீங்காத ஞானநி யெண்குணங்கள்
என்னனவே யென்றுணர்வா யின்று. 60

(இ - ள்.) மின்னொளியைநம்பி துன்னிருட் புறப் பட்டாற்போல சிற்றின்பம் நம்பித் தீவினைப்பெருக்கி முற்றும்வினைசூழ் உறளிக்காயிற் புழுப்போல தன் னைத்தானே பாபத்தைக் கட்டுவித்துக்கொண்டு நாற் கதிகளுள்ளும் துன்பந் தலைக்கொண்டு அருந்துய ருற்று அதனுல் உலைக்கொள்ளுங் கொல்லனுருக்கு இரும்பு போலச் சிற்றின்பநம்பி மறுகி யிறுதியில் மகாதுயரெய்தி உறுதியொன்றுணராதே, சூகரம் போல துன்பத்தை யின்பமென நம்பினையே ஜீவனே யென்றவாறு.

எமவாதை

தேடியே கொன்றுண்ணுந் தெய்வந்து முன்புநீ
பாடங் கிடந்த படியென்றே—நாடித்
துயர்விளைக்குங் காலன் துணைபுணரப் பற்றில்
அயர்வின்றிக் கொல்லானே ஆங்கு. 61

(இ-ள்.) ஆட்டைக் காட்டகத் துய்த்துக் கொல்லக் கத்திகாணுதிருப்ப ஆடு தன்காலாலே நிலத்தை புரண்டிக் கிளப்பப் பண்டு புதைத்துக் கிடந்த கத்தி தோன்றுதலும், அதுகொண்டு அதனை வதைசெய்தான் போல, நீயும் உன்னைக் கொல்வதற்குத் தேடித்திரியுங் காலனுக்குப் பாவத்தைப் பெருக்கினல், எமராஜன் கொல்லாது தவிருமோ? என்றவாறு. அ-ம்,

இதுவுமது

நிரந்தர நீங்காது நின்றுயிரைக் கொல்லும்
பரந்தபெருங் காலற்கே பாங்காய்—நிரந்தரநீ
தீவினையே செய்தாற் சிறந்தாடும் போலாவோ
போய்வினையை நன்மைகளே போற்று. 62

(இ-ள்.) பாடுவாரும் பறைகொட்டுவாருமின்றியே ஆடுவானொருவன் கீத வாத்தியம் பெற்றாலும் கொன்னே கொல்லும் கூற்றுவனுக்குச் சகாயமாக, அபட்ச்யங்களைப் பட்ச்யமென்றும், அபேயங்களைப் பேயமென்றும், அகம்யங்களை கம்யமென்றும் மித்தியேவமாதி பாபாஸ்ரவங்களைச் செய்தால், அவனுடாதேயும், இவன் கொல்லாதேயும் தவிருமோ? வென்றவாறு.

தீவினை செய்யவேண்டா மெனல்

வாழுநாள் முன்னிருந்து வந்துவந் தேபோக
வாழுநாட் பின்முன்று வாராதால்—வாழுநாட்
கேடுசா வேயறிந்துங் கேளாது மெய்மறந்தே
ஆடுவதோ வைப்பொறிமேல் ஆங்கு. 63

(இ-ள்.) வெண்முகிலினீரை நம்பி முன்னிருந்த சாலியின் நீரைப் போக்கடித்தவன்போல விளைத்த வாழ்நாளும் தழைத்த இளமையும்எல்லாம் முன்பகல் நிழல்போல இளமைதேய்ந்து, பின்பகல்நிழல்போல மூப்புப்பெருக, சமயம்சமயந்தோறும் அமையாது அகலக் கண்டும், மிக்கமொக்குளும், மின்னும்போல தொக்க நிலையில்லா மக்கள்வாழ்வை, ஆசைப்பட்டு நீ பாப வசனுனமையால் நீ தீவினை செய்ய வேண்டாம் ஜீவனே யென்றவாறு. அ-ம்,

உடல் நீங்குதல் நிச்சயம்

இழைந்தாயு வேகவும் யான்வேளை யென்றே
தழைத்த நரைதிரையுந் தானே—முளைத்த
முதுமுப்பி னுலழிநல் கண்டுமோன் றோராய்
எதுகார ணத்திருந்தா யிங்கு. 64

(இ-ள்.) ஆயுஷ்யம் தினம் பிரதியீனமாக யான் அதற்கு வேளையென்பது போல முது மூப்பு நரை திரையுங்கொண்டு உடல் உன்னை விட்டகல்வது கண்டும் நீயுடல்விடமாட்டாது இருப்பது ஏதேனுங் காரண முண்டாக வேணு மென்றவாறு. அ-ம்,

தர்ம மறக்கலாகா தெனல்.

அறிந்தேநா னிங்கிதனை யாய்வில்கூற் றுன்னை
இறந்த பவமனந்த மெல்லாம்—பிறந்து
மருவினு மாதலான் மற்றுடலை யுற்றுப்
பிரிவிலா வன்புனக்குப் பெற்று. 65

(இ-ள்.) தன்னை வதைத்துத் தின்னும் ஊன் காரனை மன்னிமருவும் ஆடுபோலக் கூற்றுவனுக்குத் துணையாகி, தர்மம்மறந்து கர்மம் பெருக்கவேண்டா மென்றவாறு. அ-ம்,

உறுநிநெறி நினைக்கவேண்டு மெனல்.

நானு லுறக்குணர்ச்சி நன்றில் பிறப்பிறப்பை
நானுலுஞ் சாற்றவுநீ நன்றறியாய் —நானுளும்
இச்சை வினையுடலு னிங்கிருந்தல் கண்டதனை
அச்சரிய மாயிற்று லாங்கு. 66

(இ-ள்.) மின்னுமுழக்கு மியன்மழை வரவை யுண்மை உணர்த்துவதே போல உறக்கும் உணர்ச்சியும் நின்னைநினை வினைப் பிறப்பிறப் பென்றே பெயர்த்து அறிவிக்கவும் எறும்பெண்ணுயிரங் கழுதை யகன்றனவென்று ஏகினவன் போல வுனக்குறுதி நெறியினை யுள்ளலின்றி வினைத்தொழின் மேவ வேண்டா மென்றவாறு. அ-ம்,

தர்மம் விட்டால் துர்க்கதி யுண்டெனல்.

பொருளா லுனக்கின்பம் ஆகாது பொய்தீர்
அருளா லறம்புணரு மாங்கே—பொருளினைக்
கண்ட பொழுதேயக் காதலினுற் றீவினையாம்
உண்டமிர்த நஞ்சாகு முற்று. 67

(இ - ள்.) பகைவனேக்கண்டு ஆயுதமறந்தாலும், கேடுகண்டு தர்மம் மறந்தாலும், அவனுக்கு மரண மும், இவனுக்கு துர்க்கதியும் ஐயுறவுண்டோ? என்றவாறு.

நிலேயாமை

பொல்லாத தீவினேயாற் போதந் துயர்விளேக்கும்
நில்லா வுடலின்மே னிட்டோடி—நில்லா
வினேவாழ்வை விட்டுறுதி யிட்டின்ப மெய்தும்
நினேவான வேநிகழாய் நின்று. 68

(இ - ள்.) உடலென்னிற் பொல்லாது, வாழுநாள் நில்லாது, பொறிவழியின்ப நெறி வழிசெல்லாது, நீ இனிவிரைந்து நிரந்தரம் இன்பப்பாவனேயாகிப் பயின்று இனிதுகே ளென்றவாறு. அ-ம்,

அறிஞர் மொழி யிகழ்வதே னெனல்

முளேவே ரிலேதளிரு முன்பாம்வித் துண்டேல்
உளதாகு முழிப் பிறப்பில்—அளவிலா
மோகந்தா னுண்டாக முன்னே வினேதொடரும்
ஆகுந்தான் றுன்பங் கரசு. 69

(இ - ள்.) வித்தினுல், முளேயும் வேரும் தளிரும் இலேயும் ஆனுற்போல, மோகத்தினுல், ராகத் துவேஷம் பிறப்பிக்கும்; அதனுல் வீயாதடி நிழற் போல மாயாதுதொடர்ந்து பாவங்கட்டும், வினே கெட்டாலன்றிச் சுகமாகாது; வேர் பறிய மரம் விழுந்தாற்போல, மோகங்கெடவே கர்ம நிர்ஜரை யாகும்; அதனுல் ஶாஸ்வத சுகமாகுமென்று அறி வுடையார் சாற்றவுங்கேளாதே, இகழ்ந்திருப்பதேன்

இன்பத்திற்கு யாவருமிச்சியாதாருளரோ? வென்ற வாறு. அ-ம்,

நிர்த்தோஷன் இவன்

எல்லாரு மின்பமே காமுறுவ ரிங்கிதுதான்
பொல்லாத தீவினையே போவழியாம்—பொல்லா
வினைபோ மொழுக்கந்தா னூலா லொழுக்காம்
நினையுங்கா லிவ்வகையே நேர்ந்து. 70

(இ-ள்) ரசமும் கிரியையும் பெற்ற லோகம் சுவர்ணமானாற் போல, குற்றமற முற்றுணர்ந்து உற்றவுயிர்க்குப் பெற்றதாய்ப் போன்று, நிர்த்தோஷியா யிருந்தஸ்வாமி மூலமான சம்மியக் தெரிசன ஞான சாரித்திரம் பெற்ற பவ்விய ஜீவனும் தோஷமெல்லாம் நீங்கி நிர்த்தோஷியா மென்றவாறு. அன்றியும்,

துன்பமெய்தத்துறத்தல் வேண்டு மெனல்

இம்மையா லின்ப மவற்கேத மின்றியே
அம்மைச் சுகமெய்த லையுறவோ—இம்மையில்
எற்றெற்று லின்பாகு மென்னிற் பரிக்கந்தைப்
பற்றற்ற கன்னும் பரிந்து. 71

(இ-ள்) பெரும்பாரந்தரித்து பேரிடரெய்தினன் அப்பாரமகற்றிய வின்பம் போலக் குடும்பமென்னு மிடும்பைநீக்கி யனந்த இன்பம் புணர்ந்து அமர்ந்து இருக்கவேண்டுதியாகில் ஈண்டு அறத்துறப்பதே கருமமென்றவாறு. அ-ம்,

சகரன் கதை

நினக்குறுதி யானுரைத்தே னீர்மே லெழுந்தாம்
மனந்துணர்ந்து மாவுயிரே மானா—நினைந்து
நிலையாமை பாவித்து நீந்தான் கதையை
உலையாமை யுள்ளுவதாம் உற்று 72

(இ-ள்) எத்தனை எத்தனை ஹேது திருஷ்டாந்திரங்களால் உனக்குறுதி சொல்லவும் கேளாயாகில், உன்னுடைய வாழ்க்கை மானிடர் வாழ்வின் மிக்கதோர் செல்வந் தொக்கதோர் வேந்தன், யாதானுமொரு காரணக்குறிப்பிற்றுறந்து நற்றியானம் பூரணை செய்து பொருந்தினன், முக்தியை யெய்தினனென்னுங் கதையைக் கேட்டாகிலும் ஸ்ரீ தர்ம்மத்தை நம்புவா யென்றவாறு.

நாவலந் தீவதனு ளைகந்தா லேழ்நாடாம்
பாவு புகழார் பரதந்து—மேவு
திகழ்திரு வயோத்திநகர் சீர்சகர னென்பான்
புகழ்தருசீர் நேமியனும் பொற்பு. 73

(இ-ள்.) நாவலந் தீவில் பூவலர் பொழில்சூழ் குலபர்வதங்களாற் கூரிடப்பட்ட ஏழு நாட்டினுள் பரதக்ஷேத்திரத்தினுள், அயோத்தியென்னும் நகரமாள்வான் ஷட்கண்டாதிபதியாகிய சகரனென்பான்; சகலசக்ரவர்த்தி ஸ்ரீ எவ்வகைத்தோவெனின், கேளாய் ஜீவனே! ஒரு கோடி கிராமமாள்வான் மகுடவர்த்தன னாகும்; மகுடவர்த்தனர் ஐந்நூற்றுவரை வணக்கியாள்வான் அதிகராஜனாகும்; மகுடவர்த்தனர் ஆயிரவரை வணக்கியாள்வான் மகாராஜனாகும்; மகுடவர்த்தனர் இரண்டாயிரவரை வணக்கி

யாள்வான் அர்த்தமண்டலீகனுகும்; மகுடவர்த்தனர் நாலாயிரவரை வணக்கியாள்வான் மண்டலீகனுகும்; மகுடவர்த்தனர் எண்ணுயிரவரை வணக்கியாள்வான் மகா மண்டலீகனுகும்; மகுடவர்த்தனர் பதினுறுயிர வரை வணக்கியாள்வான் அர்த்தசக்ரவர்த்தி யென்றும் வாசுதேவனென்றுமாம்; மகுடவர்த்தனர் முப்பத்திரண்டாயிரவரை வணக்கியாள்வான் சகல சக்ர வர்த்தியாகும். இப்பெற்றிய சகலசக்ரவர்த்தி சகர னென்பானுக்குத் தொண்ணூற்ருறுயிரந் தேவி மாரும் மூந்நூற்றறுபதின்மர் மடையரும், மூந் நூற்றறு பதின்மர் சரீரவயித்தியரும், மூன்றரைக் கோடி பந்துவர்க்கமும், மெய்காப்பார் பதினுறுயிரம் கணபத்ததேவரும் என்றவாறு. அ-ம்,

கரிபரி யாளி கருடன் மதிமீன்
செருவிடஞ் சீர்சால் மகரம்—விரியிதழ்த்
தாமரையு மன்னமுஞ் சங்க மயில்கும்பம்
ஆமரசர் சூழ்கொடிக ளாங்கு. 74

(இ-ள்.) இச்சொன்னவையேயன்றி மற்றும் பேரி மிருதங்க சிம்மாசன சத்ர சாமர பஞ்சமகா சப்தாதி ராஜபரிச்சின்னங்கள் முதலாக மற்றும் எண்ணிறந்தன பலவுமுள வென்றவாறு.

இருநாற் புகையுயர்ந் தீராறு நீண்டே
ஒருநான்கோன் பானகன்ரே வாதே—பெருநீர்மை
பின்ருன் நவநிதிகள் பெய்யும் பெருமுகில்போல்
வென்ருழி வேந்தர்க்கோர் வித்து. 75

(இ-ள்.) இருக்கு மிடத்தில் அற்ப நிலத்திலே யடங்கிப் போமிடத்து எட்டு யோசனை உயரமும்

பன்னிரண்டு யோசனை நிகளமும் ஒன்பது யோசனை யகலமும் உடையவாய் ஓவாதேகொளினும் தாவாத நவநிதிகளின் பெயர்யாவை யோவெனின்.

வண்டோகை மானேகை பிங்கலிகை யேபதுமை
விண்டோயுஞ் சங்கையே வேசங்கை—தண்டார்சீர்க்
காளையே மாகாளை சவ்வ ரதனம்பெயர்கள்
ஆருமா மென்றுரைப்பா ராய்ந்து. 78

(இ - ள்.) வண்டோகையென்றும், மானேகை என்றும், பிங்கலிகையென்றும், பத்மையென்றும், சங்கையென்றும், வேசங்கையென்றும், காளை யென்றும், மஹாகாளையென்றும், சர்வரத்ன மென்றும், நவநிதிகளின் பெயர் சொன்னவாறு அவற்றின் செய்கை யாதோ வெனின்,

அகவல்

சாலிமுத லாகிய தானிய மனைத்தும்
ஏல மின்கோ டெழில்திகழரு மருந்தும்
தண்டுத லின்றி வண்டோகை கொடுக்கும்
கத்தி தோமரம் தண்டெழு நாஞ்சில்
வித்தக வாள்வளை விற்கணை பிறவும்
மிக்க வாயுதம் விரலங் கரக்கை
பக்கரை யினையன மானேகை கொடுக்கும்
பெரியோர் சிறியோர் பேதையர் தமக்கும்
கரிபரி தேர்க்குங் கவினுடை மணிப்பூண்
சிங்குத லின்றி பிங்கலிகை கொடுக்கும்
துகிலொடு நூலுங் கவரியுஞ் சவரியும்
தகவதின் ஈயுந் தான்பது மையே
தண்ணிய காற்றுஞ் சந்தனக் குழம்பும்

புண்ணிய நறுநீர்த் திவலையும் நிழலும்
என்றிவை முதலாச் சங்கை பயக்கும்
நாளமுஞ் சங்குஞ் சகண்டையுந் திமிலையும்
காளமுங் குழலும் கரடியுந் துடியும்
வீணையும் யாழும் விளங்குரு ளிகையும்
இணையன பிறவும்வே சங்கை கொடுக்கும்
எழுத்துஞ் சொல்லும் பதமுஞ் சுலோகமும்
விழுத்தகு நூலும் புராணமும் விருத்தமும்
சோதிட நிமித்தமும் சொல்லிய பிறவும்
காலை யென்னுங் கனநிதி கொடுக்கும்
உழவுந் தொழிலும் வரைவும்வா ணிகமும்
செழுமிசை விச்சையும் சீலமும் பிறவும்
ஒழித லின்றி மாகாலை கொடுக்கும்
மரகதம் வச்சிரம் வயிடு ரியமும்
பரவிய நீலமும் பதும ராகமும்
கோமே தகமும் கொழும்புருட ராகமும்
தாமமும் முத்தும் தடமா ணிக்கமும்
சந்திர காந்தமும் சூரிய காந்தமும்
இந்திர நீலமோ டெழுவகையு லோகமும்
தவ்வுத லின்றிச் சவ்வ ரத்ன மீயும்
இன்னன முதலாப் பன்னிய பிறவும்
வனியோர்க் கடவச் சக்கிர வர்த்தி
பணியி னின்றும் அருளு மென்ப
நவநிதி யெல்லா நன்கொடு சிறந்தே. 77

அன்றியும்,

நேரிசை வெண்பா

மாவானை தச்சன்பெண் மன்னுசே னுபதியுங்
காவாளன் சோதிடனுங் காகணியுந்—தாவாத
சக்கரந்தொல் சூளா மணிதண்டு தண்குடைவாள்
இக்கிரமத் தேழிரண்டா மீங்கு. 78

(இ - ள்.) இச்சொல்லப்பட்ட பதினாலுரத்தினங்களும் யானை தேர் குதிரை கருவி காலாள் எத்தனை சூழினும் அத்தனைக்கு மத்தனையாகி உழிதரு மரகத மேனி மாவென்னும் ரத்தினமும்,

வேறு

அண்டமுற நிமிர்வரைபோ ரானைகளுக் கரியேயா
யெண்டிசையும் படையிரிய விடியுருமா வெனமுழங்கிக்
காற்றுந்தீ யெனக்கடுகிக் காலந் துயிருண்ணும்
கூற்றுப்போல் கொடியதொரு கொலைக்களிறும் ரத்தினமும்
பரிப்பந்தி தேர்க்கூட்டம் பாய்களிற்றின் ஒலிகளுடன்
பெருத்துயர்ந்த திண்மதிலும் பீடார்ந்த மண்டபமும்
அம்பலங் களுமறச் சாலையும்கூ டகங்களும்
கோபு ரங்களும் குறைவின்றி நிறைவெய்தப்
பன்னிரண்டோ சனைவிரிவாம் பதியமைக்கும் பெருந்தச்சனும
சீதகாலத்தி லுஷ்ணமாய்ச் செழுங்கோடையில் குளிர்சிறந்து
காதல் பெருகுங் கவின் இள மையும்
வேந்தர்களால் விருப்புடைய விரைகுழலா ரனைவரிலும்
ஆய்ந்ததோர் குணமுடைய அருங்கலப்பெண் ணிரத்தினமும்
போர்த்தொழில்க ளிலையுடையும் பொருபடையின் வியத்தகமும்
ஆர்த்தமைந்த வாகனங்க ளழகமைந்த பெருங்கல்வியும்
யூபங் களைவகுக்க வன்மையு முற்றிடத்துப் பேராண்மை
வேரங்களாற் செயிர்த்துவந்த வேற்றரசை வெல்திறமும்
செப்பியவும் பிறகுணமும் செய்துநன்ன கலங்காட்டு
மப்படித்தா யரசுவக்குஞ் சேனாபதிரத்தினமும்
எப்பொருளு மறநெறியா லீண்டியபண் டாரங்களைத்
தப்பாமை யடைத்துவைத்தவை தகைபெறமுன் வழங்குதலும்
கண்டார்க்கே யருளுடைமையுங் கனவினும்பொய் யுரையாத
பண்டாரி யாய்ச்சிறந்த பரிசமைந்த ரத்தினமும்



(KOLLAPHUR)

Swasthi Sri LAKSHMISENA PATTARAGA

Pattacharya Varya Swamigal of Kolaphur

JAIN MUTT, RAIBAG.

நிகழ்ந்ததுவும் போனதுவும் வருவதுவு மனவேகம்
புகழ்ந்துரைக்கு நிமித்திகனுய்ப் பொய்ந்ததீர்ந்த ரத்தினமும்

ஆக இவையேழும் ஜீவரத்தினம்.

துன்னிருளை யறத்துறக்குஞ் சூரியசந் திரர்போல
முன்னெறியால் மனம்வேண்டும் வெளியெல்லாம் வரவிரிக்கும்
மன்னியகா கனியென்னு மாண்பமைந்த ரத்தினமும்
வேந்தனது பணியாலே விரிதிரைசூழ் மேதினியில்
காய்ந்தவரை யுகிர்செகுக்குங் கதிராழி ரத்தினமும்
நரபதிதன் பணியென்று நாற்பத்தென் காதவளர்
திரைபோனீர் மேல்விரியும் சருமமகா ரத்தினமும்
நஞ்சினெடு மாயங்கள் நணுகாமல் காக்கவல்ல
எஞ்சுதலில் திகழ்சூளா மணியென்னும் ரத்தினமும்
மேடுகளும் வரையிடமும் விழுகுழியும் விபத்தக்க
காடுகளும் நிரவவல்ல கடுந்தண்டா ரத்தினமும்
கன்மழையுங் கார்மழையுங் கணமழையு மாயத்தான்
மன்னவரும் வானவரும் பொழிந்தாலும் வழிந்தோட
இடைநின்ற தந்திரத்திற் கெய்தாமற் காதுத்க்குங்
குடையென்னும் பெயருடைய கொள்கைமிக்க ரத்தினமும்
குழுவாய கம்பலையும் குதிரைகளுங் கொடிபடையும்
வழுவாமற் கொல்லவல்ல வாளென்னும் ரத்தினமும் 79

ஆக இவையேழும் அஜீவரத்தினம்.

இத்தன்மைத்தாகிய ஈரேழுரத்தினமும் முன்னுரைத்த அத்தன்மை நவ நிதியு மமைவுபெற வுடையனாகிய சக்கிரவர்த்தி சகரராஜ னென்பானுக்கு ஸ்ரீ இன்னம் எவ்வகைத்தோ வெனின்,

நேரிசை வெண்பா

திருவுருவுந் திட்பந் திறலுடைமைத் தேவர்
மருவி யுடன்காத்நல் காட்சி—முருகுடைய
தார்வேந்த ரெல்லாந் தனக்குநே ரின்மையால்
ஆர்வேந்த ரொப்பா ரவர்க்கு. 80

(இ-ள்.) எண்பத்து நான்குலக்ஷம் பத்ர ஹஸ்தியும், அத்துணை ரதங்களும், பதினெட்டுக்கோடி ஜாதியஸ்வங்களும், எண்பத்து நான்குகோடி காலாள்களும், மற்றும் அனேகமாகிய விபவங்களை யுடைய சகலசக்கிரவர்த்தி சகரன் இஷ்டவிஷய காமபோகங்களை யனுபவித்துச் செல்லாநின்ற காலத்து அறுபதினுயிரம் புத்திரருற்பவித்து யௌவனமும் வித்தையும் ஸ்ரீயும் பெருகிச்செல்லாநிற்க, தாதையாகிய சகரனைக்கண்டு, மக்கள் அனைவரும் எங்களுக்கு ஒருபணி ஏவவேண்டு மென்றுரைப்ப, நமக்கரியவும் பெரியவுமாயிருப்பன லோகத்தி லடிபடாதிருப்பனவில்லை; நீங்களுங்கள் விபவங்களை யனுபவித்து விளையாடியிருப்பதே பணியென்று சக்கிரவர்த்தி யுரைப்பவும் பின்னையும் திவசந்தோறும் தங்களிஷ்டத்தைத் தந்தைக்கறிவிப்பக் கேட்டு பரதேஸ்வரனென்னும் சகலசக்கிரவர்த்தி கயிலாசமென்னும் பர்வதத்தின்மேல் பஞ்சவர்ண ரத்தினங்களால் சைத்தியாலயங்களைச்செய்து இருபத்துநால்வர் தீர்த்தகரர் தத்தத்வர்ணத்தால் ரத்தினமயமாகிய பிரதிமைகளைச் செய்வித்தான்; அவன்குமாரன் அர்க்ககீர்த்தியென்பான் அம்மலையை அஷ்டாபதமாகச் செய்வித்தான், அப்பிரதிமைகளுக்கு ரக்ஷை

யாக பூசரர்க்கு அகோசரமாக அதனைச் சூழ அகழ்செய்து கெங்கையினீரைத்தந்து செய்மி னென்றலு மகா பிரசாதமென்று நமஸ்காரஞ் செய்து எவ்வகைப்போயினரோவெனின்.

பணிபெற் றனைவர்களும் பாங்கமைநன் டேந்தி
அணிபெற் றவர்நகர நீங்கித் – துணிவரிய
மாமணிக ளோங்கும் மலைவலமாய்ப் போய்த்தன்டை
ஆமணியா விட்டார்ந்தா ராங்கு. 81

(இ-ள்.) சக்கிரவர்த்திப் பணியென்று தண்ட ரத்தினத்தை யிடுதலும், அப்பர்வதத்தை பிரதக்ஷண மாக அகழ்செய்து வந்ததனைக் கண்டு அறுபதினாயிர வர்க்கு மூத்த ஜனுதேவியுடைய புத்திரன் பகீரதியை நீ தண்ட ரத்தினத்தைக் கைக்கொண்டுபோய்க் கங்கையின் நீரைத் தருவாயாகவென்று விட்டிருக்கு மெல்லைக்கண் யாது நிகழ்ந்ததோ வெனின்,

முன்னிவனற் பெற்ற வுபகார முன்னினைந்து
தன்னவர்க்குத் தானுதவு மாற்றலால் – மன்னிப்
புகுந்ததெல்லாம் நன்குணர்ந்து போபவர்தம் பாற்சென்
றிகழ்ந்துரக னுயுரைத்தா னீண்டு. 82

(இ-ள்.) பலபத்திரனென்பான் சக்கிரவர்த்தியி னுடைய மடையன் ஆயுஷ்யாவசானமான காலத்து சக்கிரவர்த்தி சென்று பஞ்ச நமஸ்காரஞ் சொல்லக்கைக்கொண்டு சரீரம்விட்டு சௌதர்மகல் பத்து சுப்பிரபனென்னுந் தேவனாய்த் தோன்றித் தன்னுடைய முற்பவத்தை யவதிக்ஞானத்தா லறிந்து என்னுடையஸ்வாமீ என்னை ரக்ஷித்தவனுக்கு பிரத்தியுபகாரம் பண்ணுவேனென்று சிந்தித்து

ப்ரச்சன்ன ரூபத்தினுல் வந்து இவனுக்கு வைராக்கிய ஏதுவாகிய காரணங்களை பலவுங் காட்டவும் சொல்லவும் வைராக்கியம் வாராமைகண்டு எப்பிரகாரத்தினுலிவனை வைராக்கியபரனுக்குவே னென்று இருந்த பின்னை இப்பொழுது அறுபதினுயிரவர் மக்களும் இங்கேவந்து நின்றமையறிந்து இதுகாலமென்று நினைந்து தரணேந்திரனுய் வந்து சகரபுத்திரரைக் கண்டு தரணியாளுஞ் சக்கிரவர்த்திகளுக்கு பூமியல்லது கீழாட்சியுண்டோ என்னுடைய லோகத்தளவும் உம்முடைய தண்டரத்தினத்தை ஏவவல்லீரோ எம்மில் நிகரில்லையென்று கெர்வித்தீரோ என்று பலவும் பௌருஷ வாக்கியங்கள் சொல்ல அவர்கள் யாதுசொன்னர் ;

பனிவரை பாதி படுகடல்சூழ் வட்டம்
இனி தான் டியக்கர் குலமும்—நனிவந்து
பாதம் பணிந்திறைஞ்சும் பண்பினு னெம்மிறையை
ஏதம் பகர்ந்தா யிது. 83

(இ-ள்.) ஷட்கண்டாதிபதியாய் சமஸ்தலோகங்களையும் சாதித்து ராச்சியஞ் செய்கின்ற சக்கிரவர்த்திக்கு பூமி இத்தனை யென்று வரையறுத்துரைத்துன்னுடைய ஆயுஷ்ஷியம் இற்றையளவே யாகல் வேண்டுமென நாகராஜன் மகாரோஷத்தனுய் இவர்கள் அஹங்காரத்தைக் கெடுக்கவேண்டுமென்று தன் வித்தையினுலே அறுபதினுயிரவரையும் மரிக்கும் வண்ணம் நோக்கினுன் ; நோக்குதலும் அறுபதினுயிர வரும் ஒருங்கே மரித்துப் பார்சேர்ந்தார். அதுகண்டு சுப்பிரப னென்னுந்தேவன்

சக்கிரவர்த்திக்கு பிரத்தி யுபகாரம் பண்ணவேண்டி ஒரு வ்ருத்தப்பிராமண வேஷங்கொண்டு சக்கிர வர்த்தி கோயில்வாயிலிலே நின்று அவிதா இட ராஜாவும் அது கேட்டு ஆங்கவனை யழைத்து நீ அவிதா இடுகின்ற தென்னென்று வினவ, பிராம ணன் யாது சொன்னன்.

வினவிற்றி யாதொன்றும் விழாமை நோக்கி
மனம்வைத் தெனக்களிப்பா யாகில்—வினவிற்
ஞெழியாமற் சொல்லுவேன் உற்றதுகேள் என்றன்
றழியாமை தானுரைத்தா னுங்கு. 84

(இ - ள்.) யான்வினவிற்று ஆராய்ந்து கொடுக்க வல்லையாயில் சொல்வனென்று பிராமணன் சொல் லக்கேட்டு சக்கிரவர்த்தி நான் ஆராயாத பக்ஷத்தில் மற்றுனக்கு ஆராய்வா ருண்டோ யானே ஆராய்ந்து கொடுக்கின்றேன் சொல்லென்ன பிராமணன் யாது சொன்னன்;

பாடங் கிடந்து பரவிப் பலகாலம்
நாடெங்கும் தெய்வங்கள் நண்ணியே—தேடித்தான்
பெற்ற வொருமகனைப் பேணிக்கூற் றுண்டதால்
உற்றவுயிர் பேர்ப்பதெனக் கோர்ந்து. 85

(இ - ள்.) எனக்குப் புத்திரரில்லாமையி லனேகம் பிரயத்தனத்தி னின்றும் தெய்வங்களைப் பிரார்த் தித்து அரிதாகப்பெற்ற புத்திரனை மிருத்தியுராஜன் கொண்டுபோனன். அவனைப் பேர்த்துத் தரல் வேண்டுமெனக் கென்றலும் அதுகேட்டு முன்னந் தானவனுக்கு வ்யவஸ்தை பண்ணின கிரமத்தி

ஞலும் மிருத்தியு கொண்டஜீவன் மீட்பது அருமையு மினைந்து சித்திரதரனென்னும் பிரதான மந்திரியைக் கூவிக்கொண்டு தானுமவனும் பிராமணன் வசனத்தை விசாரித்து பிரதியுத்தரங்கண்டு பிராமணனை நோக்கி சக்கிரவர்த்தியாது சொன்னன்.

அருமை பெருமையு மாங்கமைந்த துப்பும்
உரிமையு மெம்மிடையே உண்டால்—அருமையிலா
நற்பொருள்க ளோரிரண்டு நன்குளவே லாங்கவற்றை
முற்பட நீதரவே முந்து. 86

(இ - ள்.) ஓமம் பண்ணினலல்லது உன்மகனை எழவெட்கவாராது; ஓமத்துக்கு அரியவும் பெரியவுமாகிய வஸ்துக்களெல்லாம் எம்பக்கலிலேயுள; இனியெளியவாயிருப்பன இரண்டு வஸ்துக்களுள; அவையுன்னலன்றித் தரவாது, அவை யாவை யென்பாயாகில் தம் வம்ஸத்திலே யாரும் எக்காலத்தும் சாவாதாருடைய மனையிற் புல்லும் நெருப்புங் கொண்டுவரவல்லையாகில் உன்மகனை ஓமத்திலே எழவெட்போமென்றுரைப்ப வேதியனும்போய் நகரமுற்றுந் திரிந்து எங்கும் அவை பெற்றிலேனென்று சொல்ல அரசன் சொல்லுவான் முன்பு பல சக்கிரவர்த்திகள் இப்பூமியாண்டா ரவர்தா மிருத்தியுகொண்ட ஜீவனைப் பேர்த்தாரென்று கேட்டறிவதுண்டோ பிறந்தார் யாவரும் இறவாதாரின்மையும் போன ஜீவனையும் மீட்கவொண்ணுமையும் அறிந்து அறியாதழுவ தென்னே கூற்றுக்கழுது கண்குருடாயிற்று என்று தேற்றமுடையார் சொற்கேளாதே

திகைப்படுதோவென்று பின்னுஞ் சக்கிரவர்த்தி யாது சொன்னுன்.

தோன்றுதலும் வீவு முடனே தொடர்ந்தலைத்தல்
ஏன்றறிவி லேழை மறையோனே—வான்றருநீர்
மாரிபெய வந்துதிக்கு மொக்குள்போல் மன்னுதால்
ஆருயிரும் என்ரு னவற்கு. 87

(இ-ள்.) என்பதுகேட்டு வேதியன் சொல்லுவான் துக்கமும் பிணியுந் தம்மை வந்துறுதபொழுது எல்லாருஞ் சகிப்பார்கள்; உற்றபொழுது ஒருவரும் சகிப்பாரில்லை என்றலும் ராஜராஜன் சொல்லுவான்.

அகவல்

அறிவெனப் படுவது துன்பந் துடைந்தல்
செறிவெனப் படுவது மும்மையுஞ் செறிதல்
ஆண்மை யெனப்படுவ தைம்புலன் வெல்லல்
கேண்மை யெனப்படுவ கெட்டிடத் துதவல்
அருமையெனப் படுவ தறநெறி வழுவாமை
பெருமையெனப் படுவ பிறனில்விழையாமை
அறமெனப் படுவ தாருயி ரோம்பல்
உறவெனப் படுவ துற்றுழி நிற்றல்
வாய்மையெனப் படுவ வருந்தா துரைத்தல்
தூய்மையெனப் படுவ துள்ளத் தூய்மை
இன்பமெனப் படுவ தீறி லின்பம்
அன்பெனப் படுவ தார்வ முடைமை
தவமெனப் படுவ தைம்புலன் வெறுத்தல்
வதமெனப் படுவது கொல்லா விரதம். 88

என்றும் எத்தனையோ ஏது மூன்றையும் மக்கள் வாழ்வும் நிலையாமையும் சொல்ல அந்தணன் சொல்லுவான் துன்பமுற்ற பொழுது க்ஷமிப்ப தென்றுரைத்த தர்மசிரவணம் எனக்கேயோ உனக்கு முண்டோவென்று பிராமணன் கேட்ப அரசன் சொல்லுவான் எனக்கும் முன்னமே யுண் டென்று சொல்ல அப்பெற்றியாகிலுன்மக்க ளறு பதினாயிரவரு மொருங்கே அவிந்தாரென் றுரைப் பக்கேட்டு சமுசாரஸ்திதி அனித்தியமன்றோ அத னுக்கு ஐயுறவுண்டோவென்று பின்னும் யாது சொன்னான் சக்கிரவர்த்தி.

கூற்றெயிற்றுப் பட்டுலைதல் கொண்ட நமர்வாழ்க்கை
ஆற்ற லவன்றுய்க்கு மவ்வளவே--தோற்றம்
அறிந்தார் துறந்தா ரறியாதார் துன்பம்
செறிந்தார் பிறவித்தீச் சேர்ந்து 89

(இ-ள்.) இவ்வகையே பிராமணனுக்கு அரசன் சம்சாரத்தி னனித்தியம் சொல்லுகின்ற எல்லைக்கண் கெங்கைநீர் கொணரப்போயின பகீரதி மற்றது கொணர்ந்து சுற்றகழ் நிறைத்துத் தம்பிமாரனைவரு மரித்தமைக்கண்டு துக்காக்கினியுற்ற தேகனாய்ப் பெரும்பொழுது பிரலாபித்து அரிதாகத் தன்னைத் தானே தேற்றி ஆங்கவனைவர் களுக்கும் லௌகிக கிரியைப் பண்ணிப் புகையுற்ற கண்ணேபோலவும், புன்பனியுற்ற தாமரைப் பூப்போலவும், ஒளியற்ற முகத்தனாகி அயோத்தியாநகரம் நண்ணிப் பலபுஷ்ப பலபரிதமாகிய பைம்பொழில் வாயுசகிதமாக அக்கினி சுட்டாற்போல வெந்துநொந்து அரசன்கோயில்புக்கு

ஓலக்கமாக இருந்து பிராமணனுக்குத் தர்மோபதேசம் பண்ணுநின்றசக்கிரவர்த்தி சரணயுகளங்கண் மேல் விழுந்து குமார ரனைவரும் மரித்தமைசொல்லிக் கலுழ்ச்சி யெய்த எவ்வகையாயிற்றோ வெனின்.

தேவியருஞ் சுற்றமுஞ் சேர்ந்த பரிசனமும்
மேவிய மாநகரும் வேந்தர்களும்—பாவித்
தொழிந்தவருந் துன்புற்று ரோன்கடலூ டோடி
அழிந்த மரக்கலம்போ லாங்கு. 90

(இ-ள்.) இராஜகுமார ரழிவுகேட்ட சக்கிரவர்த்தி தேவிமாரும், பரிவார ஜனங்களும் எவ்வகை புலம்பினரோ வெனின்.

அளவிறந்த துன்ப மகத்தெழவாற் றுதே
அளவிறந்த துன்பத் தழுந்தி—அளவிறந்த
போராழி வேந்தன்றன் பொன்னடிமேல் வீழ்ந்தழுநார்
காராழி போலக் கலுழ்ந்து. 91

(இ-ள்.) புத்திரசோகத்தால் துக்காக்கினியுள்ள தேவிமாரெல்லாம் சக்கிரவர்த்தியைநோக்கி பாஸ்கர தேஜோமூர்த்தி நரேந்திரகீர்த்தி நவநிதிபா சதுர்த்த ஸரத்தின பரிவிருதா வுனக்குப் பதினாறுயிரவர் அமரர் மெய்காப்பார் உன் சகாயராகிய புத்திரர் மாளத்தக்கதோ வென்று பின்னும் எவ்வகை புலம்பினரோ வெனின்.

நிறைபன் னிருதிங்க ளீளுதரத் தும்மைக்
குறைவின்றிக் கொண்டின்று குன்று—முறைவளர்த்துக்
கூற்றிங்கு கொண்டுண்ணைக் கண்டாற்றே மென்றழுதார்
வேற்றிகழுங் கண்ணார் மெலிந்து. 92

(இ-ள்.) சொல்லிப் பிரலாபித்து மாதாக்கள் சொல்லிமயங்க மற்றவர்கள் தேவிமாராகிய அறு பதினாயிரவரும் யாதுசொல்லிப் பிரலாபித்தாரோ வெனின்.

பூமகளை நீத்தெம் புணர்முலையும் புல்காதே
சோம வதனச் சுரர்மகளிர்—வாமக்
கலைத்தடமே யாதரிந்தீ ரென்றுக் கலுழ்ந்து
நிலத்திடையே வீழ்ந்தார் நிரந்து. 93

(இ-ள்.) நயனமனோஹர ரூபமுடையீர், உயர் மதயானைப் பொற்புடையீர், சிம்மபராக்கிரமத் திறலுடையீர் எங்களை யிடர்சுடவே தகுவதோ ஆழிப் படை யுடையீர், கேள்வியென்னும் பெருங்கிளை யுடையிர், துயருற்றியாங் துன்பமுற எம்மைத்துறந்த வாறென்னென்று திசைதிசையின் கைகூப்பி ஆசையினோடும் அழுவாரும், பொறிகழன்ற பாவை போல் நெறிகழன்று சோர்வாரும், வேந்தன் கால் மேல் வீழ்வாரும், சோர்ந்துகிடந்து துக்கிப்பாரு மாகக்கண்டு சஜ்ஜாதிமாணிக்கம் அக்கினியிற்பட்டு நிர்மலமானாற்போல தர்ம்ம நிர்ம்மல சித்தனாகி அனித்தியத்துவம் பாவித்திருப்பக்கண்டு, தேவி மாரும் பரிவாரஜனங்களும் வேல் வேந்தனது திரத்தைச்சொல்லிக் கலுழ்ச்சி எய்தக்கண்டு, பிர தானமந்திரி சொல்லுவான். உங்களுக்கோரொரு மக்களால் வந்த துக்கமும் துக்கமே; அரசனுக்கறு பதினாயிர மக்களை யிழந்த துக்க முண்டென்று சொல்லி அது காட்டுவான் வெண்சிறு கடுகை நீரினில் நனைத்து அரசன்மேல் விடுதலும் காய்ந்த

வோட்டிவிட்டாற்போல பொரியக்கண்டு கண்டீரோ அரசனது துன்பமென்று உரையா நிற்ப முன்னம் வந்த பிராமணன் என்னையு மாற்று விப்பனென்று யாதுசெய்தான்.

முடிகடகம் வீழ்நூல் முதலா பரணம்
அடிமுதலா அங்கமெல்லாம் பூண்டு—நடுவனுற
நின்ரு னமருருவ மாகியே நேர்ந்தவருக்
கொன்ரு அறிவிப்பா னுற்று. 94

(இ - ள்.) இத்தன்மைத்தாய் தன் தேவரூபங் காட்டி நிற்ப அரசன் விஸ்மயப்பட்டு நீயா ருன்னை யுள்ளவா றுரையென்ன தேவன்சொல்லுவான் பண்டுன்னுடைய மடையன் பலபத்திரன் என்பேன்; நீ என்னுடைய ஆயுஷ்ய அந்திய காலத்து பஞ்ச நமஸ்கார முரைப்பச் சமாதிபெற்று சரீரம்விட்டு தேவலோகத்து சுப்பிரபனென்னும் தேவனாய்த் தோன்றினேன் ; நீ செய்தவுபகாரத்துக்கு பிரதியுப காரம் செய்யுமுபாயத்தா லிந்த அவசரத்து உன்னுடைய துக்கம் நீக்கவந்தேன் ; உன்னுடைய அறிவும் க்ஷமையும் தீரத்தையுங் கண்டேன் ; நீ இவர்களையெல்லாம் தேற்றுவதென்று பின்னும்யாது சொன்னான் சுப்பிரபன்.

கைக்கொண்டு கேண்மின் கலந்தெல்லா மென்னுரையை
மெய்க்கொண்ட காட்சி விறலமுதம்—தொக்கு
வினையுதிர்த்து விட்டின்பம் வியாமை யெய்தும்
நினைவதனை நீர்கொண்டு நேர்ந்து. 95

(இ - ள்.) என்று பின்னும் அரசனுடைய தேவி மார்க்கும் பந்துவர்க்கத்திற்கும் பரிசனங்கட்கும்

தர்ம்மமே கிளையும் இன்பமும் என்றுரைத்து இனி உங்களுக்குறுதி அறிமினென்று தேவன் அத்ருஸ்ய மாயினன். இப்பால் அரசன் யாதுசொல்லி யாது செய்தான்.

முன்செய்த தீவினையின் முடு துயரிதனை
என்செய்வ தென்றுணர்வி னென்னுதே—முன்செய்த
துன்பக் கடலதனுள் தூங்குமதோ பாங்குமக்கு
இன்பமது ஆமோ இசைந்து. 96

(இ-ள்.) என்று பின்னும் மக்களறுபதினுயிர வரும் ஒருங்குடனவிந்த கர்மத்தின் பயனும் மடைய னென்கைப் பெற்ற தர்மத்தின் பயனும் பிரத்தியக்ஷ மாகக்கண்டும் மெய்மறந்து இருப்பது காரியமன் றென்று பின்னும் சொல்லுவான்: அறமுறுமின் மறமுங்கலுழ்ச்சியும் வேண்டா மென்று தேற்றிப் போய் ஜினேந்திரனுக்கு மஹாபிஷேக முதலாகிய பூஜையும் தானமும் செய்து ஒரு பொழுதாகிலும் மெய்மறந்திருத்தல் மேதகவு அன்றென்று யாங் கனஞ் சிந்தித் தானேவெனின்,

குடர்குருதி வெண்ணிணமுங் கூடு தடியுந்
தொடர்நரம்பு தோலெலும்பு துன்னி—இடர்செய்
பிணிநான்மை யான்மலமும் பெய்தொழுகு நீரும்
அணிவாய் நிலையிலுடம் பாங்கு. 97

(இ-ள்.) என்று சிந்தித்து பாஹியாப்பியந்தர பரிக்கிரகங்களை பாம்புரிதோலினும் நஞ்சினுந்துறந்து துவாவிம்சதி பரீஷஹ ஜயங்களையும் கர்மராஜனையுஞ் ஜெயித்து தாபங்களையோடு கூடி அஷ்டவித கர்ம்

மங்களை நிர்மூலனஞ் செய்து முடிவில்லாத முக்தியங் கனைமேல் மோஹிதனுகி ஜாதி ஜராமரணங்களை யின்றி அனந்தசுகத்தையெய்தினுன் மற்ருெழிந்த தேவிமார்களும் பந்துவர்க்கங்களும் பரிவாரஜனங் களும் தீக்ஷிப்பாரும் ஆகி சகல சிராவக விரதங்கைக் கொண்டு சொர்க்காதி யெய்தினர். முன்னம் தர்ம் மோபதேசஞ் செய்த தேவன் அரசன் மக்கள் அறு பதினுயிரவரையும் தன்மாயத்தை விட்டெழுப்பி உங்கள் பிதாவும் தாய்மாரும் பந்துவர்க்கமும் எல் லாம் பகீரதிக்கு ராஜபட்டங்கொடுத்து சம்ஸார மனித்தியமென்று சிந்தித்து தீக்ஷை கைக்கொண் டார் நீங்களிருந்த தென்னென்று சொல்லக்கேட்டு அவர்களறுபதினுயிர வரும் உடனே தீக்ஷித்து தபச் சரணம் தரித்து கர்ம்மக்ஷயம் செய்தாரென்னுங் கதையைக் கேட்டாகிலும் ஸம்சாரம் நிலையாமை பாவிப்பதுகாண் பவ்விய ஜீவனே யென்றவாறு.

ஸகலவிமல கேவலக்ஞான பகவத் அருகத் பர மேஸ்வரன் முகோத்கதமாகிய துவாதஸானுப் ரேக்ஷையுள் சிரேணிக மஹாராஜன் கேட்ப கணதர ஸ்வாமிக ளருளிச்செய்த

முதலாவது

அநித்திய மென்னு மதிகாரம்

ஸமாப்தம்.

2-வது அத்தியாயம்

அசரணம்

நேரிசை வெண்பா

வெள்ளைவா ளோச்சி வினைவேந்தை யிர்ந்தொளிசேர்
கள்ளவிழும் பூங்கோதை கைவலமே—உள்ளம்
அரனமா மாதி யடியல்லான் மற்ருேர்
சரனின்மை சாற்றுதுமாற் சார்ந்து. 98

(இ - ள்.) சுக்லத்தியான மென்னும் வாளினல் வினைவேந்தரை யுறவெறிந்து, கேவலஜ்ஞாந மென்னும் மடந்தையை மகிழ்ந்தஸ்வாமியை நமஸ் காரம்செய்து, ஸ்வாமி ஸ்ரீ பாதங்களை யன்றி யாதொன்றுஞ் சரணில்லை யென்னு மதிகார முரைப் போ மென்றவாறு.

வியுங் காலத்துக் காவலில்லை யென்பது.

கட்டிய வாயுக் கலந்த பொருளுறவு
விட்டுடலம் விவானகா லந்து—ளொட்டிய
மோகத்தால் வாய்விட்டு மொய்த்தமுவ தன்றியே
ஆகந்தா ஞர்சரனே ஆங்கு. 99

(இ - ள்.) ஈயாமையறிந்து வேண்டினுங் காவாமை யறிந்து சரண்புகுந்தாலும் அழிவாவதல்லது ஆக்கமுண்டோ வென்றவாறு.

கேட்டையும் சாவையும் காக்க வல்லார் இலரென்பது.

அவனிமே லிச்சை அறிவடக்க மாண்மை
புவனத் தரன்முதலாப் போகம்—இவன்மிக்கார்
உள்ளாரி லென்பா னுயிரை முதலாகக்
கொள்ளானே காலன் கொதித்து. 100

(இ-ள்.) கர்மம்வந் தடர்த்தக்காற் கேட்டையுங் காலன்வந் தடர்த்தக்காற் சாவையுங் காக்கவல்லவரு முளரோ நீயு மித்தன்மை யறியாயோ ஜீவனே யென்றவாறு. அன்றியும்,

அருகனன்றிக் காப்பாரிலை யென்பது.

மாற்றுக்கான் மோக மயக்க மருந்திட்டுக்
கூற்றென்னுங் கள்ளர் கொடுங்கொலையுள்—ஏற்றி
யலக்கண் ணுறும்போ தருகனரு ணல்லால்
விலக்கிக்காப் பாருளரோ வேறு. 101

(இ-ள்.) நடுக்கானத்துள்ளே யெத்தனிட்டு மயக்கேசெய்யு மருந்து மேல் கொண்டாலும் ஸம்சாரத்தினடுவே மோகந்தொடர்ந்தாலும் காப்புஞ் சரணு மருகனடியல்லது பிறிதாவதுண்டோ வென்றவாறு. அன்றியும்.

மந்திரமும் மருந்தும் எமனைத் தடுக்கா எனல்.

மந்திரமு மாண்ட மணிகளு மாமருந்துந்
தந்திரமுந் தான்காக்குந் தன்மையவோ—வெந்தீக்குப்
புன்பயிரைச் சூழ்போம் புதுவேலி போற்காவல்
துன்பமது காக்குமோ சொல்லு. 102

(இ-ள்.) பசுப் புகாமலுக்குக் காக்குந் தன்மைய வாகிய வேலி எரிமுகத்து நில்லாவாறு போல்

வேதநீய கர்ம்மங்களுக்கு பரிகாரஞ் செய்யும் மந்திர தந்திரங்கள் யமராஜனைக் காக்கவல்லவோ? காக்கு மென்னு மாசையினாற் செய்யப்பட்ட உபாயங்களும் அபாயங்களானமை காணலாகாதோ வென்றவாறு.

தர்மமே காக்க வல்லதெனல்.

தேய்ந்திறந்து சென்றடைந்த சோமனைச் சூரியனும்
ஆய்ந்துறுதி யாவிறைக்க லாற்றானே—போந்த
பொறைவண்ணம் போக்கினன் பூமிமேன் மக்கள்
நிறைவண்ணங் காப்பாரார் நேர்ந்து. 103

(இ-ள்.) அமாவாஸ்யையின்கண் சந்திரன் தேய்ந்து தேய்வில்லாத ஆதித்தியனைச் சார்தலும் அவனுவமனை ஸம்பூர்ண மாக்கமாட்டாத வண்ணத் தவ்வுருனிவே போக்கினனென்றால் காப்பாரும் சரணுவாரும் தர்ம்மமல்லது மற்றில்லை யென்றவாறு.

சம்சாரத்தால் வருந்துன்பத்திற் கழிவில்லை யெனல்.

காவ லெலைந்துலகத் துள்ளக் கலந்தியல்வால்
ஓவுத லின்றியே உட்செறிபோல்—மேவிநீ
மெய்யின்மேன் மோகம் விடாதாக்க மேதகநீ
செய்யின்மற் றுண்டாகிற் செப்பு. 104

(இ-ள்.) குளிரால் வாதைப்பட்டவன் நெருப் பருகிருந்தும் குளிர்காலும், மனையினது துன்பம் நீக்கி இன்பமெய்தத் துறந்தரிஷியும் அவன் மனை வாழ்க்கை விடானுகிலும், அவனுக்குக் குளிரால் வரும் பாதையும் இவனுக்கு ஸம்சாரத்தால்வரும் துன்பக்கேடும் இல்லை யென்றவாறு.

க்ஷமையின்றேல் பயன் கெடும்.

மலையை மிகவெருவி மாவிரதங் கொண்டு
பிணையு மகிழ்கின்ற பேதாய்—நினையுங்கால்
துன்ப விடங்கான்று தூவயிர்த முண்டதனைத்
துன்பமெனக் கால்வரோ சொல்லு. 105

(இ-ள்.) பகைவரை யழித்து யுத்தபூமியின்கண் நின்றபொழுது நிற்கமாட்டா தாண்மை யிழந்து அச்சங் கொண்டாற்போலப் பன்னாட்டவஞ் செய்து பின்னாட் க்ஷமையின்றிப் பன்னாட்செய்த பயன் கெடுத்தல் நிறையக் கலம்பெய்த கலமுடைந்தாற் போலு மென்றவாறு.

தோஷந்தொடரும் வினை செய்யவேண்டா மெனல்.

உயிரன்ன வில்லாளை யோர்குற்றங் கண்டாற்
செயிராதே தாந்துறப்பர் தக்கார்—செயிரைத்
துறந்தாய்நின் தோடங்கள் காவாயேல் மேவா
திறந்தாரைக் காப்பாரா ரீங்கு. 106

(இ-ள்.) தோஷ ஸஹிதனுயிருந்த கிருகஸ்தனும் கண்ணிமைக்கும் பொழுது தானும் விடமாட்டா தவ்வின்பமுடைய தன் மனையாளைத் தோஷங்கண் டாற் களையாதிருப்பானே உடம்பினே டொன்றி நிழற்போனற்போலத் தோஷந்தொடரும் பரிணாமத் தால் பாவம் தொடரும் வினைசெய்ய வேண்டா மென்றவாறு.

தூய்திணக்கம் தூய்தாகு மெனல்.

தீயினாக்கந் தீய பயத்தலாற் றீதொரீஇத்
தூயினாக்கந் தூய்தாகுந் தொல்லொழுக்கால்—மேய
புனத்தின்வாழ் மான்புகுந் தூர்வாழ்த லுண்டோ
இனத்தினுற் றுன்பாகும் ஈண்டு. 107

(இ - ள்.) கிருஹஸ்தாசிரமத்திருந்துங் குணங் காப்பாரென்றால், குஹாஸ்ரமத்திருந்தும் குணங் காவாத் தபஸ்வியிலும் கிருஹஸ்தனே நல்லனென்றவாறு. அன்றியும்,

தவத்திற்குப் பாசம் கேடு செய்யுமெனல்

திசையாடை யாப்புணர்ந்து தீதில் குணமே
வசையில் ஒழுக்கே மனைவி—இசைவான
வின்பநீர் மூழ்கா திடும்பைக் குடும்பென்னுந்
துன்பந்துட் டங்குவதோ சொல்லு. 108

(இ - ள்.) திரவியங்கொண் டொருவனே கள்ளர் பதிப் புக்கினலும் தவங்கொண்டொருவன் மோஹ பாசத்திருந்தாலு மிருவர்கேட்டுக்கும் ஐயுறவில்லை யென்றவாறு. அன்றியும்,

மேற்கதிக்கு வித்து இன்னதென்பது

என்னுயிரே மன்னுயிர்க ளென்னு மெழினலத்தால்
உன்னி யொழுக்கியல்வா ரொன்முனிவர்—மன்னுயிர்மேல்
நாறுடைய நாற்றுவரை மாற்றுதியேல் வாய்ந்தபுகழ்
வீறுடைய மேற்கதிக்கோர் வித்து. 109

(இ - ள்.) பகைவனுக் கஞ்சி மதின்மறை கொண்டிருந்தானுக்கு உட்பகை யுண்டானலும், பாபத்துக்கஞ்சித் தவமென்னுங் கோட்டை புக்கிருந்தானுக்கும் உட்பகையென்னுங் கஷாயம் பிறந்தாலும் அவனுக்குப் பிழைக்குமுபாயமும் இவனுக்கு ஸுகதியுமாகாமையறிந்து தவமும் பெறற்கரியதும் பெற்றும் இப்பவத்து மன்னவனுக் காசைப்பட்டு நிகழவேண்டா மென்றவாறு.

க்ஷமையில்லாததினியல்பு

பலகால மோதித் தவஞ்செய்து பாங்காற்
சிலகால மன்னனுக்கே யாசை—பலனுண்பான்
வித்திட்டுங் காய்த்துப் பழமுண்ணுன் பூவுண்ணும்
பித்தனைப்போ லாவதோ பேசு. 110

(இ-ள்.) வித்திட்டுப் பலமுண்பான் முளைத்தெழுந்து பூத்துக்காய்த்துப் பழமாமளவுந் தரியாதே பூவைக்கிள்ளித் தின்ருன் போலவும் நிறையக்கறந்த கலசத்தை யுடையவுதைத்த ஆவைப் போலவும் பன்னாட்டவஞ் செய்து சின்னாட்க்ஷமையின்றி மன்னனுக் காசைப்படுவது முன்பிற்ருன தவஞ் செய்து கர்மங்களைக் கெடுத்தார் மூதுரைசாற்றவும் அறியாதிகழ்வதோ பவ்வியஜீவனே என்றவாறு. அன்றியும்,

அருகன்பாதமே காவல்எனல்

காலன் றனைக்காக்குங் காதல் வலியுடையார்
ஞாலத்து ளாருளரோ நாடுங்கால்—மேலோந்து
வல்லை வினைதீர்க்கும் வாம னடியல்லாற்
புல்லுமா றுண்டோநான் புக்கு. 111

(இ-ள்.) காலன் வந்தடர்த்தக்காற் சாவுக்கும் கர்மம் வந்தடர்த்தக் காற் கேட்டுக்கு மாராலுஞ் சரணுமு மரணுமுமில்லை; அருகத்பரமேஸ்வரன் திவ்விய ஸ்ரீபாதகமலங்களே சரணமென்றவாறு. அன்றியும்,

இதுவுமது

நீர்நெருப்புத் தானரனே நீள்குன்றந் தானரனே
ஒரி லுறுகால னுற்றபோ—தாருஞ்
சரணின்மை சாற்றினேன் தக்க இறையே
அரணுவ தென்றடைநீ ஆய்ந்து. 112

(இ - ள்.) சமுத்திரமும் வடவா முகாக்கினியும், மஹாமேரு பர்வதங்கள் முதலாகிய கிரிதுர்க்கங்களும், ஜலதுர்க்கங்களு மென்று சொல்லப்பட்டவை எல்லாங் காலன் வந்தடைந்தக்காற் காக்கவல்லவோ வென்றவாறு.

தருமமே சரணெனல்

வயிரவுறை பஞ்சரமும் வான்குகையு மாற்றம்
பெயர்வில் பெருங்காப்பும் பேணி—உயர்நிலைய
தெய்வங்கள் மந்திரமுந் தேய்வில் மருந்துகளும்
உய்வகைகாப் பாகுமோ உற்று. 113

(இ - ள்.) வச்சிரத்தா லியற்றப்பட்ட பஞ்சரங்களும், மஹாகுகைகளும், சர்வரக்ஷைகளும், மஹாதேவதைகளும், மந்திரங்களும், ஹோமங்களும், நாநாப் பிரகாரங்களுஞ்செய்யவும் சரணுமரணுமின்றி இறந்தான் கதையைக் கேட்டாகிலும் சரணின்மை நிச்சயித்து தர்மமே சரணமென்று பாவிப்பதுகாண் பவ்ய ஜீவனே யென்றவாறு.

முண்டகௌசிகன் கதை

தீப மிதனகத்து வேழ்நாட்டுத் தென்பரதப்
பூமி வசுதா புரநகரம்—மேவியசீர்
வேதப் பதியான் விளங்குமுண்ட கௌசிகனும்
ஓதிய பேர்விளவில் உற்று. 114

(இ -ள்.) நாவலந்தீவில் பரதக்ஷேத்திரத்து, தர்ம்மகண்டத்துள், வஸுதாரை யென்னும் நகரத்து வேதபாரகன் ப்ராமணன் முண்டகௌசிகனென்பான்; இவன் ப்ராமணி மனோரமை யென்பாளிவர்களுக்கு தன தான்ய தாஸீ தாஸன் கோ

மகிஷாதிகளாலும், பந்துவர்க்கங்களாலும் ஸம்ருத்தராய் இஷ்டவிஷய காமபோகங்களை யனுபவித்துச் செல்லாநின்ற காலத்து புத்திரரில்லாமையில் மனக்கேதமாய் யாதுசொல்லி யாதுசெயதாரோ வெனின்,

இந்தப்பிறப் பிங்ஙனே போமோ இனிதமாந்த
சந்த வழிநமக்குந் தானுண்டோ —வந்த
விதிவகையாற் புத்திரன்செய் வேள்விக்கூ றில்லேற்
கதிவகையுண் டாமோ கலந்து. 115

(இ - ள்.) புத்திரரில்லாமையில் மனக்கேதமாகி நமக்கிந்த ஜன்மம் வெறிதே கழிவதோ. சந்ததியில்லையானாற் பித்துருகாரியம் செய்வாரில்லையதனால் புத்திரமுகம் நோக்காவிடில் கதியில்லையென்று தேவதைகளுக்கு வரங்கிடந்தாகிலும் புத்திரசம்பத்துண்டாக வேண்டுமென்று அங்நகரின் புறம்பே க்ரஹவா ஸினியென்னும் தேவதையை பிரார்த்தித்து வரங்கிடந்து புத்திரனைப்பெற்று புத்திரமுகங்கண்டு சந்தோஷத்தினால் மகனைவளர்த்து வேதசாஸ்திரங்களும் அப்பியாசம் செய்வித்து ஷோடசவருஷம் நிறைந்தபின்னை விவாகஞ்செய்ய மகட்பேசி பெண்ணுடன்படுத்தி பந்துக்களை யெல்லாம் வருவித்து நாளைமுகூர்த்த மென் றிருத்தலும் யாது நிகழ்ந்ததோ வெனின்.

அந்நகரின் முன்னொருநாள் வாதழிந்தா னுங்கவனைத்
துன்னி நகரந் துரந்தகற்றப்—பின்னை
நகரத்தார் மேற்சீறுவாய் நாள்புக் குலர்ந்து
புகரிற் பிறப்பறிந்தான் போந்து. 116

(இ-ள்.) அந்நகரத்தின் கண்ணே முன்னொரு நாள் ஒரு பரிவ்ராஜகன் வாதிகளுக்கு பத்ரா வலம்பனம்பண்ணி அவனுடனே அஜித னென்னும் ராஜா ஜைனவாதம்பண்ணி ஜயித்தது கண்டு நகரத்தா ரெல்லாரும் இழித்துரைத்துத் துரத்த அவர்கள் மேல்வைத்த ரௌத்திர தியானத் தால் மரித்து ராக்ஷஸனாய்ப் பிறந்து பஹுவிஹாரம் போய் வருவான் வஸுதாரை யென்னும் நகரத் தாரைக்கண்டு முன்னம் செய்த அபராத ஸ்மரணை யாகி ரௌத்திர தியானத்தால் அந்நகரத்தாரை யெல்லாம் கோபத்தினாலே கொல்லவர அந் நகரத்தார் ராக்ஷஸனை நமஸ்கரித்து க்ஷமைகொண்டு பிரார்த்திக்கவும், அவனுமவர்களுக்குச் சொல்லு வான்: எல்லாரையும் ஒருங்கே கொல்லவேண்டு மென்று வந்தேன்; உங்களுக்காக க்ஷமித்தேன்; திவஸந்தோறும் ஒருவனைக் கொல்லத்தருவீராமி னென்று சொல்ல நகரத்தார் நமஸ்கரித்து வரு டத்துக் கொருவனைத் தருகிறோங் கொள்ளென்று பிரார்த்திப்ப ராக்ஷஸனு முடன்பட்டு அன்று முத லாக வருடத்துக்கொருவனை தாமேகொடுத்துச் செல்லாநின்ற நாளகத்து முண்டகௌசிக னென்னும் பிராமணனுக்கு முறைவர அவன் மனைக்கே வந்து வாரியன் உங்களுக்கு இவ்வருடம் முறைவந்ததென்றுரைத்த அளவில் துக்கிதராய் யாங்கனமியப்பினரோ வெனின்.

மனைவாழ் வினைக் கெடுந்நான் மற்றெனக்குச் செல்லா
நனையற் கொடுத்தாற் றரியேன்—நினையில்
வழிநிற்கு நின்மகனை நீவதுவை செய்தாற்
கொழிவிந்நி யான்போவ னுற்று. 117

(இ - ள்.) காலம்பலவும் சென்றபின் புத்திர முகம்காணுவிடிற் கதியுமதியு மில்லையென்று வரங் கிடந்து பெற்ற ஒருமகனையுங் கொடுத்தால் எங்கனே வாழ்வதென்று பின்னும் பிராமணி யாது சொன்னாள்.

ஆளற் கொடுக்கில்வாழ் வில்லை யதுவன்றி
மாள மகற்கொடுக்கில் வான்பழியாம்—நாளுநான்
பெண்பிறவி பேதுறவு நீங்குமால் யான்போவன்
மண்பொறைவாழ் வென்னுக்கோ மற்று. 118

(இ - ள்.) இருவரையும் பிரிவாற்றேன் ஒருவரைக் கொடுத்துப் பழி சுமந்திருத்தல் யோக்கியமன்று; யானே போவனென்று பிராமணி யுரைத்தலும் மகன் யாதுசொன்னான்.

இருவரு நும்மிற் பிரியா திருந்தாற்
பெருமகனைப் பின்னும் பெறலாம்—மருவு
துயர்நீங்க யான்போவன் றுன்புறவு மாற்றி
அயர்வின்றி வாழ்மி னறிந்து. 119

(இ - ள்.) என்றிப்பரிசினால் புத்திரனுரைப்பக் கேட்டு சிந்தாக்கிராந்தராகித் தம்முள்ளே யெண்ணி தெய்வத்தைப் பிரார்த்தித்துப் பெற்றோ மாதலிலந்த தெய்வந்தானே காக்குமென்று மகனைக் கொண்டு போய் தேவஸ்தான மெய்தி நமஸ்கரித்து நீ

தந்த புத்திரனை நாளை ராக்ஷஸன் வதைசெய்ய வருகிறான்; எங்களாற் காக்கவொண்ணாது; நீயே ரக்ஷித்துக்கொள்ளென்று அதின் பக்கலிலே விட்டுப்போந்து பிராமணன் பந்துக்களெல்லாரையு மழைத்து அவர்களறியச்சொல்லி நான் படைத்த பொருளெல்லா மிற்றைக்கன்றோ வென்று நினைந்து எனக்கு ஸஹாயராவரெல்லாரும் உபத்திரவ நாசமும் ஆயுர்வர்த்தனையுமாக ஹோமம் செய்யவேண்டு மென்று குணவந்தரையும் வித்யாவந்தரையும், கூட்டாநிற்குமளவில் பிடாரி எவ்வகை யாயினளோ வெனின்.

எனையிரக்க யானீந்த புத்திரனை மற்றோர்
வினையரக்கன் வேண்டினு னகில்—முனையிற்
செருவாக்குஞ் சூலந்தாற் சேர்ந்தவனை வெல்வன்
உருவாக்கும் போதினு லிற்று. 120

(இ-ள்.) தேவதை தன் மனோபலத்தாற் பொங்கியெழுந்து மலையினடிவாரத்துப் பெரியதோர் குகையினுள்ளே அவனைப் புகவைத்து பிலத்தின் வாயைப் பெரிய சிலையிட்டடைத்து ராக்ஷஸனோடு யுத்தஞ் செய்யப்போயிற்று. இப்பால் பிராமணனும் பலரையுங் கூட்டிக் கொண்டுவந்து மகனிருந்த பிலத்திற் புறம்பே சூழவுமிருந்து ஹோமந்தொடங்கி ஆயுஷ்யவர்த்தனையாகவும் சாந்தியர்த்த மாகவும் விக்னவினாசமாகவும் யமநியம ப்ராணாயாம விதிமார்க் கத்தால் மந்திரஜபமும் நவக்ரஹ சாந்தியும் பண்ணி யிருந்தார்; இருந்தபொழுது யாங்கனமாயிற்றோ வெனின்.

அற்றைநா ளவ்வகையே தாந்தா மறிந்தவகை
சுற்று நிறைந்திருந்து துன்பகலும்—பெற்றியால்
ஆயுவே சாந்த மவைபெருகு மாறெண்ணி
ஏயவே செய்தார்க ளீண்டு. 121

(இ - ள்.) இப்பரிசினால் ஆயுஷ்யவர்த்தனையும் விக்னவிநாசமுமாகிய ஹோமக்கிரியை செய்திருந்தார்; இப்பால் தேவதை விகுர்வணு மாயாபலத்தோடு கூடி ராக்ஷஸனோடு யுத்தம்செய்து ஒருபகலெல்லையுள் வெற்றிகொள்ள ராக்ஷஸனும் பிரஸன்னனாகி உனக்காக இன்று தொடங்கி கொலைதவிர்ந்தேனென்று போக மற்றைநாள் மஹாகோரத்தோடும் பிடாரி பிராமணன் சமூகத்தையெய்தி குகையைத்திறந்து உன்மகனைக் கண்டுகொள்க வென்றலும் பிராம்மணனும் மஹா சந்தோஷத்தோடும் குகையினுள்ளே புகுமளவில்யாதுநிகழ்ந்ததோ வெனின்.

மலைக்குகையுள் வாழ்வதோர் மாநாக மற்றப்
பிலத்திடைப் பெய்தவனைக் கண்டு—தலைப்பெய்து
வாயால் விழுங்கியே வால்குழைந்து முற்சடிந்துத்
தீயா விழிந்ததே சென்று. 122

(இ - ள்) குகையினுள்ளே வாழ்வதோர் மஹா நாகம் க்ஷுதையினால் ஆஹாரந் தேடிவருகின்ற இவனைக்கண்டு விழுங்கி மூற்சடித்து வால்குழைத்துக் கிடந்ததனைக்கண்டு பிராம்மணன் பயப்பட்டுப் புறம்போந்து தெய்வமே புலிக்கஞ்சி புற்றேறுதலு மதிற் கிடந்த பாம்புகடித்து மரித்தானென்னுங் கதையாயிற்று ; ராக்ஷஸனுக்கஞ்சி உனக்கபயம்புக்கு காவலோடிருந்த வென்மகனைப் பெரும்பாம்பு விழுங்கிற்

றென்று வாய்விட்டலறத்தேவதையும் (நியதி ஹி கேஙலங்கியதே) அபமிருத்திய வினையாவற்கும் தவிர்க்க வாரா தென்று போயிற்றென்றவாறு. அன்றியும்,

மரணந்தான் வந்தக்கால் மற்றென்று வாழுஞ்
சரணந்தா னுண்டாமோ சாற்றின்—முரணும்
வினைகெடுக்கும் வீர னடியல்லால் மற்றோர்
நினைவுசா னுண்டோ நினக்கு. 123

(இ-ள்) மரமேறிக் கைவிட்டால் நிலமே சரணுற்போல மனுஷ்யகதியிற் பிறந்தார்க்கு தர்மமே சரணல்லது பிறிதுண்டோ? மருந்துகளும், மந்திரங்களும், உக்கிர தேவதைகளும் காக்கவல்லவோ காலன் வந்தடர்த்தபோ தென்றவாறு. அன்றியும்,

ஒங்கு மலையரனே வூனக் குடலரனே
வீங்கு திரைவேலை தானரனே—ஒங்கியவன்
காடரண மாகுமோ காமர் பிலமரனே
நீடரணஞ் சொல்லாய் நினக்கு. 124

(இ-ள்) யாதொன்றினுலும் யாவராலும் சரணு மரணு மில்லாமையறிந்து மெய்மறவா திருப்பதுகாண் ஜீவனே யென்றவாறு.

ஸகலவிமல கேவலஜ்ஞான பகவத் அருகத் பரமேஸ்வரன்
முகோத்கதமாகிய துவாதசானுப்ரேக்ஷையுள்
சிரேணிக மஹாராஜன் கேட்ப, கணதர
சுவாமிக ளருளிச் செய்த
இரண்டாவது
அஸரண மென்னு மதிகாரம்
ஸமாப்தம்.

3-வது அத்தியாயம்

ஏகத்வானு ப்ரேக்ஷை

இன்னதுரைத்து மெனல்

1 வினையரசை வென்றுயர்ந்த வீரியன் பொற்பாதம்
அனவரத மேற்றியே யன்பி—வினையுங்காற்
றன்மையைத் தானென்னுந் தாவி லதிகாரம்
பன்னுவனு னுண்மையினைப் பார்த்து. 125

(இ - ள்) *கர்மராஜனை வென்று அனந்தவீரிய முடையனாகிய அருகதப்பரமேசுவரன் ஸ்ரீபாதகமலங்களை நமஸ்கரித்து ஏகத்வமென்னு மதிகாரத்தை விளம்பலுற்றேன் என்றவாறு,*

2 நரகர் விலங்கு நரர்சுரராய்த் தோன்றிப்
பெருக விடர்செய் பிறப்பின்—மருவுங்
கருமுதலாச் சம்மூர்ச்சுப பாதந் தன்னி
லொருவன் யா னென்பதனை யுற்று. 126

(இ - ள்) *கற்ப உபபாத சம்மூர்ச்சனை யென்னு முப்பிறப்பினுள் யானொருவனுமேயே எனக்குச் சகாயரில்லை யென்று ஏகத்வம் பாவிப்பது என்றவாறன்றியும்,*

3 கருப்பெருகித் தோன்றியே காற்றெட்டிற் றாங்கி
யுருப்பெற்றங் கூர்ந்து நடையோங்கிப்—பெருக்குற்
றிளமைமூப் பீண்டு மிடும்பை மரணத்
தொருவனே யென்பதனை யோர். 127

(இ - ள்.) *சுக்ல சோணித மூலமாகிய பிரதம திங்களில் புரசம்போல வுள்ளாடி இரண்டாந் திங்*

களில் நீர்மொக்குள் போன்று மூன்றாந் திங்களில் கன நவநீதமாகி நாலாந் திங்களில் சதுரஸ்ரமாகி ஐந்தாம் திங்களில் ஆமைபோல கையுங்காலுந் தலையும்புறப்பட்டு ஆறாந்திங்களில் நாபிமுதல்பிர தானங்கம் எட்டுமாகி ஏழாந்திங்களில் முப்பத்திரண்டு சிறு உறுப்பும் உகிரும் உரோமம்மெய்தப்புறப்பட்டு எட்டாந்திங்களில் காலுங்கையும் நிலைபெயர்த்தாடி ஒன்பதாந் திங்களில் மாதாவுந்தானும் அதிக்லேசப் பட்டு அரிதாக நீர்வாய்ச் சுரமிறங்கிப் போந்து தொட்டிலில் கிடந்தபொழுதும் நடையிட்டபொழுதும் பாலனாயோடித்திரியும் பொழுதும் இளமை நிறைந்த பொழுதும் இடும்பை குடும்பத்திடைப்பட்ட பொழுதும் மூப்புக்கொண்டு நான்றுவுழைத்தும் மரணமாம் பொழுதும் இச்சொல்லப்பட்ட பரியா யத்தினுள்ளும் யானொருவனே யென்று ஏகத்வம் பாவிப்பது காண் பவ்வியஜீவனே யென்றவா றன்றியும். அன்றியும்,

4 அச்ச மடைபொழுது மான்மை நிறைபொழுதும்
இச்சை குணந்தா லிருவினையும்—நச்சற
நீக்கு மிடத்தினு நீயொருவ னன்றியே
ஆக்குந் துணையுண்டோ வாங்கு. 128

(இ - ள்.) உள்ளா னென்னும் பக்ஷியானது இராத்திரி நித்திரை கொள்ளும்பொழுது வானம் விழுமாகிலும் மறியவுதைத்துப் போவேனென்று உதைக்க மல்லாந்து கிடந்தாற்போல உன்கர்மத்தை யளவறியாதே நிகழ்ந்தால் மிருத்யுராஜன் உனக்கு அஞ்சுமோ? வென்றவாறன்றியும்,

5 எனக்கென்றே யென்னுடைமை யானுள் ளவும்
நினைத்திருப்ப நின்னையர்க ளுன்னை—வினைப்பகைதூழ்
கூற்றுவந் துன்னைக் கொல் பொழுது நீயன்றி
ஆற்றுந் துணையுண்டோ வாங்கு. 129

(இ-ள்.) தன்னை வதை செய்யவந்த கூற்றத்தையும் பொருள்கொள்ள வந்த கள்ளரையும் நம்பினல் அவனுக்குப் பிராணஹானியும், இவனுக்குப் பொருள் கேடும் ஆவதன்றி யாவர் துணையாவரோ? தான்செய்த தர்ம்மமே தனக்குத் துணை யாவதென்றவா றன்றியும்,

6 சிறிதிடமே யாயினுஞ் சேர்ந்து வழி போனு
லுறு தீமை நன்மையுடனுய்ப்பர்—உறுநீர்மை
உண்டெனெ வாழ்ந்த வுடன் மடவார் புத்திரருங்
கண்டு துணை யாவரோ காட்டு. 130

(இ-ள்.) சிறிதிடங்கூடி வழிபோன அன்னியர்கள் தமக்குறுதீமை நன்மை வந்த பொழுதுடனே யனுபவிப்பர்; நீயுறுதி பண்ணுகின்ற வுன்னுடைய வுடம்பும் புத்ரமித்ர களத்ராதியும் நீயுள்ளளவும் உன்னுடைமை யனுபவித்துச் சாவுகேட்டுக்குத் துணையாகவல்லரோ, எனக்கு யானே துணையென்று ஏகத்துவம்பாவிப்பது காண் ஜீவனே என்றவாறு அன்றியும்,

7 யானெருவ னெல்லாத் திறந்து மிருவினைகள்
தானெருவர் காக்குந் தகைமையதோ—யானே
கெடுப்பேனு மாக்கினு மல்லாது மற்றுந்
தடுக்குந் துணையுண்டோ தான். 131

(இ - ள்.) களமேறிக்காதுவானைக் காணவந்தார்களெல்லாந் துணையாமோ காது மிடத்துத் தானொருவனுமே யென்றோர்ந்தாற் போல நீயும் உன் கர்மங்களைக் கெடுக்குமிடத்தும், அனந்தசுக மெய்து மிடத்தும் நானொருவனே யென்று ஏகத்துவம் பாவிப்பது காண் பவ்வியஜீவனே யென்றவாறன்றியும்.

8 இருதொடர்ப்பாட் டின்றியே யேக விகாரத்
தொருவினைக்கு முள்ளமோ டாதே—மருவி
இருவினையு மன்றி யிறந்த நாளன்றி
அருவினையின் பாருமோ வாங்கு. 132

(இ - ள்.) நிர்மல சுத்தச் சாரித்திரத்தின் கண்தானொருவனே யேகவிகாரியாய் நிகழ்தலே யேகபோக ராச்சியத்திற்குச் சமானமென்று பாவித்து நிகழ்தலும் நிவ்ருத்திபரிணாமமே காரியசித்தியைச் செய்வதென்று நிகழ்தலும் அசுபகர்மம்புகுதாமையடைத்து முன்னின்ற கர்மங்களைக் கெடுத்து சுகதியை யெய்தலாமென்று சிந்தைசெய்து, மரணம் வந்தெய்தின விடத்து சர்வசங்க பரித்தியாகஞ் செய்யப் பெற்றேனென்று பாவிக்க இம்மையிலே சுகமாக்கும் : மறுமைக்குச் சொல்ல வேண்டுமோ ? என்று ஏகத்வம் பாவிப்பதென்றவாறன்றியும்.

9 மனந் தெளிந் தாரிய மாண்பினு னன்மை
நயந்தெரிந்து நற்குணங்கள் வித்தி—புனந்தவிர்ந்த
பொன்றுத பைங்கூழ் விளைக்குநற் பூமிபோல்
நன்றாய நற்குணமே நன்னு. 133

(இ-ள்.) ஆரம்பஞ் செய்வான் மரமும் புல்லு மிருவகைகளையுங் களைந்து மண்முழுதுஞ் செவ்வியறிந்து வித்தானுகிலும் மனதிடத்துராகத்வேஷ மிரண்டுங் களைந்து செவ்விய யொழுக்கத்தைக் கடைப்பிடித்தொழுகானுகிலும். அவனுக்கு ஆரம்பத்தின் பலமும் இவனுக்கு நற்கதியும் ஆகாதென்பதனை பாவிப்பது காண் பவ்விய ஜீவனே யென்றவாறு. அன்றியும்,

10 குணமுடையார்க் காத்துக் குணமில்லார்ப் போக்குங்
குணமுடைய கோவேந்தர் போலக்—குணமுடைய
நல்லொழுக்கந் தன்னை நனிவிரும்பி நன்மையிலாப்
புல்லொழுக்கம் போக்கல் பொருள். 134

(இ-ள்.) துஷ்டநிக்ரகமும் சிஷ்டபரிபாலனமும் இல்லாமை இராச்சியம் செய்வானும்; தோஷசகிதமும், குணசகிதமும் அறிந்து நிகழானுகிலும் அவனுக்கு இராச்சியத்தாலாய பவமும், இவனுக்கு அறத்தாலாயபயனுமெய்தாதென்றவாறன்றியும்.

11 திருவுருவு வாழ்நாள் திறலறிவு திட்பம்
பெருகு புகழறத்தாம் பேசின்—மருவாத
கேடு பிணிபச்சங் கேத மிவை யெல்லாம்
பாடு பெரும் பாவத்தாற் பற்று. 135

(இ-ள்.) ஸ்ரீயும் விபவமுங் கண்டாலும் கட்டுண்டு கடுந்துயர்ப்படுகின்ற கள்வரைக் கண்டாலும் அது சுக்ருத பலமென்றும் இதுபாபபல, மென்றும் நிச்சயிப்பதென்றவா றன்றியும்.

12 அறஞ்செய் பொருள்கேடு மன்பாய நோன்பி
விறைந்த வுடன்மெலிவு நீத்துச்—சிறந்தநற்
பஞ்சபத முள்ளியே பாங்கா லிறப்புமிவை
துஞ்சலிலா மூன்றுந் துணை. 136

(இ-ள்.) தன்வஸ்துவை தானதர்ம பரோபகாரமாக அளித்து வறிஞரான வறுமையுங், கர்மங்கெடநோற்று மெலிந்த மெய்யின்மெலிவும் சன்னியாசஞ்செய்து பஞ்சநமஸ்காரத்தோடு மரித்த மரணமுமிவை, ஏதமும், வறுமையும், மெலிவும், மரணமும் அல்ல என்றவாறன்றியும்,

13 எம்பகைஞ ரெம்புலனே யென்றதனை யித்தனைநாள்
துன்பந் தொழுதிக் களைவித்த—வென்பதனை
எண்ணின்றி யித்துயர மெய்திறு யென்பதனை
நண்ணிநீ கொள்வாய் நயந்து, 137

(இ-ள்.) பிரமாதியாகிப் பகைவரைப்பெருக்கும் பேதையைப்போல, அஜ்ஞானியாகிப் பாபம் பெருக்கினலென்னே பலம்? காலங்கூடினபொழுதே பகைஞரைக்களையானகிலும் அறிவுபெற்ற பொழுதே நிறைவினல் அறத்தைக் கைக் கொள்ளானகிலும், இருவருந்தமக்குக் கேடுவேண்டின ரென்றவாறு: அன்றியும்,

14 ஆரம்பிரு மூன்றும் யாத்திரைக ளோசிரண்டு
தூரம்போய்த் துன்பத்தாற் ருக்குழலும்—பாரந்தான்
புண்ணியமொன் றின்றிப் பொருள் படைக்கலாகுமோ
எண்ணி யெனக்குரைப்பா யீங்கு. 138

(இ-ள்.) உழவுத் தொழில் வரைவு வாணிகம் வித்தியா சில்பங்களென்னும் ஷட் கர்மங்களாலும்

ஜலயாத்திரை தரை யாத்திரையால் திசை வாணிபம் போனாலும் புண்ணியமில்லாக் காலம் உமிகுற்றி அரிசி கொள்பவன் போலவும், நீரைக் கடைந்து வெண்ணெய் கொள்வான் போலவும், மண்ணை யெத்தனை நீராட்டிக் கழிவினாலுங் கழுவக்கழுவ அத்தனையும் மண்ணானாற்போலவும், மோகத்தால் எத்தனை பிரயாசைப்பட்டாலும் அத்தனையத்தனை துக்கம் பெருகுமென்பதனை நிச்சயித்துப் புண்ணியத்தாலல்லது பொருளு மின்பமுமாகா தென்னும் பாவனையைத் தனக்குத்தானே பாவிப்பதுகாண் பவ்ய ஜீவனே என்றவாறு. அன்றியும்,

15 உன்னுயிர்ப் பாலேயு முன்போக் கிருக்கைதனை
உன்னிக்கொ ளென்றுரைப்ப வுள்ளாதே—யென்னுரையை
யென்றேநீ கைக்கொள்ளா யேழை யறிவுயிரே
உன்றேவைக் கண்டுரைந்தே னுற்று. 139

(இ - ள்.) உச்வாஸ நிச்வாசங்கள் கமனாகமனங்களையும் ஜாதி ஜராமரணங்களையுமறிவிப்பவும் மெய்யின்மேலே மோகமும் அபிலாஷையு மென்னுக்கோ ? தன் கருமமிருக்கப் பிறர்கருமஞ் செய்யாதே யுனக் குறுதி யோர்ந்துகொள் என்றவாறு அன்றியும்,

16 பரிசை தொடர்ப்பாடு பற்றறுத்துப் பான்மை
பெருகு தவ முயல்வே பேணி—மருவுதுயர்க்
காதி வினையரசைக் கட்டறுக்கை கைவலமாங்
கோதில்சுக மெய்துதலே கூடு. 140

(இ - ள்.) ஆயுதம் பயில்வானும், புத்திர மித்திர களத்திராதிகளை விட்டுப் போனாற்போல பவ்விய

ஜீவனே நீ கர்மங் கெடுத்து மோக்ஷத்தை எய்தக் கடவ நீயும் பாஹ்யாப்யந்தர பரிக்கிரகங்களேத் துறந்து தவம்புகுவது அவனுக்காயுதம்பயிலவேண்டி தேசாந்தரம் புக்காற்போல நீயுந் திசைகளென்னும் ஆடையுடுப்பது. அவன் ஆயுதஜ்ஞாநி சூத்திரத்து நிகழ்ந்தாற்போல நீயும் தீக்ஷைகைக்கொண்டு ஆசார்யனுடைய ஸமாசாரத்து நிகழ்வது. பின்னேயும் அவன் தன் ஆசார்யனே விட்டுத் தான் ஏகவிகாரியாய் பயில்கின்ற விஜ்ஞானம் மறவாதே பாவித்துச் சென்று பின்னும் பயில்வாருக்கு உபகரித்து, பின் தனக்குப் பிரதியானுனேடு எதிர்க்குமாறு போலநீயும் ஏகவிகாரியாய் பாவித்துப் பின்னே தர்மச்ரவணமும் பண்ணி தீக்ஷிப்பாரையும் தீக்ஷிப்பித்து, தர்மபிரபாவனஞ் செய்து, அவன் தனக்கு பிரதிகாரமானுரோடு படுகளம் புக்காற்போல நீயும் உனக்குப் பிரதியாயுள்ள கர்மத்தை விஞசஞ் செய்யும் சந்நியாசம் வகித்துக்கொண்டு (கிரி ககன குகைகளுக்குள்ளே புகுவது அவனேடே காதிவெற்றி கொண்டார்போல நீயும் நின்பகை யாகிய கர்மங்களே எரிந்து ஒழித்து முக்தி வீரங்கொண்ட அனந்தவின்பமெய்துவது என்றவாறு. அன்றியும்,

17 பிறவியு ளின்பம் பெரிதெனினுந் துன்பே
அறவாற்றி யாய்ந்தொழுகி யானுத்—துறவாற்றி
மாறிலா நோன்பின் வருந்துன்ப மாற்றிநீ
ஈறிலா வின்பமே யெய்து. 141

(இ - ள்.) பிணிகொண்டான் மருந்து கைப் பென்று ஔஷதங் குடியா விட்டாலும் மக்கட்

பிறப்புவந்த பவ்விய ஜீவனும் மகா விருதங்களைக் கொண்டு முக்கால தப பரீஷகங்களுக்கு அஞ்சி னுலும், அவனுக்கு வியாதிகேடும், இவனுக்கு கர்ம கேடு மில்லை யென்றவாறு. அன்றியும்.

18 மலைமுறை யில்லம் மலமா பரணங்
கலைசுகங் காசினியே மெந்தை—நிலையுடைய
மாதவமே செல்வம் வினை கெடுத்தல் வான்கருமம்
ஏதமில் இம் மனைவாழ் வேது. 142

(இ-ள்.) ஊறுபட்டானை வேது கொண்டுண மருந்திட்டன ஞேவை நோவென்று கருதினுலுங் தவஞ்செய்வான் காய க்லேசத்திற்கும் இந்திரிய நிக் ரகத்திற்கு மஞ்சினுலும் வினைபயன் கொள்வான் அருமை பெருமையாயுள்ள ஆரம்பஞ் செய்கைக் கஞ்சினுலும் அவனுக்குப் புண்தீர்வும் இவனுக்கு சுகதியும், மற்றவனுக்கு வாழ்வுமில்லை யென்றவாறு, அன்றியும்,

19 உயிர்ப்புத்துன் பின்றியே யுற்பவியா துள்ளே
உயிர்ப்படங்கி னுன்மரண முண்டாஞ்—செயிர்ப் பிறப்பில்
இன்பாத லெங்ஙனே *செப்பிக்கா ணிவ்வுடலே
அன்பாத லாருயிரே யாய்ந்து. 143

(இ-ள்.) உயிர்ப்புஞ் சுகமென்பா யாகில் அவ் வுயிர்ப்புத் துன்பத்தினுலன்றிப் புறப்படாது; உயிர்ப்பு அடங்கினுல் மரணமாகும்; அதனுல் மெய் யினுலே வண்ணத்தாலுஞ் சுகமில்லை யென்றறி வுடையார் சாற்றவும் மெய்மறந்திருப்பதோ பவ்ய ஜீவனே யென்றவாறு. அன்றியும்

* செவ்விகாணென்றும் பாடம்.

20 வெப்பந்நீர் நட்ப மெனவழலின் வெப்பத்தைந்
நட்பமென் றந்நிழலைத் தான்மருவ—லொப்பமெய்
ஐம்பொறியின் வெப்பத்தை யைம்புலந்தா னின்பமென
நம்புவதோ நாடுங்கால் நன்கு. 144

(இ - ள்.) சம்சார ஸ்திதியில் இந்திரிய சுகம் எவ்வாறெனின் உஷ்ணத்திற்கஞ்சி, உஷ்ணத்தின் நிழலை மறைபுக்காற்போல வேதனீய கர்மோதயத்தை, வேதனீயகர்மோதயத்தால் ஆற்றவற்றோ ? அதனை இன்பமென கருதுதல் நெருப்பினுடைய உஷ்ணத்திற் கஞ்சி நெருப்பினிழல் மறைபுக்கால் போலே காண் ஜீவனே யென்றவாறு. அன்றியும்.

21 கதியாதல் மீளாமை காருணியந் தன்மம்
மதியாதல் தீவினைசெய் யாமை—பதியாகும்
இன்ப மெனப்படுவ தீறிலா வின்பமே
துன்பமே மற்றெல்லாந் நோக்கு. 145

(இ - ள்.) கதியாவது மீளாதகதி. தர்மமாவது எல்லா ஜீவன்களுக்கும் பிரமாதம் வாராது ஓம்பலே காருண்யம். ஞானமாவது தீவினைசெய்யாமை. இன்பமெனப்படுவது அந்தமில்லாத வின்பம். அஃதெவ்வகைத்தோ வெனின் அதிதாநாகத வர்த்தமானமென்னும் முக்காலத்துள்ளுமாகிய நரேந்திர சுரேந்திர சுகமெல்லா மொன்றானலும் சித்தர் ஒரு சமய காலத்து சுகத்தை அனந்தங் கூறிட்ட வொரு கூற்றையும் அதனையு மொப்பிட்டு நோக்குங்கால் அஃதெல்லாமொருபனித் திவலையும் இது ஒருகடல் போலுமதுகாண். அனந்தசுகமாவது. அதனையேயிச்சிப்பது கேடும் அழிவு மீறும் அல்பமுமாகிய சுகத்தைச் சுகமென்றிருக்க வேண்டா மென்றவாறு.

22 ஐந்து புலனடக்கி ஆறிரண்டு மாதவத்தால்
வந்ததுவ ரீரெண்டு நான் மாற்றி—புந்தியாற்
பல்லுயிர்க ளோம்பிப் பரம னடிவணங்கி
நல்லநெறி மேவலே நன்கு 146

(இ - ள்) நிகர்ஷனச் சேதன தாபன தாடன மென்னும் சதுர்வித பரீக்ஷைக்கு சுவர்ண முத்தம மானாற்போல நற்காட்சி நன்ஞான நற்சாரித்திரத்திற்கு உவந்த பவ்விய ஜீவனு முத்தமமா மென்றவாறு.

23 அறிந்துநீ மும்மையினே டைவதமுந் தாங்கிச்
செறிந்தவிரு நால்வினையுஞ் செற்று—நிறைந்தபுகழ்
மூவுலகு மேத்த முதல்வனு யின்பத்தை
மேவும் வகைவிரும்பாய் மிக்கு. 147

(இ - ள்.) வியாபாரம் செய்வான் பலாபலாந் தரும்பண்டம் கைக்கொள்ளானுகிலும் பவ்விய ஜீவனும் சுகதி யெய்தக் கடவானுயிருந்து அவன் மகாவிரகங்களைக் கைக்கொண்டு அழியாமல் காவானுகிலும் அவனுக்கு இந்தபவத்தில் இலாபமும் இவனுக்கு மறுபவத்தில் சுகமும் ஆகா தென்பதனை அறிவதுகாண் ஜீவனே என்றவாறு. அன்றியும்.

24 சிறுவிரதம் மாவிரதஞ் சேர்ந்த குணத்தாற்
கறுவாதி நாற்றுவருங் காற்றி—யிறுகாலத்
தந்துவமே பாவித்துத் தான் விருத்தி செய்வாரேல்
*உத்தமர்க ளென்றேநீ ஓது. 148

---

* உத்தமரே யென்னற் பா லார் என்றும் பாடம்.

(இ-ள்.) அணுவிரதியாகிலும், தபம் பூண்டவராகிலும், க்ஷுருவாதி நாலு கஷாயங்களையும் நிக்கிரகித்து, வைராக்கிய பரனாகி விரத சீலகுணசம்பன்னராய்க் கடைக்காலத்து சன்னியாசம் செய்து சுப பரிணாமத்தாலே நற்காட்சி நன்ஞான நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து முடித்தார் உத்தமரென்று சொல்லப்படுவாரென்றவாறு.

25 பாலிரும் போலப் பரந்து கிடந்துடனே
நாளிர்மை யாமுடலந் தாங்காதே—மேனிர்மைத்
துன்பந்தா னிங்கித் தொடர்ந்தழிந்து மன்னுவால்
துன்பின்புக் கார்துணையாஞ் சொல்லு. 149

(இ-ள்.) க்ஷீரோதகம் போல கலந்துடனே சுகதுக்கம் அனுபவித்த சரீரம் நீ போம்பொழுது உனக்குச் சகாயம் ஆகாதென்றால் மற்றுனக்கு புத்திர மித்திர களத்திராதிகள் துணையாவரோ? பவ்விய ஜீவனே என்றவாறன்றியும்,

26 என்னுரை கைக்கொண் டிகழாதே கேட்டியேல்
பன்னி யுலப்பிலாப் பல்துன்பந்—துன்னத்
துணையாது மின்றியே துன்புற்றான் காதை
அணையாகிக் கேளா யமர்ந்து. 150

(இ-ள்.) தாய்தந்தை சுற்றத்தாரும் சதுரங்க பலமும் உண்டாயிருக்கவே வராங்கனென்னும் மகாமண்டலேசுவரன் முன் செய் பாபோதயத்தால் ஒருவனுமே அகன்று போந்து நாநாபிரகாரமாகிய இடுக்கணெய்திய விடத்தும், ஏகத்வம் பாவித்து கடைக்காலந் தீக்ஷை கைக்கொண்டு சுகதியெய்தினனென்னுங் கதையைக் கேட்டாகிலும்

ஏகத்வம் பாவிப்பது காண் பவ்விய ஜீவனே யென்ற வாறு.

வராங்கன் கதை

27 நாவலந் தீவதனுள் நற்பரத கண்டத்து
மேவு புகழினல் வீறெய்தி—யோவாதே
முத்துமணி பொன்போகம் வேண்டினர்க்கு மொண்டளிக்கும்
உத்தமமா மாநகரொன் றுண்டு. 151

(இ - ள்.) ஜம்பூத்வீபத்து பரதக்ஷேத்திரத்து தர்மகண்டத்து உத்தமபுராநகரம் ஆள்வான் தர்ம சேன மகாவேந்தனென்பான். அவ்வேந்தன், மகா மண்டலேஸ்வரன்; அவன்பட்ட மகாதேவி குணவதி யென்பாள்; இவளோடு இஷ்டவிஷய காமபோகங் களை யனுபவித்துச் செல்லா நின்றகாலத்து ஆங்க வர்க்கு உற்பவித்தான் வராங்கனென்பான்; அவன் எவ்வகை ஆயினனோ வெனின்,

28 கல்வி வனப்பிளமை காமரு நற்காட்சி
செல்வம் நிறைவு திறலாண்மை—யொல்காத
மல்லுலவு திண்டோள் வராங்கனல்லால் மாநிலத்துச்
*சொல்லுங்கால் யாருளரோ தொக்கு. 152

(இ - ள்.) உருவுந் திருவு மறிவுமடக்கமும் ஆண் மையுஞ் சூட்சியும் பிரதாபமும் வாய்மையும் நற் காட்சியு முடையனாகிச் செல்லா நின்ற காலத்து சுற்றத்தாரும் பரிவாரமும் வராங்கனைக் கொண் டாடக் கண்டு, தர்மசேனமகாராசன் இளைய தேவி யினுடைய புதல்வன் சுஷேண னென்பான் இவன்,

---

*சொல்லுவகை என்றும் பாடம்.

தனையனாகிய வராங்கன்பாதிராச்சியம் நிற்குமெனக் கருதி மற்றதற்குப் பொறாமையெய்தித் தானுந் தன் மாதாவும் ஆலோசித்து வராங்கனுடைய பிரதான வமைச்சனை உடன்பாடுகொண்டு வராங்கனுக்கு அபாயம் சாதிப்பான் வேண்டி உபாயத்தால் இரண்டு ஜாதி அச்வமறியைக் கொண்டு அவற்றை எவ்வகை பயிற்றினரோ வெனின்.

29 மாவிரண்டி லொன்றதனை மார்க்கவிப ரீதமாம்
மாவொன்றை நற்குணத்தால் நன்மார்க்கம்—மேவியே
இவ்வகை தாமியற்றி யேற்ற கலனணிந்தார்
*கவ்வைசெயு மாறெண்ணிக் காய்ந்து. 153

(இ - ள்.) அச்வமிரண்டினுள் ஒன்றை மகா விபரீதமாகப் பயிற்றி ஒன்றை இராஜவாகனமாக பயிற்றி அவற்றுக்கு ஏற்ற கலனணிந்து மற்ற வற்றை அவ்வமைச்சனோடு கொண்டு சென்று அவ் வராங்கனுக்குக் காண்பிக்க, அவனுமவற்றைக் காண்டலும் ஆனந்த மெய்தி ஆங்கவர்க்குச் சிறப்புச் செய்து ஈங்கு அவற்றின் கெதிகாண்டுமென்று ஏகுங் கால் எவ்வகையோ வெனின்.

30 ஆனை குதிரைதே ரார்பொலிந்த காற்படையின்
சேனை புடைசூழச் சென்றடைந்தான்—வானவர்கள்
கொண்டாடுங் கோமானு மென்றுரைப்பக் கோய்யுனைமாச்
சென்டாடும் பூமிக்கே சேர்ந்து. 154

(இ - ள்.) இப்பரிசினால் சங்குகுறிப்ப சாமரைவீச மாமழைக்கண்ணியர் மருங்குசூழப் பஞ்சமகாவாத்

---

*கௌவ்வை யெயும்- என்றும் பாடம்.

நியம் எஞ்சலின்றி யியம்ப பண்ணொலி வாழ்த்தொலி பரந்த கோடனையோடும் வண்டொலி பைந்தார் மா முடிமன்னர் செண்டனை வாளிச் செழுநில மெய் தலும் மாக்களிரண்டும் சென்றெய்தின. அவ்வா றெய்தலும் செண்டுவெளியில் மகா ஸாமந்தரும் தண்டநாயகரும், சேனுபதிகளும் பரிவாரமும் இராஜாக்களும் ஸ்ரேஷ்டிகளும் சூழாநிற்ப தானும் இராஜபரிச்சின்னம்புடைசூழநின்ருன். நிற்றலும் அதிகாரி மாக்களிரண்டையும் கொண்டு சென்று காட்ட அவ்வராங்கனும் அவைகண்டு ஆனந்தமெய்தி அதிகாரியை நீயொரு குதிரை ஏறென்றலும் சுசீல சிக்ஷையாகிய அச்வமேறி எவ்வகை நடிப்பித்தானே எனின்.

31 சாரிகைதா னீரொன்ப தானதகை பிழைபாய்
பூரித மாநிலத்துப் போந்ததே—சாரி
வலம்புரிந்து வாளி புரிதலுமே மன்னர்
நலம்புகழ்ந்து தாமுரைத்தார் நன்கு. 155

(இ-ள்.) கெதியும், சாரிகையும், குதம்செய் தலும், மார்க்கமும், எழுச்சியும் நோக்கி யாவரும் புகழ்தலும், அதிகாரி உரைப்பான்: இதன் அள வன்று, மற்றைக் குதிரை என்றுரைப்ப வராங்கன் அதனை ஏறிக் காண்பனென்று விபரீத சிக்ஷயி னின்ற குதிரையை ஏறி முன்னம் மேல் வடிவிற் பிரிவிப்பன் என்று வாளத்தை வலித்துப் பிடிப் பினும் வாஜி! காற்றென கடிதின் ஓடலும் அஹோ, அஹோ வென எத்தனை எத்தனை வலித்து பிடிப் பினும் அத்தனை அத்தனை கடுக வோடிச் செண்டு

வெளியாற் புறப்பட்டு நகரத்தைக் கடந்து யாவருந் தொடர வொண்ணாத காற்றெனும்படி நாற்றுக்காத மோடி, இமபயங்கரமாகிய மகாவிந்த மென்னும் அடவி புக்க விடத்து கோடும் முள்ளுந்துடக்கி ஆபரணங்களும் பறிந்து அற்று வீழவோடி கொடி செடி சூழ் ஓர்பழந்துரவில் வீழ அப்பரிமா மறித்துப் போக தான் அருகே படர்ந்து கிடந்ததொரு கொடியைப் பற்றி வெளியேறிச் சுற்றும் பார்த்து ஒரு மரத்தடியின் கீழ் புக்கிருந்து யாங்ஙனஞ் சிந்தித்தானோ வெனின்,

32 அந்த நகரு மரசு பரிசனமும்
இந்து வதனந் திளையாருஞ்—சிந்தும்வகை
வஞ்சனமா வாகியது வாவியிடை விழ்ந்ததே
துஞ்சுவகை சூழ்ந்தவரார் நொக்கு. 156

(இ-ள்.) எவ்விடத்தும் இன்ப துன்பங்களுறும் பொழுது ஜீவன்றானே அனுபவிக்கு மென ஆன்றோர் மொழிபழுது வாராது என்றெழுந்து வழி தேடித் திரிவானைப் புலி சீறித் தொடர்ந்து வரக் கண்டு ஆங்கொரு விருக்ஷாக்கிரத்தேறி யிருப்ப புலியும் அவன் மீது பாய மாட்டாது அம்மரத்தடி யிருப்ப எவ்வகையாயிற்றோ வெனின்,

33 பொய்கை வியன்கமலப் போதொடுங்கப் புள்ளினங்கள்
பையக் குடம்பை பயின்றடைய—வையம்
இடறடைந்தாற் போல விருட்பரப்ப வெய்யோன்
குடகடலில் வீழ்ந்தான் குறித்து. 157

(இ-ள்.) அருக்கனும் அஸ்தமனபர்வதஞ் சார்ந்தான்; வராங்கனும் நித்திரையால் வீழாவண்ணம்

அம்மரத்தின்மீது படர்ந்ததொரு கொடியைப் பறித்து மரத்தோடுதன்னை யார்த்து அவ்விரு ளெல்லாம் இன்பதுன்பங்களை ஜீவன்தானே அனுப விக்குமென ஓர்ந்து, ஏகத்வம் பாவித்திருந்தான். இருத்தலும் யாது நிகழ்ந்ததோ வெனின்.

34 தூங்கிருளைப் போகத் துரந்து துயிலியற்கண்
நீங்க மரைமலர்க ளின்றலரப்—பாங்குடைய
ஆலையங்கள் பல்லியங்க ளார்ப்ப அலர்கதிரோன்
வேலையின்கண் வந்துதித்தான் மீண்டு. 158

(இ-ள்.) அருக்கனுதயஞ் செய்யுமளவில் மஹா விந்தியத்தில் வாழ்வதொரு மதஞ்செறிந்தகளிறு அங்கு வரக்கண்டு அவ்வராகனதற்குக் குரல் கொடுக்குமளவில் அது ஓடிவந்து வராங்களை யெய்த மாட்டாது நின்றதுகண்டு வராங்கன் மேல் நின்ற கோபத்தினுல் அப்புலியானது அக்களிற்றின் மீது பாய்தலுமது யாது செய்ததோ வெனின்.

35 உழுவையைத்தன் றின்கையாற் பற்றிக்கொன் றொல்லை
வழியின்றி யேவதித்து நீக்கிப்—பொழிமதமா
நீங்குதலு மாமரத்தி னின்றிழிந்தான் அன்றலர்தா
ரோங்குவரை மார்ப னுவந்து. 159

(இ-ள்.) மதஅஸ்திதன்மேல் பாய்ந்த உழுவை யைக் கொன்று ஏகலும் வராங்கன் அம்மரத்தினின் றிழிந்து சிறிது தூரம் சென்றவிடத்து க்ஷுதைபு நீர் வேட்கையு முதயமாகத் திசைகளை நோக்கிச் செல்லாநிற்ப மற்றெவ்வகை யாயிற்றோ வெனின்.

36 புள்ளின் குரல்விரவிப் பூந்தென்றல் சென்றசைப்பக்
கள்ளவிழும் மாமலரின் கந்தந்தால்—மெள்ளவே
வண்டினங்கள் சேரும் வளப்பொய்கை மாட்டணைந்தான்
தண்டணைநின் றோளினான் றான். 160

(இ - ள்.) வனமத்தியக் குளிர்சேர் அலைகளாகிற கரத்தால் அழைப்பன போல் விளங்காநின்ற மலர் செறி வளப்பொய்கையைக் காண்டலும் ஸந்துஷ்டனாகி பாதசுத்தி செய்து பிறகு சுபவிரதனாய்த் தாமரை பத்திரத்தால் நீர் முகந்து பானஞ் செய்தலும் முதலை பாதத்தைக் கவ்வி இழுக்குங்காலுபசர்க்கம் சகியாது எவ்வகை சிந்தித்தானோ வெனின்.

37 அக்கிணற்றில் விழ்ந்தப் புலிவாய்ப் பிழைத்துப்போந்
திக்குளத்தி லிம்முதலை வாய்ப்பட்டேன்—மிக்கிங்
காணாவ தெல்லா மறநேமி நாதன்
சரணார விந்தமே தான். 161

(இ - ள்.) இப்பரிசினால் நேமி பட்டாரகருடைய ஸ்ரீபாதகமலங்களை ஸ்மரணை செய்து நமஸ்கார முறையாநிற்கும் எல்லையுள் யக்ஷிதேவதைக்கு ஆஸனங்கம்பித்தலும் அவனுந்தானும் ஸத்தர்மிகாளாதலால், அவதிஞான முதித்தலும், சிந்தித்த பொழுதே வந்துபசர்க்கந் தீர்த்து முதலையை விடுத்தலும் அவ்வராங்கன் திட்டையேறி யிதுவுமென் புண்ணியோதயமெனச் சிந்தித்து ஏகுங்கால் யக்ஷிதேவதை, இவன் சுசீலனா அல்லவா என்று சோதிப்போமெனக் கருதி யாங்ஙனந் தோன்றினாளோ வெனின்.

38 கொங்கை திருந்திக் குழறிருந்திக் கூர்ங்கணைபோற்
செங்கயற் கண்பிறழச் செம்மாந்து—பங்கயத்தில்
நன்னுதலா ளென்ன நயந்தெதிரே தோன்றினள்
மின்னுவடி வேலான்முன் மீட்டு. 162

(இ - ள்.) நவயௌவன ரூபம்வாய்ந்த வராங்கன் முன் தோன்றிக் கூறுவாள் பூமிபாலனென்னும் வேந்தனுக்குப் புதல்வியாகிய என்னை மற்றொரு இராஜகுமாரனுக்கு விவாகஞ் செய்வான் வேண்டிப் போகா நிற்ப இடையே வேடுவர்பாய்ந்து சூறை கொள்ள எமர் படுவாறும் ஓடுவாருமாயினர். யான் ஒருவாற்றாற் பிழைத்துப் போந்து வழிகாணாது திகைக்கும் தறுவாயில் என் புண்ணியத்தால் உன்னைக் கண்டேன். நீ கொண்டுபோய் இரக்ஷிப் பாயாக எனப் பலவுங் கூறி என்னைக் கொண்டுபோ வென்றாள் எனக் கேட்டலும் அவ்வராங்கன் யாது கூறினனோ வெனின்.

39 குலப்பெண்ணேல் தந்தைதாய் முன்கொடுக்கிற் கொள்வேன்
விலைப்பெண்ணேல் மற்றவரை மேவேன்—நலந்நக்க
என்வத முங்குன்றே னின்டநட போவென்றான்
மன்மதனே ரொப்பான் மதிந்து. 163

(இ - ள்.) என்றிவ்வாறு கூறி உடன்படா தொழியப் பின்னும் அவள் கூறுவாள் எனக்கு ஒரு வரும் சகாயரில்லை; ஆதலால் உன்பால் எழுந்த மோகத்தினாலும் உன்னைவிட்டுப் பிரியின் மரணமே, சரணென்று காமபரவசத்தளாய் தசமாவஸ்தை யெய்திப் பிராணவியோகம் காட்டவும் அவ் வராங்கன் புகலுவான்; நீ மரணமானால் பிராண

னென்றே கெடுவது ; யான் விரதமழிக்கின் புருஷா காரமும், சம்மியக்தவமும், குலனும், நலனும், கெதியும், நல்லொழுக்கமும் கெடுமென்று, முகங் கொடா தொழியக்கண்டு அத்தேவதையும் ஸந்துஷ்டளாய்த் தன் திவ்வியரூபம் கொண்டு மகா புருஷாவுனக்கும் எனக்கும் குருவுந் தெய்வமும் அறமும் ஒன்றே யாதலால் உனக்கு வந்துற்ற உபஸர்க்கத்தைப் போக்கினேன் ; பின்னை யுன்னுடைய சீலவிரதம் முதலான ஒழுக்கத்தை ஆய்வோமெனத்தோன்றியான் கூறின தீய மொழிகள் அனைத்தும் பொறுக்கக்கடவ எனக்கூறி அவ்வராங்கனுக்கு விருந்து செய்வித்து மறைந்தனள். இப்பால், அவ்வராங்கனும் சிறிது தூரம் ஏகினபின் பசி தீவிரத்தை நீக்கவேண்டிக் கனிவர்க்கங்களை அருந்தப் பின்பு நீர்வேட்கை எழுந்தமையால் நீர் நிறை தடாகம் குறுகி அவ்வேட்கையை நீக்கிக் குளிர் தென்றல்வீசும் மரத்தடியில் அயர்ச்சி நீங்கிச் சிறிது நேரம் துயின்று பின்பு விழித்தவுடன் நெறி அறிந்து ஏகுங்கால் யாது நிகழ்ந்ததோ வெனின்.

40 செங்கட் கருமேனி வெண்பற் சினவேடர்
புங்கப் பகழிகளா லப்புனத்துந்—தங்கும்
மிருகமெலாங் கொல்வார் விரைந்தார்த்து வந்தார்
பருவமுகில் போலப் பரந்து. 164

(இ - ள்.) வேட்டை போந்து திரிகின்ற விறல் வேடர் ஒல்லென்று அவ்வனத்து மார்க்கமெல்லாந் தேடி வருகின்றார்கள், அங்ஙனம் வராங்கனைக் கண்டு யாது செய்தாரோ வெனின்,

41 எங்கும் விருகந்தொடர்ந் தெய்யு மினவேடர்
துங்க வரைபுரைநின் டோளானை—யங்கனே
கண்டுவந்து பற்றித்தங் காவலர்க்குக் காட்டுவான்
கொண்டுவந்து போனார் குறித்து.

(இ - ள்.) அவ்வேட்டுவர் அவ்வராங்கனை கண்டு பற்றினர் என, நாம்நாடிவந்த பொருள்சித்தியாய் விட்டது எனக் கருதி நம்மரசனுக்குக் காட்டுவோமென்று, கொண்டுபோகாநிற்ப, அவ்வராங்கனும் சிந்திப்பான் ; நாம் முன்புசெய்த தீவினை இன்னுஞ் சில வுள, உணர்ந்துகடன் கொண்டார் கொடுத்தாற் போல முன்புசெய்த தீவினை பின்பு வந்தனுபவி யாமை தவிர்வனவல்ல என, பலவாகச் சிந்தித்துச் செல்ல, அவ்வேடரும் தம்மிடங் குறுகி, அவ்வேட்டரசனுக்கு வராங்கனை காட்டலும், இவன் உறுப்பினிற் குறைவற்றிருந்தானென வுணர்ந்து இவனை சதுர்த்தசி நாளன்று பிடாரிக்குப் பலி கொடுத்தும் காத்துவைமின் எனக் கூறலும், மற்றவர்களும் கொடுபோய் சல்லியங் கட்டுப் பசுமை தோல் மூடிற்றோர் புழுக்குரம்பைக்குள் புகவைத்து சுற்றுங் காவல் கொண்டிருந்தார், அவ்விடம், கிருமிகளும் மேல்சொரியப் பொன்னிற வீப்புக்கு மொய்ப்ப, அங்ஙனம் அழுக்குமூத்தையு மெழுந்து துர்க்கந்தம் வீச அவ்வாறு வீசலும் இது நரகவகையிலொன்று எனக் கருதி, ஆற்றொணாத் துக்கக்கடலில் புக்கழுந்தி சகியாது யாதுசிந்தித்தானோ வெனின்,

42 உற்றதுயர் தீர்நா ளுரைப்பி லவந்தமால்
இற்றைத் துயரமீங் கென்னுளது—மற்றென்று
தேறினன் றேறிந்நன் றின்மையாற் செய்வினைகள்
ஊறுவதே யென்று ணெருங்கு. 166

(இ - ள்.) என்றிப் பரிசினல் வினைத்தவிடத்து ஆத்மா வொருவனே; இன்பதுன்பங்கட்கு சகாயராயுடனனுபவிப்பாரில்லை என உணர்ந்து ஏகத்வம் பாவித்திருத்தலும், அப்பொழுது சென்றலும் புலாபுன் வேடற் கரசன் மகன் புலரியிலே வேட்டை போயினனை நச்சரவு தீண்டிற்றென என்று மரண மடைந்தானை கொண்டுவந்து அவன்றாதைமுன்னிடக் கண்டு சகியாதமனத்தனாய் இதனை தீர்க்க வல்லாருளரோ? எனக்கூறலும் அவ்வராங்கன் யான்தீர்ப்பேன் என்றலும், சிறையின் நின்று விடுத்து வராங்கன் அவனைக் கண்டு ஸ்நாநாதி அனுஷ்டானங்கள் அனைத்தும் முடித்துப் பின்பு நமோர்ஹதே எனத்தீண்டலும் நிர்விஷமாய் அவனெழுந்திருத்தலும் அது கண்டு அவ்வேட்டரசனும் ஸந்துஷ்டனாக அவ்வராங்கனுக்கு யாது செய்தானோ எனின்?

43 விடந்தீர்ந்து மைந்தனெழ (வுண்மகிழ்ந்து) வேடரரசன்
குடங்கைநிறை பொன்கொடுப்பக் கொள்ளான்—தடம்பொழில்சூழ்
நன்னாட்டுக் கியான்போக நன்னெறிகாட் டென்றுரைத்தான்
மின்னாட்டும் பூணன் விரைந்து. 167

(இ - ள்.) என்றிப் பரிசுரைப்பக் கேட்டு அவ் வேட்டரசன் குடங்கை நிறைபொன் கொடுப்பவும் வேண்டா என்றலும் இவன் பெரிதும் விழுமியன் என்று உணர்ந்து நெறியறிவான் ஒருவனை இம்



(JINA KANCHI)

Swasthi Sri LAKSHMISENA PATTARAGA

Pattacharya Varya Swamigal of Mel Chithamoor

JAIN MUTT, TINDIVANAM.

மன்னனுக்கு நெறிகாட்டென்று நியமிக்க அவனோடு வராங்கன் சிறிதிடஞ்சென்று தன்னாட்டின்திசை செல்லாது இலளிதபுரத்திற்குப் புக்கநெறி காட்டென்றலும் அவ்வேடனு மொருநெறி காட்டி, விறலோய் இனியேகென்று அவன் திரும்பினான். அந் நெறியே முன் போல் தனியே செல்லாநிற்ப, அருக்கனும் அஸ்தமிக்க அவ்விடத்தேயுறைந்து வைகறையே யெழுந்திருந்து மார்க்கத்தோடு ஏகுங்கால் சாத்து விட்டுக்கிடந்தது கண்டு அதிப்ரிதனாகிப் போகாநிற்ப அங்ஙனம் யாது நிகழ்ந்ததோ வெனின்,

44 புறக்காவல் பூண்டார் புரவலனைப் பற்றி
முறுக்காரும் முட்டிகளாற் குத்தி—யுறுக்கார்
மலைவனப்பாந் தோட்பிணித்து மற்றிவனேற் றென்னுந்
தலைவனுக்கே காட்டினர் தாம். 168

(இ-ள்.) என்றிப் பரிசினாற்பற்றி ஒருவர்க்கொருவர் நட்புக்கூறிக் கொண்டு ஸாகரவிருத்தி என்னும் ஸார்த்தாதிபதிக்குக் காட்டலும், தன்னருகேயிருத்தி இவன் கேவலபுருடனல்லன் என நினைந்து நீர் எங்கு நின்றும் வருகின்றீர், எங்கு போகின்றீர்? என்று வினவ, கூறுவான், யான் ஒருதேசசஞ்சாரி என விடைபகர்ந்து, இலளித புரத்தைக் குறித்து ஏகுங்கால், நெறிகாணாது திகைத்து இங்ஙனம் வர நேர்ந்தது. யானும் உங்களோடுறைந்து போவேனென்றலும், இவன் தக்கான் ஒருவனென மதித்து, கைக்கொண்டிருப்ப, ஆங்கவன் சிறப்பும், அறிவும், வீரியமும், வாய்மையும், கருணையும் நோக்கி, சாத்தவரெல்லாம் நட்புமொழி கூறிக் குதூகலமெய்திச் சில திவஸம் கடந்தபின் யாது நிகழ்ந்ததோ வெனின்.

45 காட்டகத்து வாழ்வார்கள் காளமகா காளரேனும்
வேட்டரசர் வீரர் வெருண்டெழுந்து—வீட்டதனைச்
சுற்றினார் வித்தங் கொளவெண்ணிச் சாத்தவர்மேன்
மற்றவரு மேற்றார் மலைந்து. 169

(இ - ள்.) என்றிப்பரிசினாற் காளமகாகாளரென்னும் வேட்டரசர் சூறைக்கொள்ளவேண்டிச் சுற்றும் பற்றுதலும், மற்றவரும் மாறெழுந்து பொரா நின்ற பொழுது, சாற்றுவரால் படை நில்லாது வேட்டரசர் ஆர்த்துச் சுற்றும் புக்குச் சாத்தெல்லாஞ் சூறை கொள்ளக் கண்டு, வராங்கன் யாது செய்தான்? எனின்,

46 கோளரியே றென்னக் கோதித்தெழுந்து கூர்வயிர
வாளுருவி வாளின் மழைவிலக்கித்—தாளிரிய
ஓடினா ருய்ந்தோட வோடா தெதிர்ந்தாரைச்
சாடினா னெம்மருங்குஞ் சாய்ந்து. 170

(இ - ள்.) சுற்றுமுற்றுஞ் சூழ்ந்து கொண்ட வெற்றிவேடர் விடுகணைகளை தன்னிலங்குவாளால் எதிர்வாராமை விலக்கி நின்று வாள்விதிர்த்து வேடர்க் கெல்லாம் கூற்றம் என, கேடகந் தன்னிடஞ் சுழலக் கிளரொளிவாள் வலம் சுழலச் சுற்றும் முடிவற்ற கானகத்தைச் சுடுகனலெழுந்து எரித்தாற்போல மற்றவ்வேடரைத் துணித்துத் திரிகின்ற அவ்வராங் கனோடு, காளனென்னும் கான வேடன், கதிர்வாளி மழைபொழிந்து தோள்வலியால் தாக்கினானைத் துணித்து இருபிரிவாய் வீழவெறிந்து, மீட்டெதிர்ப்பா ரொருவரின்றி வராங்கனென்னும் மன்னர்மன்னன் சிம்மநாதஞ் செய்யக்கண்டு, மகாகாளனென்னும்

விறல் வேடன் மிக்க சினத்தனுய் வந்தேனென வீரங்கூறி யாது பட்டானே வெனின்,

47 என்னுயிர்போற் றம்பியைக்கொன் றெங்கே யினிப்போவ
துன்னுயிரைக் கூற்ற முவந்துண்ண—*மின்னொளிசேர்
வெவ்வாளி யால்வீழ்ப்ப னென்றெதிர்ந்த மிக்கோனை
அவ்வாளி னூற்றுணித்தா னங்கு. 171

(இ - ள்.) இவ்வகையால் வேட்டரசரிருவரும் பட, வேடரெல்லாம் இரிந்தோடிக்கானகத்தே புக்கொளிப்பக் கதிர்வாளை யுறைசெறித்து வீரியத்தினல் விளங்கி நின்ற அவ்வராங்க னென்னும் வாள் வேந்தனை சாகரவிருத்தி யென்னும் சிரேஷ்டி சென்று கண்ணுற்றியாது கூறினனே வெனின் ?

48 நன்னுந் துயரும் பகையும் நடுக்கமும்போய்ப்
பென்னும் பொருளுமெலாம் பெற்றதுநான்—என்னுங்கால்
என்மகனே நின்னுலே யென்றுரைத்துப் புல்லினன்
மன்மதனே ரன்னுன்முன் வந்து. 172

(இ - ள்.) அர்த்தமும் அணியிழையாரையும் என்னையுளும் நின்னல் பெற்றேன், நீர் எனக்கு பிரதம புத்திரனு மித்திரனு மென்று பெரிதுங்கொண்டாடி மற்றவனேடும் வந்து, சாத்தெய்தித் தன் மாந்தரில் நொந்தாரை இரட்சித்து மரண மெய்தினேரை ஸம்ஸ்கரிப்பித்துப் பிற்றைநாள் சாத்தெடுத்துத் தக்கவகையாற் போந்து இலளித புரம்புக்கு இருந்த பின்னை, அவ்வராங்கனது மகிமைநோக்கி அப்புரத்து வைசியரெல்லாம் குழுமிவந்து எம்மைஎல்லாம் இரட்சித்து சிரேஷ்டிப் பட்டங்கட்டுவ ! எனலும், புன்

*இன்னுயிர்க்கு என்பது பாடம்.

மூறுவன் முகத்தனுகிப் புனைதார் மார்பனும் உடன் பட்டு சிரேஷ்டி பட்டந்திருந்தக் கட்டி இனிது அங்கு யிருந்தான். அவ்வாறிருக்க இப்பால் உத்தமபுரத்து தர்மசேனமகாராஜன், தன்புதல்வனுகிய வராங்க னுக்கு இரங்கி யாது கூறினனே எனின்,

49 புரந்தரரோ விஞ்சையரோ பொய்க்குதிரை யாப்வந்
தரந்தைபட வென்மகனை யப்பாற்—கரந்தவர்கள்
யாரென் றறிந்துவர வொற்றுவிட் டாங்கிருந்தான்
சீரொன்றுந் தாரான் தெரிந்து. 173

(இ-ள்.) வராங்கனைக் கொண்டோடிய துஷ் டாஸ்வம் சென்றதிசை யறிந்து வம்மினென்று ஒற்று விட, மற்றவர்களும் சுவடொற்றும்படி சென்று அவ் வராங்கன்ஆபரணம் விழுந்து கிடந்தமைகண்டு அந் நெறியே சென்று அடவியிடை ஓர் பண்டு கூபத்து வீழ்ந்திறந்த அவ்வசுவத்தைக் கண்டு துன்புற்ற வராய் மீண்டு விரைவில் வந்து அத்தர்மசேனமகா ராஜனுக்கு அறிவிப்ப, ஆங்கவனும் வராங்கனது மரணங்கேட்டலும் எத்தன்மையாயினனே வெனின்.

50 மாண்டா னெனக்கேட்டு மன்னவனுந் தேவியருங்
காண்டலகைய செவ்விக் கடிநகரு—மீண்டிக்
கடற்கவிழ்ந்த தன்மை கலம்போல யாரும்
இடர்க் கடலுள் விழ்ந்தா ரிரைந்து. 174

(இ-ள்.) இப்பரிசினல் யாவரும் ஈண்டித் துக்க மெய்த அவ்வராங்கன் தேவிமாரெல்லாம் தர்மசேன மகாவேந்தன்பாதத்து விழுந்து எங்களனைவர்க்குந் தீக்ஷை தருக என, விம்மியழ, அவ்வேந்தனுமிக்க துன்புற்றவனய் அவ்வராங்கன் மனைவிமாரனை

வரையும் தன்குருக்களாகிய, வரதத்தபோதனர் பாத கமலங்களை நமஸ்கரிப்பித்து, பின், நடந்த வரலாற்றை அறிவித்திருப்ப, அங்ஙனம் அத் தபோதனர் அருளிச் செய்வார், நன்னிமித்தங்கள் சில நிகழக்கண்டு அவ்வராங்கனை மீட்டுங் காணலாகும்; அன்றியும் அவன் இங்ஙனே மேவியிராநின்றானென தர்மசிரவணங் கூறக், கேட்டுப் போந்து தன் மருமக்களையும் வற்புறுத்தித் தான சீல உபவாஸங்களை நிகழ்த்திச் செல்லாநின்ற காலத்து, இலளிதபுரத்துக் கரசனாகிய தேவசேனனென்பான் தன்ஒற்றர் குறுகி யாது விளம்பினாரோ எனின்?

51 இந்திர சேனனும்நம் †யானைகொளத் தன்னுடைய
தந்திரஞ் சூழத் தலைப்பெய்வான் —*வந்தனனே
பூம்பாவை தோளா யெனப்புகன்றார் தூதுவர்கள்
தேந்தேவ சேனர்க்குச் சென்று. 175

(இ - ள்.) இரணதுங்கமென்னு நம் யானை வேண்டி இந்திரசேனன் நம்மீது படைகூறிட்டு வருகின்றானென ஒற்றர்கூறலும், தேவசேனன் கூறுவான், நம்மாலவனோடு அமர் புரியத்தக்கதன்று நம் இராஜ்ஜியத்தில் யாரேனுமவனைவெல்வார்க்கு என் புத்திரியும் அர்த்த ராஜ்ஜியமும் தருவோமென, பறை யறைவிப்ப, அவ்வராங்கனு மறிந்து மற்றதனை விலக்க போர்புரியலாகுமென, எழலும் தேவசேனன் தனது நான்கு வகைப்படையைக் கூறிட்டு அனுப்புதலும் வராங்கனெவ்வகைச் சென்றானோ வெனின்.

† யானைக்காத், என்பதும் பாடம்.

* வந்தனன் என்பதும் பாடம்.

52 காலாளும் வில்லாளுங் கோல்யானை தேர்புரவி
வேலாளுஞ் சூழ விரைந்தடைந்தான்— வேலால்
எழுதுகவிற் கார்வா விருள்படைப்பப் பைங்கட்
கழுதுகவித் தாடுங் களம். 176

(இ - ள்.) என்றிப்பரிசினுற் சென்று ஸமரபூமிக் குறுகி இந்திரசேனனேடும் வராங்கன் தலைப்பெய்த பொழுது, களிறுங் களிறு மெதிர் பாய்ந்தன; தேருந் தேருமெதிர்த் திளைத்தன, பரியும் பரியும் பாய்ந்தன, படையும் படையு மெதிர் மலைந்தன, பறையாவும் பண்பெழ ஒலித்தன, பாய்கணைகள் விசும்புற மூடின, பட்டுருவின விட்டகுந்தம், பாய் களிறு பாரிலுருண்டன, கண்டமாயின வண் துரகம், தேரழிந்தன கடனுவாயென, சீரழிந்தனர் வீரரெல் லாஞ் செயிர்த்து உடன்று பொருதவிந்தனர், தலை யுருண்டன, உடல் புரண்டன, தாளொடிந்தன, தோள் துணிந்தன, சிலைமுறிந்தன, கணைகள் இற் றன, செழுங் குருதிப்புனல் பெருகிற்று, குடர் சொரிந் தன, நிணம்மிதந்தன, பேய்க்கணங்கள் கூத்தாடின, கழுகாடின, பாரூடின, கலந்தாடின கவந்தமெழுந்தா டின, இந்திரசேனன் மகாபடை அனைத்தும் ஆற்ருது எம் மருங்கும் சிதறியோடிற்று, யாங்ஙனம் எவ்வகை ஆயிற்றேவெனின்,

53 படைதுறந்து மிக்க பரிபவமும் பின்னே
யடைய வடையவவர்க் கஞ்சி—நடைதவிர
வோடினர் தம்பதிபோய்ப் புக்கா ரொழிந்தவர்கள்
வீடினர் வெங்களத்தே மிக்கு. 177

(இ - ள்.) என்றிப்பரிசு பட்டுப்படாத சேனைகள் இரிந்தோட விட்டு விளங்கிய, விறல்வேந்தனும்

வீரத்வஜம் வீசும் பணவர், பேரிகை, காகளம் விஜய படகம் முதலானவை பெருங்கடல் போலொலி வகுப்பத் தேரும் மாவுஞ் சினக்களிறும் சேனுவீரரும் செறிந்து சூழத் திசைதோறும் ஜயாசிரஞ் கூற மகா நகரம் நோக்கித் திரும்புங்கால் வராங்கன் வெற்றியை அத் தேவசேனன் உணர்ந்து, கொற்ற முரசம் பல கறங்க கோவேந்தனை எதிர்கொண்டு தன்னகரம் புகுதலும் மகா விபூதியான மேம்பாடெய்தி இனிதின் அங்கிருந்த பொழுது, உத்தம புரத்தினின்றுஞ்சில ஒற்றர்குறுகி தேவசேனனை நோக்கி யாது விளம்பி ஞரோ? வெனின்.

54 பொல்லாமா வுய்ந்து வராங்கனே பொன்றிறு
னல்லாளர் நம்மோ டெதிர்கென்று – மல்லார்ந்த
நோண்மன்னர் நாட்டைக் கொளத்துணிந்து நொக்கடைந்தார்
வாண்மன்ன வென்றுரைத்தார் வந்து. 178

(இ - ள்.) உன் மைத்துனன் தர்மசேன மகாராஜன் வராங்கன் ஒரு மாயமா வுய்த்து மரித் தானென உணர்ந்த பர ராஷ்ட்ரத்து அரசர் குழுமி வந்து நம்உத்தமபுரத்தின்மீது படைசூழ விட்டனர்' மற்றவரோடு போர்புரியப் படைத்துணை வேண்டி இங்ஙனமறிவித்துக் கொணர்க என, தூதர்கள் கூறக்கேட்டலும், மற்றவனோடு மகிழ்ந்திருந்த, அவ் வராங்கன் மிக்க துக்கிதனுகி கண்ணீர் கலுழ்தல் கண்டு ஆங்கு அவனை வராங்கனுதற்கு தனக்கு ஐய்யுறவு நீங்க அறிந்து சந்தோஷத்தோடும் தழுவிக் கொண்டு, விகிதமே பெலமுடைத்து எனக்கூறி, என்

மகளிரானைவர்க்கு முரியானையெய்தக் கூடிற்றென்று, உவகை மேலுவகையெய்தி, மனோரமை முதலாக தன் புதல்வி இநூற்றுவரையும் அவ்வராங்கனுக் குக் கொடுத்து, அறிவர்க்குச் சிறப்பும் பாத்திரதான மும் வரன்முறையே செய்து முடித்த பின்னை அவ் வராங்கனும் தன் மாமனேடும் ஸாகரவிருத்தி என் னும் வைசியரோடும், மாற்றலர்மேற் படையெழுந் தான். யாங்ஙனமோ எனின்.

55 குடையுங் கொடியுங் குழுமிச் செழுவான்
மிடைய வெயிற்பிரிவ தேபோற்--படைமிளிரப்
பன்னமைந்த கைம்மாப் பரிதேர்சூழ் படையெழுந்தான்
விண்ணவருந் தாம்வியப்ப மிக்கு. 179

(இ-ள்.) தவளமுஞ் சாமரையும் மருங்க சைப்ப, ஒற்றை வெண் குடையோங்க, கவளம்ஆர் களிற் றெருத்தின் மீது, தார்வேந்தர் தொழுது சூழப் பார்மகள் முதுகு நெளியப் படையெழுந்து முறையே செல்லா நின்ற பொழுது யாது நிகழ்ந் ததோ வெனின்.

56 தன்மக னுண்மையைக் கேட்டுத் தளர்வகன்று
மன்னவரும் வான்படையுந் தற்சூழத்—துன்னிக்
கதிரெழும்பைம் பொற்பூண்டார்க் கான்முளையைக் காண்பா:
னெதிரெழுந்து சென்றடைந்தா னீண்டு. 180

(இ-ள்.) அவ்வுத்தமபுரத்தினின்றும் தர்மஸேந மகாராஜன் அவ்வராங்கனது வரவுகேட்டு ஸந் தோஷ சித்தத்தனுய்த் தன் மனைவியரோடும் வந் தெதிர்கொள்ள, அவ்வராங்கனும் தந்தைதாய்மா

ரையும் அஞ்சலிசெய்து தன்பத்தினிகளுக்கெல்லாம் தான்வந்த ஸந்தோஷமறிவித்து,மற்றுமுள்ளோர்க்கு நன்மொழி கூறி, பின், முன்புற்ற உபசர்க்கங்களும் அங்கு பிழைத்துப் போந்த பரிசுஞ் சொல்லக்கேட்டு தர்மசேனனறிந்து யாது கூறினனே வெனின்.

57 நல்ல வினையுதைய முண்டாகில் நச்சரவின்
பல்லிடையும் செந்தீ படரிடையுங்—கல்லென்
கனைகடலில் வீழ்ந்துங் கழிவரே தீய
வினையுதய மேலமிர்தும் வேம்பு. 181

(இ-ள்.) நடுக்கடலிடை வீழ்ந்தும், நச்சரவினற் கடியுண்டும், படர் செந்தீ யிடைப்பட்டும், எவ்வகை யிடுக்கண் வந்தவிடத்தும் முன்செய்த புண்ணிய முதயமாயின் உய்வர்; தீவினையுதைய மாயின் எவ் வகை அரண் இருந்தும், உய்யும் வழியிரா ஆனதால் இம்மகோப ஸர்க்கங்களை நீ அல்லாதார்க்கு கழிக்க வொண்ணுதிதுவும், நீ முன்செய் நல்வினைப் பய னென்று அத்தியந்தம் ப்ரீதியெய்தி நிற்குமளவில் நகரப்பிரவேசம் செய்தற்கு, நல்ல முகூர்த்த மாயிற் றென்று, கணிகள் கூறலும், அவ்வராங்கன் அவர் களை நோக்கி யாது மொழிந்தானே வெனின்.

58 எந்தை பெருவிறலை யெண்ணுது மாமலைவான்
வந்த வரசர் வலியெல்லாஞ்—சிந்தத்
துறந்தலா னன்னகரந் துன்னேது னென்று
விரைந்தெழுந்தான் மேலே வெகுண்டு. 182

(இ-ள்.) என்றிப் பரிசினற்கூறி, சாதுரங்க பலத்தோடும், போய்ச் சமர பூமியைக் கண்

ணூற்று, யாது பகர்ந்து என்ன செய்தானோ வெனின்.

59 கூற்ற முருந்தெழுந்தார் போலக் கொதித்தெழுந்தங்
கேற்ற வரசர்க் *கியமபுரந்தான்—விற்றிருக்கக்
கோலாலே காட்டிக் கொடுத்துவந்தான் கொற்றஞ்சேர்
வேலார் படைத்தானை வேந்து. 183

(இ - ள்.) மால்கரிக்குழுவின் மத்தியில் புகுந்த கோளரி ஏற்றின் கொடுமை போலவும், கலைகணத்து ஈட்டங்கண்டு பெரும்பசியின் தீவிரத்தால் சினைத்தெழும் உழுவையின் திறல்போலவும், ஏழுலகத்தையும் இமைப்பினில் தகிக்கு மூழித்தீயின் உடற்சி போலவும், எதிர்ந்தவர் பெருஞ் சேனையை நூறி, யெங்குந் திகைத்தலைந்தோட மாற்றலராய் மலைத்தெழுந் தாரைக் கூற்றுவனுக்கு விருந்து செய்யா, மாறெதிர்ப்பாரின்றி யொழியவும், மற்றவர்கள் விபவ மெல்லாம், சூறையாடி வெற்றிக் கொண்டு தன்னகரம் போயப் புக்கான் பின்பு, அவ்வராங்கனை நோக்கி தர்மசேனமகாவேந்தன், யாது பகர்ந்து எத்தன்மையாயினனோ வெனின்.

60 விற்றிருக்குஞ் செல்வ மமையும் வினைகழல
நோற்றிருப்ப தென்கடமை நோக்குங்கால்—ஆற்றலாய்
நீயே யினியரசு செய்கென்று னெவ்வுயிர்க்குந்
தாயே யெனத்தகுவான் தான். 184

(இ - ள்.) என்றிப்பரிசினல் வராங்கனுக்கே அரசுரிமையை, தாங்குவ எனக்கூறி, முடி சூட்டிப் பின்பு, தர்மசேனனும் அநேக அரசரோடுங் கூடப்

---

* கியம்புந்தான்.

போந்து, தவந் தொடங்கி வினைவெருவ நோற்று, சுகதியெய்தினன். இப்பால் வராங்கன் தன்னிடத்து வஞ்சகம் விளைவித்த, தம்பிமேல் த்வேஷங் கொள்ளாதே யவனை அஞ்சவேண்டா வென்று அச்சந் தீர்த்து பிரியவசனங் கூறி அவனுக்கே இராஜ்ஜியங் கொடுத்து தான் ஸாதித்துக்கொண்ட இராஜ்ஜியந் தானெய்தி, ஸாம்ராஜ்யபதியாய் இஷ்டவிஷய காம போகங்களை யனுபவித்துக் கடைக்காலம் சம்சார விரக்தனாகி, தன்னிட புதல்வனுக்கு அரசுரிமையை ஆளுக எனக் கொடுத்து, முன்புற்ற துன்பமெல்லாம் நினைந்து, ஏகத்வம் பாவித்து தவம்கைக்கொண்டு மகோக்ரதபசு நிகழ்த்தி தர்ம சுக்ல தியானத்தால் முடிவில் சர்வார்த்தசித்தியுள் தோன்றி முப்பத்து மூன்று கடல் ஆயுட் பரியந்தமும் பதினாறரைத் திங்களில் ஒரு தடவை உச்வாஸநிச்வாசமும், முப்பத்து மூவாயிர ஆண்டு முடிவில் மானஸாகாரமுமாகிய அமர சுகத்திற்கெல்லாம் முதன்மையான சுகத்தையும் மூப்பும் பிணியும் நரையுமின்றியே யனுபவித்தான். அவ்வள்ளலாகிய வராங்கனென்னும் மகாமண்டலீகனிட கதையை உணர்ந்தாகிலும் ஏகத்வம் பாவிப்பது காண் ஜீவனே யென்றவாறு.

ஸகல விமலகேவலஜ்ஞான பகவத் அருகத் பரமேஸ்வரன்
முகோத்கதமாகிய துவாதஸானுப்ரேக்ஷையுள்
சிரேணிக மஹாராஜன் கேட்ப கணதர
ஸ்வாமிகளருளிச் செய்த
மூன்றாவது
ஏகத்வ மென்னு மதிகாரம்
ஸமாப்தம்.

4-வது அத்தியாயம்

அன்னியத்வம்

கடவுள் வணக்கம்

1 பன்னிரண்டு மாகணமு மேத்தப்பைந் தாமரையின்
சென்னி மிசைநடந்த சேவடியை—யுன்னியுயி
ரல்லாத அன்னியமே யென்னு மதிகாரம்
நல்லா யினியுரைப்ப னன்கு. 185

(இ - ள்.) *தபோதனரும், அமரதேவியரும், அச்சியரும், பவண வியந்தர சோதிட்க தேவிமாரும், பவண வியந்தர சோதிட்கரும், கல்பவாசியரும், மானிடரும், விலங்குமாகப் பன்னிருகணங்களால் பரிவேஷ்டிதனுகிப் பகையும் பசியும் பாபாதி பிணியும், தசதிக்கிலும் நீங்கச் செந்தாமரைமீது ஸ்ரீவிகார மெழுந்தருளிய அருகனது ஸ்ரீபாத கமலங்களை நமஸ்காரஞ் செய்து, கொண்டு நின்ற சரீர முதலாக எல்லாம் அன்னியமே என்னும் அதிகார முரைப்பேனென்றவாறு.*

2 மனையாளு மக்களும் வான்கிளையு மாடும்
வினையால் வருமிவைதான் வேறே—தினையாதும்
மெய்க்குறுதி யல்லவென* நினை யாதிரங்கல்
நிற்குறுதி யோவுயிரே நீங்கு. 186

(இ - ள்.) *புத்திர மித்திர களத்திரமும், பொருளும், சரீரமும் எனதல்ல என நினையாதே பேய்த்தேரினை நீராம் என்று பின்தொடர்ந்து செல்லும்*

---

* மேவா என்றும் பாடம்.

விலங்கு ஜாதிபோல் பிரமியாதே, நீயல்லாதன வெல்லாம் அன்னியமென்று பாவிப்பது காண் பவ்யஜீவனே யென்றவாறு.

3 விளக்கின்கண் மற்ரோர் விளக்கேற்றி னற்போல்
துளக்கின்றி யென்னைத்தான் ரேற்றி—வளர்க்கின்ருன்
எந்தை யெனநினையா தென்னுக் கிடருறுதி
முந்தை யுயிரே மொழி. 187

(இ-ள்.) தீபத்தின்கண் மற்ரொரு தீபத்தினை ஏற்றினற் போலவும், ஒரு பாத்திரத்தின் நீரைப் பிறிதொரு பாத்திரத்தில் சேர்ப்பித்தாற் போலவும், தன்னுடைய சரீரத்தையே நானுபிரகாரமாகக் காத்தோம்பினன் என் பிதாவென்று கூறி, நினைத்து அயர்வுருதே, அவனுந் தனக்கு சுகார்த்த மாகத் தன் வீரியத்தைவிட, நீயுன் கர்மவசத்தினற் ரோன்றின யாதலால், நின்கர்மம் நீயே அனுபவிப்ப தன்றி தன் தந்தையனுபவியான். ஆதலால், அத் தந்தையு மன்னியமேகாண் சீவனே என்றவாறு.

இதனல் பிதாவுந் துணையல்ல எனப் பொருள் படும்.

4 இன்பமுந் துன்பமு மெய்துவாய் நீ நின்னை
முன்பயந்த தாய்மார் முடிவில்லை—யென்பதனு
லன்னிய மெல்லா மெனுதே யயர்வுறுதல்
நின்னியல்பன் ருலுயிரே நீங்கு. 188

(இ-ள்.) ஸ்ரீ, அன்ன பானுதி இன்ப துன்ப ஹேதுக்களும் அவ்வாற்ருல் வருமின்ப துன்பங்களை யெல்லாம் அனுபவிப்பாய் நீயே. அதுவன்றியும்

அதீதகாலத்தில், நீ பிரிந்த பவங்களே அனந்தானந்தம். அப்பவங்கடோறும் உன்னை ஈன்ற தாய்மாருமெத்தனையேனுமுள ; அவற்றுள் எத்தாய்க்கிரங்குவாய் கூறு ஆத்மனே! அவற்றால் மாதாவும் உன்னிலன்னியங்காண் ஜீவனே என்றவாறு.

5 கடஞ்சூளை யொன்றிற் கிடந்துகழிந் தாற்போ
லுடன்றோன்றி னுரென் றுளரேல்—தடஞ்சேருஞ்
சீவனே மற்றவராற் சேருஞ் சுகமிலென்று
ஆய்வதே கண்டா யழகு. 189

(இ - ள்.) குலாலனொருவனாற் செய்யப்பட்ட குயக்கலங்கள் ஒரு சூளையின்கண் கிடந்தவை வேண்டினார் வேண்டிற்றுக் கொண்டுபோக, ஒன்றிற் கொன்று பரிகரிக்கமாட்டாதவாறேபோல் உன்னோடே உடன் பிறந்தாரென்றும், ஆணென்றும், பெண்ணென்றும், முன்பிறந்தாரென்றும், பின்பிறந்தாரென்றும், தமக்குத்தாமே ஆவதன்றி உனக்கு ஒன்றையும் பரிகரிக்க வல்லார் இல்லை. ஆதலாலவர்களு மன்னியமென்று பாவிப்பதுகாண் ஜீவனே என்றவாறு. அன்றியும்,

6 காற்றினாற் கூட்டப் படுமிலையின் கூட்டமோரு
காற்றினால் வேறாய்க் கழிந்தாற்போல்—தோற்றிய
வான்கிளையும் வேறுவே றென்னுது சீவனே
யான்கிளையென் றெண்ணுவது* யாது. 190

(இ - ள்.) மந்த மாருதத்தால் திரட்டப்பட்ட சருகிலைகளின் கூட்டம் ஒரு சண்ட மாருதத்தால் சிதறி

* தீங்கென் என்பதும் பாடம்.

ளுற்போல மருமகனென்றும், மாமனென்றும், மைத்துனனென்றும், உற்ருரென்றும், சம்பந்திக ளென்றும், மித்திரரென்றும், தம்மிற் கூடி கர்ம வசத்தால் பிரிகின்ற கிளைகளால் வரும் இன்ப துன்பமும் அன்னிய மென்றவாறு. அன்றியும்,

7 மொழிகரையாச் செய்ய முகங்கமலப் பூவா
விழிகள்நெடு மீன்களா லுந்திச்—சுழிப்பொய்கை
மக்கட் கமல வளையத்தாற் சுற்றுண்டா
ருய்க்கப் படார்கரையி லுற்று. 191

(இ - ள்.) மொழியே கரையாக வுடையதும், முகமே கமலப்பூவாகவும், நயனங்களே மச்சமாக வும், மோகமே நீராகவும், உந்தியே சுழியாகவும், திருஷ்ணையே ஸ்த்ரீயாகவும், மக்களே கமல வளைய மாகவுமுடைய ஸம்ஸாரமென்னுந் தடாகத்தில் விஷயமென்னும் நீர் வேட்கைகொண்டு புக்கால் புத்திரரென்னுங் கமல வளையத்தால் சுற்றப்பட்டு இடும்பை யென்னுந் துன்பச் சுழியில் அழுந்துவ தன்றி உய்ந்துபோம் உபாயம் உளதோ? என்ற வாறு.

8 திட்டி விடமென்று *செப்புவதே கண்டறியோந்
திட்டிவிடஞ் சேயிழையா ரேயாகுந்—திட்டியினு
னேக்கினேர் வீயக்கண் டோமாத லாலுயிரே
நீக்குவாய் † மற்றதையே நீ. 192

---

* சொல்வதே என்பதும் பாடம்.

† மற்றத்தையே எனவும் பாடம்.

(இ-ள்.) திட்டிவிட (திருஷ்டிவிஷ) மூண் டென்று உலகங் கூறுவதன்றிக் கண்டறியோம்; திட்டிவிடம் ஆவார் ஸ்த்ரீகளே எனக் கூறுவது யாதெனின்? காளையரது மர்மஸ்தானத்திற் கதிர் வேலனைய கண்ணிணைகள் கடாட்சித்து நோக்குவரா யின் படுவரல்லது, பிழைப்பாருளரோ? ஆதலின் திட்டிவிடம் ஸ்த்ரீகளே யென்றவாறு.

9 அரவங் கடிந்தா லருமருந்தாற் றீரும்
உருவங்கி நீரா லவியும்—அரவனைய
அல்குலார் நம்பிடத்தை யம்மருந்தும் நன்னீருங்
கொல்கலாச் சீவனே கூறு. 193

(இ-ள்.) அரவந்தீண்டினு லருமருந்தினுற்றீரும். அக்கினியை நீராலவிக்கலாம். அல்குலார்விடமும், செந்தீயும், ஒரு மருந்தாலும் ஒரு நீராலுந் தணிக்க வொண்ணு என ஓர்ந்தும், அவர்களை அன்னிய மென்று கருதாதே, பொருந்துவதோ? சீவனே என்றவாறு.

10 மூன்றுலகுந் தானவிப்பான் வல்ல முரணஞ்சும்
ஏன்றுன் டிவிதிருந்த விசனையும்—ஆன்றபெருஞ்
செய்தவத்தைமாற்றினுள் பெண்ணுருந்தியென்றக்கால்
கைதவந்தார் காரிகையார் காண். 194

(இ-ள்.) ஆலகால விடத்தை மென்றுென் றனைத்துலகையும் தகித்திடுவான், கோலாகலம் கொள்ளக் கொதித்துக் குரைகடலிடைத் தோன்று தலும், வானவர்களும், தானவர்களும் மற்றவர்க்கு நிலையாற்ரு தானமில்லாச் சங்கரனே, உன்னபய

மெம்மைக் காக்கக்கடவவென்று புகுதலும், ஆங்க தனைத்தன் கரத்தாலே அடக்கிவாய்க்கொண்டதுவும், ஓங்கிய தன் உதரத்தே புகாமை ஒளிக்கக் கண்டத் திடை யடக்கிய அவ் ஈசனையும், புனைவனை யொருத்தி, தன்திருஷ்டி விடத்தால் தவங்கெடுத்துப் புகழ் விளங் கிய அவனுடைய, அர்த்தசரீரங் கைக்கொண்டு இவ் அகிலத்தில் புகல்வதாக உத்தமாங்கனை யென்னும் பெயர் பெற்றுள்; உமையென்றுரைப்பராதலில் இவ் உலகத்துமிக்க, விடம், மெல்லியலார் என்றவாறு.

11 ஆநலான் மெல்லியலார் தம்மால் வருஞ்சுகமும்
தீதுகாண் சீவனே தெள்ளறத்தின்—ஓதுநலால்
ஈங்கிவரும் வேறே நமக்காகா ரென்றுணர்ந்து
நீங்குவதே கண்டாய் நினைப்பு. 195

(இ - ள்.) என் களத்திரம் தளரலாகாது என்று, அனேக பிரயத்னத்தால் இரக்ஷித்தால், உன் களத் திரமும் உனக்கொரு தீங்குற்ற விடத்து, நீயுழந் தாட்டாதபொழுது, மனக்கவலையால் நின்னை மயக்கி மாள்விப்பதறிந்தால், அம்மெல்லியரும் தம்கேட்டுக் குந் தம்துக்கத்துக்குமன்றி நமக்கு ஆகார்; அதுகார ணத்தால் அம்மனைவியரும் அன்னியமே என அறி வது காண் ஜீவனே என்றவாறு.

12 நீரின்கண் தோன்று நிழற்போலத் தற்றேன்றி
யாரு மரும்பொருடா மென்றிடினு ந்—தேருங்காற்
புத்திரரும் வேறேகாண் சீவனே போய்த்தேடும்
மித்திரரும் வேறே வினைவு. 196

(இ - ள்.) நீரின்கண் தோன்றும் தம்முடைய சாயைபோலத் தம்மிடத்தே உத்பன்னராகி மிக்க

நன்மையை அளிப்பாராகிலும், அப்புத்திரர்களும், மோகத்தினுல் உந்தன் பொருள் கூறிட்டுக்கொள்ளச் சிந்திப்பதன்றி, உற்று உனக்கு ஓர் உபகாரம் மற்ற வர்களால் உண்டாகுமோ? அருந்தன்மைப் பெருங் குணத்தோய்! நீ ஸகாயரென்று சங்கிரகித்தாலும் தமக்காவதன்றி, நினக்காவரோ? இவர்கள் எல்லாம் அன்னியமே என்று பாவிப்பதுகாண் ஆத்மனே என்றவாறு.

13 காலா னடந்துங் கலத்தாற் கடற்றிரையின்
மேலா னடந்தும் வியன்சிந்தை—மேலாகித்
தேடும் பெரும்பொருளு மெல்லாந்நான் சீவனே
நாடுங்கால் வேறேகா ணன்கு. 197

(இ-ள்.) காலால் நடந்தும், மலைமிசையேறி யும், பூதலத்தின்மிசை அனேகம் எத்னப்பட்டும், வெண்புணரிக் கருங்கடலிடை, வியன் மரக்கலங் கொண்டேகியும், பண்பு உணர்தற்கு அருந்துன்பம் அதிகரித்தும், நிலையிலாப் பெரும் பொருளால்வரும் சுகத்தை பிரமாணிப்பது குணமன்றுகாண்; மற்று அதுவும் ஒருவர் பக்கல், மன்னி நிற்கக் கண்டறி யோம்; அப்பொருண்மேல் ஆசை ஒழிந்து அதுவும் அன்னியமே யென்று பாவிப்பதன்றியும், நல் லறத்தை நினைப்பதுகாண் சீவனே யென்றவாறு.

14 நாறு விதந்தாலு நாட்டவு நில்லாத
நாறு விதபயனு நன்பொருளை—ஆறுது
அளிக்கிலே னெவ்விடத்து மன்னியந்தா னென்று
தெளிக்கிலங் காணுயிரே தேர்ந்து. 198

(இ - ள்.) அரும்பொருளை நாடித்தேடுவதற்கும், அதனை ரக்ஷிப்பதற்கும், அளவிறந்த துக்கங்கள் சகித்துத்தேடி, அதுவே துணையென்று நம்பி யிருந்தார்க்கும் யாதும் ஒருநிலையில்லை எனவும், அஃது பெயர்ந்து போவதே யியற்கை எனவும், உன்னி தர்மமே மிக்க துணை யெனச் சார்வதுகாண் ஜீவனே என்றவாறு.

15 என்னில்ல மென்மனைவி யென்பொருளென் றெண்ணுவரே
நின்னியல்பை வேருந வீயறிந்தும்—பின்னும்
பொறிமாலை யாற்றிசைந்துப் போமா றுயிரே
யறிமால தாயினையோ வாங்கு. 199

(இ - ள்.) என்பூமி யெனவும், என்மனைவி எனவும், என்பொருளெனவும் உன்னி, அவற்றின்மீது செருக்கெய்தி நிலையிலாத் தனத்தின்மீது நீ ஆதரம் வைப்பதை நோக்கின், நாய்வால்பற்றி ஆறுநீந்தினன் போலவும், கற்புணையே துணையாகக் கடல் நீந்தினன் போலவும், அறிந்திருந்தும் மயங்குகின்ற அறிமால் போல அயராதே, செறிந்தமைந்த திண்பொறிகளை ஜெயித்து அவையுணர்ந்து உன்வசமாக்கி அறத்தையே சங்கிரகிப்பதுகாண் ஜீவனே என்றவாறு.

16 இறுதியே வந்திடினு மெஞ்சாது முன்னின்
றுறுதியே செய்வார்கா னுற்றர்—பெறுவதனைக்
கொள்ளக் கருதிக் குழைபவுரைப் பாருயிரே
கள்ளக் கடும்பகைஞர் காண். 200

17 சத்தியமே தாய்தந்தை ஞானந் தயாவுதவும்
மித்திரர்கண் மேவும் வியன்பொறையே—புத்திரர்கள்
சாந்தமே யில்லாட் டரும முடன்பிறந்தார்
வாய்ந்த வுயிரே மதி. 201

(இ - ள்.) தன்னிட இடுக்கண்ணோக்காதே மன்னுயிர்களுக்கு உதவுவார்களே வான் சுற்றத்தார்; பொருளைப் பெறக்கருதி இனிய மொழி கூறுவோன் தன் உறவே ஆகிலும், கடும்பகைஞன்காண் என்று அறி; அன்றியும், உனக்கு வாய்மையே தாயாகவும், ஞானமே பிதாவாகவும், அருளே தோழராகவும், பொறையே புதல்வனாகவும், சாந்தமே இல்லாளாக வும், அறமே உடன்பிறந்தாராகவும், உன்னுவதே நிலையுடைய சுற்றம்; மற்றவரெல்லாம் அன்னியமே காண் ஜீவனே என்றவாறு.

18 அஞ்சுவ தஞ்சாதே யாசைப்பட் டன்போடும்
எஞ்சுவ தாயிருந்த விவ்வுடலைந்—தஞ்சமென
அன்புறவுற் ருழ்கின்ற வாருயிரே தேருங்கா
லென்புறவுற் ருய்நீ யிசைந்து. 202

(இ - ள்.) இப்பூவுலகின்கண் அஞ்சப்படுவன வற்றின்மீது வேட்கைப்பட்டார் அழிந்தார்போல, தஞ்சமிலா இவ்வுடலின் பொருட்டாகத் துன்புற்று உழன்று பிரயோஜனமென்ன, இதனுள்ள காரியத்தைக் கேளாய் பவ்ய ஜீவனே என்றவாறு.

19 இடைவிடா தெண்ணிறந்த காலமெலா முன்னை
முடைசுமந்தி மோகத்தே விழ்த்தித்—தடைசெய்த
*தாதலினு லிவ்வுடலு மன்னியமே என்றுணர்ந்து
காதல்விடா யாருயிரே † காண். 203

(இ - ள்.) எண்ணிறந்த காலமெலா மிடை விடாதே யுன்னை முடை சுமத்தி நல்லறத்தின்பாற்

---

* காதலிலா வாருயிரே என்பதும் பாடம்.

† காண்டு எனவும் பாடம்.

செல்லாவண்ணம் தடை செய்வித்துத் தாழ்வித்த உடலை என்னுக பிரமாணித்து மோகத்திலே வீழ்கின்ருய்; ஈங்கிதுவும் அன்னியமென நினைப்பதுகாண் பவ்ய ஜீவனே என்றவாறு.

20 ஊட்டி யுடுப்பித் துயிர்ப்பித்துக் கைவினைகள்
காட்டிப் பலவுங் கவின்செய்த—கூட்டினுல்
ஆனபயன் கொள்ளாதே அன்னியத்தா லாருயிரே
மானபயன் கொள்வதே மாண்பு. 204

(இ - ள்.) சதுர்விதமாகிய ஆகாரத்தை ஷட்ரஸங்களால் உண்பித்து, அகரு தூபாதிகளால் வாசனை யூட்டிய வஸ்திராதி ஸ்பர்சவின்பமும், கீதாதி செவியின் இன்பமும், காட்சிக்கினிய நயன இன்பமும் உள்படப் பற்பல சுகமும் வகித்து ஓம்பப்பட்ட இவ்வுடலினுலாய பயன் கொள்ளாதே, அயர்வெய்தி அன்னியத்தின் பொருட்டுத் துயருறுவது, பாங்குடைத்தோ பவ்விய ஆத்மனே என்றவாறு.

21 தற்கெடுப்பார் தம்மைத் தமக்கு முடியுமேல்
முற்கெடுக்க வென்னு முதுமொழியா—விற்கெடுக்கும்
வல்வினையா மிவ்வுடலும் வாய்ந்த வதமதனுல்
வெல்வ துயிரே விதி. 205

(இ - ள்.) தம்மை வளர்த்தவரே தமக்குப் பகையாய்க் கெடுக்கலுறுவாராகின், தாமே அவரை முன்னே கெடுக்க என்பதோர் மூதுரை உண்டாதலின், எவ்வவஸ்தையினும் தன்னை ஓம்பித் துன்புற்றும் உனக்கொன்றை உறுதி செய்யாதே கெடுப்பதற்கே, கீழறவெண்ணி ஓங்கும் வினையை நினக்கு

ஊட்டித் தீங்கு விளைவிக்கும் உன் பகையாகிய யாக்கையை, நீயே வெல்வதுகாண் ஜீவனே என்றவாறு.

22 கன்விலவு பொன்தகர்த்துக் காய்ச்சிக்கொண் டாற்போல
நின்னுடைய காயத்தை நீளுயிரே—மன்னிய
நற்றவந்தாற் சுட்டு நயந்தனந்த ஞானமெனுஞ்
சொற்பதந்தைக் கொள்ளாய் துணிந்து. 206

(இ - ள்.) சுவர்ணபாஷாணம் அனாதி சம்பந்தமாயிருப்பப் பிண்டிவர்த்தன தாபன தாடனாதி கிரியா வசத்தினால் வேறாக்கினாற்போல; அனாதி சம்பந்தமாயிருந்த கர்மஸ்தான வுடலைத் தன்னைத் தானான வண்ணமும், பிறிதைப் பிறிதான வண்ணமும் பாவித்து, நற்காட்சி நன்ஞான நற்சாரித்திரங்களென்னும், தாபன தாடனாதி கிரியைகளால் கர்மமென்னுங் கஷாயத்தை நீக்கி, அனந்த ஞானாதி குணமென்னும் உத்தம சுவர்ணத்தைக் கைக்கொள்வது காண் பவ்ய ஜீவனே என்றவாறு.

23 இறந்த திடைநிகழ்வ தெய்துவமுக் காலத்து
உறைந்த வுடன்மனைவி யுற்றார்—சிறந்தகலா
துன்பின்பு வந்தனவோ வுன்னுங்கா லன்னியத்தை
நண்பென்று நண்ணுவதே நாடு. 207

(இ - ள்.) அதீத அனாகத வர்த்தமானங்களென்னும் முக்காலத்துள்ளும் முன்பு நின்னிட சுற்றத்தாரும், புதல்வரும், மனைவிமாரும், நீ கொண்ட சரீரமும் நின் பின்பு வந்தனவுளவோ ? அதனால் இவையும் அன்னியமே என்றறிவதுகாண் பவ்ய ஜீவனே என்றவாறு.

இராவணன் கதா சுருக்கம்

24 இத்தீவிற் றென்பா லிலங்கா புரநகரம்
பந்தா னனமும் படையனைத்தும்—ஒத்தமைந்த
விஞ்சைகளும் மூவரணுந் தானுடைய னுயினும்
துஞ்சினன்கா ணன்னியத்தைத் தொக்கு. 208

(இ - ள்.) தேவனால் நிர்மிதமாகிய இலங்காபுரத்து, ஜலதுர்க்க வனதுர்க்க கிரிதுர்க்கங்கள் என்னும் மூவரணும், போகவிஞ்சையும், பன்னகவிஞ்சையும், வேதாளவிஞ்சையும், பாஸ்கரவிஞ்சையும், தமோகன விஞ்சையும், காமதாகினிவிஞ்சையும், பகுரூபிணி விஞ்சையும், அவலோகினிவிஞ்சையும் என்றிவை முதலான, ஐந்நூறு மஹா விஞ்சைகளும், எழுநூறு க்ஷுல்லக விஞ்சைகளும், ஏவல்செய்ய, வித்தியாதர சக்கரவர்த்தி பட்டமும் வகித்து, பூசர, கேசர, வல்லப மகாபலபராக்கிரமராகிய அமாத்திய மந்திரி புரோகித சேனுபதிகளும், பதினறுயிரம் மகுடவர்த்தனரும் மற்றும் வீர்ய புருஷரும் வந்து தம் பணிகேட்டு ஏவற் செய்ய இராவணன் என்னும் பெயர் எய்தி, த்ருதி மதி சத்திய சம்பன்னனுகி சுகேன இராச்சியம் வகித்துச் செல்லா நிற்ப, பின்னும் எவ்வகையாயினனே வெனின்,

25 பொருப்பு நிலனும் பொருகடலு மெல்லாம்
விருப்பின்றி யேமுனியின் வீயும்—விருப்பொன்றிப்
பார்க்குமேற் பன்னிப் பரிணமிக்கு மென்றக்கால்
ஆர்க்குண்டோ வித்தகைமை யாங்கு. 209

(இ - ள்.) இவ்வகையனுகிய மகாபலவீரதீரனய் அரசு நடாத்திய இராவணனுக்குப் புதல்வன் யாவனே வெனின்,

26 மன்னிய வெள்ளி மலையிரத நூபுரத்தான்
பொன்னுலகின் வேந்தனையும் போர்வென்றான்—அன்னவனை
வென்றாற்ற லாலே விளங்குபுக ழிந்திரசித்
தென்றாற்றப் பேர்கொண்டா னீண்டு. 210

(இ - ள்.) வெள்ளியம்பெருமலை இரதநூபுர சக்கிரவாளபுரத்திற்கு வேந்தனாகிய இந்திரசேனனென்னும் நாமம் வகித்து, வித்தியாதரசக்கிரவர்த்தியாகிய பர இராஷ்ட்ராதிபதிகளைவென்று, த்ரிகண்டாதிபதியாகிய இராவணனாலும் வெல்லப்படாதானைக் களைந்து விஜயத்தோடும், அவன் விருதுங் கைக்கொண்ட இந்திரஜித்தென்னும் புதல்வனையும், கும்பகர்ண விபீஷணர் முதலாயினாரையும் பிராதாக்களாகவுடையான்; தேவ, தானவ, சித்த, வித்தியாதர; கின்னர, கிம்புருட, கருட, காந்தர்வ, யக்ஷ, இராக்ஷஸ, பூத, பிசாசம் முதலாயினோனைவரையும் பயமுறுத்தும் வல்லவனான இராவணனை யாவரும் ஏவல் கேட்ப, பிரபுவாய்ச் செல்லாநின்ற காலத்து யாது நிகழ்ந்ததோ வெனின்,

27 சிறுதாய வஞ்சனையாற் றேவியோடு மற்றைச்
சிறுதாய் சிறுவனொடுஞ் சேர்ந்தான்—செறியுங்
கரும்பணிநீர் நாடொழியக் காகுத்தன் வேகக்
கரும்பணியார் வன்குன்றக் கான். 211

(இ - ள்.) கௌசலேசுவரனாகிய தசரதமகாராஜன் புதல்வனாகிய ஸ்ரீ இராமஸ்வாமியும், இலக்ஷ்மீதரனும், சீதாதேவியும், கடுங்கானகத்துறைகின்ற காலத்து* வஞ்சனையால் சூர்ப்பனகியென்னும் இராக்ஷசி, சீதாதேவியைக் கண்டு, கார்க்கட

*பூர்வ புராணங்களுக்கேற்ப ஈண்டு மாற்றப்பட்டுளது.

லுடுத்த கடியிலங்கை புக்கு, இராவணனுக்கு அறிவிப்ப அவன் யாது செய்தான் எனின்,

28 மாயத்தான் மாரீசன் மான்மறியாய் வந்தணைந்து
சீயத் திறலோனைச் சேட்படுப்பக்—காயத்
தராவணங்கு மல்கு லணியிழையைக் கொண்டங்
கிராவணன்றான் போயினு னீண்டு. 212

(இ - ள்.) பொன்மான்மறியாய் மாரீசன் சென்று, மன்னகுமாரனை வஞ்சித்து அகற்றிச் சீதையைத் தன்மாயத்தினுல் வவ்விக்கொண்டு இராவணன் போகிய பின்பு; ஸ்ரீ இராமசுவாமியும் மற்றவனை நாடிச்சென்று, சுக்ரீவனேடு நட்பாடி, வாலியை வதைத்து, இராச்சியங் கொடுத்துப் பின்பு, வானரங்களால் நாடுவித்து, சீதாதேவி இருந்தவிடமறிந்து, வானரகுலம் முதலாகிய குலங்களோடும் சென்று கருங்கடல் பார்சுவஞ் சாருமளவில், இராவணன் சகோதரனுகிய விபீஷணனென்பான் அன்னவன், ஸ்ரீ இராமஸ்வாமியைக் கண்டு சரணுகதி புகுதலும் அவ்விபீஷணனேடுங் கூடக் கடலை அணையியற்றிக் கடந்து மற்றவனேடும் அவ்வானர சேனையோடும், தக்ஷிணதிசை சென்றேறி இலங்காபுரம் எம்மருங்கும் வானரபலஞ் சூழக்கண்டு, இராவணன் தன்னிட சக்கரத்தினை அபிமந்த்திரித்துவிட, அதுவும்சென்று ஸ்ரீ இராமசுவாமியின் தம்பி இலக்ஷ்மணனின் வலப்பக்க மடையக்கண்டு, ஆங்கதனை அபிமந்திரித்து இராவணன்மீது எறிய, ஓங்குவரை போலும் உயர்பரிதியே போன்று இலங்கேசனுடல் கீண்டு இருதுணிகளாய் ஆனதும், கைலாசம் எடுப்

பித்த வீரியமும், ஏவியவண்ணம் செய்யும் ஆழியும் விஞ்சைகளும் சாதுரங்கபலமும் தன்னையோம்பின தில்லை; அன்னியத்தைத் தனக்குத்துணையென அபேக்ஷித்தான் அவையும், எல்லாம் அன்னியமான தால், அவ் இராவணனும் மரித்து நரகம்புக்கான், ஸம்யக்த்வ சகிதமாகிய புண்ணியத்தை யுடையனாத லால் ஸ்ரீ இராமசுவாமியும் பரமசுகமெய்தினன். ஆத லால் அன்னியத்தை பின்னமெனப் பாவிப்பதுகாண் பவ்யஜீவனே யென்றவாறு.

ஸகலவிமல கேவலஜ்ஞானபகவத் அருகத்பரமேஸ்வரன்
முகோத்கதமாகிய துவாதசானுப்ரேக்ஷையுள்
சிரேணிகமஹாராஜன் கேட்ப கணதரஸ்வாமிகள்
அருளிச்செய்த
நான்காவது
அன்னியத்வமென்னு மதிகாரம்
ஸமாப்தம்.

5-வது அதிகாரம்

ஸம்சாரம்

1 நான்மூன்று யோசனையா னன்கமைந்த பொன்னெயிலுள்
நான்மூன்று நற்கணைஞ்சூழ் நான்முகனை—நான் முன்றின்
வந்தித்து வல்வினையான் மாற்றிச் சுழல்வினையைச்
சிந்தித்துக் கூறுவனுன் தேர்ந்து. 213

(இ - ள்.) துவாதசயோசனை விசால விஸ்தீர்ண முடைய சமவஸரணத்து, சதுர்முகனுகி, துவாதச

கணம் பரிவேஷ்டித்து நமஸ்கரிப்ப, எழுந்தருளி யிருந்த பரமஸ்வாமியினிட ஸ்ரீபாதகமலங்களை நமஸ் காரஞ் செய்து பிறவித் தடுமாற்றமென்னும் அதிகார முரைப்பே னென்றவாறு.

2 செய்த வினையினுற் றீர்விலா நாற்கதியுள்
எய்து முயிர்நிலைமை யீரேழும்—பெய்த
பிறப்பிறப்பிற் பேதுறுந் துன்பத் தொழுவில்
உறுப்புறுங்கான் சீவனே யுற்று. 214

(இ - ள்.) பாதர ஏகேந்திரிய பரியாப்தக அபரி யாப்தகரும், சூக்ஷ்ம ஏகேந்திரிய பரியாப்தக அபரி யாப்தகரும், த்வீந்திரிய பரியாப்தக அபரியாப்தகரும், த்ரீந்திரிய பரியாப்தக அபரியாப்தகரும் சதுரேந்திரிய பரியாப்தக அபரியாப்தகரும், அசம்ஜ்ஞி பஞ்சேந்தி ரிய பரியாப்தக அபரியாப்தகரும், சம்ஜ்ஞிபஞ்சேந்தி ரிய பரியாப்தக அபரியாப்தகரும், ஜாதிநாமகர்மத்தை அவினுபாவியாக உடைய சதுர்தச ஜீவஸ்தான பேதங்களால், மக்கள், தேவர், நரகர், விலங்கு கதிகளி லுண்டாகிய ப்ரதேச ஆவாச பிரமுக சதுரசீதிலக்ஷ யோனிபேதங்களிற் பிரமியாநின்ற ஜீவன்களெல் லாம் ஸம்சார ஜீவன்களாம் என்றவாறு.

3 பொருள்பூமி காலம் பவம்பாவம் பொற்பார்
உருநாம மாகியவோ ரேழுந்—தெரியின்
வினையார் பராவர்த்த னையாக நித்தம்
நினைவாழி யாருயிரே நீ. 215

(இ - ள்.) திரவ்விய பரிவர்த்தனை, க்ஷேத்திர பரி வர்த்தனை, காலபரிவர்த்தனை, பவ பரிவர்த்தனை, பாவ பரிவர்த்தனை, ரூப பரிவர்த்தனை, நாம பரிவர்த்தனை,

என ஏழு உள: இவற்றுள் திரவ்விய பரிவர்த்தனை யென்பது, ஸ்தூல சூக்ஷமமென விரண்டாம்; ஸ்தூல மென்பது உலகத்திலுள்ள புத்கலமெல்லாம் போக ரூபத்தாலும், உபபோக ரூபத்தாலும் அனுபவிப்பதாய்க் கழிக்கப்படுவது ஒன்றொன்றாக, இவ்வண்ணமே அனந்தானந்தவாரம் அனுபவித்துக்கழிக்கப் படுவதொரு ஜீவனால். இனி சூக்ஷ்ம பரிவர்த்தனை யென்பது நோகர்மபரிவர்த்தனையும் கர்ம பரிவர்த்தனையும் என இரண்டாம். அவற்றுள், நோகர்மபரிவர்த்தனை யென்பது, ஏகக்ஷணத்திலே ஜீவனால் கொள்ளப்பட்ட நோகர்ம புத்கலம் கிரகிக்கப்பட்ட க்ஷணத்தின் மூன்றும் க்ஷணத்திலே போந்து அவை மற்றொரு புத்கலத்தோடு மிஸ்ரமியாதே, அவையே வந்து பந்திக்குங் காலம். கர்மபரிவர்த்தனைக்கும் அவ்வாறே கொள்க. இனி, க்ஷேத்திர பரிவர்த்தனை யென்பது மகாமேருவின் கீழ் நடுப்பட்ட ஏக பிரதேசத்தைத் தன்னுடைய சரீரத்துக்கு நடுவாகக் கொண்டுபிறந்த சூக்ஷ்ம ஏகேந்திரியன் அச்சரீரத்தை பரமாணுவாக விரளித்த பரமாணுசலாகையாக, அச்சலாகையேறும் வரைக்கும் அப்பிரதேசத்தில் சூக்ஷ்ம ஏகேந்திரிய பரியாப்தகனாய்ப்பிறந்து, சலாகை ஏறினபின்னை பிரதேச உத்தரகிரமத்தாலே அதோலோக மெல்லாம் ஏறப்பிறந்து, பின்னை, மத்திமலோக மெல்லாம் அவ்வாறே பிறந்து, ஊர்த்துவலோக மெல்லாம் ஏறப்பிறந்து, ஒன்றொன்றாக இவ்வாறே அனந்தானந்த வாரம் பிறக்கக் கடவதொரு ஜீவனாலே; இனி, காலபரிவர்த்தனை என்பது உத்ஸர்ப்பிணி புகுதுகின்றகாலத்தில் பிரதமஸமயத்தைத் தனக்குப் பிறப்பாரம்ப பிரதம சமயமாகப்

பெற்றும் பிறந்த சீவன் மீட்டுமந்த, உத்ஸர்ப் பிணியின் இரண்டாம் சமயத்தைத் தனக்குப் பிறப்பாரம்ப பிரதம சமயமாகப் பெற்றுப் பிறந்தும், இவ்வாறே உத்ஸர்ப்பிணிகால மெல்லாம் ஏறின பின்பு, பின்னை, அவசர்ப்பிணி காலமும் இப்படி யேறப் பிறப்ப தொன்றென்றாக, இவ்வண்ணம் அனந்தானந்த உத்சர்ப்பிணி அவசர்ப்பிணிகாலம் எல்லாம் பிறக்கக்கடவ, ஏகஜீவனால். இனி, பவபரிவர்த் தனையாவது மக்கள் பவத்தில் க்ஷுத்ர பவத்தை சமயமாக விரளித்து, அச்சமய சலாகை யேறுமளவும் சூக்ஷ்ம ஏகேந்திரிய பரியாப்தனாய்ப் பிறந்து, பின்பு சமயோத்தர கிரமத்தினாலே மூன்று பல்லம் ஆயுளும் ஏறப்பிறந்து, பின்பு விலங்கு கதிபவமும் இவ்வாறே பிறந்து, நரககதிகளில் ஜகன்னியாயுள் பதினாயிரத்தையும் சமயமாக விரளித்து அச்சமயத்தில் சலாகை ஏறுந்தனையும் அவ்வாயுளே ஏறப் பிறந்து, பின்பு சமயோத்தர கிரமத்தினாலே முப்பத்து மூன்று சாகரோபமத்தளவும் ஏறப்பிறப்பதுவுமாகும், இப் பெற்றியே சிலகடல்குறையவே தேவகதி யேறப் பிறப்பதுவுமாகி, பவபரிவர்த்தன மொன்றென்றாக, இவ்வண்ணமே அனந்தவாரம் ஏறப்பிறந்த தொரு ஜீவன். இனி பாவபரிவர்த்தனை யென்பது, யோகமும், பரிணாமமும், அனுபாகமும், கர்மஸ்திதியும், நிறைந்து யோகத்தோடும் பரிணாமத்தை பராவர்த்தித்துப், பரிணாமத்தோடும் அனுபாகத்தைப் பராவர்த்தித்து அனுபாகத்தோடுங் கூட கர்மஸ்திதியை பராவர்த் தித்து இப்படியே, உத்தம மத்திம ஜகன்னிய யோக பரிணாம அனுபாக கர்மஸ்திதியை பராவர்த்திக்க,

ஒருபாவ பரிவர்த்தனையாக இவ்வண்ணம், அனந்தானந்தபாவபரிவர்த்தனை செய்தது ஏக ஜீவன், இனி ரூபபரிவர்த்தனை என்பது ஏகேந்திரிய த்வீந்திரிய, த்ரீந்திரிய, சதுரேந்திரிய, பஞ்சேந்திரிய ஜீவராசிகள் ரூபமெல்லாம், கொண்டது கொள்ளாதே எய்தக் கொண்டுபிறப்பதொன்றென்றாக, இப்படியே அனந்தானந்தவாரம் பிறந்ததொரு ஜீவன, இனி நாமபரிவர்த்தனை யென்பது ஏகேந்திரியாதிகளுடைய நாமங்களெல்லாம் கொண்டது கொள்ளாதே எய்தக் கொண்டு பிறப்பதொன்றாக, அனந்தானந்தவாரம் எய்தப் பிறப்பதொரு ஜீவன், இவ்வகையே ஏழுவகை பரிவர்த்தனையாலும் உலைக்கொண்ட அவிழ்போல மறுகாநிற்கும் ஜீவராசிகள் எல்லாம் சம்சாரஜீவன். எ-று.

4 பொல்லாத சிந்தை பொருந்தும் வினையழலுள்
வல்லே யுயிர்விருகம் வந்தெரிய —நில்லாத்
தடுமாற் றெரியழலுள் நான்வேக லல்லால்
விடுமாறு மற்றுண்டோ வேறு. 216

(இ - ள்.) உடலென்னும் பெருங்காட்டில் உயிரென்னும் பெருமிருகங்கள் கர்மமென்னும் பெருந்தீயால் கதுவப்பட்டுப் பிறவியென்னும் தடுமாற்றம் உற்று சம்சாரமென்னும் தூறு துடக்க துக்கமுற்றுப் போவதன்றி ஈங்கிதனை, விட வல்லார் யாவரோ? என்றவாறு.

5 தோற்றப் பெருங்காட்டுந் துன்னும் பொறிவேடர்
கூற்றந் துவர்நான்குங் கோனுயாத்—தோற்றிலா
மித்தந்தா லவ்வுயிர்கள் வேறுவழி காணது
செத்துத் திரிதருமாற் சென்று. 217

(இ - ள்.) பிறவியென்னும் வன்காட்டுள், பொறி யென்னும் வேடர்தொடர, தோஷமென்னும் துவர் நான்மைக் கோணுய்கள் கொலேபுரிய, அவற்றுக்கு அஞ்சி உயிரென்னும் மடமான்கள் மித்தியாத்வத்தி னல் வேமுெருவழி காணமாட்டாது, ஸம்ஸாரத்துள் அஞ்ஞானத்தால் பிறப்பு இறப்பென்னும் பேரழலுள் வெதும்ப அதனுக்கு ஐயுறவுண்டோ. எ-று.

6 தாஞ்செய் வினையின் சுழற்சி தயிர்க்கடைகோல்
தாஞ்செய் வினைநாணின் றன்மைபோற்—ருஞ்செய்
வினையிருமை யாற்பிறந்து மீண்டிறந்து மிந்த
மனைநிகள நீக்கார் மதித்து. 218

(இ - ள்.) தாஞ்செய்த புண்ணிய பாபங்களால் தயிர்கடைகோலில் கயிறே போன்று, ஒருதிசை சுற்ற வொருதிசை அவிழுமாறுபோல், ஒன்றுவிட ஒன்று விடாதே கட்டுமதனல்; கறங்கும், பேய்த் தேரும், தேர்க்காலும் போலச்சுழன்று மறுகாநிற் கும் இதனைக் கழிப்பாரில்லேகாண் பவ்விய ஜீவனே யென்றவாறு.

7 மக்கள் மனைசுறவா மன்னுதுவ ராருக
மிக்க பெருநோய் வியன்றிரையாந்—தொக்க
பெருமோக நீராப் பிறவிக் கடலே
நிருமோக மாக்கலத்தா னீந்து. 219

(இ - ள்.) மோகமே நீராக, மனையும் மக்களுஞ் சுருவாக, காமகுரோதமான மாயா உலோபமே ஆருக, நோய் பிணிகளே திரையாக, இப்படிப்பட்ட பிறவிக் கடலை நிர்மோக மென்னும் மரக்கலத்தால் நீந்தி முத்தி யென்னும் கரையேறுவது காண் பவ்விய ஜீவனே என்றவாறு.

8 இந்தியத்தி லின்பந்தா னெள்ளளைந்தே யிங்கிதற்குத்
தந்துரைப்பின் றுன்பங்க டான்பெரிதும்—அந்தச்
சுகமாசைப் பட்டுச் சுழிந்துரும்பு போல
மிகமாலுற் ருயுயிரே வீழ்ந்து. 220

(இ-ள்.) *அற்பசுகத்தை அபேக்ஷித்து அனேகமாகிய துன்பமுற்று, உதக ஆவர்த்தத்துள் அகப்பட்ட திரணம் போலப் பிறவித் தடுமாற்றச் சுழியிலகப்பட்டு, இந்திரியங்களின் வசவர்த்தியாய் இடும்பையெய்திக் குடும்பத்தை இரக்ஷிப்பான் பொருட்டு உடம்பு கைக்கொள்கை உனக்குறுமாறே? பவ்விய ஜீவனே, என்றவாறு.*

9 ஐந்தாய வைம்புலன்கட் கீந்த வனந்தபவம்
*உய்ந்தீங் கொருபவந்தா னுன்றனக்கு—வந்தீங்கு
அனந்தசுக மெய்துநெறி யாருயிரே யானீங்கு
உணர்ந்துரைப்பன் கேளாய்நீ யுற்று. 221

(இ-ள்.) *போனபிறவிகள் அனந்தமும் இந்திரியங்களுக்கு உதவித் துன்புற்றுத் துயருழந்தாய்; உனக்கு இனி ஈண்டு ஒருபவமாயினும் நல்லறத்தைக் கைக்கொண்டு தவஞ்செய்து கர்மங்களைக் கெடுத்து அனந்த சுகத்தை யனுபவிக்கலாகாதோ? பவ்விய ஜீவனே என்றவாறு.*

10 ஆர்ந்து நிறைவெய்த லாற்ருமை யைம்புலன்க
ளூர்ந்து நினைமலைப்ப வுட்டுயரால்—சேர்ந்தங்கு
அறுநீ ரளறுப்பா யாபோலத் துன்பம்
உறுநீர்மை பேணுயோ வுற்று. 222

(இ-ள்.) *கர்மவசத்தா லறிவு கெட்ட ஜீவன் அற்பமாகிய இந்திரிய சுகத்திற்கு ஆசைப்பட்டு*

---

* ஈந்திங் என்பதும் பாடம்.



KARANDAI

Brahmachari

K. SURIYAKOTI

மற்றதுவும் நிறைய அனுபவிக்கப் பெறாது, பண்டு ஓர் எருது, தன்னையுடையவன், அனேகம் எத்தனத்தால் கொண்டுபோகப் புகத் தன் கள்ளத் தனத்தால் எழுந்திருக்கமாட்டாதது போலக் கிடந்து, மற்றவன் போனவாறே யெழுந்திருந்து, மேல்வற்றிக் கீழளருய்த் துறையின்றிக் கிடந்ததோர் நீரினைக் கண்டு அந்நீரைப் பானம் பண்ண வேண்டிப்புக்கு, அவ்வளற்றிலே கால்புக வீழ்ந்து அவ்வளற்றைக் கடந்து நீர் குடிக்க மாட்டாது நின்று நாஉலர்ந்து இறந்து போயிற்று. அஃதேபோல், இந்திரியத்தின் விருப்பத்தின்படி யெய்த மாட்டாதே, மோக மென்னு மளற்றின் கண்வீழ்ந்து வீணே கழியாதே, தர்மத்தை யெய்தி, கர்மங்களைக் கெடுத்து மோக்ஷசுகமாகிய அனந்த சுகத்தை அனுபவிப்பது காண் பவ்ய ஜீவனே என்றவாறு. அ-ம்.

11 துன்பச் சிகையார் பிறவிச் சுழற்சியை
*யன்புற் றியாரே யவிப்பார்கள்—இன்பம்
†உகுதீ கடனீரான் முன்னவிப்போ மென்னுந்
தகுதிதர வல்லார் தலை. 223

(இ-ள்.) பெருக்கக் காய்ந்த இருப்புவட்டுச் சின்னீர்த் திவலையில் அவியாதவாறே போலப் பிறவித் தடுமாற்றம் என்னும் பெருநெருப்பால் வந்த துக்கமென்னுஞ் சுடர், திருகி எழுந்தால் அப்புலன்களால்வரும், அனுபவச்சிறு திவலையின் இன்ப நீரால் அவிப்பதரிது, அனந்தசுக மென்னும் நிறைகடலிடைப் புக்காலன்றி, அவியாது காண் பவ்ய ஜீவனே என்றவாறு.

---

*யன்பற்றியாரே என்றும் †உகுதி என்றும் பாடம்.

12 ஞான தரிசனமும் வீரியமும் நற்சுகமு
மான விவையனந்த மாவுடைய—நீநின்
பெருமையினை யோராய் பிறரிடவுண் டுய்யு
முரிமையழ காமோ வுனக்கு. 224

(இ-ள்.) அனந்தஞானம், அனந்ததரிசனம், அனந்தவீரியம், அனந்தசுகம் என்னும் சதுர்வித மாகிய குணங்களை யுடைய பவ்விய ஜீவனே, சிறை யடைப் பட்டோன், சிறைவீடு சிந்தியாதே யொரு பொழுதே ஊண் சுகத்தை யிச்சித்தாற்போல, நீயும் சம்ஸார மென்னும் சிறையிலடைப்பட்டு எக்காலத்தே னும், எங்கேனும் ஒருக்கால் எய்தும் இந்திரிய சுகத் திற்கு ஆசைப்பட்டு, அறத்தை மறப்பதோ பவ்ய ஜீவனே என்றவாறு.

13 நறுநாற்றத் துட்டாழா நன்றறிவி லிப்போ
லிறுமா றனந்தசுக முள்ளாய்—தெறுமோக
மெய்மயக்கத் துன்பத்தை யின்பமென வெண்ணிப்
பொய்மயக்கத் தாழ்வதோ புக்கு. 225

(இ-ள்.) சுகந்தம் கமழும் மலர்களிற்றாழாதே, துர்க்கந்தத்தின் மீதே இச்சிக்கும் மக்ஷிகஜாதியே போல, ஸன்மார்க்க குணங்களில் தாழாதே, துன் மார்க்க குணங்களினல் மோஹத்தின் வசவர்த்தியாய் ஸம்ஸார துக்கத்தை சுகமென்று ஆசைப்பட்டு ஆழ் குழியில் வீழ்வதோ? தக்கது என்றவாறு. அ-ம்.

14 நீவேண்டிற் றெல்லாம் நினக்குவந் துற்றுலுந்
தான்வேட்கை நிற்குந் தகைமையதோ—போய்வேட்கை
யுண்டு தனிவில்லா வூழ்வினையா மோகத்தைக்
கண்டு களையுயிரே காத்து. 226

(இ - ள்.) எத்தனை படையாளரை ஈட்டினாலும், நாயகனானவன்பீடினாலன்றி வெற்றியில்லாதவாறே போல, எத்தனையேனு நீ இச்சித்தாய், அத்தனையும் பெற்றாலும், சற்றுந்தணிவில்லாத மோகத்தைக் கெடுத்தாலன்றி அநந்தசுக மெய்துவது அரிதுகாண் பவ்ய ஜீவனே என்றவாறு.

15 பெருகு மெரிவிறகு பெற்ற தனையு
மருகு மதுவிலதே லாங்குத்—தெரியுங்காற்
பொன்பெருக மோகம் பெருகும் விடினீங்கு
மென்பதனல் மோகமொழி யீண்டு. 227

(இ - ள்.) விறகு இட்டதனையும் பெருக எரிந்து பஸ்மமாக்கும் அக்னியே போன்று, எத்துணை பொருள் பெருகினும் அத்தனையும் மோகம் பெருகும், மோகம் பெருகின் துன்பம் பெருகும், அவ்வக்கினி விறகு இடாதே யொழிய அவிந்தாற்போல அப்பொருளின்மீது பரிணாமத்தாலாகிய ஆசை கெடவே, துக்கம் கெடும் காண் பவ்ய ஜீவனே என்றவாறு.

16 விடந்துட் டனிற்கடிதே வேட்கையிற்புன் றெய்தே
குடும்பிந் திரசாலங் கூறின்—இடந்தந்த
தன்புடையா னல்லன் தருவின் முகிற்போல
வன்புடையா னல்ல றுயிர்க்கு. 228

(இ - ள்.) பிராணிகட் கிடும்பை செய்யுந் துஷ்டரில், விஷமே நன்று; அவ்விஷந் தீண்டினாரையே கொல்லும்; துஷ்டர் தீண்டாதாரையுங் கொல்வர்; அவாவுடையனாகி தேகி யென்பானில், புல்லே சிறிது, ஸம்ஸாரத்தினும் இந்திர ஜாலமே நன்று; கற்பக

விருக்ஷத்தில் இருந்தவர் தம் முகாக்ருதி அறிந்து கொடுப்பாரல்லர்; அமிர்தத்தினும் அனுக்கிரஹ முடையான் நல்லன்; அமிர்தம் உண்டாரை யன்றி உய்விக்கமாட்டாது; அனுக்கிரமுடையான் எல்லாப் பிராணிகளையும் இரக்ஷிக்க வல்லவன். ஆதலால் ஆசையும், சம்சாரமும், துஷ்டத்தனமுந் தவிர்த்து, தயாவும், அறமும் உண்டாக்குவது காண் பவ்ய ஜீவனே என்றவாறு. அ-ம்.

17 எண்ணி யறமுரு நிந்தியந்தா *வீட்டுவ
தெண்ணி யிருமுந் தொழிற்படுவ—தெண்ணீர்தா
மொன்றுமோர் வின்றியே யின்பமுறப் பெற்றூர்போல்
ஒன்றுநீ தேறியவா றுற்று. 229

(இ-ள்.) ஒரு காலமும் பிறப்பில்லாதாரைப் போல, அறத்தை மறந்து இந்திரியத்தின் வழி யொழுகுவது உறுதியோ? ஜீவனே என்றவாறு.

18 அறியாது பாலனு யாங்கிளமை சின்னுள்
பொறியார்ந்த பூண்முலைமேற் போகஞ்—செறிவாய்
நடுவிடும்பைக் காயுழந்து நல்வலிபோய் மூப்பா
மோடிவுடைமை யால்வீழு முற்று. 230

(இ-ள்.) யௌவனகாலம் அறியாமை அஞ்ஞானத்தாற் கழித்தாய்; நீ நடுவிளமைக்காலம் இன்பத் துக்கத் துன்பப்பட்டுஉழன்றாய்; மூப்பில் அறஞ்செறிவுங் கெட்டுப் போவாயோ? கடலாடுவார் திரை நீக்கி இருந்தாடுவேன் என்றிருந்தாலும்; ஸம்ஸாரத்திருந் தான்கருதிய காரியம் கூடுமாயின், அறஞ்செய்வேன்

*வீண்டுவது என்பதும் பாடம்.

என்றிருந்தாலும்; அவனுக்குக் கடலாடுகையும், இவனுக்கு அறமியற்றுதலும் கூடுமோ? ஸம்ஸாரஸ்திதி நிற்குமோ! கேளாய் பவ்ய ஜீவனே என்றவாறு.

19 கடும்பகைவ னுற்ருளுங் காமித்த மேனி
யிடும்பைப் பிணியா லிழிவாங்—கொடும்பாவத்
துன்புற்ரு னின்பாகும் தொல்வினையாற் பல்பிறவி
முன்புற்றுக் கூறுவா முற்று. 231

(இ-ள்.) ஒரு ஜீவனே நாயகனுகியும், பித்தனுகியும், கன்ருகியும், களிருகியும், நன்றியுள்ள நாயாகியும், பந்துவாகியும், பகைவனுகியும், அந்தமில்லா நற்குரவனுகியும், குதிரையாகியும், கழுதையாகியும், பன்றியாகியும், பசுவாகியும், பெண்டீராகியும், மணுளனுகியும், கண்டமிண்டக் காளையாகியும், தாஸனுகியும், பாவவுருவில் பாவியாகியும், பொறிநெறியறியாப் புன்மையனுகியும், மற்றும் உடலை மறைப்பதோர் ஆடையின்றி, உண்டியின்றி, யோடூர் சுழலவாகியும், இவ்வகைச்சுழலும் ஸம்ஸாரம் எவ்வகைத்தோவெனின் கேளாய் சீவனே என்றவாறு.

20 ஓடு *முருள்தான மொன்றலபேய்த் தேர்பலவு
மாடுந் துகள்பலவு மாவளியும்—நாடுங்கால்
விட்டெறியு நேமி விரைந்துசுழ னீர்ச்சுழியும்
கட்டுங் கறங்குங் கருது. 232

(இ-ள்.) சூருவளியும், பாருவளையமும், நீராயெழுந்த தேர்த்துகளும், மத்துறு தயிரும், மறிபுனலின் சுழியும், ஒத்தமைந்தோடும் தேர் உருள்கால் போலவும், கறங்கும், பேய்த்தேரும், கடுகச் சுழற்றிய

*முருடான் மென்றற் என்றும பாடம்.

நிறங்கிளர் கொள்ளிவட்டம் போலவும், திரிதரு செக்கும்கலமனை திகிரியும், மருவிய அம்மானையாடல்போலவும், சந்திரர் சூரியர் தாரகை நாண் மீன் அந்தரந்திரியும் அவ்வகைபோலவும், நெய்வகை நாழியின் நூலிடு கயிறு போலவும், இவ்வகையே சதுர்க்கதி ஸம்ஸாரச் சுழற்சியை பாவிப்பது காண் பவ்ய சீவனே, என்றவாறு.

21 என்னேமற் றிவ்வுடம்பு பெற்றும் அறநினையார்
கொன்னே கழிப்பதோ கொண்டுடலை—முன்னம்
பிறந்த பவமனந்த மிவ்வுடல் பெற்றந்தை
மறந்திருக்க லாகுமோ மற்று. 233

(இ-ள்.) இரஸவாதி ஔடதம் பெற்றும் ஸத்கிரியையும் பிரயோகமும் அறியானாகிலும், ஸம்ஸார சீவனும் மக்கள் யாக்கையைப் பெற்றும் கர்மச் சுழற்சியை போக்கும் அறத்தை அறிந்துக் கைக்கொள்ளானாகிலும், அவனுக்கு ஸ்வர்ணமும், இவனுக்கு முக்தியும் ஆகாது, என்கிற என்மொழியைக் கைக்கொள்ளாயாகிலும் ஸம்ஸாரத்தடுமாற்றத்து விபரீதமாகச் சுழன்றதனைப் பிரத்தியக்ஷமாகக் கண்டு அறத்தைக் கைக்கொண்டு ஸ்வர்க்காதி விபவங்களைப் பெற்றோர் கதையைக் கேட்டாகிலுந் தெளிவது காண் பவ்ய சீவனே என்றவாறு.

வஸந்ததிலகை கதை

22 இத்தீ விதேயத்து ளுஞ்சேனை யென்றுளது
எத்தீது மில்லா வெழினகருள்—ஒத்தார்ந்த
வாரார் முலையாள் வசந்த திலகையெனும்
பேரான் பெருநலந்தான் பெற்று. 234

(இ-ள்.) ஜம்பூத்வீபத்து பரதக்ஷேத்திரத்து தர்ம கண்டத்து, ஔதேயம் என்னும் விஷயத்துள், உஞ் சேனையென்னும் நகரத்தின்கண் வஸிப்பவளுமான பிரஸித்தமாகிய வஸந்த திலகை யென்னும் கணிகை என்பாள் (பொதுமகள்), அவளிட வீறும் விழுப்பமும் மெய்ப்பாடும் உடையளாய்ச் செல்லா நின்றகாலத்து கர்ப்பமாதலும், சிரங்கும் சொறியுமாய்ப் புலால் நாற்றமுமாய், கண்டாரிழித்தும் உமிழ்ந்தும் செல்ல, என் வயிற்றிற்பிள்ளை எனக்குப் பகைவனாக வேண்டு மென்று தன்னைத்தானே நொந்து செல்கின்ற காலத்து, நவமாஸம் நிரம்பி ஆணும் பெண்ணுமாகிய யுகளங்களைப்பெற்று யாது செய்தாள். எனின்,

23 பெற்ற விரட்டைகளை நோக்கியே பேழ்க்கணித்துச்
செற்ற மனத்தூர்ந்த சிந்தையளாய்—மற்றிவர்கள்
ஓகொடியர் இவ்வூர்ப் புறந்தி னிருபாலும்
போகிடுக வென்ருள் புகன்று. 235

(இ-ள்.) தான்பெற்ற இரட்டைகளிருவரையுந் தன் தாசியரை அழைத்து இவ்வூர் பூர்வதிசையில் ஒன்றும், பஶ்சிமதிசையில் ஒன்றும் போகவிடுக, என்றுரைப்ப, அவர்களும் கொடுபோய்ப் போக விட்டார்க்கு யாது நிகழ்ந்ததோ? எனின்.

24 அந்நகரின் மேற்கீழ்பால் விட்டிருந்த வவ்வணிகர்
தன்னவர்கள் கண்டவரைத் தாங்கொடுபோய்—அன்ன
மனையார்கட் கீந்தார்க ளாங்கவரும் பொற்பூண்
புனைவாகித் தாம்வளர்த்தார் போய். 236

(இ-ள்.) அந்நகரின் கீழ்ப்பால் விட்டிருந்த காகதேவனென்னும் செட்டிக்கு நட்பாளனாகிய

ஒருவன், மனுஷ்யர் தூற்றின்கீழ் கிடந்தழுகின்ற குழந்தையைக் கண்டெடுத்துத் தம் செட்டிக்கு கொடுப்ப கொண்டவனும், அக்குழந்தைக்குத் தனதேவனென்று நாமகரணம் செய்து வளர்த்தான். மேற்றிசையின் தூற்றின்கீழ் விட்டிருந்த குபேரகாந்தனென்னுஞ் செட்டிக்கு நட்பாளனாகிய ஒருவன் மனுஷ்யர் தூற்றின்கீழ் கிடந்தழுகின்ற பெண் பிள்ளையைக் கண்டெடுத்து தன் செட்டிக்கு கொடுப்ப, அவனும் கமலையென்று நாமகரணஞ் செய்து வளர்த்தான். குபேரகாந்தனென்னுஞ் செட்டியும், உத்தரமதுரை புக்கிருந்தான். அந்நாகதேவனென்னுஞ் செட்டியும் தக்ஷிணமதுரை புக்கிருந்தான். இவ்வகை இருவரும் தத்தம் நகரம் புக்குச் செல்லாநின்ற நாளகத்து அத்தனதேவன் குமாரகாலமாதலும், நாகதேவன் அவனுக்கு மணஞ்செய்விப்போமென எண்ணி, அக்குபேரகாந்தன் வளர்த்துக் கொண்ட கமலையைக் கேட்ப, அக்காந்தனும் சம்மதிக்க, உடனே அவ்விருவருக்கும் மணம் மங்களகரமாக நடந்தேறியது. பின்பு, எவ்வகையோ வெனின்,

25 நாள் வரைந்து கோளிக்கி நன்முழ்த்த நாணோக்கிக்
கேள்வர்கட் கெல்லாங் கிளந்தியற்றித்—தாள்வரைந்த
பூங்கணையா னன்ன பொலிவி னிகழ்காளைக்கு
ஆங்கு மணம்புணர்ந்தா ரன்று. 237

(இ-ள்.) தனதேவனும் கமலையை வதுவை செய்து வேறொரு மனையில் இருத்தி, தான் வாணிகம் போந்தான்; போய் தன் பண்டமெல்லாம் மாறிய பின், அச்சேனையென்னு நகரம்புக்கான். பின்பு,

இந்நகரத்து நிகழப்பட்ட வேசியை யாவளென்று வினவ, முன்புபோலவே வீறுடையளாய்ச் செல்லாநின்ற வஸந்ததிலகையைக் கூறக்கேட்டு, அவளுக்கு அத்தனதேவன் தனத்தால் விசுவாசமிட்டு, அவளோடுமருவி யிருந்து சில பகல்கழிந்த பின்பு அவ்விருவருக்கும் ஓர் ஆண்குழந்தை ஜனித்துச் செல்லாநின்ற நாளகத்து இப்பால் அக்கமலை அகத்து யாது நிகழ்ந்ததோ? வெனின்.

26 ஆறிரண்டு மாதவமு மையிரண்டு மாறிரண்டுங்
கூறும் பரிசைகளிற் குன்றுமைத்—தேறி
மனமொழிமெய் மாசிலா மாமுனிவ ரங்கே
மனசரிகை போந்தார் மதித்து. 238

(இ - ள்.) ரிஷியர்சரியா மார்க்கம் வரக்கண்டு கமலை நிறுத்துதலும், அம்மனையில் நிற்பது யோக்கியமன்றென்று யோசித்து, மற்றொருமனையில் நிற்றலும், கமலையும் மனோதுக்கமாய்த்தனக்கு இஷ்டராயிருக்குங் கன்னியருந்தானும் போந்து அம்முனிவரை நமஸ்காரஞ்செய்து, எம்பெருமானே! யான் நிறுத்த நில்லாதொழிந்த காரணம் என்? என்று வினவ, அத் தபோதனர் அவதிஞானத்தாலறிந்து கூறுவார். உங்கள் கூட்டுறவு உன்னுடன் பிறந்தானே, நினக்குப் பர்த்தாவானமையாலும், அதுவன்றியும் இப்பொழுது அத்தனதேவன் வியாபாரம் போந்து உஜ்சேனைநகரம் புக்குத் தனக்குத் தாயான வசந்ததிலகையோடு கூட்டுறவு நிகழ்த்தினன். அன்றியும் அவ்விருவருக்கும் ஓர் ஆண்குழந்தை பிறந்தமையாலும், உங்கள் பாபத்தினையும் ஸம்ஸாரத்தின்

பொல்லாமையையும் அறிந்து நின்றிலோம் எனக் கூறலும், அக்கமலை உள்ளமுருகினவளாய்த் திசை நோக்கி ஸம்ஸார வைராக்கியமாய் எனக்கு தீக்ஷை பிரஸாதிக்க என்றலும், அம்முனிவரர் கூறுவார், நீ, போந்து உச்சையினிக்குச்சென்று கண்டு பின்னைத் தவம் படுதி எனலும், அக்கமலை யாது செய்தாள். எனின்,

27 தலைமழிந்துந் தாதுக்கற் றேய்த்துடுத்துங் காதில்
குலைவி லுருத்திரகம் பூண்டு—சிலைநுதலில்
வெண்ணீறு பூசி மிகுபுகழுஞ் சேனையெனுங்
கண்ணார் நகரடைந்தாள் கண்டு. 239

(இ-ள்.) என்றிப்பரிசினால் தாபஸவேடம்பூண்டு, அக்கபோதனர் வாக்கியத்தால் தாங்கள் செய்த பாபத்தின் பலங்காண்பேனென்று அவ்வுஞ்சேனையெய்தி அவ்வஸந்ததிலகை மனைபுக்கு நோக்கலும், வசந்த திலகையும் தனதேவனும், ஓர் ஆஸனத்திருந்தாரைக் கண்டு திகைப் பெய்தி நிற்க, அவ்விருவரும் எங்குநின்றும் வந்தீர்? எங்குப்போகின்றீர்? இங்ஙனம், என்னகாரியத்திற்கு வந்தீர்? எனக் கூறலும்; கமலைகூறுவாள், தீர்த்தயாத்திரை போந்தேன்; உங்களை யாவரும் புகழ்வது கேட்டுக் காண வந்தேன் என்றலும், ஆஸனங்கொடுத்து அமருக என்றலும், அவ்வாஸனத்திருந்து கபோல தலத்துக் கையூன்றி இருப்ப, அவ்விருவருக்கும் ஜனித்த புத்திரன் விழித்து அழுதலும், அத்தொட்டிலின்பால் சென்று யாது சொல்லித்தாலாட்டினாளோ? எனின்,

28 தாலோ மகனேயென் றம்பியே மைத்துனனே
தாலேலோ தக்கபுகழ் சிற்றப்பா—தாலோ
மருமகனே யுன்றுயென் ருய்நங்கை நாத்தூண்
ஒருபவத்தே யிம்முறைக ளூற்று. 240

(இ-ள்.) என்றிப்பரிசினல் தாலாட்டக்கேட்டு அத்தனதேவனும் வஸந்ததிலகையும் ஓர் ஆஸனத்திருந்தவர்களிழிந்து, நீர் கூறுகின்றவசனம் என்னென்று வினவ, பாபிகள் நாம்பட்டதெல்லாம் கேட்பீராமின் என்று கூறுவாள். அவதிஞானிகளான தபோதனர் அருளிச்செய்யக் கேட்டுவந்தேன் என்று, நாம் பிறந்தன்று முதலாகப் புகுந்ததெல்லா முரைப்பாள், தனதேவனும் தானும் அவள் மக்களாமாறும், தங்களுக்கவள் தாயாமாறும், பாபத்தால் விளைந்ததெல்லாம் உரைப்பக் கேட்டுத் தம் உள்ளம் நொந்து ஸம்ஸார வைராக்கியம் வந்து, தம்மாலீட்டப்பட்ட திரவ்வியமெல்லாம் அருகத்பரமேசுவர பூஜையும் பாத்திர தானமும் பண்ணிப்போய், முன்னம் கூறிய அவதிஞானிகளாகிய முனிவரரைக் கண்டு நமஸ்கரித்து, அவ்வஸந்ததிலகை கைகூப்பி, எம்பெருமானே! நாங்கள் என்ன பாபம் செய்து இப்பவத்தில் இவ்வகை ஆயினேம், என்று வினவ, அப்பட்டாரகரும் இவர்கள் முன்பவத்தை அவதிஞானத்தால் ஓர்ந்து யாது அருளிச் செய்தார். எனின்,

29 முற்பவத்தி னீர்செய்த முடு பெரும்பாவம்
இப்பவத்தி லிவ்விடர்தா மெய்தக்கேள்—ஒப்பமைந்த
வேதியன்றன் மக்க ளிருவருமா மிச்சத்த
வாதியரா ரோதுவார் வந்து. 241

(இ - ள்.) முன்பவத்தின்கண் நீ பிராமணன்; நின் மக்களிருவரும் மாணிகளாய்ச் செல்லாநின்ற நாளகத்து, உத்தரமதுரையுள்ளான் ஓர் பிரதானசெட்டி ஸ்ரீபதி யென்பான், ஸம்ஸார நிர்வேகனாய்த் தவம்பட்டான்; அவனிட பாரியையும், அவர் தவம்பட யான் இருப்பேனல்லேன் என்று தவம்பட்ட பின்னை, செட்டி மகனும் அவன் பார்யையும் தவம்பட்டுச் செல்லாநின்ற நாளகத்தொருநாள், தீர்த்த ஸ்தானத்தின்கண் நால்வரும் வந்து தலைகூடி, அவ்விடத்து மாமனாரான ரிஷியர்பாடே மருமகளான அர்ஜியர் க்ஷேமகுசல மொழிகளைக் கூறாநிற்ப, மகனாகிய ரிஷியர்பாடே தாயாரான அர்ஜ்ஜியரிருந்து க்ஷேம குசல வார்த்தைகள் பேசாநிற்ப, இந்நால்வரும் இரா நின்ற காலத்து, முன்னஞ்சொன்ன பிராமணனும், மக்களிருவரும் (துறந்தோராகிய அந்நால்வரும் சரியா மார்க்கம் போகின்றாராகிய) அவர்களைக் கண்டு யாங்ஙனம் கூறினாரோ? எனின்,

30 இளைய குரவன் முதுகுரத்தி யெய்த
விளையான் முதுகுரவ னெய்தப்—பிளைகா
ளதிசயத்தைப் பாரீ ரவர்கடா முன்னே
விதிவசங்கட் டோபவத்தின் வீறு. 242

(இ - ள்.) என்றிப் பரிசினால் நீங்கள் மூவரும் ரிஷியரை அபஹாஸியம் செய்து, அவமார்க்கமும் கூறி யெடுத்துரைத்த பாவத்தால், அவ்வேதியன் அந்தப் பவத்திலே குஷ்டவியாதிகொண்டு மகா துன்ப மெய்தி மரண முற்று, வசந்ததிலகை என்னும் வேஸ்யையாய் பிறந்தாய்; அம்மானிகளிருவரும் சில நாள்

கழித்து வழிப்போகாநிற்ப, அவர்கள் ஓர் ஆற்றின் கண் ஓடங்கவிழ்ந்து அவ்விருவரும் உடனே மரித்து, உன் வயிற்றுள் ஆணும் பெண்ணுமாகப் பிறந்தார்கள். அவர்களை இரண்டு வாய்த் தலையிலும் போகிடுவிக்க, அவ்விரு பிள்ளைகளையும் இருவர் செட்டிகள் எடுத்துக் கொண்டுபோய், தனதேவனும் கமலையும் என்று பெயரிட்டு வளர்த்துத் தங்களுக்குள், மகள் பேசி கமலையைத் தனதேவனுக்கு மணம் முடித்து இராநின்ற நாளகத்து, தனதேவன் வாணிபம் போந்து, வியாபாரஞ் செய்து தனது ஊர் ஏறப் போகா நின்றவன், உஞ்சேனையிலே விட்டு உன்னுடனே கூடி ரமித்து இருந்ததுவும், தன்னுடன் பிறந்த இருவரும் தம்மிற் கூடிச் சுகித்ததுவும், இவை எல்லாம் முன்செய்தபாபத்தின் பலமன்றே! ரிஷியரை அவமானம் சொன்னால் இங்ஙனே யொக்கும் பாவம் விளையுமென்று நினைமின்! எனக்கூறி இன்னும்கூறுவார். தபோதனர்களை அவமானம் செய்து, தீய மொழிகளைக் கூறுபவர்க்கு விளையும் பாபம் இவை போல்வன அனேகம் உள என, அவ் அருந்தவத்தோன் அருளிச்செய்யக் கேட்டு, என்னே பிறவித் தடுமாற்றம் இருந்தவா! என்று தன்னுள் நொந்து, ஸம்ஸாரத்தை நஞ்செனு வெருவி, அம்மூவரும் யோக்கியமான தபங்களைக் கைக்கொண்டு பின்னால் அருந்தபத்தை நிகழ்த்தி, சுவர்க்கம் புக்கு அமரசுகம் அனுபவித்து, மீண்டும் இங்கே வந்து மறுமை ஸாதித்துக்கொண்டார் என்னும் கதையைக் கேட்டாகிலும், இப் பிறவித் தடுமாற்றத்தை அஞ்சுவது காண், பவ்ய ஜீவனே. எ - று.

31 ஒருபிறவி தன்னுள்ளே யொன்றியவிப் பாவம்
பெருகுதுயர் *பெற்றுற் பின்னும்—மருவும்
பிறுமத் தால்வந்த பாவமிதென் றஞ்சிப்
பிறுமத் தாலறமே பற்று. 243

ஸகல விமல கேவல ஜ்ஞான பகவத் அருஹத்பரமேஸ்வரன்
முகோத்கதமாகிய துவாதசானுப்ரேக்ஷையுள்

சிரேணிக மஹாராஜன் கேட்ப கணதரஸ்வாமிகள்
அருளிச்செய்த
ஐந்தாவது
ஸம்ஸார மென்னும் அதிகாரம்
ஸமாப்தம்.

6-வது அத்தியாயம்.

உலகம்

1 புரந்தரரும் பூமிமேன் மாந்தர்களும் போற்றி
நிரந்தரம் நின்றிறைஞ்ச நேரில்—வரந்தருநல்
வாம வடிவணங்கி மன்னு முலகியல்பை
நாம வகையுரைப்ப னன்கு. 244

(இ - ள்.) தேவேந்திரர்களும் சக்கிரவர்த்திகளும் முதலாக மூவுலகத்தோரும், வந்து இறைஞ்ச அன்னோர்க்கு மோக்ஷசுகம் எய்துவிக்கும் அறத்தை அருளிச் செய்த, சுவாமிஸ்ரீபாதகமலங்களை நமஸ்கரித்து, உலோகமென்னும் அதிகாரம் உரைப்போம் என்றவாறு.

---

*பெய்தாற் என்று பாடபேதம்.

2 அடிநாற் சதுரமா யாங்க ணடுவு
துடிபோன் றகன்று சுருங்கி—நொடியுங்கால்
ஏழிரண்டே நீளமோன் றைந்தொன்றே யேழகலம்
வாழுலக நாணின் வடிவு. 245

(இ - ள்.) அதோலோகம், மத்திமலோகம் ஊர்த்துவலோக மென திரிவித லோகத்துள்; அதோலோகவிஸ்தாரம் ஸப்தரஜ்ஜு, மத்திம லோக விஸ்தாரம் ஏகரஜ்ஜு, ஊர்த்துவ லோகவிஸ்தாரம் பஞ்சரஜ்ஜு, சித்தக்ஷேத்திர விஸ்தாரம் ஏகரஜ்ஜு, பூர்வ பச்சிமவடிவு, இவ்விஸ்தாரமாக உத்தரதக்ஷிணம் ஸப்தரஜ்ஜு ஹீனாதிகமின்றி நின்றது, சதுர்தச ரஜ்ஜு உத்ஸேதமாகி, பாஹ்யத்தில் கனோததி கனவாதம் தனுவாத மென்னும், த்ரிவாயு வேஷ்டிதமாகி, அப்பியந்தரத்தில் ஜீவ புத்கல தர்ம அதர்ம ஆகாசமென்னும் பஞ்சாஸ்திகாய வஸ்து விஸ்தாரங்களால் ஸம்பூர்ணமாகி எத்திசை யெத்தனை நோக்கினும் அனந்தானந்தமாயுள்ள ஆகாசபிரதேசத்தின் நடுவே நின்றது, இவை உலோகாகாரம். இவை ஸாமான்னிய வகை. இனி விசேஷவகையால் கூறும்பக்ஷத்து, அதோலோகஸ்திதி, எவ்வகை எனின், இரத்னபிரபை, சர்க்கராபிரபை, வாலுகாபிரபை, பங்கப்பிரபை, தூமப்பிரபை, தமப்பிரபை, தமஸ்த்தமப்பிரபை என்னும் மகா உக்கிர நரகம் ஏழாகும். இவற்றினுள்ளே யுண்டாகிய பிறவி விஸ்தாரம் எவ்வகையோ வெனின்.

3 ஒன்றுமுன் றைந்நேழு மொன்பதும் பன்னொன்று
பின்ருய பன்மூன்றே பீர்தடங்கட்—குன்றுந்
நமந்நம மாதியா வேழ்நரகி விரு
அமைவரம் பீர்ந்தடங்க ளாங்கு. 246

(இ - ள்.) கர்மையென்னும் முதல்நரகத்திற்குப் பதின்மூன்று புரையாகும்; வம்ஸையென்னும் இரண்டாநரகத்திற்குப் பதினொரு புரையாகும்; மேகை யென்னும் மூன்றாம்நரகத்திற்கு ஒன்பது புரையாகும்; அஞ்சனையென்னும் நாலாம்நரகத்திற்கு ஏழு புரையாகும்; அரிஷ்டையென்னும் ஐந்தாம்நரகத்திற்கு ஐந்து புரையாகும்; மகவியென்னும் ஆறாம் நரகத்திற்கு மூன்று புரையாகும்; மாகவியென்னும் ஏழாநரகத்திற்கு ஒரு புரையாகும். எ - று.

4 ஆறைந்து மையைந்து முவைந்து மீரைந்துங்
கூறி லிலக்கமிவை குன்றுவாந்—தேறுங்கால்
முந்நாறு மைந்திலா நூறு முறையுளியே
ஐந்நா றுயரந்தோர்க் கைந்தாம். 247

(இ - ள்.) பிரதம நரகத்தார்க்கு முப்பதுலக்ஷம் ஆவாஸமாகும்; இரண்டாம் நரகத்தார்க்கு இருபத்தைந்துலக்ஷம் ஆவாஸமாகும்; மூன்றாம் நரகத்தார்க்குப் பதினைந்துலக்ஷம் ஆவாஸமாகும்; நாலாம் நரகத்தார்க்கு பத்துலக்ஷம் ஆவாஸமாகும்; ஐந்தாம் நரகத்தார்க்கு மூன்று லக்ஷம் ஆவாஸமாகும்; ஆறாம் நரகத்தார்க்கு ஐந்து குறைந்த ஒரு லக்ஷம் ஆவாஸமாகும்; ஏழாம் நரகத்தார்க்கு ஐந்தே ஆவாஸமாகும்; இப் பெற்றிய முறையால் எண்பத்து நான்கு லக்ஷம்

ஆவாஸங்களுமாம்; இனி இவற்றின் பெயரும் நிலைமையும் எவ்வகையோ? வெனின்.

5 இந்தகமே சேணி பகிணகமே யென்றிவைதான்
வந்தன நாற் பாற்றிசையும் விந்திசையும்—இந்தகமாம்
நன்னடு சேணிநாற் பாற்றிசையும் விந்திசையு
அந்நடு கிண்ணகமே யாம். 248

(இ - ள்.) இந்த்ரகம் என்றும், ஸ்ரேணீபந்தமென்றும், புஷ்ப பிரகீர்ணகங்களென்றும், கூறப்படும் நரகா வாஸங்களாம்; அவற்றுள், இந்த்ரகம் என்பது நடுவேயிருக்கும் ஆவாஸம்; ஸ்ரேணிபந்தம் என்பது நான்கு திசையிலும் வித்திசையிலும் ஒழுங்கு கொண்டு நிரையே யிருக்கும் ஆவாஸம்; புஷ்ப ப்ரகீர்ணக மென்பது இந்த ஸ்ரேணிபந்தங்களினிடையே இருக்கும் ஆவாஸமாம்; அவைகளின் கூட்டுத் தொகைக்கு இத்தனை என்பதோர் எண்ணில என்றவாறு.

6 கொடிக்கழற் காய்முட்போற் கும்பிக் குழியி
லடித்தலத்திற் றேன்றி யமைந்தால்—வெடித்திழிய
நான்ருங் கயின்மேலே நைந்நாங்கு விழ்துயரை
ஏன்றுரைக்க லாகா வெனக்கு. 249

(இ - ள்.) ஹிம்ஸாநந்தம், ம்ருஷாநந்தம், ஸ்தேயாநந்தம், ஸம்ரக்ஷணாநந்தம் என்னும் இரௌத்திர தியானத்தினலும், கிருஷ்ண நீல கபோதலேசியா, பரிணமத்தினலும், கொலை, பொய், களவு, காமம், பரிமித பரிக்கிரஹத்தாலும், மகா பாபங்களை பந்திப்பித்துக் கொண்டு நரகாயுஷ்யம் கட்ட, பின்பு மேலே உரைக்கப்பட்ட நரகாவாஸங்களில் தோன்றி

அந்தர் முகூர்த்தத்தில் சரீரமெல்லாம் நிறைந்து, தாங்கள் முன்பு செய்த பாபத்தை விபங்க ஞானத்தாலறிந்து, ஒருவர்க்கொருவர் முப்பத்திரண்டு, ஆயுதங்களை விகுர்வணை செய்து கொண்டு, தறிப்ப விழுவார், முறிப்ப விழுவார், பறிப்ப விழுவார், செறிப்பவிழுவார், முறிந்துவிழுவார், பறிந்துவீழ்வார், குறைந்து வீழ்வார், ஈர்ந்து வீழ்வார், சோர்ந்து வீழ்வார், ஊர்ந்து நால்வார், பேர்ந்து வீழ்வார், எரிப்பாரும், பொரிப்பாரும், நெரிப்பாரும், முரிப்பாரும், அடுவாரும், சுடுவாரும், கடிவாரும், ஓடுவாரும் அடிப்பாரும், புடைப்பாரும், ஒடிப்பாரும், கடிப்பாரும், கழுவேற்றுவாரும், அழிவாக்குவாரும், ஒழியாவகை ; புரண்டு வீழ்வார், சுருண்டு சூழ்வார், உருண்டு சூழ்வார், காதுவார், மோதுவார், ஊதுவார் ஊதுலை அகத்துள் துன்பஞ் செய்வார், கால்களை முறிப்பார், தோல்களை யுரிப்பார், வாய்களைப் பிளப்பார், தோள்களை யொடிப்பார், நாக்கைப் பறிப்பார், பாக்கு இரண்டென ஆக்குவார், தீக்களிற் புரட்டியும், ஊக்கியும் எரித்தும், உரோமந்தோறும் ஊசிகளை பயில்புறச் செறித்தும், உகிர்தோறும் வயிரமுள்ளுருவச் செறித்துஞ் செக்கிடை யாட்டியும் கொக்கின்வாய்க் கொளுவியும், தலைகளை நாற்றியும், உலையழற் கொளுவியும், உறுப்புறுப்பு எல்லாந் தறிப்ப ஒடுங்கியும், காரகலில் பொரித்தும், வாரெழப் புடைத்தும், மலைவிலா வகை யுலைவில் போர்செய்தும், நெறு நெறு நெருக்கியும், மறு மறு மறுக்கியும், சொல்லமுடியா எல்லையிற்றுன்பம் இவ்வகையே எய்துவார் ; அங்காரகர் உருவம் எவ்வகையோ ? எனின்,

7 பெண்ணுண தென்றறியாப் பேடி யுருவதனே
டுண்ணோது மின்றி யுளமறுகிக்—கண்ணோற
நோக்கருமை யாற்பெரிய காள நிறமேனி
நீக்கரிய துன்பூ ணிலே. 250

(இ-ள்.) பர்வதங்களை யுருக்கும் சீதோஷ்ணங்களால், மூவுலகத்துள்ள ஆகாரமெல்லாம் பக்ஷிக்க வென்னும் க்ஷுதையாலும், கடலின் நீரெல்லாம் குடிப்பே னென்னும் திருஷ்ணையாலும் மறுக்க மெய்தி நரகாயுஷ்யம் உள்ளளவும் இவ்வாறு துன்புறுவர், ஆயுஷ்யம் அங்நாரகருக்கு எப்பெற்றி என்பை யாயின், முதல் நரகத்தார்க்கு ஒரு கடல் ஆயுளும், இரண்டாம் நரகத்தார்க்கு மூன்று கடல் ஆயுளும், மூன்றும் நரகத்தார்க்கு ஏழுகடலாயுளும், நாலாம் நரகத்தார்க்குப் பத்துக் கடல் ஆயுளும், ஐந்தாம் நரகத்தார்க்குப் பதினேழு கடலாயுளும், ஆறும் நரகத்தார்க்கு இருபத்திரண்டு கடலாயுளும், ஏழாம் நரகத்தார்க்கு முப்பத்திமூன்று கடலாயுளும் உள. அங்நாரகர்களுக்கு ஆயுள்பரியந்தம் அபமிருத்யு வில்லை. கண்ணிமைக்கும் பொழுதும் இடையீடின்றி வெதும்பித் துன்புறுவர். எ-று.

8 ஈன்றதாய் போன்றுயிருக் கின்பம் வருவகையா
லேன்ற வறமுரைக்கு மெம்மிறைவ—னூன்றமைந்த
நல்லறந்தைப் புல்லுவரே நன்னுரிந் * துன்பந்தான்
சோல்லுங்கான் மன்னுயிரே தொக்கு. 251

9 மும்முழங்கை யேழ்வில்லு மூவிரன் டங்குலமுஞ்
செம்மை முதனரகிற் சென்றுயரஞ்—செம்மையாற்

*துன்பங்கள் எனவும் பாடம்.

கீழ்க்கீ ழிரட்டித்தே கீழாம் நரகுயரம்
நோக்கிற் சிலையைந்து நூறு. 252

(இ - ள்.) பிரதம நரகத்தார்க்கு உத்ஸேதம் ஏழு வில்லும் மும்முழமும் ஆறுவிரலும் (அதாவது ஏழேமுக்காலே வீசம் வில்) ஆகும்; அதனை நரகந் தோறும் இரட்டித்துச் செல்ல ஏழா நரகத்தார்க்கு ஐந்நூறு வில்லுயரமாகும். எ - று.

10 நாற்பான்மே லொன்பதா மாதிசையில் வித்திசையி
லேற்பாறென் றேகுறையு மேற்தோறும்—பாற்பான
வெட்டுத் திசைக்கண்ணு மோரோன்றே யீனமா
முட்டாமை சேடிதவின் முற்று. 253

(இ - ள்.) நடுவிலுள்ள இந்திரகத்தின் மாதிசையில் ஸ்ரேணிபந்தம் நாற்பத்தொன்பதாகும்; வித்திசையில் ஸ்ரேணிபந்தம் நாற்பத்தெட்டாகும்; இதன் நடுவெல்லாம் புஷ்ப ப்ரகீர்ணகம் என்பனவாம்; புரைதோறும் புரைதோறும் எட்டெட்டாகச் சுருங்கிச்சென்று ஏழாநரகத்திற்கு ஐந்தே ஆவாஸமாகும். இரத்தின பிரபையின் கொழுப்பம் ஓரிலக்ஷமும் எண்பதினாயிரம் யோஜனையுமாகும்; சர்க்கரா பிரபையின் கொழுப்பம் முப்பத்திராயிரம் யோஜனையாகும்; வாலுகாபிரபையின் கொழுப்பம் இருபத்தெண்ணுயிரம் யோஜனையாகும்; பங்கபிரபையின் கொழுப்பம் இருபத்துநாலாயிரம் யோஜனையாகும்; தூமபிரபையின் கொழுப்பம் இருபதினாயிரம் யோஜனையாகும்; தமபிரபையின் கொழுப்பம் பதினாறாயிரம் யோஜனையாகும்; தமத்தமபிரபையின் கொழுப்பம் எண்ணுயிரம் யோஜனையாகும்; இவ்வகையே நரக பூமியின்

கொழுப்பம் எனக் கொள்க. இனி பிரதம நரகத்தார்க்கு ஒரு ஸாகரோபமம் ஆயுள் உத்கிருஷ்டமாகும்; ஜகந்யம் பதினுயிரம் வருடமாகும்; மேலோர் உத்க்ருஷ்டம் கீழோர்க்கு ஜகந்யமாகும்; வேதநீயமும், துக்கமும் கீழ் கீழ் ஒன்றிற்கொன்று இரட்டியெனக் கொள்க. எ - று.

11 இத்தன்மைத் தாய விருந்துன்ப மாநரகிற்
றுய்த்துப் பலகாலந் தொக்குயிர்கண்—மெத்தனவே
கல்லா தொருங்குணர்ந்தான் காட்சி யமிர்துண்டார்
புல்லார்க ளந்நரகிற் போய். 254

(இ - ள்.) நரககதியின் கிரமம் ஸம்க்ஷேபத்தால் உரைக்கலுற்றது, இனி மத்திமலோகத்தின் இயல்பைக் கேளாய் ஜீவனே என்றவாறு.

12 முதலுப்பு மூன்றுநற் றண்ணீர் *மதுநறவு
மிதமிக்க நெய்பா லிரண்டுந்—திதமுரைப்பின்
மற்றெழிந்த வெல்லாங் கருப்புநீர் வண்ணமாம்
பெற்றி யுரைப்பன் பெயர்த்து. 255

(இ - ள்.) முதல் சமுத்திரம் இலவண சமுத்திரம், இரண்டாவது காளோதக சமுத்திரம், மூன்றுவது புஷ்கரவரஸமுத்திரம், ஈற்றிலுள்ளது ஸ்வயம்புரமண ஸமுத்திரம் இம்மூன்றும் தண்ணீர் ஆம். வாருணிவர சமுத்திரம் மதுஸ்வாது, க்ஷௌத்திரவர ஸமுத்திரம் மத்தியஸ்வாது, கிருதவர ஸமுத்திரம் கிருதஸ்வாது, க்ஷீரவர ஸமுத்திரம் க்ஷீரஸ்வாது, மற்றெழிந்த சமுத்திரமெல்லாம் கரும்பின் ரஸம் என்றவாறு.

---

*மதுநறவுங் கிதமிக்க என்பதும் பாடம்.

இனி மூவுலகத்துள் வாழும் ஜீவன்கள் ஏகேந்திரியமும், த்வீந்திரியமும், த்ரீந்திரியமும், சதுரிந்திரியமும், பஞ்சேந்திரியமும் என்பனவாம். அவற்றுள் ஏகேந்திரியம் உலோகமெங்கும் உள ; பஞ்சேந்திரியம் த்ரஸ நாளிகையுள்ளே உளது ; த்வீந்திரியமும், த்ரீந்திரியமும், சதுரிந்திரியமும், ஜம்பூத்வீபத்திலும் இலவண சமுத்திரத்திலும், தாதகீஷண்டத்வீபத்திலும், காளோதக ஸமுத்திரத்திலும், புஷ்கரார்த்த த்வீபத்திலும், ஸ்வயம்புரமண ஸமுத்திரத்திலும், ஸ்வயம்பு ரமண த்வீப அர்த்தத்திலும், உள. ஒழிந்த த்வீபஸாகரங்களெல்லாம், பஞ்சேந்திரியமும், ஏகேந்திரியமும் உள என்றறிக. அவற்றுள் ஏகேந்திரியமென்பது எவ்வகையோ எனின்,

13 நிலநீ ரெரிகான் மரமுதலா வைந்துங்
கலமாக நின்றுறையும் காலை—புலமாகி
வாழுநா ளுள்ளளவும் வான்பரிசை தானுண்ணு
முழி வினையா லோருங்கு. 256

(இ - ள்.) பிரத்வி, அப்பு, தேஜஸ், வாயு, வநஸ்பதி என ஏகேந்திரியம் ஐந்து வகையால் அனந்தாநந்தம் ஸங்கியை யுடையவாகும். இனி த்வீந்திரியங்களெவ் வகையோ எனின்,

14 ஈரறிவா னுங்குணத் தோடு முரளுந்நன்
தீரை கிருமி திறந்தெரிந்—தோருங்கால்
வெள்ளலகு வெண்சங்கு வெண்சிப்பி யென்றின்ன
வுள்ளளவுங் கொள்க வோருங்கு. 257

(இ - ள்.) ஸ்பரிசனேந்திரியமும், இரஸனேந்திரியமுமாகிய ஈரறிவுடைய உயிர் ; நாங்குள், நத்தோடு,

நாகப்பூச்சி, முறள், திரை, திமிரி, வெள்ளலகு, வெண் சங்கு, வெண் சிப்பி இவை முதலாயினவும் கொள்க.

15 மெய்வாய்மூக் கென்றிவற்றின் மேய வறிவெறும்பு
செய்ய முகடு சிதலாதி—வைய மெலாம்
வந்நனைசெய் தேத்தவரும் வாம னருளினு
ரிந்தியமூன் ருமுயிரா மென்று. 258

(இ - ள்.) ஸ்பரிசனேந்திரியமும், இரஸனேந்திரியமும், கிராணேந்திரியமும் உடைய, மூவறிவுடைய வுயிர், எறும்பு, முகுடு, செல்லு முதலாக அசங்யாத சங்க்யை உளது. என்றவாறு.

16 வண்டுதே னீவிட்டில் வாய்ந்த நுளம்புறளி
விண்ட வெண் நூற்சிலந்தி வெண்டும்பி—யெண்டிசையும்
நோக்குங்கண் ணுண்டாகி நுண்செவியாற் கேள்விதனை
*யேற்க விலைபகரற் பாங்கு. 259

(இ - ள்.) ஸ்பரிசன, ரஸன, கிராண, நயநங்களையுடையவாகிய சதுரிந்திரிய ஜீவன்கள்; அந்து, தும்பி, வண்டுகள் முதலாக ஆகமத்துள் உரைத்தவை அஸங்கியாத முள. எ - று.

17 உடலோடு நாமூக்கு மோண்செவியே கண்ணு
மிடவியன்ற வைம்பொறிதா மெண்ணிற்—றடையில்லா
மானிடரு மானைமுதல் வல்விலங்கு மாறில்லாத்
தானெலும்பு தானுடைய தாம். 260

(இ - ள்.) ஸ்பர்சன ரஸன கிராணசக்ஷு சிரவண மென்னும் பஞ்சேந்திரிய முடைய தெனச் சொன்ன மனிதர் தேவர் நரகர் விலங்கு முதலாக எலும்புடைய ஜீவன்கள்; அவற்றுள் பஞ்சேதிந்திரிய விலங்கு,

* பார்க விலை என்றும் பாடம்.

இரண்டு வகைப்படும்; சம்ஜ்ஞி பஞ்சேந்திரியமும், அசம்ஞி பஞ்சேந்திரியமும் எனத் துறந்தோர் கூறுவர் இதனுள்; ஸம்ஜ்ஞி பஞ்சேந்திரியங்கள் குறிக்கொள்வன; அசஜ்ஞி பஞ்சேந்திரியங்கள் குறிக்கொள்ளாதன; அதாவது (ஸம்ஞிபஞ்சேந்திரியங்கள், தோற்செவியென்றும், அஸம்ஜ்ஞிபஞ்சேந்திரியங்கள் துளைச்செவி யென்றும் கூறுவர், துளைச்செவிகளுள் சில சம்ஜ்ஞி பஞ்சேந்திரியங்களும் உள என்றறிக) இவ் இந்திரிய பேதமான விலங்குகளுள் பிறப்பார் யாவரோ? வெனின், கேளாய் ஜீவனே.

18 *நீலலேச் யைதானப் பச்சக்கா ஹற்றுவரும்
பாலவகைப் பட்ட பரிணமங்-—கோல
மறுக்கத்தால் வியந்துயிர்கண் மாறு விலங்கா
யொறுக்கவே துன்புறுவ குற்று. 261

(இ-ள்.) நீலலேஸ்யா பரிணமத்தாலும், அப்ரத்தியாக்கியான க்ரோத மான மாயா லோபமென்னும் சதுர்வித கஷாயங்களாலும், அசுப பரிணம முதயஞ் செய்ய, இஷ்டவியோக அனிஷ்ட ஸம்யோக அலாப துர்வேதனையாகிய அசுபத்தியானமென்னும், சதுர்வித ஆர்த்தத்தியானத்தாலும் திரியக்காயுஷ்யம் பந்தமாகி, த்ரிய'க் ஜாதிகளாய் பிறந்து எவ்வகைத் துன்புறுமோ? வெனின்,

19 வெவ்வழலுங் கூர்பனியும் வேட்கைநீர் வெம்பசியுங்
கௌவைசெயும் மாதுன்பக் கால்வலையில்—*வௌவித்
துடர்ந்தடரச் சோர்ந்துழலுந் தோல்வினையா லல்லற்
படர்ந்தடர்தல் பல்விலங்கின் பண்பு. 262

*நீலிலச்சை என்பதும் *வேள்வி என்பதும் பாடம்.

(இ - ள்.) சரீர, மானஸிக, ஆகந்துக, ஸ்வாபாவிக மென்னும், சதுர்வித துன்பங்களாலும், மறுக்க மெய்தித் தனக்குற்ற துன்பம் பிறர்க்குரைக்க மாட்டாது, ஆர்த்த இரௌத்திரத்தியானத்தால், மரண மெய்திப் பின்னும் திரியக் ஜாதியில் பிறந்து, எவ் வகைத் துன்புறுமோ வெனில்,

20 கட்டுண்டு மூர்ந்துங் கடிய பொறைதரித்தும்
வெட்டுண்டும் வெவ்வினையால் வெப்துயிர்த்தும்—பட்டினியே
நீர்புல்லுங் காணுதே நின்றழுந்திப் பொன்றுமாற்
சார்பின்றிப் பல்விலங்கு தான். 263

(இ - ள்.) ஈர்ந்தும், அறுத்தும், இறைச்சியாய் உய்க்கவும், ஊர்ந்தும், உழுதும், உறுபார மேற்றி யும், முதுகு புழுத்தும், மூர்ச்சனை போகியும், தீய நாட்களில் தேவர்க்கென்று செகுத்தும், நோய்க் கொண்டு சுட்டிட நொந்தும், தம்யாக்கையைக் காக்கை முதற்பறவைகள் கவர்ந்து குத்தவும், பெரும் பண்டியும் இராட்டினச்செக்கும் வாரெழ வெருத்தின் வல்லிதினீர்த்தும், தானீன்ற குட்டியும் முட்டையும் தானே தயவின்றி விழுங்கியும், ஒன்றினை யொன் றுக் கொன்று நுங்கியும், பொன்றியும், பொன்றாத துன்பமுழந்தும், வாலும், மயிரும், தோலும், கோடும் அருளில்லாதவர் ஈர்ந்திடப் பட்டும், வஞ்சனை வலையால் வளைப்புண்டு இளைத்தும், துஞ்சினும் துஞ்சாத் துன்பம் ஏனைப்பல வுரைப்ப உலவாத ஊழ்வினையின் துன்பெய்தும் என்றவாறு.

21 சொல்லிய துன்பத் துழனி விலங்கதனைப்
புல்லார்கள் பொன்னெயிலிற் புங்கவன்றன்—நல்லாரய்க்

காட்சிதனை மாட்சித்தாங் காத லறவமிர்தம்
பூட்சியா வுண்டவர்கள் போய். 264

(இ-ள்.) இப்பெற்றிப்பட்ட விலங்கும், அக்கதியின் துன்பமும், ஸம்க்ஷேபத்தால் உரைக்கப்பட்டது. இனி, மத்திமலோகத்து மனுஷ்யரையும், அக்கதியும் சொல்லப்படுகின்றன. ஜம்பூ த்வீபமும், இலவண சமுத்ரமும், தாதகீஷண்ட த்வீபமும், காளோதக சமுத்திரமும், புட்கரவர த்வீபத்தில் அரை த்வீபமும் மானிடவுலகமாகும். இதனுள், ஹிமவான், மஹாஹிமவான், நிடதம், நீலி, ருக்மி, சிகரி என்னும் ஆறு குல மலையும், பாதம், ஹைமவதம், ஹரிவருஷம், விதேகம், ரம்மியகம், ஐரண்ணியவதம், ஐராவதம் என்னும் (ஏழு) நாடுகளும் ஆகும். இவற்றினுள் போகபூமியும், கர்மபூமியும் என இருவகையாகும். அவற்றுள், போகபூமி யெவ்வகைத்தோ ? எனின்.

22 உத்தம மத்திமரு மோன்று கடையவரும்
முந்தகயை ராய்ப்பிறப்பர் முன்புடைமை—மெத்தெனவே
நற்காட்சி யின்றியே நற்றுனஞ் செய்தவர்க
ளுத்தான புண்ணியமே யுண்டு. 265

(இ-ள்.) உத்தம, மத்திம, ஜகன்னிய மென்னும் போக பூமி மூன்றுவகைப்படும்; அவற்றுள் உத்தமர்க்கு மூன்று பளிதோபமம் ஆயுளாகும்; மூன்று நாளிடை விட்டொருநாள் கடலைப் பிரமாணமுள்ள அமுதுண்பர்; மத்திம போக பூமியார்க்கு இரண்டு பளிதோபமம் ஆயுளாகும்; இரண்டுநாள் இடைவிட்டு ஒருநாள் நெல்லிக் காயத்தனை அமுதுண்பர்; ஜகந்நிய போகபூமியார்க்கு ஒரு பளிதோபமம் ஆயுளாகும்;

ஒருநாளிடைவிட்டு அம்மானை காயத்தனை அமுதுண்பர்; அவர்களுக்குப் பத்துவகைப்பட்ட கல்பகவிருக்ஷமுள; அவையாவையோவெனின் மத்தியாங்கம், தூரியாங்கம், பூடணாங்கம், போஜனாங்கம், கிரகாங்கம், தீபாங்கம், மாலியாங்கம், பானங்கம், வஸ்திராங்கம் போஜனாங்கம் என்னும் கற்பகவிருக்ஷங்கள் உத்கிருஷ்ட வஸ்துக்களெல்லாங் கொடுக்கும்; அதன்றியும், நோய், மூப்பு, அபமிருத்தியுவு மின்றி நிரந்தரம் சுகமேஜீவிப்பர். இனி, இலவண சமுத்திரத்தினுள்ளேயும், காளோதக சமுத்திரத்தினுள்ளேயும் தொண்ணூற்ருறு அந்தரத்வீபங்கள் உள; அவற்றுள் தோன்றுமவர் யாவரெனில் மித்தியா திருஷ்டிகளுக்குச் செய்த, தான பலத்தினுல் முன்கூறிய அத்தீபத்தில் பிறந்து ஒரு பளிதோபம் ஆயுளும் க்ரோசம் உத்ஸேதமும் உடையராய், மக்கள் பவத்தில் பிறந்தும் விலங்கோடு ஒத்தவராவர்; அன்னவர் உருவம் எப்பெற்றியதெனின், ஒரு காலும், நெற்றியிற்கொம்பும், வாலுமுடையாரும், நான்றசெவியுடையாரும், யானை குதிரை ஆடு முதலியமுகம் போன்றவராயும், பூனை கரடி புலி அரிமாமுதலிய முகமுடையாரும் ஆவர். மேலும் முன்னங் கூறிய போகபூமியிலும் இச்சொன்ன தீபங்களிலும் மிலேச்சகண்டங்களிலும் தானமும், தவமும் இல்லை. அப்பரதகண்டங்களிலும், விதேகங்களிலும், ஐராவத கண்டங்களிலும், தானமுந் தவமும் உளவென்றவாறு.

23 நல்வினைகள் நற்ருனம் நற்றவங்க ளென்றிவைதாஞ்
சொல்லியநற் பூமிதனிற் ருேன்றினவாம்—புல்லித்

நவந்தானஞ் சீலங்கள் நக்கவை செய்நே
சிவந்நாங்கிச் சென்றுயர்வர் நேர்ந்து. 266

(இ-ள்.) மஹா சாகரத்தின் நடுவே இரத்தினம் பெற்றாற்போல மக்கள் பிறப்பெய்தி, பின்னும் நலம் நிலம் நல்லகுலம் ஒப்பற்றவடிவமும்பெற்று, அறத்தைப்பிழைக்க விடவேண்டாம் ஜீவனே எ-று. இனி, தேவகதியின்றன்மையினைக் கூறுவாம்.

24 ஈரைம் பவண ரிருநால் வியந்தரரு
மோரைந்து சோதிடர்பந் தோராறுஞ்—சீரிருந்த
வொன்பதின்மே லொன்பதின்ம ரோரைந்து மாந்துரங்க
மென்பதமக் கிவ்வகையே யியந்து. 267

(இ-ள்.) அசுரகுமாரர், நாககுமாரர், வித்யுத்குமாரர், உததிகுமாரர், ஸ்தனிதகுமாரர், தீபகுமாரர், அக்னிகுமாரர், வாதகுமாரர், சுவர்னகுமாரர், திக்குமாரர் என்னும் பத்துவகைப் பவணதேவர்களும்: அஸங்கியாத த்வீபசாகரத்துள்ளும், வெள்ளியம்பெருமலைமீதும், பவநங்களுள்ளும், கயங்கள் முதலாக வுடையன வற்றுள்ளும் வசிப்பவர்களாகிய, கின்னர, கிம்புருட, கருட, காந்தர்வ, யக்ஷ, இராக்ஷஸ, பூத, பிசாச ரென்னும் அஷ்டவித வியந்தர தேவர்களும் உறைவர்; இந்நிலத்தின்மேல் எழுநூற்றுத்தொண்ணூறு யோஜனைக்குமேல் சந்திராதித்தியரும், கிரக நக்ஷத்திர தாரா கணங்களும், மேருவைச்சூழ கமிப்பாரும் நிற்பாருமாகிய ஐவகை ஜோதிஷ்க தேவருமுறைவர்; இதற்குமேல் தொண்ணூற்றொன்பதினாயிரம் யோஜனை பூமிக்குமேல், சௌதர்ம ஈசான, சநத்குமார மாஹேந்திர, பிரம்ம, பிரம்மோத்தர,

இலாந்தவ, காபிஷ்ட, சுக்கிர மகாசுக்கிர, சதார ஸஹஸ்ரார, ஆனத, பிராணத, ஆரண, அச்சுத மெனப் பதினறுகல்ப வாசி தேவர்களும், அவற்றின் மேல், ஹேஷ்டிம ஹேஷ்டிம, ஹேஷ்டிம மத்திம, ஹேஷ்டிமோபரிம, மத்திமஹேஷ்டிம மத்திமமத்திம மத்திம உபரிம, உபரிமஹேஷ்டிம உபரிமமத்திம உபரிமஉபரிம என்னும் நவக்ரை வேயக ஸ்தானத்தி லுரையும் அகமிந்திர தேவர்களும், அவற்றின்மேல், அச்சா, கச்சா, வஜ்ரா, வைரோசனு, அச்சாமாலினி கச்சாமாலினி, வஜ்ரா மாலினி, வைரோசனு மாலினி ஆதித்ய விமானம் என்னும் நவாணுதிசையிலுள்ள அகமிந்திர தேவர்களும், அவற்றின்மேல் விஜய, வைஜயந்த ஜயந்த அபராஜித சர்வார்த்தசித்தி யென்னும் பஞ்சாணுத்தர அகமிந்திரதேவர்களுமாம். இவையே ஸ்வர்க்கஸ்தானமாகும்; இவ்வாறு கூறிய அஹமிந்திர ஸ்தாநங்களில் தோன்றுவர் எவ்வகை யரோ எனின்,

25 நற்காட்சி மாட்சியார் நற்றவத்தை யேகொண்டு
மெய்க்காட்சி யாலொன்று மேனிஃனயார்—அக்காட்சி
பொன்றுந் துணையும் புறப்பொருண்மேற் சிந்தியார்
சென்றங்குத் தோன்றுவரால் தேர்ந்து. 268

(இ - ள்.) அஹமிந்திரஸ்தாநத்திற்றேன்றுமவர் களைக் கூறினவாறு; இனி பவணரியல்பு கூறுவாம். அசுரர்க்கு இருபத்தைந்து வில்லோக்க மாகும்; ஒழிந்த ஒன்பதின்மர்க்கும் பத்து வில்லோக்கமாகும்; ஜோதிஷ்கருக்கும் ஆகாச சுவர்ண குமாரர்க்கும் ஏழு வில்லோக்க மாகும்; அசுரகுமாரர்க்கு ஒரு கட

லும் சிறிது அதிகமும் ஆயுளாகும் ; நாக குமாரர்க்கு மூன்று பல்லம் ஆயுளாகும்; சுவர்ணகுமாரர்க்கு இரண்டரைப் பல்லம் ஆயுளாகும் ; த்வீபகுமாரர்க்கு இரண்டு பல்லம் ஆயுளாகும் ; நின்றவர்க் கெல்லாம் ஒன்றரைப் பல்லமே ஆயுள் ; ஒரோவொருவர்க் கெனக் கொள்க. இவ்வாறு கூறப்பட்டது உத்தமா யுஷ்யம், ஜகன்னிய ஆயுஷ்யம் பதினுயிரவருடமெனக் கொள்க ; வியந்தரர்க்கு ஒருபல்லம் ஆயுஷ்யம் அதி கத்தோடுங் கூடியது உத்தமம் ; ஜகந்நியம் பதினுயிர வருடமாம்; ஆகாய சுவர்ண குமாரர்க்கு உத்தமம் ஒரு பல்லம் ; ஜகந்நியம் எண்பத்து நாலாயிரம் வருட மெனக் கொள்க. ஜோதிஷ்கர் எல்லார்க்கும் ஒரு பல்லம் ஆயுஷ்யம் உத்தமமாகும் ; ஜகன்னியம் ஒரு பல்லத்தை எட்டுக் கூறிட்டு அதில் ஒரு கூருகும் ; இவ்வாறு கூறிய கீழ்மூத்தேவராய்த் தோன்றுமவர் யாவரெனின், ஸம்மியக்த்வ மின்றி தானம், பூஜை, சீலம், உபவாஸத்தால் நிகழ்வர் எனக்கொள்க ; இனி ஸௌதர்ம ஈசானகற்பத்தார்க்கு இரண்டு கடலாயுஷ் யம் உத்தமமாகும்; ஜகந்நியம் ஒருபளிதோபம் ஆகும்; நடுவுமத்திம ஆயுஷ்யமாகும் ; அன்னவர்க்கோக்கம் ஏழுமுழமாகும் ; ஸநத்குமார மாஹேந்திர கல்பத் தார்க்கு ஏழுகடல் ஆயுஷ்யம் உத்தமம் ; ஜகந்நியம் இரண்டு கடலாயுஷ்யம் ; நடுப்பட்ட தெல்லாம் மத்தி மாயுஷ்யமாகும்; அன்னவர்க்கோக்கம் ஆறரை முழ மாகும் ; பிரம்ம பிரம்மோத்தர கல்பத்தார்க்குப் பத்துக் கடலாயுஷ்யம் உத்தம மாகும் ; ஜகந்நியம் ஏழுகடலாகும் ; நடுப்பட்டது மத்யமமாகும் ; அன்ன வர்க்கோக்கம் ஆறு முழமாகும்; இலாந்தவ காபிஷ்ட

கல்பத்தார்க்கு ஆயுஷ்யம் பதினன்கு கடலுத்தம மாகும் ; ஜகந்நியம் பத்துக்கடலாகும் ; நடுப்பட்டது மத்திமம் ; அன்னவர்க்கோக்கம் ஐந்தரை முழம் ; சுக்கிர மகாசுக்கிர கல்பத்தார்க்கு உத்தமாயுஷ்யம் பதினறு கடலாகும் ; ஜகந்நியம் பதினலு கடலாகும் ; நடுப்பட்டது மத்திமம் ; அன்னவர்க்கோக்கம் ஐந்து முழமாகும்; சதாரசஹஸ்ரார கல்பத்தார்க்கு உத்தம ஆயுஷ்யம் பதினெட்டுக் கடலாகும் ; ஜகந்நியம் பதினறு கடலாகும் ; நடுப்பட்டது மத்திமம், ஒக்கம் நாலரை முழமாகும். ஆனத பிராணத கல்பத் தார்க்கு உத்தமம் இருபது கடல் ஆயுஷ்யமாகும் ; ஜகந்நியம் பதினெட்டுக் கடலாகும் ; நடுப்பட்டது மத்தியமம் ; அன்னவர்க்கோக்கம் நாலுமுழமாகும் ; ஆரண அச்சுத கல்பத்தார்க்கு இருபத்திரண்டுகடல் உத்தம ஆயுஷ்யம் ; ஜகந்நியம் இருபது கடல் ; நடுப் பட்டது மத்யமம் ; ஒக்கம் மூன்று முழவரை. இதன் மேல் அகமிந்திர ஸ்தானத்தின் இயல்பு கூறுவாம் : ஹேஷ்டிம ஹேஷ்டிமத்தார்க்கு இருபத்தி மூன்று கடல் உத்தமாயுஷ்யம்; ஹேஷ்டிம மத்தியமத்தார்க்கு இருபத்தினலு கடல் உத்தமம் ; ஹேஷ்டிம உபரிமத் தார்க்கு இருபத்தைந்து கடல் உத்தமம் ; கீழோர் உத்தமம் மேலோர்க்கு ஜகந்நியம். இம்மூன்று ஸ்தா னத்தார்க்கும் ஒக்கம் மூன்று முழமாகும். மத்யம ஹேஷ்டிமத்தார்க்கு இருபத்தாறு கடல் உத்தமம் ; மத்திம மத்திமத்தார்க்கு இருபத்தேழு கடல் உத்த மம் ; மத்திம உபரிமத்தார்க்கு இருபத்தெட்டுக் கடல் உத்தமம்; கீழோர் உத்தமம் மேலோர்க்கு ஜகந்நியம்; இம்மூன்று ஸ்தாநத்திற்கும் ஒக்கம் இரு முழவரை

ஆகும். உபரிமஹேஷ்டிமத்தார்க்கு இருபத்தொன்பது கடல் ஆயுஷ்யமாகும். உபரிம மத்திமத்தார்க்கு முப்பது கடல் உத்தமம். உபரிம உபரிமத்தார்க்கு முப்பத்தொரு கடல். ஒக்கம் இரண்டு முழம் ஆகும். நவாணு திசைக்கு முப்பத்திரண்டு கடாலாயுஷ்யமாகும். ஒக்கம் ஒன்றரை முழமாகும். ஸர்வார்த்தஸித்தியார்க்கு, முப்பத்து மூன்று கடலுத்தமம்; ஒக்கம் ஒரு முழம் ஆகும். இப்பெற்றிப்பட்ட சுவர்க்கத்தின் படலம் எவ்வகையோ எனின்.

26 முப்பானேன் றேழ்நாலு மூந்திரண்டே யொன்றுஎன்று
நப்பாத மூன்றுமூன் றேன்பானுய்—மெய்ப்பால
வொன்றுஎன்றே யாய்ந்துறக்க—முள்ளளவு மேன்மேலர்
சென்றன்றே செல்வமோடு சேர்ந்து. 269

(இ-ள்.) ஸௌதர்ம ஈசானகற்பத்தார்க்கு முப்பத்தொரு படலமாகும்; சனத்குமார மாஹேந்திர கற்பத்தார்க்கு ஏழுபடலமாகும்; பிரம்ம பிரம்மோத்தர கற்பத்தாருக்கு நான்கு படலமாகும்; இலாந்தவகாபிஷ்ட கல்பத்தார்க்கு இரண்டு படலமாகும்; சுக்கிர மகா சுக்கிர கற்பத்தார்க்கு, ஒரு படலமாகும்; சதார ஸஹஸ்ரார கற்பத்தாருக்கு ஒரு படல மாகும்; ஆனத பிராணத கற்பத்தார்க்கு மூன்று படலமாகும். ஆரண அச்சுத கற்பத்தார்க்கு மூன்று படலமாகும். நவகிரைவேயகத் தார்க்கு ஒன்பது படலமாகும்; நவாணுதிசைக்கு ஒரு படலமாகும்; பஞ்சா ணுத்திரத்தார்க்கு ஒரு படலமாகும். ஆகப் படலம் அறுபத்து மூன்றாகும். எ-று.

27 எண்கோடி மேலைம்பத் தாறிலக்க மென்னுங்கா
னன்பாய வொன்பதினே டேழ்நாலும்—பன்பாய
எட்டொன்று மாகித்தான் நின்றனவே தாந்துறக்கத்
துட்டொன்று கோயிற் றொகை.

(இ - ள்.) இம் மூன்றுலகத்துள்ள விமான தொகையுங் கோயிற் றொகையுஞ் சொல்லுமிடத்து, அசுர குமாரர்க்கு அறுபத்து நான்கு இலக்ஷமும், நாக குமாரர்க்கு எண்பத்துநான்கு இலக்ஷமும், சுவர்ன குமாரர்க்கு எழுபத்திரண்டு லக்ஷமும், வாதகுமாரர்க்குத் தொண்ணூற்றாறு லக்ஷமும் ஆகும்; ஒழிந்த அறுவர்க்கும் தனித்தனி எழுபத்தாறு லக்ஷமாகும்; முன் கூறியவர்க்கு விமானத்தொகையும் ஜிநாலயத் தொகையும் இதுவே எனக் கொள்க. இனி மத்தியம லோகத்தே நானூற்றைம்பத்தெட்டு அக்கிரத்திம ஜிநாலயமுள்ளன ; வியந்தர ஜோதிஷ்க உலக விமானத் தொகையும் கோயிற்றொகையும் அஸங்கியாதமாகும். இனி, ஸௌதர்மகற்பத்திற்கு முப்பத்திரண்டு இலக்ஷமும், ஈசானகல்பத்திற்கு இருபத்தெட்டு இலக்ஷமும், ஸநத்குமார கற்பத்திற்குப் பன்னிரண்டு இலக்ஷமும், மாஹேந்திர கல்பத்திற்கு எட்டுஇலக்ஷமும், பிரம்ம பிரம்மோத்தர கல்பத்திற்கு நான்கு இலக்ஷமும், இலாந்தவ காபிஷ்ட கல்பத்திற்கு ஐம்பதினாயிரமும், சுக்கிர மகாசுக்கிர கல்பத்திற்கு நாற்பதினாயிரமும், சதார ஸ்ஹஸ்ரார கல்பத்திற்கு ஆறாயிரமும், ஆனதபிராணத கல்பத்திற்கு நானூறும், ஆரண அச்சுதகல்பத்திற்கு முன்னூறும் ஹேஷ்டிமத்திரயத்திற்கு நூற்றொருபத் தொன்றும், மத்திம திரயத்திற்கு நூற்றேழும், உபரிமத் திரயத்திற்குத் தொண்

ஹாற்றென்றும், நவாணுதிசைக்கு ஒன்பதும், பஞ்சாணுத்தரத்திற்கு ஐந்துமாம். இச்சொல்லப்பட்ட சங்க்யை விமானத்தொகையும், கோயிற்றொகையும்; எ - று.

28 இயற்கைச் சிறலயங்க *ளென்இந் துணையுஞ்
செயற்கையமை சேதியமு மெல்லாம்—மயக்கமிலா
முன்றிறன் முப்பொழுதும் வந்நிந்தேன் †முப்பிறப்பைக்
கான்றகதி யேறுங் கருத்து. 271

(இ - ள்.) இவ்வாறு வர்ணிக்கப்பட்டட்ட அஹமிந்திரஸ்தானத்துட்டோன்றுமவர் சம்யக் தர்சனமுடையவராய், தபஸ்சரணத்தால் தோன்றுவர். அங்ஙனந் தோன்றும் ப்ரகாரம் எவ்வகையோ வெனின், அண்டஜ, பிண்டஜ, ரோமஜ, வாளஜ, வல்கஜ மென்னும் பஞ்ச ஸயநங்களில் அந்தர் முகூர்த்த காலத்திலே ஷோடஸ வருஷ குமாரனுகி ஷோடஸ ஆபரண பூஷிதராகித் தோன்றித் தத்தமக்கு இயன்ற சுகம் எப்பொழுதும் கேடின்றி அநந்த சுகங்களைப்போல, தம்மாயுளுள்ளளவும் அனுபவிப்பார். கீழ் பதினுறு கல்பத்துள்ளார்க்கும் பிறப்பு இப்படியே, பிறந்தெழுந்திருந்த பொழுதே தங்களுடைய தேவிமாரும், பரிவார தேவியரும், தேவர்களும் அதிசய வஸ்துக்களோடும் சூழ்ந்து, பணி கேட்டிருப்பர் எ-று.

29 ஒளிதுளும்பு மேனியா யொன்றுமுப் பின்றிக்
களிதுளும்பு மின்பநீர் காதல்—விளிவின்றி
யிச்சைய தேவ்வன்ன மவ்வன்ன மேநயவர்
நச்சுவர்க ளுளும் நயந்து. 272

பா. பே. *எண்ணித் †முற்பிறப்பை.

(இ - ள்.) அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசித்வம், வசித்வம், (காம ரூபித்வம்) என்னும் அஷ்டகுணங்களோடு கூடி இனிதின் அங்கு கழிப்பர், இவ்வாறு தேவகதி ஸம்க்ஷேபத்தாற் கூறினேன். இனி, சித்த க்ஷேத்திரம் எவ்வகைத்து என்பாயாகில் கேளாய் பவ்யஜீவனே. எ-று.

30 இட்ட வுடலதனுக் கீன மிறையாகி
யட்ட குணந்தரித்தே யாறிருமை—யொட்டிய
மாதவத்து வீரர்கள் மன்னு மிடமதனை
யோர்ந்துரைந்த வாறுரைப்ப னுற்று. 273

(இ - ள்.) ஸ்படிகஜோதிமயமாய் நாற்பத்தைந் லக்ஷ யோஜனை விஸ்தாரமும், எட்டு யோஜனைக் கொழுப்பமுமாய் இருந்த சித்த க்ஷேத்திரத்தின் கண் மேலிட்ட வுடம்பிற்கு இறையூனமாகி, அமூர்த்த ஸ்வரூபமாகி மூவுலகத்துள்ள நரேந்திர, சுரேந்திர சுக மெல்லாம், தம்மிடத்திலே ஒருஸமயகாலத்தில் நிகழ் கின்ற சுகத்திற்கு சமான மாகாதவாறே போன்று, அனந்த சுகமுதலாக எண் குணங்களோடுங் கூடி ஊழிபெயர்ந்து உலகமறியினும், என்றுங் கெடாத சுகத்தோடுங் கூடினர் இருக்கும் க்ஷேத்திரம், சித்த க்ஷேத்திரமாகும். அந்த க்ஷேத்திரத்தே கர்மக்ஷயம் செய்து அடையும் தன்மை மனுஷ்ய கதியிலல்லது வேறில்லை ; அதனல் பெறுதற்கருமை பெறற்கு அரிய விசேஷமாயிருந்த மனுஷ்ய ஜன்மம் பெற்ற பவ்ய ஜீவனே இன்னுங் கேளாய். எ-று.

31 பெறற்கரிய மெய்த்தவமும் பேருஞ் *சுதமும்
உறற்கரிய விவ்வுடம்பா லுண்டாந்—தெறற்கரிய
வீரியமு மாயுதமு முண்டாக வேற்றலரை
ஆரியனே வெல்லுமா றங்கு. 274

(இ-ள்.) வீரத்வமும், ஆயுதமும் உண்டாய் மிக்க கல்வியையும் பெற்றவன் தன் பகையைச் சாதிக்குமாறு போல, பெறுதற்கரிய மனுஷ்ய பவம் பெற்று; தவமும் ஸர்வக்ஞ பாஷிதமாகிய சுருதஜ்ஞானமும் பெற்றால், கர்மமென்னும் சத்துருக்களை அற எரிந்து, முக்தி ஸ்ரீயையெய்தலாகும். அதுவன்றியும், இன்னும் இந்த மனுஷ்ய பவத்தாலுள்ள அருமை பெருமையைக் கேளாய் பவ்ய ஜீவனே, எ-று.

32 உலகத்துள் மிக்காருள் மிக்கா னொருவன்
நிலைகெட்ட கீழா னொருவன்—தலைபட்ட
வேந்தொழிந்து மேன்மைத் தவத்தவனும் வேந்துக்கா
ஆந்தவத்தை விட்டவனு மாங்கு. 275

(இ-ள்.) விஷத்தைக்கான்று, அமிர்தமுண்டார் போல, இராஜ்யமென்னும் விஷத்தை விட்டுத் தபோராஜ்ய மென்னும் அமுதுண்ட உத்தமோத்தமன்; மீட்டும் அத்தவமென்னும் அமிர்தத்தை விட்டு இராஜ்யமென்னும் விஷய சஞ்சாரத்திற்கு இறங்கினால், கடையாரிற் கடையானாகும், அதனால் தவமும், சுருதமும், விட்டு அபிமானத்தின் கேட்டைக் கைக்கொள்ளாதே; அவ் அபிமானம் கெடாமையை கைகொள்வாய் ஜீவனே. எ-று.

---

*சுகமும் என்றும் பாடம்.

33 அணுநுட்ப மாகாச மாற்றப் பெரிதே
யெனிலொன்று வேண்டுபவர் காணர்—தனிவில்லா
வாகாச மவ்வணுவி லான்றபெரு மைச்சிறுமைக்
கேகாத தீனபிமா னின்று. 276

(இ-ள்.) எல்லாவற்றிலுஞ் சிறியது பரமாணுவாம்; எல்லாவஸ்துக்களிலும் பெரிதே ஆகாசம் என்று சொல்பவர் பெரியோர்கள், ஆயினும் அதனைக் காணர் போலும்; ஈண்டு காணப்பட்டவை, சிறுமைக்கெல்லாம் சிறிதே தீனனாய் வேண்டுவது, பெருமைக்கெல்லாம் பெரிதே அபிமானியாய் வேண்டாதிருப்பது, காண் பவ்ய ஜீவனே. எ-று.

34 துறந்தார்தம் பான்மறுவைத் நொக்கெல்லாங் கான்பார்
மறைந்தார் தம் பான்மறுவைக் காணு—மறைந்ததற்குத்
திட்டாந்தஞ் சந்திரன்பா னின்ற மறுக்காண்பர்
கெட்டார்ந்த ராகுவைக்கா ணர். 277

(இ-ள்.) குணமுள்ளான்மேல் அல்ப தோஷங் கண்டால் எல்லாரும் எடுத்துரைப்பர்; முற்றிலுந் தோஷியாய் இருந்தவன் மேல் தோஷமெடுத்துரைப்பார் எவருல்லை; அதற்கு த்ருஷ்டாந்தம் யாவையோ எனின், சந்திரன் மேல் மறுவை யெல்லாரும் கண்டெடுத்துரைப்பர்; முற்றிலும் விழுங்காநின்ற இராகுவை, தோஷரூபமேயானவாறே தோஷமென்று எடுத்துரைப்பார் எவரும் இல்லை, அதனல் குணத்தின் பக்கலே தோஷத்தை பண்ணிக்கொள்ள வேண்டாம் பவ்ய ஜீவனே. எ-று.

35 துறந்து பரிசகத்தைத் தொக்க தவத்தா
னிறைந்த குணமுனிவர் நீதி—யறைந்த
பரிசகந்துக் காக்குணத்தைப் பற்றழிக்க லுற்றல்
உரைசகத்துக் காகாயோ வுற்று. 278

(இ - ள்.) பால் நிறைந்த கலத்தினுள்ளே இறை அத்தனை புளி இடவே, முன்ன முள்ள குணமும் இன்பமும் கெட்டாற் போல; பகுவாகிய குணங்கொண்டிருந்த முனிவரன் பக்கலிலே, அல்ப தோஷ முண்டானாலும், முன்ன முள்ள தயையும் குணமும் கெடுங் காண் பவ்ய ஜீவனே. எ - று.

36 தொட்டிற் குழவி துளங்கி நிலத்துருட்போல்
*ஒட்டி யுடனணைந்து மோன்முனிவர்—திட்டமே
மேலுலகத் துள்ளிருந்து கீழ்விழ்வ துக்கஞ்சாய்
ஞாலமுன்னிற் கார்கலியோ நன்கு. 279

(இ - ள்.) பயநய மறியாத பசுங்குழவி தொட்டியின் நின்றும் வீழுமதற்கு அஞ்சும், ஸம்ஸாரமும் ஸம்ஸாரகாரணமும் மோக்ஷமும் மோக்ஷகாரணமும், அறிந்து ஸம்ஸாரத்திற்கஞ்சி, தவங் கொண்ட முனிவரர், (போலாகாமல்) ஊர்த்வகதியினின்றும் அதோகதியில் வீழ்வதற்கொன்றும் அஞ்சாய், அதனால் உன்னிற் காட்டிலும் ‡துஷ்டராருமில்லை காண் பவ்ய ஜீவனே. எ-று.

37 இம்மைப் பரிக்ககத்தை விட்டவரின் பெய்துவதும்
அம்மைசுக மெய்துவது மையுறவோ—மெய்மையே
மோகத்தை விட்டு முனியுருவந் தாங்குவதும்
ஏகசுகங் கண்டா யினிது. 280

(இ-ள்.) பரிக்ரகங்களின்மேல் மோகத்தை விட்டவனுக்கு இம்மையிலே சுகமாம் என்றால், நிர்மோகி

பழைய பாடம். *தொட்டி. ‡கஷ்டராருமில்லை. ஈண்டு பொருள் அமைதிபெற 'ஒட்டி', (போலாகாமல்), துஷ்டராருமில்லை. என மாற்றியதாகும்.

யாய் தீக்ஷித்து ப்ரமாதியாகா வண்ணம் நிகழ்ந் தால் சுவர்க்காதி மோக்ஷமெய்துவர் என்றறிவது காண் பவ்ய ஜீவனே. எ - று.

37-a உண்டி யுபகரணங் காரணமா முன்மறுக்கங்
கொண்ட குணநீ கெடிற்காலன்—மண்டிப்
பிடித்தடரப் பற்றிறுற் பின்னையுனக் குய்யும்
முடித்தலுமுண் டாமோ மொழி. 281

(இ - ள்.) விஷய கஷாயங்களை விட்டிருந்த முனிவரர், மீட்டும் அவையிற்றில் இறங்கினுல், பின்னை காலன்வந்தடர்த்த பின்பு, உன்னை அறமின்றியே கார்க்க வல்லது வேறுளதோ. எ - று.

38 உலகெலா நுங்காறே வுண்ணிவிர்த்தி யில்லான்
தலைமுகத்தாற் ருனெழிந்த துண்டோ—மலைவில்லாச்
சந்திரனுஞ் சூரியனுந் தான்விழுங்க மாட்டாது
வந்த விராகுவைப்போன் மற்று. 282

(இ - ள்.) விஷய நிவ்ரத்தி இல்லாதவன் இந்திரிய முகத்தால் உலகத்தில் அனுபவியாது ஒழிந்ததுண்டா கிலது அவன் வயிறு கொள்ளாமையால் விட்டானல் லன்; வயிரு கொள்ளின், மற்றவனுக்கு விழுங்க இட முண்டாதற்குக் காரணமென்னெனில், வேட்கையே, சந்திராதித்தியனை விழுங்கவந்த இராகு தன்வயிறு கொள்ளாமையால் விட்டது அல்லது, விடமும் சக்தியும் உண்டாகில் விழுங்கும். எ - று.

39 மக்கட் பிறப்பழகா மாதவஞ் சம்மத்தந்
தொக்க குணமுண்மை துன்னுவரேன்—மிக்கதுவும்
மிச்சந்த ராகுவரே லென்னுதும் வெவ்விலங்கு
மச்சந்தோ மவ்வுடம்பா லாங்கு. 283

(இ-ள்.) இலாபமறியாத ஆலஸியர்க்கு வாணிபம் அழகிதாகாது; இலாபச்சேதமும் விடுப் பற்றும், விற்பதும், வில்லாமையு மறிந்து வாணிகஞ் செய்வானுக்கு அவ்வாணிபம் அழகிதாகும். அது போல, மனுஷ்ய பவமும் நூல் அறிவும் உடையார்க்கு முயற்சியும், பற்றின்மையும், யுக்தியும் உண்டானல் அழகிது, அதனல் உனக்கு நான் சொன்ன மூவுல கத்துள்ள ஸ்திதியும், திருஷ்டாந்தமும் தெளியா யாகில், மூவுலகஸ்திதியும் ஜீவாவஸ்தையும் கேட்டு தெளிந்து நம்பித்தவம் பட்டுச் சுகதியை அடைந் தான் கதையைக் கேட்டாகிலுந் தெளிவது காண் பவ்ய ஜீவனே, எ-று.

சுகுமாரன் கதை

40 அவந்தியெனு நன்னுட் டாசி னகர
முவந்து குடிநிலவுஞ் சேனை—நிவந்தெழுந்த
மாவேந்தர் வேந்தனு மன்னுமிட பாங்கனும்
தார்வேந்த னுயிரு னுங்கு. 284

(இ-ள்.) நாவலந் தீவினுள் பரதக்ஷேத்திரத்தில் அவந்தியென்னும் விஷயத்து, உஞ்சேனை என்னும் நகரமாள்வான், விருஷபாங்க னென்பான்; அந்நக ரத்து வைசியகுலத்தா ரெவ்வகையரோ? வெனின்,

41 இப்யர் கோப்யர் பெருங்குறி வாணிகரேன்
றேப்புடைய மூவ ருரைக்குங்காற்—றப்பின்
மிதியடியே முனைமிசை நோக்கினர்கள் கானு
நிதியுடைய ராவர் நிலத்து. 285

(இ - ள்.) [1]இப்யரும் [2]கோப்யரும் [3]பெருங்குறிவாணிபரும் என, மூவர்; வைசியர். அவர்களுள், இப்யரென்பார், பொன்னின் இராசியை நடுவே குவித்து, யானை மேலேறிக் குடையிட நின்றால், ஒருவரையொருவர்க் காண வொண்ணாத பொன்னிராசியையுடையார் இப்யராவர்; அப்படியே விருஷபத்தின் மேலேறிக் குடையிட நின்றால், ஒருவரை ஒருவர் காண ஒண்ணாத பொன்னிராசியை யுடையார் கோப்யராவர்; [4]மிதியடி மேலேறிக் குடையிட நின்றால், ஒருவரை ஒருவர் காண ஒண்ணாத பொன்னிராசியை யுடையார், பெருங்குறிவாணிபராவர்; இப்படிப்பட்ட வைசியருள், இப்யர் குலத்தான்: இராஜ ஸ்ரேஷ்டி, சுதத்த னென்பான்; அவன்மனைவி யசோபத்திரை யென்பாள்; இவர்கள் இஷ்ட விஷய காம போகங்களை இனிது அனுபவித்துச் செல்லா நின்ற நாளுள் புத்திரரின்றிக் காலஞ் செல்லா நின்ற நாளகத்து சிந்தாகுல ஹ்ரதயத்தராகி யெவ்வகை ஆயினரோ? எனின்,

42 அந்நகரின் மன்னியதோ ராலையமுண் டாங்கதனுட்
டுன்னுபவ னற்குணத்தாற் றெக்கடைந்தான்—மன்னி
யிறப்புநடு வெய்துவகை யெல்லா முணர்ந்த
வறப்பெருமை மாமுனிவ னுங்கு. 286

(இ - ள்.) உஞ்சேனை யென்னும் நகரத்து ஜிநாலயத்தின் கண் பிஹிதாஸ்ரவரென்னும் முனிவர் எழுந்தருளினா ரெனக் கேட்டு, யசோபத்திரை அஷ்ட விதார்ச்சனை கொண்டு போகிஜிநாலயம் புக்கு தேவ

பா. பே. 1. இப்பர். 2. கவிப்பர். 3. பெருங்குடி. 4. மெதிபடி.

ருக்கு அர்ச்சனேமுடித்து, நமஸ்கரித்துப் பின்பு ரிஷிய ரையும் வந்தித்து, எம்பெருமான் என்று கைகுவித்து எனக்கிந்தபவம் இங்ஙனே னவிருதாவாகக் கழியுமோ? புத்திர ஸம்பத்துண்டாகுமோ! என்று கேட்ப அம் முனிவரும் அருளிச்செய்வார், உனக்கு நல்லவன் ஒரு புத்திரன் பிறக்கும், அவ்வளவில் யாது விளே யுமோ ? எனின், எ - று.

43 தந்தை மகன்பிறப்பத் தான்போய்த் தவம்பட்டுப்
பந்தவினே வெல்பரம மாமுனியாம்—அந்த
வுருக்கண்ட போதே யவனுந் துறந்து
கருத்துடைய மாமுனியாங் காண். 287

(இ - ள்.) இப் பரிசினுல் ரிஷியர் அருளிச்செய்யக் கேட்டு, யசோபத்திரையும் நமஸ்கரித்துப் போந்து தன்மனேபுக்கு, துக்க மனத்தளாய்ச் செல்லாநின்ற நாளகத்து, பிரஜோத்பத்தியாய் நவமாஸம் நிரம்பின பின்னே புத்ரனே பெற்ருள்; அங்ஙனம் பெறுதலும் யாது விளேந்ததோ? வெனின், எ - று.

44 புத்திரனேப் பெற்றுவகை யாலுமப் புத்தியினுன்
மித்திரனு மென்றே வினேவெருவத்—தத்திரமாம்
பல்வினேகள் வெல்லும் பரம வுருக்கொண்டா
னல்வினேயா னல்லுதய நாள். 288

(இ - ள்.) புதல்வனே பெற்று கதியும் மதியும் ஒருங்கடைந்தேன், என்று தந்தை போய் தீக்ஷித்த பின்பு, யசோபத்திரை புருஷ வியோகத்தால் துன் புற்று, புத்ர மோகத்தால் தேறி, மகனுக்கு ஸுகுமார னென்று பெயரிட்டு ரிஷிரூபம் என்பது சித்திரத்தா லும் காணுத வண்ணமாக வளர்த்துக் குமாரனுதலும்

க்ரீடையாட வேண்டுமென்று ஏழுநிலைமாட மெடுப் பித்து, அவ்வைசியர் குலத்தில், ஸ்ரீ, ஹ்ரீ, த்ரதி, கீர்த்தி, புத்தி, இலக்ஷ்மீ யென்னும், அமரதேவியர்க் கொப்பான கன்னிகைகள், அக்குலத்துள்ள முப்பத் திருவரை அக்குமாரனுக்கு கல்யாணஞ் செய்து கொடுத்து, முப்பத்திரண்டு வெள்ளிமாட மெடுப்பித்து அம்மாடத்தின் பின்பே நந்தனவனஞ் செய்வித்து, மனைவாழ்க்கையில் சிதைவொன்று மின்றி அனுப வித்துச் செல்லா நின்ற அச்சுகுமாரன் சுவர்னரத்ன மயமான பூமி யல்லது மிதித்து அறியான், மாணிக்க விளக்கல்லது விளக்கொளி அறியான், சந்தன குங் கும சாந்தின் சேறல்லது சேறறியான், கதம்ப கஸ் தூரி காரகில் கலந்த எண்ணையல்லது பூசியறியான், விலை அறியவறிய ரத்தினாபரண மாலையல்லது பூண்டு அறியான், புஷ்பகவரிசியின் போனக மல்லது உண்டு அறியான், பொங்கிய அணைமிசைப் புரிதரும் செல்வங் தங்கிய சாமரைக் காற்றல்லது காற்றறி யான், இவ்வகையால் அகமிந்திரனைப்போல் செல்லா நின்ற நாளகத்து யாது நிகழ்ந்ததோ! எனின்,

45 குளிரில் வெதும்பலுங் கோடைக் குளிர்வு
மொளிநாறி யுண்டையுன் டாகி—விளியாத
கம்பளங்கைக் கொண்டொருவன் காதல் விலையென்பா
னம்பி நகரடைந்தா னன்கு. 28

(இ-ள்.) குளிர் காலத்து உஷ்ணமாகியும், கோடை காலத்து சீதமாகியும், சர்வசுக மெல்லாம் உடைத்தாகி த்வீபாந்தரத்தினின்றும், கொண்டுவந்த இரத்னகம்பளத்தைக் கொள்ளுகைக்குரியார் அரச

ரல்லது மற்றில்லை என்று கொடுபோய் அரசனுக்கு காட்டி விலையிட்ட விடத்தில், ஒரு லக்ஷம் பொன் மதிப்புடையது எனலும், அரசன் இவ்விலை இட்டுக் கொள்ள மாட்டேன் என்று கொடுப்ப; மீண்டு போந்து அவ் வைசியகுமாரன் மனைக்குப் போமின் எனச் சிலர் கூறக்கேட்டு, அவ்வியாபாரி; அவ்வாறே போந்து, காட்டலும், அவ்யசோபத்திரை வியாபாரிகளை அழைப்பித்து விலைமதித்து ஒரு லக்ஷம் பொன் கொடுத்து வாங்கியபின்பு, தாயாகிய அவ் யசோபத்திரை மாடத்தின் மிசையிருந்த சுகுமாரனுக்குப் போர்க்கலா மென்று காட்டலும், அக் குமாரன் எனக்குச் சிறிதாயிருக்குமெனக் கூறி, எனக்கு வேண்டாம், நின்மருமக்களுக்குக் கொடுப்பாய், எனக்கூற, அவ்வாறே சிந்தித்து ஒருவர்க்குக் கொடுக்கின் மற்றவர்க்கு மனக்கேதம் என்று ஓர்ந்து அவ்வனைவர்க்கும் பாதம் துன்புறாமல், மிதியடி மேலிட்டு அறுபத்து நான்கு முறியாகச் செய்வித்துக் கொடுக்கக் கொடுத்தலும் யாது விளைந்ததோ? வெனின், எ - று.

46 அரச னதுகேட்டே யாங்கவனைக் காண்பான்
முரசறைந்து முற்றங் குறுக—விரைசெறிந்த
சுந்தரஞ்சேர் மாலையான் றன்னையசோ பத்திரையும்
வந்தெதிர் கொண் டுள்புக்காள் மற்று 290

(இ - ள்.) அந்நகரமாள்வான் வேந்தன் அவ் வார்த்தையை ஓர்ந்து, இந்நகரத்தில் செல்வம் நிறைந்த ஸ்ரீமான்கள் வாசம் செய்ய என்ன பாக்கியம் செய்தேன்! எனப்புகழ்ந்து பிறகு, யானே

போந்து அக்குமாரனைக் காண்பேன் எனமொழிந்து, அவ்வரசன் அவன் மனைக்குத் தானேசெல்ல, யசோபத்திரை யெதிர்கொண்டு புக்குப் பின்பு ஆசனங் கொடுப்ப அமர்ந்து, எந்நம்பி எங்குளான் எனலும், யசோபத்திரை சென்று மாடத்தின் மிசை இருந்த தன் புதல்வனுக்குக் கூறுவாள்; புதல்வ! நம்முடைய ஸ்வாமி வந்துளார் ; அவரை நீ சென்று நமஸ்காரஞ் செய்ய வருவாய் எனக்கேட்டு சுகுமாரனும் சென்று நமஸ்காரம் செய்ய, அரசன் அவனைத் தழுவிக் கொண்டு தன் அருகில் ஆஸநத்து இருத்தினன். இருத்தலும், யசோபத்திரை யாதுசெய்தாள். எனின்,

47 விண்கனிந்த வில்லதனை விறழிக்கும் நீள்புருவங்
கண்கனிந்த வம்பதனைக் கௌவைசெயும்—பண்கனிந்த
மங்கலப்பெ ணுல்வரும் வாழ்த்தி மணிமுடிமேல்
அங்கனிந்நார் நாட்சேட மாங்கு. 291

(இ-ள்.) சித்தார்த்தமென்னும் வெண் சிறுகடுகு கொண்டு மங்கலப் பெண்களால் சேஷையிடுவித்து, எம்பெருமானே நின்றம்பி யகத்திலே யமுதுசெய்ய வேணும் என்று வேண்டி, அவ்வரசனை யுடன்படு வித்துப் போனக மமைப்பித்துப் பொன்னின் பரிகலம் வைத்துச் சுகுமாரனுக்கும் அருகில் பரிகலம் வைத்து, அடிசிற் படைப்ப உண்டு தாம்பூலாதி கொண்டிருந்த பின்னை, அவ்வரசன் யாது கூறினனே? வெனின்,

48 உண்டியினி லோரோ ரவிழுமிழ்ந் துண்பதும்
மண்டி நயனநீர் வார்வதும்—பண்டியன்ற
வாசனத்தி னத்திரமுங் கண்டரச னுங்கவற்குப்
பேசிவர்க்கு நோவுண்டாம் பேர்த்து. 292

(இ - ள்.) இப்பரிசினுல் உரைப்பக் கேட்டு யசோபத்திரை கூறுவாள். எமதிறைவ! ஓர் விண்ணப்பம்; என்னை? நம்நம்பிக்கு வியாதி ஒன்று மில்லை; நந்தன வனத்தில் தண் பொய்கையில் தாமரைப் பூவில், முன்னைநாள்பொதிந்து பின்னைநாள் வாங்கின அரிசியின் அடிசில் அல்லது உண்டறியான்; இங்ஙனம் எம்பெருமானுகிய தாங்கள் எழுந்தருளினவாறே, அவ்வரிசி யிருவருக்கும் போதாமையால் மற்றும் சில அரிசி மிஸ்ரமித்தமையால் அந்த அவிழ்து மிருது வல்லாமையின் உமிழ்ந்துண்டான்; அதன்றியும், மங்கலப் பெண்கள் எம்பெருமானுக்கு சேஷையிட்ட ஸித்தார்த்த மென்னும் வெண் சிறுகடுகு ஊன்ற ஆஸநத்து ஸ்திரமாயிருந்திலன்; அன்றியும் தூய மாணிக்க விளக்கல்லது, விளக்கொளி கண்டறியாமையின் இங்ஙனம், எம்பெருமானுக்கு தீபம் ஏற்றின புகை மிஸ்ர ஒளியால் நயனத்தினிடத்து நீர் ததும்பியது எனக் கேட்டு, அவ்வேந்தன் கூறுவான்: சுகுமார னென்னும் நாமம் இவனுக்கே தகும்; எனப் புகழ்துரைத்தலும், அவ்யசோபத்திரை யாது செய்தாளோ? வெனின், எ - று.

49 பொன்னின் கலனிறையப் பூனரிய மாலைகளு
*மின்னி னொளிமணிபோன் மேதகவே — மன்னற்கு
முன்பாக வைக்க முரசதிருந் தானையான்
அன்பாற் கொடுத்தா னவற்கு. 293

(இ - ள்.) என்றிப்பரிசினுல் பொன்னின் பரிகலத்திலே, அமூலியமா யிருந்த நவரத்னங்களும்,

---

*மின்னிலொளி மணிபோல எனவும் பாடம்.

பொன்னும், அக்காவலற்கு அவ்யசோபத்திரை காட்சியாகக் கொடுப்ப, அவ்வரசன் சந்தோஷித்து, மீட்டும் அச்சுகுமாரனுக்கே ஈந்து போயினன். அவ் வாறு போகுதலும் யாது நிகழ்ந்ததோ? வெனின்,

50 மன்னிய செல்வ மலிந்த சுகுமாரன்
முன்னிய வாழ்நாள் முடிவறிந்து—தன்னியற்
சாரணத்தான் மிக்க தவவரச னுனோர்
காரணந்தால் வந்தான் கடிது. 294

(இ - ள்.) சுகுமாரனுடைய நன்மாமனர் தீக்ஷித்துத் தபச்சரணத்தால் சாரணத்துவமும், அவதிஜ்ஞாநமும் பெற்று நம் சுகுமாரனுக்கு ஆயுஷியாவஸானமும் ஆசன்னபவ்வியத்வமும் தீக்ஷாகிரகணம் உள்ளமையும் நோக்கி, விரைவாக அவ்வுஞ்சேனை என்னும் நகரம் குறுகி யாது செய்தாரோ? எனின்,

51 அந்த நகரி லருகா மதிற்புடைசூழ்
கந்த மலர்ச்சோலை காண்டலுமே—வந்து
நகுமா மலர்ப்பிண்டி * நாதன்றன் நண்ணும்
தகுமா லயமடைந்தான் றன். 295

(இ-ள்.) மேன்மை வாய்ந்த அச்சுகுமாரனுக்காக அமைக்கப்படாநின்ற நந்தனவனத்து, கிருஹோத்தியான ஜிநாலயத்துள்ளே, அத்தபோதனரெழுந்தருளி யிருந்து, யம நியம சுவாத்தியாய அனுஷ்டாநம் முடித்து, நிர்ஜந்துக பிரதேசத்திருந்து உத்தம யோகந் தாங்கி, அர்த்த இரவு போயின பின்பு, திரிலோக பிரக்ஞப்தி யென்னும் ஆகமகிரந்

* னுதனுறைகின்ற எனவும் பாடம்.

தத்தை அப்யஸியானின்ற திவ்விய மொழிகளை, அம் மாளிகையின் கண் இராநின்ற அச்சுகுமாரன் செவிகளாரச் சாய்த்துக் கேட்குமளவில், அம்முனி வரன், நரகலோகஸ்திதியும், மக்களுலகஸ்திதியும் உரைத்துப் பின்பு, தேவலோகஸ்திதியுரையாநிற்கு மளவில், பத்மகுல்மமென்னும் விமான முரைத்தலும், அச் சுகுமாரன்தான் அங்கு முற்பவத்தில் சுகமாய் இருந்தோம் எனச் சிந்தித்து ஜாதிஸ்மரணம் உதய மாதலும் யாது நினைந்தானே? வெனின்,

52 மூவுலக முள்ளளவு முட்டி யுயிர்திரியுந்
தாவிற் றடுமாற்றந் தாவிநனே—பாவித்து
முன்னறியாக் காலமெலா முடந்தே போனவா
நன்னெறியை விட்டவமே நான். 296

(இ - ள்.) என்றிவ்வாறு சிந்தித்து ஸம்ஸார வைராக்கியனாகிப் போகவேணு மென்று, மாடத்தி னின்றும் இழியப் புக, வாய்தல் காக்கின்றவர்கள் ஒட்டாதொழிய வேண்டும், அக்காவலர் அறியின் ஆத்மகாரியம் சிதைவா மென்றெண்ணிப் பெட்டகத் தைத் திறந்து, பட்டாடைகளை ஒன்றினோடொன்றே முடிந்து மாடத்தின் மரத்தினோடே கட்டி, நான்றும் படி விட்டுப் பின்பு அவ்வாடையின் வழியே இழிந்து சென்று, அந்நந்தனவனம் புக்குப் பின்பு, தம் மாம னாகிய முனிவரனைக் கண்டு நமஸ்காரஞ் செய்து, எம் பெருமானே! எனக்கு தீக்ஷைபிரஸாத மென்றலும் அம்முனிவரர் யாது அருளிச் செய்தாரோ? எனின்,

53 நன்ருகச் சிந்தித்தாய் நாண்மூன்றே யாயுகமும்
என்ருங் கடிக ளெடுத்துரைப்ப—வன்ருங்கு
மாதவனை வந்தித்து மாதவத்தைக் கைக்கொண்டான்
ஏதமினற் காட்சியா னீண்டு. 297

(இ - ள்.) *இவ்வாறு அச் சுகுமாரன் தீக்ஷைகைக் கொண்டு ஸந்நியாஸ பிரத்தியாக்கியானம் வேண்டுதலும், அக்குருக்களும் இவனுக்கு ஆயுள் அவஸானம் அறிந்து வந்தவராதலால், அக்குமாரனுக்குப் பிராயோபகமந மரண ப்ரத்தியாக்யான விரதம் கொடுப்பக் கைக்கொண்டு அங்கு நின்றும் வெளிப்போந்து வனபிரதேசங் குறுகி, பிணம் பொதிந்த மயானம் புக்கு, தியானரூடனுய் நிற்கின்ற காலத்து, அருக்கன் உதயம் செய்தலும் யாது விளைந்ததோ எனின்.*

54 முன்னேர் பவத்தின்கண் மைத்துனிதன் மேன்முனிய
தன்னேரு காலா லுதைந்தலுமே —மன்னிக்
கறுக்கொண்டுன் கானரியாய்த் தின்பன்யா னென்று
செறுக்கொண்டு செல்லுஞ் செயிர்ந்து. 298

(இ - ள்.) *அச்சுகுமாரனுடைய முற்பவத்தின்கண் தன் மைத்துனி தன்னைமுனிய, அன்னவனைத் தன் பாதத்தாலுதைப்ப த்வேஷங் கொண்டு என்னை உதைத்தனவாகிய நின் பாதத்தினை பின்பிறப்பில் நரியாய்ப் பிறந்தாகிலும் தின்பேன், என்று சினங் கனிந்தவளாய், மரணமுற்று அவ்வாறே அந்நரியாய்த் தோன்றித் தன்குட்டிகளிரண்டுந்தானுமாக, விடக்கு தேடித்திரிகின்ற காலத்து, அச்சுகுமார முனிவரன், முன்புரைத்த பூமியினைக் குறித்து தான் ஏகுதலும்; எந்நாளும் பூமிபிரதேசத்தின் கண் அன்னவன்*

பாதம் மிதியாதவனுகையால், பருக்கங்கல் முதலாயினவற்ருல் தாக்கி அம்முனிவரன் பாதம் இரண்டுமுடைந்து உதிரம் பரவிக் கிடந்த சுவடின் நெறியே போந்து அம் மயானம் குறுகி அச்சுகுமார முனியைக் கண்டு, அங்கரியினுக்கு பூர்வப்பகை உதயமாதலும் யாது செய்ததோ ? எனின்,

55 நாலேர்காற் பற்றித் நசைத்தின்று மவ்வளவில்
ஊனூர்ந்த குட்டிகளு மோர்காலே—யினமாக்
காலிரண்டுந் தின்னக் கலங்காத சிந்தையனுய்
மேலிரண்டுஞ் சிந்திந்தான் மிக்கு. 299

(இ-ள்.) என்றிப் பரிசினுல் அங்கரியும், தன் குட்டிகளும் அப் பாதங்களேப் பற்றி பக்ஷிக்கும் சமயத்து, அம்முனிவரன் கலங்காத சிந்தையனுய் நம் கர்மமும், கர்மத்தாலாகிய சரீரமும் என்னுடையன வல்ல, எனப் பகுத்தறிவு தோன்றிச் சிந்திப்பார், என்னே! திரவ்விய க்ஷேத்திர கால பாவ பவம் என்னும் பரிவர்த்தனே ஐந்தும், ஹிதா ஹித மறியும் ஆக்ஞாவிசயம் அபாயவிசயம் விபாகவிசயம் சம்ஸ்தான விசயம் என்னும் தர்மத்தியானம் நான்கும் பிரதக்த்வ விதர்க்க வீசாரம், ஏகத்வ விதர்க்க வீசாரம், சூக்ஷ்ம க்ரியா ப்ரதிபாதி, வ்யுபரத க்ரியா நிவர்த்தி யென்னும், சுக்ல தியானமும், பாவித்து நின்றபோது, தாள்கள் இரண்டினேயும் இரண்டுநாள் புசித்துப் பின்பு மூன்ரும் நாள் வைகறையே உதிரமும் குடரும் பக்ஷிக்கின்ற, அங்கரிகளின் திர்யக் உபஸர்க்கம் ஸகித்து, தியானுருடனுய் தேகவியோகமாகி, ஸர்வார்த்த ஸித்தியிற்ருேன்றி எவ்வகை இன்புற்ருனே ? எனின்,

56 மணிதுளும்பு மாதவன் மாசற்ற மேனி
தணிவரிய காட்சியனுய்க் காதல்—துணிவரிய
வின்பநீர் வெள்ளமா மென்னுன்கு மோர்கடலுந்
துன்பின்மை யாற்றுய்த்தான் ரெக்கு. 300

(இ - ள்.) மாணிக்க இரத்னத்தினுல் இயற்றப்படுகின்ற படிமம் போன்ற மேனியை யுடையனுய், நோய் மூப்பின்றி முப்பத்து மூன்று சாகரோபமகாலம் ஆயுளும், முப்பத்து மூவாயிரம் வருடத்திற் கொரு தடவை மனஸா ஹாரமும் பதினுறரைத் திங்களிற்கு ஒருதடவை உயிர்ப்புமாகிய, தேவலோகத்திலுள்ள உத்கிருஷ்டசுகம் உற்றிருப்ப, இப்பால் சயனதலத்தின்கண் சுகுமாரனைக் காணுது மனைவிமாரெல்லாம் திடுக்கிட்டு வருத்த முற்றினவர்களாய், யசோபத்திரைக்குக் கூற, அவ் யசோபத்திரையும் அச்சுகுமாரனிட தேவிமார் முப்பத்திருவரும், துன்புற்று எவ்வகை தேடினுரோ ? எனின்,

57 கண்டீரோ துன்பறியாக் காளை கனவிலுந்தான்
கண்டீரோ காரிகையார் காதலனைக்—கண்டீரோ
வொப்பமைந்த மானகரு ளோங்கு நிதித்தலைவன்
இப்பர் குலப்பதியை யீங்கு. 301

(இ - ள்.) என்றிப்பரிசினுல் தேடிக் காணுது திகைக்குங் காலத்துப் பட்டாடைகளை யொன்ருேடொன்று சந்தித்து தூணில் கட்டி இவ்வாடை மூலமாகவே இழிந்து போன சுவடுக்கண்டு, பற்றிப் போகாநிற்ப, இப்பால் தன் மருமக்களை யெல்லாம் மனையிலே இருத்தித் தானும் பரிஜனங்களும் அந்நெறியே போந்து, அம்மயானம் குறுகுதலும்; கின்

னர கிம்புருட கருட காந்தர்வர் முதலாகிய தேவர்கள் அச்சுகுமார முனிவரர் தேகவியோகத்திற்குச் சிறப்புச் செய்து புகழ்ந்து போகிய பின்பு, அந்த திவ்விய கந்தத்திலே சென்று சுகுமார ஸ்வாமி செயலையுணர்ந்து, மீண்டு மனையின்கண் குறுகித் தன்மருமக்களை யழைத்து, உங்களோடு முனிந்து போயிருந்தான், அவனை யுடன் கொண்டு வருவோம் போதுக எனச்செப்பலும், அவ்வாறே அவ்வனைவரும் தானும் போந்து அச்சுகுமார முனிவரன் தேகத்தைக் கண்டு மிக்க துன்புற்றவராய் மூர்ச்சித்து, தாயாகிய யசோபத்திரையும் மருமக்களும், யாங்ஙனம் பிரலாபித்தாரோ? வெனின்,

58 எப்போ தறமறிந்தா யிங்குத் தவமதனை
யெப்போது தாங்கி யிடருற்ருய்—தப்பாத்
தருமத்தி யானத்தைத் தாங்கினு யிப்போது
பெருமைச் சுகமுற்ருய் பேசு. 302

(இ - ள்.) இப்பரிசினல் யசோபத்திரை புத்திரவியோகத்தாலும், இவன் பாரியைகள் புருஷவியோகத்தாலும் பிரலாபிக்க, அன்னவர்கள் சுற்றத்தாரனைவரும் இல்வாழ்க்கையின் இயல்பு நிலையின்று எனத்தேற்றுதலும், ஒருவாருகத் தேறி, அவ் வனைவரும் மூர்ச்சை தெளிந்து, பின்பு ஸ்ரீகண்ட காரகில்களால் அச்சுகுமாரனைஸம்ஸ்காரஞ் செய்து விஹாரக்ரியையில்கிராடி மீண்டுந் தன்மனையின்கண் குறுகி ஸம்ஸாரவிரக்தராகி யாது செய்தாரோவெனின்,

59 மக்கட் பிறப்பிதனைப் பெற்றுநாம் மாண்பயத்தான்
மிக்கச் சுகமிதனை மேவாதே—துக்க

வுடம்புக்கே யொப்புரவு செய்தொழுகி வாழ்ந
லிடம்பெற்றவ துன்பக் கியல்பு. 303

(இ- ள்.) என்றிப்பரிசினல் சித்தித்துத் தம் முடைய பொருளெல்லாம் தாநமும் அருகத் பூஜையும் செய்வித்து, பின்பு போந்து, யசோபத்திரரென்னும் தபோதனர் பக்கலே தீக்ஷைகைக் கொண்டு எவ் வகைத் தவஞ் செய்தனரோ எனின்,

60 பொந்தகத்தி லையுறவு தீரப் புகமொழுக்கி
லித்தகைய தென்றுரைக்கு மிவ்வகையான்—மெத்தகவே
மேதக்கா ரில்லென்று மிக்கோர் புகழ்ந்துரைப்ப
மாதக்க செய்தார் மகிழ்ந்து. 304

(இ - ள்.) வஞ்சிக்கொம்பன்னர் பஞ்சிமெல்லடிப் பாவையர்கள், வெயிலும் பனியும் காணுமேனி யின் புடையார்கள்; உள்ளமுடையார்க்கு ஒன்று அரிய துண்டோ? என்னும் உரையினை நேரே காட்டுவார் போல நோன்புகள் ஏனைப் பலவும் நோற்றுத் தேம் பிய வுடம்பினராகி, தபச்சரணம் தாங்கிக் கடைக் காலம் சந்நியாசங் கைக்கொண்டு சமாதிமரணத்தால் முடித்து புருஷ பக்தியோடு கூடி, தேவர்களாய்த் தேவலோகத்துள் தோன்றினராதலாலும், உலோக பாவ ஸ்திதியைக் கேட்டு அவ்வாறு சுகமுற்றிருந்த சுகுமாரன், அக்ஷணத்து தீக்ஷையைக்கைக்கொண்டு பிராயோபகமந மரணத்தோடு முடித்து தேவலோக சுகமுற்றானென்னுங் கதையைக்கேட்டாகிலும் திரு வறத்தை நம்பிக் கடைப் பிடித்து உன் ஆத்மனுக்கு உறுதி செய்துகொள்வதுகாண் பவ்யஜீவனே எ-று.

7-வது அத்தியாயம்

அசுசித்வம்

1 உற்ற உயிர் தாயா ரொன்மையற வயிர்தே
பற்றதென வருள்செய் பன்னவனும்—நற்றவனை
ஏற்றி யுடலழுக்கா மென்று மதிகார
*மாத்தவகை யுரைப்பா மாய்ந்து. 305

(இ - ள்.) உற்ற உயிர்க்கு பெற்றதாய்போல ரக்ஷித்து, தருமத்தை அருளிச்செய்தவன் குற்றமற்ற ஸ்ரீபாதங்களை, நமஸ்காரம் செய்து, சரீரம் அசுத்தம் என்னும் அதிகாரத்தை யுரைப்பாம் எ - று.

2 சீர் நன்மை யுள்ளனவும் சேர்தலுமே விரழிவாய்த்
நாநன்மை யில்லழுக்கே தானுக்கும்—மேநன்மை
யொன்றலாப் பொல்லாங்கே யூறுமுட லிதனைக்
கன்றியுனக் குறுதி காண். 306

(இ - ள்.) எல்லா வஸ்துக்களும் தன்னைச் சார்தலுமே, அகற்றத்தக்க பொல்லாங்கும், உவர்க்கத் தக்க சப்த தாதுக்களும், ஒழியாதவகை அருவருக்கத்தக்க அமேத்யமுமாய், பரிணமிக்கக் கண்டும்; உடலினுள்ளே மருவி சம்சார சுகத்தினுக்கு இச்சிப்பது கஷ்டமன்றோ? பவ்ய ஜீவனே. எ - று.

3 மொய்த்திடும்பைக் கண்ணதா முடுபிணி புழுவு
மெய்த்த வசுபமே யின்பிலையால்—ஒத்த
உடம்பென்னும் மென்கரும்பு வித்தாவ தன்றி
இடம்பட மற்றுண்டோ விதற்கு. 307

---

* பா. பே. ஆய்ந்த.

(இ - ள்.) புழுத்த கரும்பு தின்பார்க்கு யின்ப மாகாது, அதுவே வித்துக்கழகிதாய், ஒன்று சகஸ்ர மானுற் போல, மனித சரீரமும் ஈண்டு இன்பமாக மாட்டாது ; மறுமை சாதிப்பார்க்கு அழகிதென்று, அதனே யறிந்து பாவிப்பதுகாண் பவ்ய ஜீவனே. எ - று.

4 ஊறழுக்குச் சேர்ந்துபிணி ஒன்றில்பலவுடனே
ஏறுமிடவகையால் இன்பிலேயான்—மாறு
முடலிதனே நீமருவ லூனுகர்வா னுடும்
திடமருவல் போலுஞ் செயிர்த்து. 308

இ - ள்.) தன்னேவதை செய்யும் ஊன்காரனே மருவிய ஆடு போலவும், அசுபமாம் கும்பியின்கண் மருவிய, சூகரம் போலவும், உடம்பினது தூய்மை யின்மை அறிந்தும் மறந்திருப்பதோ? பவ்ய ஜீவனே எ - று.

5 விளக்குப் புகயிருள் வியு மிருளும்
விளக்கந் தம்பார்த்து மீதூரும்—துளக்கில்லா
ஆன்றகுணம் கெட்டாலும் அவ்வகையே வெவ்விஜனயால்
தோன்றும் அழுக்குடம்பிற் றெக்கு. 309

(இ - ள்.) விளக்கொளி அவிந்தாலும், ஆதித் தன் அஸ்தமித்தாலும், இருள் மூடினுற்போல, தர்ம மில்லாத ஜீவன் பக்கல் கர்மமும் மூடினவிடத்து, ஜீவனுக்கு அழிவாம், ஆதலால் மனித வுடம்புபெற்ற ஜீவன் தருமம் கைக்கொள்ளாவிடில் கெடும். எ - று.

6 முலேக்கலச மென்று முறுவன்முத் தென்றுஞ்
சிலேப்புருவஞ் சேயிழையார்க் கென்றும்—உலேவிலாக்

காமந்தால் மெய்மயங்கிக் காணுதே மெய்யழுக்கை
சேமிந்தாற் றாய்தாமோ செப்பு. 310

(இ-ள்.) ஊமத்தங்காய் தின்று மயங்கினுற்கு காஷ்ட லோஷ்ட பாஷாணமெல்லாம், சொர்ன மாய்த் தோன்றும்; அதுபோல, மோஹநீயகரு மோதயத்தால் மெய்மயங்கி உண்மையைக் காணுதே அசுசியை சுசியாக பாவிக்கின்றாயே ஜீவனே. எ-று.

7 பாலமுதுந் தண்டயிரும் பரங்கமைந்த பல்கறியும்
சாலியி னல்லடிசில் தன்கதலி—நூல்பயின்ற
நல்லமிர்த மெந்தனையும் நன்மையுடன் கெடுக்கும்
புல்லுடம்பைப் போற்றுவதோ பொற்பு 311

(இ-ள்.) நெய், தயிர், பால், வெல்லம், கற்கண்டு, முதலாகிய அமிர்த வஸ்துக்களெல்லாம், தன்னைச் சென்று உற்றபின்னை, ஒருவர்க்குத் தீண்டவும் நாற்றம் கொள்ளவும் ஒண்ணுதவண்ணம் அசுப மாக்கும் சரீரத்தை, என் கண்டு பிரீதியாகினையோ? பவ்ய ஜீவனே. எ-று.

8 உடலின்மேல் நீமோகம் ஒன்றும் வகைதான்
உடல்தூய்மை யில்லாத வன்றி—யுடலின்றி
நீபற்றப் பற்றற்றே நீங்குமா லாங்குயிரே
மேவுற்ற வன்பென்றே மிக்கு. 312

(இ-ள்.) பகைவனுக்குடனுய் தன்னை வதிக்க வந்தானை விசுவசித்தாலும், கர்மத்துக் குடனுய் கூடி கெடுக்கவேண்டியிருந்த அசுப சரீரத்தை விசுவசித்தாலும், அவனுக்கு மரணமும் இவனுக்கு அதோகதியும் ஆகாதொழியுமோ! எ-று.

9 உன்னுலே உன்றூய்மை யுன்னவே யாமதனை
கொன்னே கெடுந்தழுக்கைக் கூடுவதோ—முன்னே
அறியா தவமே கழித்தாய் யினிநீ
நெறியாய நல்லறமே நேர். 313

(இ - ள்.) அனந்த க்ஞானுதி குணங்களையுடைய உன்னை, ஆட்டங் கொள்கின்ற கழிமுடையுடலைப் பொருந்தி, நீயும் அசுபனுக வேண்டாம் பவ்ய ஜீவனே. எ - று.

10 உடல்புலமே லைம்பொறிக ளுற்பன்ன மாகி
விடலரிதாய் நிற்க வினைகள்—அடையவே
துன்பாக்கு நின்பெருமை தூர்ந்தலும் தொல்லழுக்கா
லின்பாத லெவ்வகைபோ வீங்கு. 314

(இ - ள்.) சரீரங்காரணமாக இந்திரியம் பிறக்கும், இந்திரியத்தால் விஷயத்தின்மேல் மோகமாம், மோகத்தால் கர்ம பந்தமாம், கர்மபந்தத்தால் கதிகளுள்ளே சுழற்சியாம், கதிகளால் சரீர கிரகணமாம், சரீரமுண்டாக இந்திரியம் பிறக்கும், மீட்டும் இப்பெற்றியதாகிய சம்சாரமென்னும் சக்கரத்திலே, சுழற்சியைப் பண்ணும் சரீரத்தை, என் கண்டு தேறுவது காண் பவ்ய ஜீவனே. எ - று.

11 எவ்வகைய துன்பாவம் எவ்வகையும் கேடுநிலை
எவ்வகையுந் தூய்மையதங் கில்லதுவும்—எவ்வகையும்
இன்பின்மை யன்றி இடருறுக்கு மூப்புடம்பில்
துன்பின்றி மற்றுளதோ சொல்லு. 315

(இ - ள்.) உடைந்த மரக்கலத்தை உடையாதென்று அறிந்து ஏறுவதும்; சத்துருவை யறிந்தும்

அறியாததுபோல் மெய்மறப்பதுவும், அசுத்தமும் அனித்யமும் என்றறிந்தும், சரீரத்தை மோகித்துத் தேறுவதும் அழகிதோ ? பவ்ய,ஜீவனே. எ - று.

12 புறம்பாறுய் புன்றேலாம் பொன்றியதுள் ளான
மறம்புணரும் தோடங்கள் மன்னிந்—திறம்பெரிய
ஞானமது வுள்ளாக நன்றியி லுடலிதனை
யூனமென உள்ளாய் நீயுற்று. 316

(இ - ள்.) ரச, ருதிர, மாம்ஸ, மேதா அஸ்தி, மஜ்ஜா, சுக்ல மென்னும் சப்த தாதுக்கள் புறம்பிற்பாகமாகவே, அமேத்ய முதலாகிய தோஷமெல்லாமிருந்தது, அப்யந்தர பாகத்தில் ஞானம் இருந்தது, புறம்பிலுள்ள இரண்டு பாகத்தையும் விட்டு ஞானபாகத்தையே பாவித்து, சுத்தாத்மனுய் இருக்கலாகாதோ ? பவ்ய ஜீவனே. எ - று.

13 உடம்பென்னும் நீள்வலையி லொன்றி வசமாய்
இடும்பை எரிசுடவே ஏசற்—றிடம்பெரிய
துன்பத்து மேவிநீ தொக்கழுந்த றெல்லுயிரே
இன்பத்த தாமோ யியம்பு. 317

(இ - ள்.) ஞான, தரிசன, சுக, வீரிய சகஜ குணங்களைவிட்டு ஜீவனே, அனித்ய, அசுத்த சரீரத்தோடுங்கூடி, ஜன்ம மரணமென்னும் பேரிடுவித்துக் கொண்டு உழன்ருய், உன்னுலே முன்னம் விடப்பட்ட சரீரம் உன்பின்பு வந்தனவோ ? அதுவன்றியும் இப்போது நீ மேவி இருந்த சரீரமும் சுசியில்லாமை கேளாய் பவ்யஜீவனே. எ - று.

14 என்புநிணந் தோலும் ஈருள்குடர் குருதி
பின்பு நரம்போ டியன்றதுவும்—துன்பமைந்த
சீக்கோழை நீர்முதலாச் சேர்ந்தமல வொழுக்குந்
தேக்குமஃ தின்னுற்றார் தேர்ந்து. 318

(இ-ள்.) இப்பெற்றி தூரத்திலே கண்டார் வெறுக்கத்தக்க, அசுத்தவுடலை கூடியிருப்பது உனக்கு, பீடும் பெருமையுமோ? சர்மகாரனைப்போல, அசுத்தத்திற்கு மருவினாய், சுத்தத்திற்கு மருவலாகாதோ! பவ்ய ஜீவனே. எ-று.

15 குங்குமம் கற்பூரம் கோலவகிற் புகையும்
அங்கமெலாந் தானிறைய அப்புதலும்—தங்கும்
குணங்கெட்டு பொல்லாங் கேகூடு முடலைக்
குணங்கெட்டுக் கூடுவதோ கூறு. 319

(இ-ள்.) குங்கும முதலாகிய சுகந்த திரவியமெல்லாம், தன்னைச் சேரவே துர்கந்தமாக்கும் அசுத்த வுடலை, என்ன விசேஷங்கண்டு மேவினையோ? பவ்ய ஜீவனே. எ-று.

16 புழுநெளிந்து பொல்லாங்கே போதந்த தின்மை
தழுவிநீ தானுவராய்த் தங்கி—விழுமெல்லை
துன்ப மனையான தொல்வினையான் மல்குடம்பை
என்கண்டு மேவினையோ ஈங்கு. 320

(இ-ள்.) உடுத்த வஸ்திரங்களும், சூழப்பட்ட சுகந்த திரவியங்களும், உண்ணப்பட்ட ஆகாரங்களும், உன்னால் மீட்டும் தீண்டவும் மிதிக்கவும் ஒண்ணாத அருவருக்கத்தக்க, இந்த கஷ்ட சரீரத்துள், உனக்கு இருக்கை ஏற்குமோ! பூஜ்யனாய்

இருக்கும் உனக்கு இங்ஙனே சம்பவிக்குமோ! பவ்ய ஜீவனே. எ - று.

17 நெட்டென்பு கால்முகடு நீண்ட விலாவலக்கு
கட்டி நரம்பதனாற் கார்க்குரம்பை—ஒட்டி
யுதிரந் தசைமேத்தி யொன்பதாம் வாயில்
*விதியன்று நீ மருவல் மிக்கு. 321

(இ - ள்.) தாமிருக்கும் மனையில் ஒரு அங்குல பிரமாணம் ஒரு சல்லியம் கண்டால், அதனை அப்பொழுதே களைந்து போகடுவர்; அதுவன்றியும் கிரகத்தினுள்ளே அமேத்யங் கண்டால், சீ என்று உமிழ்ந்து அகலப்போவார்; ஜீவனே, நீ இருந்த கிரகத்தில், சல்ய சமூகமும், அமேத்ய சமூகமும் இருப்பவும், உவர்ப்பும் நாற்றமும், ஜாதி, ஜரா, மரணமும் உள்ள இதனைப்பற்றிக்கொண்டு துன்புறுதல் நன்றன்று காண். எ - று.

18 கூழ்நீர் நிறைபொழுதும் குன்றுமேற் கொன்றுடலங்
கீழ்நீர்மை யோர்நட்பே போற்கெடுமால்—ஊழ்நீர்மை
யான வழுக்குடலுக் கன்பதுதா னென்னுக்கோ
வினவறி வில்லுயிரே ஈங்கு. 322

(இ - ள்.) எவ்வகையும் கஷ்ட சரீரத்தை, கர்ஜூரமரத்திற்கு முதலில் அமேத்ய மிட்டு வளர்த்து அதன் பலம் உண்டாற்போல, நீயும் இவ்வசுத்த சரீரத்தால், பலமாவது தர்மத்தைக் கைக்கொண்டு முக்தி பலம் உண்பது, அன்றெனில் துக்கத்திற் கிடமாவதாகும். எ - று.

---

*பா. பே. விதியொன்று.

19 உடலிதழுக் கென்னு முண்மை யறிந்தும்
விடலுனக்கு வீரியந்நா வில்லை—கெடலரிய
மூவுலகு மோர்விரலால் தாங்குநின் வீரியமுங்
கேவலநல் லறிவுங் கெட்டு. 323

(இ - ள்.) மூவுலகத்திலுள்ள ஜீவ, புத்கல, தர்ம, அதர்ம, ஆகாச மென்னும் பஞ்சாஸ்திகாய வஸ்து விஸ்தார மெல்லாம் ஏக க்ஷணத்திலே அறியும் அனந்தக் ஞானமும், லோகாலோகங்களைக் காண வல்ல அனந்த தரிசனமும், மூன்றுலகும் ஒரு விரலின் நுனியாற்றாங்கும் அனந்த வீரியமும் இத் தனையுமுடைய நீ உன் சரீரத்திருந்த அசுத்தத்தை விடுவதோர், அறிவும் காக்ஷியும் சக்தியுமின்றியே நிர்விசேஷமாகக் கெடுவதோ? பவ்யஜீவனே. எ-று.

20 உதரந் திருந்துதா யுண்டுகான் றுய்க்கும்
மதுரமுகந் தழுக்கே மன்னும்—உதரத்து
உடலசுப மென்றுவிட் டோங்கினுன் காதை
விடலின்றி சொல்லுவன் கேண்மிக்கு. 324

(இ - ள்.) இவ்வுடல் அமேத்யமும், குடரும், ஈரலும், நிணமும், வழும்பும் என்றறிந்தும், மோகத்தி னின்றும் துறக்கமாட்டாது துன்புற்றானையும்; பின் இந்த உடல் அசுபமென்றறிந்து தீக்ஷைகைக் கொண்டு சுகத்தை பிராபித்தான் கதையைச் சொல் லக்கேட்டாகிலும், தர்மத்தைக் கைக்கொள்வது காண் பவ்ய ஜீவனே. எ - று.

---

*பா. பே. நுதி.

சுபௌமன் கதை

21 இந்தீவி லிப்பரதந் தீண்டுவி தேயநாட்
டெத்தீது மில்லா வெழின்மதுரைக்—கொத்தமைந்த
வேந்தன் சுபௌமன்மெய்ப் தேவிமனோ கரியாள்
எய்ந்த மகன்விடப வீங்கு. 325

(இ-ள்.) ஜம்பூ த்வீபத்து பரத க்ஷேத்திரத்து, தர்ம கண்டத்து, விதேகமென்னும் வளநாட்டு மதுரை யென்னும் நகரமாள்வான் சுபௌமனென்பான், இவன் பிரதானதேவி மனோகரி என்பாள், இவ்விருவருக்கும் புத்திரன் ரிஷபாங்கனென்பான், இவ்வகையனுகிய சுபௌமன் இஷ்ட விஷய காம போகங்களை அனுபவித்து செல்லுகின்ற நாளகத்து யாது நிகழ்ந்ததோ? வெனின்,

22 அன்னகரி னன்னடுவ னுலபமுன் டாங்கதனுட்
பன்னரிய தொல்குணஞ்சேர் பான்மையாற்—றுன்னுவினை
யூற்றுச்செ றித்தப்பே ரொன்முனிவன் முன்வந்தான்
றேற்றப்பே ராலயத்துட் டொக்கு. 326

(இ-ள்.) மதுரை என்னும் நகரத்தின் நடுவின் கண், பூமி மாதிலக மென்னும் ஜினலயத்தின்கண், பிகிதாஸ்ரவர் என்னும் ரிஷியர் எழுந்தருளியிருந் தமை கேட்டு, நகரத்து தர்ம ஜனங்களெல்லாம் அஷ்டவிதார்ச்சனை கொண்டு போகின்றரை, சுமதி என்னும் பிரதான மந்திரி கண்டு, தானும் அவர் களுடனே சென்று ஜினலயம்புக்கு, பிரதக்ஷிணம் செய்து நிஷிதி என்று உள்புகுந்து, அருகதேவர்க்கு அஷ்டவிதார்ச்சனை கொண்டு அர்ச்சித்து நமஸ் காரம் செய்து பின்னை, பிகிதாஸ்ரவ முனிகளை வந்

தித்து, தர்ம சிரவணம் கேட்டுப் போந்த பின்னை, சுபௌமன் ஓலக்கமாக விருந்து, சுமதி என்னும் மந்திரி என்னுக்குத் தாழ்த்தான், என்று சிந்தித் திருக்கு மளவில், மந்திரியுஞ் சென்றான், செல்ல இத்தனை பொழுது தாழ்த்து வருகைக்கு காரணம் என்னென்று கேட்ப சுமதி யாது சொன்னான். எனின்,

23 பூமிதில கப்பேர் பூண்டஜி னலயத்துச்
சேமநிலை முனிவன் சேர்ந்தது கேட்—டேம
நிலைகொள்ளு நீர்மை நெறிபறந்தை யெல்லாந்
தலைகொள்ளக் கேட்டே னதற்கு. 327

(இ-ள்.) பூமி திலகமென்னும் ஜினாலயத்து பிகிதாசிரவர் என்னும் த்ரிகால க்ஞானிகள் (ரிஷியர்) எழுந்தருளினர் அவரை வந்திக்கப் போகின்ற தர்ம ஜனங்களைக் கண்டு நானும் ஜினாலயம்புக்கு முனிவரர் பக்கலிலே தர்ம சிரவணம் கேட்டுத் தாழ்த்தேன், என்றலும் அரசன் யாது சொல்லி யாது செய்தான். எனின்,

24 இறந்த தெதிர்ந்த திடைநிகழ் முக்காலம்
அறந்திறம்பா மெய்யுரைப்பா ராகில்—சிறந்தவரைக்
காண்டுநா மென்றெழுந் தான்காதற் பெரிதாகி
வேண்டுவது கேட்பான் விரைந்து. 328

(இ-ள்.) என்றிப்பரிசினால் உரைத்துத் தானும், மந்திரியும் பரிவாரமும் போய், ரிஷியரை வந்தித்து முன்பேயிருந்து கைகூப்பி, எம்பெருமான், எனக்கு எத்தனை காலம் ராஜ்யம் செய்யலாமென்று தனக்குள்

சிந்திதிருப்ப ரிஷியரும் அவன் சிந்தனையை அவதிக் ஞானத்தாலறிந்து, உனக்கு இனி ஏழுநாள் ஆயுஷ்யமும் ராஜ்யமும் என்றுரைப்பக் கேட்டு, என்ன வியாதி கொண்டு மரணமென்று கேட்ப, உருமிடியாலே மரணமெய்தி உன் பஞ்ச வடக்குழி யுள்ளே கருந் தலைப் பெரும் புழுவாய்ப் பிறந்திடுதி என்றலும், அதற்கு திருஷ்டாந்தம் என்னென்று வினவ, ரிஷியர் யாதருளிச் செய்தாரோ? வெனின்,

25 ஏருமிட மொருத்தி ஈன்றசிறு வன்மலம்
போகடுநின் மேலென் றருளுதலுஞ்—சோகமுடன்
வந்தித்தி மாமுனிவன் வாய்மொழியைக் காண்பனென
சிந்தித் தெழுந்தான் செல. 329

(இ - ள்.) ரிஷியரை நமஸ்கரித்து சோகாக்ராந்தனாய், ரிஷி வாக்யங் காண்பேனென்று, தன் பரிவார ஜனங்களை அழைத்துத்தான் செல்லுமிடத்தின் கண், மலமூத்ராதிகளை சுத்தம்பண்ணி, ஸ்திரீகள் பிரவேசமின்றியே யிருக்கக் காவலேவி யாங்கனம் சென்றானோ? வெனின்,

26 படைமன்னர் சூழ பரிகரிதேர் காலாள்
குடைகவரி பிச்சங் கொடிகள்—மிடைதரவே
பல்லியங்க ளார்ப்பப் பரந்த நெடுவீதி
மல்லியலுந் தோளான் வரும் 330

(இ - ள்.) யானை குதிரை தேர் கருவி காலாட் படைசூழ, சத்ரசாமரங்களான் மிடைவெய்தி, தினகர கிரணத்திற்கும் நுழைவின்றி, தத, விதத கன சுஷிரம் என்னும் வாத்தியங்கள் முழங்கச் செல்லா நின்ற அவசரத்து, யாது நிகழ்ந்ததோ? வெனின்,

27 மாட மிசைமறுகில் வான்குடைகள் தாமிடைய
ஆடகக் கூடந்தோ டாங்கரிவை—சேடனைத்
துன்வி யெடுத்துத் துகிலுநற விழ்ந்ததே
மன்னவன்றன் மேலே மலம். 331

(இ - ள்.) என்றிப் பரிசு வாரா நிற்ப மாளிகையின் மேல் நிலையிலிருந்த ஸ்திரீ தன் மடியிலிருந்த பிள்ளையைத் தொட்டிலிற் கிடத்தி அரசனைக் காண்பானிச்சையில், கவாக்ஷத்தருகே வந்து தானுடுத்த வஸ்திரத்தை உதருதலும், சீலையிற் கிடந்த மலம், அரசன்மேல் விழக்கண்டு ரிஷிவாக்யம் வஜ்ஜிர லேகை, என்பதனை நிச்சயித்துப்போய்த் தன் கோயில் புகுந்து, தன்மகன் விரஷபாங்கனை அழைத்து, இற்றைக்கு ஏழாநாள் எனக்கு மரணமாய் மரித்து பஞ்சவடக்குழியுள்ளே கருந்தலைப் பெரும்புழுவாய்ப் பிறப்பேன்; பிறந்தால், நானங்கே, துக்கப்படாமல் என்னைக் கொல்வாயாக வென்று சொல்லக்கேட்டு, மகனும் மற்றுமுள்ள பரிவார ஜனங்களும் துக்கிதராயிருப்ப, மந்திரி யாது செய்தான். எனின்,

28 வேந்தன் மொழியதனை மெய்யாகக் கேட்டமைச்சன்
வாய்ந்த விரும்பதனல் மஞ்சலிகை—ஆய்ந்தொன்றைச்
செய்தாங் கரசன் றனையிருத்தித் திண்கடலுட்
பெய்தான் பிழைப்பான் பெயர்த்து. 332

(இ - ள்.) அசுத்தமான உடம்பின்மேல், மோகமாய் விடமாட்டாமையும் துன்பமெய்தினமையும் அறிந்து மந்திரி, இரும்பு மஞ்சலிகை செய்து, அதனுள்ளே அரசனை வைத்து சங்கிலி கொளுவி, சமுத்தி

ரத்தினுள்ளே புகுவித்துத் தாமெல்லாம் சுற்றுங் காவல்கொண்டு நிற்ப, ஆங்கு அம், மஞ்சலிகை ஆழத்திலே, ஒரு மகா மத்ஸ்யத்தின் முதுகிலிருப்ப, அம்மகா மத்ஸ்யம் மஞ்சலிகையைக்கொண்டு மேனோக்கி எழுந்த அவசரத்து, யாது நிகழ்ந்ததோ? வெனின்,

29 துன்னிருளு மின்னொளியுந் தொக்குமுகின் முழக்குஞ்
சொன்ன பொழுதகத்தே தான்தோன்றி—அன்ன
வனுவாய்ப்போய் மாறிவிழ வாங்கிடித்துப் போய்த்தே
தனிவரிய வவ்வுருமுத் தான். 333

(இ - ள்.) மகாமத்ஸ்யத்தின் முதுகிலிருந்த மஞ்சலிகை மேல் நோக்கி எழலும், அம் மஞ்சலிகையின் மேல் உருமு வீழத் துகள் துகளாய்ப் போய் அரசனும் மரணமாய் பஞ்ச வடக்குழியில் கருந்தலைப் பெரும் புழுவாய்ப் பிறந்தனன். இப்பால், மகனும், பரிவாரமும் விதியைக் கடக்கவாராதென்று வியவகாரகிரியைச் செய்து, சிலநாள் கழிந்தபின்னை, வேந்தன் தனக்கு உரைத்த மாற்றம் நினைத்துச் சுண்டு வில்லும் அம்புங் கைகொண்டுபோய்ப் பஞ்ச வடக்குழியைப் பார்த்து கருந்தலைப் பெரும்புழுவை எய்யப் புகு மளவில் ஆங்கு அது அமேத்தியத்தின் உள்ளே புக்கு ஒளிப்பக்கண்டு, கர்ம வசத்தால் ஜீவனெங்கே பிறந்தாலும் அங்கங்கே தனக்கு ரமித்துயிருக்குமென்று அசுசித்வமே பாவித்து, துக்கமெய்திக் கையிலேந்திய சிலையும், அம்பும்போக வெறிந்து, சம்சார நிர்வேகனாய், தீக்ஷித்து உக்ரோக்ர தபச்சரணம் செய்து, சுகதி எய்தினன்; என்னுங் கதையைக்

கேட்டாகிலும், சரீரம் அசுசியென்று பாவிப்பது காண் ஜீவனே. எ - று.

30 செந்நீரும் வெண்ணீரும் சேர்ந்தேழு தாதுவாய்ப்
புன்னீர்மை யாலே புலமைந்தாய்—பன்னீர்மை
ஆருடலை நீபோற்று தாங்கறத்தை மேவுயிரே
போமுடலா லந்தப் பொறை. 334

சகலவிமல கேவலக்ஞான, பகவத் அருகத் பரமேஸ்வரன், முகோத்கதமாகிய த்வாதச அனுப்ரேக்ஷையுள், ஸ்ரேணிக மகாமண்டலேஸ்வரன் கேட்ப, கௌதம கணதரர் அருளிச்செய்த ஏழாவது அசுசித்வம் என்னும் அதிகாரம் சமாப்தம்.

8-வது அத்தியாயம்

ஆஸ்ரவம்

1 அந்தமி லுல்வினைக ணீக்கி யருந்தவந்தைத்
தந்துரைத்த வாமன்றனை யேத்தி—அந்த
வினையூற் றதிகாரந் தன்னை யுரைப்பன்
புனைவார் வினைதீர் பொருட்டு. 335

(இ - ள்.) ஞானவரணீயம் தரிசனவரணீயம் மோஹநீயம் அந்தராயம் என்னும் காதி சதுஷ்டயங்களைக் கெடுத்து, அநந்தக்ஞானதி சதுஷ்டயங்களையெய்தி, தர்மமென்னும் அதிகாரத்தை உரைத்த

சுவாமி ஸ்ரீ பாதங்களை நமஸ்கரித்து, கர்மாஸ்ரவம் என்னும், அதிகார முரைத்தும். எ - று.

2 உடலாதி யோன்பொருளும் ஒன்மனைவி மக்கள்
கடனுக மோகவழி *கண்டும்—‡மிடைவாகித்
தீவினைவந் தூறும்வாய் தேர்ந்துரைப்பி னைந்தாகும்
பாவனையி னீங்குவதே பாங்கு. 336

(இ - ள்.) கர்மம் புகுந்து ஊறும் வாய் ஐந்தாகும், அவை யாவையோ? வெனின்,

3 கொலைகளவு பொய்காமங் கூடுபோரு டானும்
நிலையைந்தா மோரொன்றே நேரி—லுலைவின்றிக்
காமாதி மும்மையுங் காதற் பழமையினு
மாமாதி யாகுமா லாங்கு. 337

(இ - ள்.) ஹிம்ஸை அந்ருதம், ஸ்தேயம் அப்பிரம்ம சரியம், பரிமித பரிகிரகம் என்னும் அவை ஐந்தாகும். அவ்வைந்தும்; மனோவாக்காய மூன்றினும், கிருதகாரித அனுமோத மூன்றினும் சம்ரம்பம், சமாரம்பம், ஆரம்பம் என்னும் மூன்றினும் மாறப் பெருகிய பேதத்தால் ஒவ்வொன்றிற்கும் ஒன்பது பேதமாம். இப்பிரகாரத்தாலாகிய, பரிணமத்தால் சமயந்தோரும் அநந்தாநந்த கர்மம் கட்டும்; யானை தன்னைத்தானே கட்டக் கயிறு கொடுத்தாற் போலவும், உறளிக்காயில் புழு தன்னைத்தானே சூழ்ந்து கொண்டாற் போலவும், ஜீவனுந் தன்னைத்தானே கர்மத்தாற் கட்டப்பட்டுத் துன்புறும், அதனை இவ்விடத்தே காணலாங்காண், பவ்ய ஜீவனே, எ - று.

பா. பே. *கண்டு. ‡மிடராகத், மிடவாகி.

4 கார்வண்ணத் தோலுடுத்துக் கையிற் சிலையேந்திப்
போர்வன்ன நாய்பிடித்துப் போர்வேட்டை—கார்வன்ன
வேடுருவங் கண்டால் விளம்பாயோ வெவ்வினையென்
றேடுருவ மாவண்ணந் தொக்கு. 338

(இ-ள்.) தூரத்திற் புகைகண்டு அங்கு அக்னி யுண்டென் றறிந்தாற்போல, இந்த பவத்தில் துக்கப் படுவோரைக் கண்டால், முன்பு செய்த ஹிம்ஸாநந் தாதி ரௌத்ரத்தாலும், பாப நிகழ்ச்சியாலும் வந்த துக்க மென்பதனை யறிந்து, பாப ஹேதுக்களை நிகழ்த்தாது ஒழிவது காண், பவ்ய ஜீவனே என்ற வாறு. அன்றியும்,

5 செற்றூர்வந் தீர்வில்லா மோகத்தாற் றீர்வின்றி
யுற்றோர்நா டூர்குடிதா னேருயிரைத்—தெற்றெனவே
சாவுகே டாம்வகையாத் தானுரைக்கும் பொய்யொடுமெய்
ஆகுமுறை யால்வினையா மாங்கு. 339

(இ-ள்.) ராகத்வேஷ மோகத்தால் ஒரு நாட்டையும் ஓர் ஊரையும் ஓர் குடியையும், ஒரு ஜீவனையும், கேடாகும் வகை பொய்யாகிலும், மெய்யாகிலும் உரைப்பினும், உரைப்பிக்கினும், உரைக்க உடன்படினும், பாபத்துக்கு ஆஸ்ரவமாம். என்றவாறு. அன்றியும்,

6 வைத்த மறப்பிறப்பு வாங்க மறந்தனவும்
புத்தியி லின்பான போன்வெள்ளி—முத்தாதி
ஈயாமை கொள்வனவு மேவ லுடன்படலும்
மாயாதி தீவினையாம் வந்து. 340

(இ-ள்.) சுவர்ணம், முத்து, மாணிக்கம், வஜ்ர மாதியாக மற்றும் யாதானும் ஒரு வஸ்துவையும் ஈயாமல் கொள்வதூஉம் கொள்ளவுடன்படுதலும்,

அதுகளவு என்று சொல்லப்படும்; அந்த வஸ்து இழந்த ஜீவன், துக்கமெய்தும், அதனல் அது பாபத்திற்கு ஆஸ்ரவமாம். எ - று.

7 உள்ளமே மெய்மொழியா லொன்ருென்று மூவகையால்
எள்ளிநிகழ்வாம் வினை விழவைத்—தெள்ளிய
காமந்தால் வந்தூறுங் கௌவைசெயும் வெவ்வினைகள்
ஆமந்தா லின்புண்டோ வாங்கு. 341

என்றவாறு. அன்றியும்,

8 மதுர நுகர்வாகி மானனைய நோக்கம்
உதர முகத்துயிரை யுன்னு—மதுரமாங்
கின்பாக வின்பம்போ லேந்திழையார் நும்விழைவை
யின்பாக என்னுமதோ வீங்கு. 342

(இ - ள்.) ஸ்பரிச, ரச, கந்த, வர்ணத்தோடுங் கூடி மனோகரமான, கிம்பாக பலம் உண்டால், வயிற்றைப் பிளந்து மரணமாக்கும் அதுபோல, இந்திரிய சுகம் இறைப்போதைச் சிற்றின்பத்தாற் கர்மம் ஆஸ்ரவமாம், அதுவன்றி யின்னுங் கேளாய் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

9 புகும்போதும் போதரும் போதும் விழைவு
தரும்போதுந் தானச்ச மாமாற்—பெரும்பான்மை
உம்மை நரகத் தழுத்தும் பிறர்தாரம்
இம்மைப் பழிவிளைக்கு *மீங்கு. 343

(இ - ள்.) பிறர் சம்சாரத்தின்மேல் மோகத்தால் சென்ருல்; புகுமிடத்தும், போதுமிடத்தும் அன்னியர் காண்பரென்னும் பயமும், தன் குடிக்குப் பழியுமாம், அதன்றியும் தக்காரிழித்துரையுமாம், அதன்றி

பா. பே. *வினைக்கு மிங்கு.

அர்த்த ஹானியும் பிராணஹானியும் பரஜன்மத்திற்கு நரகாதி துக்கங்களும் வந்தெய்தும் அதனால், பரஸ்திரீகமனத்தால் இம்மை மறுமை துக்கத்துக்கு ஐயுறவில்லை என்றவாறு. அன்றியும்,

10 வெறுக்கை யுலோபத்தான் மிக்கபொருண் மேவல்
மறுப்பில் மனைமக்கள் மாயா—வெறுப்பின்றிப்
பற்றார்வஞ் செற்றந்தாற் பன்னு பரிக்ககந்தா
லுற்றாறுந் தீவினையா மோர். 344

(இ-ள்.) புத்ர, மித்ர, களத்ர, தாசி, தாச, கோ, மகிஷ, துரக, குஞ்சராதி ஜீவவஸ்துவும், க்ஷேத்ர, வாஸ்து, தன, தான்ய, வஸ்திராதி, அஜீவ வஸ்துக்களுமாகிய பரிக்கிரகங்கள்மேல் வெறுப்பின்றியே வெகுமோகம் பண்ணில் வெகுபரிக்ரஹங் காரணமாகவும் பாபகர்மம் ஆஸ்ரவமாம். எ-று. அ-ம்.

11 கொண்டவுடல் காரணத்திற் கூடி நிகழ்மனையும்
பெண்டிரொடு மக்கள் பெரும்பொருளும்—மண்டிய
செற்றார்வ மாமதனாற் றேர்ந்த பரிக்ககமா
முற்றாங்குத் தீவினையா மூர்ந்து. 345

(இ-ள்.) சரீர இந்திரிய காரணத்தால் பரிகிரகமாம், பரிகிரகத்தால் பாபாஸ்ரவமாம், பாபாஸ்ரவத்தால் மீண்டும் சம்சாரத்திலே சுழன்று துக்கப்படுவதாகும் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

12 நாற்றஞ் சுவையொளியூ றோசையெனு மைந்தின்
பாற்படர்ந்த பாவனையாற் பல்வினைக—ளோர்ப்பின்றித்
தீவினைவந் தூறுமாற் றேர்ந்ததனை யாருயிரே
பாவனையி னீக்குவதே பண்பு. 346

(இ - ள்.) ஸ்பரிச, ரச, கிராண, சக்ஷு, சிரவண மென்னும், பஞ்சேந்திரிய சுகங்கள், வாளின்வாய்த் தேன் நக்கினுற் போலும்! ஆதலின், அச்சுகத்திற்கு இறங்காதிரு. இறங்கில் பாபாஸ்ரவமாம். எ-று. அ-ம்,

13 நெய்யெண்ணை சேர்கலத்தில் நீண்டழிக்கின் பற்றுப்போல்
ஐயமுதல் மிச்சந்தா லாம்வினைகள்—மெய்யாக
ஆழ்துயரிற் சேர்த்துமா லென்றறிந்து மிச்சின்றிக்
கேழ்வியுடை நல்லறமே கேள். 347

(இ - ள்.) நெய்யெண்ணை சேர்ந்த கலத்தை, மாசு சுற்றினுற்போல, மூட சந்தேக விபர்யாசமாகிய மித்யாத்வத்தால் கர்மாஸ்ரவமாம். அதனுல் நரகாதிகளிற் புக்குத் துன்புறுமென்றறிந்து, தர்ம மென்னும் தகுபுணை பிடித்து, ஈமம் புகுதாமை காப்பதுகாண் பவ்ய ஜீவனே என்றவாறு. அ - ம்,

14 தரணிமிசைப் பளகுந் தக்க சதிரேன்
றணுடைய நற்றவமில் லாமை—மருணீங்கி
நற்றவத்தா லெய்துவது நன்னெறியு நற்கதியு
முற்றுரைப்பிற் குமுளவோ வொப்பு. 348

(இ - ள்) பூமியின்கண் பளகுஞ், சதிருமென நெறிகள் இரண்டாம், பளகாவது அமுதினைக் கான்று நஞ்சுண்டார் போலத் தவத்தை விட்டு கிரகஸ்தனுதல்; சதுராவது எத்தனையோ காலமாக நஞ்சுண்டு வந்தவன் அந் நஞ்சு கான்று அமுதுண்பது போலும், அக்காரணத்தினுல் அநந்தாநந்த ஸ்திதியாகிய பவங்களிற் கட்டப்பட்ட கர்மங்களை நிர்மூலனஞ்செய்து லோகபூஜ்யமான தபச்சரணை மேற்கொள்ளுமிவனில் காட்டிலும் சதுரரில்லை. எ-று.

15 தந்தைதா யென்றவரை விட்டேத வந்தரித்துந்
தங்குதவ நெருப்பாற் ருன்மெலிந்து—தங்கு
மனைமருவி நீயிருந்தால் வந்தவர்நிற் கண்டால்
நினையாரோ தாம்பிணைந்தி னேர். 349

(இ-ள்.) *உன் தந்தை தாயென்றிவை முதலாய் முறையுடையார், இனி, அதந்ததாவனத்தாலும், சரீர மலத்தாலும், காயக்லேசத்தாலும், அர்த்த தக்த சபம் போல இருந்த உன்னைக் கண்டால், மான் கணத்தின்மேற் புலி சென்றாற்போல வெருவி யோடுவர். என்றவாறன்றியும்,*

16 நாறு மலர்தலைமே லேறிநல னழிந்தால்
வீறு கெடுமதுபோல் மெய்தவம்போய்—வேறோர்
நெறியதனை யெய்தியக்கால் நீழ்தவத்தாய் நின்னை
யறிவுடையார் கண்டுவர்ப்பா ராங்கு. 350

(இ-ள்.) *தலை மேலேறின புஷ்பம், தலையினின்றும் இழிந்து சுகந்தங்கெட்டால், காலாலும் தீண்டுவாரில்லை; உத்தமமான தபசினைக் கைக்கொண்டு விட்டாலும், அதுபோல கைக்கொள்வார் இல்லை. விருக்ஷம் வேர் பறிந்தால் அப்பிரயோசனமானாற்போல மூலகுணங்கெட்டால், எல்லாக் குணங்களும், கெடும்காண், பவ்யஜீவனே. எ-று. அ-ம்,*

17 நாற்றுவரி னல்வினைக ளுடியேநாற் கதியிற்
பாற்றி யுழப்பிக்கும் பல்வினைக—ளேற்றவைதான்
முத்திசே ராவகையின் மூழ்குவிக்கு மிக்கதையை
பத்தியாற் கேட்பதுகாண் பாங்கு. 351

(இ-ள்.) *எப்பிரகாரத்தானாகிலும் உனக்குக் கர்மாஸ்ரவ காரணம், சொல்லக் கைக்கொள்ளா*

யாகில்; குரோத, மான, மாயா, லோபமாகிய, கர்மா ஸ்ரவ காரணத்தாற் கெட்டார், கதையை கேட்டாகி லும் தர்மத்தைப் பொருந்துவது காண், பவ்ய ஜீவனே. எ - று.

த்விபாயனன் கதை

18 நாலகற்றி நாற்குணத்தி னின்று நலமுரைக்கும்
பாலிட்ட நேமியே பால்வன்னன்—மேலியன்ற
தெய்வப் பொழில்வாசு தேவர்க்குந் தேய்வுண்டோ
வெய்நவியம் பெம்மா னெமக்கு. 352

(இ - ள்.) அரிஷ்ட நேமிநாதர், சமவசரணம் புக்கு, பலதேவர் வாசுதேவர் முதலாகவுடையார், பக்தியோடும் அஷ்டவிதார்ச்சனை கொண்டு அர்ச் சித்து, நமஸ்கரித்து, தர்மம் கேட்டுப் பின்னும், தேவ நிர்மிதமான துவாரகாவதிக்கும், வாசுதேவன் ராஜ் யத்தினுக்கும், ஹானியுண்டோ? என்று வினவ, சுவாமி யாது அருளிச்செய்தாரோ? எனின்,

19 தீபாயனன் மதுவாற் றெய்வப் பொழிலழியுந்
தாவா வரசு சரன்கணையாற்—பாவார்
வருடமீ ராறுள்ளே யென்றருள வேற்றிப்
பொருடகப் போய்ப் புக்கான் பொழில். 353

(இ - ள்.) தீபாயண குமாரனும், மதுவினும், தேவ நிர்மித மாகிய த்வாராவதி அழியும்; ஜரத் குமாரனுடைய கை அம்பினல் அரசனழியும்; பன்னிரண்டு வருஷத்தில் என்று கூற கேட்டு, சுவாமியை நமஸ்காரம் செய்து போந்து, த்வாராவதி

புக்குப் பின்னை தீபாயண குமாரன் யாது செய்தான். எனின் ;

20 என்னுலே யின்னகர மீடழியு மென்றருளிச்
சொன்னலும் கேட்டிருத்தல் தொல்குணமோ—வென்னுத்
துறந்தான் குமரன்ருன் றென்னகரி னீங்கிச்
சிறந்த நெறிவழியே சென்று. 354

(இ-ள்.) தீபாயண குமாரன், என்னல் இந்நகரம் அழியும் எனக்கேட்டு யிருப்பது, தக்கதன்று என்று, தேசாந்திரம் போய்த் தீக்ஷை கைகொண்டு, தபச்சரணம் தாங்கினன்; இப்பால், அந்நகரத் துள்ளே மதுவெல்லாங் கொண்டுபோய்க் கற்சுனையி னுள்ளும், காட்டகத்துள்ளும், போகட்டுச் செல்லா நின்ற நாளகத்து, யாது நிகழ்ந்ததோ ? வெனின்,

21 எய்திய மாதவத்தை யீராறு மாரிவாய்க்
கைதவ மின்றியே காத்துய்த்துச்—செய்தவமு
முன்னுன்கு மாரி முடிந்ததென வெண்ணிச்
சொன்னுங்குக் காணேனுற் றேக்கு. 355

(இ-ள்.) துவாதச வருஷம் தபச்சரணம் பண்ணி, தீபாயண முனியும், சொன்ன நாள் அறுதி முடிந்த தென்று, அதிக மாதம் அறியாதே! விசாரித்து வந்து நகரியின் புறம்பே, சேய்த்தும் அணித்தும் இன்றியே நிர்ஜ்ஜந்துக ப்ரதேசமாயிருந்த கல்லின்மேலே காயோத் சர்க்கம் நின்றலும் யாது விளைந்ததோ ? வெனின் ;

22 கண்டவர்கள் வேந்தர்க் குரைத்தலுமே காதலராய்
மிண்டிவிரல் வேந்தர் மிக்காரும்—கொண்டதோர்

நாற்படையோ டேகி நலமாக வருச்சித்து
மேற்படியால் வந்திந்நார் மிக்கு. 356

(இ - ள்.) தீபாயணமுனி எழுந்தருளினர் எனக் கேட்டு, வாசுதேவரும், பலதேவரும், மற்றும் பரிவார ஜனங்களும், சாதுரங்க பலத்தோடுஞ் சென்று, பிரதக்ஷணம் செய்து அர்ச்சித்து, வந்தித்துப் போயினர். மற்றும் பலரும் அர்ச்சித்து, அக்ஷதை புட்பங்களால் பரிவிரத மாயிருக்க, நடுவே காயோத் சர்க்க மாய் நின்றான், பிற்றலும் யாது நிகழ்ந்ததோ? வெனின்,

23 கற்சுனை யுட்போதிந்த கள்ளுண்ட வெம்புலையன்
மெச்சிமிக வெதும்பி மெய்யறியா—விச்சையிற்
கையிட்டு நின்றமுனி மேலேறிக் காருறுஞ்சை
மெய்யிட்டு வாசித்தான் மிக்கு. 357

(இ - ள்.) நகரத்தார் கொண்டுபோய்க் கற்சுனையில் பெய்த பழங்கள்ளை யுண்டு மதர்த்து மெய்யறியாது வருகின்ற புலையன், த்வீபாயண மகாமுனி காயோத் ஸர்க்கமாக நின்றானைக் கண்டு, சூழும் ஆராதிக்கப்பட்ட அர்ச்சனையை மிதித்தேறி உறுஞ்சை வாசிக்குமளவில், மகாகோபாக்னி உத்பன்னமாய்ப் புறப்பட்டு, துவாராவதியைச் சுட்டு, மீண்டும்வந்து தன்னை சுடத் தானும் மரித்து மனுஷ்ய கதி ஆயுஷ்யம் க்ஷயித்துச்சென்று அதோகதிக்கு இழிந்து நாரகனாய்ப் பிறந்து, அல்பாயுஷ்யமாயினன், ஆதலால் குரோத மென்பது சாமான்ய மெய்துவதன்று; அன்றியும், மான கஷாயத்தின் பலத்தைக் கேளாய் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

பாகுபலிகுமாரன் கதை

24 ஆதிக்கண் மேதக்கான் மக்களி ரைம்பதின்மர்
மாதக்க வாதிதவம் பண்ணியபின்—பேதிக்கில்
ஆழிக்கோ னும்பரத நூற்றுவரி லாங்கிளையான்
பாழித்தோள் பாகுபலி பண்பு. 358

(இ-ள்.) *ஆதி தீர்த்தங்கரர் விருஷப ஸ்வாமி ராஜ்யம் செய்கின்ற காலத்துள் யசஸ்வதி என்னுந்தேவி உதரத்துள், பரதன் முதலாக தொண்ணூற்றொருன் பதின்மர் புத்திரரும், பிராமி என்னும் புத்திரியும், பிறந்தார்கள் ; சுநந்தை என்னும் தேவி வயிற்றில், பாகுபலி என்னும் புத்திரனும், சுந்தரி என்னும் புத்திரியும் பிறந்தனர், இப்படி செல்லுகின்ற காலத்து ஆதி தீர்க்கதங்கரஸ்வாமி, சம்ஸார விரக்தனய் தீக்ஷைகொண்டு, தபச்சரணத்தால் கர்ம க்ஷயம் செய்து தீர்க்தங்கரரானபின்னே ; பரதேஸ்வரனுக்கும் சக்கர இரத்தினம் பிறந்து, ஷட்கண்டமும் அடிபடுத்தித் தன் நகரில் புகுதலும், சக்ரம் ஆயுத சாலையிற் புகுதாதே கோபுர த்வாரத்தே நிற்ப, மந்திரிகளுந் தானுங்கூடி விசாரித்து, தம்பிமார்களை வருக என்றலும், அவர்கள் யாது சொன்னர், எனின் ?*

25 ஒருடலிற் றேன்றியே யோரொருவர் பாதமிசை
ஏருடைய நீண்முடிசாய்த் தென்வாழ்வு—சீருடைய
நாத னடிபணிந்து நற்றவமே தாங்குதுமென்
றேதமிலார் போய்த்துறந்தா ரீண்டு. 359

(இ - ள்.) சகோதரராயிருந்தவரில், ஒருவரொரு வர் பாதாக்ராந்தராய், அனுபவிக்கும் சம்சார சுகம், கஷ்டமன்றோ வென்று, சம்சார விரக்தராய், ஆதி பட்டாரகர் சமவசரணம் புக்கு, ஜிந தீக்ஷை கைக் கொண்டு தபஸ்சரணத்த ராயினர்: பாகுபலி குமார னும் பரதேஸ்வரனை ஜெயித்தல்லது தீக்ஷை கொள்ளேனென்று, போகாதிருப்ப; பரதேஸ்வரன் சாமதானபேத உபாயங்களால் சிக்ஷைபண்ண, பாகு பலி குமாரன் கேளாதிருப்ப, பரதேஸ்வரன் யுக்த சன்னஹத்தனாய் பாகுபலி குமாரன் மேலே படை போக, பாகுபலி குமாரனும் எதிரே யுத்தசன்னஹத்த னாய்ச் செல்ல, இருவருக்கும் யுத்தம் விளைந்த விடத்து, மந்திரிகள் யாது சொன்னாரோ? வெனின். எ - று.

26 பவங்கெடுத்து விடெய்தும் பவ்வியர்க டாங்கள்
அவஞ்சேனை தான்விடுப்ப தென்று—பவஞ்செய்
கருமப்போர் தாமழித்துக் கண்டா ரமைச்சர்
தருமப்போர் தாம்புணர்க்குஞ் சால்பு. 360

(இ - ள்.) இருவரும் சரம தேகதாரிகள் என்பது அறிந்து, உபய வர்க்கத்து மந்திரிகளுங்கூடி, அவர் கள் தேகங்களில் ஆயுதங்கள் உருவாமை யறிந்து, இரண்டு படையும் யுத்தஞ் செய்யில், சாதுரங்க பல மெல்லாம் அழியும் என்று, அவர்களுக்கு தர்மயுத்தங் கண்டார்கள், த்ரஷ்டியுத்தமும், ஜலயுத்தமும் முஷ்டி யுத்தமும், என்னும் மூன்று யுத்தத்திலுங் தோற்றவர் தீக்ஷை கொள்வது, ஜெயித்தவர் ராஜ்யங் கொள்வ தென்று முடிவுகூறி விட்டார்கள். பாகுபலி குமா ரன் மூன்று யுத்தத்திலும் தானே ஜெயித்து நிற்ப,

பரதேஸ்வரன் கோபத்தோடும் சக்ரத்தை விட்டான், விடுதலும் அது போய் பாகுபலி குமாரனை பிரதக்ஷணமாக வந்து வலப்பக்கத்தே பணி என்னென்று நிற்றலும், அதனை மீண்டும் அவன் மேலே விடின் அவன் பாடேயுஞ் சென்று நின்ற பக்ஷத்து, எனக்குத் தோல்வியாம், அன்றியும் முன் பிறந்தானைக் கொன்று ராஜ்யம் செய்வது தருமமுமன்று, கஷ்ட சம்சாரம் பொல்லாத தென்று, தன் மனத்திலே சிந்தித்து, பலருமறிய இதனலென்? இதனை நீயே ஆளுவாயாக என்று பரதேஸ்வரனுக்கு சக்ர முதலாக ராஜ்யமெல்லாங் கொடுத்துப்போய், ஆதி தீர்க்தங்கர சுவாமியது சமவசரணத்து தீக்ஷைகைக் கொண்டு, பர்வதசிகரமேறி கேவலக்ஞானம் பிறந்தாலன்றிக் கையெடேனென்று, காயோத் சர்க்கமாக எவ்வகை நின்றனே? வெனின்,

27 வெங்கதிரோன் வெவ்வழலும் வேதனைசெய் கல்லழலும்
அங்கமுற வெதும்பி யாங்கடரத்—தங்கு
பொறியா டரவமுதல் போற்றிசெய நின்ருன்
நெறியான நற்றவமே நேர்ந்து. 361

(இ - ள்.) காய்கதிரோன் அழல் கொள்ளவும், கால் வெதும்பி அடிசுடவும், வல்லி ஜாதிகள் காலும் தோளும் ஆகமும் சுற்றவும், புலியுரிஞ்சவும், அரவு சுற்றி நாவளை கொள்ளவும். பொன்மலை போலனேக வருஷம் காயோத்ஸர்க்க தியானருடனய் நின்றும், பரதனுடைய ராஜ்யத்தே நின்றேனென்னும் மான கஷாயத்தால், கர்மம் நீங்கி கேவலக்ஞானம் பிறவாதொழிய, பரதேஸ்வரன் முதலாகப்போய், ஆதிதீர்க்

தங்கரரை வந்தித்து, பாகுபலி குமாரன் தபஸ்ரணம் பண்ணவும் கேவலக்ஞானம் பிறவா தொழிவதென்னென்று வினவ, பரதனுடைய நிலத்திலே நின்றேனென்னும் மான கஷாயத்தால் கேவல க்ஞானம் பிறவாதே நின்றது ; நீ போய் க்ஷமை கொள்ளவே, மானகஷாயம் நீங்கி கேவலக்ஞானம் உத்பன்னமாகும் என்று, பகவான் அருளிச்செய்ய, பரதேஸ்வரனும் அப்பொழுதே போய், நமஸ்காரஞ்செய்து ஸ்வாமிகளே நீர் எனக்குக் கொடுக்க நான் ராஜ்யங் கைக்கொண்டது, என்மேல் உத்தேசித்து வந்த மானகஷாயம் நீங்கியருளுக, என்று க்ஷமைகொள்ள! அப்பொழுதே மானகஷாயம் நீங்கி, கர்மங்கெட்டு கேவலக்ஞானம் பிறந்தது. அது காரணத்தினல் மான கஷாயத்தை விடுவது காண் பவ்ய ஜீவனே, எ - று.

28 வரம்பில் குணவறிவும் வாய்ந்த யிறைமை
நிரம்பிய நேமி யவனும்—உரம்பெரிய
மானத்தால் வல்வினைக ளாக்கு மெனவெண்ணி
யூனத்தைத் தீர்வதுகா னுற்று. 362

(இ - ள்.) நூற்றுக்கோடி மகாவிரதமும், எண்பத்துநான்கு நூருயிரம் குண விரதமும், பதினெண்ணுயிரம் சீலாசாரமும், நிறைந்து நின்ருர்க்கே, முதலாக மான கஷாயத்தாற் கேடுவருமென்ருல் ; மற்றையோர்க்குச் சொல்லவேண்டுமோ ? அதுவன்றி அநந்தாநந்தமாகி யிருந்த லோகாசமும், கனேததியும், கன நிலேயமும், தனுவாதமும் என்னும், வாதவலயங்களும், மூந்நூற்று நாற்பத்துமூன்று, கயிறு

பிரமாணமான உலகமும், அதனுள் ஜீவ, புத்கல, தர்ம, அதர்ம, ஆகாசமென்னும் பஞ்சாஸ்திகாயங் களையும், அவற்றின் பர்யாயங்களையும், அதீதாநாகத வர்த்தமான மென்னுந் திரிகாலங்களையும், மற்றும் எல்லாம் அறியவல்ல அனந்த க்ஞானத்தையுடைய, அருகத் பரமேஸ்வரனுக்கு மானபங்கமில்லை, உங்க ளுக்கு எந்த குணம் நிறைந்து மானங்கொண்டாடு திரோ? அதுவன்றி, மாயா கஷாயத்தின் பரிசு கேளீர். என்றவாறு, அன்றியும்,

புஷ்ப தந்தையார் கதை

29 போக புரமதனுட் பொங்குநிதிக் கிழவன்
சாகர மாதத்தன் றன்மனையில்—ஆகரமாம்
ஆலயமுண் டாங்கதனை யர்ச்சிக்கு மச்சியரும்
வேலைநிகழ் விடமே மிக்கு. 363

(இ - ள்.) போகபுரமென்னும் நகரத்து சாக ரதத்த னென்னுஞ் செட்டி மனையில், தினந்தோரும் அர்ச்சிக்கும் புஷ்ப தந்தையார், என்னும் கவுந்தியர் தேவர்க்கு அர்ச்சிக்கவென்று, அரிசியுங் கனியுங் கொண்டுபோய் ஒருவரும் காணாமே, இருளாக அட்டு உண்டு, அர்ச்சித்த பழமுங் காயுங் காணாதே தின்று, ஏகாந்தரம் அஷ்டோபவாசமும், மாஸோபவாசமும், பக்ஷோபவாசமும் செய்து, நோற்கிறேன் என்று, தேவர்க்கு அர்ச்சிக்கக் கொடுத்த ஸ்ரீகந்த கற்பூர மெல்லாம் தன் மெய்பூசித் திமிர்ந்து, இப்படி மாயஷ் டாணம் பண்ணிச் செல்லாநிற்ப, தர்ம ஜனங்களெல் லாம், எம்பிரான் உம்முடைய திருமேனி மெலிவின்றி

சுகந்த நாறு மிது வென்னகாரணம்? என்று கேட்ப, தபசின் பெருமை என்று மாயத்து நிகழ்ந்து, யாங்ஙனம் தோன்றினரோ! வெனின்,

30 வேடந் தரித்தே விரதந் தரித்திலாத்
தோட மதனாற் றெழின்மகளாய்ப்—பீடார்ந்த
செட்டி மனையுளே சென்றெேன்றித் தோன்றினுள்
துட்ட நிகழ்வதனாற் றெக்கு. 364

(இ-ள்.) சாகரதத்தனென்னுஞ் செட்டி மனையில், புஷ்பதந்தை என்னுங் கவுந்தியர் மாயா நிகழ்ச்சியால், துர்க்கந்த காயத்தையுடையளாய் பூதி கந்தியர் என்னும் பெயருடைய தொழுத்தைப் பெண்ணாய்த் தோன்றித் துன்புற்றாள்; என்னுங் கதையைக் கேட்டாகிலும், மாயஷ்டாணத்தை விட்டு நிகழ்வது. அன்றியும்; மாயத்து நிகழ்ந்தார்க் கதையை கேளாய் பவ்ய ஜீவனே. எ-று.

பூமி பாலன் கதை

31 விச்சைக் கிறையிருவர் வேகத்தால் விட்டுமனைக்
கச்சந் தவமெனவே கைக்கொண்டா—ரிச்சையால்
நற்றவஞ்செய் காலத்து நற்காட்சிபோ யொருவன்
பற்றினு *ஹுங்கடியார் பாங்கு. 365

(இ-ள்.) தரணீதரனும் பூமி பாலனும், என்னும் வித்யாதரர் இருவரும், சம்சார வைராக்யமாய்த் தவம் பட்டு அவர்களில், தரணீதரன் உக்ரதபம் செய்து முடித்து தேவலோகத்துத் தோன்றினன்; மற்ற பூமி பாலன் சம்யக்தரிசனம் அழிந்து, எவ்வகையாயி னனோ? வெனின்,

பா. பே. *னுங்கடியாப்.

32 தன்னுருப் போலொன்றைத் தானியற்றி யம்மலைமேன்
மன்னி யிருந்த வகைசெய்து—துன்னி
முனியோகி யாய்நின்ற னென்னும்வகை மூடி
யனியோகி யாய்நின்ற னுங்கு. 366

(இ-ள்.) பூமிபால னென்னும் வித்யாதரன், மாயஷ்டாண தவந்தாங்கி, ஏகாந்தரம் அஷ்டோப வாசம், பக்ஷோபவாசம் மாஸோபவாசம் என்னும் காயக்லேசம் செய்கின்றனாக; மகாபர்வதத்தின்மேல் தன்னுருவம்போல் ஒன்றை நிறுத்தித் தான் சுற்றும் போய், ஒருநாட்புகுந்த ஊரில் ஒரு நாள் புகாதே, நித்தமுஞ் சரிகை பண்ணி நின்று, இப்பெற்றிற்பட்ட மாயத்து நிகழ்ந்து முடித்து, மதஹஸ்தியாய் பிறந்துத் துன்புற்றான் என்னுங் கதையைக் கேட்டாகிலும், மாயத்தை விடுவது அன்றியும், லோப கஷாயத்தாற் கெட்டார் கதையைக் கேளாய் பவ்ய ஜீவனே. எ-று.

பட்ஹஸ்தன் கதை

33 தரணிசய மென்னுந் தொன்னகரந் தன்னுள்
கருணமி லோபன்கை யாடை—*யிரணியத்தை
யுண்டுடுக்கிற் றேய்வாமென் றானுடுக்கை நொய்தாகக்
கண்டுடுத்துத் தேடுங் கடிது. 367

(இ-ள்.) தரணிசயமென்னும் நகரத்தில் பட ஹஸ்தன் என்னும் வியாபாரி, லோபியாய் வெறும் பிடியுண்டும் குறும்புடவை உடுத்தும்; தாம்பூலமென் பதுங் கண்டறியான், ஈயான் தோலான் ஈர்ங்கை விதிரான், கையே போர்வையாய்ப் போர்த்துப்

பா. பே. *யிரணத்தை.

பொன்தேடி, பொன்னாலே ஓர் எருதுசெய்து, அதற்குக் கொம்புங் கண்ணும் மாணிக்கத்தாலே அழுத்தி, நிலவறையினுள்ளே வைத்து, இதற்கிணை யொன்று வேணுமென்று யாங்ஙனந் தேடினனோ? வெனின்,

34 ஆறு பெருகிவரத் தெப்பமரங் கொண்டதன்மே
லேறிவரும் வகையா லேயியற்றி—யூறின்றி
நீர்மேலே நீண்மரங்கள் தேடிக்கொணர் வகையைத்
தார்வேந்தன் கண்டுரைத் தான்முன். 368

(இ-ள்.) எல்லா பிரகாரத்தாலும் பொன்தேட வேண்டி, ஆறு பெருகிவாரா நிற்ப, தூரத்திலுள்ள விறகெல்லாம் தெப்பமாகக் கட்டித்தந்து, பகல் இருளானவாறே தெப்பத்தின் மேலேறித் தன்தலையிலே மண்ணை மெத்தி, அதன்மேலே விளக்கை வைத்து, அவ்விளக்கொளியிலேயே பார்த்து, ஆற்றினுள் போகின்ற விறகு பற்றிப் பிடியா நிற்ப, அவ்விளக்கொளியை, அந்நகரத்தரசன் தன் மாளிகையின் மேலிருந்து கண்டு, தன் பிரதானியரை யழைத்து ஆற்றினுள் இவ்விளக்கொளி யென்னென்று கேட்ப, அவர்கள் சொல்லுவார், அவன் ஒரு வியாபாரி, தன் குறையால் ஆற்றினுள் வரும் விறகைப்பிடித்து மாறியுண்டிருப்பனென்ன; இங்ஙனே யொக்கும் தரித்திரமும் நம் நகரத்துள்ளாகாதே என்று சிந்தித்து, அவனை அழைப்பித்து உனக்கு வேண்டுவது என்? என்றலும், எம்பெருமான் என் எருதுக்கு இணை ஓர் எருது தேட துக்கப்படுகின்றேன் என்றலும், ராஜாவும் நம் எருதில் இவன் எருதுக்கு இணையொப்பது

ஒன்று கொடுக்க வென்ன, அவர்களும் இவனைக் கொண்டுபோய் ராஜாவின் எருதுகள் எல்லாங் காட்டப் படஹஸ்தனுமிவை யெல்லாம் என் எருதுக்கு இணையாகாவென்ன, ராஜாவும் இவனுடைய எருதைப் பார்த்து வருகவென்று சொல்ல, அவர்களும் அவ்வெருது பார்த்துவந்து யாது சொன்னர். எனின்,

35 எம்பெருமா னவ்வெருதுக் கேற்ற விணையெருது
உம்பருல கத்தும் யாங்காணே—நம்பெருமை
பொன்னெல்லாங் கூட்டினும் போதாதிவ னெருதிற்
கென்னிவி யாமுரைப்ப திங்கு. 369

(இ - ள்.) பிரசாதங் கேட்டருளாய், நம் எருதுகள் எல்லாவற்றிலும் பெரிய எருது, சுவர்ண ரத்னங்களாற் செய்யப்பட்டது; அதற்கு நாம் ஏழுபடி காலத்து ராஜாக்கள் தேடின பொன்னும் போதாதென்றுரைப்பக் கேட்ட அரசன், முனிந்து இத்தனை மோகமுடைய பாபிக்கு அவ்வெருது இருப்பது தகாதென்று, வலிய அவ்வெருதை வாங்கிக்கொள்ளலும்; அவன் ஆர்த்த, ரௌத்ர தியானத்தால் மரணமெய்தித் தன்மனையிலே பாம்பாய் பிறந்துத் தன் மகனைப் பிடிக்க, அவனும் சர்ப்பத்தைக் கொல்ல மரணமெய்தி, நரகம்புக்கா னென்னுங் கதையைக் கேட்டாகிலும் உலோபத்தை விடுவது. அன்றியும் இன்னமுங் கேளாய் பவ்ய ஜீவனே. எ - று.

36 பொன்னின் பரிகலத்தைப் போய்விற்பக் கண்டொருவன்
தன்னை விலையாடித் தான்விடலும்—பின்னை
விலைகொண்ட வன்கழுவ வீழ்துரவி னுள்ளே
தலைகொண்டு போய்வீழ்ந்த தாழ்ந்து. 370

(இ-ள்.) கிருஷியாளன் மண்பணி செய்யா நிற்ப, புராதனத்துப் புதைந்து கிடந்த பாசி யேறிய பொன்னின் தவிகையைக் கண்டெடுத்து, அதனைச் சொர்ணமாவது அறியாது, ஒரு செட்டிக்கு காட்ட, அவனும் பொன்னாவது அறிந்து, இதற்கு விலை என்ன என்று கேட்ப, அவனும் அதற்கு நாழி மிளகு வேணுமென்று சொல்லச் செட்டி ஒருக் காலே விலை யறுக்கலாகாது என்று கருதி, ஆழாக்கு கொள்ளீர், உரிக்கொள்ளீர் என்று விட்டுப் பற்று வது என்று கருதிட, அவனும் போய் மற்றொரு செட்டி வந்தானுக்குக் காட்ட அவனும் பொற்கல மாவது அறிந்து நாழி மிளகுங் கொடுத்து வாங்கிக் கொண்டுபோய் சீக்கிரம் அதனைப் பாசியற கழுவுவ னென்று ஒரு பழந்துறவின் கரையிலிருந்து, உருஞ் சிக்கழுவா நிற்பக் கை வழுவிப்பாதாளத்திலே விழக் கண்டு பிரமைகொண்டு, அது கழுவாக்காலோ! கழு வாக்காலோ!! என்று பிதற்றி மரண மெய்தினன்; முன்னம் விலையாடிவிட்ட செட்டியும் அவனை எங்குந் தேடிக் காணாமையால், அம் மிளகு எத்தாலே! அம் மிளகு எத்தாலே!! என்று பிதற்றி மரணமெய்தினன் இருவரும் இப்படி மரணமெய்தி விலங்குகதி யெய்தி னரென்னுங் கதையைக் கேட்டாகிலும் லோபத்தை விடுவது காண் பவ்ய ஜீவனே. எ-று.

37 பெற்று வளர்ப்பப் பிறர்கொண்டு போகிக்கு
முற்ற வுருவுடைக் கன்னியைப்போல்—தெற்றெனத்
துன்புற்றுத் தேடியே துவ்வான் பிறர்க்கீயான்
அன்பற்ற லோபிதன மாங்கு. 371

(இ-ள்.) லோபி ஈட்டின வஸ்து, உருவுடைக் கன்னியைப்பெற்று வளர்ந்தார் இருக்க, பிறர் கொண்டுபோயனுபவித்தாற் போலும். எ-று.

38 பலசொல்லி என்னையோ பாபபரி ணமம்
நிலையாத் துவர்நான்கின் நீடும்—உலைவில்லாத்
துன்பங்கள் வந்தூறு மாதலால் நாற்றுவரை
யன்பாக விட்டறமே யாற்று. 372

சகல விமல கேவலக்ஞான பகவதருகத் பரமேஸ்வரன் முகோத் கதமாகிய துவாதச அனுபிரேக்ஷையுள் சிரேணிக மகாராஜன் கேட்ப கௌதம ஸ்வாமிகள் அருளிச்செய்த எட்டாவது ஆஸ்ரவ மென்னும் அதிகாரம் சமாப்தம்.

9-வது அத்தியாயம்

சம்வரை

1 ஆசனமு முக்குடையு மாதியா வாங்கமரர்
பூசனைசெய் புங்கவன்றுள் போற்றியே—பாச
வினையூற்று வாயடைக்கும் விவி லதிகாரந்
தனை*யாம்வகை யுரைப்பன் தான். 373

(இ-ள்.) சிம்மாசனமும், சத்திர த்ரயமும், சாமர சமூகமும், பிரபாமண்டலமும், அசோக விருக்ஷமும், புஷ்ப விருஷ்டியும், தேவ துந்துபியும், திவ்யத்வனி யாகிற கோஷணையும் என்னும் அஷ்டமகாபிராதி

பா. பே. *வகையா யுரைப்பன் பண்பு.

ஹார்யங்களை இயற்றி அமரர் சிறப்பு இயற்ற சமவ சரணத்தெழுந்தருளியிருந்த சுவாமியை; நமஸ் கரித்து, சம்வரை என்னும் அதிகாரம் உரைப்பாம். என்றவாறு. அன்றியும்,

2 பொல்லா வினைகள் பொருந்தும் பரிணமம்
எல்லா மடைக்குமீ ராரொன்றுஞ்—சொல்லா
வொழுக்கத்தை மேவுதியே லூழ்வினை போய் வீழும்
விழுப்பத்தை மேவுதிகாண் மிக்கு. 374

(இ - ள்.) அசுப பரிணமங்களால் ஆகிய அனந் தானந்தம்பாபாஸ்ரவத்தை சம்வரை செய்யுமது; திர யோதச வித சாரித்ரங்கள்; அவை, யாவையோ வெனின், பஞ்ச மகாவிரதம் பஞ்சசமிதி த்ரிகுப்தி எனவாகும். அவை எவ்வகையோ? வெனின்,

3 கொல்லாமை பொய்யாமை கள்ளாமை காமத்தை
யொல்லாமை யொண்பொருளை யுண்ணமை—பொல்லாத
தீவினையூர்வாய்தல் தெறுக்கும் வதமைந்தும்
பாவனையான் மேவுதலே பாங்கு. 375

(இ - ள்.) பகை சாதிக்கவேண்டி ஆயுதம் பிடிக்க வென்றிருப்பானுக்கு படையில்லை யாயினும், குணம் பிடித்துக் குற்றம் புகுதாமை காப்பானுக்கு பஞ்ச மகாவிரதமில்லையாயினும், அவனுக்கு நிலத்திலேறு படாமற்காக்குமாறும், இவனுக்குப் பாபம் புகாமல் காக்குமாறும், எங்ஙனே? என்றறிந்து சம்வரை செய்ய விரதமும் பாவனையுங்கொண்டது காண். என்றவாறு. அன்றியும்,

4 நடைபாடை பூண்வைப்பு நன்மையோ டொன்றி
நடையாடல் நற்சமிதி யைந்தும்—இடையின்றிக்
கூடியே தாளிகழ்வார் கூடும் வினையகல
*நாடு சமிதிகளே நன்கு. 376

(இ - ள்.) கவாடமுள்ள கிரகத்தில் துஷ்டர் புகுதாதவாறு தாளிட்டாற் போலச், சொல்லப்பட்ட பஞ்ச சமிதி பரிணாம முள்ளார் மேல், பாபாஸ்ரவம் புகுதாது. என்றவாறு. அன்றியும்,

5 உள்ளமே காயமொழி யொன்றவோர் மூன்றினையுங்
கொள்ள வடக்கத்தாற் கூர்ந்தொழுகில்—மெள்ளவே
யூற்று வினைசெறிக்கு முத்தமநல் லொழுக்க
மேற்ற வகையாகு மீங்கு. 377

(இ - ள்.) துவாரபந்தங் கபாட முண்டாகிலுஞ் சாத்தித்தாளிடாவிடில், துஷ்டர் புகுவர்; அதுபோல, மகாவிரத முண்டாகிலும், மனோவாக்காயங்கள் அடங்காவிடில், பாபாஸ்ரவம் தகையவாராது. எ-று.

6 செறுவோ டிறங்காமை செம்மாப்பு லோபம்
பெறுநாற் றுவரும் பிளவா—முறிவான
மிச்சமோ டேழ்பகடீ விவான சம்மத்த
மிச்சையால் மேவாயோ விங்கு. 378

(இ - ள்.) இந்த ஔஷதத்தை உண்ண இந்த வியாதி தீர்ந்து சுகமாம் என்றால், அந்த ஔஷதம் செய்து உண்ணுகிலும், இந்த உபசம வேதக க்ஷாயிக மென்னும் சம்யக்தவ குணங்களோடு கூடி யிருந்தால் இந்த கர்மங்கள் கெட்டு சுகமா மென்றால்,

* பா. பே. நாடுஞ்.

அந்த குணங்கைக் கொண்டு காவாஞகிலும், அவ னுக்கு வியாதி கேடும், இவனுக்கு அசுபகர்மக் கேடும், எங்ஙனே? யாகும். எ - று.

7 குணவிளக்குக் குன்ரு வடிமான நெய்பெய்
தணையாமை தான்காக்கு மாறே—யணைவான
தீவினைவந் தாருமைத் தேர்ந்தடங்கி நல்லொழுக்கம்
பாவனையான் மேவுதலே பாங்கு. 379

(இ - ள்.) இருள் இரிந்தேக விளக்கேற்றினல் அவ்விளக்கு அழியாமற் காத்தாற்போல, பாபாஸ்ர வத்தைத் தகைவான், சம்யக்தரிசன க்ஞான சாரித்ர மென்னுங் குணவிளக்குப் பிடித்து நின்று, அவை கெடாமைக்காவாஞகில், அவனுக்குக் கர்மக்கேடு எங்ஙனே? யாகும். என்றவாறு. அன்றியும்,

8 பொல்லாங்கை நல்லாங்கான் மாற்றிப் புலன்கண்மிசை
செல்லாது தீவினைகள் சேர்வழியை—யெல்லாம்
அடைத்தே வினைப்பகைவர் தம்மை யகற்றி
யுடைப்பெரிய நற்குணமே யொன்று. 380

(இ - ள்.) கிரகத்தைத் தொடர்ந்த அக்னியை நீரால் அவியாஞகிலும், அசுப பரிணமத்தால் ஆஸ்ர யிக்கும் அசுபகர்மங்களை, விரத குணத்தால், மாற்ரு ஞகிலும், அவன் மனையின்றி வருந்தினன் என்பது வும், இவன் கர்மத்தால் நொந்தான் என்பதுவும், விஸ்மயமோ? என்றவாறு. அன்றியும்,

9 கடுமோக மூறியிடு கண்டிகை? *மாவதப்
படியா †லடைநிலை போற்ருயேல்—ஒடிவின்றி

பா. பே. *மாவிரதப். †லமைநிலை.

நாற்கதித்தேரேறி நடுத்துன்பத் துள்ளோட்டும்
பாற்படுத்துமோ வரசன் பாங்கு. 381

(இ - ள்.) மோஹநீயகர்மம், கர்மாஸ்ரவ காரண மென்றறிந்து, மகாவிரத மென்னும் கீலினற் கர்மம் புகுதாமற் காவானுகில், மோகராஜன் துன்புறுத் தாது ஒழியுமோ? எ - று.

10 தோற்றக் கடலீந்துந் தொல்லை யறக்கலத்தை
யேற்ற வகையேறி யேகானேல்—ஆற்ற
வினைநீர் விழைவிடைவால் விக்கானே மூப்பில்
*வினைநீர் முடித்தானே மிக்கு. 382

(இ - ள்.) பவித்ரம் ஏறி ஜல யாத்ரை போவான், மரக்கலம் பின்னமாம் இடமறிந்து, பந்தம் செய்யானுகிலும், சம்சாரமென்னும் சமுத்திரத்தைத் தர்ம மென்னும் மரக்கலத்தால் நீந்துவான், பின்னப் படாமற் காவானுகிலும், அவன் சமுத்திரத்தி லழுந்தித் துன்புறுவதற்கும், இவன் ஸம்ஸாரத்தில் அழுந்தி துன்புறுவதற்கும், ஐயுற வுண்டோ? எ-று.

11 குணக்குழுவை †யுண்ணிறீஇக் குன்றுக் குமதி
கணக்குழுவை யெல்லாங் கடிந்து—தணப்புடைய
வுள்ளத்தாற் காப்பிட்டங் கொன்றுமை யொத்தரசாங்
கள்ளத் துவரெறியுங் காண். 383

(இ - ள்.) பரீக்ஷையும் ஆராய்வும் பலமுள்ளானல் அன்றிப் பகைவருக்கு அழியாமை காக்கவல்லவனே? பிரமாதமில்லாத சாரித்ர மில்லாதார்க்கும் கஷாயம் புகுதாமற் காக்கவாராது. என்றவாறு. அன்றியும்,

பா. பே. *வினைதீர். †யுண்ணுறீ.

12 நற்காட்சி நல்லறிவு நல்லொழுக்க நன்கமைந்த
வுட்காத காப்பிவையே யோருங்காற்—றிட்காது
தீவினைவந் தூறுமோ திண்மையா லுண்மையினைப்
பாவனையான் மேவுதலே பாங்கு. 384

(இ-ள்.) ஜலதுர்க்க, கிரிதுர்க்க, வனதுர்க்கமென்னும், த்ரிவித ரக்ஷையுள்ளவன் பக்கல், பகை வந்து புகுதவற்றோ? அதுபோல, சம்யக்தரிசனம், சம்யக்ஞானம் சம்யக் சாரித்ர மென்னும், த்ரிவித குணரக்ஷை யுண்டாக, பாபம் புகுதவற்றோ? அதுகாரணத்தினுல் பிறிதொன்றின்மேல் வாராநின்ற மோகத்தை விட்டு, சம்யக் தரிசன க்ஞான சாரித்ரங்களையே, மோகிப்பது என்றவாறு. அன்றியும்,

13 ஏற்பான்கீழ் வேட்கையா லீவான்மே லென்றறிக
பார்க்கீழ்நீர் கோள்கிற்கும் பாரேற்றம்—நோற்கில்
அபிமானத் தாலாசை விட்டவரே யாற்றப்
புவிமேலிற் பீடுடையார் போற்பு. 385

(இ-ள்.) ஏத்தத் துலான் நீர் மொள்ளும்போது அதோகதியிறங்குவதும், நீர் கொடுக்கும்போது ஊர்த்துவகதி யேறுவதுமே சொல்லாதோ; அபிமானங்கெட்டு, மோகத்தால் ஏற்பதாகிய அது கஷ்டமும், அபிமானக்கேடும் ஆகாதோ? ஆதலின் ஈவானே ஞான விசேஷத்தால் பெரியன் என்பதும் அறியாயோ? என்றவாறு. அன்றியும்,

14 ஈவாற்று வானே யிரும்பொருளை யெவ்வுயிர்க்கும்
நோவாற்றி வைக்கின்று *னூன்முறையே—நோவாற்றிப்
பில்காதான் தேடும் பெரும்பொருடான் பிற்பிறப்பி
னல்குரவே யென்னும் நசை. 386

பா. பே. *னூண் முறையே.

(இ - ள்.) எத்தனை எத்தனை விறகு பெருகும் அத்தனை அத்தனை யக்னி அழற்சி யுண்டாய், அருகு இருந்தாரையும் தன்னையுந் துன்புறுத்துமது போல, மோகத்தால் எத்துணைப் பொருள் பற்றுபெருகுமோ! அத்துணைமோகம் பெருத்து அருகிருந்தாரையும் தன்னையும் அழல்விக்கும், அன்றியும் மோகத்தாற் கர்மாஸ்ரவமாம் ; அதனால் கர்ம சம்வரை செய்வார், மோகத்தை விடுவது, அன்றியும் பாஹ்ய அப்யந்தர பரிகிரகங்களைத் துறந்திருந்த முனிவரை கூறக்கேள். என்றவாறு. அன்றியும்,

15 குத்தி சமிதியே சிந்தையீ ராறடக்கம்
அத்தகைய தன்மமே மாதவமு—மொத்த
பரிசையைவெல் பான்மையாற் பான்முனிவ னின்று
லுரிந்துத்தா னூற்றடைத்த லூற்று. 387

(இ - ள்.) திரிகுப்தியே, பஞ்சமிதியே, த்வாத சானுப்ரேக்ஷையே, இந்திரிய சம்யமே, ப்ராணி சம்யமமே, எனப்பன்னிரண்டு சம்யமமே; உத்தம க்ஷமாதி பத்துதர்மமே, பாகியாப்யந்தர தவம் பன்னிரண்டே, இருபத்திரண்டு பரீஷகஜயமே, என்னும் இத்தன்மையோடு முனிவனின்றால், அவன் பக்கல் கர்மம் ஆஸ்ரவமாகாமல் அடைபடும், விளக்கு எரி கின்ற விடத்து இருள்புகமாட்டாதவாறேபோல. என்றவாறு. அன்றியும்.

16 மோகமிற நூக்கி முன்னின்ற நாற்றுவரை
யேகத் துறந்திவற லைம்புலன்மேல்—நாக
விடங்கான் றமிர்துண்டா னவ்வமிர்தை யேவிட்டு
அடங்காத நஞ்சுண் போலாம். 388

(இ-ள்.) தனக்கு சகல ரக்ஷையும் பலிஷ்டமாக, பரிகிரகத்தை நிக்ரகம் செய்து, சம்யமத்தைக் கைக்கொண்டவன்: மீட்டுந்தொடர்ப் பாட்டுக்கிறங்குவது, கடுவிஷங்கான்று அமிர்தமுண்டவன், அவ்வமிர்தத்தைக் கான்று, மீட்டுங் கடுவிஷத்தை யுண்டாற்போலும், அது கர்மங்களை தடுக்க வாராது காண், பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

17 காட்சிநிலைந் நம்பங் கால்முகடு பாவுகழி
மாட்சி நவஞ்சீல மாமனையை—மாட்சி
குபுதியெனுங் கோற்நதவாற் கோள்வினையாங் கள்வர்
புகுதாமற் காப்பதுகாண் பூண்டு. 389

(இ-ள்.) தன கனக சம்ரத்தன்; கிரகத்தைக் கள்ளர்புகுதாமே பலிஷ்ட ரக்ஷ செய்து காத்தாற்போல, ரத்னத்ரயமுள்ள முனிவரர் காப்பார். நீயும் உன் விரதகுணம் இருந்த கிரகத்தில், கர்மமென்னுங் கள்ளர் புகுதாமை, நிர்மோக மென்னும் ரக்ஷயிட்டுக் காப்பது, பின்னர் நின் பெருமையில் சிறிதே காண் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

18 மனைப்பாசத் துள்ளே மருவி யிருந்து
வினைப்பகையை வெல்திறந்தார் மிக்கார்—நினைப்பரிய
ஞானந்தோ டொன்றி நடக்கின்ற நன்முனிவர்
ஈனந்தோ டொன்றுவரோ விங்கு. 390

(இ-ள்) கிரகத்துள்ளே யிருந்தும், தத்தமக்கேற்றவிரத சீல குணங்களைத் தாங்கி, கர்மம் புகுதாமை காப்பார் மிக்கார், நீ அந்த கிரகஸ்தனுயினுந் தபஸ்வியாயினும் அவர் பாடே இருந்த நீ, ஆசா

பாசத்தோடுங் கூடி கர்மாஸ்ரவம், எதற்குச் செய்வையோ? என்றவாறு. அன்றியும்,

19 *ஓதுவதுங் கேட்பதுவு மொன்றி யுரைப்பதுவுந்
தீதி லறவுரைமேற் சிந்தனையுங்—கோதின்றி
ஐம்புலனை நீக்குதலு மாங்கிவைதா னில்லையேல்
இன்புதவ மில்லையா லீண்டு. 391

(இ - ள்.) வேலைக்கொண்டவன் சாவுக்கஞ்சுதலும், தபஸ்வியானவன் அனுஷ்டானத்திற்கு அஞ்சுவதும் ஆனால், அவனுக்கு வீரமும், இவனுக்குத் தபவிசேஷமுமில்லை. என்றவாறு. அன்றியும்,

20 நோற்றக் கடலகத்துட் டுன்பச் சுறவெறிய
மாற்றுச் சுழிக்குழியுள் மாதுயருற்று—ஆற்ற
அருமை மரக்கலம்பெற் றேறியே யீண்டுங்
கருமக் கடல்விழ்வார் கண்டு. 392

(இ - ள்.) இராத்திரி அந்தகாரத்தால் வழிகாணாது, குழியில் விழுந்தார்; பகலில் விழுவாருளரோ? முன்னம் மோகமென்னும் இருளினால், சன்மார்க்கங் காணாதே சம்சாரமென்னுந் துன்பக் குழியில்விழுந்தாயாகிலும்; இப்பொழுது சம்யக் தரிசனக்ஞான சாரித்ரம் என்னும் மார்க்க விளக்கு பெற்றும் விழுவது என்னுக்கோ? என்றவாறு. அன்றியும்,

21 வேந்தர்நலம் வெவ்வினையூற் றென்றுநீ வேரறுக்கும்
ஆய்ந்ததவம் பட்டவமே யாருயிரைச்—சேர்ந்த
வினையூறு மார்க்கமே மேவிநீ நின்றால்
உனையூறு செய்யாதோ வுற்று. 393

பா. பே. ஓதுவதுவும்.

(இ - ள்.) தன் வஸ்து கொடுத்து பூமி கொண்டான், ஆரம்பஞ் செய்யானாகிலும்; ராஜ்யசுகத்தை விட்டு தீக்ஷை கொண்டான், விரதசீல குணானுஷ்டானங்களில் நிகழானாகிலும்; அவ்விருவருங் கெட்டார்; என்பதனைக் கேளாய், பவ்ய ஜீவனே. எ - று.

22 ஈன்றநாய் போன்றுயிரை யெப்பாலுங் காத்தளித்தும்
ஆன்றின்ப மேபயக்கு மந்நெறியை—ஏன்ற
உரைகேட் டொழுக்கந்தா லொன்றினுன் றன்னை
விரையாது கேட்பதுகாண் வீறு. 394

(இ - ள்.) எல்லா பிரகாரத்தாலும் உறுதியுரைப்பவுங் கேட்டுத் தெளியா யாகில், முன்புள்ள மகாபுருஷருடைய கதையைக் கேட்டாகிலும், கர்ம சம்வரை யறிவதுகாண் பவ்ய ஜீவனே. எ - று.

நகுலன் கதை

23 அறைகடல் சூழ் வையத் தவந்தியெனு நாட்டி
லிறையுடைய வின்பபுரந் தன்னிற்—பொறையுடைய
வேந்தன்பூ பாலனு மிக்கபெருந் தேவி
வாய்ந்த மனோகரியா மாது. 395

(இ - ள்.) நாவலந் தீவில், பரத க்ஷேத்திரத்து அவந்தி எனும் வளநாட்டினுள், இன்பபுரம் என்னும் நகரையாள்வான், பூபாலன்; அவன் தேவி மனோகரி என்பாள், இவர்கள் இனிதே தர்ம ராஜ்யம் செய்கின்ற காலத்துத் தன் நகரத்துக் காரண வேளாளர்க்குப் பிரதானி யாவனோ? வெனின்,

24 ஓங்குபுகழ் நகுலன் ஒண்மனைவி பேருரைப்பின்
வாங்கு புகழ்கமல வல்லியாம்—பாங்குடைய

மக்கள் பலராகி வாழுநாள் மூப்படையத்
நக்கவனை மிக்கிகழ்ந்தார் நாம். 396

(இ - ள்.) இன்பபுரம் என்னும் நகரத்து *கவுண்டன் நகுலனென்பான், அவன் மனைவி கமலவல்லி என்பாள், இவ்விருவருக்கும் மக்கள் பலரும் பிறந்து செல்லா நின்ற காலத்து, நகுலனுக்கு மூப்புவந்தடைய, அவனை அவன் மக்களும் மனைவியும் உதாசீனம் பண்ண, நகுலன் யாது சிந்தித்தானோ? வெனின்,

25 என்னாலே நன்மையு மீண்டு திருவுருவு
முன்னான மக்கள் முதல்மனைவி—யென்னை
யிகழ்ந்திருப்ப யானிருப்ப தென்னென்றே யெண்ணி
நயந்துதவம் போய்ப்பட்டா னன்கு. 397

(இ - ள்.) என்னாலான மனைவியும் மக்களும், என்னை யிகழ்ந்து செல்ல, இனி சம்சாரியா யிருப்பது கஷ்டமென்றெண்ணி, சம்சார வைராக்யனாய்ப் போய், விமல கீர்த்திதரர் என்னும், முனிவரன் பக்கலிலே, தீக்ஷை கைக்கொண்டு யிருந்த பின்னை, குருக்கள் அழைத்து, உமக்கு நம்மோடே சித்தாந்தம் ஓதினால் அல்லது, கர்மாஸ்ரவ சம்வரை, நிர்ஜரை யறியவாராது; நீர் நூல் ஓதும் என்று சொல்ல, சிறிய பாலகர்களைப்போல ஓதுவது கஷ்டமென்னும் மான கஷாயத்தால் புறப்பட்டுப்போய், வெயில் நிலை வெள்ளாகாச விருக்ஷமூலம் என்னும் காயக்லேசத்தின் மிக்க தவமுண்டோ? என்று ஓர் ஏரிக்கரையின் விருக்ஷத்தின் கீழிருந்து, போவார் வருவாரைப் பார்த்து, இன்று இத்தனை குடம் நீர் போன வென்

பா. பே. *காமுண்டன்

றெண்ணி, கொக்கும் கூர்வாயனும் இன்று இத்தனை மீன் பிடித்தனவென்று எண்ணி, இவ்வகையே யெழுபது வருஷம் தபஞ்செய்த காலத்து, யாது நிகழ்ந்ததோ? வெனின்,

26 முற்பவத்திற் றோழன் முனிந்து *மனைவினையைப்
†பற்றற் றருந்தவமே பாங்கியற்றிப்—பொற்பமைந்த
பொன்னுலகிற் றேன்றியே போன பவமறிந்
தின்னணமோ வென்றிகழ்ந்தா னிண்டு. 398

(இ - ள்.) முன்னை பவத்திற்றோழன் சம்சார வைராக்யம் வந்து தவம்பட்டு, தபச்சரணத்தாற் சுவர்க்கத்திற்றோன்றி, தேவனாகித் தன் தோழன் சகாயன் எங்கே யுள்ளானோ? வென்று, அவதிக் ஞானத்தாற்பார்த்துத் தவஞ்செய்கின்றமை யறிந்து, இவனை பரீக்ஷிப்பனென்று, விகுர்வண ரூபத்தால் பால தபஸ்வியாய் வந்து அவரை நமஸ்கரித்து எம்பெருமான் கர்மாஸ்ரவ சம்வரை, நிர்ஜரை யென்பவை எப்பெற்றிய தென்று வினவ, மூத்தவடிகள் முனிந்து யாது சொன்னர். எனின்,

27 நானுண்ட வுப்பின் அளவில்லை நன்மகனே
நீயுண்ட கூழெனவே நிந்தித்து—வானுண்ட
செற்றந்தான் மூத்தடிகள் சீறியே வைதுரைத்தா
ரற்றந்தா மாங்கவனை யன்று. 399

(இ - ள்.) மூத்த வடிகள் சொல்லுவார், நான் உண்ட லவணத்தின் பிரமாணம் போதாது நீயுண்ட ஆகாரம்; எனக்கு எழுபது வருஷம் தவமுண்டு, நீ

பா. பே. *மனைவியை. †யற்றத் தருந்தவமே யாங்.

நேற்று பிறந்தவன் என்னை ஆஸ்யம் பேசுவதோ? யென்றுரைப்ப, அங்கு நின்றும்போய் ஒரு கிரகஸ்த ரூபங்கொண்டு, அவ்யேரியின் நீரை வெளியில் கையால் இறைப்பக் கண்டு, மற்றொரு கிரகஸ்த ரூபம் விகுர்வணையால் வந்து இந்நீரை என்னத்திற்கு இறைக்கின்றாய் என்று கேட்க, என்கையிலுள்ள மாணிக்க மோதிரம் இங்கே விழுந்தது, அது காண வேண்டி நீர் இறைக்கின்றேனென்றலும், அவனும் கைகொட்டிச்சிரித்து யாது சொன்னன். எனின்,

28 வருநீ ரடைந்துநீர் வாங்குதூம் பாலே
பெருநீர தோட்டிப்பின் னின்ற—*வருநீரைக்
கையா லிறைத்நக்காற் காணலா மன்றியே
ஐயா இதென்ன மதி. 400

(இ-ள்.) ஏரிக்குப் புகும்நீரைப் புகுதாமே கட்டுப் படுத்தி, பெருநீ ரெல்லாந் தூம்பாலே போகவிட்டு, ஒழிந்த அருநீரைக் கையால் இறைத்தால் காணலாம்; அன்றியே இப்பெரு நீர் எல்லாம் கையாலிறைக்க வொண்ணாது என்றறியாயோ? என்று கைகொட்டிச் சிரித்து, நீயும் இம்மூத்த வடிகள் அக்ஞான தபசு பண்ணுகின்றவரோடு ஒத்தாய் என்று மூத்தவடிகள் கேட்பச்சொல்லி, அங்கு நின்றும் போய் நீர் காக்கை யுங் கொக்குமாக நிருமித்துக்கொண்டு, மூத்தவடிகள் சமீபத்தே வந்திருந்து, கொக்கை நோக்கி நீர்க் காக்கை சொல்லும், இவ்வேரியின் நடுவுங் கடையும் †எத்துணை ஆழம் போகுதென்றறிவையோவென்று கேட்பக் கொக்கு சொல்லுவதாவது எழுபதினயிரம்

பா. பே. *கருநீரைக். †எத்தனை ஆழம்போது.

வருஷம் இவ்யேரியிலே ஜீவித்த என்னை நீ ஹாஸ்யம் பேசுகின்றாயென்று த்வேஷித்து, உன்னுடைய பிறப்பும் உன் முன் வம்சம் ஏழுபடி காறுமறிவேன், முன்னை நாட்பிறந்த நீயோ இவ்வாறு கேட்பாய் என்று முனிந்து; நீ வல்லையாகில் அகலமும் ஆழமும் நீர்ப்பெருமையும் புக்கு அறிந்து சொல்லவல்லையோ வென, நீர்காக்கை யாது செய்து யாது சொல்லிற்றோ வெனின்,

29 நடுவு மிடைகடையு நன்னீரின் மூழ்கிக்
கடுக வெழுந்து கரையேறி—யோடிவிலாக்
கொக்கதனை வந்தெய்திக் கூர்ந்துரைத்த நித்தனையேன்
றெங்கும் வகையதனு லோர்ந்து. 401

(இ - ள்.) நீர்காக்கை ஆதி இடை அந்தத்து அளவும் மூழ்கித் தானறிந்தவாற்றால், இத்தனை பிரமாணம் உண்டென்று உரைத்து, நீயும் முன்னம் இங்கே வந்து நீரிரைத்த வேழையும்; இம்மரத்தின் கீழிருந்த மூத்த வடிகளும்; பலகாலத்தோம் என்னும் மூர்க்கம் பேசுவதல்லது, நல்லறிவில்லை என்று, மூத்த வடிகள் கேட்பவுரையாடா நிற்ப, மூத்தவடிகள் யாது சிந்தித்தாரோ? வெனின்,

30 என்னேநா விந்தனைநா *ளேழ்மையா லோர்ப்பின்றிக்
கொன்னே தவம்கழித்தேன் கோளின்றிப்—பன்னு
சுதமோது பாவனையாற் றெல்வினை தேய் வாகும்
இதமே யென வெழுந்தா னின்று. 402

(இ - ள்.) என்னை நானறியாதே அநேக காலம் அஞ்ஞான பாவத்தால் அனர்த்தமே ஆயுஷ்யத்தைக்

பா. பே. *ஏழையா.

கழித்தேன் என்று போய், ஆகமம் ஓதி சுவாத்யாய பாவனையால் உக்ரதபஞ் செய்து, அந்திய காலத்து சன்னியாசங்கொண்டு, சமாதி மரணத்தோடு முடித்து, இஷ்ட சுகதியெய்தினன். என்னுங் கதையைக் கேட்டாகிலும் காலத்தை வீணே கழியாதே அறத்தை நாடு. சுருதத்தோடு கூடின தபசினலன்றி, கர்ம ஆஸ்ரவம் சம்வரை நிர்ஜ்ஜரை செய்ய வாராது என்றறிந்து நிகழ்வது காண் பவ்ய ஜீவனே. எ - று.

31 இயம நியமம் விடாதே நிகழிற்
பயமயங்க ளாம்வினைபாங் கெய்தா—பயமிலா
வங்கரக்கை தொட்டான்மே லந்திரங்கள் புக்குருவா
வெங்கதிரோன் முன்னிருள்போல் வென்று. 403

(இ - ள்.) ஆதித்யன் முன், இருள் நிலையாதவாறு போலவும்; அக்னிமுன், சீதம் நிலையாதவாறு போலவும்; அங்கரக்ஷை தொட்டான்மேல், ஆயுதங்கள் பட்டு உருவாதவாறு போலவும், யம நியமங்கள் இடைவிடாதே யிருந்தார்க்கு, பாபாஸ்ரவம் புகுதாதென்று, மறவாது நிகழ்வது காண், பவ்ய ஜீவனே. எ - று.

சகல விமல கேவலக்ஞான பகவதருகத் பரமேஸ்வரன் முகோத்கதமாகிய த்வாத சானுப்ரேக்ஷையுள் சிரேணிக மகாராஜன் கேட்ப கௌதம கணதர சுவாமிக ளருளிச் செய்த ஒன்பதாவது சம்வரை என்னும் அதிகாரம் சமாப்தம்.

10-வது நிர்ஜ்ஜரை

1 வையத் துயிராய வான்பயிர்க ளோங்கும்வகை
பெய்யு மறமாரி பீடுடையன்—மெய்யனடி
எத்தி வினையறுப்ப தென்னு மதிகாரம்
*பார்த்தவனுன் பாற்படுப்பன் பண்பு. 404

(இ-ள்.) உலகமென்னும் க்ஷேத்திரத்து, உயிர்களென்னும் பயிர்களுக்கு, அறமென்னும் மாரி சொரிந்த, அருகத் பரமேஸ்வரன் ஸ்ரீ பாத கமலங்களை நமஸ்கரித்து, கர்ம நிர்ஜ்ஜரை என்னும் அதிகாரம் உரைப்பாம். என்றவாறு. அன்றியும்,

2 பரிக்க மிருவகையும் பற்றறுத்துப் பண்பின்
பெருக்கத் தவமுயல்வே பேணித்—தருக்காது
சையமத்தை மேவினுர் சார்ந்த வினையறுப்பர்
ஐயமது வின்றியே யாங்கு. 405

(இ-ள்.) க்ஷேத்ர கிரக, தன தான்ய, தாஸி தாஸ, கோ மகிஷ, துரக குஞ்சராதி பாஹ்ய பரிக்கிரகங்களும்; மித்யாத்வமே, த்ரிவேதமே, ஹாஸ்ய, ரதி, அரதி, ஸோக, பய, ஜுகுப்ஸையே; குரோத, மான, மாயா, லோப மென்னும் கஷாயமே, என்றிந்த அப்யந்தர பரிகிரகமுமாக, பாஹ்ய அப்யந்தர பரிகிரகங்களைத் துறந்து; இந்திரிய சம்யமமே, பிராணி சம்யமமே என இருவகை சம்யமத்தை யுடையவனுகி; அனசன, ஆவமோதர்ய, விருத்தி பரிசங்கியான, ரஸபரித்யாக, விவிக்த சய்யாஸந, காய்க்லேச மென்னும் பாஹ்யதபம் ஆறும்; பிராயசித்தம், வினயம், வையா விருத்தியம், ஸ்வாத்தியாயம், வ்யுத்சர்க்கம்

பா. பே. *பாத்தவனுண் பார்ப்படுப்பன்.

த்யானம் என்னும் அப்யந்தரதபம் ஆறும், ஆக பன்னிரண்டு தவங்களையும், உடையனாகி சுத்தபரிணாமத்தால் நிகழ்ந்தால், கர்ம நிர்ஜ்ஜரையாம். என்றவாறு. அன்றியும்,

3 அறிவின்மே லன்புயிர்மே லாரருளு மாகிப்
பொறியின்மேல் மேவல்பொருந் தாதே—நெறிபயந்த
வாத்தன்மே லன்பாகி நீநிகழி லாருயிரே
தேத்த வினையகலுந் தேய்ந்து. 406

(இ - ள்.) விக்ஞானமும், வீரியமும், ஆயுதமும் உண்டானால்; எதிர்த்த சத்ருக்களை ஜயிக்குமாறுபோல, அறிவும் இந்திரிய வைராக்யமும், தவருசியுமுள்ள சாரித்ரமும் பெற்றால், கர்ம நிர்ஜரையாம். என்றவாறு. அன்றியும்,

4 அன்பழிக்குஞ் செற்றமு மாங்கார மானமு
மின்பழிக்கு மாய வுலோபமுந்—துன்புழக்கும்
மாயத்தாற் கீழ்க்கதியை மன்னுதே மேற்கதிக்கே
காயத்தா லானபயன் காண். 407

(இ - ள்.) சிநேகத்தை கெடுக்கும் குரோதமும், சுகத்தைக் கெடுக்கும் மானமும், சுகதியைக் கெடுக்கும் மாயையும், துக்கத்தை விளைக்கும் உலோபமும் என்றிவை யுடையார், அதோ கதிக்கு பாஜனமாவார்; இவற்றை நீங்கினார், சுவர்க்காதி மோக்ஷம் எய்துவர்; அதுவன்றியும், வாயுவினோடு கூடின அக்னி, பெரிதாயிருந்த விரகுராசியை, பஸ்மமாக்குமாறு போல, சாரித்ரத்தோடு கூடின சுபத்யான

மென்னும் அக்னி, கர்மமென்னும் இந்தனத்தை பஸ்பமாக்கும். என்றவாறு. அன்றியும்,

5 அறியா தனந்தபவ மார்த்த வினைகள்
பறையா தெனவென்னல் பண்போ—நிறைவா
மருங்கலங்கள் மும்மையா லந்தரத்துத் தீரும்
பெருங்குபுதீ மும்மையினும் பேர்த்து. 408

(இ - ள்.) ஆதிகாலத்து அனந்தபவத்து ஆர்த்த அருவினைகள், எல்லாம் இப்பொழுதே போமோ? வென்பாயாகில் கேளாய், பலகாலமுமாகக் கூடின த்ரண ராசியை, தீ அடுத்தால் அந்தர் முகூர்த்தத்தில் பஸ்மமாக்கினாற்போல; சாரித்ரமும், சுபத்யானமும், கூடிக்கொண்டால் அந்தர் முகூர்த்தத்தே, கர்மம் கெடும், என்றால் அதனுக்குடன்படாதே இருப்பதோ? பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்;

6 விரைந்து வினைகெடவே மேவுதியே லெய்திப்
பரந்தகதிப் பிறப்பே பார்த்த—நிரந்தகுட
மெண்பத்து நான்கிலக்கம் வைத்துமணி தானெறிந்தால்
அன்புற் றமிர்தகுட மாங்கு. 409

(இ - ள.) எண்பத்துநான்கு நூறுயிரம் யோனியைத் தப்பி, மனுஷ்ய பவம் பெறுதற்கு அரியது, பெற்ற பரிசாவது, எண்பத்து நான்கு நூறுயிரம் கட்குடத்தினடுவே, ஒருபால் குடத்தை வைத்து, விலையறியா மாணிக்கத்தைத் தெறிக்க வல்லவன் தெறித்தால், அத்தனை குடத்தையுந் தப்பி பால் குடத்திலே மாணிக்கம் விழுந்தாற்போல; கர்மத்தை நிர்ஜரை செய்யும் மனுஷ்ய சரீரம் பெற்றும் மீட்டும்

அந்தயோனிகளிலே பிறத்தற்கு ஆசைப்படுவதோ? பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

7 வினைவலிதே யென்றிருக்க வேண்டா குபுதி
நனைவலிதாப் பெற்று லகலு—மூலைவில்
இலையடுக்கில் தான்பழமா மேயிருளைப் போக்கு
நிலைய சுடரதுபோ னோர்ந்து. 410

(இ - ள்.) வினைவலிதே, நம்மால் கெடுக்க ஒண்ணுமோ என்று இகழவேண்டாம்; த்ரிகுப்தி முதலாகவுடைய பல நற் பரிணாமத்தோடும் பொருந்தவே, அக்ஷணத்தே கெடுக்கலாம்; இருள்வலிது என்று இராதே விளக்கேற்றி யிருளைத் துறந்து; நம்காரியத்தை முடித்தாற் போலவும், காயடுத்துப் பழமாக்கினாற் போலவும், தவத்தினாற் கர்ம நிர்ஜரையாகும். என்றவாறு. அன்றியும்,

8 நன்றுதீ தென்றிரண்டு நன்மதியா லாராய்ந்து
கன்றாருந் தீதொரீஇக் காதன்மயா—லொன்றுன
நற்குண மேமன்னி நன்ருக நின்றெழுகின்
நிற்குமோ பல்வினைக னோர்ந்து. 411

(இ - ள்.) சாத்யம் அசாத்யம் என்பதனை அறிந்து ஔஷதஞ் செய்துண்ணப் பிணி தீருமாப் போல, சுபாசுப கர்மமென்னும் இரண்டினையும் அறிந்து, சுப கர்மங்களை கைக்கொண்டு நிகழ்ந்தால், கர்ம நிர்ஜரையாகும்; அந்த சுபகர்மமாவது எவ்வகைத்து? என்பாயாகில் கேளாய் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

9 வதசமிதி யேருத்தி வாய்ந்தெழுந்த சீலம்
சுதமுள்ளாற் சொல்வகைத் துன்பின்றி—இதமருளும்
ஆத்தன்மே லன்பாகி யைம்பொறியு மீள்வானேற்
போர்த்த வினைகெடுங்காண் போய். 412

(இ - ள.) விரதமும், சமிதியும், குப்தியும், சீலமும், சுருதமும் என்னுங் குணங்களின் நிறைந்து, நிர் தோஷியாயுள்ள ஆப்தனை, நிச்சயித்து பஞ்சேந் திரிய நிக்ரகம் செய்ய, கர்ம நிர்ஜரையாம். என்ற வாறு. அன்றியும்,

10 செற்றமு மார்வமுந் தீர்விலாச் சிந்தையினுல்
உற்ற வினைந்துன்பந் தாடுமலவே—நெற்ற
விரண்டுவினை நீந்தெய்த லியல்பின் முயல்வாயேல்
முரண்ட வினைதீரு முன்பு. 413

(இ - ள.) சத்ருவும், மித்ருவும் இருந்த சபையுள் கலகந் தீருமோ மத்யம புருஷராலன்றித் தீராதது போல, தருமத்தாலன்றி ராகத்வேஷ பரிணமத்தால் கர்மநிர்ஜரை யாகாது. என்றவாறு. அன்றியும்.

11 *†ஆனதன்மே லன்போடிச் சந்தோட மாகாதே
ஊனவழி மோக முள்ளுதல்நான்—தானங்கொண்
டேகவசுந்தத்தில் வீழ்ந்த தெடுத்தவன் போன்
மோக மெனும்பளகே முற்று. 414

(இ - ள). ஒருவன் பிக்ஷைக்குப் போனவிடத்து, மாவால் சுட்ட அப்பம் பெற்று, அதனை கையிற் பிடித்துவர, கைநழுவி அமேத்யத்தில் விழுந்ததனை, மோகத்தால் விடமாட்டாது எடுக்கப் பின்னே;

பா. பே. *என்னுக்கு. †ஆனதனமே.

வருகின்றவன் *எதற்கு, எடுத்தாய் என்று கேட்பத் துடைத்துப் போடவே, எடுத்தேன் என்ற அவனேடு ஒப்பான் மோகி. என்றவாறு. அன்றியும்,

12 ஆகுமே லந்தரத்த தாகுமா மப்பொருளும்
போகுமேற் கைப்பொருளும் போகுமாம்—மோக
மிரண்டுக்குஞ் சிந்தைய தென்னுக்கோ முன்னே
திரண்ட வினைகெடுமேற் நேர்ந்து. 415

(இ - ள.) இரவானபொழுது வெளிச்சம் போய் இருளாயிருக்கும், பகலான பொழுது இருள்போய் வெளிச்சமாயிருக்கும், அதுபோல பாபம் உதயமான பொழுது துக்கமன்றி சுகம் வாராது புண்ணியம் உதயமான பொழுது துக்கம் நீங்கி சுகமே வருமென்னும்; சத்ய பாவனையாலன்றி, கர்ம நிர்ஜரை ஆகாது காண் பவ்ய ஜீவனே. அது காரணத்தினல், அசுப பரிணமத்தை விட்டு, சுப பரிணமத்திலேயே நிகழ்வது. என்றவாறு. அன்றியும்,

13 வெப்ப வொளிகூடி விங்குமிருள் கடியு
மொப்பமைந்த வொண்சுடர்போ லுள்வினையைத்—தப்பின்றிக்
கான்று விளக்குமக் காட்சி யறிவுடைநீ
யேன்று வினைகடியா யீங்கு. 416

(இ - ள.) சிலேஷ்ம ரோகம் உதையமானல் சிலேஷ்ம ஹரமான ஔஷதத்தாலும், கிரியா வசத்தாலும் களைந்தாற்போலவும், விளக்கும் உஷ்ணமும் காந்தியும் உண்டாகக் குறைவற்று இருந்த இருளைக் கான்றாற்போலவும், நீயும் உன்னுடைய ஞானதரிசனத்தால் கர்மமென்னும் இருளைக்கெட முயலாயோ! பவ்ய ஜீவனே, என்றவாறு. அன்றியும்,

பா. பே. *என்னுக்கு.

14 மனைபூமி மக்களு மல்லாப்போன் வெள்ளி
வினையூறு வாயெனவே விட்டுத்—தனைமேய
தந்துவமே பாவிக்குந் தன்மையார் மேல்வினைக
ளொத்நிமேல் நிற்குமோ வுற்று. 417

(இ-ள்.) சாக்ஷி சகிதமாகப் பண்டங் கொண்டானுக்கு, அர்த்தங் கொண்டே னென்னும் பல முண்டே! அதுபோல; அருகர் சித்தர் ஆச்சார்யர் உபாத்யாயர் சர்வ சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேஷ்டிகள், சாக்ஷியாகக்கொண்ட தவமும் மந்திரமும் உண்டாயிருக்க, முக்தி வந்து எய்தாதே இருக்குமோ; த்ரதி, மதி, சத்யமும், கல்வியு முண்டாயிருக்க சத்துருவிற்கு பல ஹானியானல் பகை சாதிக்கலாம், அதுபோல, பவ்ய ஜீவனும் காலலப்தியின் துறையைக் கைக்கொண்டால், இடை விடாதே அனுஷ்டான மென்னும் வாளால் கர்மமென்னும் மன வைரியை சாதிக்கலாங் காண், பவ்ய ஜீவனே. எ-று. அ-ம்.

15 வினையுதிர்க்கு மெய்த்தவத்தை மேவியே யோகந்
தனைநிகழ்வார் தாநந்தத் துவமே—மனைநீங்கி
மாதவந்தி வின்றக்கால் மன்னு வினையுதிரு
மாதவத்தை யோர்கிலே நிமன்னு. 418

(இ-ள்.) தான சக்தியால், தானம் செய்தான் த்யாகியாகும்; தபஸ்வியும், தபஸ்சக்தியால் கர்ம நிர்ஜ்ஜரையைச் செய்யும்; பரம யோகியும் புகழினை எய்தும், அன்றியும் இந்த யோகியே முக்தியையும் எய்தும் என்பதனை அறிந்து சொன்னேன், ஆதலின் காலத்தை வீணே கழிக்க வேண்டாம், பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

16 ஒழுக்கந் தவமிரண்டு மொன்றேன்று லாக
விழுப்பநினை நின்மேல் வினைகள்—கழக்கின்றி
நீரோடு மாற்றங் கரையின் மரம்போல
வேரோடும் போங்காண் விரைந்து. 419

(இ-ள்.) யானை, தேர், குதிரை, கருவியுடைய காலாள் என்னும் சாதுரங்கபலம் உண்டாய்; புத்தியும் மனஸ்திதமும் உண்டானல் எதிர்த்த சத்ருவை ஜயிக்குமாறுபோல, சம்யக் தரிசனஜ்ஞான, சாரித்ர, தபஸ் என்னும் சாதுரங்க பலமும், சுபத்யானம் என்னும் ஆயுதமும் உண்டானல், வினையென்னும் வைரியை யறவெறிந்து முக்தியை யெய்தலாம். அதுவன்றியும், உதய நிர்ஜரையும் உதீரண நிர்ஜரையும் என்னும் இரண்டு நிர்ஜரையையும், உரைத்துக் காட்டவும், தெளியாயாகில் கேளாய் ஜீவனே சரீரத்தை யான் என்று எண்ணாது; புத்ர, மித்ர, களத்ராதிகளை என்னுடையனவென்று எண்ணாது; தனக்கு தானே தெளிந்து, பாஹ்யாப்யந்தர பரிக்ரங்களை அறவே விட்டு நிகழ்ந்து, கர்மக்ஷயம் செய்தார் கதையை கேட்டாகிலும் தருமத்தின் பெருமையை விஸ்வசிப்பதுகாண் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

17 வேதண்ட வெற்பின்மேல் விண்ணேர் வியப்புறுக்கும்
மாதண்ட பானுவெனு மானகரம்—மாதண்ட
மன்னன்பேர் மாசுவண பத்திரன் மாதேவி
மன்னு மனேகரியா மாது. 420

(இ-ள்.) ஜம்பூ த்வீபத்து பரதக்ஷேத்திரத்து, விஜயார்த்த பர்வதத்தின்மேல் மாதண்டபானுவென்னும் மா நகரத்து ராஜா சுவர்ணபத்ரனென்

பான், இவன் மகாதேவி மனோகரி என்பாள், சுவர்ண பத்ரன் குரோத மான மாயா லோபம் நான்கையும், மித்யாத்வ, சம்யக் மித்யாத்வ, சம்யத்வ பிரகிருதி, என்னும் மும்மையுமாகிய சப்த பிரக்ருதிகளை, க்ஷயம் செய்து நிசர்க்க சம்யக்தரிசன க்ஞானியுமாகி ரிஷியர்க்கு தானமும், அருகத் பூஜையும் செய்து, சில உபவாசங்களாலும் புண்யவானாகி, பந்தஹேதுக்களையும், கர்மங்களையும், சம்வரை செய்து செல்லா நின்ற நாளகத்து, யாது நிகழ்ந்ததோ? வெனின்,

18 விண்ணுலகை நீங்கி விறல்விமல வாகனனுங்
கண்ணிய நற்காட்சிக் காதலான்—மண்ணுலகிற்
றேய்ந்த விரைமலர்கள் சூழ்பொழில்சூழ் பானுவெனும்
வேந்த னகரடைந்தான் மிக்கு. 421

(இ - ள்.) சுவர்ணபத்ரன் தோழன், சம்சார விரக்தனாய் தவம்பட்டு தபஸ்சரணத்தினால் சுவர்க்கத்திலே தேவனாய்த் தோன்றி, அவதிக் ஞானத்தால் தனது முற்பவம் அறிந்து, தன் தோழனாகிய சுவர்ண பத்ரனுக்கு, கர்ம க்ஷயமாவது அறிந்து, சுவர்க்கத்தினின்றும் இழிந்து விஜயார்த்த பர்வதத்தின்மேல் அக்ரத்திம சைத்யாலயத்தின்கண், சுவர்ணபத்ரன் தேவரை வந்தித்துக் காணா நின்ற பிரஸ்தாபத்தின்கண், விமல வாகன னென்னும் தேவனும் தேவரை நமஸ்கரித்து; சுவர்ணபத்ரன் தேவரை நமஸ்கரிக்கின்ற பக்தியும், ஸ்நேகமும் கண்டு, ரோம ஹர்ஷனாய், அவனைத் தழுவிக்கொண்டு இச்சாகாரம்செய்து, இப்போது நாம் நந்தீஸ்வரத்வீப சைத்யாலயங்களை அங்கு சென்று நமஸ்கரிப்போம் என்றலும், சுவர்ண

பத்ரனும் விசோதி பரிணாமத்தால் உடன்பட்டு, இருவரும் எவ்வகை போயினரோ ? வெனின்,

19 மாக மிசைவிரைந்து மன்றலொலி துளும்ப
போக விமானமிசைப் போகலுமே—நாக
ருறைமானு சோத்தரத்தை யுற்றங்கே நிற்பக்
கறையான னுறன் கலந்து. 422

(இ - ள்.) விமல வாகனனும், சுவர்ணபத்ரனும், இருவரும் இரண்டு விமான மேறிப் போகாநிற்ப, விமலவாஹனன் விமானம் மானுஷோத்தர பர்வதத்தைக் கடந்துபோக, சுவர்ணபத்ரன் விமானம் அதன்மீது போகாதே நிற்றலும், விமலவாஹனன் கண்டு என்னே ! மறந்தோ மன்றே, இப்பர்வதத்தின் மீது மனுஷ்யற்கு கமனமில்லை, நீ இதற்குச் சிந்தாக்ராந்தனாக வேண்டாம், மீண்டும் உன் நகருக்குப் போவென்று கூறி விமலவாகனன் போக, சுவர்ண பத்ரன் மான பங்கத்தால் சிந்தாக்ராந்தனாகி, இவன் விமானம் போக, நம் விமானம் போகாது நிற்பது கண்டு சம்சாரம் விரும்புமது, தக்கது அன்று என்று வைராக்யபரனாய் யாது சிந்தித்தானோ ? வெனின்,

20 என்னே வினையிருந்த வாறென்றுங் கேழையாய்க்
கொன்னே கழிப்பனோ கொண்டுடலை—யென்றுந்
துறந்தான் பிறந்துடலின் துன்பெலா நீங்கச்
சிறந்தோங்க வோங்கினான் சென்று. 423

(இ - ள்.) மீண்டும் போந்து சுவர்ணபத்ரன் வெறுப்பினால் தன்னகரம் புகாதே, பஞ்சாக்னியின்

பா. பே. *விரிந்து.

பாடை யிசாயமென்னும் ஆற்றங்கரையிலே வந்து, விமாநமும், வித்தையும், போகத் துறந்து; தனக்குத் தானே வைராக்ய பரனுய், நம ஸித்தேப்ய: என்று பஞ்ச முஷ்டியால் லோச்சு செய்துகொண்டு பாஹ்யாப்யந்தர பரிகிரகங்களைத் துறந்து, சகல விரதங்களையும் தரித்து, தர்மத்யானருடனுகி ராத்ரி பிரதிமா யோகமாக காயோத்ஸர்க்கம் நின்ருன். நிற்றலும் யாது நிகழ்ந்ததோ? வெனின்,

21 முன்னை யிவன் றேமுன் மோகத்தால் வந்தெய்தி
யின்ன வகையதனை யெய்துவித்தான்—பின்னுமிவன்
செய்தவத்தின் றன்மையினைச் சேர்ந்தறிவ னென்றெண்ணிக்
கைதவந்தாற் றேன்றினுன் கண்டு. 424

(இ - ள்.) விமல வாகனனென்னுந் தேவன் தர்மத்தினுலே யவதரித்து மானபங்கத்தாலே தனக்குத்தானே துறந்தான் இவன்ஸ்திரனே! அல்லனே! என்று, விகுர்வணு ரூபங்கொண்டு, உபசர்க்கம் செய்யவேண்டி, எவ்வகைத் தோன்றினனே? வெனின்,

22 பொன்னெளியு மின்னிடையு பொற்கலசம்போன் முலையு
மின்னதரம் தொண்டைபல் முத்தமென—அன்னம்போ
லொண்கூந்தலுந்தி யொளிர்புருவ மிந்திரவிற்
*புண்கூந்தல் வேல்நயனம் போன்று. 425

(இ - ள்.) என்றிப்பரிசினுற் கண்டார் காமிக்கும் உருவங்கொண்டு, சுவர்ண பத்ர முனிகள் காலின் மேல் விழுந்து, கலுட்சி எய்தி, யான் ராஜபுத்ரி,

பா. பே. *புண்கூர்ந்த.

என்னை ஒரு க்ஷத்திரிய குமாரனுக்கு கொடுக்க வென்று போகாநிற்ப, வேடுவர் பாய்ந்து பறிக்கவும், அவரை யெல்லாந் தப்பி வந்தேன், வழிகாணுதே தேடி திரிகின்றேன், என் புண்ணியத்தால் உன்னைக் கண்டேன், என்னைக் கைக்கொண்டு ரக்ஷிப்பாயாக வென்று, காமக்குறியும் மோகமும் அறியக்காட்டி, கால்மேல் விழுந்து ஒரு காரணத்தை யாக்கிக் கூறவும் மனங் கலங்காதே, புலன்கெழ வினைகளும் கலங்க, த்யானுருடனுய் நிற்பப் பின்பு தேவன் பின்னும் விகுர்வணையினுல் அவனுக்குப் புருஷனுய் வந்துத் தோன்றி, முனிவர்க்கு யாது சொன்னுன். எனின்,

23 ஓடுத லொன் றின்றியே யுள்ளத்தி லிங்கிவளைக்
கூடவோ விவ்வுருவங் கொண்டதெனு—வாடித்தன்
வாளுருவி வாய்மடித்து வந்தெறிய லுற்றவனைத்
தாளுருவக் கை பிடித்தாள் தாழ்ந்து. 426

(இ - ள்.) அவளுடைய பர்த்தாவாய் வந்து, நன்று நன்றென்று சீறி. நடுக்கானகத்தே இவளை கொண்டு போந்தவாறு அழகிது என்று வாளுருவி அவன் மேலெறியப் புக அவளும் அவன் மேல் விரைந்தெழுந்தோடிச் சென்று அவன் கையைப் பிடித்து நான் ரிஷியரை கண்டு நமஸ்கரிக்க வந்தேன் அன்றியும், என்மேலும் தோஷமில்லை, அவர் மேலுந் தோஷமில்லை, என்று நிற்ப, அங்ஙனே யாகில் நீ எனக்குச் சூளுறவேண்டு மென்று அவன் சொல்ல, அவளும் முனிகளைத் தொட்டுச் சூளுறப்புக வேண்டா என்னுடைய குருக்களைத்

தொட்டுச் சூளுறவேணுமென்று, விகுர்வணை ரூபத்தால் எங்ஙனம் தோன்றினனோ? வெனின்,

24 பொக்கணமும் தாழ்சடையும் பூசிய வெண்ணீறும்
அக்கு மணிவடமு மங்கசைய—நக்கனமே
தான்வந்து தோன்றினன் ருபதனுய்த் தக்கவகை
வானுந்துங் கானகத்துள் வந்து. 427

(இ-ள்.) இப்பரிசினல் தாபதன் தோன்ற இவளைத் தொட்டுச் சூளுற வென்றலும், அவளு மவரைத் தொட்டுச் சூளுறலும், அவன் அத்ரஸ்யமாதலும், தான் அவளைப் புகழ்ந்து நாமிங்கு நின்றும் போவதென்று அவளைக்கொண்டு போய் விட்டு. மீட்டும் முனிகளை உபசர்க்கம் செய்ய முறுவலித்தான் அது எவ்வகையோ? வெனின்,

25 தீயா யெழுந்துவளஞ் சேர்ந்தெரித் தெத்திசையும்
மாவாயு விசியே வந்தடிப்ப—வோவாதே
த்யானமெனுந் தீயினுற் றிவினைக் காடெரிய
வானவன்பின் மாயத்தால் வந்து. 428

(இ-ள்.) தேவனல்: காற்றும் தீயும் கலந்து அடர்ந்தெரிய; முனிவரனும், தன் தியானமென்னும் தீயினற் கர்ம மென்னும் காட்டைத் துடைத்து அடர்ந்தெரித்து, அசலிதனய் நின்றமை கண்டு, பின்னும் தேவன் யாது செய்தான்? எனின்,

26 தாயு மனைவியுந் தன்மகனுந் தக்கவா
ருயும் வகைதெரியா னவ்வழியே—யேயபெருஞ்
சாத்தோடு வந்தெய்தித் தரமெரியைக் கண்டுகலுழ்ந்
தார்த்தோடிக் கால்விழ்ந்தா ராங்கு. 429

(இ - ள்.) சுவர்ணபத்ர முனியின் தாயும், மனைவியும், சிறுமகனும், மற்றும் சில வியாபாரிகள் வருவார்களோடே வருகின்றார்களாக, விகுர்வித்து வாரா நின்றவர்கள், அக்னி சுற்றும் பற்றியெரிய நடுவே தியானாரூடனாய் நின்ற சுவர்ண பத்ர முனியைக் கண்டு எரியின் நடுவே புக்குக் கான்மேல் வீழ்ந்து கண்டார் இரக்கமும் உருக்கமும் ஆம் வண்ணம் பிரலாபிப்ப என்னும் உரையாது நின்றமை கண்டு பின்னும் யாது செய்தான் தேவன், எனின்,

27 அடித்துப் பலகள்வ ராங்கவர்பூண் வாங்கிப்
பிடித்துப் *பிறபிறவும் பேர்த்து—முடிப் பற்றி
யிர்த்துப் பலபலவு மின்னாங்கு செய்யவுந்தா
னேர்த்துள்ளத் துள்ளானு முற்று.

(இ - ள்.) இப் பரிசினால் கள்ளராய் வந்து, சுவர்ணபத்ரன் தாயையும், மனைவியையும், பிடித்துத் தன் முன்னே ஈர்த்துத் துகிலுரியவும், ஆபரணங்களை வாங்கியும், இனையன பலவுஞ் செய்ய அவர்களும் பெரிதும் பிரலாபிப்பவும், அதனை காணான் கேளானாய் தியானித்து நிற்குமளவில், ஒரு காட்டானை வரக் கண்டு கள்ளரெல்லாம் திசை திசையே யோடிப் போனார்களாகப் போகலும், அவரும் முனிவர் காலின் கீழ் வீழ்ந்தழா நிற்ப ஒரு பாம்பு வந்து பிள்ளையைக் கடிக்கப் பிள்ளையும் மரித்தலும், பின்னையும் பாம்பு யாது செய்ததோ? வெனின்,

---

*பா. பே. பிறப் பிறவும்.

28 பாலன்ற ஹயுத் தொடர்ந்த படநாகங்
காலன்போல்கால்சூழ்ந்து தான்கடைய—நூல்வகையி
னேக்கியே யுள்ளவகை நோவாது வெவ்விணகள்
போக்கும் வகைநின்ருன் பொற்பு. 431

(இ-ள்.) மகன் தன்னைக் கடித்த பாம்பு, தந்தையைக் கால் சூழ்ந்து கடையக் கண்டு, பெரிதும் பயமெய்தி, சுவர்ணபத்ர முனியின் தாய் மரித்துக் கிடந்த பிள்ளையை யெடுத்துக்கொண்டு முனிவர் மேற் கைநீட்டி எவ்வகை பிரலாபித்தாளோவெனின்,

29 துன்பக் கடலிலெனை நீக்கியே நீதுறந்தே
யின்பநினக் கெய்தலா லெவ்வகையோ—வன்புற்று
நின்பாவ னையாலே நீங்கினு லிங்கிவர்கள்
வன்பாவஞ் சூழாதே வந்து. 432

(இ-ள்.) என்னுடைய நோயையும், உன்னுடைய புத்திரனும் தாயும், மரண மெய்தக்கண்டும், ஒரு கருணையையுமின்றியே நீ செய்கின்ற தபஸினல், உனக்கு துக்கமல்லது சுகதியுண்டோ வென்று காட்டித் தன் கழுத்திலே சுருக்கிட்டு நிற்கவும், முனிவன் மனம் வேறுபடாமை கண்டு, பின்னும் தேவன் யாது செய்தான்? எனில்,

30 கருமை பெருந்தலைக் கட்டெறும்பு தான்மொய்த்
தருமை யுடன்படர்ந்தாங் கேறி—யெரிமொய்ப்பத்
துன்பாக லூன்றத் துளங்காது நின்றெழுந்தான்
முன்பா வனைமேன் முயன்று. 433

(இ-ள்.) கட்டெறும்பு கடிக்கவும், இருப்பு அங்கரக்ஷை புக்கார் போலத் துக்கமுணராமை

நின்றமை கண்டு பின்னும் தேவன் யாது செய்தான். எனின்,

31 தீக்கொண்ட வெம்பகழி தீரவலத் தெய்ய
வாக்கி லுறக் கொள் வகையதுபோற்—றேட்க
ளெனைப்பலவு மென்மே லெறிந்திடவு மெய்தும்
நினைப்பிறு னின்ரு னிறைந்து. 434

(இ - ள்.) உக்ர வ்ருச்சிகங்கள், தன்னை யெறியவும் அறியாதே, கர்மமென்னும் விருக்ஷத்தின் வேரைத் தடியா நின்றமைகண்டு பின்னும் தேவன் யாது செய்தான். எனின்.

32 மின்னு முழக்கொலியும் மேதக் கடுவலியுந்
துன்னிப் புயல்சொரியுந் தூங்கிருளும்—தன்னகரி
லற்கமே யாய்ந்தேறி யாகத் துணை விலனய்
நிற்குநிலை யோகோடு நேர்ந்து. 435

(இ - ள்.) ஜல விருஷ்டியும் மகா வாயுவும், சீத பரீஷகமும், முகில் முழக்கும், அசனி கோஷணையும் சகித்து, அசலிதனய் நின்றமை கண்டு பின்னும் தேவன் யாது செய்தான். எனின்,

33 தரந்தரங் கொண் டாங்குத் தவள நுரையாய்
நிரந்தர மெத்திசையும் நீர்மை—புரந்தரித்து
வந்தெறிந்து தாக்க வலிந்த மனமாகிச்
சிந்தெறிந்து தீவினையைச் செற்று. 436

(இ - ள்.) இவ்வகை நிரந்தரம் நீர் பெருகித் துரந்து, திரை பலவும் மூகந்து எறியக் கரந்து தீவினை யகல, த்யானருடனய் நின்றமை கண்டு, பின்னும் தேவன் யாது செய்தான். எனின்,

34 வேர்பறிய மாமரமும் வெண்சிலையு மீண்டுதிரப்
போர்மலிந்த மாவாயும் போந்தெறியச்—சீர்மலிந்த
நெஞ்சத்து ளஞ்சாதே நீடு வினை யுதிரப்
பஞ்ச பதமேதான் பயின்று. 437

(இ - ள்.) மகா விருக்ஷங்கள் வேர் பறிந்தும், மகா பர்வதங்கள் இற்று வீழவும், மகா வாயு வந்தடிப்பவும், சரீரம் எவ்வளவு உண்டு அவ்வளவு காலமும் துன்பம் அகலா தென்று, கலங்காது நின்றமை கண்டு பின்னும் தேவன் யாது செய்தான். எனின்,

35 நெருப்புமிழ்கண் வாயெயிறு நீண்டுள் வளைந்து
கருப்பிளந்து வான்றசையைக் கௌவி-யுருப்பிளந்த
வாளுருவி வாய்மடித்து வந்தாறு காயமிசை
நீளுருவ வாளோச்சி நேர்ந்து. 438

(இ - ள்.) இப்பரிசினல் அக்னியுமிழ்ந்து கோபாக்னி உத்ரேகமாய் வளைந்த வெயிறும் வள்ளுகிரும்* ரத்தாபரணமும் கபாலமும் அசிகணை பிண்டிபாலமும், தேர், மா, முதலாக அநேக ஆயுதங்களுமாக நிருமித்து, பிசித பக்ஷணமுமாக விண்ணினேடு மண் விரவி விகுர்வணைகள் பல காட்டி, விசேஷ குணங்கண்டத்தே மிளிர்ந்திலங்கும் வாளோச்சவும், அசலிதனய், நின்றமைக்கண்டு பின்னும் தேவன் யாது செய்தான் ? எனின்,

36 முந்து மொளிபவனர் முன்விறிஇப் பின்னமரர்
தந்து குணமனைத்துந் தாமுரைத்து—வந்தித்
ததுநாங்க ளிந்திரனு மிவ்வாறே பேசித்
ததுவேலாந் தாமுரைத்தா ராங்கு. 439

---

* பா. பே. ரத்நா.

(இ - ள்.) தேவேந்திரன் உன்னுடைய அறிவு நிறைவும் தைர்யமும், வீர்யமும், பகு குணமும் க்ஷமை யுங் கண்டு பிரீதி எய்தி தன் இந்த்ரகத்து வரந்தர வேண்டி விடுத்தான்; நீ விரைந்து இந்த விமானத் திலே ஏறிப்போதுக, என்றுயிப்படிப் பலவும் உரைத் துக் காட்டியும், பதிரனும் அந்தகனும் போலக் கேளான், காணுன் மௌனியாகவே நின்று பின் னும் எவ்வகை பாவித்தானே வெனின்,

37 வினையாது தீங்கு விளைந்நதென வெண்ணி
நினைவான் வினைதீர நின்ருன்—*முனிவியாது
மில்லாமை முன்புற்ற விரெட் டுப சர்க்க
மெல்லா மிகந்துயர்ந்தா விங்கு. 440

(இ - ள.) என்றிப் பரிசினல்; ஆக்ஞா விஜயமும், அபாய விசயமும், விபாக விசயமும் ஸம்ஸ்தான விசயமும், என்னும் தர்ம த்யானத்தாலும், துவாத சானு பிரேக்ஷை என்னும் பாவனையாலும், ஷோடச உபசர்க்கம் சகித்து பிரதக்த்வ விதர்க்க வீசாரம், ஏகத்வ விதர்க்க வீசாரம் (சூக்ஷ்ம க்ரியா பிரதிபாதி) என்னும் சுக்லத்யானத்தால் காதி கர்மங்களை நிர்ஜரை செய்துக் கேவலக் ஞானம் பிறத்தலும், எவ்வகைத் துதித்தானே வெனின்,

38 வெங்கதிரோன் தன்கதிரை யுண்டு விரைந் தலரா
வங்கண் மரையரும்பி னவ்வகைபோ—லிங்கண்
மறுவிலா நிற்கண்டு மாற்றத் துறந்து
பெறுகலா மல்லாமை பேர்ந்து. 441

*பா. பே. முனியாது. மிகழ்ந்து

39 இரவி விரிகதிரை யெய்தி விரிந்தலரா
விரைவு மரையரும்பின் வீவனவே—பரவமைந்த
குற்றமிலா நிற்கண்டுங் கொண்டுதுற வாற்ருர்
பற்றுநற் காலமலாப் பண்பு. 442

40 பானு விரிகதிரின் பான்மைதான் பெற்றலராத்
தான மரையரும்பின் தன்மைபோ—ஞானம்
புரைத்துன்னைக் கண்டாலும் பூண்டு துற வாற்ருர்
உரைத்தநற் காலமலா லுற்று. 443

(இ-ள்.) இப்பரிசினல் துதிப்பக் கண்டு, முன்பு உபசர்க்கம் செய்த விமல வாஹன னென்னும், தேவன், விநயத்தாலும், பக்தியாலும் நமஸ்காரம் செய்தான், அவ்வளவில் சுவர்ண பத்ர சுவாமி தனக்குத் தானே தீக்ஷித்த ஒரு நாளில் உபசர்க்கம் சகித்து சுக்லத்யானத்தால் கர்மநிர்ஜரை செய்து கேவலக்ஞானம் பிறந்து சுகதி எய்தினன் என்னுங் கதையைக் கேட்டானாகிலும்; கர்மங்களை நிர்ஜரை செய்து சுகதி எய்தலாகாதோ! பவ்ய ஜீவனே. எ-று.

41 என்னே மற்றின்னுயிரே யிந்தவினை யுடலைக்
கொன்னே வினையுகுத்துக் கூடுவதோ—மன்னே
வினையுதிர்ப்ப னென்னுமோர் வீவில் பரி ணமம்
நினைவுனக்கு நிற்குமோ நேர்ந்து. 444

சகல விமல கேவல க்ஞான பகவ தருகத் பரமேஸ்வரன், முகோத் கதமாகிய த்வாத சானுப் ரேக்ஷையுள் ஸ்ரேணிக மகாமண்டலேஸ்வரன், கேட்ப, கௌதம சுவாமிகள் அருளிச்செய்த, பத்தாவது நிர்ஜ்ஜரை என்னும் அதிகாரம் சமாப்தம்.

11. தர்ம சுவாக்யானம்

1 துன்பக் கடல்நீந்துந் தூய வறக்கலந்தை
யன்புற் றுயிர்க்கருளு மண்ணலடிக் — கன்புற்
றுறவணங்கி யாங்கறமே யென்னு மதிகாரம்
பெறவுரைப்ப னுங்கதனைப் பேர்த்து. 445

(இ - ள். *சம்சாரமென்னும் சமுத்திரத்தைக் கழிவிக்கும், தர்மமென்னும் மரக்கலத்தை யருளிச்செய்த, சுவாமி ஸ்ரீ பாதங்களை நமஸ்காரம் செய்து, ஜீவனுக்கு தர்மத்தின் மிக்கது யாதொன்றுமில்லை, என்னும் அதிகாரத்தை உரைப்போம் என்றவாறு. அன்றியும்,*

2 மன்னும் விழு*நெதியு மாண்புடைய சுற்றமும்
பன்னுந் தொழிலாற் பெறும்பயனும் — பின்னை
யனுதி வினைதீர்வு மறமலா லன்றி
மனுது பிறவுயிரே மற்று. 446

(இ - ள்.) *தனகனக சமர்த்தனுவதுவும்; புத்ர மித்ர களத் ராதியும்; பந்துக்கள் கொண்டாடும் வரைவு, தொழில், வாணிகம், வித்யா சில்பங்கள் என்னும் யாதொன்றூனும் உத்யோகமாவதும்; பின்னை சுவர்க்காதி மோக்ஷங்களை கொடுப்பதுவும்; தர்மமன்றி மற்றொன்று மில்லை காண் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்.*

3 உரைத்தவறந் தானிரண் டாகுமா முன்னில்
நிரைக்கு மனைத்துறவே நேரே — உரைத்த
மனையறம் பன்னொன்று மாதவமோர் பத்தாம்
நினையறத்தை நல்லுயிரே நீ. 447

---

* பா. பே. நிதி.

(இ - ள்.) இருவகை அறம் அவையாவையோ வெனின் சாகார தர்மம் அநாகார தர்மம் என்றிரு வகையாகும் சாகார தர்மம் பதினொன்ருகும் அவை யாவையோ எனில், தரிசனீகன், விரதிகன் சாமாயி கன், புரோஷதோபவாஸன், சச்சித்தவிரதன், ராத்ரி அபுக்தன், பிரம்மசாரி, அநாரம்பன், அபரிக் கிரகன், அநனுமதி விரதன், உத்திஷ்ட பிண்ட விரதன் என்னும் ஏகாதஸமாகும்; இனி அநாகார தர்மம் யாவையோ வெனின், உத்தம க்ஷமை உத்தம மார்த்தவம், உத்தம ஆர்ஜவம், உத்தம சத்யம், உத் தம செளசம், உத்தம சம்யமம் உத்தம தபஸ் உத்தம த்யாகம் உத்தம ஆகிஞ்சின்யம் உத்தம பிரம்ம சரிய மென்னும் தசவிதமாகும். இனி ஆகார அபய பைஷஜ்ய, சாஸ்திர தானம் என தானம் சதுர்வித மாகும் இவற்றை அணுவிரதியாகிலும் தன் சக்திக் குத் தக்க வண்ணம் கர்மக்ஷய நிமித்தமாகக் கைக் கொண்டு நிகழ்வது காண் பவ்ய ஜீவனே. எ - று.

4 †கேடில் நிலேயான உட்பொருளேக் கேளறத்தின்
நீடியதன் மேலன்பு நீக்குதியேற்—கேடில்
நிலேநின்ற வின்புனக்கு நேர்படுமேற் கொன்னே
விலேயன்றிக் கோளன்ரே மிக்கு. 448

(இ - ள்.) வீட்டிற்கு, விலேயறியவரிய மாணிக்கம் அகப்பட்டாற்போல, உன் கஷ்ட சரீரத்திற்கு தர்மம் தலேபட்டு நின்ருல் உனக்கு வெறிதே பெற்ற கணக் கன்ரே? ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

---

பா. பே. *யதன்மேலே. †கேடி.

5 உற்பிருந்த வந்திருவு முன்னுதியேல் முன்னறத்தாற்
பெற்ற வுலகமும் பேசாதோ—தெற்றெனவே
விச்சுக்குத் துன்னுமோ வேளாண்மை செய்பவனும்
நச்சி லறந்தெளிவே நன்று. 449

(இ-ள்.) ஆரம்பம் செய்வானும் முன்னம் விளைந்த பலம் உண்ணு நின்று, மேலைக்கு விச்சு சங்கிரகணம் பண்ணிப் பொதிந்த அவை யிற்றை யுண்ணுமாகிலும்; முன்னம் செய்த தர்மத்தின் பல முண்ணுநின்று பரகதிக்குச் சுகம் வேண்டுவான், மேலும் தர்மத்தை கைக்கொண்டு நிகழானுகிலும்; அவனுக்கு விளைபயன் ஆசையும், இவனுக்கு பர கதிக்கு சுகமும், ஆகாது ஆதலால் தர்மத்தை உதா சீனம் பண்ணுதே நிகழ்வதென்றவாறு. அன்றியும்.

6 அறங்கெடநீ இன்புறு மாசையதென் †போலும்
நிறங்கிளர் கீழ்மரத்தை நேர்ந்து—திறங்கெடவே
வேர்பறிய வெட்டியே வீழ்த்துப் பழமுண்ணு
மோர்வி ல்றிவிலி போலுற்று. 450

(இ-ள்.) தருமத்தை மறந்து இந்திரிய சுகத்தை இச்சித்தல் என்போலும் எனில், பழமும் பிஞ்சியும் பூவுமுள்ள மரத்தை வேர்பறிய வெட்டித் தள்ளிப் பழமுண்ணும் பாவியை யொப்பன். எ-று. அ-ம்.

7 கற்பக நற் சிந்தா மணிகருதி வேண்டியிடின்
நற்பலங்க ளீவதனு நன்கில்லைப்—பற்பலவும்
வேண்டாமை தான்கொடுக்கும் மிக்கவற மல்லால்
மாண்ட குணமுண்டோ மற்று. 451

பா. பே. *மித்திரவு. †போல

(இ - ள்.) கற்பக விருக்ஷத்தை வேண்டினால் வேண்டியவற்றைக் கொடுக்கும்; சிந்தாமணி நினைத்தவற்றைக் கொடுக்கும்; தருமத்தைப் பொருந்தினால், கர்ம ராஜன் வந்து துன்புறுத்தாமல் ரக்ஷித்து, வேண்டாமையும் சிந்தியாமையும் இச்சித்தபலமெல்லாங் கொடுக்கும் ஆதலால், தர்மத்தின் மிக்கது பிறிதில்லை காண் பவ்யஜீவனே. என்றவாறு. அன்றியும்,

8 இறந்தூழி காலமெலாம் வெவ்வினையின் வாழ்ந்தா
யறந்துறந்தா லாமின்பு முண்டோ—சிறந்த
வறமேவி யின்புறுத லின்றுநோ மன்று
பிறமேவி *யின்புண்டோ பேசு. 452

(இ - ள்.) பிறரை ஆஸ்ரயித்து வாழும் வாழ்வுண்டோ? அதுபோல இந்திரிய சுகமிச்சித்தால் கஷ்டமும் பின்னை நரகமும் மல்லது சுகமில்லை. தருமத்தை ஆஸ்ரயித்து லோக பூஜ்யரான த்ரைலோக்ய சுவாமியை நமஸ்காரம் செய்தும் வீரியத்தாலே லோக பூஜ்யமான தபம் செய்தும் கிலேசத்தாற் பெறும் பலமென்றோ வெனின் சாஸ்வதமாகிய சுவர்க்க ஸ்ரீயும், முக்தி ஸ்ரீயும் எய்தலும் ஆம். ஆதலின் இரண்டினும் இந்திரியம் தருமம் ஆகிய உனக்கு உறுதியறிந்துக் கொள்வது காண் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

9 குலந்திருவு கொண்டாடும் வீரியமுங் குன்று
நலந்தரு நற்குணமும் நாளும்—பலந்தருசீர்
நல்லறத்தா லன்றியே நாடிவரும் வழியைச்
சொல்லெனக்கு நல்லுயிரே நோக்கு. 453

பா. பே. *வாழ்வுண்டோ.

(இ - ள்.) நீ வேண்டிய சுகமெல்லாங் கொடுக்கும் தருமத் துறையைக் கைக்கொள்வது; தருமத்தை வேண்டாது *விஷத்தைக் கைக்கொண்டான் போலவே, சுகமின்றி துக்கத்தை இச்சிப்பார் உண்டோ? பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

10 வேண்டிய வேண்டியாங் கெய்தும் வினையறத்தை
யீண்ட முயல்வாயே லின்னுயிரே—பூண்டநின்
பொல்லா வினை †கழலப் பொற்பாஞ் சிவகதியை
நல்லா யடையலா நன்கு. 454

(இ - ள்.) வழிபோவான் பொதிசோறு கொண்டு போகாதே உண்ண இச்சித்தாலும்; காமியானவன் தருமஞ் செய்யாதே; போகோபபோகங்களை அனுபவிக்க இச்சித்தாலும்; அவனுக்கு உண்ணவும், இவனுக்கு போகமனுபவிக்கவும் கூடுமோ? கூடாது. என்றவாறு. அன்றியும்,

11 என்னே யறமுரு யென்னுரையுங்கைக் கொள்ளாய்
பன்னு துயருறுதல் பான்மையோ—முன்ன
மறியாத கால மவமே கழித்தாய்
நெறியான நல்லறமே நேர். 455

(இ - ள்.) தருமத்தினாலேயே சுகமாம் என்றால், நீ அனர்த்தமே காலங்கழித்து துக்கப்படாதே, சம்யக் தரிசன க்ஞான சாரித்ர மென்னுந் தருமங் கைக்கொண்டால், சுகதியில் கேடின்றி எக்காலமும் இருக்கலாம் என்று ஏனைப்பலவுங் காரணங் காட்டவும் தெளியா யாகில் தருமத்திற்குக் காரணமாகிய

பா. பே. *விஷயத்தை. †யகல.

தான பூஜா சீல உபவாச மென்னும் சதுர்விதமாகிய சொல்ப தரும நிகழ்ச்சியால் பெரிய பலம் எய்தி னுற் கதையைக் கேட்டாகிலும் தருமத்தின் பலனைத் தெளிவாய் பவ்ய ஜீவனே, என்றவாறு. அன்றியும்,

சோமிலன் கதை

12 தீபமித னுள்ளே சிந்து வெனு நகரந்
தோமில் பெயர்வினைவிற் சோமிலனு—மேவு
மனைவி பேர் மாண்ட குணவதியா மன்னு
நனமில் வெறுமையிலே தாழ்ந்து. 456

(இ - ள்.) ஜம்பூ த்வீப பரத க்ஷேத்ரத்து தர்ம கண்டத்து, சிந்து வென்னும் நகரத்து, சோமில னென்னும் வியாபாரியின்மனைவி குணவதி என்பாள். இவர்கள் தரித்திரராய்ச் செல்லா நின்ற நாளகத்து ஒருநாள், ஆகாரமின்றி துஷகௌகந்துகத்தை, சம்ஸ்காரம் பண்ணி, அதனை மூன்று உருண்டை செய்து, அதில் ஒன்று தன் புருஷனுக்கும், ஒன்று தனக்கும், நின்ற ஒன்று அதிதிகட்குமாக என்று வைத்து, மத்தியான காலத்து தானபேக்ஷயால், அநகார வேளை பார்த்து நிற்குமளவில், யாங்கனம் யாது விளைந்ததோ வெனின்,

13 உண்டி யிரப்பான் மனைதோறு மொண்மதிபோற்
கோண்ட விரதங் குறையாமை—மண்டி
மருந்துண்பான் போல்முனிவன் வந்தானைக் கண்டு
திருந்தடியை வந்தித்தான் சென்று. 457

(இ - ள்.) மத்தியான காலத்து சந்திரனுடைய கதிபோல, மனைதோறும் முகங்காட்டி, சர்யா

மார்க்கம் வருகின்ற கீர்த்திதர னென்னும் முனி வரனைக் கண்டு, சோமிலன் என்னும் வியாபாரி, யாங்கனம் சிந்தித்தானோ? வெனின்,

14 சதப்ராம்மண முக்யேபப்யோ: வரமேகோ வேதபாரக:
வேதபாரக சகஸ்ரேப்யோ வரமேகோ ரிதுகாமின:
ரிதுகாமி சகஸ்ரேப்யோ வரமேகோ ப்ரம்மசாரிண:
ப்ரம்மசாரி சகஸ்ரேப்யோ வரமேகோ ஜிதேந்திரிய: 458

(இ - ள்.) என்னும் சூத்திரத்தை நினைந்து, பக்தியோடுஞ் சென்று நமஸ்கரித்து, எதிர்கொண்டு தன் மனையிலே கொண்டு புக்கு, பாத பிரக்ஷாளனம் செய்து அந்நீரைத் தன் சிரசில் தெளித்துக்கொண்டு, நவபுண்ய கிரமத்தோடுங்கூட, துஷ கௌகந்துகத்திலே, ஒரு உருண்டையைப் பாணியிற் படைத்தலும், அதனை அம்ருதமாக பாவித்து, அமுது செய்த பின்னை; ஒரு உருண்டையால், சிரமம் போகாமை யறிந்து, மற்றும் இரண்டு உருண்டைகளையும் படைப்பக்கொண்டு, அக்ஷயந்தானம் அஸ்து என்னுமளவில், யாது நிகழ்ந்ததோ வெனின்.

15 பொன்மழையும் பூமழையுந் துந்துபியுங் கோடணையும்
நன்னற் *சுகமாம் நறுவளியு—மின்னனவே
யெய்தி யுலகெல்லா மிசைந்தேத்த வேந்தனுடன்
நொய்திினிமை பெற்றவர் தாமிக்கு. 459

(இ - ள்.) சுவர்ண விருஷ்டியும், புஷ்ப விருஷ்டியும் சுரதுந்துபியும், சுரகோஷணையும், கறைக்கண்ட நறுங்காற்றும், என்னும் பஞ்சாச்சரிய மெய்தி

பா, பே. *சுகமாக.

மகா சம்பன்னனாய், அரசனாலும் நகர ஜனங்களாலும் கொண்டாடப் பெற்று, சுகியானான். ஆதலால் எல்லோரும் மற்றும் பாத்திரதான மறிந்து செய்க. என்றவாறு. அன்றியும்.

தனதத்தன் கதை

16 தீபமிந் ஏகந்துந் தீங்கில்நகரை நகர்த்
தாவில் தனதத்தன் றன்மனைவி—மேவுந்
தனதத்தை என்பாளா மற்றவர்க டாமுந்
தனமிக்கு நன்குடையார் தாம். 460

(இ-ள்) ஜம்பூ த்வீபத்து பரதக்ஷேத்திரத்துத் தகரைமா நகரத்து, வியாபாரி தனதத்தன் என்பான்; அவன் மனைவி தனதத்தை என்பாள். இவர்கள் தன கனக சம்ரக்தராய்ச் செல்லா நின்ற காலத்து, இவர்கள் எருமை மேய்க்கும் வேளாளன், ஒருநாள் எருமைகளை மேய்த்து நீராட்ட ஒரு தடாகத்துள்ளே யடிக்கும் அளவில், தடாகத்துள்ளே ஆயிரத்தெட்டு இதழுடைய தாமரை புஷ்பங் கண்டு, புக்குப் பறித்துக்கொண்டு கரையேறு மளவில், அங்கு வாழ்வதொரு வியந்தர தெய்வம் இப்பூவை, யாவரொருவராயினும் உத்தமர்க்கு ஏற்றுக வென்றுரைப்ப, அந்த த்வனியைக் கேட்டுத் திசைகளெல்லாம் யாவரையும் காணாது, தன் மனத்திலே யவதரித்து மேதிகளை யெல்லா மடித்துக்கொண்டு மனைபுக்கு எவ்வகை சிந்தித்தானோ? வெனின்,

17 உத்தமனுக் கீவதுநீ யென்ற வுரை நினைந்துச்
சித்த முடைமையார் சீர்மிக்க—உத்தமனு
மென்றந்த செட்டிக்கே யீவ னெனவெண்ணி
யன்று மனைபுக்கா னங்கு. 461

(இ - ள்.) உத்தமருக்கேற்றுகவென்று, தெய்வஞ் சொன்ன, த்வனியை நினைத்து, மாதாவும் பிதாவும் உத்தமனும் தெய்வமும் ஆவான் என்னுடைய செட்டியே, அவனுக்கே ஏற்றுவனென்று மனைபுக்கு நின்ற பிரஸ்தாபத்தின் கண், வியாபாரி யாது செய்தானே வெனின்,

18 மின்னு ரொளிமணியு மேதக்க பூந்துகிலும்
பொன்னுர்ந்த மாலைகளும் பொற்கலந்துள்—மன்னுரம்
வேந்தர்க்குக் கொண்டுபோய் மேவந் தனதந்த
னுப்ந்து புறப்பட்டா னுங்கு. 462

(இ - ள்.) இவ்வகையினல் வியாபாரியும், ராஜாவைக் காண்பதற்குச் சீன, மகா சீன, பட்டாவளிகளும், சுவர்ணமாலைகளும், முத்துமாலைகளும், ரத்னங்களும், பொன்னின் கலத்திலே வைத்துக் கொண்டு ராஜாவின் கோவிலுக்குப் புறப்பட்ட செட்டியை கண்டு, கோபாலன் இவரெங்கு போகின்ருரென்று உழையரைக் கேட்டு அவர்களும் ராஜாவைக் காணப்போகின்ருரென்று சொல்ல, இவரிலும் அவர் உத்தமரென்று சிந்தித்துத் தானுமுடன் சென்றிருக்கப், பின்னை செட்டியும் ராஜாவிற்குக் கொண்டுபோன காக்ஷி யெல்லாங் கொடுத்து நிற்ப, வேல்வேந்தன் எவ்வகையாயினனே? வெனின்,

19 துன்னு வினையுதிர்க்குந் தொல்குணத்து மாமுனிவன்
மன்னுநக ராலயத்து வந்ததுகேட்—டுன்னியே
ஆனந்த மாய்வேந்த னுங்கவரைக் காண்பதற்குத்
தேனுந்துந் தாரான் செலும். 463

(இ - ள்.) செட்டி தான் கொண்டுபோன காட்சிப்பொருள் எல்லாம், அரசனுக்குக் கொடுக்குமளவில், மகாவிரத சீல குண சம்பன்னராகிய, ஸ்ரீத்திதரரென்னும் முனிவரன், தகரை என்னும் மகா நகரத்திலே புவன திலகமென்னும் ஜிநாலயத்து, எழுந்தருளியிருந்தமை கேட்டு, மஹீபாலனென்னும் தார்வேந்தன், அஷ்டவிதார்ச்சனை கொண்டு புறப்பட்டுப் போகின்றவனோடு செட்டியும் போகா நிற்ப, கோபாலனும் இவர்கள் போகின்றமையறிந்து, ராஜாவினும் அவரை உத்தமரென்று சிந்தித்துத் தானுமவர்களுடனே போனபின்னை, ராஜாவும் ஜிநாலயம் சென்றெய்தி, நிஷிதி என்று உள்புகுந்து, அஷ்டவிதார்ச்சனை கொண்டு அர்ச்சித்து நமஸ்கரித்து பின்னை முனிகளை பஞ்சமுஷ்டியால் நமஸ்கரிப்பக் கண்டு எல்லாரிலும் உள்ளிருந்த தேவரே, உத்தமரென்று எண்ணி உள்புகுந்து, அர்ச்சித்து, கை கூப்பித் தமதிடம் போன பின்னை, காலாந்தரத்து ஆயுஷ்ய அவசானத்து மரணமெய்தி, அந்த புண்யத்தால் கரைகண்ட மஹாராஜா என்னும் மகாமண்டலேஸ்வரனாய், அனேக மண்டலமெல்லாம் சாதித்து, அனேக சைத்யாலயங்களுமெடுப்பித்து, பூஜையும் நிகழ்த்தி, ராஜ்யம் செய்து பின்னை, கடைக்காலத்து தீக்ஷைகைக் கொண்டு, சுகதியெய்தினனாகக் கருதுவது பிரசித்தமாயது, இந்த கரைகண்ட மகாராஜன் அற்ப பூஜையாலான பலன் பெற்ற சரிதையைக் கேட்டாகிலும் பூஜையை நிகழ்த்தி ஜின தர்மத்தைக் கைக்கொள்வது, அன்றி

யும் சீல விரதமே குணமாகக் கொள்வது காண் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

பிரபாவதி

20 நாவலந் தீவதனுள் நன்கமைந்த தென்பரதம்
பூவலருஞ் சாகபுர மதனுட்—காவலறு
மொத்தா யணன்றேவி யொண்மதியாள் பாவதியாம்
பற்ருய சீலமே பற்று. 464

(இ - ள்.) ஜம்பூ த்வீபத்து பரத க்ஷேத்திரத்து, சாகபுரம் என்னும் நகரத்து, ராஜா ஒத்தாயண மகாராஜன், தேவி பிரபாவதி என்பாள்; இவள் பதிவிரதா குண சீலத்தளாய் செல்லாநின்ற நாளுள், இவளைத்தன் நகரத்துள்ளே வைத்து, ஒத்தாயண மகாராஜன் தனக்கு சத்துருக்களாகிய க்ஷத்திரியர் மேல் படையெடுத்துப் போனன். போதலும், இப் பால் யாது நிகழ்ந்ததோ? வெனின்,

21 துடியிடையோ பாவதிதன் தொல்வடிவின் மிக்க
படியுடையார் பாரகந்தி லென்னும்—நொடிகேட்டு
மோகமுறு சிந்தையனுப் முன்புபிரச் சோதனனும்
போகமுறு வானெண்ணிப் போந்து. 465

(இ - ள்.) பிரபாவதியுடைய ரூபலாவண்ய சௌந்தர்ய மெல்லாம், கண்டார் புகழக் கேட்டு, சண்டபிரத்யோதனன் என்பான், அவள்மேலே மோகித்துச் செல்லாநின்ற நாளுள், ஒத்தாயணமகா ராஜன் சத்துருக்கள் மேல் தண்டு எடுத்து விட்டு வெகு தூரம் போனமையறிந்து பிரபாவதியைக் கொண்டு போக எண்ணி, சாதுரங்கபலத்தோடும்

வந்து, சாக புரத்தை வளைத்துக் கொண்டு காவல் ஏவித் தன்மந்திரிகளை யழைத்து நீங்கள்போய் பிரபாவதியை க்ஷமை கொண்டு வருவீராமி னென,அவரும் பிரபாவதி கோயில் வாயில் குறுகி, நாங்கள் தேவியைக்கண்டு போகவந்தோம், எங்களைப் புக விடுக, என்று பிரதான புருஷர்க்கும் மற்றுமுள்ளவர்க்கும் சொல்லி, அவர்களோடும் பிரபாவதி முன்னே சென்று கண்டு, சண்டபிரத்யோதனன் உம்முடைய ஸ்ரீயும் சம்பத்தும் வீரியமும் ரூபமும் லாவண்யமும் சௌந்தர்யமும் வேண்டிப் புகழ்ந்து எம்மை விடுத்தார் என, சாமபேததானங்களால் பேதித்து இனி நீர், க்ஷமையுடன் உடன் படவேணுமென்று சொல்ல, பிரபாவதி யாது சொன்னள். எனில்,

22 குலநலமே கொண்ட குணமே யறிவே
நிலமுழுதும் பேணு நிறைவே—நலமுகந்து
போவதே பின்னும் வதசீலம் விவதெனிற்
சாவதே நன்றேனக்குத் தான். 466

(இ - ள்.) என்றிப்பரிசினுற் சொல்லக்கேட்டு, மந்திரிகள் சொல்லுவார், நீ சொல்லப்பட்ட குணங்களாலான பரபவசுகம் எய்தினல் இப்போதே பொல்லாதோ வென்றுஞ் சொல்ல பிரபாவதி யாது சொன்னள். எனின்,

23 அறனழித்துத் தீவினையா லாழ்நரகஞ் சேரும்
பிறர்மனைசேர் பிடழிவு பேணித்—திறனழிந்த
?வாங்கிவனைப் போல்வே னுய திருவறமு
நீங்கு மெனமொழிந்தா ணோர்ந்து. 467

(இ - ள்.) சத் குணங்களும், தர்மங்களுங் கெட்டு, நரககதிக்குச் சேரவேண்டிப் பிறர் தாரபரிகிரகங்கள் மேல் ஆசைப்படா நின்ற, உம்முடைய வரசனைப் போல, நானும் அக்ஞானியாவேனுகில், என்விரத சீலமும் அழியும், தருமமும் கெடும், அதனுல் இப்பொழுதே பழிபுகும்; பர பவத்து நரகாதி துக்கமும் ஆகும்; என்றலும், மந்திரிகள் சொல்வார், எங்கள் வசனமும்பழுதாகாதே நீ வசனந்தந்து சந்தோஷியாயாகில், சீக்கிரம் வந்துன்னைக்கொண்டு போகத்தவரான் என்றலும், பிரபாவதியும் மகாராஜன் தூரத்திலுள்ளான் என்று சிந்தித்துப்பின்னும் யாது சொன்னுள். எனின்,

24 பத்தார நன்னெறியே பாரின்மேல் அமைந்தருளா
ரொத்தாங் குளோருடனே யுற்பவித்தார்—?யித்தார்
வென்சிந்தை யென்னுமா லென்னுக்கு விங்குநீர்
புன்சிந்தை செய்துரைத்தல் பூண்டு. 468

(இ - ள்.) கேட்டு மந்திரிகள் சொல்லுவார், நயத்தாலும் புஜபலத்தாலும் கொண்டுபோகை யொழியோம், நீ சலங்கொண்ட கொள்கை, நகரத்திற்கும் பரிவாரஜனங்கட்கும் லயமாகாவண்ணம், விசார புருஷரோடே விசாரித்துக்கொள்ள இற்றையத் திவசம்இடைதந்தோம் என்று போனுர்கள், இப்பால் பிரபாவதி எவ்வகையாயினுளோ? வெனின்,

25 விலங்கோ டசேதனமே தேவர்நர ரென்றிந்
நலங்கிளர்ந்த நால்வகையார் மிக்க—வுலங்கா
துபசர்க்க மாயினக்கா லுனுடலை நீத்தல்
தவசர்க்க மாசக்தி தான். 469

(இ - ள்.) சுர நர திர்யக் அசேதனமென்னும் சதுர்வித உபசர்க்கமாயினல், ஆகார சரீர நிவ்ரத்தி செய்தல், தபச்சரண பல மாமென்று பாவித்து, அக்ரதிருஷ்டம், என்னும் (எதிரே காணப்பட்ட) உபசர்க்கம் நீங்குமளவும் ஆகாரசரீர நிவ்ரத்தி செய்து காயோத்சர்க்கமாக நின்ருள் அங்ஙனம் நிற்றலும் யாதுவிளைந்ததோ வெனின்,

26 ஓமண்ணதிர மாகோப மாய விகுர்வணையால்
விண்ணதிர வார்த்துடனே வேகமாய்க்—கண்ணதிரத்
தாக்கினுன் ருர்வேந்தன் றன்னை யுடைத்தகலப்
போக்கினுன் றன்னகர்க்கே புக்கு. 470

பிரபாவதி காயோத்சர்க்கம் நிற்குமளவில் ஓர் வியந்தரதேவன் அவதிக் ஞானத்தாற் பார்த்தறிந்து வந்து மண்ணும் விண்ணும் அதிரும் வண்ணம் மகா கோபத்தோடும் விகுர்வண ரூபங்கொண்டு, சண்ட பிரத்யோதனனைத் தன் நகரம் புகாது துரத்தி, மீண்டும் வந்து பிரபாவதியைக் குறுகி, உபசர்க்கந் தீர்ந்தது, கை எடுத்துக்கொள், என்று தேவன் சொல்ல, பிரபாவதியும் கை எடுத்துக்கொண்ட பின்னே, தேவன் தேவாபரணம் முதலாயினகொண்டு பூஜிக்க, நகர ஜனமெல்லாம் வந்து பூஜிக்க சீலவதி என்று பெயரிட்டு தேவன் போயினபின்னே; சில நாட்கழிந்த பின்பு ஒத்தாயணமகாராஜனும் இந்த அவஸ்தை யெல்லாங்கேட்டுதன்னுடையசத்துருவையும்அழித்து தன் நகரில் புகுதாமல் மீண்டும் சண்டபிரத்யோதனன் மேற் சென்று பிரத்யோதனனைப் பிடித்துக் கட்டி அவனுடைய சாதுரங்கபலமெல்லாங் கொண்டு

அவன் நெற்றியில் நாய்ப்பொறி பொறித்து, தன் நகரமடைவித்து, பிரத்யோதனனை விலங்கிட்டுச் சிறைக் கூடத்து வைத்துத் தான் மாளிகை யடைந்த பின், பிரபாவதியார் சென்று நமஸ்கரித்து பிரத்யோதனன் செய்யப்புகுந்த அநியாயமெல்லாம் சாஸன தேவன் நீக்கப்பட்டமை சொல்லக் கேட்டு சந்தோஷித்து, ராஜ்ய மினிது செல்லா நின்ற நாளகத்து, பிரத்யோதனனுக்குப் புகுந்த உபத்ரவ மறிந்து, இவனுடைய பால்யாவஸ்தையில் பால்யமித்ர வைசியர் மதிபலரென்பார் சம்சார வைராக்யத்தால் தீக்ஷித்து, பரம சம்யமம் தாங்கி, அவதிக் ஞானமுடையனாகி, ஆகாச சாரணராகி செல்லா நின்றவர், பிரத்யோதனனிடத்தே வந்து உனக்கு வந்த உபத்ரவமெல்லாம் தருமம் கைகொள்ளாத படியாலே வந்தது என்று, அவனுக்கு தருமோபதேசம் செய்தருளி, சம்யக்தரிசனமும், விரதமும் கொடுத்து இந்தவிரதங்களைத் தப்பாமல் ரஷிப்பாயாகில் சங்கிலேசம் எல்லாம் நீங்கும் என்றருளிச் செய்து, எழுந்தருளின பின்பு, அவனும் தனது அக்ஞானமறிந்து, ஆத்ம நிந்தை பண்ணி, அணுவிரத, குணவிரத சிஷாவிரதங்களைக்கைக்கொண்டு, ஒரு மாதத்தில் ஆறு உபவாசம் பண்ணிச் செல்லா நின்ற நாளில், ஒருநாளிவனுக்கு பரிஜனங்கள் ஆகாரங்கொண்டுவர, அவனும் இன்று பஞ்சமியாதலின் எனக்கு உபவாச திவசம் போவீராமின் என, போகின்றவர்களை ஒத்தாயணமகாராஜன் கண்டு, இது என்னென்று வினவ, அவர்களும் இன்று

அவருக்கு பஞ்சமி உபவாச திவசமாதலில் மீண்டு போகின்றோமென்று சொல்ல, ஒத்தாயணமஹாராஜனும் என்னே இவன் ஆருகதனுவதறியாது, அக்ரமம்செய்தேனென்று நொந்து, தரும வாத்ஸல்யத்தால் காவலாளரையழைத்து, அவரைச் சிறையை விட்டுக்கொண்டு வரச்சொல்லி, நீ ஆருகதனுவதறியாது அக்ரமம் செய்தேன், இன்று யான் செய்த உபசர்க்கமெல்லாம் க்ஷமிப்பாயாக வென்று உபசாரம் சொல்ல, அவனும் வந்து நமஸ்கரித்துக்கிடப்ப தருமத்துள்ளாரை அவக்ஞை செய்து பிழை செய்தேனென்று ஸ்துதித்து அவன் நெற்றியிலுள்ள பொறி மறையப் பொற்பட்டங்கட்டி சாதுரங்கபலமுங்கொடுத்து, ராஜ்யமும், வேண்டும் வஸ்துக்களும் கொடுத்துத் தானும் கூடக்கொண்டுபோய் அவர் நகரம்அடைவித்து போந்தனன். இன்னும் உபவாச பலத்தைக் கேளாய் பவ்ய ஜீவனே. (எ - று.)

நாகதத்தன்

27 இந்தீவின் வீதமா சோகமேனு நகருள்
நக்கவணிகன் தனபதியா—மோந்த
மனைவிபேர் மாண்ட குணவதியா மாசில்
சினவரன்றன் நல்லறமே சேர்வு. 471

(இ - ள்) ஜம்பூ த்வீபத்து பரத க்ஷேத்ரத்து தருமகண்டத்து வீத சோக புரமென்னும் நகரத்து வியாபாரிதனபதி என்பான் அவன் மனைவி குணவதி இவ்விருவருக்கும் புத்திரன் நாகதத்தன் என்பான் இவன் பார்யை நாகவசு என்பாள் இவர்கள் இஷ்ட விஷய காமபோகங்களை அனுபவித்துச் செல்லுகின்ற நாளகத்தே எவ்வகையாயினரோ? வெனின்,

28 புகழுந் திருவும்? பொய்ப்பாடு மின்றி
நிகழுநிலை நாக தத்தன்—புகழில்லாப்
பொல்லா வினைதுறக்கும் பொய்யில்லா மாமுனிவன்
மல்லார் ஜினலயத்து வந்து. 472

(இ - ள்) வீதசோகபுரத்தில் ஜினாலயத்து குப்தித்ரய சம்பன்னரெனும் ரிஷியர் எழுந்தருளினார் என்று கேட்டு நகர ஜனங்களெல்லாம் அஷ்ட விதார்ச்சனை கொண்டுபோகின்றமை கண்டு, நாகதத்தனும் அவர்களுடன் போய் ஜினாலயம் புக்கு பிரதக்ஷணமும் நமஸ்காரமும் செய்து, ரிஷியரை வந்தனைசெய்து, தருமசிரவணமும் நோன்பின்பலன்களையும் கேட்டுப் பின்னை, நோன்பை எல்லாரும் கைக்கொள்ளக்கண்டு, ஆடித் திங்கள் பஞ்சமி நாளன்று நாகதத்தனும் உபவாசம் கைகொண்டு இருந்தான், முன்பு உபவாசம் செய்தறியான், கர்ப்ப முதல்கொண்டே சுகியாய் வளர்ந்தானாதலால் யாங்கனமாயிற்றோ ? வெனின்,

29 பொறிவாயி லைந்தவித்தான் புண்ணியன்பொற் பாத
நெறியாற் பகல்வணங்கி நீடுஞ்—செறியிருளி
னைதுயர்வந் தெய்தி நடலை பலவாகி
வெய்துயர முற்றான் விரைந்து. 473

(இ - ள்.) நாகதத்தன் பகலெல்லாம் தேவர்க்கு, அபிஷேகமும் அர்ச்சனையும் தேவஸ்மரணையும் செய்து, பொழுதுபோக்கி இராத்ரியாதலும்பெரிதும் சிரமமாகக் கண்ட, மாதா பிதாக்கள் யாது சொன்னார் ! எனின்,

30 அவனி தலத்துள்ளா ராய்ந்தறத்தின் மிக்கார்
இவனிற் சிறிதுளரோ வென்று—புவனத்
தடிக ளறத் துள்ளார்க் கறம்செய்வோம் நோன்பை
விடுவது நன்றென்முர் மிக்கு. 474

(இ-ள்.) உபவாசத்தாலே நாகதத்தனுக்கு சிரம மாதலும், தாயும் தந்தையும் வந்து, உனக்காக ரத்னுபரணங்களும் சுவர்ணுபரணங்களும் மகாபிஷேகமும், மகா பூஜையும் மகா தானங்களும் பண்ணி, பலஜிநாலயங்களும் எடுப்பித்து அனந்த நோன்புகளும் உனக்காகச் செய்வோம், இந்த உபவாசத்தை விடுவ என்றலும், நாகதத்தன் யாது சொன்னன்! எனின்,

31 தானநீர் செய்யுந் தவநல் வதநோன்பு
மானவகை கருதி யானழிதல்—மானுங்
கரந்து ளதுவிழ்ந்துக் கான்மே லிறங்க
லுரைந்த லதுபோலு மொப்பு. 475

(இ-ள்.) அருகர் சித்தர் ஆசார்யர் உபாத்யாயர் சர்வ சாதுக்க ளென்னும் பஞ்ச பரமேஷ்டிகள் சாக்ஷியாகக் கொண்ட விரத பங்கஞ் செய்தல், விளைந்த பலன் கெடுத்து, வித்தி விளைவதான பலன் வேண்டுவதன்ரே! நீங்களினிச் செய்யும் தான தர்ம பலத்திற்கு ஆசைப்படுவது என்றுரைப்ப, நாகதத்தன் பார்யை யாது சொன்னள்! எனின்,

32 இத்தனைநா ளென்னுரையை யேது மிகழாதே
யொத்தொருங்கு சென்றேனுக் கொன்றுரையீர்—சித்த
மெனை நீக்கி யென்கழுத்தில் நூலருளு மென்று
தனைநோக்கித் தானுரைத்தாள் தாழ்ந்து. 476

(இ - ள்.) இப்பரிசினுல் பார்யை சொல்ல, நாகத்தன் சொல்லுவான், நீயும் உன் கேட்டுக்கு சந்தாபிக்கின்ருய், என் விரதம் கெடும் கேட்டுக்கு அழுகின்ருயில்லை, என்றலும் பின்னைத் தம்முள்ளே எண்ணி, கண்ணுடியை யழகிதாக விளக்கி, அதனைச் சூழ ரத்னங்களை அழுத்தி, மனையுள் பூர்வ திசையிலே வைத்துப் போது புலர்ந்தது, பாரணை செய் யென்ற லும் இதுவும் உங்கள் உபாயத்தால் செய்தது அல்லது, பொழுதின் பிரமாண அறியேனே வென்றுரைப்ப, அவர்களும் மகா துக்கமாயிருந்த பின்னை, யெல்லா ரையுந் தவிர்ப்பித்து, க்ஷமையுள்ளார் என்னருகே யிருந்து, எனக்கு மரண அவஸ்தையான பொழுது பஞ்சநமஸ்காரம் சொல்லுக வென்றிருந்த பின்னை, நாகதத்தன் பரமாத்ம பாவனையாகிய பஞ்ச நமஸ் காரம் ஓதி ஆயுஷ்யம் நிறைந்து, மரண மெய்தி, சௌதர்ம கல்பத்துள் எவ்வகை தோன்றினனே, வெனின்,

33 மணிகுயின்ற தைவகையான் மாசில் பவனத்
தனிவி ல்ழகா ரமளித்—துணிவரிய
வம்பரத்தில் விற்போல வந்தர்முழ்த் தவ்வளவி
லும்பருரு நிறைந்தா னுற்று. 477

(இ - ள்.) முடிகடக ஆபரணுதிகளோடே படம் மறைத்து கூத்தாடுவோன் தோன்றினற்போல, அந் தர் முகூர்த்தத்திலே சௌதர்ம கல்ப விமானத்து உபபாத சயனத்தில்தோன்றி, இரண்டு சாகரோப மம்ஆயுஷ்யம் உடையனுய், அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசித்வம், வசித்வம்,

(காமரூபித்வம்) என்னும் அஷ்டகுணங்களை யெய்தி, ஜாதி ஜரா ரோக மரணமின்றி, சம சதுரஸ்ர சரீரமும், ஷோடச வருஷ யௌவனமும், ஷோடசாபரண பூஷிதமுமாகி, ஒளி துளும்பும் மேனியும், ஈராயிரம் வருஷத்திற்கு ஒருக்கால் மனத்தினாலே அமிர்தாகாரம் உண்ணுவதும் ஒரு திங்களுக்கு ஒருக்கால் ஸ்வாஸோச்ஸ்வாசநிர்கமனமுமாகிய தேவசுக மனுபவித்து; மீண்டும் பூமியுள் வந்து, ஜயந்தர மகாராஜனுக்கும் பிரத்வி மகாதேவிக்கும், நாககுமாரனென்னும் புத்திரனாய்த் தோன்றிப் பலகாலம் ராஜ்யம் செய்து, கடைக்காலம் தீக்ஷை கைக்கொண்டு கர்மக்ஷயம் செய்து, முக்தி ஸ்ரீயை எய்தினானென்னுங் கதையைக் கேட்டாகிலும், தான பூஜா சீல உபவாசங்களோடு கூடி நிகழ்வது காண் பவ்ய ஜீவனே.

34 உரைத்த கதையனைத்து முள்ளத்தி லுள்ளப்
புரைந்த வினைபோம் புகழாம்—தரித்த
வறத்தினா லன்றியே யன்பினான் மற்றோர்
திறத்தினா லுண்டாமோ தேர்ந்து. 478

சகல விமல கேவலக் ஞான பகவதருகத்
பரமேஸ்வரன் முகோத் கதமாகிய, த்வாத
சானுப்ரேக்ஷையுள் ஸ்ரேணிக மகா
மண்டலேஸ்வரன் கேட்ப
கௌதமசுவாமிகள் அருளிச்
செய்த பதினொன்றாவது
தருமமென்னும்
அதிகாரம் சமாப்தம்.

12. போதிர் துர்லபம்

1 இருநா லதிசயமு மெய்தியே யேதில்
வருநாற் கதிகடந்த வாமன்—திருவார்ந்த
சேவடியை ஏத்தியே செப்புதுநற் றிதகன்ற
பாவனையிற் போதிபெறும் பாங்கு. **479**

(இ- ள்.) *அபாய அதிசயமும், பிராப்தி அதிசயமும்*, வாக்கு *அதிசயமும்*, பூஜா *அதிசயமும்*, விஹார *அதிசயமும்*, ஸ்தாயிகா *அதிசயமும், தநுரதிசயமும், பிரவர்த்தி அதிசயமும்*,என்னும் அஷ்ட அதிசயங்கள் எய்தி நின்ற திரிலோகநாதனை, நமஸ்காரம்செய்து போதி என்னும் அதிகாரம் உரைப்பாம். எ-று. அ-ம்.

2 தரும நெறிவகையுந் தத்துவமே பேணி
யிருமை வினைகெடவே யெண்ணி—லருமந்த
ஞானத்தா லன்றியே நன்மைபிறி துண்டோ
வூனத்தை யில்லுயிரே யுற்று. **480**

(இ- ள்.) பதார்த்தங்களை விசுவசிப்பதுவும், சுபாசுபங்களை விசுவசிப்பதுவும், இருவினைக்குங் காரணம், அவ்விரண்டும் கெடுமாறு எண்ணுவது, போதி என்றும், ஞானரூபமென்றும் நன்மார்க்கம் கூறும். இஃது நிர் தோஷியான பகவானால் கூறப்பட்டனவாகும், நிர் தோஷியானவன் எப்பெற்றியனோ? வெனின்,

3 ஈரோன் பதுதோட மீடழித்தா னெவ்வுயிர்க்கு
மீரம் பெரிதுடையா னெவ்வினையும்—வேர
மரிந்தோடத் தோன்று மறவாழி வேந்த
னிருந்தானு மென்றியம்ப லிங்கு. **481**

(இ - ள்.) க்ஷுதை, த்ரஷ்ணை, பயம், ராகம், த்வேஷம், மோகம், சிந்தனை, ஜரை, ருஜை, ம்ருத்யு, ஸ்வேதம், கேதம், மதம், ரதி, விஸ்மயம், ஜனனம், நித்ரை, விஷாதம் என்றிச் சொல்லப்பட்ட அஷ்டா தச தோஷங்களை நீக்கின பகவானால் அருளிச்செய் யப்பட்ட ஜீவாதி பதார்த்தங்களை தெளிவது காண் போதி என்னும் குணம், பவ்யஜீவனே. எ-று. அ-ம்,

4 அஞ்ஞான மும்மை யகற்றி யறிவுடைய
மெய்ஞான மைந்தினையு மேதகவான்—மெஞ்ஞான
உயிர்நிலையு மார்க்கணையு மோர்குணமீ ரேழு
மயர் வின்றித் தானறித லாங்கு. 482

(இ - ள்.) அக்ஞான த்ரிகரணங்களைக் கெடுத்து, சஜ்ஞான பஞ்சகத்தினிறைந்து, ஜீவஸ்தானம் பதினாலும், மார்க்கணாஸ்தானம் பதினாலும், குணஸ் தானம் பதினாலும், யதாஸ்வரூபமறிந்து சம்யக்தரி சன க்ஞான சாரித்ரத்தோடு நிகழ்வது போதி. என்றவாறு. அன்றியும்,

5 இவ்வகையா லெவ்வுயிரு மோம்பலா மென்பதுவு
மெய்வகையா லைம்புலனை வெல்வதுவும்—பொய்வகையாற்
சேர்ந்த வினைகெடுக்குஞ் செப்புங்கா லாருயிரே
கூர்ந்த வறிவன்றே கூறு. 483

(இ - ள்.) வில் நாணியும் ஆயுதமுமின்றி எத்தனை பலமுண்டானாலும், பகையீடழித்து வெற்றிகொள்ள வாராததுபோல, ஆக்கமும் உடம்பு முண்டாய், அறி வின்றியே தவம் செய்தாலும், கருமங்களைக் கெடுக்க வாராது. என்றவாறு. அன்றியும்,

6 இறந்த நெதிர்வரவு மேனை நிலையென்
றறைந்த வவைமுன் றுலகுஞ்—சிறந்த
வறிவினு லன்றியே யாயபே ரிச்சம்
பிறிதினு லுண்டாமோ பேசு. 484

(இ-ள்) கூவலின் தேரையானது சமுத்திரத்தின் பெருமையை மெச்சாதவாறு போல; நீயும்உன் அஞ்ஞான மூடத்தால் லோகங்களையும், அங்குள்ள சூக்ஷுமாதி பதார்த்தங்களையும், அஸ்தத்தேயுள்ள ஆமலகம் போலக் கண்டுணர்ந்த பரமேஸ்வரனுல் அருளிச்செப்யப்பட்ட ஞானமும், மனுஷ்யபவத்தால் வந்த பெருமையும், அறியாது சம்சாரசுகத்தை சுகமென்று இச்சிக்கின்ருய்; நீ இந்த அக்ஞானத்தை விட்டு ஞானியானுல் அனந்த சுகத்தின் பெருமையறியலாம்காண் ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

7 வினையே யெனவுடலின் மிச்ச நிகள
நினைமேல் விடுவிக்கு நீர்மை—வினையுங்
?கருவுலகள் காறளப்பே னென்னுங் கருத்திற்
பெருகு மறிவுடைமை பேனு. 485

(இ-ள்) மண் பொதிந்த சுரை யாழக் கயத்திவிட ஜலத்திற்குக் கீழே புக்கழுந்தி, மண்ணெல்லாங்கரைதலுமே, ஊர்த்வகதி சுபாவத்தால், மேலே மிதந்தாற்போல, அனுதி கருமவசத்தாற் பூண்டு அழுந்திக்கிடந்த, சம்சாரஜீவனும், கருமம் நீங்கினுலல்லது, ஊர்த்வகதிக்குச் செல்லவாராதென்றறிந்து அந்த கர்மத்தை நீக்குவது, சம்யக்தரிசன க்ஞான சாரித்ரங்களால் அன்றி ஆகாது என்றறிந்து, நிகழ்வது போதி. என்றவாறு. அன்றியும்,

8 அறிவதுங் காண்பதுவு மான சுகமுங்
குறிகொண்டு நின்குணத்தைக் கூடாய்—நெறிதிறியும்
யாக்கை முடையுடையி லின்பின்றித் துன்புறுகா
லாக்கு மறிவறிவோ வாங்கு 486

(இ - ள்) இப்பெற்றியான நின் பெருமையை, நீயேஓராது மூடத்தில் அழுந்துமது, அறிவன்று, உலோகத்தோடு கூடியிருந்த சுவர்ணத்தை, கிரம வசத்தால் கிட்டகாளிதமெல்லாம் நீக்கி, சுவர்ண மாக்கிக்கொண்டாற்போல, நீயும் உன்னிடத்துள்ள நல்லஅறிவினுலே கர்மத்தையும் உன்னையும்வேருகப் (பிரித்துப்) பார்த்து, சம்யக்தரிசன க்ஞான சாரித் ரத்தோடும், பொருந்தியிருப்பது அறிவாம். (எ - று.)

9 உன்னுள்ளே யுன்னையே யுன்பெருமை யானுன்னின்
மன்னு நிலையின்ப மாண்புடைந்தாம்—பின்னை
யிடையின்றி நின்கரும நீயெய்த வேண்டிற்
கடனன்றே காணுங் கருத்து. 487

(இ - ள்) உஷ்ணகாலத்து உணங்கின புல்லை, அக்னி தாக்கினுற்போல பவ்ய ஜீவனும் நன்ருகிய போதம் பெற்ருல், நல்லசாரித்ரங்களால், கர்மங்களை எரிக்கலாம். என்றவாறு. அன்றியும்,

10 முனிவார்வமே வினைகண் மூடும் வகையும்
முனிவார்வத் தால்வினைகண் மூடா—முனிவாயேற்
றிவினையை நீமுனிந்திட் டன்பாக நல்வினைமேற்
பாவனையா லேயறிதல் பாங்கு. 488

(இ - ள்) ஆயுகமும்; தன் சத்துருவைஎறிதற்கு அழகிதன்றி, தன்னை எறிதற் கழகிதன்று; தன்னை

எறிதற் கழகிதல்லாத வாறுபோல, முனிவும், கருமங்கண் மேலே முனிந்த முனிவு, கர்மங்களைக் கெடுக்கும், தன்னைக்கெடுக்கும் முனிவு வேண்டாம் அதனல் கருமங்கெடுக்கவேண்டி கருமத்தின் மேலே முனிகிற முனிவே, போதம் என்றவாறு. அன்றியும்,

11 துனிவரிய பல்குணத்தாற் றெக்கபெருந் துன்பம்
தனிவரிய தாக்குமாற் ருறுந்—துனிவரிய
நில்லா வுடம்பின்மே னீந்த பரிஹமம்
புல்லாத நென்கொலோ பொற்பு. 489

(இ - ள்) போதியில்லாதவனுக்கு, வியாதி அசாத்யமானுற்போல, சரீர நிவர்த்தி செய்யானுகிலும், புத்தியுடையவன், தன் கிரகத்தில்அக்னி கைமிக்கால் சீக்கிரம் புறப்படானுகிலும், அவனுக்கும் இவனுக்கும் போதம் இல்லை என்றவாறு. அன்றியும்,

12 பொன்னு மணியணியும் பொங்கு கரிதுரகம்
பன்னு துணைபயிலும் பான்மையாற்—றுன்னும்
கணவினையை யின்றியேற் காதிவினை வெல்லுந்
துணையது தான் போதமே தொங்கு. 490

(இ - ள்) மகாபுண்ய புருஷனுக்குச் சக்கரம் பிறந்தால், பகை வெல்வதுவும்; பவ்யஜீவனுக்கு போதம் பிறந்தால், கருமங்களை வெல்வதுவும்; கஹனமோ? என்றவாறு. அன்றியும்,

13 தன்னுள்ளே தன்னுரிமை தன்றலே பாவிக்கத்
தன்னுள்ளே தன்னுரிமை தான்பிறக்கும்—நின்னுரிமை
யென்னுக்கோ வேண்டாநீ பேதை யறிவுயிரே
யுன்னிற் பிறிதன் றுணர். 491

(இ - ள்) இரவியினுடைய கதிரை யீண்டு முகில் மறைத்தாற்போல, ஞானுவரணீய கர்மங்கள் உன்னுடைய அனந்தக்ஞானுதி குணங்களைமறைத்துப் பெறவொட்டாதே தடுத்து நின்றது, அம்முகிலை, கடுவளியுடைப்ப இரவியின் கதிர் விரிந்தாற்போல, நீயும் சம்யக்தரிசன ஞானசாரித்ரமென்னும் காற்றினல், ஞானுவரணீய கர்மங்களை போகத்துறந்து, உன்னுடைய அனந்தக் ஞானுதிகுணங்களை, யடைவது காண் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

14 அன்பாகி யாகத் தனைங்கனையார் மேல்நினையு
மென்பா வனையதனி லாயிரந்தோன்—றன்பா
வனையதனை வைத்தியேல் வாய்ந்தறத்தின் மேலே
நினையில்வினை நிற்குமோ நேர்ந்து. 492

(இ - ள்) நீ: புத்ர, மித்ர, களத்ராதிமேல் வைத்த அன்பில் ஆயிரங் கூறிட்டு, அதில் ஒரு கூறு (பிரமாணம்) தர்மத்தின்மேல் அன்பு வைப்பாயாகில், கர்மமெல்லாங் கெடுத்து, முக்தி ஸ்ரீயை எய்தலாம் என்பதனை போதத்தாலுணர்ந்து, ரத்னத்ரயங்களின் மேலே, மோகத்தை வைப்பது காண், பவ்யஜீவனே.

15 பிறப்பு நிலந்தவமும் பேணத் தகுநற்
சிறப்பு எறமறிவான் சேர்வும்—சிறப்பியலும்
நற்காட்சி நல்லறமே நன்முக நன்னுதலும்
பொய்க்காட்சி நீத்தறிவான் போற்பு. 493

(இ - ள்) அனுதி சம்சாரத்திலிருந்த ஜீவன், சமுத்திரத்தினடுவே ஆழ்ந்து அழுந்திக்கிடந்தவன் மிதந்து எழுந்தாற்போல; பிரத்வி, அப்பு, தேயு, வாயு,

வநஸ்பதி என்னும் அனந்தானந்த ஏகேந்திரிய ஜீவன்களைப் பிழைத்துத் த்வீந்திரிய ஜீவன்களாய் பிறப்பதரிது, அதனிலும் பிழைத்துத் த்ரீந்திரியமாய் பிறத்தலரிது, அதனிலும் பிழைத்து, சதுரிந்திரிய மாப் பிறப்பதரிது, அதனிலும் பிழைத்து அஸக்ஞி பஞ்சேந்திரியமாய்ப் பிறத்தல் அரிது அதனிலும் பிழைத்து சக்ஞிபஞ்சேந்திரியமாய்ப் பிறத்தலரிது, அதனிலும் பிழைத்து மனுஷ்யபவம் பெறுதலரிது, அதனிலும் நல்ல நிலத்திற் பிறத்தலரிது, இனி பிறப்பும், குலமும், ஸ்ரீயும், உருவும், ஆரோக்யமும், தீர்க்காயுஷ்யமும், ஸ்ரீ ஜிநதருமமும், பெறுதல் ஒன்றுக்கொன்று அரிது. இவ்வகையாற் பெற்றும், அப்போதியை அனர்த்தமே கழிப்பவன், என்போலும்; எனின்,

16 ஞாலந் தருமணியா நன்போதி பெற்றவமே
காலங் கழிப்பனே கண்டமணி—ஞால
வொளிப்பிழம்பை யுள்ளறிவ *னென்றுடைத்து நோக்குங்
களிப்புடையன் போலுங் களிப்பு. 494

(இ - ள்) இவ்வகையே பெறுதற்கு அருமையான போதியைப் பெற்றும் வீணே கெடுத்தால் மீண்டும் பெற வாராது காண் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

17 எண்பத்து நான்கிலக்கம் போனி யவையவற்றுள்
நண்போந்த மக்களாய் நல்லறிவு—பண்போந்த
புண்ணியத்தால் வந்ததனைப் போக்கினுன் மற்றதனை
நண்ணிப் பெறலாமோ நன்கு. 495

பா. பே. *தென்றுரைத்து.

(இ - ள்) எண்பத்து நான்கு நூறாயிரம் யோனியையும் பிழைத்து மனுஷ்ய யோனி பெறுதற்கு அரிது, பெற்று அதனால் சம்சாரமென்னும் விந்தத்தை கழிப்பதாகிய தானம்பூஜை சீலம் தபஸ் என்னும் சகாயம் பெற்றுக் கழியானாகில் கர்மம் என்னும் கள்ளர் கையிலே யகப்பட்டு துர்க்கதி என்னும் துர்க்கங்களில் வீழ்ந்து கெடும், அதனால் மனுஷ்ய பவமும் போதமும் பெற்றபொழுதே உன் நற்கருமஞ் செய்து கொள்; என்று ஏனைப்பலவும் உனக்கு உறுதி சொல்லவும் கேளாயாகில், முன்னம் முக்தி ஸ்ரீயைக் கொடுக்கும் போதியைப் பெற்று நிகழ்ந்து முக்தியெய்தின மகா புருஷருடைய கதையை கேட்டாகிலும், போதி பெறுதற்கு அருமையை நம்பி நிகழ்வது காண் பவ்ய ஜீவனே. என்றவாறு. அன்றியும்,

தன்ய குமாரன்

18 தீப மிதனுளேழ் நாடமைந்த தென்பரதத்
தோவில் புகழ்நிகழுஞ் சேனைதனுள்—தாவிலா
*விப்யர் குலப்பதியா னீண்டுதன பாலனவன்
தப்பில்மனை பாவதியாந் தான். 496

(இ - ள்) ஜம்பூ த்வீபத்து, பரத க்ஷேத்ரத்து, அவந்தி என்னும் நாட்டு உஞ்சேனை என்னும் நகரத்து, இப்யர் குலத்து வியாபாரி தனபாலன் என்பான், அவன் பார்யை பிரபாவதி என்பாள், இவ்விருவர்க்கும் புத்திரர் எழுவர் பிறந்த பின்னை, மக்களைக் கொண்டாடிச் செல்லாநின்ற நாளகத்து, பிரபாவதி சதுர்த்த ஸ்நானம் செய்து நித்திரை

பா. பே. *இப்பர்.

செய்தாளுக்கு, கனவு எவ்வகை தோன்றினவோ? வெனின்,

19 இந்திரவி தாவிரண்டு மீண்டுமலப் பொய்கை
கந்தமலர் மாலைகை வீசிபூச்—சந்த
மயில்போலு மான்விழியாள் மன்னுகனுக் கண்டாள்
துயில்காலை பாவநிதான் தொக்கு. 497

(இ - ள்) இந்துவும், இரவியும் தாமரைப் பொய்கையும், நானுவிதமாகிய புஷ்பங்களாலே தொடுக்கப்பட்ட மாலையும், இத்யேவமாதி ஸ்வர்ப்பனங்கண்டு, ஜிநாலயம்புக்கு, மகாபூஜையும்செய்து, திவ்யக்ஞானிகளாகிய ரிஷியரைக்கண்டு வந்தித்து கனவின்பயன் கேட்ப, அம்முனிவரரும் தம் ஞானத்தால் அறிந்து கூறுவார், உனக்கு சுவர்க்கத்தின்நின்றும் இழிந்து புண்யவானுய் இருப்பானொரு புத்திரன் பிறக்குமென்று சொல்லக்கேட்டு, மகாசந்தோஷமாகி, ரிஷியரை வந்தித்துப்போன பின்னை, கர்ப்பமானது முதல்கொண்டு நன்மை யெய்தி வருதலும், நவமாசம் நிரம்பி நன் முகூர்த்தத்தில் புத்திரன் உத்பன்னமாதலும், பிள்ளைக்கு ஸ்நானம் பண்ணக் கல்லித் தோண்டிய குழியிலே பொன் முதலிய தனங்கண்டமையால் தன்யகுமாரன் என்று நாமகரணம் செய்து வளர்க்க யாங்ஙனம் வளர்ந்தானோ? வெனின்,

20 *இந்துவொளி வானில் வான்பிறைபோற் ருனேங்கிச்
சந்தக் கலைமகளைத் தான்புணர்ந்து—வந்த
கனவினுற் காளைமேற் காதலாய்ச் செல்ல
முனிவினுன் மூத்தவர்கள் முற்று. 498

பா. பே. *இந்துமொளி.

(இ-ள்.) திருநின்றபக்கல் திறலுடைத்து, அருள் நின்ற பக்கல் அறிவுடைத்து, என்னுங் காரணமும், புத்தியும், குணமும் கண்டு மாதாபிதாக்களும் மற்று முள்ளாரெல்லாருங் கொண்டாடக் கண்டு; தமயன் மார்எழுவரும் முனிவாகித் தன்தாயினிடம் நாங்கள் தேடிய பொருளெல்லாம் தன்ய குமாரனுக்கு காட்டியே போகிறதென்று பவநாளு முரைப்பக்கேட்டுத் தாயும் தன்யகுமாரனுக்கு யாது சொன்னாள்? எனின்'

21 உண்டுடுந்து மெய்ப்போக முய்ப்பதுவு மொண்குழைமாய்த்
*தண்டிகையிற் றாஞ்செல்லுந் தன்மையும்—கொண்ட
பொருளாலே யாதலாற் பூண்டு பொருளு
மருளாய்நீ தேடுவா யாங்கு. 499

(இ-ள்) பிரபாவதி சொல்லுவாள், வைசிய குலத்துத்பிறந்தார்க்கு வியாபாரம் செய்யவேணு மென்றுரைத்து, நூறு பொன் கையிலே கொண்டு வாணிகஞ் செய்க எனக்கேட்டு, எங்ஙனே வாணிகஞ் செய்வதென; தாய் சொல்லுவாள் ஒன்றைக் கொடுத்து ஒன்றைக் கொள்வது எனக் கேட்டு, அங்ஙனே செய்வேனென்று தன்யகுமாரன் நூறு பொன்கையிலே கொண்டுபோய்க் கடைத்தெருவில் நிற்றலும், அவ்வளவில் மற்றொருவன் விறகு நிறைந்த பண்டியைக் கொண்டு வரக்கண்டு அப் பண்டி விறகுங் கொடுப்பாயோ விலைக்கு என்று கேட்ப, அவன் கொடுப்பேனென்றலும், தன்கையி லிருந்த நூறு பொன்னுங் கொடுத்து, பண்டியைக் கொண்டு நிற்றலும், அவ்வளவில் மற்றொருவன் ஒரு

பா. பே. *தண்டிவகைத் தாஞ்சொல்லுந்.

தகர் விற்கவந்தானைக்கண்டு, அவனுக்கு பண்டியைக் கொடுத்துத் தகரைக்கொண்டு நிற்குமளவில், மற்றொருவன் ஒரு கட்டிலிழிகை விற்க வந்தானைக் கண்டு, தகரை கொடுத்து கட்டிலிழிகைக் கொண்டு நிற்குமளவில், மத்தியானமாதலும் மனைக்குப் போக வேண்டுமென்று மனை ஏறக் கட்டில் இழிகையைக் கொண்டு வரத் தாய் கண்டு முதன் முதலாக வியாபாரம் செய்து வருகின்றான் பிள்ளையென்று, எவ்வகை எதிர்கொண்டாளோ? வெனின்,

22 தூயசாந் நால்மெழுகித் தூய்முந்தம் பூச்சிதறி
யாயநல தீபமொடு தூபந்தார்—றேயநல
திண்மையாற் கோலஞ்செய் தோரெட்டு மங்கலத்தின்
வண்மையா லெதிர்கொண்டாள் வந்து.

(இ - ள்) இவ்வகையாக மகனை எதிர்கொண்டு புக்கு ஆசனத்து இருத்தி, ஆலஞ்சுழற்றி திருஷ்டி கழித்து, சேஷையிட்டு, பிரியஞ்செய்வது கண்டு, தமயன் மாரெழுவரும் நாங்கள் வியாபாரஞ் செய்து பெரிதாகிய வஸ்து லாபத்தோடு போந்தாலும், எங்களுக்குப் பிரியஞ் செய்வதில்லை, இவன் நூறு பொன்னைக்கொண்டு போய் ஒரு கட்டிலிழிகைக் கொண்டு வர, இத்தனை பிரியம் செய்தாள், பெற்ற தாய் நல்லவளானல் என்னென்ன செய்வாளென்று தம்முள்ளே பேசு மெல்லையில், கட்டிலிழிகையைப் பார்த்து இவன் புண்ணியத்தின் பெருமையை யறிவேனென்று, தாய் அதன் மாசெல்லாம் போக, நீரிலிட்டு அலம்பி உறிஞ்சுமளவில் அதிலுள்ள ஆணி கழன்று விழுந்தது, விழுதலும் எவ்வகையாயிற்றோ? வெனின்,

23 இன்ன மனைசேரி யிப்பர்குல பதியான்
தன்ன மனையதனுட் டாறெருபால்—இன்ன
திசைமேலே இத்தனைபொன் ஈண்டுமணி யென்
றிசையினால் வாசித்தா னீண்டு. 501

(இ - ள்) புண்ணியமே பிரதானம் என்று உரைத்து, அதனுள் உள்ள பொன் ஓலையை வாசிப்ப ரத்னம் சுவர்ணம் உள்ளனவெல்லாம் ஓலைமேலெழுதிக் கிடப்பக்கண்டு, அந்த கிரகத்துள்ளாரெல்லாம் வைசூரி எழுந்து மரித்தனர், மரித்தவர்கள் படுத்திருந்த கட்டிலிழிகையை ஒருத்தன் வந்து விற்றமை யாவதும் அறிந்து தன்னுள்ளே அவதரித்து அதை விலைக்குக் கொள்வோமென்று சில நாட்போன பின்பு அரசனை சென்று காண்பான்வேண்டி தன்ய குமாரன் எவ்வகையாயினனோ? வெனின்,

24 பொன்னும் மணியணியும் பொற்கலத்தில் தானிறைத்து
மன்னனுக்குக் காணிக்கை தான்வைத்துப்—பின்னும்
பாழ்மனைத்தான் வேண்டவே பார்த்திபன் தான்செப்பும்
வாழ்சனம ரித்தமனை மற்று. 502

(இ - ள்) என்றிப்பரிசு உரைப்ப கேட்டு தன்ய குமாரன் சொல்லுவான்,

25 தற்செய் வினையினாற் றான்வருத லின்றியே
மற்று வினைநலிய வல்லவோ—கொற்றவனே
நல்வினையே னன்றாகுந் தீவினையேற் றீதாகு
மல்லதுமற் றுண்டோ வருள். 503

(இ - ள்) என்றிப்பரிசு சொல்லக்கேட்டு, ராஜாவும் சந்தோஷித்து, இவன் மகாபுண்யபுருஷனென்று, அந்த கிரகங் கொடுத்தலும், உத்திரவு பெற்றுக்கொண்டு போந்து, நன்முகூர்த்தம்பார்த்து

அகம்புக்கு தானமும், தேவபூஜையுஞ் செய்து, பின்னை, ஓலை வாசகத்தி லுள்ள படியே, பொற் கிடாரங்களும், மாணிக்க பாஜனங்களும் கண்டு கைக்கொண்டு தனகனக சம்பன்னனாய், நகரத்திற் கும், அரசனுக்கும் பிரபுவாகிச் செல்லா நின்ற நாளகத்து, யாது நிகழ்ந்ததோ ? வெனின்,

26 அந்நகரில் வாழ்வணிக னின்ற நிதித்தலைவன்
றன்மகள் தாமரையாள் தன்வடிவே—யன்ன
நடையாளை யான்கொடுப்ப னென்றுரப்ந்து நாட்டி
லுடையானுந் தாலிவனே யொப்பு. 504

(இ - ள்) அன்னகரத்து வியாபாரிதனபதி, உருவுந்திருவும் மறிவு அடக்கமும் ஆண்மையும் உடையான் தன்யகுமாரனே, மற்றில்லை என்று தன் மனத்திலே எண்ணி, என்மகளை இவனுக்குக் கொடுப்பனென்று சிந்தித்து, தன்யகுமாரன் மாதா பிதாவிற்குத் தன் மனுஷ்யரைப் போகவிட்டு அறிவிப்ப ; அவர்கள் சொல்லுவார் மூத்தவர்களிருப்ப இளையவனுக்குக் கலியாணம் செய்வது நீதியன்று, மூத்த மகனுத்குக் கொடுப்பதென்றலும், அவர்கள் மீண்டு போய்ச் செட்டியார்க்கு இப்பட்டாங்கு சொல்லச் செட்டிம் தன்ய குமாரனுக்கு அல்லது கொடேன் என்று மறுத்தபின்பு அந்நகரத்து ராஜாவும் பிரபுக் களும்செட்டிகளும் தாய்தந்தைமாரும் தன்யகுமாரனைக் கொண்டாடி யிருப்பதற்குத் தமயன்மார், மகா கோபத்தராய் தன்ய குமாரனை உபாயத்தாலே கொல்வோ மென்று தங்களிலே எண்ணி மாய மாகிய அன்பினுற் கலந்திருந்து செல்லா நிற்ப,

ஒரு நாள் அனைவருங் கூடி தன்ய குமாரனை புகழ்ந்து அரசனுடைய நந்தவனத்திலே நீர் விளையாட்டு ஆடுவோமென்று அழைத்துக் கொடுபோய் வாவிசென்றெய்தி அதன் கரையிலே நின்ற இவனை பிறகேவந்து நூக்கலும் நீருள்ளே வீழ்ந்து மூழ்கி நீர் போகிற மதகைக்கண்டு அதனுள் நின்றும் பின்புறம் வெளியே புறப்பட்டுநின்ற தன்யகுமாரனை கண்டு வனதேவதைகள் யாது சொன்னார். எனில்,

27 நடுக்கடலுள் வீழ்ந்தவரும் நல்லுநைய முண்டேல்
இடுக்க ணெனைப்பலவு மெய்தார்—நடுக்கமில்
புண்ணியமாம் பொற்சுடரே போங்கு வினை யிருளை
நண்ணி யகற்றுவதே நன்று. 505

(இ - ள்.) என்றிப்பரிசினால் வனதேவதைகள் பாராட்டாநிற்ப, தன்யகுமாரனும் என்னை எப்பரிசுங் கொல்கை தவிரார் ஆதலின் தேசாந்தரமே போவேனென்று நிச்சயித்து, நகரத்தை விட்டுப்புறப்பட்டு, ஒருவனே பாதாக்ராந்தனாய்ச் செல்லாநிற்ப வேளாளனொருவன் உழுகிறவனைப்பார்த்து எல்லா வித்தையுங் கற்றேன் இது ஒன்று கற்றிலேனென்று பார்த்து நிற்ப, இவனை நோக்கிய அவ்வேளாளன் இவன் சாமான்ய புருஷனல்லனென்று தன் மனத்தில் சிந்தித்து, க்ஷுதாஸ்ரமமாயிருந்தான் என்று ஏரை நிறுத்தி வந்து நீர் எமக்கு விருந்தாகவேண்டுமென்று சொல்லி, அவனை உடம்பாடு கொண்டு, அவனைத்தன் ஏரின் அருகே ஒரு நிழலின் நிருத்தி தனக்கு வந்த ஆகாரத்தைப் படைக்கவேண்டி ?கல்லாங்குத்தே இலைப்பறிக்கப்போனான், அவ்வளவில் தன்யகுமா

ரனும் ஒரு சாலுழுதுகாண்பே னென்று, மேழியைப் பிடித்து ஒரு சாலுழுமளவிலே, எவ்வகைத்து ஆயிற்றோ? வெனின்,

28 மேழி பிடிந்தெருத்தை வேகந் நடித்துழலு
முழிற் புதைந்திருந்த வொண்நிதியம்—பாழிந்தோ
என்னவனைக் காண்டலுமே தான்தோன்றந் தானுரைப்பா
னென்னை வழிதொடர விங்கு. 506

(இ-ள்) உழுதசாலில் எழுந்த நிதியைக்கண்டு எள்ளவுமில்லாது போந்த என்னை விடாது வழி தொடர்ந்து வருகின்றது, என் புண்ணியமே என்று நினைத்து இக்கிடாரத்துப் பொன்னை இவனுக்குக் கொடுப்பேனேல் இவன் அஞ்சுவனென்றெண்ணிக் கிடாரத்தைச் சாலிற்புகவிட்டுப் புதைத்து, மற்றொரு சால்உழுமளவில், வேளாளனும் இலைபறித்துக் கொண்டுவந்து தன்யகுமாரனையழைத்து, கரகத்து நீரைக்கொண்டுபாதபிரக்ஷாளனஞ் செய்து, சதுர் பக்தி கொண்டு தேவரைக்கண்டிருத்தலும் தனக்கு வந்த அடிசிலைப்பலவகையான கறிகளோடுகூடப் படைப்ப ஆபூர்வமாயிருந்ததென்று உண்டு கை கழுவித் தாம் பூலங்கொடுப்பக் கொண்டு, ராஜகிரக மென்னும் நகருக்கு வழி கேட்டு அவ்வழிபோன பின்னை, வேளாளனும் அவ்வேரைப்பிடித்து உழப் புகச் சாலிலே கிடார மிருந்ததனைக்கண்டு, எவ் வகை சிந்தித்தானோ? வெனின்,

29 இப்பூமி யித்தனைநா ளீங்குழுது செல்போதிற்
றப்பாமை காணேனுன் குணிதனை—யிப்போ

திவனுழுத சாலிலே யிங்கிதுதான் றேன்ற
அவனதே யாகுமா லங்கு. 507

(இ - ள்) இத்தனைகாலம் இப்பூமி யுழுகின்றேன் நிதி காணுமையாலிது என்னுடைமையன்று, புண்ய புருஷனுகிய அவன் உழுதசாலிலே இங்கிதுதான் தோன்றினமையால், அவனுக்கே கொடுப்பனென்று கடிது தூரந்து சென்று, யாதுசொன்னுன்? எனின்,

30 உழுதசா லுன்னதே யொன்போற் கலச
மெழுதந்த தாங்கதனை யெய்தி—முழுதுங்
கொளவேண்டு மென்றுரைப்பக் கோய்மலர்தார் மைந்தன்
களவின்றித் தானுரைத்தான் கண்டு. 508

(இ - ள்.) என்று இப்பரிசினுல்உரைப்பக் கேட்டு, தன்யகுமாரனும் என்னே? ஒரு அதிசயம் இருந்தவாறு, இவனில் தக்கார் பிறரில்லை யென்று யாது சொன்னுன். எனின்,

31 உன்னேரு துன்கலப்பை யுன்பூமி யுன்னுழுகை
கொன்னே பிடிந்தொருகாற் கொண்டுழவே—பன்னுங்கான்
மிக்க குணமுடையார் மேவுவரோ விப்பொருளைத்
தக்க வகை யாதுமோ தான். 509

(இ - ள்.) என்றிப்பரிசினுல் தன்யகுமாரனுரைப் பக்கேட்டு மகாபுருஷின் குணவசனமிங்ஙனேயாகாவென்று பின்னும் வேளாளன் யாது சொன்னுன்.

32 இறந்த வேலைக்கால மென்னள விப்பூமி
சிறந்த வுழவுழுது சென்றே—னிறைந்த

நிதிகாணேன் நீகலப்பை தீண்டலுமே தோன்றல்
விதிதானு மின்னதே மீட்டு. 510

(இ - ள்.) போனகாலமென்றந்தை, தந்தைக்குத் தந்தை முதலாக வுழுது செல்வோம் இவ்வளவுநாளும் இது காணோம்; நீ புண்ணிய புருஷனானமையால் இன்று என்னுடைய ஏரைப் பிடித்தலுமே நிதி தோன்றிற்று, ஆதலின் நின்னுடைமையே என்றலும், தன்யகுமாரன் வேளாளனை நோக்கிச் சந்தோஷித்து திருவறம் கொள்ளுஞ் சீலத்தனென்று, பின்னும் யாது சொன்னான்? எனின்,

33 எனக்கரிய துண்டாமோ வென்புண்ணி யத்தால்
மனக்கருத்தை நீயொழிந்து மாடை—யுனக்கீந்தே
னின்புற்றுக் கொண்டுபோ வென்னவிடர் நீங்கி
யன்புற்ருன் காராள னுங்கு. 511

(இ - ள்.) தன்யகுமாரன் வேளாளனுடைய சித்தத்தை யறிந்து, இவனுக்குக் கொடுக்கவேண்டி; என்னுடையதே, நானுனக்குத்தந்தேன் நீ கொண்டு போய் சுகமேயிருவென்றலும், மகாசந்தோஷப்பட்டு புண்ணிய புருஷ! என்னை பணிகொள்வது மறக்கவேண்டாவென்று, வேளாளன் போய்ச் சுகியாயினன்; பின்னை தன்ய குமாரனும், அவன் சொன்ன நெறியே போகா நிற்ப, யாது விளைந்ததோ? வெனின்,

34 முக்காலப் பான்மையும் முன்கை பளிங் கதுபோல்
ஒற்காமை கண்டறியு மோன்முனிவன்—றக்கான்
மலைக்குகையி னுள்ளிருந்த மாதவத்தோன் றன்னை
தலைப்பட்டுத் தானுவந்தான் முன். 512

(இ - ள்.) அதித அநாகத வர்த்தமானமெல்லாம், கையிற்பளிங்கதுபோல் அறியும், பூதஹிதரென்னும் திவ்யக்ஞானிகளை தன்யகுமாரன் கண்டு, மகா ஹர்ஷ சித்தனாகி சிரமந் திரப் பெற்றேனென்று, அவரை பிரதக்ஷணமாகவந்து, குருபக்தி பூர்வகமாக பஞ்ச முஷ்டியால் நமஸ்கரித்து, கரகமல முகுளிதனாகி யாங்கனம் அறிவித்தானோ? வெனின்,

35 என்னையென் னன்னைமா றிலாதே முனிவ
தென்ன பகையுண்டோ வெம்பெருமான்—பன்னி
யுரைப்பரிய பல்குணத்தி னேங்குதவந் தீரே
விரித்துரைமி னிங்கதனை வேறு. 513

(இ - ள்.) என்று இப்பரிசினால் உரைப்பக்கேட்டு, முனிவரனும் அவதிக்ஞானத்தாற் பார்த்து, பூர்வ பவத்தின் வைரம் என்று அறிந்து, யாது அருளிச் செய்தானோ? வெனின்,

36 போகபதி என்னும் பொங்குபுகழ் நகரம்
நாகபுர மெனவே நாடுங்கா—லேகமதி
காமதிட்டி யாமுதலி தன்மனைவி பேர்வினவில்
*ஏமவிட்ட தாவியா மீண்டு. 514

(இ - ள்.) போகவதி என்னும் நகரத்திற்கு முதலி யாகிய, கரமுண்டன் காமதிருஷ்டி என்பான், க்ஷேமமுடைய அவன் பார்யை இஷ்டதானி என் பாள், இவ்விருவர்க்கும் மகன் அக்ரதபுண்யனென் பான், தோன்றலும் எவ்வகையாயிற்றோ? வெனின்,

---

பா. பே. *ஏகவிட்ட.

37 உதரக் கருவாகக் கைப்பொருளு மற்று
மதுரமா நற்கிளையு மாண்டார் -- கதிர்மிக்க
வெய்யோ னுதையத்து மிக்க பனி போலப்
பைய வகன்றதே பண்பு. 515

(இ - ள்.) அக்ரதபுண்யன் கர்ப்பத்திலே அவதாரமாக, ஸ்ரீ யெல்லாம் நஷ்டமாய், மனையில் சம்பத்தெல்லாங் கெட்டுப்போக, அக்ரதபுண்யன் தாயும் தானுமேயாதலும், அதுகாரணத்தாலேயே அக்ரதபுண்யனென்று பெயராகி, தாய்: கூலிக்கு குற்றியும், குடநீர்சுமந்தும், மகனை வளர்த்துச் செல்லாநின்ற நாளகத்தொருநாள், பொழுது வைகித் தாய் மகனைக் காணாது அழாநிற்ப, மகன்வந்து என்னுக்கு அழுகின்றாய் அம்மா! வென்றலும் நீ வரவுதாழ்த்தாய் என்று அழுகின்றேன் மகனே என்று பின்னும் மகா துக்கிதையாய் தாய் யாது சொன்னாள். எனின்,

38 நமக்காளாய் நம்மேவல் செய்துவாழ் மாந்தர்
தமக்காட் படனுந் தகுமோ—நமக்காகா
விவ்வூரி லிங்கிருத்த லேலா தென வெண்ணி
யவ்வூரி நீங்கினு ராய்ந்து. 516

(இ - ள்.) தாய் சொல்லுவாள், முன்னம் இவ்வூருக்கு முதலி கரமுண்டர்கள் பலர்; நீ பிறந்த பின்னை உன்றந்தை முதலாக பந்துவர்க்கமெல்லாம் இறந்துபோயினர், நம் சம்பத்தெல்லாம் காற்றுகண்டமழைக்குழாம்போல கெட, அப்போது நமக்கு ஆட்பணி செய்தார்க்கு இப்போது ஆட்பணிசெய்து உயிர் வாழ்கின்றோம் என்றலும்; அங்ஙனே யாகில், நாமிவ்வூரினின்றும் மற்றொரு

ஊரிலேயிருந்து துக்கப்பட்டுண்போம், நாம் இவ்வூரிலிருப்பது கஷ்டமென்று மகன் சொல்ல, மகனையும் உடன்கொண்டுபோய், ஸ்ரீசாகரபுரமென்னும் நகரம் புக்கு, பலபத்ரன் என்னும் பிரபுவின் கிரகம் சென்று, புறந்திண்ணை சார்ந்திருத்தலும், பலபத்ரன் கண்டு நீங்கள் யாரென்று கேட்ப, தாய் உள்ளபரி செல்லாம் சொல்லக்கேட்டு, கருணையால், தன்மனை கொண்டு புக்கு, எங்களோடே கூட இருங்கள் என்றலும் அங்கேயிருந்து, தாய் அவர்களுக்கு மனைப் பணிசெய்தும், புத்திரன் கன்று மேய்த்தும், செல்லாநின்ற நாளகத்து, பலபத்ரன் மக்கள் எழுவரும் இவனை அவக்ஞைசெய்து, குட்டுவாரும் அடிப்பாருமாக; அக்ரதபுண்ணியன் யாங்ஙனம் சிந்தித்தானோ! வெனின்,

39 முன்பயின்ற தீவினையால் மூடு பெருந் துயர்வந்து
இன்பின்றி யிங்கிருந்த வென்னையே—யன்பின்றி
ஈங்கிவர்கள் செய்த விளிவரவா மென்றெண்ணி
யோங்கு கறுக்கொண்டா னுற்று. 517

(இ-ள்.) என்றிப்பரிசினுல் இவர்கள் மேலே, த்வேஷங்கொண்டு செல்லா நின்றவன், அவர்கள் உண்கின்ற பாற்சோறு கண்டு, மகாதுக்க மெய்தி முகம் வீங்கத் தாயும் அதுவறிந்து, நயனநீர் சோர விருந்தாளைக் கண்டு, பலபத்திரன் எதனுக்கு அழுகின்றாய் என்றலும், என் மகன் பாற்சோற்றுக்கு ஆசைப்பட்டு முகம் வீங்கினனென்று சொல்ல, பலபத்திரனுந் தயாபரனுய்ப் பாலும் அரிசியுங்கொடுத்து அட்டு உண்ணுங்கள் என்றலும், அவளும் பாற்

சோற்றை யாக்கி, மகனைப்பார்த்திருக்க வென்று சொல்லித் தாயுந் தண்ணீர் கொடுவர போகும் அளவில், யாது விளைந்ததோ? வெனின்,

40 பரமரிடி தான்சரிகைப் பான்மையான் மார்க்கம்
பரவகிர்த புண்ணியன்ருன் கண்டு—இவரொருவ
ரேன்னினுமிக் கார்வறுமை யென்றிரங்கிச் சென்றவரைத்
தன்னுடலாற் ருன்பணிந்தான் ரூழ்ந்து. 518

(இ - ள்.) பஞ்ச மகாவிரத, பஞ்ச சமிதி, பஞ்சேந்திரிய நிரோத, த்ரிகுப்தி, ஷடாவசிய கிரியை முதலியவற்றில் நிறைந்து, மனவசன காயங்களில் அடங்கி, ஒருநுகபிரமாணம் எதிரில் கூர்ந்துநோக்கி விண்மீன் தோறும் செல்லும் சந்திரகதி போல வீடுதோறும் எழுந்தருளுகிற, ரித்திபிராப்தராகிய முனிவரரைக் கண்டு, அக்ரத புண்ணியன் என்னிலுமிவர் தரித்திரரென்று, சிந்தித்துத் தான் ஆசன்ன பவ்ய ஜீவன் ஆதலால் புண்ணிய பந்த ஹேது பரிணாமம் பிறத்தலும், எதிரேசென்று ரிஷியரை நமஸ்கரித்துக் காலைப்பிடித்து, எங்கள் மனையிலே உண்ணப்போது மென்றலும், ரிஷியரும் இவனை அவதிக் ஞானத்தால் ஆசன்ன பவ்ய ஜீவனென்று உணர்ந்து, பேசாதே நிற்குமெல்லையில், அவன் தாயும் வந்து மகனே அழகிதாகச் செய்தாயென்று சந்தோஷித்து, நீர் குடத்தை யிழித்துவைத்து சீக்கிரம் வந்து ரிஷியரை நில்லுமென்று நிறுத்தலும், நின்ற முனிவரரைக் கொண்டுபோய் முறைப்படி அகங்காட்டி உயர்ந்த ஆசனத்திருத்தி, எவ்வகையாயினரோ? வெனின்,

41 அறிவடக்க மாண்மையே யன்பகந்து ளொன்றிச்
செறிவடக்கஞ் சேர்ந்துடனிற் சேரக் —குறிகொண்டு
மும்மைநீ ராலமிர்த மூன்றினுலிந் துயர்ந்தா
னம்மை முனியரசர்க் காங்கு. 519

(இ-ள்.) இப்பரிசினல் ரிஷியருக்கு நவபுண்ய க்ரமத்தால் அமிர்து கைப்படுத்தலும் அம்முனி வாரும் ஆஹாரம் கொண்டு அக்ஷயந்தானம் என்று போன பின்னே, புத்திரனும் தானும் உண்டு, அக்ஷய ருத்தியுடைய முனிவரானமையால்; பாற்சோறுகுறை யாமலிருந்தமைக் கண்டு அந்நகரத்திலுள்ள ஜனங்க ளெல்லாரையும் அழைத்து ஊட்டவும் அஸ்தமிப் பதற்கு மூன்றே முக்கால் நாழிகையுண்டெனு மள வும் அப்பரிசே இருந்தது. மற்றைநாட் கன்று மேய்க்கப்போனன்; கன்று கெட்டுதேடுதலும் பல பத்ரன் கண்டு அக்ரத புண்யனே என்று அரிசப் படலும் ஓடிப்போய் ஒருமலையின் குகையைச் சேர்ந் திருத்தலும் அதனுள்ளே இருந்த ரிஷியர் யாது சொன்னர் எனின்,

42 கொல்லாமை பொய்யாமை கூடு பரதார
மொல்லாமை யொன்பொருளை யுள்ளளவுஞ்—செல்லாமை
யைந்திரண்டி ரண்டு மனுவதங்க ளாங்கவற்றைத்
தந்துரைப்பக் கேட்டிருந்தான் முன். 520

(இ-ள்.) அணுவிரத குணவிரத சிக்ஷாவிரதங் களும் அவற்றின் பலன்களையு முரைப்பக்கேட்டு நகர ஜனங்களெல்லாம் தமக்கு வேண்டுவன வேற்றிக் கொள்ளத் தானும் புறம்பே போயிருந்து, நீர் சொன்ன விரதங்களெல்லாங் கைக்கொண்டே னென்று, கைகூப்பி நமஸ்கரித்து, தர்மங் கேட்ட ஜனங்களெல்லோரும் போனபின்னைத் தனியே யிருந்தானைப் புலிப்பாய்தலும், மரணமாய்ச் சுவர்க் கத்துள் எவ்வகைத் தோன்றினனே வெனின்?

43 ஆகாயத் துட்டனுப்போ லந்தர்மூர்த்தத் தளவில்
மாகாய பொன்மேனி மான்றேளிர—வேகாய
மிங்கியான் றேன்றுதலு மென்னபய னென்றுணர்ந்
தங்கவதி யாலறிந்தா னுங்கு. 521

(இ - ள்) என்றிவ்வகையால் விரத பலத்திற் றோன்றினமை அவதிக் ஞானத்தா லறிந்திருப்ப, இப்பால் கன்று மேய்க்கப்போன புத்திரனைக் காணாது தேடி, அவன் போன திசை கேட்டு, அங்ஙனே சென்று புலி பாய்ந்து தின்கின்ற பிணத்தைக் கண்டு, வயிரடித்து அரற்றி, மகா துக்க மெய்தலும், தேவனும் தாய்துக்கம் மாற்றுவேனென்று, தன்னுடைய முன்னையுருக்கொண்டு, தாய் முன்னே வந்து நிற்றலும், தாய் ஓடிவந்து தழுவிக்கொள்ளப் புகுதலும், தான்மேனோக்கி எழுந்து, எவ்வகைத் தோன்றினனோ ? வெனின்,

44 ஒளிதுளும்பு மேனிமே லொண்பூண் மிளிரக்
களிதுளும்பு காதலாற் கண்டா—ரளிவிளங்கத்
தன்னுருவைத் தேற்றுவான் றன்கருணை யால்வந்தான்
நன்று மறத்தை நயந்து. 522

(இ - ள்.) என்றிவ்வகையால் தேவஸ்வரூபங் காட்டி, சம்சார ஸ்திதி இவ்வகையென்றும்; விரதங் கொண்ட தர்மத்தின் பலன் இந்த தேவரூபம், தர்மங் கொள்ளாத பாபத்தின் பலம் அந்த மானிடரூபம் என்று காட்டி, ஜினதர்ம முரைத்துத் தேற்றிய பின் தான் தேவலோக மெய்தி, திவ்ய சுக மனுபவித்துப் பின்னைவந்து எவ்வகைத் தோன்றினனோ? வெனின்,

45 உஞ்சேனை வாழ்பதியா னேங்கு தனபாலன்
பஞ்சாரு மெல்லடியாள் பாவதியாந்—தஞ்சாப
லன்னனுய்த் தோன்றத் தமையன்மார் தாமெழுவர்
பின்னனுய்ச் செய்தார் பிழை. 523

(இ - ள்.) இச்சொல்லப்பட்டவர்க்கு மகனாய்த் தோன்றி தன்யகுமாரனென்னும் பெயர் பெற்றும்

நீ; அந்த பலபத்ர மக்களெழுவரும் முறையே யண்ணன்மாராய்ப் பிறந்தனர், உன்மேல் அப்பொழுதுள்ள முனிவே இப்பொழுதும் முனிவு ஆயின, என்றுரைப்பக்கேட்டு, ரிஷியரை வந்தித்துப் போய், ராஜகிரக மென்னும் நகரை யெய்தி, யங்கொரு நந்தவனத்திலே சென்று சிரமந் தீர்ந்திருத்தலும் அந்நந்தவனம் எவ்வகையாயிற்ருே ? வெனின்,

46 மோட்டலருங் காய்ப்பழமு மூடு தளிரிலையும்
விட்டலரின் மேல்வண்டு மீதூரச்—சிட்டமர்ந்த
மாமயில்க ளாடக் குயில்கூவ மானகிளி
நாமிழற்றி யோதுந் நக. 524

(இ-ள்.) என்றிப்பரிசினல் வஸந்த காலமாயிருந்த ப்ரஸ்தாவத்து மாலேக்காரன் வந்து கண்டு; காலமல்லாத காலம் யாவும் பூத்து விபரீதமாயிருந்தது கண்டு, முன்னம் ரிஷியர் கூறிய ஆதேச புருஷன் வந்தானுதல் வேண்டும்! என்று, சுற்றிலும் பாராநிற்ப, தன்யகுமாரனிருந்தானேக்கண்டு, நீ எங்கிருந்து வந்தாயென்று கேட்ப, யான் தேசாந்தரி வழிபோகின்றேனென்று சொல்ல, உன்னே யுள்ள வண்ணஞ் சொல்லாயாகில் எனக்கு விருந்தாக வேணுமென்று அவனேயுடன்பாடு கொண்டுபோய், பூத்தொடுக்கும் மனேயரங்கிலே யவனே யிருத்தி, மாலேக்காரன் பூத்தொடாநிற்ப, தன்யகுமாரனும், அங்கொரு பூ குடலேயும் நாரையும் வாங்கிக்கொண்டு, எவ்வகைத் தொடுத்தானே ? வெனின்,

47 நானு விதமாலே தான்றெடுப்பத் தன்மனேவி
பானேர் மொழிமடவாள் பார்த்திவனேந்—நானு
ரிவரேன்று நான்வினவ வேந்திழையாய் கேளாய்
அவர்நின் மருமகனே யாம். 525

பா. பே. *மாங்கிளி.

(இ-ள்.) தன்யகுமாரன் நாநாவித விசித்திர மாலைகளைத் தொடுப்பக்கண்டு, மாலைக்காரன் மனைவி, இவன் யாரென்று கேட்ப, என் தங்கை மகன், இவனை நீராட்டிப் பாலடிசில் சீக்கிரம் சமைத்துண்ணப் பண்ணுக வென்றலும், அவளும் தூய அடிசில் சமைத்துண்ணப் பண்ணி, ஆசனத்திலிருந்த பின்னை மாலைக்காரன் மகள் புஷ்பாவதி யென்பாள் இவனைக் கண்டு எவ்வகையாயினளோ! வெனின்,

48 அறிவு நிறைவுருவு மாங்கமைந்த துப்புஞ்
செறிவு மிவனுக்கே செப்பில்—நெறியி
லிவனே யெனக்காள னென்றெண்ணி யின்ப
மவன்மேல் மனம்வைந்தா ளன்பு. 526

(இ-ள்.) என்றிப்பரிசினல் மாலைக்காரன் மகள் சிந்தை செய்து செல்லாநிற்ப, தன்யகுமாரன் தொடுத்த பூமாலையைக் கொண்டுபோய், அரசன் மகளுக்கு மாலைக்காரன் மகள் கொடுப்ப, அம் மாலையை எடுத்துப்பார்த்து, இதை தொடுத்தவர் யாரென்றலும், என் அத்தை மகன் என்ன, இத்தனை கை விஸ்தாரம் வல்லவனுக்கு, உன்னைக் கொடுக்கப்பெறில் மிக அழகிதென்று சொல்லி, அவளும் தன்யகுமாரன் மேல் மோகமாய்ச் செல்ல, புஷ்பாவதியுடைய தாய்தந்தையும், இவளை இவனுக்கே கொடுப்போம் என்று செல்லா நின்ற நாளகத்து, அவ்வூரில் மற்றொரு பிரதான வியாபாரி எவ்வகை பிரதிக்ஞை செய்தானோ வெனின்,

49 ஒன்றேகோண் டாயிரமாத் நேடு மொருவற்கு
நன்ருக வேன்மகளை நான்கொடுப்ப—னென்றே
கருதிச் செலும்நாளிற் காளையுந்தான் கேட்டே
திருவிற் பொலிதாரான் *தேர்ந்து. 527

பா. பே. *சேர்ந்து.

(இ - ள்.) ஸ்ரீபதி என்னும் வியாபாரிக்கும், மனோகரி என்னும் பார்யைக்கும், மகள் கனகமாலை யென்பாள், ஒன்று சகஸ்ரமாகத் தேடுவானுக்கு அல்லது என்மகளைக் கொடேனென்று வ்யவஸ்தை செய்திருந்தனன் அதனை, தன்யகுமாரன் கேட்டு அந்த வியாபாரி கிரகத்திற்கே சென்று, உன் மகளைக் கொடுக்கினும் நன்று, கொடாதிருக்கினும் நன்று, என் அறிவின் செயலைக் காணுமென்று சொல்லி, ஒரு பொன்னை சாதன சாக்ஷியோடுங் கொடுப்ப அதனை வாங்கி சதுர்த்த பாகமாக்கி யொரு பாகத்திற்கு வாசனை சாந்தும் ஒரு பாகத்திற்கு புஷ்பமும் வாங்கி கலந்து கொண்டு எவ்வகை மாலை தொடுத்தானோ! வெனின்,

50 ஐவண்ணப் பூவினா லானை யரிகிளிமா
மெய்வண்ண மாகவே வென்றிகொள—விவ்வண்ணங்
கட்டினான் பூமாலை கண்டார் மனமகிழ்ந்து
விட்டகலா வண்ணம் விரைந்து. 528

(இ - ள்.) நானாவிதமாகிய பூக்கொண்டு, யானை, அரி, யாளி முதலாகிய அனேக ரூபத்தாற் பூத் தொடுத்துக் கொண்டுபோய், ராஜா விளையாடப் போகின்ற பிரஸ்தாபத்திற் சென்று காட்ட, ராஜாவும் இவன் ஹஸ்த கௌஸல்யத்தைப் பார்த்து, தாம்பூலாதியும் ஆயிரம் பொன்னுங் கொடுப்பக் கொண்டு சென்று, சிரேஷ்டிக்கு அர்த்த திரவிய அத்யக்ஷத்தோடும் ஆயிரம் பொன்னுங் கொடுப்ப, சிரேஷ்டியும் சந்தோஷித்து, இவனுக்கே என் மகளைக் கொடுப்பேனென்று இருப்ப, மற்றும் ஒரு செட்டியின் கடையிலே தன்யகுமாரன் சென்றிருக்கு மளவில், செட்டிக்கு என்றும் விலை போகாத சரக்குக ளெல்லாம் விற்று, லாபம் பெருகக் கண்டு, தன்னரு

கிருந்த தன்யகுமாரனைப் பார்த்து, இப்புண்ய புருஷ னிருக்கவே என்சரக்கெல்லாம் விலைபோய் லாபம் பெருகலாயிற்று என்று, அவன் ரூபமும், தெளிவும், நோக்கித் தன்மகளைக் கொடுப்பேனென்றிருப்ப, பின்னும் ராஜாவின் பிரதான மந்திரிக்கு சந்தி ரார்க்க வேத்யம் என்னும் வித்தை காட்டி அவனும் சந்தோஷித்துத் தன்மகளைக் கொடுப்பேனென் றிருக்கு மளவில், அந்த ராஜகிருகத்தில் ராஜாவின் மகள் தன்யகுமாரன் சேதிகளெல்லாம் கேட்டுத் தானும் அவன் மேலே மோகிதையாய் இருப்ப; முன்னம் அந்த ராஜாவின் ஆதேச புருஷனு யிருந்தான் இவனை உபாயத்தாற் கொல்வேனென்று சிந்தித்து அரசனுக்கு கலக மூட்ட அரசன் எவ் வகையாயினனோ ? வெனின்,

51 நிறைவா ளரக்கன்றன் மாடம் புகுவாற்
குறைவாளுந் தன்மகளு மீவான்—பறைபோகந்
தானனுகச் சென்று தடுத்தப் பறையதனைந்
தேனனுகு தாரான் செலும். 529

(இ - ள்.) என்றிப்பரிசினல் பறை போகலும், தன்யகுமாரன் கேட்டுப் பறையைத் தடுப்ப; ராஜா வின் மகளுக்கும், மாடத்துக்கும், ராஜ்யத்திற்கும் நீயே யுரியவன் என்று சொல்லி, இவன் புகுமாறு தான் காண்போமென்று, தானும் தேவிமாரும் பரி வார ஜனங்களும், சிங்காரத்தோடு வந்து, அரக்கன் மாடத்தைச் சூழ்ந்து நிற்ப தன்யகுமாரன் சர்வா பரண பூஷிதனாகி, நகரத்தினடுவே வரக்கண்டு, நகர ஜனங்கள் எவ்வகை யுரைத்தாரோ ? வெனின்,

52 இவ்வகையாற் சொல்வதுவோ யென்ன மெனவுரைப்பார்
கவ்வை யிவனுருவைக் காண்மினோ—பௌவஞ்சூழ்
பாரதனி லென்றுரைப்பார் பாக்கியமே யென்றுரைப்பார்
ஈர மனமா *யிரைந்து. 530

(இ - ள்.) இப்பரிசினு லெல்லாரும் நானுப்ரகாரம் உறையாடாநிற்ப; தன்யகுமாரனும், மாடத்தருகே சென்று, நிஷிதி என்று சன்னதி நோக்கி, பஞ்ச நமஸ்கார மந்திரங்களை யுச்சரித்துப் புகுமளவில், ராக்ஷஸதேவதை எவ்வகை தோன்றிற்று! வெனின்,

53 கண்வாய் கனலுமிழக் காற்ருகி மன்னதிர
விண்ணோர் நடுங்கி வெருக்கொள்ள—வெண்ணூர்
கொலைபுரிந்த சிந்தையனுய்க் கோபத்தோ டாங்கே
மலையரிபோ லின்ருர்த்தான் வந்து. 531

(இ - ள்.) இவ்வண்ணம் கோபாக்னியோடுங் கொதித்தெழுந்து, பயங்கர ரூபங்கொண்டு ராக்ஷஸன் மாடத்தினின்றும் எதிரே புறப்பட தன்யகுமாரனும் அசலிதனுய், பஞ்ச நமஸ்கார ஸ்மரணையனுய் நிற்றலும், ராக்ஷஸனும் ரௌத்ரபாவங் கெட்டு, சாந்த பாவத்தனுய், அவன் புண்ணியத்தின் மகிமையால் அவன் முன் கலசமும் கண்ணுடியுங் கொண்டுவந்து, எதிர் கொண்டு புக்கு அங்கிருந்த நிதிகளும், ரத்னங்களும் மற்றுமுள்ள ராஜ பாண்டாகாரங்களுங் காட்டிக்கொடுத்துத் தன்யகுமாரனை நோக்கி யாது சொன்னுன்? எனின்,

---

பா. பே. *யிரைத்து.

54 என்னிறந்த காலமெலா மிம்மாடத் திந்நிதியை
நண்ணியே காத்திருந்தே னினியென் —புண்ணியத்தால்
வந்தாயு நீயேயிவ் வான்பொருளுக் காய்ந்நமைந்த
சந்தா னமு மென்றுன் ருழ்ந்து. 532

(இ - ள்.) இந்த மாடத்துள்ளே இப்பொருளை நெடுங்காலங் காத்திருந்தேன் இப்பொருளுக்குத் தக்க புண்யவான் நீ வருவதென்றோ வென்று பார்த்திருந்தேன், இப்பொருள் அநுபவித்தற்கு யோக்யனுயுள்ள புண்யவானுய் நீ வந்தாய் உனக்கிம் மாடமும் பொருளுங் கொடுத்தேன், நீ யனுபவித்துக் கொண்டிரு வென்று எதிர் நிற்க அஞ்சிப் போன பின்னை மாடத்தைச் சூழ்ந்து நின்ற ராஜாவும் பரிஜனங்களும் பிரதான புருஷரு மெல்லாரும் வந்து கண்டு, விஸ்மயப்பட்டு நிற்ப, அரசனும் பின்னும் யாது சொல்லி, யாது செய்தான்? எனின்,

55 *அனந்த நெதியுடைய வம்மாடம் பெற்று
புணர்ந்த பெரும் புண்ணியனு மென்றே—தணந்திருந்த
தன்மகளோ டவ்வரசு தானீந்து தந்துவர்பால்
வன்மைய மாய்த் துறந்தான் வந்து. 533

(இ - ள்.) ராஜா இத்தனை காலம் இம்மாடத்தே, செல்லினுங் கோபிக்குந் தேவதையும், இவனைக் கண்ட பொழுதே, அனந்தமாகிய நிதியோடே மாடத்தையுங் கொடுத்துப் போனமையால், நம்முடைய பெண்ணிற்கும், ராஜ்யத்திற்கும், இவனே உரியவனென்று சிந்தித்து, தன் மகளையும் ராஜ்யத்தையும் அவனுக்கே கொடுத்துத் தான் ரிஷியர்

பா. பே. *அனந்த.

பக்கலிலே போய் தபஸ்வரூபங் கைக் கொண்டு, தபச் சரணத்தாலே, சுகதி எய்தினன். பின்னர் தன்ய குமாரன் ராஜ்ய பதவியோடும் மகா விபூதியோடும் இருந்த பின்னை அந் நகரத்து வைசியன் சாலிபத்ர னென்பான், தன்யகுமாரன் தன் மாமன் மகனுவ தறிந்து, தன்னுடன் பிறந்த ஸ்ரீமதியை யவனுக்குக் கலியாணம் செய்து கொடுத்துப் பின்னை, முன்னங் கொடுக்க வேண்டியிருந்த கன்னிகைகளெல்லா ரையும், தானே யழைப்பித்து கலியாணம் செய்து, அவர்களோடும் சுக ராஜ்ய பதவியெய்தி, எவ்வகை யின்புற்ருனே? வெனின்,

56 அறப்பயனி தென்றறியா *ரஞ்ஞான மாந்தர்க்
கறப்பயனி தென்றறிவிப் பான்போற்—சிறப்புடைய
தேவேந்தி ரன்போலச் செப்பில் இவன்வடிவே
யார்வேந்த ரொப்பா ரவர்க்கு. 534

(இ-ள்.) முற்பவத்தி னிகழ்ந்த விரத சீல குணங்களின் நிகழ்ந்த புண்ணிய பலம் உதயத் தாலும் பூர்ண சந்திரனைக் கண்ட சமுத்திரம் பொங் கினற் போல ஸ்ரீயும் சுகமும் பெருகிச் செல்லா நிற்ப இப்பால் தன்யகுமாரன் பிரிந்த பிறகு அவன் மாதா பிதாக்கள் உஞ்சேனை நகரமெங்குத் தேடிக் காணது எவ்வகைத் துன்பமுற்ருரோ வெனின்?

57 கல்லுமரமு முருகக் கலுழ்ந்தழுவார்
பல்விதத்துப் பாங்காற் பரிசனங்கள்—சொல்லி
லுலப்பரிய துன்பங்க ளும்முறையா லுற்ருர்
கலப்பரிய வன்பிற் கலந்து. 535

பா. பே. *ரஞ்ஞானி.

(இ - ள்.) அகத்தைப்பார்த்து முகத்தை மோதியும், திசைகளை நோக்கியும், அசைவினோடாற்றியும், தெய்வம் பேணியும், கைகூப்பி இவ்வகைப் புலம்பிப் பின்னையும் எவ்வகையாயினரோ? வெனின்,

58 எங்கேனும் போய்மரன மெய்தினு னென்றமுதும்
மங்கி மனமறுகி மாதுயராற்—பொங்கித்
தனையனையே சிந்தித்துத் தான்செல்லு நாளுண்
மனைவன்னை மெவ்வகையோ மாண்பு. 536

(இ - ள்.) என்றிப்பரிசினல் துக்ககிரியையாலே, நொந்து வெந்து செல்லாநிற்ப, அந்த புண்ணிய புருஷன் போனமையால், சம்பத் தெல்லாங் கெட்டுப் போய், மிகவும் வறுமையான பின்பு, தனபாலன் என் தங்கைமகன் சாலிபத்திரனிடையே போவேனென்று, துணிந்து புறப்பட்டுப் போய், ராஜபுரமெய்தி மூப்பு மூந்துறுத் தெவ்வகை வருகின்றானோ? வெனின்,

59 நான்று நரைதிரையால் நரனிலத்துக் கோலூன்றி
யான்ற தளர்நடைமே லந்நிலையாற்—கான்று
பிறப்பென்னும் பெருவரி பேராதார்க் கென்றும்
உறப்புணரு மென்பார்போ லுற்று. 537

(இ - ள்) தன்யகுமாரன் தன் பிரதானிகளுந் தானும் ஓலக்கமாக இருந்து, ஆடலும் பாடலும், கேளா நிற்ப, தந்தை வழியே வருகின்றவனைக் கண்டு, தன்னுடைய பரிஜனங்களை விட்டு அழைப்பித்துத் தானெதிரெழுந்து சென்று, நமஸ்கரித்திருப்ப, அவன் யாது சொன்னான்? எனின்,

60 பாராளும் வேந்தேநீ பாவியென் பாதந்தை
சீரார் நடக்கையாற் றீண்டுவதோ—வோராதே
வேன்ருர்க் கவனிறைஞ்சி யேற்பயந்நீ நின்றெனக்கு
நன்ருகு மென்ருர் நயந்து. 538

(இ - ள்.) என்றிப்பரிசினல் தன்யகுமாரன் சாலி பத்திரனை யழைத்து மாமனுரைக் காட்டி, தன் னுரிமை யெல்லாமழைப்பித்து, தந்தையை நமஸ் கரிப்பித்துப் பின்னைத் தாயையும் தம்முடன் பிறந் தாரையும் பந்துவர்க்க மெல்லாரையு மழைப்பித்து, தாயை யடிவணங்கி தமயன்மாரையும் வணங்கு தலும், தாங்கள் செய்த பொல்லாங்கை நினைத்து தலை எறக்கிட்டு, பயந்து நிற்றலும், தாய் இவர்கள் முன்பு செய்த க்ஷுத்ரத்தை யறிந்து, தாங்கள் செய்த அபராதத்திற்கு அஞ்சி நின்ருரென்றலும் தன்ய குமாரன் யாது சொன்னுன் ? எனின்,

61 ஆங்கவரை நோயுரைத்த நேன்னுங்கோ வெளவைநீ
யிங்கெனக்கு நல்வினையா லிவ்வகையே—யோங்கு
நெதிமுதலா வைகிற்று நீளுலகி லின்ப
மதுமுதலா வானநன்ருே வாங்கு. 539

(இ - ள்.) என்று இவ் வகையாலவர்களைப் பயப் படாத வண்ணம் சொல்லி, விநயபரனுகி, எழு வர்க்கும் ஏழுமாட மெடுப்பித்து அவர்களுக்கு சுவர்ண வஸ்திராதிகளெல்லாங் கொடுத்து, அவர்க ளனுபவித்துக் கொண்டிருக்க நாடுகளுங் கொடுத்துப் பின்னை எவ்வகை நிகழ்ந்தானே ? வெனின்,

62 தானத் தொடுபூசை தக்க வகை நிகழ்வு
ஞானத் துபகரணம் நன்கியற்றித்—தானேத்
திருமைக் குணமறவா திவ்வகையே சென்ருன்
திருமிக்க தோளான் சிறந்து. 540

(இ-ள்.) இவ்வகையே ரிஷிகளுக்கு தானமும் அருகத் பூஜையும் செய்து, சீல விரத குணங்களை அனுஷ்டித்துச் செல்லாநின்ற பின்னை, ஒரு நாள் தன்னுடைய மைத்துனன் சாலிபத்திரன் சம்சார வைராக்யத்தனாய்த் தவம் படுவேனென்று தன்மனையிலிருந்து சரீர, முடன்படும் வண்ணம் உபவாச முதலாயின நிகழ்த்தாநிற்பத் தன்யகுமாரன் கேட்டு ஸ்ரீமதிக்கு நின்னுடைய தமயனைக் கண்டு வருவோமென்று சொல்லிச் சாலிபத்ரன் கிரகத்திலே சென்று அவனைக் கண்டு உன் சரீர மெலிந்திருக்கைக்குக் காரணமென்னென்று கேட்ப சாலிபத்ரன் யாது சொன்னான். எனின்,

63 ஒன்றிந்தா னேங்கிநீ ருண்டிபெறு தலுமே
குன்றிற்குங் குன்றுமுரங் கூடுதலை—யொன்று
முடல்வன்ன மிவ்வகையே யுள்ளவா றென்று
விடல்வண்ணந் தானுரைத்நான் மிக்கு 541

(இ-ள்.) என்றிப்பரிசினால் சாலிபத்ரன் சொல்லக்கேட்டு தன்யகுமாரன் எனக்கு வைராக்ய மறிவிப்பான் போலச் சொன்னான் எனச் சாலிபத்திரன் யாது சொன்னான்.

64 நிலையாமை நோய்மூப்பு நின்றியற்றும் யாக்கை
யலையாமை நீங்க லறிவாம்—உலையா
மனைமக்கள் பெண்டிர்தாய் மற்றேழிந்த சுற்றம்
வினையகற்ற வல்லவோ வேறு. 542

(இ-ள்.) என்றிப்பரிசினால் சாலிபத்திரன் சொல்ல தன்யகுமாரன் யாது சொன்னான். எனின்

65 மோக மனையென்னு முந்நீர்த் தடங்கடலுள்
ளேகக் கலமறமே மற்றில்லை—மோக
வினைச்சிறையின் வேதனியம் நீங்குர்வகை சொல்லி
நினைந்தறமே தான்புனைநா னேர்ந்து. 543

(இ-ள்.) இப்பரிசினல் தன்யகுமாரன் மீண்டு தன்மனை புகுந்ததற்பின் ஸ்ரீமதி தன்யகுமாரனை நோக்கி யாது சொன்னுள். எனின்,

66 நோலாத நோன்பெலா நோற்பானை யென்னெதிரே
யேலாத சொற்க ளியம்பினுய்—மேலாய
வென்றனக்கு மூத்தானை யேவிய நற்றவமு
முன்றனக்கு மாகாதோ வுற்று. 544

(இ-ள்.) என்றிப்பரிசு சொல்லக்கேட்டு தன்யகுமாரன் சாலிபத்ரனுக்கு முன்பே நான் தீக்ஷை(கை)க் கொள்ள வேணுமென்று சம்சார வைராக்யம் வந்து ராஜ்ய சம்பத்தை தன்மகன் மூத்தவனுக்குக் கொடுத்து யசோதரரென்னும் ரிஷியர் பக்கலிலே திக்ஷகை கொண்டு உக்ரோக்ரமாகிய தபச்சரணத்தினல் அஷ்டவித கர்மங்களை நிர்மூலனம் செய்து முக்தியை எய்தினன். ஆதலால், இப்படியே போதி பெறுதற்கு அருமையை யறிந்து நிகழ்வது காண் ஜீவனே என்றவாறு. அன்றியும்,

67 அப்பவத்திற் முன்பெற்ற போதிதனை யாராய்ந்து
இப்பவத்தி லிச்சுகதி யெய்தினு—னெப்பரிய
போதியே மூவுலகிற் புண்ணியத்திற் கேதுவென
நீதியால் நேர்வது கா ணீர். 545

(இ-ள்.) இப்பால் சாலீபத்ரனும் தன்யகுமாரன் தீக்ஷித்தமைக் கேட்டு தானும் பரிச்

சேதித்து எழுந்து தன்னுடைய ஸ்ரீயெல்லாம் தன்னுடைய ஜேஷ்ட புத்திரனுக்குக் கொடுத்து தானபூஜை செய்து போய் யசோதர ரென்னும் முனிவர் பக்கலிலே தீக்ஷித்து எவ்வகையால் நிகழ்ந் தானே வெனின் ?

68 தவத்தெல்லை யுட்பொருளுந் தன்றல் விளங்கப்
பவத் தெல்லைப் பாய்கடலை நீந்தி—தவத் தெல்லை
தன்னுள்ளே தான்விளங்கி தக்க வகைநோற்று
மின்னின் முடிந்துயர்ந்தான் மேல். **546**

(இ-ள்.) சாலிபத்ரன் சம்யக்தரிசனக் ஞான சாரித்ரங்களை சம்பூர்ண வகையால் நவமாசம் தவம் செய்து சிலகாலம் சல்லேகனையும் கடைக்காலம் பிராயோப கமனமரணமு மெடுத்துக் கொண்டு உத்கிருஷ்டமாகிய தர்மத்யான பாவனையால் முடித்து சர்வார்த்த சித்தியுட்டோன்றி முப்பத்து மூன்று கடலாயுஷ்யமும் (33) முப்பத்து மூவாயிரம் வருஷத்திற் கொருகால் நினைக்க சம்பூர்ணமாகும் அமிர்துணவும் பதினைரைத் திங்களில் ஒருகால் உச்வாச நிச்வாசமும் எய்தி தேவலோகத்தில் உத்க்ருஷ்ட மான சுகம் எய்தின னென்றால் முக்தி ஸ்ரீ என்னும் கதையை கேட்டாகிலும் விஸ்வசித்த முக்தி ஸ்ரீயை எய்தும் போதி பெற்றால் அவமே காலத்தைக் கழிக்க வேண்டாம். எ-று.

69 நிலையாமை யாதி நிகழ்போதி ஈரு
வுலையாமை யாறிரண்டி லுண்மை—தொலையாமை
யிறிலாற் கின்பாகு மென்றுரைத்த விப்பொருளை
மாறிலா நல்லுயிரே மன்னு. **547**

70 உயிர்க்குறுதி யானுரைத்த வோங்கு மறந்தை
அயிர்ப்பறவே கேட்பாரு மன்பிற்—செயிர்ப்பறவே
பாவிப்பார் வாசிப்பார் பண்டை வினைதுணித்து
மேவிப்பா ராண்டுயர்வர் விடு. **548**

71 சீரார் முடிமன்னன் சேரணிகன்முன் கேட்பவே
சீரார் கணதரர்தாம் செப்பினர்—பாராரும்
பாவசம் போதனையைப் பற்றறுக்கும் பவ்வியர்க்கும்
சீவ சம்போதனையைச் *சேர்ந்து. **549**

சகல விமல கேவலக்ஞான பகவதருகத் பரமேஸ்வரன் முகோத்கதமாகிய த்வாதசானுப்ரேக்ஷையுள் சிரேணிக மகா மண்டலேஸ்வரன் கேட்ப கணதர ஸ்வாமிகள் அருளிச் செய்த பன்னிரண்டாவது போதி என்னும் அதிகாரம் சமாப்தம்.

72 தேவேந்த்ர மாமுனிவர் சீவசம் போதனையைப்
பாவேந்தர் நற்றமிழாற் பாடினர்—நாவேந்தர்
சொல்லாற் பொருளாற் றெகுத்துரைப்பார் சிந்திப்பார்
புல்லார்கள் நாற்கதியிற் புக்கு. **550**

ஜீவசம்போதனை முற்றும்.

திருவறம் வளர்க.

பா. பே. *தேர்ந்து.

அரும்பத உரை

பக்.

1 த்ரிபுவனுதிபதி -மூவுலகிற்கும் இறைவன்.
அதிஷ்டிதம் - ஸ்தாபிதம்.
சதுஸ்த்ரிம்சத் - முப்பத்தி நாலு.

2 எண்குணம் - அனந்த ஞானம்முதலிய சித்தரின் எண்குணம்.
உருவால் சிறி தொழிந்தது முக்தி எய்துவதற்கு முன் இருந்த உடலின் அளவில் சிறிது குறைந்தது.
நாலொன்பது குணம்-முனிகளின் உத்தரகுணம் 36.
ஒழுக்கம் ஐந்து - ஞானசாரம், தரிசனசாரம் சாரித்ராசாரம் தபாசாரம். வீர்யாசாரம், என பஞ்சா சாரம் 5. யசோதர காவியம் (87-ம் பக்கம் பார்க்க.)
ஆறிரண்டங்கம் - த்வாதசரங்கம். (12- யசோ 91 - பக்கம் காண்க.)
ஈரேழ்பூவம்-14 - பூர்வம். பூர்வாங்கம் எனலுமாம் (யசோ. 92-ம் பக்கம் காண்க.)
கூறிரண்டெண் கேள்வி. பகுஸ்ருதியாகமம்16-ஆக (பரமாகமம்.) 42.
ஓத்து உரைத்தல் - ஓதிய நூலை உபதேசித்தல்.

பக்.

2 நிரந்தரம் - சதாகாலமும் (இடைவிடாது).
அருங்கலமும்மை - இரத்தினதிரயம் அவை நற்காக்ஷி நன்ஞானம் நல்லொழுக்கம்.
பெருங்குணம்-84 இலக்ஷம் குணவிரதம்.
சரணரவிந்தம் - பாத தாமரை.
மாங்கல்யம் - மங்களம்.

3 மன்னுதான் - பொருந்தாதவன்.
மொழி - திவ்யத்வனி (திருமொழி).
முதல்வன் - அருகன் - (ஆதிபகவன்).
புதல்வி - வாக்தேவி (சரஸ்வதி) அருகனது வாணீ (திவ்யத்வனி).
வாகீஸ்வரி - (அருகன்) வசன சம்மந்தமான மாதா (சரஸ்வதி).
இருதயம் - மனம்.
உன்னிய - நினைத்த.
வதம் - விரதம்.
மாகுணம் - 84. லக்ஷகுண விரதம் முதலிய பல.
பவக்கடல் - பிறவி (ப்பெருங்) கடல்.
குழு - கூட்டம் (கும்பல்).
த்ரயோதசக் கிரியை - 13. விதகிரியை - 5. மஹா

பக்.

விரதம் 5. சமிதி. 3 குப்தி. ஆக-13.

4 பனவிய - கூறிய.

அவ்வியம - களங்கம் (குற்றம்).

சாசன தெய்வம் - ஜின சாஸன தேவதைகள் (ப்ரதிஷ்டாவிதியில் பார்க்க).

சதுர்விம்ஸதி - இருபத்தினான்கு.

பங்கயம் - தாமரை.

கொட்டி - கொட்டிப்பூண்டு.

மன்னல் - சேர்தல்.

பன்னல் - சொல்லல்.

சம்யக் தரிசனஞானசாரித்ரம் - மும்மணி.

நிச்சலம்-சலனமில்லாதது.

5 கரு - மேகத்தின் கருப்பம்.

கொண்மூ - மேகம்.

பொருப்பு - மலை.

கோடு இழுத்து - யானை கொம்பு முதலியன நீரில் அடித்து வருதல்.

பரவை - விசாலம்.

பயோதரம் - மேகம்.

புயல்-மேகம் (மழையுமாம்)

கார் அகிலின் குறடு - கருத்த அகில் கட்டையின் துண்டு.

கருமாவின் எயிறு-கருத்த யானையின் தந்தம்.

தமனியம் - ஒருவகை வாசனை தழை.

சிந்தூரம்-ஜாதிலிங்கம் என்னும் ஓர்வகை சிவந்தபொடி.

பக்.

5 திமிசு - ஒருவகைவாசனை மரம்.

மயிற்பீலி - மயிலிறகு.

சுரும்பர்-வண்டுக் கூட்டம்.

கோவலரிடம்- முல்லைநிலம்.

பொன்காட்ட - கொன்றை பொன் கொடுப்பதுபோல் மாலையாகபுஷ்பித்திருக்க.

கோபம் - பட்டுப் பூச்சு.

கை காட்டல்-காந்தள் மலர்தல் (உள்ளங்கை போல் மலர்த லியல்பு).

மாதவி - குறுக்கத்தி மரம்.

சினை - கிளை.

தடித் தீர்த்து - முறித்து இழுத்துக் கொண்டு.

தலைகொண்டு - முதன்மையாகச் சேர்ந்து.

உற்பலம் - நீலோற்பலம் (கருங்குவளையுமாம்).

புகமண்டி - புகுந்து பரவி.

பூகம் - பாக்குமரம்.

புன்னாகக் கோடு - கொடிநாகக் கிளை.

நாளிகேரம் - தென்னை.

வரம்பு - வரப்பு.

வயன் மண்டி - வயலில் நிறைந்து.

உந்தி - செலுத்தி.

புனல் - நீர்.

கருமேதி-கருத்த எருமை.

புறம் - பக்கம்.

கயல் - கண்டை மீன்.

நீலத்தின் மலர் பாய - நீலோற்பலமலரிலே பரவ.

பக்.

5 காவி - செங்குவளை. (நீலோற்பலமுமாம்).
சலஞ்சலம் - ஒருவகை சங்கு
பொருது அலைத்து-மோதி அடித்து, அலசி.
கலுழி-முல்லைநிலத்தேவரும் காட்டாற்றின் நீர் சுழி.
6 அறவோர் தம்.........
பெருக்கி - அறவோரின் அறவுறை விசாலமான பொருளைக் கொண்டிருப்பது போல இந்த ஆறு நீரைப் பலவிடத்தும் பரவச் செய்து (பொருளைப் பெறச்செய்து).
தராதலம்-நிலம். (உலகம்).
ஆர்ப் பொலி - ஆரவாரம்.
புள் - பறவை.
திங்கள் - சந்திரன்.
நுதல் - நெற்றி.
7 வாவி - தடாகம்.
பல்லியம் - பல வாத்தியம்.
அம்பரம் - ஆகாயம்.
உம்பர் - தேவர்.
ஆஜ்ஞாமார்க்கம் - கட்டளை (முறை) வழி.
சத்ரச்சாயை-குடை நிழல்.
8 கின்னரர் - ஒருவகை வியந்தர தேவர்.
கொங்கு ஆர் - வாசனை நிறைந்த.
மஸ்தக ஸ்திதனய் -மேலே இருக்கப்பட்டவனய்.
துன்றுதல் - சேர்தல்.
8 மாவலன்-சிறந்தவல்லவன்

பக்.

(குதிரையை செலுத்து. பவனுமாம்).
ஏர்பெற - அழகுபெற.
9 நைருத்தியதிசை - தென் மேற்கு.
சப்தபதம் சென்று - சமவசரணத்தில்உள்ள ஏழு பூமிகளையும் நினைத்து ஏழடி நடத்தல்.
துகள் - குற்றம்.
தீர்த்தம் - அறவுரை மேற் கொள்ளும் காலம்.
10 சாதுர்வர்ணம் - யதி, ஆரியாங்கனை, சிராவகர். சிராவகியர், என நான்கு வகை.
விபூதி-வைபவம்(செல்வம்.)
அஷ்டவித அர்ச்சனை - நீர், சந்தனம், புஷ்பம், அக்ஷதை, தீபம், தூபம், பழம், சரு, இவைகளைக் கொண்டு அர்ச்சித்தல்.
பொன்எயில்- பொன்மதில் (சமவசரணத்திலுள்ளது).
சதுரங்கம் - நால்வகை சேனை, யானை, தேர், குதிரை காலாள்.
படகம்ஒருவகைவாத்தியம்.
திரிலோக பூஜார்ஹன் - மூவுலகத் துள்ளோரும் பூஜிக்கத் தகுந்தவன்.
11 தௌவாரிக - வாயல்படி.
12 பூமண்டலம் - பூமியின் வட்டம்.
பரிவேஷ்டித- சூழ்ந்திருந்த

பக்.

கடித - சேர்க்கப்பட்ட.
சுர சராசனம்-இந்த்ர தனுசு (வானவில்).
அன்விதம் - கூடிய.
ஸாலம் - மதில்.
அபிஷிக்த - அபிஷேகம் செய்யப்பட்ட.
தேதீப்யமான - ப்ரகாசம் பொருந்திய (ஒளி தங்கிய).
அபிராமம் - அழகாயுள்ள.
நடவாபி-கிணர். மேலிருந்து அமைந்துள்ள படிகட்டில் இறங்கிச்சென்று காணும் கிணர்.
ஸமன்வித - கூடிய.
ஷண்ட—கூட்டமான.
கவ்யூதித்வயம் — இரண்டு கவ்யூதி (2. க்ரோசம் கொண்டது. 1. கவ்யூதி) யசோ, 53ம் பக்கம் பார்க்க.
விஷ்கம்பமான-விசாலமான.
ரஜதம் - வெள்ளி.
ஸோபானம் - (இரத்ன)படி.
சலத்-சஞ்சரிக்கின்ற.
ஜலஜ :— தாமரை.
ஜலசரஜீவன் — ஜலத்தில் வாழும் உயிர்கள்.
விகங்கமம் — பக்ஷிகள், (நீர் வாழ்பறவை).
நிநாதம் — சப்தம். (ஒலி).
நிரத — ஆசக்தியுடைய.
கசரர் — வித்யாதரர்.
12 ஸந்தோஹம்—கூட்டம்.
ஸம்ஸேவ்யம் — நன்றாக சேவிக்கப்பட்டது.

பக்.

ஸ்வச்ச ஜலம் - நிர்மலமான ஜலம்.
கந்தலுப்த - வாசனையில் இச்சையுள்ள.
மத்த - மயங்கிய.
ஜங்கார - ரீங்கார.
கோலா கலம் - மிகுந்த சப்தம் (பேரிரைச்சல்).
புன்னாகம்-ஒருவகை நாகை.
வகுளம் - மகிழம்.
திலகம் - மனோகரம் (ஒரு வகைமரமுமாம்).
சதபத்ரம் - தாமரை.
நானா லதிகாபிராமம் - பலவித கொடிகளால் அலங்காரமானது
சதம் - அனேகம்.
13 ஸாரக்த - சிவந்த.
தபனீயம் - பொன்மயம்.
சாயா ப்ராகாரத்தினுள் - காந்திமயமானமதிலினுள்.
த்ரிதசமிதுனம் - தேவ தம்பதிகள்.
பிரசங்க - ஸ்தியால்.
உதித - உண்டான.
விஹக - பறவை.
நிஸ்வனம் - சப்தம்.
சப்தச்சதம்- ஏழிலைம் பாலை ஒருவகை மரம்.
சம்பகம் - செண்பகம்.
சூத - மா. (மரம்).
ப்ரதிஷ்டாபிதம் - ஸ்தாபிக்கப்பட்ட ப்ராதிஹார்யம்
13 (தெய்வீக அதிசயமான எண்வகை ஐஸ்வர்யம்.

பக்.

பர்யங்காசனம் - ஆசனம் பலவற்றில் ஒன்று (உட்கார்ந்திருத்தல் போல்வது).

பூருஹம் - மரம்.

பாரிஜாதம்-.கற்பகவிருக்ஷம் (பவழமல்லிகையுமாம)

தாலம் - பனைமரம்.

ஹிந்தாலம் - ஸ்ரீதாளமரம்.

தமாலம்-பச்சையிலை, புன்க மரம்.

ஜம்பீரம் - எலுமிச்சமரம்.

புளிநம் - மணற்குன்று.

க்ருதககிரி - செய்குன்று.

லதாபவனம் - லதாமண்டபம் (லதா - கொடிகள்.)

பவனம் - வீடு.

மந்தஅனிலம் - (மந்தமாருதம் (இளங்காற்று).

ஆந்தோளித - அசைக்கப்பட்ட.

சசதரன் - முயலுடைய சந்திரன் (சசம்-முயல்).

பஹளம் - அதிகம்.

தஹ்யமான - கொளுத்தப்பட்ட (தஹிக்கப்பட்ட).

காளஅகரு-கருத்த அகில்

வியாப்த-(எங்கும்) பரவிய.

உபவநபூமி - அருகிலுள்ள வநபூமி.

கார்த்தஸ்வரம் - பொன். (ஓசையின் மென்மையால் அப்பெயர் பெறும்).

14 அம்புஜம் - தாமரை.

சிகி - மயில்.

பக்.

ப்ருஹத்வஜம் - பெரிய த்வஜம். (கொடி).

தண்டாந்தரித-8 முழ அளவையுள்ள.

அஷ்டாசிதி அங்குலம் - 88 அங்குலம். (அசிதி-80).

அர்ஜுனமயம் - வெண்மையானமயம். (தூய்மை).

கல்பாவனிஜம் - கல்பபூமியிலுண்டானது.

சங்கல்பாதீத - அளவை மீறிய.

கல்பஞ்ஞேபேத - கல்பத்தோடுகூடிய(10.விததரு).

பாதபம் - விருக்ஷம் (மரம்).

ப்ரகீர்ணம் - சூழ்ந்தது.

சாமீகரம் - பொன்.

அங்கம் - இடம் (உறுப்பு).

ஸுமன சந்தோஹம் - மலர்குவியல்.

ஸம் ஸேவியம் - நன்றாக ஸேவிக்கத் தகுந்தது.

கிரீடாநீதம் - விளையாடச் செய்வது.

விதானம் - மேல்கட்டு

ஸித்தவிருக்ஷம் - ஸித்தாயதனவிருக்ஷம். (4. கோயில்களை, நான்கு பக்கத் திக்குகளிலுமுள்ள மரம்.)

உபயபார்ஸ்வம் - இரு பக்கம்.

ஸம்ப்ருதம் - நிறைந்தது.

விஷ்கம்பம் - விசாலம் (பரந்த).

கல்பாதிபதி-தேவேந்திரன்.

பக்)

ரூப்யம் - வெள்ளி.
ப்ரயுக்த - கூடிய.
வேதிகை - திண்ணை, (மேடையுமாம்).
அப்யந்தரம் - மத்யம்.
15 சதம் - அனேகம்.
ஜிநாபிஷேவணம்-அபிஷேகம்
கதனம் - சொல்லுதல்.
களகளாரவம் - கலகல என்னும் ஒலி.
ஹர்ம்யம் - உப்பரிகை.
ப்ரகீர்ணகம் - சமூகங்கள்.
அந்தரிதம் - மத்தியம்.
ஸ்தூபை - சூளிகை. (சிகரமுமாம்)
வியாஸமான - விஸ்தாரமான.
பவனபூமி - வீட்டின் இடம்
அதரிக்ரதம் - கீழாகச் செய்து தான் மேலாதல்,
த்ரிதசா :- தேவர்கள்.
பரிபாலிதம் - ரக்ஷிக்கப் பட்டது.
பித்தி - சுவர்.
கோஷ்டம் - கும்பல்.
ரித்தி - ஐசுவர்யம்.
விக்ரியா - வேறுபட்டது.
பர்யயம் - அறிதல்.
16 மண்டலிகன் - 4000 அரசருக்குத் தலைவன்.
அனுபவம்-உவமையற்றது.
லஸத் - பிரகாசிக்கிற.
அஷ்டதநுத்ஸேதம் - 8. வில் பரமாணம்.
உபகரணம் - உபயோகப்

பக்.

பொருள்.
மனோக்ஞம் - மனோரம்யம்.
பஞ்சாசத் அதிக சப்தசத சராசனம் - (பஞ்சாசத் 50) (சப்தசதம். 700750 வில்.)
17 நிவாஸம் - இருப்பிடம்.
ப்ராதி ஹார்யம்-ஐஸ்வர்யம்.
ஏக - ஒப்பற்ற. (முக்கியம்),
ப்ராசாதம் - உப்பரிகை (மாடி).
த்வாதசகுண தேகப் பிரமாணம்–(ஸ்வாமியின்) தேக உன்னதத்திற்கு12. மடங்கு அதிகம் உள்ளது.
ஜகதி - இடம் (ப்ரதேசம்).
கவ்யூதி - 2.க்ரோசம்.
தாளி - தூளிசாலமென்னும் மதில்.
ப்ராகாரம் - மதில்.
அபிபவம் - அவமானம்,
அவத்யம் - தோஷம்.
ஆர்த்தத்யானம் -கலங்கின உள்ளம்.
ரௌத்ர த்யானம் - க்ரூர பரிணமம் (கோபம்).
மிருத்யு - மரணம்.
ஜநநம் - உற்பத்தி
நிநாதம் - ஸ்வரம (ஒலி).
நிர்ணிக்தமாக - சந்தேகமின்றி.
17 பதிரர் - செவிடர்.
பரிஸ்புடம் - ஸ்பஷ்டம் (நன்றாக)
மாதங்கம் - யானை..

பக்.

18 சுபிக்ஷிதை - க்ஷேமமானது.
நபேர மார்க்கம் - ஆகாய வழி.
புக்திவிரஹிதம் - உணவு கொள்ளாமை.
சதுரானனத்வம் - நான்கு பக்கமும்முகம் தெரிதல்.
அவாப்தியும் - அடைவதும்
சாயை - நிழல்.
அபக்ஷ்ம வீக்ஷணு திவர்ஜ்ஜிதம் - இமை கொட்டாமலிருத்தல்.
அபக்ஷ்மம் - நிமை (இமை)
வீக்ஷணம் - பார்வை.
உபசயம் - விருத்தி.
அபசயம் - விருத்தியில்லாதது.
வ்யபேதம் - அழிந்தது.
அங்குரிதம் - முளைத்தல்.
பல்லவிதம் - துளிர்.
கோரஹிதம் - அரும்பியது.
குஸுமிதம் - புஷ்பித்தது.
ஸ்தபகிதம் - பூங்கொத்தாகியது.
பலிதம் - பழமானது.
விஹரணத்து - ஸ்ரீ விஹாரத்து (விழா).
மந்தஅனிலம் - மந்தமாருதம் (இளங்காற்று),
கண்டகம் - முள்.
வ்யுபசமித - பரிகரிக்கப்பட்ட.

18 த்ருணம் - புல்.
கீடகம் - புழுக்கள்.
சர்க்கரோபலம் - சர்க்கரை

பக்.

போலபொடியானமணல்.
உபலம் - கல்.
ஸுகந்தத்ரவ்யமிச்ரம் - பரிமளமான வாசனை கலந்தது.
ஸ்தனிதகுமாரன் - பவண தேவர், (10)-ல் ஒருவர்.
க்ருதம் - செய்தல்.
பந்துரம் - மனோக்ஞம். (ரம்யம்)
கந்தோதகம் - சந்தனம் கலந்த ஜலம்.
வ்ருஷ்டி - பொழிதல். (மழையுமாம்)
நபஸ்தலம் - ஆகாயம்.
ராகம் - சிவப்பு.
கேஸரம் - தாமரையின் மய்யத்திலுள்ளது (கிஞ்சல்கம் என்பதும் இது).
கனகபத்ரம் - ஸ்வர்ணம் போன்ற இலை.

19 ரோமாஞ்சகஞ்சுகிதம் -புளகாங்கிதத்தால், (மயிர்க்குச்செரிவதால்) சட்டை போல் மூடுதல்.
பலபரிதம்-பலன் நிறைதல்
விநம்ரசாலி-வணங்கிய நெல் கதிர்.
ஸஸ்யம்-தானியம்,
வியக்தலம்-ஆகாச தலம். (தலம் இடம்)
திகந்தராலம்-திக்கின்நடுவு

19 ஆஹ்வானம்-பலரையும் அழைத்தல்.
தோர் தண்டம் - திரண்ட

பக்.

வலிய கைகள்.

நிலிம்பர்-கல்பவாசிதேவர்.

திவ்யாரவபூரித-திவ்ய த்வனியால் நிரம்பிய.

ஸஹஸ்ர-கிரணன் சூரியன்

விலாசம்-பிரகாசம்.

ஹாஸ-பரிகசித்தல்.

ஸ்புசர-மிகவும் மேலான.

ஸகஸ்ரமான சக்ரம்-1000-காலுடைய தேவன் ஏந்திய தரும சக்ரம். (அறவாழி என்பதும் இது).

ப்ருங்காரம்-கெண்டி.

தர்ப்பணம்-கண்ணுடி.

உல்லஸித-பிரகாசிக்கிற (மலர்ந்த).

சதுஸ்த்ரிம்சத்-முப்பத்தி நான்கு.

க்ஷாயிகம்-கர்மக்ஷயாதிசயம்

பாமார்ஹந்த்யம்-சிறந்த அருகத்பதவி.

புண்டரீகம்-தாமரை.

20 சதசகஸ்ர தினகரன் -கோடி சூரியன்.

இருதயம் - மனம்,

ஈர்யாபதசுத்தி - நடக்கும் போது ஏற்படும் ஹிம்சைக்குப் பரிகாரம் தேடுதல்.

விரைகமழ் நீர் தருகனி.... யும் - இவை எண்வகை அர்ச்சிக்கும் பொருள் - மங்களநீர் முதலியன.

20 காதியாய் - காதி அகாதியாய்.

பக்.

போதியராய் - ஞானியாய்.

பொருள் - அறுவகை பொருள். (அவை உயிர் புத்கலம். தர்மம். அதர்மம். ஆகாசம். காலம் என்பனவாம்).

சேதி - முக்தி. (அ) கோயில்

அங்கம் ஆறிரண்டு - 12 வித அங்காகமம்.

அமலன்-நிர்மலன். (குற்ற மற்றவன்)

பிண்டி - அசோகு.

மண்டலம் - பிரபா மண்டலம். ஆதிபகவனின் பின்னுல் ஒளிர்வது.

புரந்தரன் - தேவேந்திரன்.

பொன்னெயில் - பொன் மதில்

சிங்கவணை - ஸிம்மாசனம்.

21 நவபதம் - நவபதார்த்தம். (உயிர், உயிர் அல்லாதது, புண்ணியம், பாபம், ஊற்று - தடுத்தல், உதிர்த்தல், கட்டுதல் - கைவல்யம் - என்பனவாம்).

21 நயம் எழு - ஏழுவித நயம்

ஐம்பதம் - பஞ்சமந்திரம்.

சரண் நான்கு - நாம் இரக்ஷணை (புகல்) அடையும்

21 இடம் நான்கு. (அவை:– அரஹந்தர், சித்தர், சாது, தர்மம்.–என. 4)

மூன்று பிறப்பு - பிறப்பு வகை. 3. அவை :—(1)

பக்.

கர்ப்பம் (மனிதர் விலங்கு இவைகளின் பிறவி வகை; (முட்டை யிடுதல் குட்டிபோடுதலும் இதில் அடங்கும்). (2) உபபாதம் (தேவர்களும் நாரகர்களும் பிறக்குமிடம் ஓர் பெட்டி போல் வது தாயின் ஸ்ரோணிதமும் தகப்பனின் சுக்கிலமும் இன்றித்தோன்றுவது, (3) சம்மூர்ச்சனம் நான்குபொறி வரையிலுமுள்ள (நுண்ணியஉயிர்) புழுபூச்சி முதலாயின அழுகிய பொருள் முதலியவற்றில் தோன்றுவது. (மேலேகூறிய கர்ப்பமும் உபபாதமும் தவிர ஏனைய பிறவிகள்)

சிவம் - சௌக்யம்.

திகம்பரன் - திசையை ஆடையாகஉடையவன்.

ஒரு மொழி - திவ்யத்வனி.

இரண்டறம் - இல்லறம் - துறவறம். என. 2.

ஐவதம் - ஐந்து விரதம். (அவை: கொலை, பொய், திருடு, காமம். மிகு பொருள் விரும்புதலிவை யில்லாமை என்பனவாம்.

21 ஏழு ருத்தி - புத்திருத்தி, தபோருத்தி, பலருத்தி, விக்ரியாருத்தி, ரஸருத்தி, ஔஷதருத்தி அக்ஷிணருத்தி, என ஏழுவகை ருத்திகள்.

திருமறு - அழகிய மறு. (அவை. ஆயிரத்தெட்டு இலக்ஷணம்.)

கலியாணம் ஐந்து - இதனை பஞ்ச கல்யாணம் என்பர். அவை (1) கர்பாவதரணம். (தீர்த்தங்கரன் கர்ப்பத்தில் அடைதல்) (2). ஜன்மாபிஷேகம் (ஸ்வாமி பிறந்த உடன், தேவர்களால், மகம் மேருவில் வைத்து செய்யும் க்ஷீர அபிஷேகம்.) (3) பரிநிஷ்க்ரமணம். (தீக்ஷாகல்யாணம்) (4) கேவலஜ்ஞானம். (வினையின நீங்கி விளங்கிய அறிவுடையனாதல்) (5) பரிநிர்வாணம் (வீடுபேறு அடைதல்) எனவாம்.

மறை நான்கு.

நான்கு வேதம். அவை:- (1) பிரதமானு யோகம், (மஹாபுராணகதை (அ) ஸ்ரீபுராணம்) (2) கரணானு யோகம் (உலக விவரம்) (3) சரணானு யோகம் (சீல ஒழுக்கங்களைக் கூறல்) (4) த்ரவ்யானு யோகம் (தத்துவங்களைக் கூறல்) என்பனவாம்.

பக்.

22 இணர் - கொத்து.
பூந்தாமம் - பூமாலை.
தொன்னிலம் - பழமையான பூமி.
விசோதி - எல்லையற்ற பக்தி.
நாலெட்டு - 32. (வந்தனையின் தோஷம். 32. இதனை கிரியா புத்தகம் 46ம் பக்கத்தில் காண்க.
ஐவகையிற் பணிதல் - பஞ்சமுஷ்டியினுல் வணங்கல். (சிரசு ஒன்று, கை இரண்டு, கால் இரண்டு)
பவ ககன விஷம விசன பிராபணஹேது - பிறவியாகிற காட்டின் பொல்லாங்காகிய துன்பத்தை அடைவிப்பதற்குக் காரணம்.
த்வாதசாவர்த்தனை - 12 தரம்
சதுரஸ்ர வந்தனை - நான்கு தரம் குனிந்து (பஞ்சமுஷ்டியால்) வணங்குதல் இதில் மூன்று தரம் கையை குவித்து சுழற்றி வணங்குவதால்; மேலே சொன்ன 12. ஆவர்த்தனம் ஆகிறது.
சேஷம் - சுவாமியின்பாதத்திலிட்ட பூ முதலியன.
கோஷ்டம் - அறை (வீடு)
22 அனுபிரேக்ஷை - திரும்பத் திரும்ப நினைக்கும் பாவனை.

பக்.

கணேசுவரன் - (1) பவணதேவர் (2 வியந்தரதேவர் (3) ஜ்யோதிஷ்கதேவர்(4)கல்பவாஸி தேவர். இவர்கள் மனைவியர் நால்வர். ஆக (8); (9) ரிஷி (10) ஆரியாங்கனைகள். (11) மனிதர். (12) விலங்கு : என்னும். 12 வகைகணங்களுக்கு நாயகன் (அருகன்).
நில்லாமை – அனித்யம்
சரணின்மை - அசரணம்
ஏகம் - ஏகத்வம்
நிலை யொல்லாதது - அன்னியத்வம் (இது நிலையாத தெனவும் அமையும்)
தடுமாறு - ஸம்ஸாரம்.
பொல்லாவுடல் - அசுசித்வம்.
ஊறு - ஆஸ்ரவம் (ஊற்று)
சம்வரை - செறிப்பு (தடுத்தல்).
நிச்சரை - நிர்ஜ்ஜரை (உதிர்ப்பு).
கோள் தர்மம் - மேற்கொள்ளும் அறம் (தர்ம ஸ்வாக்யானம்).
போதி - ஞானம்.
23 கரகமலமுகுளிதம் - இரண்டு கைகளையும்
23 தாமரை மொக்குபோல் குவித்து வணங்குதல்.

பக்.

வெள்ளை - உலக அநுபவம் அறியாதவன்.

உபசமர் - நற்காட்சி யுடையோர்.

24 வெருகு - பூனை.

நெய்வடிநார் - பன்னாடை.

தோஷக்ராகி - குற்றத்தை கிரகிப்பவன்.

குளகு - தழை.

பின்னபாசன தட்டு - துவாரம் உள்ள தட்டு.

சூன்ய ஹ்ருதயர் - தர்மம் கொள்ளாத மனமுடையவர்.

சங்க்ரகித்தல் - விடாது பற்றுதல்.

25 க்ஷீரோதகம் - பாலும் நீரும் கலந்திருத்தல்.

ஞான தரிசன, கிரியா, சைதன்யரஹித தேஹம் - இவ்வுடல்: அறிவு, காட்சி, செயல், (ஒழுக்கம்) முதலியனவும் சேதனஸ்வபாவமென்னும் சைதன்ய மில்லாததுமாகும்.

தேஹப்பிரமாணம் - உயிர், தான் மேற்கொண்டுள்ள உடலின் அளவேயாய் சிறிதும் பெரிதுமாயிருப்பது.

ஊர்த்துவ கதி சுபாவம் - உயிர், மேல்நோக்கிச்செல்லும் தன்மையுடையது.

25 ஞானவரணாதி நாலிரண்டு

பக்.

வெவ்வினை - காதி அகாதி என்னும் எண்வினை. அவை வருமாறு:—(1) ஞானவரணீயம் (ஞான ஒளியை மறைப்பது) (2) தரிசனவரணீயம் (தரிசன ஒளியை மறைப்பது) (3) மோஹநீயம் (அறிவை மயக்குவது) (4) அந்தராயம் (பலனை அடைய ஒட்டாது தடுப்பது. இவை நான்கும், காதி கர்மம். (1) வேதநீயம். (துன்பம் தருவது) (2) ஆயுஷ்யம் (ஆயுள் அளவு வரை பிழைத்திருக்கச் செய்வது) (3) நாமம் (உடல் அமைவதற்குக் காரணமானது) (4) கோத்திரம். (தீமை, நன்மை ஆகிய குலத்தில் பிறக்கச்செய்வது) இவை நான்கும் அகாதி கர்மம். ஆக காதி, அகாதி, இரண்டும் எண்வகை வினைகள். (யசோதரகாவியம் 81-ம் பக்கம் பார்க்க.

25 ஆவரணம் - மறைத்தல்.

26 அவகஹனத்வம் - அமூர்த்தஸ்வபாவமானதால் ஏனைய பொருள்கள் உள்புக இடங்கொடுப்பது. (பல தீபத்தின்

பக்.

ஒளி ஒன்ருக காண்பது போல்வது.)

26 அகுரு லகுத்வம் - (உயிர்) பெரியதும சிறியதுமாகும் தன்மை.

அவ்வியாபாதத்வம் - எவ்வித பாதையும் (துன்பமும) இல்லாதது.

உபமாதீதம் - தனக்குநிகர் எதுவும் இல்லாதது. (உவமையை கடந்தது)

லோக அக்ர மஸ்தக ஸ்திதர் - உலக உச்சியாகிய சித்த க்ஷேத்திரத்தில் இருப்பவர். (சித்தர்) (அக்ரம், உச்சி, மேல்.) (ஸ்திதர். இருப்பவர்)

மறிதல் - அழிந்து வேருதல்.

தத்துவராகி - (ஸித்தர்) தன்மையராகி.

மாற்றுயிர் - பிறவியில் உழலும் உயிர்.

அன்ருதம் - பொய்.

ஸ்தேயம் - (திருடு) களவு.

அப்ரம்மம் - (காமம்) மாதரை விரும்புதல்.

அபரிக்ரஹம் (மிகுபொருள் விருமபாமை) பேராசையின்மை.

மித்யாத்வம் - பொய்யை மெய்யாக நம்பி மயங்குவது.

அஸம்யமம் - விரதமின்மை

கஷாயம் - துவர் (கலங்கின எண்ணம். அவை

26 கோபம் (1) கர்வம் (2) மாயம். (3) லோபம். (4)

யோகம் - மனம், வசனம், உடல் (காயம்) ஆகிய மூன்றின் செயலும் ஒன்று படுவது.

ப்ரமாதம் - கோபம். கர்வம் மாயம். உலோபம். என கஷாயம் நான்கு, விகதை நான்கு, இந்திரியம் ஐந்து, ஸ்நேகம், மோகம் என 15.

சம்ரம்பம் - செயல் செய்ய நினைத்தல்.

சமாரம்பம் - செயல் செய்ய சாமான் சேகரித்தல். (பிறர் ஆவல் கொள்ளும்படி செய்தல்).

ஆரம்பம் - செயலைச் செய்ய ஆரம்பித்தல்.

யோகம் - மன, வசன, காயம். என (யோகம் 3)

க்ருதம் - செய்தல்.

காரிதம் - செய்வித்தல்.

அனுமோதம் - உடன்படல்.

மாரவந்த நூற்றெட்டு அதிகரணம் வருமாறு - மனம், வசனம், காயம். ஆகிய மூன்றையும். சம்ரமபம், சமாரம்பம். ஆரம்பம், என்ற மூன்ருல் பெருக்க. ஒன்பதாகும்; இதனை, க்ருதம்.

பக்.

காரிதம். அனுமோதம். என்ற மூன்றால் பெருக்க 27. ஆகும். இதனை. க்ரோதம், (கோபம்)

26 மானம். (கர்வம்) மாயம். லோபம் என்னும் கஷாயம் நான்கினால் பெருக்க. 108. ஆகும்.

அதிகரணம் - இருப்பை உடையது. (ஆதாரம்)

ப்ரக்ருதிபந்தம் - அனந்தம் பரமாணுக்கள். ஸ்னிக்த, ரூக்ஷகுணங்களால். (தனக்குத்தானாக) ஒன்ருகச் சேருதல். (இது. கார்மணவர்கணை என்பது. மேருமந்திரம் 101-ம் கவியில் பார்க்க.)

ப்ரதேசபந்தம் - மேற்கூறிய கார்மணவர்கணை யோகத்தால் (எண்) வினைகளாக மாறி உயிருடன் (பாலும் நீரும் போல) கலத்தல்.

ஸ்திதிபந்தம். வினைகள் பலனைக் கொடுக்க உதையமாவதற்கு முன் உயிருடன் சேர்ந்திருத்தல். (ஜீவகன் முற்பிறவியில் அன்னக்குஞ்சைப் பிரித்த தீவினைகள், தான் தேவருலகம் சென்று மீண்டும் பூமியில் பிறக்கும்வரை தன் உயிருடன் கலந்திருத்தல் போல்வது.)

பக்.

அனுபாகபந்தம் - வினைகள் பலனை அளிக்க உதையமாதல்.

26 முகபடாம்- யானைக்கு நெற்றியில் கட்டும் பட்டம்.

கபாடம் - கதவு.

தொழு - விலங்கு.

நால்வகை ஆயுஷ்ய கர்மங்கள் - மனிதகதி, தேவகதி, விலங்குகதி நரககதி; என்று, நான்கு விதமாகும்.

27 கும்பகாரன் - குயவன்.

ஹீனாதிகம் - குறைவும் மிகுதியும்.

சமயமம் - விரதம்.

லேஸ்யை - அறுவகை எண்ணம். (அவை:— கிருஷ்ண லேஸ்யை, நீல லேஸ்யை, காபோத லேஸ்யை, பீதலேஸ்யை, பத்மலேஸ்யை, சுக்ல லேஸ்யை, இதன் விரிவு பஞ்சபரமேஷ்டிஸ்வரூபம் கடைசி பக்கத்தில் காண்க)

ஸம்ஞித்துவம் - அறவுரை அறியும் ஜீவன்.

ஆஹாரிகம் - 6 வகை. அவை. கர்மாஹாரம், நோகர் மரகராம். கபளாஹாரம். லெப்பாஹாரம், ஒஜாஹாரம். மனஸாஹாரம் என்பன.

பக்.

சதுர்தச மார்கணை - 14 வகை மார்கணை ஸ்தானம்.

சதுர்வித துக்கம் - 4 வகை துக்கம்.

கறங்கு - காற்றாடி.

பேய்த்தேர் - பேய்க்காற்று (காற்று தூசிகளுடன் உயர்ந்து, தேர்போல் சுழல்வது).

கொள்ளி வட்டம் - (சிறுவர் சுற்றும்) மாவலி.

துகள் - தூசு.

உருள் - தேர்சக்கரம்

மறிபுனல்சுழி - நீர்மறிந்து சுழல்தல்.

கொதித்தெழும் அவிழ் - உலையில் கொதித்து மேலெழும், அன்னம்.

உடைகலத்துஅகத்துயிர் - உடைந்த கப்பலிலுள்ள மக்கள்.

கொங்தழல் - மிகுந்த அக்னி.

அந்தகன் - இயமன்.

கோட்டால் - கொம்பால்.

28 அட்டமும் - ஆர்த்தியாலமும்.

சன்னை - சக்ஞை (உணவு, பயம், பெண், பொருள் - என - 4 வகையில் சதா நினைப்பு,)

பாஷாணம் - கிட்டகாளிதம் -

கவ்வை - வருத்தம்.

பக்.

தேசனலப்தி - குருவினிடம் உபதேசம் பெறல்.

பிராயோக்யதா லப்தி - யோக்யமான செயலில் நிகழ்வது.

29 ஜிவசம்போதனை - உயிருக்கு நன்மையை நன்றாக போதித்தல்.

பஞ்சவிம்சதிமலரகிதனுகி - இருபத்தைந்து வித குற்றங்கள் இலனுகி.

அஜ்ஞானத்ரி கரணம் - குமதி, குஸ்ருதி, விபங்கம், என அக்ஞானம். 3. வகை:

பஞ்ச சமிதி - சமிதி 5. அவை நடத்தல், பேசுதல், உணவு உட்கொள்ளல், பொருள்களை எடுத்தல் வைத்தல், சிறுநீர் கழித்தல், மலம் கழித்தல் ஆகிய காலங்களில் பிற வுயிர்கள் துன்புறு வண்ணம் மிதமாக இருத்தல் (செய்தல்).

29 திரிகுப்தி - மனம், வாக்கு, உடல், ஆகிய மூன்றையும், அடக்கல்.

30 புனல்வரவு - புது வெள்ளம் வருதல்.

மொக்குள் - நீர்க்குமிழி.

பவனம் - காற்று.

முயங்கி - வருந்தி.

31 முறையோ முறையோ

பக்.

ஐயோ ! (இரக்கம்).

32 மிடர் - தொண்டை.

33 தெருளல் - தெளிதல்.

34 பராபவம் - மானபங்கம்.

வெருவுதல் - அஞ்சுதல்.

35 அபமிருத்யு - ஆயுள் முடிவதற்கு முன் ஏற்படும் மரணம், (அது வாழை தோப்பு, காற்றில் விழுந்து மடிவதைப் போல்வது).

திறல் - வல்லமை.

கறு - த்வேஷம். (கோபம்)

கூனி - தாதி.

36 தொழுநோய் - குட்டநோய் (முதலியன).

ஆதுலன் - தரித்திரன்.

யாக்கை - உடல் (இது உயிரை ஆக்குபோல கட்டுதலால் ஆக்கு என்பது புளியம் மெலாரைக் கிழித்தது ஆக்கு என வழங்கும்.)

குணமிலி - குணமில்லாதவன்

சிட்டன் - செம்மல்.

தேசிகன் - அறிஞன்.

மாவலன் - பலமுள்ளவன்.

செம்மல் - சிறந்தோன்.

37 அரணம் - இரக்ஷணை (பாதுகாப்பு)

கதுவெந்துயர் - அழிக்கின்ற கொடுந்துன்பம்.

38 குறும்பூழ் - அரதனம் (ரத்னம்).

பக்.

தெருள் - தெளிவு.

சூகரம் - பன்றி.

39 அபட்ச்யம் பட்ச்யம் - புசிக்கத் தகாதது. புசிக்கத் தக்கது.

பேயம் - கொள்ளத்தக்கது

அகம்யம் - நடத்தத் தகாதது.

41 நாளுளும் - நாளும் நாளும்

அச்சரியம் - ஆச்சர்யம்.

உறக்கு - நித்திரை.

எறும்பு எண்ணுயிரம் கழுதை அகனறதென ஏகினவன் - கழுதையை ஓட்டிச் சென்ற ஒருவன் அறிவீனத்தால் எறும்பு சாரையில் செல்லும் எறும்புகள் 8000 வரை எண்ணி கழுதையை திரும்பிப் பார்க்கக் காணுது போனவன் போல என்க.

பொய்தீர் - குற்றம் தீர்ந்த

43 ரசம் - சித்தரசம் (இது) இரும்பைப் பொன்ணுக்குவது.

லோகம் - (ஈண்டு) இரும்பு

பரிக்கத்தை - பரிக்ரஹத்தை அவை :— பாஹ்பம் (புறம்) 10. அப்யந்தரம் (உள்) 14 ஆக 24 .மே.ம.பு.367-ம் பக்கம் காண்க.

44 பூரணை - பூர்த்தி செய்து.

நாகம் - மலைகள் (ஹிம

பக்.

வான் முதலியன)

நேமியன்-சக்ர இரத்னத்தை யுடைய சக்ரவர்த்தி.

ஷட்கண்டம் - ஆறு கண்டம். அவை :—மிலேச்ச கண்டம். 5. தர்மகண்டம் 1. ஆக 6.

45 சத்ரம் - குடை.

46 தோமரம - ஒரு வகை ஆயுதம்.

தண்டு - தண்டாயுதம்.

நாஞ்சில் - கலப்பை.

அங்கரக்கை - அங்கரக்ஷி (இரும்பு ஜிரா) சட்டை போல்வது.

பக்கரை - கலணை (குதிரை அங்கவடி)

சிங்குதல் - குறைதல்.

46 கவரி-தேர்சிலை முதலியன. (க்ஷாமரையுமாம்)

சவரி - க்ஷாமரை (சாமரம்)

47 சகண்டை - ஜெய கண்டை

துடி - உடுக்கை.

கறடி - சிலம்பம்.

குளிகை - அரண்மனை.

தவ்வுதலின்றி - தடையின்றி.

48 தச்சன் - தேவதா தன்மையினால் வீடு முதலியன நினைத்த மாத்திரத்தில் அமைப்போன்.

பூபம் - யானை.

பண்டாரி-பாண்டாகாரி (பொருள் காப்போன்.)

49 செகுக்கும் - கொல்லும்.

பக்.

கம்பலை - ஓசை.

50 அஷ்டாபதம் - எட்டு பட்டை.

51 பூசுரர்க்கு அகோசரமாக மனிதருக்குக் காண இயலாதனவாக.

உரகன் - பவணதேவன்.

ஆயுஷ்யாவசானம் - ஆயுள் முடிவு.

52 ப்ரச்சன்னம் - மறைதல்.

53 அவிதாவிடல்-முறையிடல்

55 வீவுதல் - சாதல்.

56 பலபரிதமாகிய பைம்பொழில்- பழம்முதலியன நிரம்பி பசுமைதங்கிய சோலை.

57 ஓலக்கம் - சபையில் வீற்றிருப்பது.

சரணயுகளம் - இருபாதம்.

கலுழ்ச்சி - துன்பம்.

காராழி-கருங்கடல் (ஓசை).

58 நிரந்து - வரிசைபெற்று.

அத்ருஸ்யமாயினான் - (திடீரென) மறைந்தான்.

பாம்புரி தேரலினும் - பாம்பு தோலுரிக்கும் போது தன் பல்லில் உள்ளவிஷம் தனக்கே ஆபத்தாகா வண்ணம், முதலில் மரவேர்களைக் கவ்வி விஷத்தை கக்கி விட்டுப் பின்னர் கீழ்வாய் மேல் வாய் உதடுகளை (சுறசுறப்பான) கல்லில் தேய்த்து, இக்கட்டான

பக்.

வழியில் நுழைந்து தோலைக்கழட்டும்.

62 வெள்ளைவாள் - சுக்கிலத்தியானம் என்னும்வாள்.

வினைவேந்து - மோகனீயமாகிற கர்ம ராஜன்.

கைவலம் - கைவல்யம் (மோக்ஷம்)

63 அரணம் - இரக்ஷணை.

புவனம் - பூமி.

64 சோமன் - சந்திரன்.

65 கால்வர்-உமிழ்வர். கக்குவர்.

66 திசையாடை - திக்கே ஆடையாக வுடையது (திகம்பரம்).

மதின்மறை கொண்டவன்- மதிலின் உட்புறத்தே மறைந்திருந்தவன்.

70 பத்ராவலம் பனம் - கண்டிஷன், (கட்டுப்பாடு)உறுதி மொழி.

பஹு விஹாரம் - நீண்ட தூரம் சென்றுவரல்.

வாரியன்- ஓலைவாசிப்பவன் (கற்றுச் சொல்லி).

74 நியதி ஹி கோலங்க்தே - நியதியினை (நடக்கும் கிரமத்தினை) யாவராலும் மீறிநடக்க இயலாது.

வீங்கு திரைவேலை - மிக்கெழும் அலையுடைய கடல்.

75 காற் றொட்டில் - 2. கால் உடைய தொட்டில் (மாதாவின் வயிறு.)

தாங்கி - தங்கி.

பக்.

புரசம் - துளையுள்ள சங்கு போல்வது.

76 உள்ளா.....போல - உள்ளான் என்னும் பறவை தன் அறியாமையால் 'வானம்' இடிந்து தன் மேல் விழுந்தால் அதனை உதைப்பேன் என்று மல்லாந்து தாங்குதல் போல் என்க.

78 பைங்கூழ் - பசியபயிர்.

79 சுஹ்ருதம் - நன்மை

81 உச்வாஸ நிச்வாசங்கள் ....யறிவிப்பவும் - மூச்சுவிடுதல் உட்கொள்ளல் ஆகிய இவை பிறப்பு, மூப்பு மரணம் முதலிவற்றை தெரிவிக்கவும்.

82 சமாசாரத்து நிகழ்தல் - ஆச்சாரியனுடைய நல்ல செயலை பின்பற்றி நிகழ்தல் (நடத்தல்).

ஏகவிகாரி - தனியாகச் செல்லல்.

கிரிக ககனம் - மலைகாடு.

83 ஊறு - புண்.

வேது - சுடுதல்.

84 அதீத அநாகதவர்த்தமான எதிர்காலம் இறந்த காலம் நிகழ் காலம் என்பன.

85 நிகர்ஷண சேதன தாபன தாடன. இன்னான்கு வகையால் பொன்னின்

பக்.

தன்மையை உணர்தல். அவை,
நிகர்ஷணம் - கல்லில் உரைத்தல்
சேதனம் - பிளத்தல். (வெட்டுதல்)
தாபனம் - காய்ச்சுதல்.
தாடனம் - அடித்தல்.
86 க்ஷீரோதகம்-பாலும் நீரும்.
89 குதம்-சாரிகையின் மிகுதி.
90 விருக்ஷாக்ரம்-மரத்தின் நுனி
91 வேலை - கடல்.
ஒல்லை - சீக்கிரம்.
மதமா - மதமுடையயானை. (அவை (1) கர்ணமதம் (2) கபோலமதம். (3) பீஜ மதம்).
உழுவை - புலி.
93 நவம் - நூதனம்.
படுவாரும் - இறப்பாரும்.
தசமாவஸ்தை - 10. விதமான காமசேஷ்டை.
95 சல்லியம் - எலும்பு. (இக் கட்டு).
குரம்பை - கூண்டு (உடலுமாம்).
96 புலரி - விடியற்காலை.
விழுமியன் - பெரியோன
குடங்கை - உள்ளங்கை.
97 அருக்கன் - சூரியன்.
சாத்து - வணிகர் கூட்டம்.
சார்த்தாதிபதி - வணிகர் கும்பலுக்குத் தலைவன்.
98 மாறெழுந்து பொராநின்ற பொழுது - மாறுகபோருக்கு எழுந்து யுத்தம்செய்யுங் கால்.

பக்.

99 ஸம்ஸ்கரித்தல் - தகனம் செய்தல்.
100 அரந்தை - துன்பம்.
101 கரத்தல் - மறைத்தல்.
சுவடொற்றி - அடிச்சுவடு (பதிந்தவழியே) பற்றி
பண்டு கூபத்து - பழைய கிணற்றில்.
102 கடனாவாய் - கடலிலுள்ள கப்பல்.
பாறு - பருந்து.
கவந்தம் - தலையற்ற உடல் (முண்டம்).
பரிபவம் - மானபங்கம்.
இரிந்தோட - கெட்டுஓட.
103 பணவர் - பணவம் என்னும் வாத்தியம் ஒலிக்கும் யுத்தவீரர்.
காகளம் - ஒருவிதவாத்தியம். (எக்காளமுமாம்)
லிகிதம் - தலை எழுத்து.
104 மாற்றலர் - பகைவர்.
எருத்தின்மீது - கழுத்தின் மீது.
105 கோலால் - பாணத்தால்.
நூறி - அழித்து.
111 திட்டிவிடம் - பார்வையிலேயே விஷம் பரவுதல்.
112 அங்கி - நெருப்பு.
113 புனைவளை - அழகியவளையல் அணிந்த மாது (பார்வதி).

பக்.

114 புணரி - அலை.

116 முடை - புலால்.

118 சுவர்ண பாஷாணம் - களங்கமான கல்லில் கலந்த பொன்.

119 க்ஷுல்லகம் - சிறியது.

த்ருதி - தைர்யம்.

123 9வது வரிமுதல் 16 வரை. பாதர...... அபர்யாப்தகரும் - ஒன்று முதல் ஐம்பொறி வரையிலும் உள்ள உயிர்களின் பிறவியை வடமொழியில் 1. ஏகேந்திரியம், 2. த்வீந்திரியம், 3 த்ரீந்திரியம், 4 சதுரேந்திரியம், 5 பஞ்சேந்திரியம் என்பர்.

அவற்றுள் :—ஒரு பொறியுடைய உயிர்களின் பிறவியை 1. சூஷ்மம் (ஐம்பொறிகளாலும் அறியவியலாத பரமாணு போன்றது) 2. பாதரம் (மரம் புல் பூண்டுமுதலியவைகள்). என இரண்டாகவும், ஐம்பொறி உயிர்களின் பிறவியை :—1 அசம்ஜ்ஞி (அறவுரை மேற்கொள்ள இயலாத ஓணன் முதலிய மனம் இல்லாத விலங்குகள்), சம்ஜ்ஞி (அறவுரைமேற்கொள்ளும் யானை முதலிய மனமுள்ள விலங்குகள் என இரண்டாகவும் கூறியநாலோடு 2, 3, 4-ம் சேர்ந்து பிறவியின் வகை (7) ஏழாகும். இதனை 1, பர்யாப்தி, 2. அபர்யாப்தி என்ற இரண்டினுல் பெருக்க பிறப்புஸ்தானம 14வகையாகும். பர்யாப்தி= உடல் நிறைதல். அபரியாப்தி ... உடல் நிரம்புவதற்குள் கலைதல் (9 மாதம் நிரம்புவதற்கு முன் கர்ப்பம் கலைதல் போன்றது).

123 அவிநாபாவம் - பொருளின் உண்மைத்தன்மையிலேயே பொருந்துதல்

ப்ரதேசம் - ஓர் பரமாணு நின்றவிடம் (ப்ரதேசம் எனப்படும்).

ஆவாசம் - பொருந்தி வசித்தல்.

சதுர சிதி லக்ஷ யோனி பேதம் - 84. லக்ஷம் பிறவியின் வகை.

பராவர்த்தனை - பரிவர்த்தனை. (பிறவியின் உயிர்கள் அடைந்துநிகழ்தல்)

124 போகரூபம் - ஒரே தரம் அனுபவிக்கும் பொருள்கள். அவை, உணவு, தாம்பூலம் முதலியன.

உபபோகம் - மீண்டும்

பக்.

மீண்டும் அனுபவிக்கக் கூடியன. அவை, படுக்கை, வாகனம், மனைவி, வீடு, முதலியன.
நோகர்மம் - உடல் முதலியன.
மிஸ்ரமித்தல் - கலத்தல்.
விரளித்தல் - பங்கிடல்.
உத்ஸர்ப்பிணி - கோடா கோடி கடற்கரல நிலையினையுடையது. ஆயுள் (முதலியன) வளரும் தன்மையது.

125 அவசர்ப்பிணி - (இதுவும் 10 கோடாகோடி கடற்கால நிலையினையுடையது (20 கோடா கோடி கடற்காலமான) உத்ஸர்ப்பிணி அவசர்ப்பிணி இரண்டும் கொண்டது ஒருகற்ப கோடி காலம்.
க்ஷுத்ரபவம் - தாழ்ந்த பிறவியிலுள்ளது.
பாவம் - பரிணமம்.
பாரவர்த்தித்தல் - கலந்து நிகழ்தல்.

128 உதகாவர்த்தம் - நீர்ச்சுழி அறுநீர் அளறுப்பாய் ஆ-நீர் வற்றிக் குறைந்த அளற்றில், (சேற்றில்) அகப்பட்ட எருது.

130 மக்ஷிகம் - ஈ.

132 முகாக்ரதி அறிந்து கொடுத்தல்-முகத்தைப் பார்த்து தாரதம்ய மறிந்து கொடுத்தல்.

132 இருமுத்தொழில் - அறுவகை தொழில்.

133 குரவன் - பெரியோன். (குருவுமாம்)
ஓடூர் சுழலர் - ஊரூருகத் திரிதல்.
பாருவளையம் - சுழலுந் தன்மையுள்ள ஒருவகை ஆயுதம்.

134 அந்தரம் திரிதல் - வானில்வளைந்து செல்லுதல்.
நெய்வகை - கயிறு. (பாவாற்றி)
இரசம் - இரும்பை. சொர்ணமாக்கும் இரசம்.

135 விஷயம் - நாடு(தேசம்)
யுகளம் - இரண்டு.

136 தூறு - புகர் போன்ற ஓர் இடம்.
கேள்வர் - சுற்றத்தார்.
அச்சேனை - அந்த உஞ்சேனை.

137 பரிசை - பரீஷகம் (22)

138 கல் - காவிக்கல்

139 பாத்திரம் - சத்பாத்திரம் (உத்தமமுனிகள்)

140 மாணிகள் - செர்வமுள்ளவர் (மாணுக்கருமாம்)
நிர்வேகன் - பற்றற்றவன்.
அர்ஜ்ஜியர் - ஆர்யாங்கனை (ஆர்யகை எனலுமாம்)

141 மறுமை ஸாதித்தல் - முக்தியடைய முயலல்.

பக்.
143 துடி - உடுக்கை
நாண் - கயிறு.
அதோ லோகவிஸ்தாரம்-சப்தரஜ்ஜு-கீழேயுள்ள (நரகலோக) அளவு ஏழு கயிறு.
உலக ஆகாரம் - உலகத்தின் வடிவு.
இரத்தின .. நரகம் - இரத்னப்ரபை முதலிய ஏழுநரகங்களைக் கூறுதல்
144 தமத்தமம் - தமஸ் தமப்பிரபை என்னும் 7. ம் நரகம்
புரை - நரகலோகத்தின் பிரிவு. இவை வீட்டின் மெத்தை யிருப்பது போல என்க.
145 வித்திசை - மூலை.
நான்றுங்கு அயின் மேல் நைந்தாங்கு வீழ்தல் - தலை கீழாக தொங்கி விழும்போது, கூர்மையுள்ள ஆயுதங்களின் மேல் விழுந்து வருந்துதல்.
145 ஹிம்ஸா நந்தம் - கொலை செய்வதில் மகிழ்ச்சி.
ம்ருஷா நந்தம் - பொய்யுரைப்பதில் மகிழ்ச்சி.
ஸ்தேயானந்தம் - திருடுவதில் மகிழ்ச்சி.
சம்ரக்ஷணானந்தம் - குடும்பத்திற்கு வேண்டியவற்றை யானே தேடி

பக்.
நன்றாகக் காப்பாற்றுகின்றேன் என்றமகிழ்ச்சி (ஹிம்சானந்தம் முதலிய இந்நான்கும். ரௌத்ர தியானம் என்ப).
146 விபங்கஞானம் - முற்பவ உணர்வு
நால்வார் - தொங்குவார்.
காதுவார் - சின்னபின்னமாக்குவார்.
ஊசிகளைப் பயில்புறச் செறித்தல்-செப்பு ஊசிகளை கடுஞ் செயலாகப் பதியும்வண்ணம் அடித்து வருத்தல்.
உகிர் - நகம்.
வார்எழப் புடைத்தல் - ரத்தம் தெறிக்க அடித்தல்.
147 காளநிறம் - கருப்புவர்ணம்.
த்ரஷ்ணே - தண்ணீர் தாகம்.
148 ஆறுவிரல் - ஆறு அங்குலம்.(ஒருமுழத்திற்கு. 24 அங்குலம். யசோதர 53ம் பக்கம் பார்க்க).
கொழுப்பம் - (புரை முதலியவற்றின்) கனம்.
149 ஸம்க்ஷேபம் - சுருக்கம்.
150 த்ரஸ நாளிகை - ஓர் இடம் விட்டு ஓர் இடம் செல்லும் தன்மையுள்ள ஈரறிவு முதலிய உயிர்கள் வாழும் இடம் (உல

பக்.

கத்தின் மத்தியில் மரத்தின் வைரத்தைப் போன்றுஉள்ள. 14 கயிறு அளவுள்ளதாகும்.

151 முகட்டு - மூட்டுப்பூச்சி.

அசங்யாத - எண்ணற்ற.

152 தோற்செவி - நம் காது போல மேலேகாணும் அடையாள முள்ளவை. இவைசஜ்ஞிஜீவன்கள்.

நீலலேச்யை - அறுவகை லேஸ்யைகளில் ஒன்று அவை (தூய்மையங்லாத ஓர்வகை கருப்பு வண்ணம் பேரன்ற எண்ணம்)

அப்பச்சக்காண நாற்றுவர் - அப்ரத்யாக்யான கரோதமான மாயா லோபம்என்னும் நான்குதுவர் (கஷாயம்).

இஷ்டவியோகம் - தனக்கு இஷ்டமாயுள்ள பொருள்கள் தம்மை விட்டுப்பிரிந்துபோதல்.

அனிஷ்ட ஸம் யோகம் - தான் ஒன்று நினைக்க அதற்கு மாருக, இஷ்டமில்லாத பொருள் வந்து சேர்தல் (சம்யோகம் - சேர்தல். வியோகம் —பிரிதல்.)

153 மானஸிகம் - மனோசம்பந்தமாகவுண்டாகும் துன்பம்.

பக்.

மூர்ச்சனை - நினைவுமயங்குதல்.

154 பூட்சி - பூணல். (நிறைதலுமாம்)

பளிதோபமம் - பல்லம். இது 84- லக்ஷத்தை. 84 லக்ஷத்தால் பெருக்கி. அதனையும். 84. லக்ஷத்தால் பெருக்கி. இங்ஙனமே. 27. தரம் பெருக்கினது ஒ·ரு பல்லம். அந்தபல்லம் 10. கோடாகோடி கொண்டது 1. கடலாகும் என்ப.

155 அம்மானைக்காய் - சூதாடுங்காய். (?)

மத்யாங்கம் - இது. 10. வகை. கல்பகத்தருவில் ஒன்று.

156 கமிப்பார் - செல்கையையுடையவர்.

157 வில் ஒக்கம் - வில் உயரம்

158 கீழ் முத்தேவர் - பவணர், வியந்தரர், ஜோதிஷ்கர் எனமூவர்.

160 படலம் - இதுநரகலோகத்திற்கு கூறியபுரை போலவே, தேவருலக பிரிவு என்ப, (மேல்மாடிகளைப்போல்வது).

161 அக்ரத்திம ஜினாலயம் - உலகைப் போலவே, இயற்கையாக (ஒருவரால் கட்டாமல்)உள்ள ஜிநன் கோவில்.

பக்.

162 சேதியம் - கோயில்.

163 அணிமா முதலிய 8 தேவர்களின், எண் வகைகுணங்கள் அவை. அணிமா, மஹிமா, கரிமா லகிமா, ப்ராப்தி, ப்ராகாமயம், ஈசித்வம், வசித்வம் என்ற 8ம், தேவர்களின் விபவம். செயலால் ஆம் செல்வங்கள் விபரம் யசோ. 327ம் பக்கம் பார்க்க.

ஈனமிறையாகி - சிறிது குறைந்து.

அமூர்த்தம் - ஐம்பொறிகளால் அறியவியலாதது.

167 நிவ்ரத்தி - தடைசெய்தல்

168 ஆலஸ்யம் - மந்தபுத்தி

விடுப்பற்றும் - பற்றின்றி காலமறிந்து விற்றல்.

169 இப்யர் - (இபம், யானை) யானையின் பேரில் இருபக்கமும் நின்றால் காணவொண்ணாத பொன்னிராசியை மத்தியிலுடையார்.

சோப்யர் - (அங்ஙனமே) எருதின் மேலிருந்து காணவொண்ணாத பொன்னிராசியுடையார்.

பெருங்குறி-பெரிய ஆடு.

இறப்புநடு எய்துவகை - முக்காலமுமறிதல்.

170 பிரஜோத்பத்தி - கருதரித்தல்.

பக்.

171 சிதைவு - கஷ்டம்.

பேரனகம் - உணவு.

172 முறியாகசெய்து - துண்டு துண்டாகச்செய்து.

173 விண் கனிந்த வில் - இந்திரவில்.

சித்தார்த்தம் - வெண் சிறுகடுகு.

பரிகலம் - தட்டு.

அவிழ்து-சாதம்.

அத்திரம் - ஸ்திரமில்லாமை.

174 மிஸ்ர மித்தல் - கலத்தல்

175 சாரணம் - ஆகாயத்தே செல்லும் தன்மை.

ஆசன்ன பவ்யத்வம் -சீக்கிரத்தில் முக்தியடையும் தன்மை.

தீக்ஷாக்ரஹணம் - துறவு மேற்கொள்ளல்.

பிண்டிநாதன் - அசோக மரத்தின்கீழ் தங்கிய அருகன்.

கிரகோத்யானம் - வீட்டினருகேயுள்ள உய்யான வனம்.

யமவதம் - ஆயுள்வரை யேற்கும் விரதம்.

நியமவதம் - நாள், மாதம் வருஷம், முதலாக சக்திக்கு ஏற்றவாறு விரதம் ஏற்று நடத்தல்.

சுவாத்தியாயம் - நூல் வாசித்தல். (படித்தல்)

176 ஒட்டாதொழிய - அறியா

பக்.

திருக்க.

177 பிராயோப கமன மரண பிரத்யாக்யானம் - மரணமடையுங்காலத்து மனம் சமாதானத்தோடும் சந்தோஷத்துடனும் சல்லேகன விரத கட்டளை, ஏற்று நிகழ்தல்.

மன்னி - மைத்துனி.

விடக்கு - ஊன் உணவு.

178 மேலிரண்டு - தர்மத்தியானம் சுக்லத்தியானம் என்ற இரண்டு.

178 ஆஜ்ஞாவிசயம் - அருகனுரைத்த நூலின் அறவுரையை உள்ளவாறு விசாரித்தல்.

விபாகம் - கர்மங்களின் விளைவு.

ஸம்ஸ்தானம் - மூவுலகிலுமுள்ள முக்யமான இடங்கள் (இவை தர்மத்தியானம் நான்கின் பிரிவு)

ப்ரதக்த்வ விதர்க்க வீசாரம் - உயிரையும் ஏனையவற்றையும் - தனித்தனியாக தர்க்கம் (ஆலோசனை) செய்து விசாரித்தல்.

விதர்க்கம் - நன்றாக தர்க்கம் செய்து பார்த்தல்.

விசாரம் - விசாரித்தல்.

பக்.

ஏகத்வம் - உயிர் தனி என்பதனை நினைத்தல்.

சூக்ஷ்மக்ரியா ப்ரதிபாதி - மனம் வசன காயங்களை சூட்சுமமாகச்செய்தல்

வ்யுபரதக்ரியா நிவ்ரத்தி உயிர் இதரமான வேற்றுமையின் நின்றும் முற்றும் நீங்கி முக்தியெய்தல்(இவைநான்கும் சுக்லத்யானத்தின்பிரிவு)

தேஹவியோகம் - உடலை விட்டு உயிர் நீங்கல்.

179 எண்ணான்கு மோர்கடல்- 33. கடல். ($8 \times 4 = 32+1=33$)

183 ஊன்நுகர்வான் ஆடு - கசாப்பு கடைக்காரனை விரும்பி நம்பிய ஆடு.

அசுபமா கும்பி - அசுபமான நரகல் குழி.

அத்தம் - முடிவடையும் தன்மை.

184 காஷ்டம் - விறகு.

லோஷ்டம் - (உடைந்த) ஓடு.

பாஷாணம் - கல்.

சாலியின் அடிசில் - நெல் அரிசியின் உணவு.

187 சர்மகாரன் - சக்கிலியன்.

192 தத - நரம்புக்கருவி. (வீணை முதலியன).

விதத (ம்) - தோல்கருவி (பேரிகை முதலியன).

கன(ம்) - கஞ்சக் கருவி.

பக்.
(தாளம் முதலியன.)
சுஷிர (ம்) - துளைக்கருவி (புள்ளாங்குழல் முதலியன).
193 சேடனை - புத்திரனை.
கவாக்ஷம் - ஜன்னல்.
வஜ்ஜிரலேகை - கல்லின் மேல் எழுத்து.
பஞ்சவடக்குழி - சாக்கடை போன்ற இடம்.
மஞ்சலிகை - இரும்புப் பெட்டி.
198 கின்பாக (கிம்பாக)ம் - எட்டிப்பழம்.
உம்மை - மறுமை.
200 விபர்யாசம் - பொருளை விபரீதமாக அறிதல்.
201 அதந்த தாவனம் - பல் துலக்காமை.
அர்த்த தத்த சபம் - பாதி வெந்த பிணம்
203 அதிகமாதம் -மல மாதம். வருஷத்திற்கு ஒரு மாதம் அதிகமாகி. 12. வருஷத்திற்கும்சேர்ந்து 1- வருஷமாகும்.
சேய்த்தும் - தூரத்தும்.
அணித்தும் - சமீபத்தும்
204 காருறுஞ்சை - வாயில் தன் விரலையே மடித்து வைத்து ஊதல். சிழ்க்கை என்பதும் இது.
206 சரம தேஹதாரீ - முக்தியை யடையும் அந்திய பவத்திற்கு யோக்ய

பக்.
மான உடலைத்தரித்தல்.
உபயவர்க்கம் - இருதரத்தும் உள்ள.
208 வாதவலயம் - உலகைச் சூழ்ந்துள்ள (மூவகைக்) காற்று. கனோததி, கனவாதம், தனுவாதமாம்.
209 அட்டுஉண்டு - சமைத்து உண்டு.
மாயஷ்டாணம் - மாயாச் சாரம் (சொல்லும் செயலும் வெவ்வேருதல்)
211 ஈர்ங்கை விதிரான் - எச்சில் கையால் காக்கை ஒட்டாதவன்.
214 பொன்னின் தளிகை - பொன்தகடு.
215 விருஷ்டி - (பூ) மழை (8வகைப்ராதிகார்யத்தில் ஒன்று)
217 நடை - நடக்கும்போது மிதமாக செல்லல் (ஈர்யா சமிதி)
பாடை - பேசும் பொழுது சாந்தமாக பேசல் (பாஷாசமிதி,)
ஊண் - குற்றமற்ற உணவு உட்கொள்ளல் (ஏஷணாசமிதி)
வைப்பு - பொருள்களை வைக்கும் போதும். எடுக்கும்போதும் சோதனைசெய்து, பிற உயிர் அழியாவண்ணம் செய்தல். (ஆதான

பக்.

நிக்ஷேபணசமிதி

219 எழ்பகடி - சப்தப்ரக்ருதி 7 அவை அனந்தானுபந்தி க்ரோதம், மானம், மாயம், லோபம் மித்யாத்வம், சம்யக்மித்யாத்வம், சம்யக்த்வப்ரக்ருதி என7.

பவித்ரம் - கப்பல்.

220 ஜலதுர்க்கம் - மூன்று பக்கம் நீர் சூழ்ந்திருத்தல்.

பில்காதான் - லோபி.

221 இந்திரியசம்யமமே - மெய் வாய், கண், மூக்கு, செவி என ஐம் பொறி, 5. மனம் ஒன்று ஆக இந்திரிய சம்யமம் 6. (நிலம், நீர், நெருப்பு, காற்று புல் முதலியன ஆக ஓர் அறிவுள்ள உயிர்வகை 5 ஏனைய. 2, 3, 4, 5 ஆகிய ஐயறிவுவரையுள்ள, நகரும் உயிர்வகை (த்ரஸ ஜீவவகை) ஒன்று, ஆக பிராணி சம்யமம் 6 ஆகவே. சம்யமம் விரதம் 12 என்க.)

222 சம்ரத்தன் - நிறைந்தவன்.

223 கேட்பது - அறவுரை கேட்பது (ப்ரஸ்னே) (இது வாசனை, ப்ரஸ்னை, அனுப்ரேக்ஷா, ஆம்னாய, தர்மோபதேசமென்னும். ஐந்தனுள் ஒன்று

பக்.

224 ஆரம்பம் - உழுது பயிரிடல் முதலியன.

225 காயக்லேசம் - இது 12. வகை தபங்களில் ஒன்று காயத்தை (சரீரத்தை) சுருங்கப் பழகுதல், அது கோடை காலத்தில் மலையின் பேரிலும், வெய்யலிலும், மழைகாலத்தில் மரத்தின் கீழும், பனிகாலத்து கடற்கரையிலும் நின்று சரீரத்தை கரசமாக சுருங்கச் செய்தல்.

231 பாஜனம் - இறையாதல்.

132 இந்தனம் - விறகு.

135 ஸ்லேஷ்ம ஹரமான - ஈரத்தை கெடுப்பதான.

138 ரோமஹர்ஷிதம் - மயிர்குச் செறிதல்.

139 மானுஷோத்தரம் - மனிதன் செல்லவியலாதமலை (அது இரண்டரைத்வீபத்தை சுற்றிலும் சூழ்ந்திருப்பது.)

141 விகுர்வணை - புண்ய விசேஷத்தினால் ஓர் தேவன், தான் இச்சித்த பல உருவம் எடுப்பது.

சூளுறல் - சத்யம்செய்தல் (சபதம்செய்தல்)

142 பொக்கணம் - சோளி. (இது பிச்சைகாரர் பை)

அக்குமணி - கழுத்தி

பக்.

லணியும் ஒருவகை சைவமணி(எலும்புமாம்)

242 அத்ருஸ்யமாதல் - திடீரென்று மறைதல்.

245 வ்ரச்சிகம் - தேள்.

246 உத்ரேகமாய் - துவக்கமாய் (ஆரம்பமாய்).

250 சாகாரதர்மம் - சிராவகர் தர்மம்.

அனகாரர்-யதி. (துறவி)

251 விச்சுக்குத் துண்ணுமோ - விதையைக்குத்தி உண்பானோ.

251 துஷகௌகந்துகம் - (அரிசியில்லாத) உமியைக்குத்திஉண்ணல்.

255 பாணியில் - கையில்.

கோடணை - தேவவாத்திய ஒலி.

256 ஏற்றுக - ஏற்றித் துதிப்பாயாக.

258 நிஷிதி - இனியாகிலும் தோஷமில்லாதசெயலில் நிகழ்கின்றேன் (நிஷித்தம் - தீமையை தடுத்தல்) என்றெண்ணல்.

258 அர்ச்சித்து - வேளாளன் கமல மலரை, அர்ச்சித்து.

259 பாவதி - ப்ரபாவதி.

நொடி - சொல்.

261 லயமாகாவண்ணம் - நாசமாகாவண்ணம்.

262 கைஎடுத்துக் கொள்ளல் - யோகத்தி னின்றும் நீங்கல்.

பக்.

263 உபவாசம் - உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என்ற நான்கு வகை உணவுகளை துறத்தல்.

264 வாத்ஸல்யம் - பிரீதி.

ஆருகதன் - அருகத் பக்தியுள்ளவன்.

265 தேவஸ்மரணை - அருகதேவன் நினைப்பு.

269 விஹார அதிஸயம் - ஸ்ரீவிஹாரம் (இறைவன் கந்தகுடி மட்டிலும் உடையாகி செல்லுதல்

269 ஸ்தாயிகா அதிசயம் - ஓரிடத்தே ஸ்திரமாக நிற்றல்என்னும் அதிசயம்.

தனுர திசயம் - சரீர அதிசயம்.

270 ஸ்வேதம் - வேர்வை.

விஷாதம் - வருத்தம்.

271 ஊர்த்துவகதி - மேலேயுள்ள இடம்

272 உணங்கின - காய்ந்த.

273 ககனமோ -?

274 கடுவளி - பெருங்காற்று.

276 விந்தத்தை.?

277 இந்து - சந்திரன்.

279 தகர் - ஆட்டுக்கிடா.

282 நூக்கல் - தள்ளுதல்.

க்ஷுதாஸ்ரமம் - பசியினால் வாடல்.

பக்.

288 அவக்ஞை - கேலி.

289 பஞ்சேந்திரிய நிரோதம் - ஐம்புலன்களிலும் மனம் செல்லவொட்டாமல் தடுத்தல்.

நுகப்ரமாணம் - நான்கு முழ தூரம். (நுகத்தடியளவு)

அகங்காட்டி - உள்ளிடம் காட்டி.

290 அக்ஷயந்தானம் - இந்த தானம் குறையாமல் நிறையக்கடவது என்று ஆசிர்வதித்தல்.

பக்.

அரிசப்படல்.?

294 ஸஹஸ்ரம் - ஆயிரம்.

சதுர்த்தபாகம் - நான்கு பாகம்.

ஹஸ்த கௌசல்யம் - கையின் திறம்.

296 பௌவஞ்சூழ் - கார்கடல்சூழ்ந்த உலகம்.

299 அரற்றி - அழுது.

300 க்ஷுத்ரம் - பொல்லாங்கு.

304 அயிர்ப்பற - சந்தேகமற.

திருவறம் வளர்க.

செய்யுள் முதற் குறிப்பகராதி

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
14	16	கலப	கல்ப
17	25	நிர்கதமாகி	நிர்ணித்தமாகி
18	20	நீலமும்	நிலமும்
25	14	ரகிஹித்	ரஹித
27	24	மலுபுனற்	மறிபுனற்
28	12	ளாலிலத்திக்	ளாலத்நிக்
29	15	யிராறிரண்டு	ஆறிரண்டு
30	2	கேருன்கண்	கேளுங்கள்
45	61	வரரைசிரோணிக மஹாராஜன் வரலாறு	சகரன் கதை
49	17	காதுத்யக்குஞ்	காத்துய்க்குஞ்
54	14	தரவாது	தரவாராது
55	25	வெறுத்தல்	வென்றல்
60	26	தாபங்களை	தபாங்களை
63	1	இரேணிக மகராஜன் வரலாறு	அஸரணம்
64	13	தவ்வுருனிவே	தவவுருவே
69	6	இனிதமாந்த	இனிதமர்ந்த
74	2	தவிர்க்கவாரா	தவிர்க்கலாம்
79	16	பவமும்	பயனும்
80	23	ருக்குடிலும்	ரெுக்குழலும்
83	9	கொண்டுண மருந்திட்டவனோவை	கொண்டு மருந்திட்டனநோவை
85	17	விரகங்களை	விரதங்களை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
89	7	ஸ்ரேஷ்டி	ஸ்ரேஷ்டி
91	11	அவ்வராகனதற்கு	அவ்வராங்கனதற்கு
91	22	க்ஷுதைய	க்ஷுதையும்
96	9	புலாபுன்	புலால்புன்
103	26	விகிதமே	லிகிதமே
183	12	அசுப மாகும் பியின்	அசுபமாம் கும்பியின்
187	16	அசுக்த	அசுத்த
187	19	தங்கிட	தங்கி
213	24	குடியானவன் கதை	
214	14	துறவின்	துரவின்
237	21		சுவர்ண பத்திரன் கதை
238	6	சில	சில
248	16	கெட்டானுகிலும்	கேட்டாகிலும்
252	18	மென்ரு	மென்னே
256	5	தனதத்தன்	வேளாளன்
269	26	ளிருந்தாளா	னிருந்தானு
278	7	பவநா நாளு	பல நாளு
278	14	குலத்துத்	குலத்துப்
281	12	மறிவு	அறிவும்
281	21	செட்டிம்	செட்டியும்
291	13	காநலாற்	காதலாற்
299	18	நரனிலத்து	நானிலத்து
304	5	சேரணிகன்	சேணிகன்

பிழை திருத்தம்

பக்கம் முதல் பக்கம் வரை	பிழை	திருத்தம்
45—61	சிரேணிகமகா ராஜன்வரலாறு	சகரன் கதை
63	,,	அசரணம்
119—121	அன்யத்வம்	இராவணன் கதை
135—141	ஸம்சாரம்	வஸந்த திலகை ,,
169—181	உலகம்	சுகுமாரன் ,,
191—193	அசுசித்வம்	சுபௌமன் ,,
203	ஆஸ்வரம்	த்வீபாயணன் ,,
205—207	,,	பாகுபலிகுமாரன் ,,
209	,,	புஷ்பதந்தையார் ,,
211	,,	படஹஸ்தன் ,,
213	,,	குடியானவன் ,,
225—229	சம்வரை	நகுலன் ,,
237—247	சுவர்ணபத்திரன் கதை	தலைப்பு
237	நிர்ஜ்ஜரை	சுவர்ணபத்திரன் ,,
255	தர்மஸ்வாக்யானம்	சேரமிலன் ,,
257	,,	தனதத்தன் ,,
259—263	,,	பிரபாவதி ,,
265	,,	நாகதத்தன் ,,
273—303	போதிதுர்லபம்	தன்யகுமாரன் ,,